உ

ஓம் குமரகுருதாச குருப்யோ நம :

# திருவலங்கற்றிரட்டு

## பல்சந்தப்பரிமளமாகிய இரண்டாங் கண்டம்



பாம்பன்

ஸ்ரீமத் குமரகுருதாச சுவாமிகள்

ஸ்ரீ குமார பரமேஸ்வரன்

C.S.S.
CENTRE FOR SHAIVA STUDIES Puducherry

உ
சிவமயம்.
ஓம் குஹப்ரஹ்மணேநம:

அத்தியாச்சிரம சுத்தாத்துவைத
வைதிக சைவசித்தாந்த ஞானபானு

**பாம்பன்**

**ஸ்ரீமத் குமரகுருதாச சுவாமிகள்**

அருளிச்செய்த இரண்டாம் மண்டலமாகிய

# திருவலங்கற்றிரட்டு

**பல்சந்தப்பரிமளமாகிய**

**இரண்டாங் கண்டம்**

**மற்றும்**

**திருத்தல தரிசன காலங்களில்**
**பாடியருளிய கட்டளைக் கலித்துறைகள்**
**ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகள் அருளிய**
**குறிப்புரையோடும்**

சைவாகம சிற்பாகம கலாநிதி
பேராசிரியர், முனைவர் S.P. சபாரத்தினம்
அவர்களது பொழிப்புரையுடனும்

**மகாதேஜோ மண்டல வெளியீடு**
**திருவான்மியூர், சென்னை - 600 041.**

**2018**

[library stamp]

முதற்பதிப்பு 1902

இரண்டாம் பதிப்பு 1930

மூன்றாம் பதிப்பு 1991

நான்காம் பதிப்பு 2005

ஐந்தாம் பதிப்பு 2010
உரையுடன்

ஆறாம் பதிப்பு 2018
உரையுடன்

விலை : ரூ.175/-

அச்சிட்டோர் :
அலமு பிரிண்டிங் ஒர்க்ஸ்
9/5, அய்யா முதலி தெரு,
இராயப்பேட்டை, சென்னை - 14.
போன் : 2835 3871
e-mail : alamuprinters@rediffmail.com

குமாரஜெயம்

திருச்சிற்றம்பலம்

# பதிப்புரை

நமது குருநாதர் பாம்பன் **ஸ்ரீமத் குமரகுருதாச சுவாமிகள்** ஸ்ரீகுமார பரமேஸ்வரபெருமான் மீது *6666* பாடல்களை அருளிச் செய்து குறிப்புரை, பொழிப்புரை, அகலவுரை முதலியவற்றில் ஏதேனும் ஒன்றை அளித்து ஆறு மண்டலங்களாக வகுத்துள்ளார்கள்.

"குமரவேள் பதிற்றுப் பத்தந்தாதி" எனும் பதிகத்தில் *73*-ஆம் பாடலில் "உலகில் இதுவரை தோன்றிய அனைத்து ஞானியர்களும், பொய்யில் புலவர்களும் அருளிய நூல்களில் உள்ள எல்லா கருத்துக்களும் எனது நூல்களில், என்னையறியாமலேயே தொடர்ந்து புகுந்துள்ளன" என்று குறிப்பிடுகின்றார்கள்.

இரண்டாம் மண்டலத்தின் இரண்டாங்கண்டமாகத் திகழ்வது **"பல்சந்தப் பரிமளமாகிய"** இந்நூல்.

*1893* ஆம் ஆண்டு, ஸ்ரீமத்சுவாமிகள் திருவனந்தபுரம் சென்று, பேரன்பர் ந. சுப்பிரமணியப்பிள்ளையவர்களின் நல்லுபசரிப்பில் தங்கியிருந்தபோது, அன்னார் வேண்டுகோளுக்கிணங்கி, *22* நாட்கள் ஒரு வீட்டு மேல் மாடியில் தனித்திருந்து யாப்பிலக்கண இலக்கிய நூல்களைப் பூரணமாக ஆராய்ந்து, உணர்ந்து, கவிமேகமாய் எழுந்த காலை, அவற்றில் காணப்படுகின்ற அனைத்து சந்தேகங்களையும் பூரணமாக நிவர்த்திக்கும் வண்ணம் சந்தபேதம், எதுகை, மோனை முதலிய நயம் பிழையாது ஸ்ரீகுமாரபரமேஸ்வர பெருமான் கிருபையே உய்தி பேறாகக் கொள்ளுவார்க்கெல்லாம் உயிர்த்துணை என்பதை உபதேசிக்கும் முகமாக அருளிச் செய்யப்பட்டதாகும்.

இப்பெருநூலில் வெள்ளியல், ஆசிரியவியல், கலியியல், வஞ்சியியல் எனும் நான்கு இயல்களாக வகுத்து ஒவ்வொரு பாவினத்துக்கும் உதாரணச் செய்யுள் அமைத்து கற்போர் அனைவர்

ஐயங்களையும் பூரணமாகக் களைந்துள்ளார்கள். எழுத்தளவுடைய செய்யுட்களும், சிலேடை, முடுகு, மடக்கு, திரிபாகி, கொம்பிலாச் செய்யுள், ஒற்றிலாச் செய்யுள், இரதபந்தம், நான்காரைச் சக்கரம் முதலிய சித்திர விசித்திர பாவினங்களையும், நேரிசை வெண்பா முதல் வாயுரை வாழ்த்து மருட்பா ஈறாக பல்வேறு வகைப்பாக்களையும் எடுத்துக்காட்டுகளாக அருளிச்செய்த 532 பாடல்கள் கொண்டதாகும் இந்நூல். இதுபோன்ற ஒரு நூல் இதுவரை வெளிவந்ததில்லை.

**சுவாமிகள் அற்புத சித்திகள் ஏதும் செய்து காட்டவில்லை. ஆனால் அற்புத சக்திகளை தமது பாடல்களில் செறித்து வைத்துள்ளார்கள். ஆகவேதான், சுவாமிகளின் பாடல்களை ஓதுபவர்கள் அதிஅற்புதமான வியக்கத்தக்க பயனடைகிறார்கள் என்பதை பலரின் வாழ்வின் நிகழ்ச்சிகள் மூலம் உணரமுடிகிறது.**

**எனவே சுவாமிகளின் திருமுறைகளை மதித்து ஓதின் வினையின் வெம்மை யடங்கப் பெறலாம். பிறவாப் பேறாகிய வீடுபேறும் ஐயமின்றிப் பெறலாம்.**

மிகவும் கடின நடை கொண்ட இந்நூலுக்கு, தமிழ் மொழியிலும், வடமொழியிலும் சிறந்த புலமை வாய்ந்த சைவாகம சிற்பாகமச் செம்மல் பேராசிரியர், முனைவர் S.P. சபாரத்தினம் அவர்கள் உரை கண்டிருக்கிறார். இவர் ஸ்ரீமத் சுவாமிகளின் அனைத்து நூல்களையும் பொருளுணர்ந்து ஓதி உணர்ந்தவர். ஸ்ரீமத் சுவாமிகளின் நூல்கள் சிலவற்றுக்கு ஏற்கனவே உரைகண்டிருக்கிறார். ஸ்ரீமத் சுவாமிகளின் **அருள் ஞான வாழ்க்கைச் சரித்திரத்தை** சுருக்கமாகவும், விரிவாகவும் அற்புதமான முறையில் எழுதியவர். வெளிநாடுகளிலும், உள்நாட்டிலும் ஆன்மீக நெறிபரப்பும் தொண்டு மேற்கொண்டு அயராது பணியாற்றி வரும் வேளையிலும், இந்நூலுக்கு உரை தந்து உதவிய நன்றியை மறக்க இயலாது. பல்சந்தப்பரிமளமாகிய இந்நூலை பூரணமாகப் படித்து உணர்ந்தால் தான் ஸ்ரீமத் சுவாமிகளின் உளக்கிடக்கையை நாம் பூரணமாக உணர முடியும். நான்காம் மண்டலத்தைச் சார்ந்த 35 பாடல்கள் கொண்ட "திருத்தலதரிசன காலங்களில் பாடியருளிய கட்டளைக் கலித்துறைகள்" என்ற பகுதியும் அன்னாருடைய உரையுடன் இந்நூலிலேயே அச்சிடப்பட்டுள்ளது.

கவினுறு தமிழால் சுவாமிகளருளிய திருப்பா எனும் நூலுக்கு இவர் வகுத்துள்ள உரை, முருகனடியார்களுக்கும் குறிப்பாக பாம்பனடியார்களுக்கும் இறைவனருளிய வெகுமதி என்றே கூறலாம். சிறப்பு மிக்க பல்சந்தப்பரிமளமாகிய இந்நூல் உரையின் துணைகொண்டு, பாடல்களை ஓதி **குருவடிகளீயுங் குருவருளைப்** பெற்றுய்யுமாறு அடியார்களை அன்புடன் வேண்டுகிறேன்.

இந்நூலின் பிற்பகுதியில், 1971ல் பிரப்பன் வலசை பாம்பன் சுவாமிகள் தியான ஸ்தல திருக்கோவில் குடமுழுக்கு விழா மலருக்கு, தொண்டை மண்டல **ஆதீனம் ஸ்ரீ-ல-ஸ்ரீ ஞானப்பிரகாச தேசிக பரமாச்சாரிய சுவாமிகள்** அளித்துதவிய **"ஸ்ரீமத் பாம்பன் அடிகளாரது ஆற்றலுள் ஒன்று"** என்ற கட்டுரையும் இணைக்கப் பட்டுள்ளது. (இக்கட்டுரை முதல் மண்டலத்தில் உள்ளது) இதனைப் படிப்போர் நம் சுவாமிகளின் பெருமையை நன்கு உணரப்பெறுவர்.

ஸ்ரீமத் சுவாமிகளின் பல நூல்களையும் அச்சிட்டு வழங்கி வருபவரும், **"ஸ்ரீமத் பாம்பன் விஜயம்"** எனும் மாதாந்திர இதழ் வெளியிடுபவரும், மானாமதுரையில் **மயூரபுரம்** அமைத்து ஸ்ரீமத் சுவாமிகளுக்கும் ஸ்ரீகுமார பரமேஸ்வர பெருமானுக்கும் **திருக்கோயில்** அமைத்து வருபவருமான ஸ்ரீமத் சுவாமிகள் அறக்கட்டளை நிர்வாகஸ்தர், மெய்யடியார் - அன்பர் திரு. பழநி கணேசன் அவர்கள் இந்நூலை உன்னதமாக அச்சிட்டுள்ளார்.

ஸ்ரீமத் சுவாமிகள் அருளியுள்ள குறிப்புரைகளும், இலக்கணக் குறிப்புகளும் சில பாடல்களுக்கு அருளியுள்ள பதவுரைகளும் உரையின்கீழ் கொடுக்கப்பட்டுள்ளன.

மற்றும் ஸ்ரீமத் சுவாமிகளின் மெய்யடியவர்கள் இந்நூல் வெளிவர அனைத்து ஒத்துழைப்பும் அளித்துள்ளார்கள். இவர்களுக்கெல்லாம் ஸ்ரீகுமார பரமேஸ்வர பெருமானும், ஸ்ரீமத் சுவாமிகளும் சகலயோக மிக்க பெருவாழ்வும், சிவஞான சித்தியும் வழங்கியருளுமாறு வேண்டிக் கொள்ளுகிறேன்.

அன்பன்

**N. ஜெயராமன்.**

திருச்சிற்றம்பலம்

# மூன்றாம் பதிப்பின் முன்னுரை

சங்கம் பலவகைப்படும். இடம்புரிச்சங்கம் ஆயிரம் தன்னைச் சூழவிளங்குவது வலம்புரிச்சங்கம். வலம்புரிச்சங்கம் ஆயிரம் தன்னைச்சூழ விளங்குவது சலஞ்சலம். அதுபோல, மெய்க்கல்வியுடையார் ஆயிரம் பேர் தோன்றினால் ஒரு மெய்த்துறவி தோன்றுவார். மெய்த்துறவிகள் ஆயிரம் பேர் தோன்றினால் ஓர் அருளாளர் தோன்றுவார். நக்கீரர், திருமூலர், காரைக்காலம்மையார், நால்வர் பெருமக்கள், பட்டினத்தார், அருணகிரிநாதர், தாயுமானவர் என நிரல்படுத்துங்காலை அருளாளர்கள் பல நூற்றாண்டுகட்கு ஒருமுறை தோன்றுவர் என்பது விளங்கும்.

இவ்வருளாளர்களில் இந்த நூற்றாண்டில் வாழ்ந்த பெருந்தகை அத்தியாச்சிரம சுத்தாத்துவைத வைதிக சைவ சித்தாந்த ஞான பானு பாம்பன் ஸ்ரீமத் குமரகுருதாச சுவாமிகள். கந்தவேளை எந்த வேளையுங் கண்டு பேரின்பக் கடலில் திளைத்த இவர் பெருமை அளப்பரிது. இவர் பெருமையை ஒரு சான்று காட்டித் தெளிவிப்பாம்.

‘ஆயிவன் தவத்திற் கன்றி அறத்துக்கும் முதல்வன் அன்றோ’ என்று சூரபதுமனைக் கந்தபுராணம் புகழும். தவத்துக்கு முதல்வன் ஆகிய சூரபதுமன் பல ஆயிரம் ஆண்டுகள் நோற்றுப் பரமசிவனின் காட்சியும் வரமும் பெற்றான். ஸ்ரீமத் சுவாமிகள் தவம் தொடங்கிய ஏழாம் நாளே இளைய பரமசிவனின் காட்சியும் குருமொழியும் பெற்றாரெனில் அவர் பெருமை பேச்சில் அடங்குமோ?

மழித்த தலையும் அரையில் கோவணமும் விளங்கும் கோமளத் திருமேனி கொண்ட முருகன், முனிவர் இருவர் உடன் வர, தவம் செய்யும் ஸ்ரீமத் சுவாமிகளை அணுகினான். அணுகிய அவன் இவரை நோக்காது நின்று கொண்டிருக்கும் போது உடன் வந்த முனிவர் ஸ்ரீகுமாரபரமேஸ்வர பெருமானை நோக்கிக் “கல்வியறிவில் உம்முடைய திறம் இவருக்கும் உண்டு. இவர் உம்மைப் பார்க்கவே

வந்தார்" என்றனர். உடனே செவ்வேட்பரமன் இவரை நோக்கி மறைமொழி ஒன்று அருளிச் செய்து மேற்குத் திசைநோக்கிச் செல்லலாயினன்.

ஸ்ரீமத் சுவாமிகள் 6666 பாடல்களும் 32 வியாசங்களும் சைவ சமய சரபம், நாலாயிரப் பிரபந்த விசாரம், சுத்தாத்வைத நிர்ணயம், செவியறிவுறூஉ, சிவஞான தீபம், சிவசூரியப்பிரகாசம், சதானந்த சாகரம், திட்பம் முதலிய உரைநடைநூல்களும் அருளியுள்ளனர். அவர் நூல்கள் ஆறு மண்டலமாக வகுக்கப்பட்டுள்ளன.

சுவாமிகள் வேதம் தமிழ்ப்படுத்திய வித்தகர் : தமிழ் நூல் துறைபோகிய தாளாளர். எனவே இவர் நூலைப் பயின்றாலன்றி வடநூல் தமிழ்நூல் ஆகியவற்றைக் கசடறத் தேர்தல் அரிதாகும்.

திருவலங்கற்றிரட்டு இரண்டாம் கண்டம் விழுமியதோர் நூலாகும்.

குடிலைமெய் கூறு குருவடிகளீயுங்
கொடியனபோ மாறு குயிலு - மிடிமடன்
கொய்குகனை நாடு குமர குருதாசன்
செய்திருவ லங்கற் றிரட்டு.

என்று ஸ்ரீமத் சுவாமிகளே நூற்பயன் கழறுதல் அறியத்தக்கது. இப்பாடல் சித்திரக்கவிகளுள் ஒன்றான நான்காரைச் சக்கரமாக அமைந்துள்ள வியனும் பெரிதே எத்துணைப் பெருங்கல்விப் பட்டங்கள் தாங்கினாரேனும், எத்துணை யாப்பு நூல்கள் கற்றாரேனும் சுவாமிகள் நூலைப் பயிலாது தெளிவு பெறுதல் கூடாத ஒன்றேயாகும். தமிழும் சித்தாந்தமும் வல்ல ஒரு மகாவித்துவான் "கலிவெண்பா என்றது வெண்கலிப்பாவினை" (தருமையாதீனத் திருவாசகம் குறிப்புரைகளுடன் 1966ஆம் ஆண்டு) என்று பிறழுதல் காண்க.

ஸ்ரீமத் குமரகுருபரசுவாமிகள் அருளிய சிதம்பரச்செய்யுட் கோவை யாப்பமைதியுணர்த்தும் நீர்த்தேனும் சவலை வெண்பா, வண்ண இயல், சித்திரக்கவிகள் முதலியன உடையதன்று. அன்றியும் ஐயமறுத்தருள் திறம் திருவலங்கற்றிரட்டின் மட்டுமே காணலாகும். சுவாமிகள் அருளியுள்ள இரட்டை நாகபந்தம் போலொன்று எவரும் செய்தார் இதுவரை இல்லை.

மகான் வண்ணச்சரபம் தண்டபாணிசுவாமிகள், வண்ணத் தியல்பு எனப் பெயரிய வண்ண இலக்கணம் ஆக்கியுள்ளார். அதில் தத்த தாத்த, தந்த தாந்த, தன தான, தன்ன, தைய என்று குழிப்புகள் எட்டே என முடிவு கட்டுகிறார். ஆனால் நன-நான என்று வருவனவும் அவற்றைச் சார்ந்தனவும் இவ்வெட்டுள் அடங்காமை காண்க. இந்நூலின் ஆசிரியவியல் 141-ஆம் பாடலில் இத்திற வண்ணங்கள் பயிலுதல் காண்க.

**சுருங்கக் கூறின் சுவாமிகள் அருளிச் செய்த நூல்களை உணர்ந்தாலன்றி சமயம் மொழி ஆகியவற்றில் தேர்ச்சி பெற இயலாது. திருவலங்கற்றிரட்டு இரண்டாம் கண்டம் உணர்ந்தாலன்றி யாப்பிலக்கண அறிவு முழுமை பெறாது என்க.**

இந்நூலை மூன்றாம் பதிப்பாக ஸ்ரீமத் சுவாமிகளின் அடியவராகிய சென்னை உயர்திரு. N. ஜெயராமன் அவர்கள் ஸ்ரீலஸ்ரீ பழநி சாது தங்கவேலு சுவாமிகளது அருளாணைப்படி வெளியிடுகின்றார். இவர் திருவான்மியூரில் ஸ்ரீமத் சுவாமிகள் திருவடித் தொண்டில் ஈடுபட்டு எல்லா விழாக்களையும் சிறப்புறநிகழ்த்தியவர். பிரப்பன்வலசையில் ஸ்ரீமத் சுவாமிகளின் தவச்சாலை சிவச்சாலை யாகும் வண்ணம் எழில்மிகு கோயில் எழுப்பிய சிறப்பினர். இவர்தம் இல்லக்கிழத்தியார் திருவாட்டி அரங்கநாயகி அம்மாள் அவர்கள் சுவாமிகளின் திருவடியில் மாறா அன்புடையவர். இங்ஙனம் அமைதல் தவப்பேறே யாகும். ஸ்ரீமத் சுவாமிகள் பால் அழுந்திய அன்பு பூண்ட இவ்விருவருக்கும் இவர் தம் பின்னோர்க்கும் சுவாமிகள் சகலசெல்வயோகமிக்க பெருவாழ்வும் சிவஞான சித்தியும் வழங்கியருள்வாராக என்றுஸ்ரீமத் சுவாமிகளின் சரணகமலாலயத்தைப் பணிந்து வேண்டுகின்றேன்.

அன்பன்

நக்கீரன் வழியடிமை. சைவசமயசண்டமாருதம்

**புலவர் பி.மா. சோமசுந்தரனார்.**

இராணிப்பேட்டை.

*1-2-1991*

குமாரஜெயம்
திருச்சிற்றம்பலம்

# மூன்றாம் பதிப்பின் அணிந்துரை.

நேரிசையாசிரியப்பா.

வாழ்வுக் குரியோர் மாமறை யந்தமும்
தாழ்வற்ற வாகம சைவசித் தாந்தமும்
அகண்ட வாக்கிய மாமொரு மொழிவயின்
விகண்டித மின்றி மெய்யத்து விதமா
நிற்கு மதன்பொரு ணிராமய மாய
தற்பர வின்பத் தனிப்பழம் பொருளை
அனுபவித் திடுசுத் தான்மா நித்தம்
பனிதீ ரதுவும் பரமும் பிரிவின்
றுடலுயிர் போல வுளவென் றறிந்து
சடமல நூறிச் சமானமி லின்பச்
சீர்த்தி வீடெனத் தெய்வ மறைநுவல்
பூர்த்தி யடைவதுன் பூரண வருளால்
என்றுநா னுணர்பாக் கென்னகத் திருந்த
வென்றிவே லரசே மிளிர்பரம் பொருளே
யருட்கச நாயகி யருட்குற மாதரு
கிருப்ப மணித்தவி சிருக்குமெம் பெரும
என்று மிளைஞனா யென்று முதுவனாய்
என்று முள்ளோய் இன்புகழ் முனிக்கு
நீசொன நிட்டை நிலையை
ஏசறு வாய்மலர்ந் தெற்குஞ் சொல்லே.

-கந்தர் நான்மணி மாலை - 40வது பாடல்

ஆதியொடு அந்தம் ஆகிய நலங்கள் ஆறுமுகமென்று தெளிந்தார்க்கு ஆன தனி மந்த்ர ரூபநிலை கொண்ட ஆடுமயில் ஏறிவந்தருள்பவன், நிகழ்த்தும் ஏழ்பவக்கடல் சூறையாகவே எடுத்தவேல் கொடு பொடித்தூளதாயெறி நினைத்த காரியம் அனுக்கூலமேபுரிநிமலன், மோனவாழ்வு அளிக்கும் ஞானதேசிகன், இதய இருட்டு அற உணர்வின் உதித்திடு சுடரொளி, ஏத்த

புகழடியார்க்கு எளியவன், வாழ்த்தயிருவினை நீக்குமுருகையன், அருவநிலை நான்காகி உருவநிலை நான்காகி அறையிரண்டு மருவியுள உருவருவம் ஒன்றாகி முத்திறமும் வழுத்த வொண்ணாப் பெருவெளிக்கும் அப்பாலாய் உள்ள பொருள் ஆகி நிற்கும் ஸ்ரீ சுப்பிரமணியக் கடவுள் திருவருளே துணைக் கொண்டு நின்றவரும், சிறக்கத்தக்கது செவ்வேள் திருவடிநேயம், மறக்கத்தக்கது மற்றுளசமயத்தின் மயக்கம், பிறக்கத்தக்கது கிருபானந்தவாரியின் பெருக்கே எனப் போதித்தருளிய அருளாளரும், மண்ணுலாவுந் நெறி மயக்கந் தீர்க்கு நெறி விண்ணுலாவு நெறி வீடுகாட்டு நெறி உயர் சிவநெறிகாட்டி சித்தாந்த சைவம் செழிக்கத் திருத்தொண்டியற்றியவருமாகிய அத்தியாச்சிரம சுத்தாத்வைத வைதிக சைவ சித்தாந்த ஞானபானு பாம்பன் : ஸ்ரீமத் குமர குருதாச சுவாமிகள் அருளிய சாத்திரதோத்திர நூற்களில் 'திருவலங்கற்றிரட்டு' எனப் பெயரிய நூல் செய்யுள் இலக்கண எடுத்துக்காட்டுக்களாய் அமைந்த தோத்திர நூலாகும். ஸ்ரீமத் சுவாமிகள் தாமருளிய நூற்களை ஆறு மண்டலங்களாய் அமைத்துள்ளார். அதில் இரண்டாவது மண்டலமாய் விளங்குவது திருவலங்கற்றிரட்டு. இஃது முதற்கண்டம், இரண்டாங்கண்டம் என இரண்டு கண்டங்களையுடையது. செவ்வேட்பரமனின் கருணைப் புகழ் மாலையாய்ப் பிரகாசிக்கும் இரண்டு கண்டத்தில் முதற்கண்டம் சைவசமய அருட்பேராசிரியர்களாகிய ஸ்ரீ திருஞானசம்பந்த சுவாமிகள், ஸ்ரீ திருநாவுக்கரசு சுவாமிகள், ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருளிய தேவாரம் போன்று பண்ணோடு இயன்ற பனுவலாகும். பகற்பண் 12, இராப்பண் 6, பொதுப் பண் 2 ஆக 20 பண்களில் பதிகங்கள் 58 (பாக்கள் 580) ஆகத் திகழ்வது.

முதற்கண்டமும் இரண்டாங்கண்டமும் சேர்த்து இரண்டாம் பதிப்பாக 1930ஆம் ஆண்டில் வெளிவந்துள்ளது. அந்நூல் முகப்பில் சென்னை சைவப் பாதிரியார் சிவத்திரு ச. சச்சிதானந்தம் பிள்ளை அவர்கள் முன்னுரை எழுதியுள்ளார்கள். அம் முன்னுரையில் இந்நூல் இரண்டாங் கண்டம் எழுதிய வரலாறு பற்றி அவர் கூறுமுறையினைக் கீழ்க்காண்க.

"திருவலங்கற்றிரட்டின் இரண்டாங்கண்டம்" 'பல்சந்தப் பரிமளம்' என்னும் மறுபெயருடையது. இது வெள்ளியல், ஆசிரியவியல், கலியியல், வஞ்சியியல் என்னும் நாற்பெரும் பிரிவுகளை யுடைத்தாய் ஒவ்வொன்றிலும் அவ்வப் பிரிவினங்களையுங் கொண்டு மிளிர்வது. இதில் நேரிசை வெண்பா முதல் வாயுரைவாழ்த்து மருட்பா ஈறாகப் பல்வேறு வகைப் பாக்கட்கும் எடுத்துக் காட்டுகளாக 532 பாடல்கள் அடங்கியுள்ளன. இவையாவும் முருகவேள் மீதே பாடப்பட்டவை என்பது சொல்லாமலே யமையும்.

இக்கண்டம் சுவாமிகள், சைவத் திருவாளர் ந. சுப்பிரமணிய பிள்ளையவர்கள் வேண்டுகோட்கிசைந்து 1893ஆம் ஆண்டு திருவனந்தபுரம் சென்று தங்கியிருந்தபோது பாடப்பட்டது. அவ்வூரில் சுவாமிகள் ஒரு மேல் வீட்டில் தனித்திருந்து இருபத்திரண்டு நாட்களுக்குள் யாப்பிலக்கணக் கடலைப் குடித்துக் கவிமேகமாய் எழுந்த காலை பல்சந்தப் பரிமளமாகிய இந்நூலைப் பாடச் சுவாமிகட்கு மனவெழுச்சி தோன்றியது. இது விஜய ஆண்டில் புரட்டாசி மாதத்துப் பூர்வபட்சத்து ஏகாதசிக்கு முன்னரே பாடிமுடிக்கப்பட்டதென்க. சுவாமிகள் சரித்திரத்தில் குறித்துள்ள படி இந்நூல் யாப்பிலக்கண இலக்கியங்களிற் காணப்படுகின்ற சந்தேகங்களெல்லாம் நிவர்த்திக்கு நிமித்தமும், சந்தபேதங்களையும் எதுகை மோனை முதலிய நயம் பிழையாது சித்திரக் கவிகள் நடைபெறுதலையு முணர்த்து நிமித்தமும், செவ்வேள் கிருபையே உய்திபெறுவார்க்கெல்லாம் உயிர்த்துணை என்பதை உபதேசிக்கு நிமித்தமுமாகப் பாடப் பெற்ற பெருநூல் என்னலாம். இன்று காறும் இத்திற நூலொன்று வெளிப்பட்டதின்றெனவும் உரைக்கலாம்."

இந்நூலினியல்பையும் பயனையும் ஸ்ரீமத் சுவாமிகள் தமது **காசியாத்திரையில்** பின்வருமாறு விளக்கியுள்ளார்கள்.

> "யாப்பி னிலக்கணமும் யாத்த விலக்கியமும்
> யாப்பொலிபல் சித்திரமு நச்சியல்போய் - மூப்போ
> தலங்கற் றிரட்டினிரண் டாங்கண்டம் பாருன்
> விலங்கைத் தறித்து விடும்."

என்றறிவுறுக்கின்றது."

இத்தகைய அரிய பெரிய செய்யுளிலக்கண நூலை மூன்றாம் பதிப்பாக சென்னை பேரன்பர் சைவத்திரு N. ஜெயராமன் அவர்கள் அச்சிற்பதிப்பிக்க முன்வந்துள்ளார். இவர் ஸ்ரீமத் சுவாமிகளருளிய ஸ்ரீமத் குமாரசுவாமியம், பரிபூரணானந்தபோதம், சிவஞான தேசிகமெனும் கடவுளைக் குறித்த வியாசம், பரமசிவம் என்பதைக் குறித்த வியாசம், தேவர்களைக் குறித்த வியாசம், பத்துப் பிரபந்தம் முதலிய நூற்களை அச்சிட்டுத்தமிழ் நல் சைவ உலகிற்கு அளித்தவர்.

இவருக்கு வாழியென நித்த மறவாது பரவிற் சரண வாரிசம் அளிக்கும் உபகாரக்காரன், எழுமையும் எனைத்தனது கழல் பரவு பத்தனென இனிது கவியப்படி ப்ரசாதித்த பாவலன், மிகைத்தவர் புரத்ரயம் எரித்தவர் ப்ரியப்பட அகத்திய முனிக்கொரு தமிழ்த்ரயம் உரைத்தவன், பரவு நக்கீரர் சரணென வந்தருள் முருகன், நிட்க்ரோத முனி குண பஞ்சரன், வெயிலுமிழ் கொடியொடு வினை முகத்தினில் மயில் மிசை வருமொரு வரதன், அனுக்ரகன், பந்தப் பிறப்பொழிய வந்தித்திருக்கு மவர் பற்றாக நிற்கு முதல்வன், கருவி கவி பழனி மலை ஸ்ரீ ஞான தண்டாயுதபாணிப் பெருமான் நலமெலா மருளிப் புரப்பாராக ஓம்.

பொலமிளிர் ஒலியங் கோழி போன்றவோர் துவச மில்லை
மலரறு முகவி லாச வரன்குருத் துவத்தின் மேலாய்
நிலவொரு குருத்து வந்தான் யில்லையே யெனுநே ரானும்
நலனெனும் இறுமாப் போர்ந்தார் நகைமுக மலர லாமே.

– செக்கர் வேளிறுமாப்பு – 60

திருப்பழநி
*1-10-1990.*

இவண்,

**குகேசனடிமை**
**பழநிசாது தங்கவேலுசாமி.**

# ஐந்தாம் பதிப்பின்
# அணிந்துரை

## ஆகமப் பேராசிரியர், முனைவர். S.P.சபாரத்தினம்.

அமுதம் செறிந்த சொற்களின் மூலம் ஆன்மாக்களை எல்லாம் அமுத நிலைக்கு உயர்த்தவல்ல மிடுக்கான சந்தப் பாடல்களைப் பாடிய அருணகிரிப்பெருமான்

"உனது காவிய நூல்ஆ ராய்வேன்

இடர்படாதருள் வாழ்வே நீயே தரவேணும்"

எனப் பழநிப் பகவனை வேண்டினார். முருகப்பெருமான் தொடர்பான நூல்கள் அனைத்தையும் ஆய்ந்து, சாரமான பொருள் உணர்ந்து, முருகனின் முதன்மையை வாதத்துக்கோ மாறுபட்ட கருத்துக்கோ இடமின்றி ஆணித்தரமாக நிலைநாட்டிய பெருமை ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகளையே சாரும். தமது ஒவ்வொரு மூச்சையும் தரமான தமிழ்ப் பாடலாக்கிச் சண்முகப் பெருமானுக்கு அர்ப்பணிப்பதையே தமது வாழ்நாள் முழுவதும் தவமாகக் கொண்டிருந்த ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகள் நமக்காக அருளியுள்ள பெரும் சொத்து திருவலங்கல் திரட்டின் இரண்டாம் கண்டம் ஆகிய **பல்சந்தப்பரிமளம்** என்பது. ஈடும் இணையும் காட்ட இயலாத இந்தப் பல்சந்தப் பரிமளத்தில் சுவாமிகள் அள்ளி அள்ளிக் கொடுத்துள்ள நுட்பமான கருத்துக்கள் எண்ணளவுக்கு எட்டாதவை.

சந்தம் என்பது பாடலுக்கு அமைந்திருக்கும் ஒலி அமைப்பு. ஒலி வாய்ப்பாடு என்றும் கூறலாம். தமிழ் யாப்பியலில் எத்தனை விதமான சந்தங்கள் உண்டோ, அத்தனை சந்தங்களிலும் செய்யுள் இயற்றி யாப்பியலின் முழுமையை ஒவ்வொரு தமிழ்மாணவனும் கண்டு களிப்பதற்காகவும் உணர்ந்து உயர்வு பெறுவதற்காகவும் தமிழ்மணம் (பரிமளம்) கமழுமாறு இந்த நூலைச் சுவாமிகள் யாத்துள்ளார். பல்சந்தம் என்பது அனைத்துச் சந்தங்களும் எனப்பொருள்படும். அனைத்துச் சந்தங்களின் நறுமணம் கமழும் நூல், **பல்சந்தப் பரிமளம்.**

அருணகிரிப் பெருமான் கந்தர் அந்தாதி என்னும் உயரிய தோத்திரத்தில் முருகப் பெருமான் தண்தமிழ்ச் சீர்களுக்கு நாயகன் எனக் கூறுகிறார். "சீர்க்கை வனப்பு" எனத் தொடங்கும் பாடலில்

"சீர்க்கு ஐவனப்புனமது உருக்காட்டிய சேய், தமிழ்நூற்
சீர்க்குஐ ....." (37)

எனக் கூறுகிறார். "மலைநெல் விளையும் புனத்தில் தனது சுயவடிவத்தை வள்ளிநாயகிக்குக் காட்டிய குமரன், இயற்றமிழ் நூலுக்குரிய முப்பது சீர்களுக்கும் தலைவன்". என்பது இந்த வரிகளின் கருத்து.

முப்பது சீர்களாவன :

ஓர் அசைச் சீர் (நாள், மலர்) - 2

| | | |
|---|---|---|
| ஆசிரிய உரிச்சீர் | - | தேமா, புளிமா, கருவிளம், கூவிளம் - 4 |
| வெண்பா உரிச்சீர் | - | தேமாங்காய், புளிமாங்காய், கருவிளங்காய், கூவிளங்காய் -4 |
| வஞ்சி உரிச்சீர் | - | தேமாங்கனி, புளிமாங்கனி, கருவிளங்கனி, கூவிளங்கனி - 4 |
| பொதுச்சீர் | - | தேமாந்தண்பூ, புளிமாந்தண்பூ, கருவிளந்தண்பூ, கூவிளந்தபூ |
| | | தேமா நறும்பூ, புளிமா நறும்பூ, கருவிள நறும்பூ, கூவிள நறும்பூ |
| | | தேமாந்தண்ணிழல், புளிமாந் தண்ணிழல், கருவிளந் தண் ணிழல், கூவிளந் தண்ணிழல் |
| | | தேமா நறுநிழல், புளிமா நறுநிழல், கருவிள நறுநிழல், கூவிள நறுநிழல் - ஆக 16 |
| | | (2+4+4+4+16=30) |

இந்த முப்பது சீர்களுக்கும் முதல்வனான முருகப்பெருமானுக்கு முப்பது சீர்களும் இலக்கண வழு இல்லாமல் கட்டுக்கோப்பாக அமையும் வகையில் அரிய பெரிய பாடல்களை யாத்து நம் சுவாமிகள் பல்சந்தப் பரிமளமாக முருகப்பெருமானுக்கு அளித்துள் ளார்; தமிழுக்கு அளித்துள்ளார்; தமிழ் நாட்டுக்கு அளித்துள்ளார்; உலகெங்கும் உள்ள முருகன் அடியார்களுக்கு அளித்துள்ளார்.

பல்சந்தப்பரிமளம் என்னும் இந்நூல் நான்கு இயல்களைக் கொண்டுள்ளது. வெள்ளியல், ஆசிரிய இயல், கலி இயல், வஞ்சி இயல் என - வெண்பா, வெண்பா இனம் எனும் இரண்டையும் கொண்டது வெள்ளியல்; ஆசிரியப்பா, ஆசிரியப்பாவினம் - எனும் இரண்டையும் கொண்டது ஆசிரிய இயல். கலிப்பா, கலிப்பா இனம் - எனும் இரண்டையும் கொண்டது கலி இயல். வஞ்சிப்பா, வஞ்சிப்பா இனம் - எனும் இரண்டையும் கொண்டது வஞ்சி இயல். வெள்ளியலில் 122 பாடல்கள்; ஆசிரிய இயலில் 162 பாடல்கள்; கலி இயலில் 163 பாடல்கள்; வஞ்சி இயலில் 84 பாடல்கள்; ஆக, நான்கு இயல்களிலும் அடங்கியுள்ள பாடல்கள் 531

வாயுறை வாழ்த்து மருட்பா 1

எனப் பல்சந்தப்பரிமளம் எனும் நூல் 532 பாடல்களைக் கொண்டுள்ளது.

யாப்பருங்கலக் காரிகை முதலான யாப்பிலக்கண நூல்களில் காட்டப்பட்டிருக்கும் மேற்கோள்பாடல்கள், உதாரணப் பாடல்கள் ஆகியவை போல் அல்லாமல், ஒவ்வொரு பாவகையிலும் அமையும் பாடல்கள் அனைத்தும் முருக முதன்மையை உணர்த்துவதோடு, வழிபாட்டு முறைகளையும், வாழ்க்கை நெறிமுறைகளையும் உணர்த்துவதோடு, வழிபாட்டு முறைகளையும், வாழ்க்கை நெறிமுறைகளையும் உணர்த்துவனவாகத் திகழ வேண்டும் என்ற தீவிர நோக்கம் கொண்டு சுவாமிகள் 532 பாடல்களையும் பாடியுள்ளார்கள்.

இன்றைய தமிழ்வழக்கில் கூறுவதாக இருந்தால், நம் சுவாமிகள் தமிழில் "விளையாடி" இருக்கின்றார்கள்!

இரதபந்தம், நாற்கூற்று இருக்கை (எழுகூற்று இருக்கை போன்றது) நான்காரைச் சக்கரம், தமருக பந்தம் (முரசபந்தம்), கோமூத்திரி, நாகபந்தம் முதலான சித்திரக் கவிகள், பின்முடுகு, முன்முடுகு, ஒற்றிலாச் செய்யுள், இதழொட்டாச் செய்யுள் (நிரோட்டக), பகுபடு பாட்டுக்கள், அந்தாதித்தொடை, இரட்டைத் தொடை, செந்தொடை, மொழிமாற்று, மாலைமாற்று, மடக்கு, குற்றெழுத்துச் செய்யுள், நெட்டெழுத்துச் செய்யுள், மாத்திரை வருத்தனம், அக்கர வருத்தனம், மாத்திரைச் சுருக்கம், அக்கரச் சுருக்கம், பிறிதுபடு பாட்டு, திரிபாகி - என்பன முதலாக

யாப்பியலில் கூறப்பட்டுள்ள சித்திர, விசித்திரப் பாவகைகள் அனைத்திற்கும் பல்சந்தப் பரிமளத்தில் உதாரணம் காட்டலாம்.

"என்னால் இயலாதா எண்ணுவது போற்செய, என்று
அந்நாள் உறுதிசொன்ன அள்ளிலைவேல் - மன், ஆர்வின்
எந்நாள் வருமோ இனி"

"நாற்றச் சரீரத்தை நன்குசெய, என்று குகன்
நீற்றினை எற்குஇட்டான், அந் நேமத்தை - ஆற்றாது
இருப்பேனோ ஏழை இனி"

"வெண்பொடியை யே அடியேன் மேனிமிசைத் திமிர்ந்து
கண்கள் இரண்டிற்கும் இடைக் கைகாட்டி - நண்போடு
உரைத்தோன் எனைக்காவா னோ"

"பிறக்கும் பொழுதே பெயர் ஊரும் அன்பும்
சிறக்க விதித்தே தன்னைச் சேர்ந்துய் - நெறிக்கண், எனை
வைத்தகுகன் ஆளானோ வந்து"

(வெள்ளியல் 55, 56, 57, 58)

என்பன போன்று வரும்பாடல்களில் தமது வாழ்க்கைக் குறிப்புகளையும் முருகப்பெருமான் பிரத்தியட்சமாகக் கண்ணெதிரே தோன்றி அருளிய சந்தர்ப்பங்களையும் சுவாமிகள் இந்நூலில் புலப்படுத்தி அருள்கின்றார்.

எளியோர், சாதாரணமான பக்குவம் வாய்ந்தோர், நடுத்தரமான மனப்பக்குவம் வாய்ந்தோர், உயர்ந்த மனப்பக்குவம் வாய்ந்தோர், தீவிரதரமான மனப்பக்குவம் வாய்ந்தோர், மந்திரம் ஜபிப்போர், யோகியர், ஞானியர் - ஆகிய அனைவர்க்குமான நெறிமுறைகளைச் சுவாமிகள் இந்நூலில் தெளிவாகக் கூறி ஓர் உத்தமமான சற்குருவின் இலக்கணத்துக்கு ஏற்ப நின்று வழிகாட்டி அருளுகின்றார்.

"பத்தி மிகுமாயின் பற்றொன்றும் இங்கில்லை
பத்தி மிகுமாயின் பண்ணரிய யோகதுவே
பத்தி மிகுமேல் பதிமுருகன் ஞானம் எய்தும்
பத்தி மிகுமேல் பரமசுக முத்தி எய்தும்
சித்தமே இத்தைத் தெளி"

*(வெள்ளியல் 48)*

-இது சுவாமிகள் எளியோர்க்கும் அனைவோர்க்கும் கூறும் கருத்து.

"மோகத்தை உண்டாக்கும் வெங்காயம், எண்ணெய், மீன், கிழங்கு, கடுகு ஆகியவை சேராத உணவு வகைகளாகிய செவ்வாற் கோதுமை, அரிசி, பச்சைப்பயறு, சர்க்கரை, இலைக்கறி, பச்சைக் காய்கறிகள், தேன், நெய், வெண்ணெய், தயிர், சுக்கு, ஞான உணர்வை மிகுவிக்கும் பசும்பால் மேலானவை எனக் கொண்டு சாத்துவிக உணவையே உண்ணும் முனிவர்களின் தலைவன் முருகன்". எனச் சாத்துவிக உணவுப் பழக்கத்தின் அவசியத்தைச் சுவாமிகள் புலப்படுத்துகின்றார்.

"மோகம்செய் ஈருளி எண்ணெய் மீன் மூலம் கடுகணையாப்
பாகம் செவ்வாற் கோதும்பை அரி பச்சையப்பயறு குளம்
சாகம் பைங்காய் தேன்நெய் வெண்ணெய் ததி சுக்காகும் இனும்
ஊகம் தருநன் பால் மேல் என்று உண் உறுவர் பிரான் முருகோன்.

- ஆசிரிய இயல் 51.

மேலும் தொடர்ந்து கூறுகின்றார் :

சாத்துவிக உணவா மொழி உச்சிதனில் உப்புப்புளிகாரம் ஒழித்து, ஏர்
பூத்த பச்சரிசி பசும்பயறும் புரையின் றொருசேரிற் குட்படவே
சேர்த்து நன் மிளகுத் துகளிட்டுச் செய்சாதத்துழி ஆனின்பால் நெய்
வார்த்து அயின்று இரவில் பால்பழம் உண்பார் நினை சேய் என் மனத்துளதே"

-ஆசிரிய இயல் 52.

புண்ணிய தீர்த்தங்களில் நீராடும் நெறிமுறையைச் சுவாமிகள் கூறுகின்றார் :

"வரத குகேச வணக்கமுன் அவனது சட்கோண
வரைபொறி செய்து, குளித்திடு சலமதை வற்றாத
தரமுறு கங்கைகொ தாவரி நருமதை காவேரி
தகையுறு சிந்து சரச்வதி யமுனை சதாசார
நிரல்தகு கிட்டிணி தாமிரபருணி நெடும் சீரே
நிகழொரு பத்திரியாகவும் அவைகள் நிஜம் சேரும்
சரவண தீர்த்தமெனா வெணி முழுகுக, தப்பாது
தவளவிபூதி நிரம்பிட அணி, குக தக்காரே."

- ஆசிரிய இயல் 143

முருகவழிபாட்டில் அவசியம் செய்ய வேண்டிய பதினாறு உபசாரங்களை ஒரு பாடலில் சுவாமிகள் தொகுத்துக் கூறுகின்றார்.

"நல்லை ஆசனம் அளித்திடல் கைகழு நீர்தான்
நல்கல் கால்கழு நீர்தரல் முக்குடி நீர்தான்
ஒல்லை ஈந்திடல் ஒண்சலம் ஆட்டுதல் ஆடை
உடுத்தல் முப்புரி நூலிடல் சந்தனம் பூசல்
வல்லை மாமலர் சார்த்துதல் அட்சதை தூவல்
மாசிலாப்புகை தீபிகை வெண் கருப்பூரம்
தொல்லையில் அமுதுதந்து உவர்க்காய், மனுமலர் என்
சோடசம் குகனுக்கிடுநரும் களிதுய்ப்பார்"

-ஆசிரிய இயல் 145

"ஆண்டொரு நூறு பிராணாயாமம் அயர்ந்த பலத்தினையே
ஆசறு குசைநுனி வீழ்நீர் மாதம் அருந்துநர் எய்துவரே
நீண்ட விவேக பிராணாயாமம் நெறிப்படி ஒன்றயர்வோர்
நிறைநதி யெக்கியம் விரதம் தானாதியில்வரு நீள்பயனோடு
ஏண்தரு சொர்க்கமும் ஏய்வர் பிரத்யாகாரம் நிதம்புரிவோர்
எழின்மறை யெக்கியம் யாவும் நிதம்தாம் இழைத்தவராகி, அவை
காண்தொறும் காண்தொறும் இன்பமதேசெய் கடியுயர் சிவலோகிற்
கைக்கொளுவாரெனுமே ஆகமம், மாகந்தன் நினைப்போரே"

-ஆசிரிய இயல் 153

என்பது போன்று சுவாமிகள் இந்நூல் வழியே புலப்படுத்தி அருளும் யோக நுட்பங்கள் மிகப்பலவாகும்.

"சகரமுதல் ஆறும் மாசில் பதியகரமாவ தாவி
சரதநம பாச மாம் எலாம்
நிகழுமொழி மேனிலாவு பொருள்சரவ ணேசனான
நிருமலன் நமாவெனாகுமே
பகரிவையொ டோமும் ஏறின் நெடியதச மாம் விசேட
பலனுற அவாவும் ஊழுளோர்
புகழும் எதையேனும் வீர வுறுதியொடு கோடியேசெய்
புனிதமுறின் வீடும் ஆள்வரே"

- ஆசிரிய இயல் 139

முருகன் தொடர்பான மகாமந்திரங்களுள் மிகவும் உயர்வான நவாக்ஷரி என்பதையும் தசாக்ஷரி என்பதையும் சுவாமிகள் இந்தப் பாடலில் உபதேசித்து அருளுகின்றார். இவ்வாறெல்லாம் பற்பல எளிய வழிகளையும் யோக நெறியையும் ஞானநெறியையும் இந்நூலில் காட்டி அருளும் சுவாமிகள்,

"அறிவிற் பெரியவன் அழகிற்பெரியவன் அறனிற் பெரியவன் அரசாள்மா
நெறியிற்பெரியவன் அருளிற்பெரியவன் நிலையிற்பெரியவன் நிஜமாம்ஓர்
செறிவிற் பெரியவன் இணையற்றுளபல செயலிற் பெரியவன் முருகோனே
பொறிபற்ற அவனை நினையற்புடையவர் புகழெற்கினியவர் எனலாமே"

-ஆசிரியஇயல் 86

என ஓங்கி முழங்கி, முருகவழிபாட்டில் முனைந்து நிற்குமாறு அன்பர்கள் அனைவரையும் நெறிப்படுத்தி அருளுகின்றார்கள்.

தத் த்வம் அசி - மகாவாக்கியத்துக்கு ஆகமநெறியில் அரிய பொருளைக் கூறித் தெளிவுபடுத்தும் சுவாமிகள். மிக உயர்ந்த ஞானியர்கள் உணர்ந்துகொள்ள வேண்டிய நுட்பமான தத்துவங்கள் பலவற்றையும் இந்நூலில் மிகுதியாகக் கூறி அருளுகின்றார்.

இத்தகைய அரிய பெரிய ஆகமச் செறிவான, ஆகம சாரமான நூலுக்கு உரை எழுதும் பணியை எளியேனுக்கு அளித்த அருள்நலம் சார் பெரியவர் ஜெயராமனார் அவர்களுக்கு என் மனமார்ந்த நன்றியையும் பணிவார்ந்த வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த உரையை ஓர் எளிய கைவிளக்காகக் கொண்டு, சுவாமிகளின் நூல் எனப்படும் திருக்கோயிலுக்குள் சென்று உண்மைப் பொருளாம் மூல வடிவத்தைக் கண்டு களிக்குமாறு முருகன் அடியார்களை வேண்டிக் கொள்கிறேன்.

அன்பன்

**சபாரத்தினம்.**

உ

திருச்சிற்றம்பலம்

# பாம்பன் ஸ்ரீமத் குமரகுருதாச சுவாமிகளின் நூல்கள்

## வேதம்

- நமது குருநாதர் ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகள் சிவஞானதேசிகம் எனும் பெயரில் அருளிச்செய்த ஆறாவது வியாசமான "வேதத்தைக் குறித்த வியாசத்தில்" வேதம் என்பது யாது என்று 40 வினாவுத்தரங்களில் தீர்க்கமாக விவரித்துள்ளார்.

- வேதம் என்பது சிவபெருமானிடமிருந்து தோன்றியது - எழுதாக்கிளவி.

- அரும்பெரும் வடமொழி தென்மொழி ஞானியர் களின் மூலமாக உலகுக்கு அளிக்கப்பட்டது. எந்த எந்த ஞானியர்கள் அருளிய நூல்கள் வேதம் என விளங்கும் என்று ஆராய்ந்து குறிப்பிட்டுள்ளார்.

- பாம்பன் குமரகுருதாச சுவாமிகள் அருளிச் செய்த செய்யுள் வடிவிலுள்ள பெருநூல், சிறுநூல்கள், வசன வடிவான வியாசம் முதலிய சகல நூல்களும் வேதமேயாகும்.

- "நிறை மொழிமாந்தர் ஆணையிற் கிளர்ந்த மறைமொழிதானே மந்திரம்" - என்பது தொல்காப்பியச் சூத்திரம். இத்தகைய நெறியில் நின்றோர் அருளியவை வேதமாகவே மதிக்கப்படும்.

# திருவலங்கற்றிரட்டு
# இரண்டாங் கண்டம்
## நான்காரைச் சக்கரம்

### நேரிசை வெண்பா.

குடிலைமெய் கூறு குருவடிக ளீயுங்
கொடியனபோ மாறு குயிலு - மிடிமடன்
கொய்குகனை நாடு குமர குருதாசன்
செய்திருவ லங்கற் றிரட்டு.



பிரணவத்தின் லட்சியார்த்தத்தைச் சிவபெருமானுக்கும் அகத்திய முனிவருக்கும் அருணகிரிப் பெருமானுக்கும் கூறியருளிய முதன்மைக் குருவாகிய முருகனின் திருவடிகளைப் பிரத்தியட்சமாக ஈந்தருளவும் கொடுமைகள் அனைத்தும் விலகுமாறு செய்யவும் வல்லது, திருவலங்கல் திரட்டு எனும் திருமுறை. வறுமையையும் அறியாமையையும் அடியோடு அழித்தருளும் குகப்பெருமான் ஒருவனையே தியானித்துக் கொண்டிருக்கும் குமரகுருதாசனாகிய அடியேன் அன்போடு யாத்து அளிக்கும் திருவலங்கல் திரட்டு என்பது இத்தகைய அருளாற்றல் வாய்ந்தது.

(குடிலை மெய்கூறும் குரு : பிரணவத்தின் லட்சியப் பொருளைத் தமக்கும் கூறியருளியதாகச் சுவாமிகள் குறிப்பாகப்

புலப்படுத்துவதாகக் கொள்ள வேண்டும். வள்ளி சன்மார்க்கம் என்ற முறையில் முருகப்பெருமான் பிரணவத்தின் லட்சியப் பொருளைச் சிவபெருமானுக்குப் புலப்படுத்தியதாக அருணகிரிப்பெருமான் வள்ளிமலைத் திருப்புகழில் கூறுகிறார். அதே லட்சியப் பொருளை முருகப்பெருமான் தஹராலயரகசியமாகப் பாம்பன் சுவாமிகளுக்கு உபதேசித்து அருளினார் என உணர்ந்து கொள்ள வேண்டும்.)

●●●

**நேரிசை வெண்பா.**

யாப்பி னிலக்கணமும் யாத்த விலக்கியமும்
யாப்பொலிபல் சித்திரமு நச்சியல்போய் - மூப்போ
தலங்கற் றிரட்டினிரண் டாங்கண்டம் பாருன்
விலங்கைத் தறித்து விடும்.

-காசியாத்திரை 201.

பாடல்களுக்கு உரிய இலக்கணத்தையும் அவ்விலக்கணம் கொண்டதாய் இயற்றப்பட்ட இலக்கியத்தையும், வண்ணப் பாடல்களாக யாக்கப்படுவனவற்றையும், பல்வகைச் சித்திரக் கவிகளையும் விரும்புகின்ற இயல்புடையோய்! மக்கள் அடைய வேண்டிய தலைமைப் பொருளை எடுத்து ஓதுகின்ற திருவலங்கற்றிரட்டின் இரண்டாம் கண்டத்தை ஓதுவாயாக. அஃது உனக்குத் தமிழ் இலக்கணம் பற்றி எழும் ஐயம், திரிபுகள் ஆகிய விலங்கையும் உன்னைப் பிணித்து உள்ள மலமாகிய விலங்கையும் வெட்டிவிடும். (-பி.மா.சோ. உரை)

பல்வகைத் தாதுவி னுயிர்க்குடல் போற்பல
சொல்லாற் பொருட்கிட னாக வுணர்வினின்
வல்லோரணிபெறச் செய்வன செய்யுள்

- என்பது நன்னூல்

தோல், குருதி, ஊன், நரம்பு, எலும்பு, மூளை, விந்து எனப்படும் எழுவகைத் தாதுக்களால் உயிர் தங்கும் இடமாகச் செய்யப்பட்ட உடம்பு போல, இயற்சொல், திரிசொல், வடசொல், திசைச் சொல் என்னும் நால்வகைச் சொற்களால் பொருளுக்கு இடமாகக் கல்வி அறிவினால் செய்யுள் செய்ய வல்லவர் அழகு பெறச் செய்வது செய்யுள் ஆகும்.

- (நன்னூல் உரை)

உ

ஓம் குஹப்ரஹ்மணே நம :
திருச்சிற்றம்பலம்.

இரண்டாவது மண்டலமாகிய

# திருவலங்கற்றிரட்டு.

பல்சந்தப்பரிமளமாகிய

# இரண்டாங்கண்டம்.

## 1-ஆவது வெள்ளியல்*.

### 1. நேரிசை வெண்பா.

ஏந்திசைச்செப்பலோசைபெற்றுவரு
*மீராசிடை யிருகுற ளிருவிகற்பம்.*

**சீராரு நன்னெஞ்சே செங்கமலக் கட்கடவுள்**
**ஏராரு மாமருக னென், றாகிக்-கூராரும்**
**வேலேந்தி மாற்றலரை வென்றமரர் கட்குச்செங்**
**கோலீந்த கோன்றுணையைக் கொள். 1**

நல்லொழுக்கம் கருணை முதலான சீரிய குணங்களுக்கு இருப்பிடமாக விளங்கும் நல்ல மனமே! சிவந்த தாமரை மலர் போன்ற கண்களை உடைய திருமாலுக்கு, மேன்மையும் வீரமும் பொருந்தியுள்ள மருகன் என விளங்கிக் கூரிய வேற்படையை ஏந்திச் சூரபன்மன் முதலான அசுரர்களையெல்லாம் வென்று தேவர்களுக்கு முன்பு இருந்தது போன்றே துறக்க லோக ஆட்சியை வழங்கி யருளிய தெய்வச் சக்கரவர்த்தியாகிய குகப்பெருமானின் அருள் ஒன்றையே உனக்கு வாய்த்துள்ள உறுதித் துணையாகக் கொள்வாயாக.

---

* **வெள்ளியல்** = வெள்ளையியல் (= வெண்பாவியல்) ; "ஒருபொரு ணுதலிய வெள்ளடி யியலாற் றிரிபின்றி வருவது கலிவெண்பாட்டே" என்னுந் தொல்காப்பியச் சூத்திரத்தில் 'வெள்ளடி' என்றதற்கு "வெள்ளையடி" என நச்சினார்க்கினியத்தில் உரை செய்யப்பட்டிருத்தலுங் காண்க. "இயற்றளை வெள்ளடி" என யாப்பருங்கலக் காரிகையினருங் கிளத்தினர்.

### மேற்படி, ஒருவிகற்பம்.

அன்னைக்கோ ரன்னையுமா யப்பனுக்கோ ரப்பனுமாய்
முன்னவற்கு முன்னோனு மா, யுரிமை-பன்னவுள்ள
அன்பினர்கட் கன்பினனு மாய்நிற்கு மாறுமுகன்
தன்பதநெஞ் சேநினைந்து தாழ். 2

நெஞ்சமே! தாய்க்கும் தாயாகவும் தந்தைக்கும் தந்தையாகவும் தமையனுக்கும் தமையனாகவும், சிறப்பான உரிமை வாய்க்கப் பெற்றவர்கள் என விளங்கும் அன்பர்களுக்கெல்லாம் முதன்மையான அன்பனாகவும் விளங்கும் அறுமுகப் பெருமானின் திருவடிகளையே ஆழ்ந்து தியானித்து வணங்கி நிற்பாயாக.

### தூங்கிசைச்செப்பலோசைபெற்றுவரு மிருகுறளொருவிகற்பம்.

சீலந் தருஞ்சதா சித்தமே கச்சைகொண்
டாலும் பராமரித் தன், னைபோற் - சாலவும்
பாலொடு சாதம் பகுக்கும் பரிபுரம்
ஆலும் பதவே ளருள். 3

சிலம்பு ஒலிக்கும் திருவடிகளை உடைய கந்தவேளின் திருவருள் நமக்கு தயை, பொறுமை முதலான நற்குணங்களையும் நல்லொழுக்கத்தையும் தரும்; எப்பொழுதும் நம் உள்ளத்தில் எழுந்தருளி மாறாத உறுதிப்பாட்டுடன் ஆனந்த நடனத்தைச் செய்து கொண்டே இருக்கும். உணவு உடை முதலான பலவற்றையும் தந்து பராமரிக்கும் அன்புத் தாயைப் போன்றே, நமது நிலையைத் தானாகவே உணர்ந்து இவ்வுலகத்து நற்பேறுகளையும், இறுதியில் முத்தி இன்பத்தையும் வழங்கி அருளும்.

[பால் - இவ்வுலகத்து நற்பேறுகள்; சோறு - வீடுபேறு; கச்சை கொண்டு - உறுதிப்பாடு கொண்டு.]

### மேற்படி, ஓராசிடையொருவிகற்பம்.

நாளுமுள் ளேநினை நச்சிய யாவுமுன்
னாளெலா நல்குநன் னட், பொடு-கோளுறா
வாளஞ் சிலம்பார் மலர்ச்சரண் டந்தெனை
ஆளுங் குகவே ளருள். 4

4. வாள் = ஒளி

ஒளி பொருந்திய சிலம்பு அணிந்துள்ள தாமரைமலர் போன்ற திருவடிகளைத் தந்து என்னை ஆட்கொண்டிருக்கும் குகப் பெருமானின் திருவருட்பேற்றையே தினந்தோறும் உனது உள்ளத்துக்குள்ளே தியானித்துக் கொண்டிரு! அவ்வாறு இருந்தால், நீ விரும்பிய நற்பேறுகள் அனைத்தையும் உனது வாழ்நாள் எல்லைவரைக்கும் பேரருளுடன் கொடுத்துக் கொண்டே இருக்கும். எவ்விதமான துன்பமும் உன்னை அணுகாது.

### மேற்படி, இருவிகற்பம்.

பாவம் பொடிக்குமே பத்தியை யீட்டுமே
சாவுந் தொலைக்குமே தா,ரக-மாவருள்
கூட்டுமே முத்தியைக் கூட்டுடன் காணெனக்
காட்டுமே சண்முகன் கால். 5

அறுமுகப் பரமனின் திருவடிகள் தீவினைப் பயன்களை அடியோடு அழிக்கும்; பக்தியாகிய பெரும் செல்வத்தைக் கொடுத்து, அது மேன்மேலும் உன்னிடத்தில் வளருமாறு செய்யும்; இறப்பையும் பிறப்பையும் தவிர்க்கும்; துன்பமயமான கடலில் மூழ்கியுள்ளோரைக் கரை சேர்த்துக் காப்பாற்றிப் பெரிய திருவருட் செல்வத்தைக் கொடுக்கும். 'நீ உடலுடன் இருக்கும் போதே முக்திநிலை இது என உணர்ந்துகொள்' என, உனக்குச் சீவன்முக்தி நிலையைக் கொடுக்கும்.

இருகுறட்குமிடையில் தனிச்சொற்கு முன்னே வரு மீரசை யீராசெனவும், ஓரசை யோராசெனவும் பெயர்பெறும். விவரம் - மேல்வந்த பாக்களிலிடப்பட்ட (,) இக்குறிக்குப் பின் அவை நிற்குமாற்றா னறிக.

### ஒழுகிசைச்செப்பலோசை பெற்றுவரு மிருகுறளொருவிகற்பம்.

திங்கட் கிடையானின் சேயாகுஞ் செவ்வேளின்
அங்கழற் கேயடிமை யானாயே - யிங்குநனி
தங்கமன மின்றேகத் தானெண்ணு நெஞ்சேநீ
எங்கிருந் தாலுமினி யென். 6

நெஞ்சமே! இளம்பிறையைச் சிரசில் அணிந்துள்ள சிவபெருமானின் திருக்குமாரன் ஆன செவ்வேள் பரமனின் திருவடிக்கே ஆட்பட்டு விளங்குகின்றாயே! இவ்விடத்தே இனியும்

தங்கி இருக்க மனம் ஒருப்படாமல் வேறிடம் செல்ல எண்ணும் நெஞ்சே! இனி நீ எங்கே சென்று தங்கினால்தான் என்ன? நீ அவனுக்கே ஆட்பட்டிருப்பதால் எங்கிருந்தாலும் ஒன்றுதான். இடரேதும் வாராது.

மேற்படி, இருவிகற்பம்.

பெரிதிற் பெரிது பிரமாண்ட மேயப்
பெரியபிர மாண்டம்பல் பெம்மான் - முருகன்
உரோமநுனி நிற்குமெனி னோஞ்சே யுருவம்
விரோதவுரு வன்று விபு. 7

பெரியனவற்றுக்கெல்லாம் பெரியதாக விளங்குவது பிரம்மாண்டம். அத்தகைய பிரம்மாண்டங்கள் கோடிக்கணக்கான அளவில் முருகப்பெருமான் விசுவரூபம் கொண்டருளிய போது அவனது உடலில் உள்ள மயிர்நுனிகளில் சிறு பேன் முட்டைகள் போல ஒட்டிக் கொண்டிருந்தன எனில், பிரணவமயமான செவ்வேள் பரமனின் வடிவம், ஒன்றுக்கொன்று மாறுபடும் சகளத் திருமேனி அன்று. அந்த வடிவம், எங்கும் வியாபித்து விளங்கும் ஆகாச மயமானது என உணர்ந்து கொள்வாயாக.

தற்புருட மீசானஞ் சத்தியோ சாதமதி
அற்புத வாம மகோரநறும் - பொற்பார்
முகமெனுஞ் சத்தி முகமொன்றாய் நிற்கும்
முகமே யிறைசண் முகம். 8

மேல்நோக்கும் ஈசானம், கிழக்கை நோக்கும் தத்புருஷம், தெற்கை நோக்கும் அகோரம், வடக்கை நோக்கும் வாமதேவம், மேற்கை நோக்கும் சத்யோஜாதம், கீழ்நோக்குவதும், அழகுசெறிந்து உள்ளதுமான சக்திமுகமாகிய அதோமுகம் எனும் ஆறுதிருமுகங் களும் ஒருங்கிணைந்து காட்சி அளிக்கும் வடிவமே, சண்முகப் பெருமானின் வடிவம்.

பூமியினைப் பொன்னதனைப் பூவையரைப் புத்திரரை
நாமிடலை வெற்றியினை நாகமதை - யோமில்
விரிவித்தை முத்திகளை வேட்போர்க் கருள்செய்
கருணைநிலை யேகந்தன் கண். 9

9. மிடல் = வலிமை. நாகம் = தேவலோகம்.

தன்னை வேண்டித் துதிக்கும் அடியார்களுக்கு அவரவர் விரும்பிய வண்ணம் பூமி, பொன், மகள், மகன் ஆகிய நன்மக்கட்பேறு, புகழப்படும் தேகபலம், வெற்றி, சுவர்க்கப்பேறு, பிரணவத்திலிருந்து தோன்றிப் பலவாறாக விரிவுபடும் ஞான உபாசனை முறைகள், சாலோகம் முதலான முக்தி நிலைகள் ஆகிய அனைத்தையும் அருள் செய்கின்ற கருணைத் திறத்துக்கு ஒரே இருப்பிடமாக திகழ்வனவே கந்தப் பெருமானின் திருவிழிகளாகும்.

**நூல்கடா யாம்வேத நூலாக மங்கட்கும்**
**வால்கெடா மெய்ம்மைக்கும் வாக்குவலி - யால்வெளியாம்**
**எல்லா மொழிமூலத் திற்கு மிருக்கைநிதம்**
**நல்லார் தொழுங்குமர னா.** 10

நற்றிறம் வாய்ந்த ஞானியரும் யோகியரும் எப்பொழுதும் தொழுது வணங்கும் குகப்பெருமானின் நாக்கு, ஞான நூல்களுக் கெல்லாம் தாயாக விளங்குகின்ற வேதங்களுக்கும் ஆகமங்களுக்கும், தூய்மை குன்றாத மெய்ம்மை நிலைக்குரிய உபதேச வாக்கியங்களுக் கும், வாக்குத் திறத்தால் வெளியாகும் அனைத்து மொழிகளுக்கும் மூலமாக விளங்கும் பரநாதத்துக்கும் இருக்கையாக விளங்குவதாகும்.

**அடிகே ளடிகே ளடியீயென் றேத்தும்**
**அடியார் கவிச்சுவையை யன்பா - லுடனுகர்ந்து**
**நல்வற் சலம்பெருகு நாதசத் திக்கிருக்கை**
**செல்வக் குமரன் செவி.** 11

‘பெருமானே! பெருமானே! நினது திருவடிகளையே எனக்குப் பற்றுக் கோடாக ஈந்தருள்’ என வேண்டித் துதிக்கும் அன்பர்கள் பாடும் பாடல்களில் உள்ள ஓசைநயம், சொல்நயம், பொருள்நயம் முதலான நலன்களையெல்லாம், அவர்கள்மேல் உள்ள அன்பால் ஒருங்கே அனுபவித்து அவர்களுக்கு மேன்மேலும் கருணைபாலிக்குந் திருவுள்ளம் கொள்ளுமாறு செய்யும் நாதசக்திக்கு இருப்பிடமாக விளங்குவது, சிவானந்த அனுபூதியாகிய செல்வத்துக்கு உரிமை கொண்டுள்ளவனான குமரப் பெருமானின் திருச் செவியாகும்.

---

11. வற்சலம் = தயை.

அன்பூற் றெடுக்க வடிநாடி நிற்பவர்கட்
கின்பூற் றெடுக்க வினிதருளித் - துன்போட்டும்
மாசி லபய வரதங்க ளென்பனவே
காசின் முருகையன் கை. 12

மேன்மேலும் அன்பு பெருகி எழத் தனது திருவடிகளையே தியானப்பொருளாகக் கொண்டு நிற்கும் அன்பர்களின் உள்ளத்தே சிவானந்தமாகிய அமுது ஊற்றெடுக்கும் வகையில் இனிதாக அருள் புரிந்து அவர்களின் துன்பங்களைக் களைந்தெறிய வல்லவையும் பாரபட்சம் முதலான குற்றங்களிலிருந்து நீங்கி இருப்பவையும் ஆன அபயகரம், வரதகரம் என்பனவே, எம் தலைவனாகிய முருகப் பெருமானின் திருக்கரங்கள் ஆகும்.

(அபயகரம் = எல்லா உயிர்களுக்கும் அபயம் கொடுக்கும் கை. வரதகரம் = எல்லா உயிர்களுக்கும் வேண்டிய வரங்களையும் மேன்மையையும் தந்தருளும் கை.)

ஆன்மாக்க ணோக்க மறியுங் குணமொன்றே
தான்மீக்கொண் ஞானமெனுஞ் சத்தியுமவ் - வான்மாக்கள்
ஊழ்வினைக ளூட்டியரு ளொண்கிரியா சத்தியுமே
காழ்வடிவுச் சேயிரண்டு கால். 13

ஒவ்வோர் ஆன்மாவின் நோக்கத்தையும் உள்ளவாறு அறிவதையே தனக்குரிய மேலான ஆற்றலாகக் கொண்டுள்ள ஞானசக்தியும் ஒவ்வோர் ஆன்மாவுக்கும் அதனதன் வினைப்பயனை முறையாக ஊட்டிக் கர்மமலம் நீங்குமாறு செய்யவல்லதான கிரியாசக்தியுமே, அனைத்து உலகங்களையும் ஊடுருவி உள்ள ஒப்பற்ற வடிவம் கொண்டுள்ள குகப்பெருமானின் திருவடிகள் ஆகும்.

சதாநினைவோர் நெஞ்சத் தவிசிருக்குங் கந்தன்
அதீதசொரு பந்தா னளப்பி - லிதாகிதமாந்
தானங் கடந்தவுண்மைச் சைதன்ய நீங்காத
ஆனந்த மாம்பரமான் மா. 14

எப்பொழுதும் தன்னையே யோகநெறியில் தியானித்துக் கொண்டிருக்கும் அன்பர்களின் உள்ளமாகிய தாமரை எனும்

14. சைதன்யம் - வடநூன்முடிபு

ஆசனத்தில் வீற்றிருக்கும் கந்தப்பெருமானின் சொரூபநிலை என்பது தத்துவங்களுக்கெல்லாம் அப்பாற்பட்டது. அந்தச் சொரூபம் என்பது இப்படிப்பட்டது என உறுதிபடக் கூறின், அது இன்பம் - துன்பம் இல்லது - உள்ளது முதலான இருமைநிலைகள் அனைத்தையும் கடந்ததாகவும், என்றைக்கும் நிலைத்திருப்பதாகவும், ஞானத்தைவிட்டு நீங்காததாகவும் திகழும் ஆனந்தத்தையே தன் வடிவமாகக் கொண்டுள்ள பரமான்மாவே ஆகும்.

திருவாரும் பைங்கடம்புத் தேங்கண்ணி சூடி
வருவானே புள்ளி மயிலோன் - குருவாகிக்
கூடிக் களிப்பானே கோட்டாலை தீர்ப்பானே
பாடிப் பழிச்சுவார் பால். 15

தனது திருப்புகழையும் வீர ஆற்றலையும் நாள்தோறும் பாடித் துதித்து வணங்கும் அடியவர்கள் முன், மயில்வாகனப் பெருமானாகிய கந்தன் தெய்வமணம் நிறைந்த புதிய கடப்பமலர்களால் ஆன இனிய கண்ணியைச் சூடிக்கொண்டு விரைவில் எழுந்தருள்வான்; அவர்களுக்குக் குருவாக விளங்கி, உரிய வழிகாட்டி, அவர்களோடு கூடிக் குலவுவான்; அவர்களின் மனக் குற்றங்களையும் உடற்பிணிகளையும் விரைவில் நீக்கி அருள்வான்.

என்றுமுள்ள கந்தவே ளிட்டபல னைப்புசித்
தொன்றென்னு நல்வீ டுறுகாறு - மொன்றனையும்
எண்ணா திருந்துள் ளிதயநடு வேகுகனை
எண்ணுவது தானே யிதம். 16

ஆதியும் அந்தமும் இல்லாமல் என்றைக்கும் நிலைத்துள்ள கந்தப் பெருமான் அவரவர் வினைகளுக்குத் தக்கவாறு ஊட்டி அருளும் பலன்களை உள்ளவாறு அனுபவித்து இறுதியில் அவனோடு இரண்டறக் கலந்து ஒன்றுபடுதலாகிய வீடுபேற்றை அடையும் வரை, வேறு எதையும் விரும்பாமல், உள்ளே திகழும் இதயத்தின் நடுவே தஹர ஆலயத்தில் குகப்பெருமானைத் தியானித்து இருக்கும் செயலே, உனக்குரிய இதமான செயலாகும்.

மாமாய லோக மயக்கப் பெருக்கிற்காங்
காமாதி யாறையுங் கைவிட்ட - தூமாண்
பொறியாளர் சிந்தைப் புலத்திலெஞ் ஞான்றுஞ்
செறியாறு மேமந் திரம். 17

இருளாகிய மோகத்தை விளைவிக்கும் மாயைப்பரப்பில் தோன்றிய உலகத் தொடர்பான மயக்க நிலையை மேன்மேலும் வளர்க்கவல்ல காமம் முதலான ஆறு குற்றங்களையும் அடியோடு விலக்கி, அதனால் தூய சிவ கரணங்களைப் பெற்று விளங்கும் ஞானியரின் சிந்தையில் எப்பொழுதும் செறிந்து திரண்டிருக்கும் திரு ஆறு எழுத்துக்களே, தன்னிகரற்ற மந்திரமாகும்.

**வீட்டெண்ண மாட்டெண்ணம் வித்தாரம் பேசெண்ணந்**
**தேட்டெண்ண மாகவே செப்பனைத்து - மோட்டியருட்**
**கந்தன் குமரன் கதிர்வேலன் பாதநனி**
**சிந்தித்த லேநற் செபம். 18**

வீட்டைப்பற்றிய சிந்தனை, செல்வத்தைப் பற்றிய சிந்தனை, தனது பெருமையையே பறைசாற்றிக் கொள்ளும் எண்ணம், மேன்மேலும் செல்வத்தைப் பெருக்குவதற்கான வழிகளைப் பற்றிய சிந்தனை என்பன முதலாக உள்ள அனைத்துவிதமான உலகியல் சிந்தனைகளை அடியோடு விலக்கி அருளும் கந்தனும் குமரனும் கதிர்வேலனுமாகிய குகப் பெருமானின் திருவடிகளை இடையறாது சிந்தித்து இருப்பதுதான் உண்மையான ஜபம் ஆகும்.

**தந்நாரர் மக்களினந் தாரமும் வாழவெனா**
**எந்நாளும் பொய்புகன் றீடழிவார் - தந்நேயம்**
**பண்ணுமன மோய்த்துப் பதியிளம் பூரணன்கால்**
**எண்ணியுயிர் வாழ்வதுதா னின்பு. 19**

தமது அன்புக்கு உரியவர்கள், தம் மக்கள், தம் சுற்றம், மனைவி முதலானோர் வளமுடன் வாழ்வதற்காக நாள்தோறும் பொய்களையே பேசித் தமது பெருமையும் சீலமும் குன்றிநிற்போர், அவ்வாறு தமது நலத்தையும் தம்மைச் சார்ந்தோர் நலத்தையும் மட்டுமே நாடும் மனத்தை அடக்கி நல்வழிப்படுத்தி முழுமுதல்வனான இளம்பூரணனின் திருவடிகளைச் சிந்தித்து உயிருள்ள வரையில் அந்த உறுதியோடு வாழ்வதுதான் உண்மையான இன்பமாகும்.

**வையம் புரந்துய்யும் வாட்பொருந னானாலும்**
**ஐயமெடுத் துண்பவனே யானாலு - மெய்யுணர்ந்து**
**தண்ணிருக்கும் பூங்கடப்பந் தாரான் பதப்போதை**
**எண்ணியிருக் கின்றதுதா னின்பு. 20**

உலகம் முழுவதையும் ஆட்சி செய்து காக்கும் வாட்படை ஏந்திய அரசனே ஆனாலும், பலரிடமும் யாசித்து உண்டு வாழும் இரவலனே ஆனாலும் உண்மையும் உறுதியுமான பொருள் இதுதான் என உணர்ந்து குளிர்ச்சியும் பொலிவும் உடைய கடப்பமலர்களால் ஆன மாலையை அணிந்திருக்கும் முருகப்பெருமானின் திருவடித் தாமரையைச் சிந்தித்து இருப்பதுதான் உண்மையான இன்பம் ஆகும்.

**மா**ணிக்கப் பொற்குழையு மாசற்ற சண்முகமுங்
காணப் பசுஞ்சிகிமேற் காதலுளார் - காணவதி
உல்லாச மாகவரு மோமுருகை நாடியவா
இல்லா திருப்பதுவே யின்பு. 21

மாணிக்கம் பதிக்கப்பெற்ற பொற்குழையைப் பூண்டு, மாசு மறு அற்ற பிரகாசமான ஆறு திருமுகங்களுடன், பசுமையான தோகைமயில் மேல் ஆரோகணித்துத் தன்னிடம் மாறாத பக்தி கொண்டுள்ள அடியார்கள் நேரே கண்டு களிக்க மிகவும் உல்லாசமாக எழுந்தருளும் பிரணவமயமான முருகப்பெருமான் ஒருவனையே தியானித்திருந்து வேறு ஆசை எதுவும் இல்லாமல் இருப்பதுதான் உண்மையான இன்பம்.

**ந**ல்வினையுந் தீவினையு நாடா நடுநிலையில்
தொல்வினைக டயளவுஞ் சோர்வின்றிப் - பல்புவிவாழ்
மிச்சையிலா வாவிகளை மெய்க்காப்பில் வைத்தருள்சேய்
இச்சைவிடா துய்வதுவே யின்பு. 22

நல்வினைப் பயனால் இன்புறாமலும் தீவினைப்பயனால் துன்புறாமலும் இன்பம் துன்பம் ஆகிய இரண்டையும் சமமாகப் பாவிக்கும் நடுநிலை உணர்வு பொருந்தும் வகையில், பழைய வினைப் பயன்கள் அனைத்தும் அடியோடு நீங்கும் வரையிலும், ஓர் உயிரைக் கூட விட்டுவிடாமல், பல் உலகங்களிலும் வாழும் அனைத்து உயிர்களையும் தனது உண்மையான பாதுகாப்பில் வைத்துக் காப்பாற்றி அருளும் அருள்மயமான குமரப்பெருமானிடம் இடைவிடாத பக்தி கொண்டு வாழ்வதுதான் உண்மையான இன்பம்.

**கா**மமுங் கள்ளுங் கரப்பும் பராசனமும்
நேமவொண் சற்குருவி னிந்தையும் - பூமிதனில்
ஆற்றுவா ரோடுசேர்ந் தான்முனிவ ருக்குநனி
தோற்றுஞ் சகிக்கொணாத் துன்பு. 23

23. கரப்பு = களவு. பராசனம் = கொலை; பராஸநம் என்பது வடசொல்.

காமம், கள், களவு, கொலை, சீலத்திலும் ஞானத்திலும் சிறந்துள்ள சற்குருவை நிந்தித்தல் எனப்படும் ஐம்பெரும் பாதகங்களையும் இவ்வுலகில் செய்கின்றவர்களோடு சேர்ந்து பழகினால் முனிவர்களுக்கும் கூடத் தாங்கிக் கொள்ள முடியாத அளவுக்குத் துன்பங்கள் வந்து சேரும்.

வினைவென்ஞா னப்பொதிய வேந்தரையிற் காவி
புனையவிலை யென்றே புகன்றான் - முனைநந்தி
மார்க்கண்ட மாமுனிக்கு மண்டலத்தின் மும்மலமும்
வேர்க்கொண்டார்க் கேது விதி. 24

“ஆகாமியம் முதலான மூவகை வினைப்பயன்களையும் வென்று, எந்த வினைப்பயனும் தன்னை அணுகாத வகையில் மேம்பட்டுள்ள பொதிகை வேந்தனான அகத்திய முனிவர், பொதுவாக முனிவர்கள் அணிந்து கொள்ள வேண்டிய காவி ஆடையை அரையில் உடுத்திக் கொண்டிருக்கவில்லை” என முன்பு நந்தி பகவான் மார்க்கண்டேய முனிவருக்குக் கூறி, முற்றும் உணர்ந்த ஞானியர் விதிகளுக்கும் விலக்குகளுக்கும் அப்பாற்பட்டவர் என்பதை உணர்த்தி அருளினார். ஆணவம், கன்மம், மாயை எனும் மும்மலங்களின் வேர்களையும் அறவே பறித்து எறிந்தோர்க்கு, விதிகள் என்பனவும் விலக்குகள் என்பனவும் எங்கே உள்ளன?

இச்சையொழித் தேசிலிளம் பூரணனுக் காட்படுநல்
நிச்சயசன் யாச நிலையறியாப் - பிச்சரெல்லாம்
நீண்டசடை முண்டனமாய் நீறுமணி காவியுடை
பூண்டறையும் யாவுமுழுப் பொய். 25

ஆசை, பற்று முதலானவற்றை அறவே நீக்கிப் பெரும்புகழ்க்கு உரிய இளம்பூரணனாகிய முருகப் பெருமானுக்கு முழுமையாக ஆட்பட்டிருத்தலே, உறுதிப்பாட்டுடன் கூடிய சன்னியாச நிலை யாகும். இதனை யறியாத பித்தர்கள் எல்லாம் நீண்ட சடைமுடி கொண்டும், தலையை மழித்துக் கொண்டும், திருநீற்றையும் ருத்திராக்ஷத்தையும் அணிந்துகொண்டும், காவி உடை உடுத்திக் கொண்டும் ஒரு துறவி போல் உபதேசம் செய்யும் செயலனைத்தும் முழுமையான பொய்யே.

25. **சன்யாசம்** = ஸந்ந்யாஸம் என்பது வட சொல்.

தூக்கநிலை யிற்கண்ட சொப்பனம் போலவே
சாக்கிரமு மென்றறியாத் தன்மையர்தாம் - யாக்கையை
மெய்யென் பெயர்கண்டு மெய்யெனக்கொண் டேமெய்யைப்
பொய்யென்ப தேபெரும் பொய். 26

தூங்கும்போது காணும் கனவு எப்படி உண்மையற்றதோ, நிலையாத ஒன்றோ, அவ்வாறே விழிப்புநிலையும் உண்மையில் ஒரு பொய்யான நிலையே என உணராதவர்கள் இந்த உடலுக்கு 'மெய்' எனும் பெயர் இருப்பதைக் கருத்தில் கொண்டு உடலை வளர்ப்பதையே நோக்கமாகக் கொண்டு, ஞானியர் எதனை மெய்ப்பொருள் எனக் கூறியுள்ளனரோ அவ்விறைவனைப் பொய் எனக் கூறுவதுதான் பெருத்த பொய்யாகும்.

மாக்காயம் வாக்கு மனந்தூய்மை யாய்நின்று
நீக்கா தெனைக்கொள்ளு நிர்மலவே - ளாக்கமருள்
பொய்யா வெழுத்தைப் புகன்றிவட் பொய்யாகு
மெய்யைமெய் யாக்கலே மெய். 27

ஆன்ம சாதனைக்குரிய உடம்பு, வாக்கு, மனம் இம்மூன்றும் தூய்மையாக விளங்குமாறு நியமத்துடன் இருந்து, இந்த நியமத்தை ஒருபோதும் கைவிடாதிருக்கும் என்னை ஆட்கொள்ளும் நிர்மலனான செவ்வேளின் அருளைச் சாதிக்க வல்லவையான பொய்ம்மையில்லாத எழுத்துக்களால் ஆகிய மந்திரத்தை நாள்தோறும் ஜபித்து, இவ்வுலகில் பொய்யாக மரித்துப் போகும் இந்த உடலைப் பிரணவமயமான திருமேனியாக ஆக்கிக் கொள்ளுதலே சிறந்த மெய்ந்நெறியாகும்.

நற்றொண்டர் கேண்மையு ஞானமும் வாய்மையும்
அற்பர்கட் கின்பமா யாராவே - சிற்சபையுற்
றுய்யவொரு சேய்நோன் புஞற்றுநர்க் காருமிது
மெய்மெய்மெய் மெய்மெய்மெய் மெய். 28

நன்னெறியிற் செல்லும் அடியார்களுடன் நட்பும், நல்ல ஞானப் பேறும், சத்திய நெறியும் பேத புத்தி உடைய அற்பர்களுக்கு ஒருபோதும் இனிமையாக வாய்க்காது. சிதாகாசப் பேரவைக்குள் நுழைந்து அங்கே லயித்து நிற்கச் செவ்வேள் பரமனுக்குரிய நோன்புகளை அனுட்டிப்பார்களுக்கு மேற்சொன்ன அடியார் நட்பு

முதலானவை இனிமையாக வாய்க்கும். இது மூன்று காலங்களுக்கும், மூன்று இடங்களுக்கும் பொருந்துமாறு விளங்கும் சத்தியவாக்காகும். (மூன்று இடங்கள் - இவ்வுலகம், மேல் உலகம், இடை உலகம்)

**ஆக்கித் தரம்பார்த் தளித்துயிர்கள் யாவுமறு**
**போக்கோடு மீட்சி பொருந்தாம - லாக்கவடி**
**சேர்த்துக் கொளற்குள்ள தெய்வத்தைத் தான்மறக்க**
**நாத்திக ரல்லமே நாம். 29**

முதன்முதலில் பிறப்பதற்குமுன் தனித்தநிலையில் இருளிலேயே இருந்த உயிர்களின் தராதரம் அறிந்து, அந்தந்த உயிருக்கு ஏற்ற உடலை அளித்துக் காப்பாற்றி ஒடுக்கி இளைப்பாறச் செய்து, இவ்வாறே பல பிறவிகளை அளித்து, இறுதியில் மீண்டும் இறப்பையும் பிறப்பையும் பொருந்தாத வகையில் அருட்பேறுகளாகிய செல்வத்துக்கு இருப்பிடமாகிய தனது திருவடியில் அந்த உயிர்களைச் சேர்த்துக் கொள்வதற்காகவே அருள்வடிவம் கொண்டு விளங்கும் அறுமுக தெய்வத்தை மறந்திருப்பதற்கு நாம் ஒன்றும் நாத்திகர் இல்லையே!

**ஆசற்ற வண்டத்து மாச்சரிய பிண்டத்தும்**
**மாசற்ற ஞான மணியாகித் - தாசர்க்குட்**
**பூத்துவிரி கின்றவருட் புண்ணியனைப் பொச்சாக்க**
**நாத்திக ரல்லமே நாம். 30**

இன்னதிசை என்றில்லாமல் எல்லாத் திசைகளிலும் விரிந்திருக்கும் அண்டங்களிலும், வியப்புமிக்க எண்ணற்ற உடலங்களின் உள்ளும் தூய்மையுடன் விளங்கும் ஞானரத்தினமாக ஒளிவீசி, அடியார்களின் இதய நடுவே பூத்து மலர்ந்து அருள்மணம் பரப்பும் புண்ணியனாகிய முருகப்பெருமானை மறந்து இருப்பதற்கு நாம் ஒன்றும் நாத்திகர் இல்லையே!

**நித்தக் குமர னினைப்போ ரகத்திருந்து**
**சித்தப் படிக்கருளுஞ் சீர்வள்ள - லித்தரையிற்**
**பஞ்சமூ றுற்றாலும் பாலித்திங் காட்கொள்ளும்**
**நெஞ்சே மயங்காம னில். 31**

என்றும் உள்ளவன், குமரப்பெருமான், தன்னைத் தியானித்து இருப்போரின் உள்ளத்தில் குடிகொண்டு, அவர்கள் எண்ணிய எண்ணியாங்கு நிறைவேற்றி அருளும் சிறப்புடைய வள்ளற் பெருமான் - என விளங்கும் முருகப்பெருமான் இவ்வுலகில் வறுமை முதலான பல துன்பங்கள் நேர்ந்தாலும் எல்லா உயிர்களையும்

பரிபாலித்து ஆட்கொள்ளும் கருணைப்பெருக்கு உடையவன். எனவே, நெஞ்சமே! நீ எதற்கும் கலங்காமல் உன் உறுதி நிலையிலேயே நில்.

அருவா யுருவா யருவுருவ மாயெங்
குருவா யிலங்குங் குகேசன் - றிருவடியின்
இட்டஞ் சதாவுள் ளிருக்கவுள் கிற்பட்ட
கட்டையுஞ் சேருங் கதி. 32

அருவம், உருவம், அருவுருவம் என்னும் மூன்று நிலைகளிலும் விளங்குபவனாகவும், எமக்கெல்லாம் குருவாகவும் விளங்கும் குகேசப் பெருமானின் திருவடிகளில் இடையறாத அன்பு என்பது எப்பொழுதும் உள்ளத்தே இருக்குமாயின், அவ்வாறு இடையறாத அன்பு கொண்டோரின் பார்வைபட்டால் பட்டுப்போன கட்டை மரமும் துளிர்த்து உயிர்பெற்று நற்கதியை அடையும்.

பூவின் மணம்போலப் புந்தியகத் தேமறைந்து
மேவிக் கமழும் விறல்வேலோய் - கூவியழும்
என்னெண்ணம் போன்முடியா தென்றாலு மென்விரதம்
உன்னெண்ணம் போன் முடியா தோ. 33

பூவின் நறுமணத்தைப் போல் என் அறிவின் உள்ளே அறிவுக்கு அறிவாகப் பொருந்திச் சிவமணம் பரப்பிக் கொண்டிருக்கும் வெற்றிவேற் பெருமானே! உன் அருள் வேண்டித் தேம்பி அழும் நான் எண்ணியவாறு நிறைவேறாது என்று கூறும் எனது விரதநிலை நினது திருவுள்ளக் கருத்தின்படிதான் நிறைவேறும். (என்று+ஆலும் = என்றாலும்)

## (பின் முடுகு)

நினைத்தார் வினைத்தா நெரிக்குமரு ளைத்தா
வெனைத்தா வுனைத்தா வெனத்தா - வனத்தார்கள்
சேர்புவளர் மாதரசி சேர்தலைவ வாசிறலை
யேர்புமயி லேறிறைவ னே. 34

என் தலைவனே! வள்ளிமலைக் காட்டில் வாழும் வேடர்களிடம் சார்ந்து வளர்ந்த பெண்டிர்குல அரசியாகிய வள்ளிநாயகியோடு, இரண்டறக் கூடிக் களிக்கும் பெருமானே! குற்றமற்றதும், பெருமைமிக்கதும், எழுச்சி மிக்கதும் ஆகிய

34. **சேர்தல்** = அத்துவைதமாய் விரவல். **தலை** = பெருமை; "வியலுந் தலையு நெய்தையு மாவும் .............. பெருமைப் பெயரே" என்பது **பிங்கலந்தை**. **ஏர்பு** = எழுச்சி.

மயில்மேல் ஆரோகணித்து வரும் இறைவனே! தன்னைச் சிந்திப்பவர்களின் வினைப்பயன்கள் அனைத்தையும் பொடியாக்கி அழிக்கும் உனது பேரருளை எனக்கு வழங்கு! என்னை எனக்குக் கொடு! பின்னர், எனக்கு உன்னையே கொடுத்தருள்!

**(முன் முடுகு)**

ஞானவயில் வேலிறைவ நாகமயி லேறிறைவ
வானவர்பி ரானிறைவ மாலிறைவ - கோனிறைவ
என்று துதிப்பா ரிருமையு மேல்வாழ்க்கை
ஒன்றுவ ருள்ளே யுணர். 35

ஞானசக்தியாகிய கூரிய வேற்படை ஏந்தியுள்ள இறைவனே! தனது கூரிய அலகில் நாகத்தைக் கொண்டுள்ள மயிலில் ஏறிவரும் இறைவனே! தேவர்களுக்கெல்லாம் அரசனாகிய இந்திரன் வணங்கும் இறைவனே! திருமால் போற்றும் இறைவனே! மகாதேவனாகிய சிவபிரானின் குருவே (இறை=குரு) - என இவ்வாறெல்லாம் போற்றித் துதிக்கும் அன்பர்கள் இம்மையிலும் மறுமையிலும் மிகவும் மேம்பட்ட வாழ்க்கை நிலையை அடைவார்கள். இதனை உன் உள்ளத்துள்ளே நன்கு சிந்தித்து உணர்ந்து கொள்.

**(மொழிமாற்றுப் பொருள்கோள்)**

கரத்திற் சிலம்பிரண்டு காலி னெடுவேல்
உரத்திற் குழைசெவியி லொண்ணூ - லுரத்த
தலையிலரை ஞாணிடையிற் சார்முடியுண் டென்ப
மலைவிலர்மா தேவன் மகற்கு. 36

மேருமலையை வில்லாகக் கொண்ட மகாதேவனாகிய சிவபெருமானின் திருக்குமாரனாம் செவ்வேள் பரமனுக்கு இரண்டு திருவடிகளிலும் சிலம்பு உண்டு; கரத்தில் வேற்படை உண்டு; மார்பில் ஒளிமிக்க பூணூல் உண்டு; செவிகளில் குழை ஆபரணம் உண்டு; வலிமைமிக்க சிரசில் மணிமகுடம் உண்டு; இடையில் அரை ஞாண் உண்டு எனக் கூறுவார்கள்.

[இதற்கு வேறாய், செய்யுட்கண் முதலினு மீற்றினு நிற்கு மொழிகள் தம்முட் பொருணோக்க முடையவனவாயுள்ள பூட்டுவிற்பொருள்கோள் நடையை, இவ்வியல் 3-வது பாவிலும், முதன்மண்டலத்திற் "பகலெல்லாம்" என்னும் 41-ஆம் பிரபந்தத்து 6-17-22ஆம் வெண்பாக்களிலு மறிக.]

## (இரதபந்தம்)

இருள்பொருதா வம்பலச்சித் தென்னுமுரு காநீ
டிருவிண்ணோர் தேடுமருந் தேமாண் - பொருவாச்சீர்
தேசுதருஞ் செந்திநறுந் தீர்த்தவிற லோங்குசிதா
வாசிறந்த மாவின் பருள். 37

பூத இருள் ஒரு சிறிதும் அணுகாத சிற்றம்பலம் எனும் பெருவெளியில் ஒளிரும் ஞானவத்து எனப்படும் முருகப் பெருமானே! மேன்மேலும் பெருகும் செல்வவளம் வாய்ந்த தேவலோகத்தில் உள்ளார் தேடிக் காண உள்ள அமுதமே! நிகரற்ற மாட்சிமையும் சீர்மையும் மிக்க ஒளிநிலையத் தரும் செந்திலம் பதியில் எழுந்தருளும் தூய்மைமிக்க புண்ணியனே! தெய்வங்கள் அனைத்துள்ளும் வீறுமிகப் பெற்றுள்ள ஞானமயமான நாயகனே! என் முன் எழுந்தருள்! சிறந்த பேரின்பத்தை வழங்கி அருள்.




**இரதபந்தம்**

## உ. இன்னிசை வெண்பா.

**ஒழுகிசைச்செப்பலோசைபெற்றுவருமொருவிகற்பம்.**

உள்ளபடி யெவ்வுயிர்க்கு மோவலற்ற வன்னையப்பன்
வள்ளிகொழு நன்றானே மாநூன் முடிபுமிது
வள்ளலவ னைத்தான் மறந்தொருவன் மற்றவர்க்குப்
பிள்ளையெனச் சொல்லல் பிழை. 38

உண்மைநிலையை உள்ளவாறே கூறினால், என்றைக்கும் நீங்காத நிலையில் அனைத்து உயிர்களுக்கும் அன்னையும் தந்தையுமாக விளங்குபவன், வள்ளிநாயகனாகிய முருகப்பெருமானே ஆவான். இறைநூல்களாகிய வேதங்களும் ஆகமங்களும் கூறும் முடிவான கருத்தும் இதுதான். மகாவள்ளலாகிய குகப்பெருமானை மறந்து ஒருவன், மனித குலத்தைச் சார்ந்த ஏனையோர்க்குத் தன்னை மகன் எனக் கூறிக் கொள்வது பெரும் குற்றமாகும்.

இகலுலகி லீன்ற விருவர்க்குந் தாதை
வகைமுறையெண் ணிற்றே வரைபோ மொருவன்
தகவின் றிடைநீங்கு மன்னார்க்கே தன்னை
மகனென்று சொல்லல் வழு. 39

ஒன்றுக்கொன்று விரோதமான போக்கையே கொண்டிருக்கும் இந்த உலகில் ஒருவன் தன்னைப் பெற்றெடுத்த தந்தைக்கும் தாய்க்கும் தந்தை யார், தாயார் யார், அவர்களின் பெற்றோர் யார் என இவ்வாறு சிந்தித்துக் கொண்டே போனால், அந்தச் சிந்தனை முதன் முதலில் உயிருக்கு உடலளித்த கடவுளில் சென்று முடியும். ஆகையால் ஒருவன் உறுதிப்பாடு இல்லாமல் இடையே தன்னைவிட்டு நீங்கி விடுகின்ற உலகியல் சார்ந்த தந்தைக்கும் தாய்க்கும் தன்னை மகன் எனக் கூறிக் கொள்வது பெரும் தவறாகும்.

**மேற்படி, * பலவிகற்பம்.**

செய்தவினைக் கீடாகச் சேர்ந்திட்ட வன்னைபிதா
மெய்யையன் றாயா விளங்கா ரனைத்திற்கும்
ஈசுரனே யன்னைபிதா வென்றுணரா மேவேறு
பேசுவது மாதப் பிதம். 40

* ஒன்றல்லனவெல்லாம் பலவென்பது தமிழ்வழக்கு.

தாம் முற்பிறவியில் செய்த வினைகளுக்கு ஏற்ப இப்பிறவியில் இல்லறத்தில் ஈடுபட்ட தாயும் தந்தையும் என்றைக்கும் நிலையாக விளங்கும் தாயாகவும் தந்தையாகவும் விளங்கமாட்டார்கள். அனைத்து உயிர்களுக்கும், ஈசுவரன் (முருகன்) ஒருவன்தான் அன்னையும் தந்தையுமாக விளங்குபவன். இந்த உண்மையை மறந்து வேறு விதமாக ஒருவன் கூறுவது மிகப் பெரும் தவறாகும்.

வாளன்ன கண்மகண்மெய் வாழ்க்கைத் துணைவியல்லள்
வேளென்னு மெம்பெருமான் வேலோன் பதம்விழைந்து
நிற்பார்க் கனிச்சையே நித்தவாழ்க் கைத்துணைவி
அத்துணைவி வாய்ப்ப தரிது. 41

வாள் போன்ற கண்களை உடைய பெண், ஒருவனுக்கு உறுதியான வாழ்க்கைத் துணையாக விளங்க மாட்டாள். கந்தவேள் எனப்படும் எம்பெருமானாகிய வேலவனின் திருவடிப்பேறு ஒன்றையே விரும்பி, உறுதிப்பாட்டுடன் இருப்போர்க்கு 'வேண்டாமை' (ஒருபொருளையும் விரும்பாமை) என்பதே உறுதியான வாழ்க்கைத் துணைவியாகும். இத்தகைய வாழ்க்கைத் துணை ஒருவருக்கு வாய்ப்பது என்பது மிகவும் அரிதாகும்.

இரண்டாமடியிற் றனிச்சொற்பெற்றுவரு
மேற்படி, பலவிகற்பம்.

எச்சீவ னெச்சித்தி பெற்றாலு மென்றெய்வத்
தச்சன்போ லேதுந் தருமன்றி - யச்சிவம்போற்
பேரண்டஞ் செய்திடுமோ பேரருளை வென்றிடுமோ
நல்லுணர்வி னாய்ந்து நவில். 42

எந்தச் சித்தர் எத்தகைய சித்திகளைப் பெற்றாலும்தான் என்ன? அவர்களால், தெய்வத் தச்சனாகிய விசுவகர்மா நொடியளவில் நகரங்களையும், மாளிகைகளையும் தோற்றுவிப்பது போன்று, பல அற்புதங்களைச் செய்ய முடியுமே தவிரத் தத்துவங்களுக்கு அப்பாற்பட்ட சிவமாக விளங்கும் முருகப்பெருமானைப் போன்று, பெரிய பெரிய அண்டங்களைப் படைக்க முடியுமா? அவனது அருள்நிலைக்கு மேம்பட்டு விளங்க முடியுமா? இதனை உனது நல்ல உணர்வு கொண்டு நன்கு ஆராய்ந்து கூறு.

**விரிபுவன வத்துக்கண் மூலமா மேன்மான்**
**பெரிததனான் மாயை பிரமங் - கருதுமறி**
**வில்லா வதற்கஃ திருக்கு முயிர்ப்பிரமம்**
**அப்பிரமத் தின்மே லது.** 43

விரிந்து பரந்திருக்கும் புவனங்களுக்கும், புவனங்களிலுள்ள பொருள்களுக்கும் மூலகாரணமாக இருப்பது பிரகிருதிமாயை. இது புவனங்களைக் காட்டிலும் பெரிதுபட்டிருப்பது (பிரம்மம் - பெரியதாக இருப்பது). சிறிதும் அறிவில்லாமல் சடப்பொருளாக இருக்கும் பிரகிருதி மாயையை நோக்க, அறிவுடைப் பொருளாக விளங்கும் ஆன்மா மிகவும் பெரியது. இத்தகைய ஆன்மாவுக்கும் ஆன்மாவாக விளங்கும் குகபரம்பொருள் ஆன்மாவைக் காட்டிலும் மிகப் பெரியது.

**அதுவாம் பரப்பிரம மான்மாவுக் கான்மா**
**அதனாலே யத்துவித மாகு - மிதுதானே**
**உண்மைச் சிவானுபவ முள்ளடங்கி நின்றீ**
**தறியா ரிரண்டொன்றென் பார்.** 44

தத்துவங்களுக்கு அப்பாற்பட்ட நிலையில் 'அது' (தத்) எனக் குறிப்பிடப்படும் பரப்பிரம்மம் என்பது ஆன்மாவுக்கும் ஆன்மாவாக விளங்குவது. அதனால் அது உயிரோடு ஒன்றாகியும் வேறாகியும் உடனாகியும் விளங்கும் அத்துவிதப் பொருளாகும். (இரண்டற்ற பொருள்). இந்த முடிபே, உண்மையான சிவானுபவத்தில் நன்கு விளங்கும். இந்திரியங்களும் கரணங்களும் அடங்க நின்று இந்த உண்மையை உணராதவர்கள் ஆன்மா பரமான்மாஎன இரண்டு என்றும் ஆன்மாவும் பரமான்மாவும் ஒன்று எனவும் பலவாறு கூறி இடர்ப்படுவார்கள்.

**மேற்படி, மூன்றாமடியிற் றனிச்சொற்பெற்றுவருவது.**

**தெவ்விறந்த தெய்வநா மென்போய்கேள் சிற்றறிவாம்**
**எவ்வுயிர்க்கண் ணுந்தே விருப்பதுபோ லுன்கண்ணும்**
**அவ்வரிய தேவுள்ள தாகலினீ - யவ்வுயிரு**
**ளொன்றெனவெண் ணிக்குகனை யுள்கு.** 45

'முரண்பாடுகளெல்லாம் கடந்து விளங்கும் பிரம்மம் நான்' எனக் கூறிக்கொள்வோய்! கவனமாகக் கேட்டுக்கொள்! எல்லா

உயிர்களிடத்தும் அந்தப் பிரம்மம் அந்தர்யாமியாக விளங்குதல் போன்று உன்னிடத்தும் அந்த அரிய தெய்வம் அந்தர்யாமியாக உள்ளது. அதனால் அத்தகைய உயிர்களுக்குள் நீயும் ஓர் உயிரே. இதனை நன்கு சிந்தித்து உணர்ந்து எப்பொழுதும் குகப்பெருமானையே தியானித்து இரு.

**மேற்படி, அடிதோறுந் தனிச்சொற்பெற்று வருவது.**

**ஆதரமார் நெஞ்சு மதன்மூல - போதமுநற்**
**சாதனையி னிர்ச்சலனஞ் சாருமேற் - பேதச்**
**சரியைகிரி யாயோகந் தாண்டோர் - விரியறிவாம்**
**அவ்வறிவே யோஞ்சே யருள். 46**

ஆசை குடிகொண்டிருக்கும் நெஞ்சமும், அது அடைந்துள்ள தற்போதமும் (பசுஞானமும்) நன்னெறிப்பட்ட முறையான உபாசனைகளால் அசைவற்ற நிலையை அடைந்து ஒய்வுபட்டு விடுமாயின் ஒன்றோடொன்று பேதப்பட்டுள்ள சரியை நெறி, கிரியை நெறி, யோக நெறி ஆகிய மூன்றையும் கடந்து பேதங்களுக் கெல்லாம் அப்பாற்பட்டதாய் விரிவடையும் சிவஞானமாகிய உயர்ந்த ஞானமே செவ்வேள் பரமனின் அருள்நிலையாகும்.

**ஒருஉத்தொடைபெற்றுவரு மேற்படி, பலவிகற்பம்.**

**ஞானமின் றேன்முத்தி நண்ணாது ஞானமும்**
**யோகமின் றேல்வந் துதியாதவ் யோகமும்**
**மெய்ப்பத்தி யின்றி விளையாது மெய்ப்பத்தி**
**இன்கருணை யின்றெய்தா தே. 47**

ஞானம் வாய்க்கவில்லை எனில் முக்திப்பேறு வாய்க்காது. அந்த ஞானமும் முறையான யோகப்பயிற்சி இல்லாது போனால் வாய்க்காது. அந்த யோக நிலையும் உண்மையான பக்தி இல்லாவிட்டால் வாய்க்காது. அந்த உண்மையான பக்தியோ, செவ்வேள் பரமனின் இனிய அருள் இல்லாவிட்டால் ஒருவருக்கு வாய்க்க வழியே இல்லை.

**இப்பாக்களானே, நான்கடியா யிரண்டாமடியிற் றனிச்சொற்பெற்றுவரு நேரிசை வெண்பாவிற் சிறிது பேதப்பட்டு வருவது இன்னிசை வெண்பா வென வறிக.**

**46. ஆதரம் = ஆசை. சூடாமணி நிகண்டு காண்க.**

## 3. பஃறொடை வெண்பா.

ஒழுகிசைச்செப்பலோசைபெற்று
ஐந்தடியான்வருமொருவிகற்பம்.

பத்தி மிகுமாயிற் பற்றொன்று மிங்கில்லை
பத்தி மிகுமாயிற் பண்ணரிய யோகதுவே
பத்தி மிகுமேற் பதிமுருகன் ஞானமெய்தும்
பத்தி மிகுமேற் பரமசுக முத்தியெய்தும்
சித்தமே யித்தைத் தெளி. 48

பக்தி உணர்வு மிகுந்து விளங்குமானால், உலகப்பற்று ஒருசிறிதும் இங்கு இருக்காது. பக்தி உணர்வு மிகுந்து விளங்கினால், அதுவே செய்தற்கரிய உயர்வான யோகநிலை ஆகும். பக்தி உணர்வு மிகுந்து விளங்குமானால் முழுமுதற்கடவுளாகிய முருகப் பெருமானின் அருளால் சிவஞானம் வாய்க்கும்; மேம்பட்ட ஆனந்த மயமான முக்திப் பேறு கிட்டும். நெஞ்சமே! இவ்வாறு விளங்கும் பக்தியின் மேம்பாட்டைத் தெளிவாக உணர்ந்து கொள்.

மேற்படி, ஆறடியான்வரும் பலவிகற்பம்.

நாம்பிரம மென்று நவிலொருவன் வீணேமெய்
ஆம்பரம தேசிகனா வானோநன் னெஞ்சேசொல்
ஓங்குக வேளவன தொள்ளருள ருன்னினிங்ஙன்
நீங்குமல மெல்லா நிறைவுமுறு மாதலினோர்
ஏசி லுருவை யிதயத் தமர்த்தந்த
ஆசில் குணமுனக்கு மாம். 49

நெஞ்சமே! "நாம் பிரம்மமாகவே உள்ளோம்" எனக் கூறிக் கொள்ளும் ஒருவன் சிதாகாசமே தனது வடிவாக விளங்கும் முதல் குருவாகிய சிவனாக ஆகிவிடுவானோ? ஆக முடியாது. புகழ் மிகுந்திருக்கும் முருகப் பெருமானின் திருவருட் பேற்றுக்கு ஆளான ஞானியர் நினைத்தால் விரைவில் பாசத் தளைகள் எல்லாம் நீங்கும். எண்ணிய எண்ணங்கள் யாவும் நிறைவேறும். ஆதலால் குற்றமற்ற குருவடிவை உனது இதயத் தாமரைப் பீடத்தில் அமர்த்தி வழிபடு. அதனால் இறைவனுக்குரிய ஆறு குணங்களும் உனக்கும் வாய்க்கும்.

49. சொல் = புகழ்..

**மேற்படி, ஏழடியான்வரும் பலவிகற்பம்.**

**பிரமக் குழவியின் பேரருளிற் சித்தி**
**வருமே வராவிடினு மாகதிகுன் றாதிதனுக்**
**கப்பூதி மெய்ப்பொருள ரானாய ரேனாதி**
**துப்பேறு நீலநக்கர் சோமாசி மாறரருட்**
**சாக்கியர் வாயிலார் சத்தி குலச்சிறையர்**
**மூர்க்கர் முருகர் பெருமிழலை யார்மாறர்**
**காரிகண நாதர் கரி. 50**

பிரம்மமயமான குழந்தை எனப்படும் பாலமுருகப் பெருமானின் அருளால் மேம்பட்ட சித்திப்பேறாகிய பரமசுகமான முக்திநிலை வாய்க்கும். பரமுக்தி கிட்டாவிடினும், அபரமுக்தி எனப்படும் மேலான நிலைகள் அடைவதற்குத் தடை ஏதும் இல்லை. இவ்வாறு அடைந்ததற்குச் சான்று அப்பூதி அடிகள், மெய்ப்பொருள் நாயனார், ஆனாய நாயனார், ஏனாதிநாதர், தூய்மை மிக்க நீல நக்கர், சோமாசி மாற நாயனார், அருட்பேறு மிக்க சாக்கிய நாயனார், வாயிலார் நாயனார், சக்தி நாயனார், குலச்சிறையார், மூர்க்க நாயனார், முருக நாயனார், பெருமிழலைக் குறும்பர், இளையான்குடிமாற நாயனார், காரி நாயனார், கணநாதர் - என்னும் அடியார்களே சான்று.

**மேற்படி, பன்னீரடியான் இடையிடையே**
**தனிச்சொற்பெற்றுவரும் பலவிகற்பம்.**

**சின்மைசொல் சேய்வயதிற் றேடியெனை யாளவந்த**
**பொன்மையயில் வேலோய் புகலக்கேண் - முன்னர்நான்**
**சென்றுசென்று நின்ற செயலெல்லாம் யோசிக்கின்**
**என்றனக் கேயிறும் பூதுண்டாய் - நன்றில்**
**விசன மவமானம் விஞ்சுமவை யெல்லாம்**
**உசிதமுள்ள நீதா னொழித்துன் - சுசியடியே**
**ஏத்தியினி துய்யவென் றிட்டநன் றிக்காகத்**
**தோத்திரஞ் சொல்வேன் றொழுவேனுன் - கேத்திரஞ்**
**சென்றுசே வித்துச் செபிப்பேனின் னாறெழுத்**
**தென்றறையு மந்திரமு மென்கோவே - பொன்றா**
**வழிதந்து முன்சொற்ற வாக்கைநிறை வேற்றாய்**
**இழிவொன் றிலாதணைத் தே. 51**

'சிறுமைத் தன்மை உடையது' எனக் கூறப்படும் எனது பிள்ளைமைப் பருவத்தில் என்னை ஆட்கொள்ளவேண்டிக் கருணையால் நீயாகவே என்னைத் தேடிவந்து அருள்புரிந்த பொன்மயமான வேற்படை ஏந்திய நாயகனே! அடியேன் கூறுவதைக் கேட்டு அருள்க. முன்பு அந்தப் பிள்ளைமைப் பருவத்தில் நினது அருட்பேறு வேண்டி ஒவ்வாத நெறிகளில் எல்லாம் சென்று அலைந்து நின்ற செயல்களையெல்லாம் எண்ணிப்பார்த்தால் எனக்கே அதிசயமான அதிர்ச்சி உண்டாகி நன்மை சிறிதும் இல்லாத துக்கம், அவமானம் முதலான உணர்வுகளெல்லாம் தோன்றிச் செறியும். அவ்வாறு தோன்றும் அந்த இழிவான உணர்வுகளையெல்லாம் இறைமைத் தகுதி மிக்க நீயே அறவே ஒழித்துவிட்டு உனது தூய்மைமிக்க திருவடிகளையே போற்றித் துதித்து இனிதே உய்தி பெறுமாறு என்னைச் செலுத்தி வைத்த உனது நன்மைமிக்க திருவருட்பேற்றை நன்றியுடன் நினைந்து தோத்திரங்களைக் கூறுவேன்; வணங்கிநிற்பேன்; உனது தலங்கள் தோறும் சென்று உன்னைத் தரிசித்துச் சேவை செய்வேன், திருவாறெழுத்து எனக் கூறப்படும் உனது மந்திரத்தையும் நாள்தோறும் ஜெபிப்பேன். என் அரசே! அழியா நெறிதந்து, இழிவு சிறிதும் ஏற்படாவகையில் என்னை அணைத்துக்கொண்டு, நீ முன்னர் எனக்குக் கூறியருளிய வாக்கை நிறைவேற்றி அருள்!

## 4. சவலை வெண்பா.

**ஒழுகிசைச்செப்பலோசைபெற்றுவரு**
**மிருகுறளொருவிகற்பம்.**

**கூவுஞ் சரணா யுதக்கொடியோய் கூரயிலோய்**
**யாவும் புரக்குமுனை யாப்பினவில்**
**நாவுந் தொழுமுடலு நாளுநினை யுண்ணெஞ்சுந்**
**தூவுண்ணுந் தோமுண்ணா வே.** 52

கூவுகின்ற சேவலைக் கொடியாக ஏந்தியுள்ள குகப் பெருமானே! கூரிய வேற்படை கொண்டுள்ளவனே! எல்லாவற்றை யும் எப்பொழுதும் காத்தருளும் உன்னைப் பாக்களால் போற்றும் நாக்கும், தொழும் உடலும், எப்பொழுதும் உன்னையே எண்ணிக்

கொண்டிருக்கும் நெஞ்சும் தூய்மையையே பொருந்தி விளங்கும். ஒருபொழுதும் குற்றத்துக்கு ஆட்படாது.

மேற்படி, இருவிகற்பம்.

வளைதுகிலை வாயுடம்பைச் சுத்தியாய் வைத்துக்
கொளல்போலுள் வைத்துக் கொளநினைவோர்
உன்னை மறந்து மிருப்பாரோ வோகைதரற்
கென்னை விழுங்குமுரு கே. 53

சிவானந்தப் பேற்றை வழங்குவதற்காக எனது நிலையை அடியோடு மாற்றி உனது நிலையை எனக்குத் தந்தருளும் முருகப் பெருமானே! சுற்றி உடுத்திக் கொள்ளும் ஆடையையும் வாய்த்துள்ள உடம்பையும் தூய்மையாக வைத்துக் கொள்ளுதல் போன்று தமது உள்ளத்தையும் தூய்மையாக வைத்துக் கொள்வதில் கருத்தாக இருப்போர் உன்னை ஒருபொழுதேனும் மறந்து இருப்பார்களோ?

## 5. சிந்தியல் வெண்பா.

ஒழுகிசைச்செப்பலோசைபெற்றுவரு
நேரிசைச்சிந்தியல் ஒருவிகற்பம்.

கேழ்த்தா ரகதேவைக் கேகயமூர் கேடிலியைத்
தாழ்த்தா தெனையாளுந் தாளானை - யூழ்த்திநிதம்
வாழ்த்தா திராதெனது வாய். 54

பேரொளி மயமான ஓங்கார தெய்வத்தை, மயிலூர்ந்து வரும் நித்தியமான தெய்வத்தை, காலதாமதம் செய்யாமல் விரைந்து என்னை ஆட்கொள்ள வரும் திருவடிகளை உடையவனை எப்பொழுதும் முறைப்படி நினைத்து வரும் எனது நாக்கு துதித்து வாழ்த்தாமல் இருக்காது.

என்னா லியலாதா வெண்ணுவது போற்செயவென்
றந்நா ளுறுதிசொன்ன வள்ளிலைவேன் - மன்னார்வின்
எந்நாள் வருமோ வினி. 55

"நீ எண்ணியது போலவே செய்வதற்கு என்னால் இயலாதா?" என முன்பொருநாள் உறுதியாகச் சொல்லி அருளிய கூரிய

54. ஊழ்த்தல் = நினைத்தல்; தகரவெதுகை காண்க.

இலைபோன்ற வேற்படையை உடைய மன்னன் என்மீது மேலும் அன்புகொண்டு இனி என்றைக்கு எழுந்தருள்வானோ!

மேற்படி, இருவிகற்பம்.

நாற்றச் சரீரத்தை நன்குசெய வென்றுகுகன்
நீற்றினையெற் கிட்டானந் நேமத்தை - யாற்றா
திருப்பேனோ வேழை யினி. 56

பிணிகளாலும் உணவுகளாலும் தீ நாற்றம் கொண்டுள்ள இந்த தேகத்தைத் தூய்மை செய்து ஒளியூட்டுவதற்காக, குகப்பெருமான் அன்று என்மேல் திருநீறு பூசி அருளினான். இனி, விதிப்படித் திருநீறு அணிந்து கொள்வதை அடியேன் அனுட்டிக்காமல் இருப்பேனோ!

வெண்பொடியை யேயடியேன் மேனி மிசைத்திமிர்ந்து
கண்களிரண் டிற்குமிடைக் கைகாட்டி - நண்போ
டுரைத்தோ னெனைக்காவா னோ. 57

வெண்மையான திருநீற்றை எனது உடம்பின்மேல் நிறையப்பூசி எனது இரண்டு கண்களுக்கும் இடையே புருவ மத்தியில் (ஆக்ஞா சக்கிரத்தில்) சுட்டுவிரலை நீட்டி, எனக்கு அன்போடு சில வார்த்தைகளைக் கூறியருளிய முருகப்பெருமான், என்னைக் காத்து அருளாமல் இருப்பானோ!

பிறக்கும் பொழுதே பெயருரு மன்புஞ்
சிறக்கவிதித் தேதன்னைச் சேர்ந்துய் - நெறிக்கணெனை
வைத்தகுக னாளானோ வந்து. 58

நான் பிறந்த பொழுதேயே எனக்கு நல்ல பெயரும் நல்ல ஊரும் இடையறாத அன்பும் சிறப்புடன் திகழுமாறு முறைப்படுத்தி அருளித் தன்னையே சரணாக அடைந்து உய்திபெறும் ஞானமார்க்கத்தில் என்னை ஈடுபடுத்தி அருளிய குகப்பெருமான் மயிலூர்ந்து வந்து என்னை ஆட்கொள்ளாமல் இருப்பானோ!

56. நேமம் = நியமம் என்பதன் விகாரம். விதிமுறையெனும் பொருண்மைத்து : யகரவெதுகை காண்க.

### மேற்படியோசைபெற்றுவரும்
### இன்னிசைச்சிந்தியல் ஒருவிகற்பம்.

**பா**ராளும் வேந்தர்க்கும் பண்ணார்பா வாணர்க்கும்
வீராதி வீரர்க்கும் விண்ணோர்க்கு மேயதிகம்
ஆரா ரயிலனடி யார். 59

உலகம் முழுவதையும் ஆட்சி செய்யும் வேந்தர்களைக் காட்டிலும், பண் நலம் மிகுந்த பாடல்களைப் பாடவல்ல கவிஞர்களைக் காட்டிலும், வீரர்களுக்குள்ளே மேம்பட்டுத் திகழும் அதிவீரர்களைக் காட்டிலும், கூர்மை நிறைந்த வேற்படை தாங்கிய இறைவனின் அடியார்கள் அதிகமான பெருமை வாய்ந்தவர்களாவர்.

### மேற்படி, இருவிகற்பம்.

**எ**மக்கபரா தம்புரியி னுஞ்சகிப்போ மெந்தம்
அடியர்க் கிடுமபரா தஞ்சகியோ மென்றல்
செடியறுசேய் வாக்கதனைத் தேர். 60

“எமக்கு அபராதம் செய்தாலும், பொறுத்துக் கொள்வோம். ஆனால் எமது அடியார்களுக்கு இழைக்கப்படும் அபராதங்களைப் பொறுத்துக் கொள்ள மாட்டோம்” என்பது, நமது வி.னைகளையெல்லாம் தீர்க்கவல்ல செவ்வேள் பரமனின் திருவாக்கு. அதனை நன்கு தேர்ந்து உள்ளத்தில் பதித்து வை.

### மேற்படி, பலவிகற்பம்.

**இ**ருட்டை யருவருத்திங் கெல்லொளிக ளிச்சிக்கும்
பெற்றியுள்ள நெஞ்சே பிறங்கொளியெல் லாஞ்சடமா
மென்றுகுகச் சோதிவிரும் பே. 61

இருளை வெறுத்து, இங்கே சூரியன், சந்திரன், விளக்கு முதலான பூத ஒளிப்பொருள்களை நாடிநிற்கும் தன்மை உள்ள நெஞ்சமே! இங்கே விளங்கும் இந்த ஒளிப்பொருள்களெல்லாம் சடப்பொருள்களே என்பதை நன்கு உணர்ந்து சைதன்யமயமாக (ஞானமயமாக) விளங்கும் குகஜோதியையே விரும்பி நிற்பாயாக.

இங்குவந்த 59-60-61 ஆம் பாக்களானே, மூன்றடியாய்த் தனிச் சொற்பெற்று வரு நேரிசைச் சிந்தியற்குப் பேதமாய்த் தனிச் சொற் பெறாது வருவதே யின்னிசைச் சிந்தியலென வறிக.

## 6. குறள் வெண்பா.

ஒழுகிசைச்செப்பலோசைபெற்றுவரும் ஒருவிகற்பம்.

இருட்டளையின் *றியாதனையின் றேயிருக்க நெஞ்சே
கருத்திற் குமரற் கருது. 62

ஆன்ம அறிவை மறைக்கும் இருளாகிய பாசத்தளையின் பிணிப்பு இல்லாமலும், வினையால் நேரும் துன்பங்கள் இல்லாமலும் சுகமாக இருக்க, நெஞ்சமே! இதய நடுவண் எப்பொழுதும் குமரப்பெருமானைத் தியானித்து இரு.

*இங்கே காய்முன் நிரைவந்து கலித்தளையாய் வெள்ளைத்தன்மை குன்றுதலின், "சீருந்தளையுஞ் சிதையிற் சிறிய இஉஅளபோ - டாருமறிவரலகு பெறாமை" எனவரு யாப்பருங்கலக் காரிகை விதியானே குற்றியலிகரம் அலகு பெறாதென வதனைக் களைந்து மெய்போற் கொண்டிடுகால், முதற்சீர் : வெண்டளைபெறுமாறறிக. குற்றியலுகரம் வரினு மிவ்வாறேகொள்க. அன்றி, இவ்வுகரங் குற்றெழுத்தே போனின் றலகு பெறுதலை யிதன் பின்னுள்ள செய்யுளின்கண் "வெனக்கென்று" என்பது மேல் விதிப்படிப் புளிமாவாகாது புளிமாங்காயாகி நிற்றலினுணர்க. "வந்துநீ சேரி னுயிர் வாழும்" எனவரு பிறரது வெண்பாட்டினுள்ளும் 'வந்துநீ' என்பதிலுள்ள குற்றுகரமு மவ்வாறலகுபெற்றுக் கூவிளமென நிற்றல்காண்க. இவ்வாறு குற்றியலிகரமும் அலகுபெறுமென்றறிக. ஓசைநயம் பற்றி, இவ்வாறலகுபெறுதலே, இந்நூற்குப் பெரும் பாலுமுடம்பாடு.

தூஉ விசாகாவுன் றோமற்ற நல்லருளைத்
தாஅ வெனக்கென்று தாழ். 63

'தன்னைத் துதிப்போர்க்குச் சிவத்தோடு ஒத்த தூய்மை நிலையை வழங்கும் விசாகப் பெருமானே! பாரபட்சமற்றதும், காரணமின்றி இயல்பாகவே பெருகுவதுமான உனது அருளை எனக்கு வழங்கு' என நாள்தோறும் வணங்கு.

இதில், "தூஉ" "தாஅ" என அளபெழுந்தனவுளுள்ள குறில்கள் : "ஓசை குன்றாநெட்டளபாய்விடினேர்நேர்" எனும் யா - காரிகையின்படி நேரசைகளாகி யவ்விருசீருந் தேமாவாயினமை காண்க.

களிப்போஒ *களிப்பென்று கூறிவில் லார்சே
யொளிப்போத ரன்னவர்சார் புய். 64

64. ஞானிகள், "ஞானம் எம்பாலுளது" எனக்கூறி விற்கமாட்டார்கள் என்பது இச்செய்யுளில் வெளிப்படுதலின் அஃதெத்துணை இரகசியத்தது? எவர்பாலுளது? என வறிதல் முழுமகனுக்கு மெளிதாமோ?

செவ்வேள் பரமனின் அருளால் சிவஞானம் வாய்க்கப் பெற்றுள்ள ஞானியர் "நாம் இப்பொழுது பேரானந்த நிலையில் உள்ளோம். எம்மிடம் உபதேசம் பெற வாருங்கள்" எனக் கூறித் தமது ஞானத்தை விற்கமாட்டார்கள். தமது பெருநிலைக்குரிய ரகசியங்களை அவசியமின்றி வெளிப்படுத்தாத சுத்த ஞானியரைச் சரணடைந்து உய்தி பெறுக.

*இதில், காய்முன் நிரைவந்து கலித்தளையாதலின், இங்ஙனம் அளபெடையலகு பெறாதெனும் விதியாலதனைக் களைந்துழி முதற்சீர் புளிமாவாகி வெண்டளை பெறுமாறறிக.

பொய்ய் விழியிச்சை பொன்னயிலோன் றண்ணருளின்
மெய்ய் விழியில்லார் மேற்று. 65

பொய்யையே காணும் ஊனக்கண், அவா - இந்த இரண்டும் பொன்மயமான வேற்படை ஏந்திய வள்ளலின் அருளால் ஞானக்கண் வாய்க்கப் பெறாதோரிடம் மட்டுமே உள்ளனவாகும்.

இதில், அளபெழுந்த ஒற்றெழுத்துக்கள் "ஒற்றளபாய்விடினோரலகாம்" எனும் யாகாரிகையின்படி, குறின் மாத்திரை பெற்று நேரசையாகித் தேமாவாயினமை காண்க.

எஃஃஃ கயிலேந்து மெந்தை திருவடியை
வெஃஃஃ குவார்க்கில் வெறிது. 66

கூரிய வேற்படை ஏந்தியுள்ள எந்தையாம் முருகப்பெருமானின் திருவடியை விரும்பி நிற்பாரிடம் வெற்று ஞானமாகிய அறியாமை இருக்காது.

இதில், அளபெழுந்த ஆய்தவெழுத்துக்கட்கும் மேல்விதி கொள்க.

மேற்படி, கூன்பெற்றுவருவது.

சததங் - குகனே குகனே குகனேயென் றோதிற்
சுகமே சுகமே சுகம். 67

எப்பொழுதும் குகப்பெருமானே, அன்பர்களின் இதயமாகிய குகையில் உள்ளவனே, அறியாமை உடையோர்க்கு மறைந்திருப்பவனே - என்றெல்லாம் துதித்துக்கொண்டே இருந்தால் இவ்வுலகிலும், மேலுலகிலும், முக்தி நிலையிலும் ஆனந்தமாக இருக்கலாம்.

இதில் "சததம்" என முதலிற் கூன்வந்தது. இதனைத் தனிச் சொல்லெனவுங் கூறுப. இதனால் வெண்பா : இடையுங் கடையுங் கூன்வரப் பெறாதெனக் கொள்க.

**பிறப்பென்னும் வாய்பாட்டான் முடிபவை.**

**துப்புரவு நாடுயிரே சுப்பிரமண் யத்தின்மேல்**
**எப்பிரம முள்ள தியம்பு.** 68

அனுபவிக்கப்படும் பொருளையே நாடிநிற்கும் அன்பனே! சுப்பிரமணியப் பெருமானுக்கும் மேம்பட்டதாக எந்தப் பிரம்மம் (தெய்வம்) உள்ளது? கூறு. (தகராலயரகசியம் 'இதயபங்கய' எனத் தொடங்கும் பாடல் உரை அடிக்குறிப்பு காண்க.)

**சீறுருவைப் பேருருவாச் செய்யு மதைமறைக்கும்**
**நீறுகொண்மெய்ச் சேயோர் நினைப்பு.** 69

திருநீறு பூசிய மேனியராகித் தமது தியானபாவனத்தால் செவ்வேள் பரமனாகவே திகழும் ஞானியர்கள், தமது உள்ளத்தில் எழும் சங்கல்பத்தாலேயே சிறிய வடிவைப் பெரிய வடிவாக மாற்றுவார்கள்; மாறித்திகழும் பெரிய வடிவத்தை மறைக்கவும் செய்வார்கள்.

**ஆயு மிகவோங் கரிபிரமர் வாழ்வளப்பில்**
**சேயுருவன் வாழ்விற் சிறிது.** 70

மிகநீண்ட ஆயுட்காலம் பெற்றுள்ள நாரணர்களின் வாழ்வும், பிரம்மதேவர்களின் வாழ்வும், அளவுக்கு உட்படாத, சிவந்த வடிவினனாகிய முருகப்பெருமானின் வாழ்நிலையை நோக்க மிகவும் சிறிதுபட்டுத் திகழும்.

**காசென்னும் வாய்பாட்டான் முடிபவை.**

**திண்மைத் திருவருள்சிந் திப்போ ரெவர்க்குஞ்சேய்**
**வண்மைத் தரிசனமே மாண்பு.** 71

என்றும் நிலைத்திருக்கக் கூடிய திருவருட்பேற்றைப் பெற விரும்பும் அனைவர்க்கும், உசிதமான செயலானது யார் வேண்டினாலும் கேட்ட பொருள் வழங்கும் செவ்வேள் பரமனின் ஆலயத்துக்குச் சென்று அவனைத் தரிசனம் செய்தலே ஆகும்.

**இறந்துபிற வாக்குழவி யெந்தையறி யார்க்கில்**
**சிறந்த சிவானுபவச் சித்து.** 72

அடைய வேண்டிய பேறுகள் அனைத்திற்கும் மேம்பட்ட தாகிய சிவானுபவம் எனும் பேறு, இறவாமலும் பிறவாமலும்

திகழும் பிரம்மக் குழந்தையான எந்தை முருகப் பெருமானின் முதன்மைத் தன்மையை உணராதோர்க்கு வாய்க்காது.

**என்னறிவா யாண்டு மிருக்குமொரு சேயென்னும்**
**மின்னறியார்க் கில்லையுயர் வீடு. 73**

பதமுக்தி நிலைகளைக் காட்டிலும் உயர்ந்ததான பரமுக்திநிலை என்பது எனது ஞானமாக வெளிப்பட்டு, எங்கும் வியாபித்து நிறைந்திருக்கும் ஒப்பற்ற செவ்வேள் பரமன் என்னும் பேரொளியை அறியாதோர்க்கு வாய்க்காது.

**காறில் சிவயோகக் காட்சியுளா ரெவ்வருக்கும்**
**ஊறில் குகனருடா னுண்டு. 74**

குற்றங்களுக்கும் குறைகளுக்கும் இடங்கொடுக்காத உயர்ந்த சிவயோகக் காட்சி வாய்க்கப் பெற்றுள்ள அனைவர்க்கும் எங்கும் எப்பொழுதும் தடைபடாமல் உள்ள குகப்பெருமானின் திருவருள் உறுதிப்பட வாய்க்கும்.

**கேழார் திருமேனிக் கேடிலியின் சேயவனைத்**
**தாழாத தெய்வமுண்டோ சாற்று. 75**

செவ்வொளி மயமான திருமேனியை உடைய, நித்தியனான சிவபெருமானின் திருக்குமாரனாகிய முருகப்பெருமானை வணங்காத தெய்வமும் உளதோ? கூறு.

**அல்காத வோங்கந்த னாகமவ னன்பர்க்கேன்**
**பல்கா தருளறிவே பன்னு. 76**

குகனின் அருளுக்கு உரிய அறிவே! ஏகதேசமாக இல்லாமல் பரிபூரணமாக நிறைந்துள்ள பிரணவமயமான கந்தவேளின் உருவ லக்ஷணம், அவனது அடியார்களுக்கு எப்படி வாய்க்காமல் போகும்? கூறு.

**நாளென்னும் வாய்பாட்டான் முடிபவை.**

**சிவஞ்சத்திக் கன்னியமாச் சேயை யுரைப்போர்**
**பவம்பற்றிப் பாசறைகொள் வார். 77**

சிவத்துக்கும் சிவசக்திக்கும் வேறுபட்டவனாகச் செவ்வேள் பரமனைக் கூறுபவர்கள், மேன்மேலும் பிறப்பு இறப்பு எனும்

சுழற்சியில் சிக்கிக் கொண்டு, இடையறாத துன்பத்துக்கு ஆளாவார்கள்.

**சேய்நீயு நானுமே யோமென்று செப்பினான்**
**பாய்மா வுரியணிநம் பன். 78**

*புலித்தோலை இடையில் அணிந்துள்ள சிவபெருமான் "எனது குமாரனாகிய நீயும் நானுமே பிரணவப் பொருளாவோம்" என்று கூறி அருளினான்.*

**நன்றா ரணஞ்சொலல்போ னற்குமர நானேநீ**
**என்றான் பரமசிவ னே. 79**

*பரமசிவன் அன்று "வேதங்கள் உறுதியாகக் கூறுதல் போல், எனது அன்புக்குரிய குமாரனே! நான்வேறு அல்ல; நீ வேறு அல்ல; நீயே நான்; நானே நீ" என்று கூறி அருளினான்.*

**மலரென்னும் வாய்பாட்டான் முடிபவை.**

**ஆதியில்சே யாண்மை யளப்பவரா ரென்றரியும்**
**ஓதுரைகள் காந்தத் துள. 80**

*"ஆதியும் அந்தமும் இல்லாத குமாரக் கடவுளின் இறை நிலையை யாரால் அளந்து கூற முடியும்?" என்று திருமாலும் அன்று தேவர்களிடம் கூறிய கூற்றுக்கள் காந்த புராணத்தில் திகழ்கின்றன.*

[(கோவிஜாநாதிதேவஸ்ய பலம்பரமமத்புதம்|)

*"(குகேசனாகிய) அத்தேவனது பரமாற்புத பலத்தை யாவரே அறிய வல்லார்" என விட்டுணுமூர்த்தி விளம்பிநின்றனர். -* **ஸ்காந்த புராணத்து யுத்தக் காண்டத்து 29-ஆம் அத்தியாயம்.]**

**ஓதியுணர் வோய்சேய்விட் டோமறையா கங்குருவுஞ்**
**சோதியு முண்டோ சொலாய். 81**

*கற்க வேண்டிய நூல்களையெல்லாம் கசடறக் கற்றுத் தெளிவு பெற்றுள்ளவனே! செவ்வேள்பரமனை முக்கியமாகக் கொள்ளாத பிரணவப்பொருள் உண்டா? வேதம் உண்டா? யாகம் உண்டா? குரு உண்டா? விரதமும் விழாவும் உண்டா? கூறு.*

*(சோதி - அனுட்டிப்பார்க்கு ஒளியைத்தரும் விரதங்கள்; விழாக்கள்)*

**அ**ருக்கம் புனைபவன்சேய்க் கன்னியம தாக
இருக்கும் பொருளொன் றிலை. 82

எருக்க மலரையும் இகழாமல் ஏற்று அணிந்துகொள்ளும் சிவபெருமானின் திருக்குமாரனுக்கு அன்னியமாக இருக்கும் பொருள், எந்த உலகத்திலும் இல்லை.

**ம**டற்போதன் மான்முதலோர் மாமுருகெண் ணாரேற்
கடப்பாரோ துன்பக் கடல். 83

தாமரை மலரில் வீற்றிருக்கும் நான்முகன், திருமால் முதலான வர்கள் எல்லாம் பெரும்புகழ்க்கு உரிய முருகப் பெருமானைத் தியானித்து வணங்கவில்லை எனில், அன்று அசுரர்களால் ஏற்பட்ட துன்பக் கடலைக் கடந்து கரை சேர்ந்திருப்பார்களோ?

**வி**ளங்கயன்மால் விண்டு படைகளிருந் தென்சூர்ப்
பிளந்ததவன் வேலே பிற. 84

பிரம்மனுக்குரிய ஆயுதங்கள், திருமாலுக்குரிய ஆயுதங்கள் மற்றும் பிற தெய்வங்களுக்குரிய ஆயுதங்கள் ஆகிய இவையாவும் இருந்தால்தான் என்ன? அன்று மாமர வடிவில் இருந்த சூரபத்மனைப் பிளந்தது, நம் குமாரப் பெருமானின் வேற்படையே!

**ப**கவற்குச் சேய்சிறிதென் பார்க்கு விகார
வகநிற்கு மைந்து மறா. 85

சிவபெருமானைக் காட்டிலும், செவ்வேள் பரமன் சிறிய நிலையை உடையவன் எனப் பேதப்படுத்திக் கூறுவோர்க்கு வேறு பட்ட பிறவிகளுக்குக் காரணமான பாவமே நிலைத்திருக்கும்; அவர் களை விட்டு அஸ்மிதை முதலான ஐந்து கிலேசங்களும் நீங்காது.

மேற்படி, இருவிகற்பம்.

**ஒ**ன்றை யிரண்டு செயுமிரண் டொன்றுசெயுங்
கொற்றக் குமார குரு. 86

'வெற்றி ஒரு மலை' எனத் திகழும் குமாரக் கடவுளாகிய எம் குருநாதன் ஒன்றை இரண்டாக்குவான்; பின்னர் இரண்டையும் ஒன்று சேர்த்துக் கொள்வான்.

*(ஒரே வடிவாக இருந்த மாமரத்தை மயிலும் கோழியுமாக ஆக்கினான். பிறகு மயிலை வாகனமாகவும் கோழியைக் கொடியாக வும் தன்னோடு சேர்த்துக் கொண்டான். ஒன்று செய்தல் - சேர்த்துக் கொள்ளல்.)*

இதுகாறும், காய்முன் நேர்முதலாகிய காய்ச்சீர்வரு வெண்சீர்வெண்டளையாய ஏந்திசைச்செப்பலோசைபெற்றும், மாமுன்நிரை முதலாகிய மாஞ்சீரும் விளஞ்சீரும் விளமுன் நேர்முதலாகிய மாஞ்சீரும் விளஞ்சீருமாகவரும் இயற்சீர்வெண்டளையாய தூங்கிசைச்செப்பலோசை பெற்றும், மேலிருதளை விரவியும் மாமுன் நிரைமுதலாகிய புளிமாங்காய் கருவிளங்கா யெனப்படு சீர்களும் விளமுன் நேர்முதலாகிய தேமாங்காய் கூவிளங்கா யெனப்படு சீர்களும் வரு மியற்சீர்வெண்டளை கலந்தும் நிகழு மொழுகிசைச் செப்பலோசை பெற்றும் வந்த ப்பாக்களானே வெண்பா : வெண்டளையன்றி வேற்றுத் தளைவரப் பெறாதெனவும், வெள்ளடி : அளவடியாம் நாற்சீரின் மிக்குவருவதில்லையெனவும், வெண்பாவுக்குச் சிறுமை யிரண்டடியே யெனவும், எல்லா வெண்பாவுக்கு மீற்றடி முச்சீரேயா மெனவும், அவற்றினீற்றுச்சீர் : இவ்வியல் 68 முதல் 86வது பாவரையுங்காட்டிய வாய்பாடுகளானே முடியுமெனவும், முச்சீர்கொண்ட வெள்ளடியினீற்றுச் சீர்க்கண் மோனையெழுத்தல்லது அதனினவெழுத்து வருதன் மிக்கழகெனவும், வெண்பாவுக்கும் அதன் கடையடிபோனடக்குஞ் சில செய்யுள்களுக்குமே யீற்றுச்சீர் : நாள் மலரெனும் ஓரசையானு நிகழு மெனவுமுணர்க. கலிவெண்பாவைக் கலியியலிற் காண்க.

வெண்பா முற்றிற்று.

---

# வெண்பாவினம்.

---

## தாழிசை.

*தாழிசைக் குறளென்னுங் குறட்டாழிசை.*

இரண்டடியாயீற்றடிகுறைந்து
*நாற்சீரின் மிக்க பலசீரான் வருபவை.*

கங்கை மைந்தனல் வேல னீகதி
காணு மாறவன் கால்கட் கன்றலர்
துங்க மாமலர் சாத்தித் தோத்திரஞ் சொல்லுவலே. 87

*கங்கையின் மைந்தனாகிக் காங்கேயன் என அழைக்கப்படும் நல்ல வேற்படை நாயகன் ஈந்து அருளும் நற்கதியைத் தடையின்றி அடைவதற்காக, அவனது திருவடிகளில் அன்றலர்ந்த தூய நறுமண மலர்களைத் தூவித் தோத்திரங்களைக் கூறி நிற்பேன்.*

**பொய்சொ லேலினிப் பொய்சொ லேலெனப்**
பொன்னி னாவசைத் தோதி யேகிய
துய்ய சேயடி சேர மாதுதி சொல்லுவலே. 88

"பொய் சொல்லக்கூடாது. இனி எப்பொழுதும் பொய்யே சொல்லக்கூடாது" எனத் தனது அழகிய நாவை அசைத்துக் கூறிச் சென்ற சிவமயமான செவ்வேள் பரமனின் திருவடிகளை இம்மையிலேயே பெறுவதற்காகச் சிறப்புமிக்க தோத்திரங்களைக் கூறி நிற்பேன்.

சீற்ற வென்னகஞ் செவ்வி தாஞ்சமஞ்
சேர்ந்து சண்முக வாளென் றேகவி
சாற்ற வேவவன் பாத மாமலர் தாழுவலே. 89

கோபம் முதலான கொடிய குணங்களுக்கு இடம் கொடுத்துள்ள எனது உள்ளம் இன்பத்தையும் துன்பத்தையும் சமமாகக் கொள்ளும் செம்மையான நடுநிலை அடையப்பெற்று, "அறுமுகப் பரமனே! என்னை ஆட்கொண்டருள்" என்றெல்லாம் பாடல்களைப் பாடி அளிக்க, வேற்படை நாயகனின் திருவடிக் கமலங்களைப் பணிந்து நிற்பேன்.

**பெண்ணி னார்வமு மண்ணி னார்வமும்**
பிள்ளை யார்வமுங் கண்டு போதுமென்
றண்ணல் சண்முகன் பாத வார்வ மழுந்துவலே. 90

பெண் ஆசை, மண் ஆசை, மக்கட்பேற்று ஆசை ஆகிய இவற்றின் இழிபையெல்லாம் அனுபவத்தால் உணர்ந்து, இந்த ஆசைகளால் நான் துன்பப்பட்டது போதும் எனும் உறுதி கொண்டு என் தலைவனாகிய அறுமுகப் பரமனின் திருவடிகளை அடையும் வேட்கையில் மிகவும் அழுந்தி நிற்பேன்.

நாக ராக்கமுந் தேவ ராக்கமு
ஞால வாக்கமு நச்சி டாதுயர்
நாக நாயகன் சேந்தன் சேவடி நச்சுவலே. 91

நாக லோகத்து போகப் பேறுகளையும் சொர்க்க லோகத்துப் போகப் பேறுகளையும், இவ்வுலகத்து இன்பப் பேறுகளையும்

90. ஆர்வம் = ஆசை.

விரும்பாமல், மலைகளுள் உயர்ந்த கந்தமாதன மலையின் நாயகனான செவ்வேள் பரமனின் திருவடிகளை மட்டுமே விரும்பி நிற்பேன்.

**அன்பர்க் கன்பின னாம னாமய**
**வாறு மாமுக னன்பு கூர்ந்தபின்**
**கன்மத் தான்வரு மாதர் காமருங் கைத்ததரோ. 92**

அன்பு செய்யும் அடியார்களிடம் அன்பாக இருப்பவனும், இயல்பாகவே பாசப்பிணிப்பிலிருந்து நீங்கியுள்ளவனும் ஆன அறுமுகப் பெருமான் மேல் அன்புமிகப் பெற்று இருந்தபின், வினைப் பயனால் நேரும் பெண்ணாசையும் வெறுத்துப் போய்விட்டதே!

**ஆரற் பூதர நாமத் தான்றொழு**
**மாதி சொன்னல வாய்மை கண்டபின்**
**பாரப் பூமியின் மோகப் பாடு படிந்ததரோ. 93**

அருணாசலத்தின் திருப்பெயர் தாங்கிய அருணகிரிப் பெருமான் துதித்துப் போற்றிய அறுமுகப்பரமன் கூறியருளிய சொல்லின் நலத்தையும் வாய்மையையும் உணர்ந்தபிறகு, பெருத்த பூமியில் வாழும் எனக்கு மோகத்தால் விளையும் துன்பங்கள் தணிந்து நீங்கிவிட்டன.

**தொண்டர் செய்மனுக் கண்ட ருள்செயுஞ்**
**சோதி வேலிறை யெந்தை தண்ணளி**
**கொண்ட பின்றமி யேன ரந்தைகள் குன்றினவே. 94**

அடியார்கள் மந்திரஜபம் செய்வதைக் கண்டு அதற்கேற்றவாறு அருள்புரியும் பேரொளிவாய்ந்த வேலின் இறைவனாம் எந்தை முருகனின் தண்ணிய அருள்பெற்ற பிறகு, எளியேனின் துன்பங்களெல்லாம் நலிந்து மறைந்தன.

**குறள்வெண்செந்துறையோடு மாறுபட்டுவருஞ்**
**செந்துறைச்சிதைவுத்தாழிசைக்குறள்.**

**இன்பக் கடலா விலகொரு சேயவன்**
**அன்பிற் பெரிய வடியவர்க் கெளியோன். 95**

சிவானந்தக் கடலாக விளங்கும் செவ்வேள் பரமன் அடியார்களிடம் அன்புகாட்டுவதில் மிகவும் பெரியோன்; அடியார்களுக்கு இணங்கி எளிமைப்பட்டு நிற்பவன்.

செப்பலோசை சிதைந்துவருந்
*தாழிசைக்குறளென்னுங் குறட்டாழிசை.*

**இ**ன்று சரவணப வாயநம வெனநாவே
அன்றெதன்செய் தாயோ வறம். 96

எனது நாவே! இன்று “சரவணபவாய நம” எனும் திருமந்திரத்தை ஜபிக்க, முற்பிறவியில் எத்தகைய புண்ணியச் செயலைச் செய்தாயோ!

**பி**றப்பிறப் பில்லிமகன் பிறவா னிறவான்
திறத்தவவன் சீடருமன் னர். 97

பிறப்பும் இறப்பும் இல்லாதவனாகிய சிவபெருமானின் திருக்குமாரனாகிய முருகப்பெருமானும் பிறப்பும் இறப்பும் இல்லாதவன்; முருகப்பெருமானின் ஆற்றல்மிக்க சீடர்களும் பிறப்பும் இறப்பும் இல்லாதவர்களே.

**பொ**ய்யா மொழிப்புலவ னாணப் புகலும்
நையா விலீலைவே ணா. 98

எவ்வுயிர்க்கும் ஊறு நிகழாதவகையில் திருவிளையாடல்களைச் செய்யும் செவ்வேள் பரமனின் திருநாக்கு, பொய்யாமொழிப் புலவன் நாணி நிற்குமாறு ‘முட்டை’ எனக் கூறி வேடிக்கை காட்டும்.

*வெண்டாழிசையென்னும்*
*வெள்ளொத்தாழிசை.*

மூன்றடியா யீற்றடி வெண்பாவேபோல முச்சீரா
யாசிரியத் தளையான் வருபவை.

**பா**ர்வி சும்பும் படர்ந்து நிற்பான்
நார்கொ ளன்பர் நண்பு வப்பான்
சீர்கொள் வேற்கைச் சிவன். 99

சீர்மையைக் கொண்டுள்ள வேற்படையைக் கையில் ஏந்தும் சிவனாகிய செவ்வேள்பரமன் பார்முழுவதும், ஆகாயம் முழுவதும் வியாபித்து நிற்பான். தன்மீது தளராத அன்பு கொண்ட அடியவர்களிடம் நட்போடு இருப்பதில் மகிழ்ச்சி அடைவான்.

நாளுந் தாளை நாடு வாரை
நீளுந் தூய்மை நிறுவிக் கொள்வான்
கோளுண் ணாத குகன். 100

'விசுத்த தேகி' எனும் தூய நிலையில் எப்பொழுதும் இருந்து கொண்டு, ஒருபொழுதும் குற்றத்துக்கு இடம் கொடுக்காத குகப்பெருமான், நாள்தோறும் தனது திருவடிகளை விரும்பித் துதிக்கும் அடியார்களை, என்றும் நிலைத்துள்ள தூய்மை நிலையில் அமர்த்தி வைப்பான்.

சனக ராசன் சாமி தம்பீ
அனக வாளென் பார்க ணிற்பான்
கனக வேல்கொள் கரன். 101

'அனைத்தையும் தோற்றுவித்து ஆள்பவராக விளங்கும் விநாயகப் பெருமானின் தம்பியே! தீவினையால் பற்றப்படாதவனே! என்னை ஆட்கொள்க' என வேண்டுவோரின் உள்ளத்தில் பொன்மயமான வேலை ஏந்திய கரத்துடன் விளங்கும் செவ்வேள் பரமன் நிறைந்து நிற்பான்.

கடிகொ ணீபங் கமழு மார்பா
அடிகொ டாயென் பவர்கண் ணார்வான்
முடிவி லாச்சண் முகன். 102

நித்திய வத்துவான அறுமுகப்பரமன் "மணம்மிகுந்த கடம்ப மலரின் மணம் கமழும் திருமார்பை உடையவனே! நின் திருவடிகளைத் தருக!" - என வேண்டித் தொழும் அன்பர்களின் உள்ளத்தில் நிறைந்திருப்பான்.

உடலி ருப்பா னுயிரி ருப்பான்
இடையி ருப்பா னிடர றுப்பான்
வடமி ருப்பான் மகன். 103

கல்லால மரத்தின்கீழே, தக்ஷிணாமூர்த்திப் பெருமானாக எழுந்தருளும் சிவபெருமானின் திருக்குமாரனான முருகப்பெருமான் தூல உடலில் இருப்பான்; உயிரின் உள்ளே இருப்பான்; தூல உடலுக்கும் உயிருக்கும் இடையே உள்ள சூக்கும உடலிலும் இருப்பான். இவ்வாறு இருந்து கொண்டு, அவரவர்க்கு நேரும் துன்பங்களையெல்லாம் போக்கி அருள்வான்.

நன்றி ருப்பா னவையி ருப்பான்
மன்றி ருப்பான் மகனு வர்க்கார்
என்று முய்மீ னென. 104

சிற்சபையில் திகழும் கூத்தப்பெருமானின் குமாரனான குகப்பெருமான் கடலில் உப்புநீரில் வசிக்கும் மீனின் உடலில் உப்பு ஏறாதிருத்தல் போன்று நன்மையிலும் இருந்து கொண்டு, தீமையிலும் இருந்து கொண்டு இந்த இரண்டாலும் பந்திக்கப்படாமல் இருப்பான்.

நன்று மில்லி நவையு மில்லி
கன்ற லில்லி கருத லில்லி
வென்றி வேற்செவ் வியன். 105

வெற்றிவேற்படை நாயகன் நன்மைக்கும் அப்பாற்பட்டவன்; தீமைக்கும் அப்பாற்பட்டவன்; தன் பெருநிலையிலிருந்து என்றைக்கும் தளராதவன்; அடியார்கள் தவறிழைத்தாலும் அதைக் கருத்தில் கொள்ளமாட்டான்.

ஒன்றி லொன்றில் லாமை யோதின்
வென்றி வேளை வினைதொ டாதஃ
தென்று மன்னோ னிரான். 106

ஒன்றில் ஒன்று இல்லாமை என்பதாகிய அன்யோன்ய அபாவம் எனும் நிலையை விளக்கிக் கூறின், வெற்றிவேற்படை கொள்ளும் செவ்வேளிடம் வினையின் தொடர்ச்சி இல்லை; வினையின் தொடர்ச்சியில் செவ்வேள் இல்லை.

சித்தெ னுஞ்சேய் திரள சித்து
வத்து வாகா னதுவு மாணவ்
வத்த னாகா தரோ. 107

ஞானமயமான செவ்வேள், திரண்டிருக்கும் ஜடவத்துவாக ஆகமாட்டான். ஜடவத்துவும், பெருமைமிகுந்த நம் தலைவனாகிய குகப்பெருமானாக ஆகாது. இதனைத் தெளிவாக உணர்.

---

104. உவர்க்கார் = உப்புநீர். இதன்கண் வசிக்கும் மீன் உடலிலுப்பேறா திருத்த லென நன்றும் தீதுமாம் உலகபந்த நீத்திருப்பவன் சேயவனாகலின் அவன் "உவர்க் கார்" "உய்மீன்" போல்வானெனக் கூறப்பட்டனன்; என்க.

சித்த சித்தாத் தெரியு மென்னிற்
சித்தின் மாயை யாகுஞ் செவ்வேள்
சித்தி னின்றே தெளி. 108

அறிவுடைப் பொருள், அறிவிலாப் பொருளாகத் தோன்றும் எனில், அத்தோற்றம் செவ்வேளாகிய ஞானப்பொருளின் இயக்கத்தால், அறிவில்லாத மாயையிலிருந்து தோன்றும் தோற்றமாகும். இதனைத் தெளிவாக உணர்ந்து கொள்.

ஆற்ற லிவ்வி கார மந்தத்
தோற்ற மென்னிற் றூய்தின் றெம்மான்
ஊற்ற நின்றே யுணர். 109

"அவ்வாறு சித்து, அசித்தாகத் தோன்றும் தோற்றத்தை மாயையால் அவன் செய்வான் எனில், அது பொருந்தாது. இவ்வாறு வேறுபட்டுத் தோன்றும் தோற்றம் மாயையின் ஆற்றலே" எனக் கூறினால், அது உண்மைக்குரிய கூற்று ஆகாது. எம்மான் முருகப் பெருமான் செயற்படுத்துகின்ற காரணத்தாலேயே மாயை செயற்படுகின்றது என்பதை உணர்ந்து கொள்.

(அறிவில்லாத பொருள் தானாகவே ஒன்றைச் செய்யாது)

---

*இன்னிசைச்சிந்தியல்வெண்பா.*

**ஒருபொருண்மேன்மூன்றடுக்கிவரும் வெள்ளொத்தாழிசை.**

தேனார்பே ரின்பநனி சேர்ந்தார்போ னன்னெஞ்சே
ஞானானந் தச்சேயை நாடிநலங் கொள்ளாமே
ஏனோநா நிற்க விவண்.

முற்றற்ற வின்பநனி சேர்ந்தார்போ னன்னெஞ்சே
வெற்றிக்கை வேற்சேயை நாடிநலங் கொள்ளாமே
எற்றுக்கு நிற்க விவண்.

தீதற்ற வின்பநனி சேர்ந்தார்போ னன்னெஞ்சே
கோதற்ற வேற்சேயை நாடிநலங் கொள்ளாமே
ஏதுக்கு நிற்க விவண். 110

109. **ஊற்றம்** = பற்றுக்கோடு; "கருதுபற்றுக்கோடுற்றம்" என்பது சூ-நிகண்டு.

என் நல்ல நெஞ்சமே! தேன்சுவை போன்ற சிவானந்த அனுபவத்தை அடைந்துள்ள சிவஞானியர்களைப் போன்று, ஞானானந்த மயமான செவ்வேள் பரமனை விரும்பித் துதித்துப் பெற வேண்டிய பேரின்பத்தைப் பெறாமல், இவ்வுலகில் நாம் எதற்காக வாழவேண்டும்?

என் இனிய நெஞ்சமே! முடிவில்லாத சிவானந்த அனுபவத்தைப் பெற்றுள்ள சிவ ஞானியரைப் போன்று, வெற்றி வேலைக் கையில் ஏந்தியுள்ள செவ்வேள் பரமனை விரும்பித் துதித்து, ஒப்பற்ற பேரின்பத்தைப் பெறாமல் இவ்வுலகில் எதற்காக வாழவேண்டும்?

என் இனிய நெஞ்சமே! குறைவு, நிறைவு என்னும் நிலைகளைக் கடந்து என்றும் பரிபூரணமாக இருக்கும் சிவானந்தத்தை அனுபவிக்கும் சிவஞானியரைப் போன்று, பாரபட்சமற்ற வேற்படை நாயகனை விரும்பித் துதித்துப் பேரின்பத்தைப் பெறாமல் இவ்வுலகில் வாழ்வது எதற்காக?

## 2. துறை.

**விழுமியபொருளுமொழுகியவோசையுமாய்வருஞ்**
**செந்துறை வெள்ளையெனுங்**
**குறள்வெண்செந்துறை.**

**கந்தன் பாத கமலத் துகளுளொன்**
**றந்த மிலாப்பே ரண்ட மாமே.** 111

கந்தவேளின் திருவடிகளில் ஒட்டிக் கொண்டுள்ள துகள்களுள் ஒன்று, முடிவிலாப் பரப்பினை உடைய பேரண்டமாகத் திகழும்.

("உனது பததூள் புவனகிரிதான்" - 'இருவர்மயலோ' திருப்புகழ்)

**உலகா மாயைக் கிருக்கை யோங்குகன்**
**அலகி லடியா மருட்சன் னிதியே.** 112

உலகங்களாகப் பரிணமிக்கும் மாயைக்கு இருப்பிடம் எங்கே உள்ளது எனில், பிரணவமயமான குகவேளின் அளவிலாப் பெருமை

யுடைய திருவடிகளே எனப்படும் அருள்மயமான சன்னிதியே ஆகும்.

ஈற்றடி யிரண்டு மிரண்டுசீர் குறைந்து வரு
மூன்றடி யோரொலி வெண்டுறை.

தேவரிறை யாய்மிளிருஞ் சேயவனீ செய்துள்ள புவனந் தானே
மாவதிச யங்கட்கு மன்னுகரி யென்றறியார்
நாவிறைவ னற்புதமிஞ் ஞாலமிசை யென்னெனுமே. 113

தேவர்களுக்கெல்லாம் இறைவனாக விளங்கும் சேயவனாகிய நீ படைத்துள்ள புவனங்களே, பெரிய அதிசயங்களுக்குச் சான்றாக விளங்கும் என உணராதவர்களே, நாமகள் தலைவனான பிரம்மன் செய்துள்ள அற்புதங்கள்தான் இவ்வுலகில் எவ்வளவு! என அதிசயித்து நிற்பார்கள்.

மேற்படி, நான்கடியோரொலி வெண்டுறை.

இறையெனலே திருவினையே திருவினையி னுயிரேதென் றியம்பு கின்ற
கறையனையுங் கடவுளென வொருவனுள னெனுமார்க்கி காதற் சேயாய்
அறிவொடுநீ யமைக்கினவ னும்பரனுண் டென்பானென்
றறிவலியோர் சிறிதுமிலர்க் கயிலோயென் புகல்வேனே. 114

'கடவுள் என எங்கே உள்ளார்? இருவினைகள் எங்கே உள்ளன? இருவினைகளையும் செய்யும் உயிர் எங்கே உள்ளது? இவை அனைத்துமே பொய்' எனக் கூறும் பெரும் குற்றம் உடைய நாத்திகனையும், 'கடவுள் என ஒருவன் உண்டு' என உறுதியாக நம்பும் அன்பன் ஒருவனுடைய மகனாக நீ படைத்து அருள்வாயானால், அவனும் "கடவுள் உண்டு" என நம்பிக்கையுடன் கூறுவான். இந்த உண்மையை அறியக்கூடிய மனவலிமை ஒரு சிறிதும் இல்லாத வீணர்களுக்கு, வேற்படை நாயகனே! யான் யாது கூறுவேன்?

முதலிரண்டடியும் அறுசீரா யோரோசை யுடையனவாய்ப்
பின்னடியைந்தும் நாற்சிராய் வேறோசை யுடையனவாய்வரும்
ஏழடி வேற்றொலி வெண்டுறை.

அகிலநிறை தருவதற்குங் காப்பதற்கு மாய்ப்பதற்கு மயனஞ் சாவும்
விகிர்தமுமி லொருபுத்தே ளுண்டென்றல் பொய்யெனவே விளம்பி யிங்குச்
சிலைமதவே ளம்பிற் சிந்தைநித நைவோர்

தொலைவறுமா னந்தந் துய்க்கவறி வாரோ
கலைஞரவாங் கந்தன் காமரடி நேடு
நிலையுமறா வன்பு நித்தலுமுள் ளோரே
மலைவறுபே ரின்ப வாரிபடி வாரே. 115

பல்வேறு அண்டங்களை முழுமையாகப் படைப்பதற்கும், காப்பதற்கும், ஒடுக்குவதற்கும் வல்லதாகப் பிறப்பும் இறப்பும் மற்றும் உள்ள பல்வேறு வேறுபாடுகளும் இயல்பாகவே இல்லாமல் உள்ள தெய்வம் ஒன்று உண்டு எனக் கூறுதல் பொய்யேயாம் எனக் கூறி, இவ்வுலகில் எப்பொழுதும் கரும்புவில் தாங்கிய மன்மதனின் பாணங்களால் காமத்துக்கு ஆளாகிச் சிந்தை நைந்து நிற்போர், முடிவில்லாத சிவானந்தத்தை அனுபவிக்கச் செய்யும் நெறியை உணரவல்லவர்களோ? கவிஞர்கள் விரும்பி நிற்கும் கந்தப் பெருமானின் அழகிய திருவடிகளை, உரிய நெறிநின்று தேடிநிற்கும் உறுதிப்பாடும் நீங்காத அன்பும் என்றைக்கும் உடையவர்களே சிந்தை மயக்கத்தைத் தீர்க்கவல்ல பேரானந்தம் எனும் பெருங்கடலில் மூழ்கித் திளைப்பார்கள்.

இங்ஙனம் வந்த 113, 115 ஆம் செய்யுள்களானே வெண்டுறை : மூன்றடிச்சிறுமையு மேழடிப்பெருமையு முடைத்தென வறிக.

## 3. வெளி விருத்தம்.

**வெண்டளையான் மூன்றடியாத் தனிச்சொற்பெற்று வருபவை.**
**தேமா காய் காய் காய்-தேமாந்தண்பூ.**

சேவற் கொடியெம்மான் செப்பாதொன்
றோர்வேனோ-வென்செய்கோயான்
ஏவிக் குகனருண்மே லேற்றாதா
ளாவேனோ-வென்செய்கோயான்
பாவுக் கருள்குமரன் பாரானே
லுய்வேனோ-வென்செய்கோயான். 116

சேவற்கொடி ஏந்தியுள்ள எம் தலைவனாம் கந்தப்பெருமானைப் புகழாமல், வேறொரு செயலைச் செய்ய எண்ணுவேனோ? என் இந்திரியங்களையும் உட்கருவிகளையும் முறைப்படிச் செலுத்திக் குகவேளின் திருவருளைச் சம்பாதித்துக் கொள்ளாமல் வேறொன்

றுக்கு ஆட்படுவேனோ? அடியார்கள் ஓதும் பாடல்களைச் செவி மடுத்து அருள்புரியும் குமாரப்பெருமான் என்னை நோக்காவிட்டால் என்னால் உய்திபெற முடியுமோ? அந்தோ! நான் என்ன செய்வேன்!

**தேமா கருவிளங்காய் தேமா கருவிளங்காய் - தேமாந்தண்பூ.**

**கந்தன் சுகங்கருதுங் காதன்**
**மலிந்ததிங-னென்செய்கோயான்**
**சொந்தங் கவர்ந்தணையுஞ் சோகம்**
**பிறந்ததிங-னென்செய்கோயான்**
**வந்தென் றலைவனவன் மாலாய்**
**மருவிலனே-யென்செய்கோயான்.** 117

கந்தப்பெருமானின் அருட்பேரின்பத்தை அனுபவிக்கும் ஆவல் இப்பொழுது நிறைந்து பொங்குகிறது. என் செய்வேன்! எனக்குச் சொந்தப்பட்டுள்ள கருவிகரணங்களை ஒடுக்கி, அவனோடு இரண்டறக் கலந்து, "அவனே நான்" எனக் காணும் ஆவல் பிறந்துள்ளது! என் செய்வேன்! இவ்வுலகில் பிறந்து என்ன பயன்? என் தலைவனாம் கந்தவேள் மேல் தீராக் காதல் கொண்டவனாய் அவனோடு இன்னும் இரண்டறக் கலக்கவில்லையே! என் செய்வேன்!

(கந்தவேள் என்னிடம் வந்து, அன்புடன் என்னை ஐக்கியப்படுத்திக் கொள்ளவில்லையே, என் செய்வேன்? - என்றும் பொருள் கொள்ளலாம்)

**வேறுதளையா னான்கடியாத் தனிச்சொற்பெற்று வருபவை.**
**கூவிளம் மா மா மா-தேமாங்காய்.**

***ஏமருள் சவ்வும் ரவ்வு மவ்வு-மெங்கோமான்**
**மாமலி ணவ்வும் பவ்வும் வவ்வு-மெங்கோமான்**
**ஓமொடு ரீயு மையுங் கிலியு-மெங்கோமான்**
**ஆமயம் வெல்லு மௌவுஞ் சௌவு-மெங்கோமான்.** 118

எம் அரசனாகிய கந்தவேள், களிப்பினை அருளும் சகாரம், ரகாரம், வகாரம் எனும் மந்திர அக்ஷரங்களாகத் திகழ்வான்; பெருமையை நிறைய வழங்கும் ணகாரம், பகாரம், வகாரம் எனும்

**118. * ஏமமென்பது ஏமெனநின்றது. ஏமம் = களிப்பு**

மந்திர அக்ஷரங்களாகத் திகழ்வான்; ஓம், ஹ்ரீம், ஐம், க்லீம் எனும் பீஜாக்ஷரங்களாகத் திகழ்வான்; நமது பாசப்பிணைப்பை நீக்கும் ஹௌம், ஸௌம் எனும் பீஜாக்ஷரங்களாகவும் ஒளிர்வான்.

புளிமா புளிமா புளிமா புளிமா தேமாங்காய்.

தனியாய் வருவான் சவையாய் வருவா-னெங்கோமான்
முனியாய் வருவான் முருகாய் வருவா-னெங்கோமான்
தொனியாய் வருவான் சுரனாய் வருவா-னெங்கோமான்
மனுவாய் வருவான் மயிலே றியெனு-மெங்கோமான். 119

எம் அரசனாகிய கந்தவேள் தனித்தும் வருவான்; அடியார் கணங்களோடும் முனிகணங்களோடும் சேர்ந்தும் வருவான்; முனிவன் வடிவத்திலும் வருவான்; தனக்கே இயல்பான இளமைக் கோலத்துடனும் வருவான்; ஓசையாகவும் ஒலியாகவும் வெளிப்படுவான்; இசைக்குரிய ஏழு சுரங்களாகவும் வெளிப்படுவான். மயில்வாகனன் எனப்படும் அவன் மந்திரவடிவம் தாங்கியும் வருவான்.

முதற்சீர்: தேமா.

வானூ டிருப்பான் வளியூ டிருப்பா-னெங்கோமான்
கானூ டிருப்பான் கடலூ டிருப்பா-னெங்கோமான்
ஊனூ டிருப்பா னுயிரூ டிருப்பா-னெங்கோமான்
ஆனூ டிருப்பா னயிலா ளியெனு-மெங்கோமான். 120

எம் அரசனாகிய வேற்படை நாயகன் வானிலும் இருப்பான்; காற்றிலும் இருப்பான்; காட்டிலும் இருப்பான்; கடலிலும் இருப்பான்; ஊனிலும் இருப்பான்; உயிரிலும் இருப்பான்; உடலுள் சஞ்சரிக்கும் பிராணவாயு முதலான பத்து வாயுக்களிலும் இருப்பான்.

கூவிளம் தேமா கூவிளம் தேமா- தேமாங்காய்.

மண்டல மாளு மந்திர மாளு-மெங்கோமான்
விண்டல மாளும் விண்முழு தாளு-மெங்கோமான்
முண்டக மாளும் விண்டுமொய் யாளு-மெங்கோமான்
வெண்டட மாளும் வேலிறை யான-வெங்கோமான். 121

தூய்மைமிக்க இதயங்களில் எல்லாம் நிறைந்து குகப்பெருமானாக விளங்கி ஆட்சி செய்யும் வேற்படை நாயகனான

எம் அரசன், நிலவுலகம் முழுவதையும் ஆள்வான்; அங்கே உள்ள கோவில்கள் அனைத்தையும் ஆள்வான்; துறக்க உலகை ஆள்வான்; அதற்கும் மேற்பட்ட வெளியில் திகழும் உலகங்கள் அனைத்தையும் ஆள்வான்; பிரம்மலோகத்தையும் ஆள்வான்; திருமாலின் உலகையும் ஆள்வான்.

முதற்சீரு மூன்றாஞ்சீரும், கருவிளம்.

மகமுத னாதன் வழுவறு வேத-னெங்கோமான்
துகளறு போதன் றுதிநுகர் காத-னெங்கோமான்
குகவடி யீயென் பவருரை கொள்வோ-னெங்கோமான்
புகழ்பவர் நேசன் புகழ்முனி யீச-னெங்கோமான். 122

எம் அரசனாகிய செவ்வேள் பரமன் யாகங்களுக்கெல்லாம் முதன்மையான அதிபதி; குற்றமற்ற வேதங்களின் மயமாகத் திகழ்பவன்; ஆணவம் முதலான குற்றங்களை நீக்கவல்ல சிவஞானமே வடிவாகத் திகழ்பவன்; அடியார்கள் ஓதும் பாடல்களை அனுபவிக்கும் திருச்செவிகளை உடையவன்; "குகப்பெருமானே, நின் திருவடி தருக" எனவேண்டிக் கொள்வாரின் கூற்றுக்களை மாறாமல் ஏற்றுக் கொள்வான்; தன்னைத் துதிக்கும் அடியார்களை மிகவும் நேசிப்பவன்; திருப்புகழ் பாடி அருளிய அருணகிரிப்பெருமானின் இதய நாயகன்.

**வெண்பாவின முற்றிற்று.**

1–வது வெள்ளியன் முற்றிற்று.

# 2-வது ஆசிரியவியல்.

## 1. நேரிசையாசிரியப்பா.

*ஈற்றயலடி முச்சீரா யேனையடி நாற்சீரா*
*யேந்திசை யகவலோசையான் வருபவை.*

நேர் + நேர் = தேமா.

வேத நாதன் வேலேந் தெம்மான்
பாதஞ் சூழ்வோர் பார்ப்பார்
ஓதை வேதத் துண்மை யன்றே. 1

*வேதங்களுக்கெல்லாம் தலைவனும் வேற்படை ஏந்தும் எந்தலைவனுமான முருகப்பெருமானின் திருவடிகளையே எப்பொழுதும் சிந்திப்பவர்கள், ஞானக் கருவூலமாகத் திகழும் வேதங்கள் கூறும் முடிபான உண்மையை நன்கு உணர்வார்கள்.*

இதனானே யாசிரியப்பா : மூன்றடிச் சிறுமை யுடைத்தென்பதறிக. பெருமை யெத்துணைத்தெனின், - "உரைப்பா ருள்ளக்கருத்தி னளவே பெருமை". என்பது யா-காரிகை. ஆதலினளவின்றென்க. மாமுன் நேர்வருவது நேரொன்றாசிரியத்தளை. அதுவே யேந்திசையகவலோசை.

சொல்லா னுண்மை சொல்லும் வேத
மெல்லா மேத மில்லாக் கன்ம
காண்ட ஞான காண்ட மாமந்
நீண்ட பாகந் தம்மு ணெய்தை
யாதி யில்லா வஃது நீயென்
றோது சாம வோத்து வாக்கைத்
தன்பா லுள்ள சால்பிற் றன்பி
னன்கார் ஞான நாட்டிக் கூறும்
ஆக மந்தா னான்மா வீசன்

1. சூழ்தல் = ஆராய்தல்; நினைவுமாம்; சூ-நிகண்டு நோக்குக.

2. நெய்தை = பெருமை. ஆதி = முதன்மை. அணுபக்ஷமாய்ப் பெருமை முதன்மைகளை விரும்பு முயிராயுள்ள நின்னோடு விராய் நிற்பது அவ்விருப்பில்லா "அது" எனும் பரம்பொருளாகலின் அஃதும் நீயென வோதுதல் வேதசம்மதமென்பார் "அஃதும் நீயென் றோது சாம வோத்து வாக்கு" "என்றாரென்க". 3-வது மண்டலத்தைச் சார்ந்த பரிபூரணானந்தபோத முதற் படலத்து 110-ஆஞ் செய்யு ளுரையிலுள்ள மகரவாக்கியப் பொருள்களை யுணர்கவென்க.

ஏக மில்லை யோக மென்றே
சாற்று கின்ற சால்பிற் றிந்தக்
கூற்றி ரண்டுங் கோதில் சோஹஞ்
சிற்சி வோஹ மென்று தேற
நிற்ற லாலோங் கார நீர்மை
யாக மத்து மார ணத்தும்
ஏக மென்றே யெண்ணி நின்பால்
நானு நின்றே னட்பின்
ஈன மில்வே லேந்தெந் தாயே. 2

பெருமையில் குறைவுபடாத வேற்படை ஏந்தும் எந்தையே! மறைபொருளை உள்ளடக்கியுள்ள சொற்களால் உண்மையை நிலைநாட்டும் வேதங்கள் எல்லாம் பொதுவாகக், குற்றம் ஒன்றும் இல்லாத கர்மகாண்டம் எனவும் ஞானகாண்டம் எனவும் இருவகைப்படும். பெருமை மிகுந்த ஞானகாண்டம் "பெருமையை விரும்புதல், முதன்மையை விரும்புதல் விருப்பங்கள் ஏதும் இல்லாத அந்தப் பரம்பொருளே (தத்), அத்தகைய விருப்பங்களை உடைய நீ (த்வம்)" எனக் கூறும் சாமவேத வாக்கினைத் தன்பால் கொண்டுள்ள உயர்வு மிக்கது. அன்பு நெறிப்பட்ட சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் நான்கு நெறிகளையும் விளக்கிக் கூறும் ஆகமங்களின் இறுதிப் பகுதியாகிய ஞானபாதம் "சீவான்மாவும் ஈசனும் ஒன்றல்ல; அபேதம்" எனக் கூறும் உயர்வுடையது. வேதக்கூற்று, ஆகமக் கூற்று ஆகிய இரண்டும், குற்றம் ஒன்றும் இல்லாத "ஸோஹம்" "சிவோஹம்" என்பதை முறையே உணர்த்துவன எனத் தெளிவாக உணருமாறு விளங்குவதால் ஓங்கார இயல்பு ஆகமங்களிலும் வேதங்களிலும் ஒரு தன்மைப்படவே உணர்த்தப்பட்டுள்ளது எனத் தெளிந்து உன்னிடம் பேரன்பு கொண்டு நான் அடைக்கலமாக வந்துள்ளேன்.

மேற்படி, தூங்கிசை யகவலோசையான் வருவது.

நிரை + நிரை = கருவிளம்.

துவம்பத பசுமலந் துமித்துயர் சமாதியில்
அவமிறத் பதப்பதி யடங்குத லசிபதம்
எனப்பகர் மகாமொழிப் படியுறு மிருங்கதி
மனச்சுழ லிறப்பினில் வருமெனல் சரதமத்
திரமதி லெனைவிடச் சிகியிவர்
பிரணவத் திருவுருப் பெரியைநீ யருடியே. 3

மயில்மேல் ஆரோகணித்துவரும் பிரணவ மயமான திருவடிவத்தை உடைய பெரியோய்!

“த்வம் (நீ) எனும் சொல்லால் குறிக்கப்படும் சீவான்மா, ஆணவ மலத்திலிருந்து முழுமையாக நீங்கி, உயர்வான சமாதி நிலையில், சத்திய வத்துவாகித் ‘தத்’ (அது) எனும் சொல்லால் குறிக்கப்படும் பதியில் (இறைவனிடத்தில்) அடங்கி நிற்றலை ‘அசி’ (ஆகின்றாய்) எனும் பதம் குறிக்கும்” எனக் கூறப்படும் மகாவாக்கியம் உணர்த்தும் நிலைக்கு ஏற்ப, அமையும் உயர்வான முக்திநிலையானது மனத்தின் சுழற்சி அடங்கி ஒரு நிலையில் இருக்கும்போது ஏற்படும் எனக் கூறப்படுவது உண்மையே. மனச்சுழல் முழுவதும் அடங்கிவிடும் உயர்நிலையில் என்னை இருத்துவதற்கு அருள்புரிவாயாக.

விளமுன் நிரைவருவது **நிரையொன்றாசிரியத்தளை.** அதுவே தூங்கிசை யகவலோசை.

**மேற்படி, ஒழுகிசை யகவலோசையான் வருபவை.**
**முதலடி: நேர்+நிரை=கூவிளம், நிரை+நிரை=கருவிளம்.**
**நிரை+நேர்=புளிமா, நேர்+நிரை+நேர்=கூவிளங்காய்.**

நீயெனுந் துவம்பத நிலையா *காமியமும்
மாயமே வாணவ மலமு மொழியும்
அதுவெனுந் தத்பத மதிற்சஞ் சிதமும்
மதமலி மாயா மலமு மொழியும்
ஆயினை யென்னு மசியிற் பிராரத்தம்
ஓய்வறு கன்ம மலமு மொழியும்
என்பா ருரியோ ரெனக்கும்
அன்போ டத்திற மளியருட் குகனே. 4

நீ என்பதைக் குறிக்கும் ‘த்வம்’ பதத்து நிலையில் ஆகாமியம் (ஏறுவினை), மாயை, ஆணவம் எனும் மூன்றும் நீங்கி நிற்கும்; ‘அது’

* இங்ஙனம் தேமா புளிமா கூவிளம் கருவிளமெனும் ஆசிரிய வுரிச்சீரல்லாத காய்ச்சீராகிய வெண்சீர் வரலாமோவெனின்; “அகவலகத்துந் தாஞ்சீர் மயங்குந் தளையுமதே”, என்பது யா- காரிகை. ஆகலினொரோவிடத்து வரலாமென்க. “பின்னுப் பிணியவிழ்ந்த நன்னெடுங் கூந்தல்” என்றார் பிறருமென்றறிக. நேரொன்றாசிரியத்தளை யும், நிரையொன்றாசிரியத்தளையும் விரவுவது ஒழுகிசை யகவலோசை.

என்பதைக் குறிக்கும் 'தத்' பதத்து நிலையில் சஞ்சித வினையும் (எஞ்சி இருக்கும் வினையும்) வளம்மிகுந்த மாயை எனும் மலமும் நீங்கிநிற்கும். 'ஆயினை' என்பதைக் குறிக்கும் 'அசி' எனும் பதநிலையில், பிராரப்தம் எனப்படும் ஒழியாத கன்ம மலமும் ஒழிந்து நிற்கும் என, உனது திருவருட்பேற்றுக்கு உரிய ஞானியர் கூறுவர். மும்மலங்களும் இவ்வாறு நீங்கி நிற்கும் உயர்நிலையை, ஒன்றும் அறியா எளியேனுக்கும், குகப்பெருமானே!, வழங்கி அருள்க.

---

## உ. இணைக்குறளாசிரியப்பா.

***ஈறு முதலுமொழிந்த விடையடிகளுட் சிலவற்றைக் குறளடியாகவுஞ் சிந்தடியாகவுங் கொண்டு வருவது.***

**அ**றைந்த- துவம்பத நிலையிற் றொல்லிருள் கெடுத்தே
நவம்பகர் நற்சுசி
தானெய் தியேயத் தத்பத
ஞானதே வருளி னனிநின் றிறையறிந்
தவத்தையி லசிபத
*சிவத்தி லடங்கியச் சிவசமா னஞ்சொ னல்ல
அத்து விதந்தா னாகு
முத்தி யபர முத்தி யிலையது
பரமுத் தியேயப் பரத்துவ
உரமெற் குமருடி யோங்குக வேளே. 5

முற்கூறப்பட்ட 'த்வம்' எனும் பதத்து நிலையில், ஆன்மா தொன்மையான (ஸகஜமலமான) ஆணவமலத்திலிருந்து நீங்கி, என்றும் புதியதான தூய்மை நிலையை அடைந்து, 'தத்' எனும் பதத்துக்குரிய ஞானதெய்வத்தின் அருளில் ஒடுங்கி, அப் பரம்பொருளை முழுவதும் உணர்ந்து, 'அசி' எனும் பதத்தால் குறிக்கப்படும் 'சிவமாகுதல்' எனும் நிலையில் அடங்கிச் சிவமாகவே விளங்கும் என்பதே அத்துவித நிலை ஆகும். இந்த அத்துவிதத்தால் நேரும் முத்திநிலை பரமுத்தியே தவிர அபரமுத்தி ஆகாது. அத்தகைய பரமுக்தி எனும் மேம்பட்ட நிலையை, குகப்பெருமானே! எளியேனுக்கும் வழங்கி அருள்.

இதில் "அறைந்த" என அடிமுதற்கட் கூன்வந்தமையின், ஆசிரியப்பா இடையுங் கடையுங் கூன்வரப்பெறாதெனக்கொள்க. என்னை? "அடிமுதற் பொருளைத் தானினிது கொண்டு - முடிய நிற்பது கூனென மொழிப" என்பது யா-காரிகை யுரைவரு சூத்திரமாகலின்.

* இவ்வாசிரிய வடியில் ஐஞ்சீர் வரலாமோ வெனின், "வெண்டளை விரவியு மாசிரியம் விரவியு - மைஞ்சீரடியு முளவென மொழிப" என்பது தொல்காப்பியம். "அருகிக்கலியோ டகவன் மருங்கினைஞ்சீரடியும் - வருதற்குரித் தென்பர் வான்றமிழ் நாவலர்" என்பது யா-காரிகை. ஆகலி னொரோவிடத்து வரலாமென்க.

---

## 3. அடிமறிமண்டிலவாசிரியப்பா.

**எல்லாவடிகளையு மாறிமாறி யுரைக்க வோசையும் பொருளும் பிழையாது வருபவை.**

தொம்பத நிலைதான் றொல்லத் துவிதமே
அம்பதி நிலைதா னருளத் துவிதமே
பம்பசி நிலைதான் பரமாத் துவிதமே
எம்பி ரான்சே யெனைச்சே ரசியிலே. 6

'த்வம்' எனும் பதநிலை, தொன்மையான அத்துவித நிலையாகும். (அதாவது, அத்துவிதப்பேற்றை அடையும் அனாதி உயிர்); அழகிய 'த்வம்' எனும் பதிநிலை, அருளை வழங்கும் அத்துவித வத்துவாகும். பெருகி நிற்கும் 'அசி' எனும் பதநிலை, மேலான அத்துவிதம் அடைந்துள்ள நிலையாகும். எம்பிரானே! அத்துவிதம் அடைந்துள்ள நிலையைக் குறிக்கும் 'அசி' பதநிலையில் என்னை இருத்தி அருள்க.

முத்திக் குற்பவ முதலினுக் கிரண்டே
முத்திக் குற்பவ முயலிடைக் கொன்றே
முத்திக் குற்பவ முடிவிற் குற்றதே
முத்தி யுயிர்மெய் முதல்வ னுயிரே
முத்தி முதற்குக முடிமுற் றெனையே. 7

முதலில் உள்ள 'த்வம்' பதத்து ஆன்மாவுக்கு முத்தியின் தோற்றம், பரமுத்தி, அபரமுத்தி என இரண்டு; இடையில் உள்ள தத்

---

இச்செய்யுள்களான், ஆசிரியப்பா நான்கிற்கும் ஏயெனு மசையா னிறுதல் சிறப்புடைமையும், ஓ-ஈ-ஆ-ஐ முதலியவற்றா னிறுதல் சிறப்பின்மையு முண்டென வுணர்க. இவ்வடிமறி மண்டில நடையையே அடிமறி மாற்றுப் பொருள்கோள் என்ப.

பதத்து இறைவனுக்கு, இயல்பாகவே வாய்த்துள்ள பரமுத்தியான ஒரே நிலைதான் உண்டு; முத்தியின் வெளிப்பாடு இறுதியில் உள்ள ‘அசி’ பதநிலையில் நிகழ்கிறது. முத்தியை அடையும் ஆன்மா உடலாகவும், முத்தியை அருளும் முதல்வன் உயிராகவும் உணரப்படும். முத்திப்பேற்றை அருளவல்ல முதற்பரம் பொருளாம் குகப்பெருமானே! உன்னை அணுகி நிற்கும் எளியேனை முடிவுநிலையில் இருத்தி வை.

---

## 4. நிலைமண்டிலவாசிரியப்பா.

முற்று மளவடி கொண்டு முடிபவை.

சிவாக மத்தைச் சேர்ந்த தாய
சிவதரு மோத்தரஞ் செப்பு மாறு
பிரகிரு தியின்மேற் பிறங்கப் பிராகிருத
பரசிவ லோகத் தின்மேற் படரும்
மகேசதத் துவத்தில் வடிவே றாங்கு
குகேச னுலகாக் குறிக்குங் குமாரன்
உலக மதன்மே லோகைசால் சத்தி
உலக மதன்மே லுயர்சிவ லோகம்
உளவவ் வுயர்சிவ லோக முறுநர்
விளைபுவி தோன்றா ரெனக்குக வேளே
பொதிய முனியெனும் புனிதற் கோதினன்
அதனாற் குமாரன் கதிகீழ் நிலையெனிற்
கூறுது நீயிர் தேறு மாறதை
ஈறறு குமார னூறறு சிவத்தைச்
சத்தியை நீங்காச் சச்சிதா னந்த
வத்து வென்னுஞ் சத்திய முணரா
துருவகை யானே பிரிவினை செய்யூப்
பரவு முயிர்கண் மருவு கதிப்பொருட்
டச்சே யுலகு மச்சிவை யுலகும்
மிச்சை யின்றி விளம்பப் படுமவை
போலச் சிவவுருப் போற்று நர்க்கும்
மேலுரைத் திட்ட கோலவப் பிராகிருத
சிவலோ கப்பயன் றெரிக்கப் படுமால்

இவையிழுக் கென்றறி நவையறு புந்தியர்
உருவான் மூன்றும் பேத முண்மையில்
ஒருமை நிலையென் றுய்த்தினி தோர்ந்தே
போதமி னிட்டையிற் பேதமி றரிசனம்
ஆதலைச் சேயெனா வறிபவ ரப்பொருள்
ஆக விளங்கி யழிவுதிப் பென்னுந்
தோக மிகந்துய் வாரே சுருதி
பெரிய சிவஞ்சுப் பிரமணி யப்பொருள்
ஒருசிறி தும்பே தம்மிலை யுணரின்
எனலா னெந்தை யிருங்குக தேவை
நனிதொழு துய்திர் ஞாலத் தீரே. 8

சிவாகமங்களில் ஓர் உபாகமம் ஆக விளங்கும் சிவதருமோத்தரம் கூறுகின்றது போல, பிரகிருதிமாயைக்கு மேல் விளங்குவது அப்பிராக்ருதமான பரசிவலோகம்; அதற்குமேலே விரிந்து பரவியுள்ள மகேச தத்துவத்தில், வடிவேல் தாங்கிய குகப்பெருமானுக்கு உரிய குமாரலோகம் விளங்கும்; அதற்கு மேலே உள்ளது மகிழ்ச்சி மிகுந்துள்ள சக்தி உலகம்; அதற்கும் மேலே திகழ்வது சுத்ததத்துவ சிவலோகம். இந்தச் சிவலோகத்தை அடையும் முக்தான்மாக்கள் மீண்டும் பூமியில் பிறக்கமாட்டார்கள் எனக் குகப்பெருமானே அகத்திய முனிவருக்குக் கூறி அருளினான். எனவே குமார லோகத்தை அடையும் ஆன்மாக்களின் நிலை அதனினும் தாழ்ந்த நிலையே எனக் கூறினால், அது அப்படி இல்லை; நீங்கள் தெளிவாக உணருமாறு விளக்கம் கூறுகிறோம். சிவத்தையும் சக்தியையும் விட்டுப் பிரியாமல் சச்சிதானந்த வத்துவாக விளங்குபவனே குமாரப் பெருமான்; இந்த உண்மையை உணராமல், வெறும் வடிவநிலையை மட்டும் கருத்தில் கொண்டு, சிவம் வேறு, சக்தி வேறு, குமாரன் வேறு எனப் பிரிவுபடுத்தி வணங்கும் ஆன்மாக்கள் அடையும் கதிக்காக வேண்டிக் குமாரலோகமும் சக்திலோகமும் உள்ளனவாகக் கூறப்படுதலைப் போன்றே சிவ வடிவத்தை வணங்குவோர் அடையக்கூடியதாக, அப்ராக்ருத சிவலோகம் உண்டு எனவும் கூறப்பட்டுள்ளது. இவ்வாறு கூறப்படுபவை எல்லாம் உபசார வழக்கே என உணரவல்ல குற்றமற்ற சிந்தனை உடையவர்கள் "சிவம், சக்தி, குமாரன் மூவரும் வடிவத்

தால் வேறுபட்டவர்கள்; ஆனால் சொரூப நிலையில் சத்து (சிவம்), சித்து (சக்தி), ஆனந்தம் (குகன்) என ஒரே நிலையில் சச்சிதானந்தப் பரம்பொருளாக விளங்குபவரே ஆவர் என இனிதே உணர்ந்து, தற்போதம் இழந்த நிட்டையில் இம்மூவரையும் அபேதமாகத் தரிசிக்கும் போது, அந்தத் தரிசனப் பேறே, சிவத்தின் சேயாக விளங்குவது என அறிபவர்கள், சச்சிதானந்த வத்துவாகவே விளங்கிப் பிறப்பு இறப்பு என்னும் இரண்டையும் கடந்து உய்திபெறுவார்கள். வேதம், "பெரிய சிவம், சுப்பிரமணியம் - இரண்டிற்கும், நன்கு உணரும்போது, ஒரு சிறிதும் பேதம் இல்லை என்பது தெளிவாகும்" எனக் கூறுவதால், உலகமக்களே!, எந்தையாகிய, பெரிய குகப்பெருமானை நன்கு வணங்கி உய்தி பெறுவீர்களாக.

எதிலே நீளமோ வதிலே யகலமும்
எதிலே யகலமோ வதிலே நீளமும்
எதிலே கனமோ வதிலே நீளமும்
எதிலே நீளமோ வதிலே கனமும்
எதிலே யகலமோ வதிலே கனமும்
எதிலே கனமோ வதிலே யகலமும்
உண்டன் னணமே யுணரின் முறையே
எங்கே யறிவோ வங்கே யுண்மையும்
எங்கே யுண்மையோ வங்கே யறிவும்
எங்கே யின்பமோ வங்கே யறிவும்
எங்கே யறிவோ வங்கே யின்பமும்
எங்கே யின்பமோ வங்கே யுண்மையும்
எங்கே யுண்மையோ வங்கே யின்பமும்
எங்கே சிவையோ வங்கே சிவமும்
எங்கே சிவமோ வங்கே சிவையும்
எங்கே சேயோ வங்கே சிவையும்
எங்கே சிவையோ வங்கே சேயும்
எங்கே சேயோ வங்கே சிவமும்
எங்கே சிவமோ வங்கே சேயும்
ஆமென் றறிபவர் தாமே யறிஞர்
போமுன் றெரிவீர் பூமியு ளீரே. 9

எந்த ஒரு பொருளில் நீளம் உண்டோ, அங்கே அகலமும் உண்டு; எதனில் அகலம் உண்டோ, அதனில் நீளமும் உண்டு; எதிலே

கனம் உண்டோ அதிலே நீளமும், எதனில் நீளம் உண்டோ அதனில் கனமும், எதிலே அகலம் உண்டோ, அதனில் கனமும் எதிலே கனம் உண்டோ, அதனில் அகலமும் நிச்சயமாக உண்டு. அவ்வாறே, முறைப்படி ஓர்ந்தால், எங்கே அறிவு (சித்) உண்டோ அங்கே உண்மையும் (சத்), எங்கே உண்மை (சத்) உண்டோ அங்கே அறிவும் (சித்), எங்கே இன்பம் (ஆனந்தம்) உண்டோ அங்கே உண்மையும், எங்கே உண்மை (சத்) உண்டோ, அங்கே இன்பமும், எங்கே சக்தி உண்டோ அங்கே சிவமும் எங்கே சிவம் உண்டோ அங்கே சக்தியும் எங்கே சேய் உண்டோ அங்கே சக்தியும் எங்கே சக்தி உண்டோ அங்கே சேயும் எங்கே சேய் உண்டோ அங்கே சிவமும் எங்கே சிவம் உண்டோ அங்கே சேயும் உண்டு என உள்ளவாறு உணர்பவர்களே ஞானியர்களாவர். உலகீரே! உம் வாழ் நாள் முடிவதற்குள் இந்த உண்மையைப் புரிந்து கொள்வீர்களாக.

அனாதி சிவத்திற் கனாதி மகன்சேய்
அனாதி யச்சேய்க் கனாதி யுயிரென
உள்ளவை பொதுமையிற் பிள்ளைக ளாமால்
கள்ளமி லருளைக் கொள்ளுயி ரெல்லாம்
பொக்கமில் சிறப்பு மக்க ளாமால்
இக்குண முளர்தாந் துக்கமில் சிவத்திற்
கென்றும் பௌத்திர ரென்றா வாரால்
என்றோர்ந் துலகீர் குன்றீர்ந் துளவேல்
அத்தற் கினிய புத்திர ராகி
முத்தி யின்பந் துய்த்துய் வீரே.

அனாதியாகவே உள்ள சிவத்துக்கு, அனாதியாகவே குமாரனாக உள்ளவன் சேய்ப்பரமன். அனாதியான செவ்வேள் பரமனுக்கு அனாதியாகவே உள்ள ஆன்மாக்கள் அனைத்தும் பொதுவகையில் பிள்ளைகளே எனத் திகழும். அவனது பாரபட்சமற்ற திருவருளுக்கு உரிய ஆன்மாக்கள் சிறப்பு வகையில் பிள்ளைகளாகத் திகழ்பவர்களே. இவ்வாறு சிறப்புப் பிள்ளைகளாக (செல்லப் பிள்ளைகளாக) விளங்கும் ஆன்மாக்களே, இன்பமயமான சிவத்துக்குப் பேரர்களாக விளங்குபவராவர். உலகமக்களே! இவ்வாறு உண்மையை உணர்ந்து கொண்டு, கிரௌஞ்சமலையைப் பிளந்த வேற்படைக்கு நாயகனான செவ்வேள் பரமனுக்கு இனிய பிள்ளைகளாகவே விளங்கி, முத்தி இன்பத்தை அனுபவித்து உய்தி பெறுவீர்களாக.

வள்ளுயிர்க் குயிரா யுள்ள குகேசற்
கற்புடை மைந்தரா நிற்குநர் தாமே
சூர்தருங் கோர மார்கவின் கோரம்
அதிகோ ரங்கோ ரதரங்கோ ரரூபம்
தரள தரங்கோள் பெருகு பயாநகம்
காள ராத்திரி நீளிய பயோற்கடம்
சண்டமா சண்டஞ் சண்டகோ லாலம்
சண்டதரஞ் சரோருக மண்டுச லசவதி
வீமம் பெரிதென் வீம வீடணம்
கரளம் விகரள முரணுறு குலிசம்
இடர்முக் கோணம் படரைங் கோணம்
விரிதீர்க் கதரம் பரிவர்த் துளமே
ஏழு நிலமே சூழெண் டலமே
தீர்க்க வொளிமயல் சேர்க்கு மாயை
எனுமிரு பத்தெட் டனுளொன் றிற்கொன்
றதோமுக மாகப் பொதிர்பல் கோடி
நரகமு ளதையு மருவா துயர்நிலை
அண்மி வாழும் புண்ணிய ராவார்
இமைக்கு முன்னர்த் தமக்குத் தாமே
தீங்கு தேடும் பாங்கிலர் போலச்
சிவமைந் தனையு மவனன் பரையும்
இகழும் வினையின் மகிழுஞ் சிதடர்
முன்பி னீட்டிய நன்கு மிழந்து
சொல்லிய நரகெலாஞ் செல்லுந ராவார்.
ஆதலி னுலகுளீர் நீதியி னின்மினே [11]

சின்மயமான ஆன்மாவுக்கு ஆன்மாவாக விளங்கும் குகப்பெருமானுக்கு, அன்புமிகுந்த சிறப்புப்பிள்ளைகளாகத் திகழ்பவர்கள் - அச்சம்மிகுந்த கோரம், கீழ்க்கோரம், அதிகோரம், கோரதரம், கோர ரூபம், தரளதரம், பயாநகம், காளராத்திரி, பயோற்கடம், சண்டம், மகாசண்டம், சண்ட கோலாலம், சண்டதரம், சரோருகம், சலசவதி, பீமம், பீமபீஷணம், கரளம், விகரளம், குலிசம், முக்கோணம், ஐங்கோணம், தீர்க்கதரம், பரிவர்த்துளம், சப்ததலம், அஷ்டதலம், அதிப்பிரகாசம், அதிமாயை

11. பல்கோடியை யிருபத்தெட்டுக் கோடி யென்க.

என விளங்கி ஒன்றனுக்கொன்று கீழ்முகமாக ஆழ்ந்து விரிந்துள்ள பல்கோடி நரகங்களுள் ஒன்றையும் பொருந்தாமல், மேலான இன்பநிலைக் களத்துக்கு உரியவர்களாக வாழும் புண்ணியம் மிக்கவர்களாக ஆவார்கள். கண்ணிமைக்கும் நேரத்துக்கு உள்ளாகத் தமக்குத்தாமே தீமை தேடிக்கொள்ளும் கொடியோரைப் போன்று, குமாரப் பெருமானையும் அவனது அடியார்களையும் இகழ்ந்துகூறும் செயலில் திளைத்திருக்கும் ஞானக் குருடர்கள், முற்பிறவிகளில் தேடிக்கொண்ட புண்ணியத்தையும் இழந்து, மேலே கூறப்பட்ட எல்லா நரகங்களிலும் வீழ்ந்து துன்பப்படுபவர்களாக ஆவார்கள். எனவே, இவ்வுலகில் உள்ளோரே! உண்மையை உணர்ந்து உய்யும் நன்னெறியிலேயே நிற்பீர்களாக.

தருமமும் யாகமும் புரிகுந ரிடகலைத்
தாரைபோய்ப் புகையிரா வாரிருட் பக்கம்
திகழ்தென் னயனம் புகழ்பிதி ரூர்வெளி
தீங்கின் மதியெனும் பாங்க ரெய்துபு
துலங்கணி யிந்திரன் றலஞ்சேர்ந் துய்வர்
தூயவஃ தகல்வோர் காயம் வாயு
தெளிபுகை மேகந் துளிமழை யோடதி
தேந்தரு மன்னம் மாந்தர்விந் துவுறீஇத்
தையலா ருதர மெய்திப் பிறப்பர்
தொல்லர னிறிதொழு நல்லவர் பிங்கலை
தோய்ந்துசென் றிரவியூ ரேய்ந்துய ருலகம்
தௌவலின் றுய்வார் செவ்வே ளருளர்
இத்துணை யெனாஞா னத்தினுய் வாரே. 12

அறச்செயல்களையும் யாகங்களையும் செய்வோர் தூம்ராதி மார்க்கம் எனப்படும் இருட்பக்கத்தில், தக்ஷிணாயன காலத்தில், இடகலை வழியே உயிர்நீத்தவர்களாகி பித்ருலோகம், சந்திரலோகம் எனும் உலகங்களை அடைந்து பிறகு சுவர்க்க லோகம் சேர்ந்து உய்திபெறுவார்கள். அவ்வாறு தருமத்தையோ, யாகத்தையோ செய்யாதவர்கள் இறந்தபிறகு ஆகாயம், காற்று, புகை, மேகம்,

12. தௌவல்-தவ்வல் எனக் கொள்ளத்தக்கது. "தவலு மீனமுங் குறைபாடென் றியம்பல் வேண்டும்", என்பது பிங்கலந்தை யாகலின் குறைபாடெனும் பொருளது. தவ்வல் – விரித்தல் விகாரம்.

மழைத்துளி ஆகியவை வாயிலாக சென்று, அன்னத்தில் கலந்து, மானுடரின் விந்துவில் இறங்கிப் பெண்களின் கருப்பைக்குள் நுழைந்து மீண்டும் இவ்வுலகில் பிறப்பார்கள். சிவனையும் திருமாலையும் வணங்கும் நல்ல அடியார்கள், பிங்கலை வழியே உயிர்பிரியப்பெற்று, சூர்யலோகத்தை அடைந்து, பின்னர் அதற்கும் மேற்பட்ட உலகத்துக்குக் குறைபாடு ஏதும் இல்லாமல் சென்று உய்திபெறுவார்கள். செவ்வேள் பரமனின் திருவருளுக்கு உரியோர், இவ்வளவு என மதிப்பிட முடியாத ஞானப்பேறு மிக்கவர்களாகி உய்தி பெறுவார்கள்.

இப் 12ஆம் செய்யுண்மோனைவிவரம் : கலியியல் 117-வது விருத்தத்தின் கீழே விளக்கப்பட்டிருக்கிறது.

ஆசிரியப்பா முற்றிற்று.

---

# ஆசிரியப்பாவினம்.

---

## 1. ஆசிரியத்தாழிசை.

மூன்றடியாய்த் தனியே வருபவை.

விளம் விளம் விளம் விளம்.

வேலவ னடியவர் மிறைபுரி யாரொரு
காலது புரியினுங் கறைநர குறறவிர்ந்
தேலதி காரமங் கிழைப்பவ ராகுவர். 13

வேற்பெருமானின் அடியார்கள் ஒருபோதும் கொடுமைகளையோ தவறுகளையோ செய்யமாட்டார்கள். தம்மையும் அறியாமல் ஒருசமயம் அவர்கள் கொடிய செயல்களை செய்துவிட்டாலும், குற்றத்திற்குரிய நரகங்களுக்குச் சென்று துன்பங்களை அனுபவிப்பதினின்றும் நீங்கி, உரிய அதிகாரத்தைச் செலுத்தும் வகையில் அங்கே இருப்பார்கள்.

முடிவறு குகன்வெளி முழுவது மிருப்பினும்
அடியவ ரகமிக வமர்ந்துள னதுகதிர்
படிகமு னாதபம் பலிப்பது போனனி. 14

முடிவில்லாத குகப்பெருமான் பூதவெளி முதலான எண்வகை வெளிகளிலும் வியாபித்திருந்தாலும், அடியவர்களின் உள்ளமாகிய பீடத்தில் மிகவும் விளக்கமுற வெளிப்பட்டு அமர்ந்திருப்பான். அவன் அவ்வாறு விளங்குவது, சூரியனின் ஒளி எல்லாப் பொருள்களிலும் படிந்தாலும் சுத்தமான படிகத்தில் மிகவும் பிரகாசமாகப் படிந்து விளங்குவதை நிகர்க்கும்.

**குகனடி யவரகங் குகனிருத் தலினவர்**
**அகமகிழ் வுறவுண வருத்துந ரவனுகர்**
**மகிழ்நல மடைவரிவ் வார்த்தைபொய் யிலையிலை.** 15

குகப்பெருமானின் அடியவர்களின் உள்ளம்தோறும் குகன் குடியிருப்பதால், அந்த அடியவர்கள் மகிழ்வுறுமாறு அன்னம் பாலிப்பவர்கள், அடியார்களின் திருப்திகண்டு குகப்பெருமான் கொள்ளும் ஆனந்தமாகிய நலத்தை நிச்சயமாக அடைவார்கள். இக்கூற்று பொய்யன்று; பொய்யன்று.

**அடியவ ரகந்தொறு மருட்குக னிருத்தலின்**
**அடியவர்க் கிடுமல லவற்கிடு மலலது**
**கொடிதினுங் கொடிதெனக் குறிக்கவு ளதுநிதம்.** 16

அடியார்களின் உள்ளம் தோறும் அருள்மயமான குகப் பெருமான் இருத்தலால், அவர்களுக்கு இழைக்கும் துன்பம் குகப் பெருமானுக்கு இழைக்கப்படும் துன்பமே ஆகும். மேலும் அது கொடியனவற்றுள் எல்லாம் மிகவும் கொடியது. இவ்வாறு கூறப்படும் கூற்றும் நிஜமே.

**பார்நல முழுவதும் பரநல முழுவதும்**
**சார்பவ ரேகுகன் சார்பினிற் றுறந்தவர்க்**
**கோர்மகிழ் வுறப்பணி யுளுற்றுவ ரனுதினம்.** 17

குகப்பெருமானின் நெறியில் நின்று துறந்துவாழும் சன்யாசிகள் மகிழ்வுறுமாறு நாள்தோறும் சேவை செய்பவர்களே இம்மைப்பேறு ஆகிய இவ்வுலக இன்பப் பேறுகள் அனைத்தையும் உயர்நலப்பேறு ஆகிய மேலுலக இன்பப் பேறுகள் அனைத்தையும் பெற்று மகிழ்வார்கள்.

இரப்பவ ரிலையெனி னீபவர் களுமிலை
புரத்திலவ் வாகுகன் புரிவுயர் துறவிகள்
அரித்தெனின் வீட்டறத் தவர்களு மிலையிலை. 18

இவ்வுலகில் யாசிப்பவர்கள் இல்லை எனில் கொடுப்பவர்களும் இருக்கமாட்டார்கள். அவ்வாறே குகப்பெருமானின் அருளுக்கு ஆட்பட்டு மேம்பட்டிருக்கும் துறவியர் இல்லையெனில் இல்லறத்தில் வாழ்பவர்களும் இருக்கமாட்டார்கள்.

சுப்பிர மணியனைச் சூழுநிட் டாபரர்க்
கிப்புவி புகழ்ந்திட விருந்தவிர் சுரர்களும்
ஒப்புயர் மகிழ்வொடு முஞற்றுவர் சிறப்புகள். 19

சுப்பிரமணியப் பெருமானையே தியானித்து நிட்டையில் வெகுவாகத் திளைத்திருக்கும் மேலோர்க்கு, இவ்வுலகில் வாழ்வோர் புகழும் வகையில் வெளிப்பட்டு விளங்கும் தேவர்களும் மிகவும் மேம்பட்ட மகிழ்ச்சியுடன் சிறப்புகளைச் செய்வார்கள்.

சித்தியின் மனமொரு சிறிதுமி லறிவுளர்க்
கத்துவி தமுதல்வ னாங்குக னரும்பர
முத்தியி னிலவொரு முதமுவந் துதவிடும். 20

அணிமா முதலான எண்வகைச் சித்திகளைப் பெறுவதிலும் வேறு பல இழிவான சித்திகளைப் பெறுவதிலும் ஒரு சிறிதும் மனம் வைக்காமல் வாழும் ஞானத் துறவியர்களுக்கு, அத்துவிதப் பேறு அளிப்பதில் முதல்வனாக விளங்கும் குகப்பெருமான், பரமுத்தியில் திகழும் பேரின்ப நலத்தை உவந்து அருள்வான்.

அவமெனு மிருத்தியு வவுடதஞ் சீந்திகொண்
டுவகைசெய் யோமமொர் மந்திர முருகருட்
டவமுடை யவர்க்கிடு சருவிவை களிலறும். 21

அகால மரணம் எனப்படும் அவமிருத்யு, ஔடதமாகிய சீந்தில் தண்டு கொண்டு, மிருத்யுஞ்ஜய மந்திரத்தால் ஓமம் செய்வதாலும்,

18. அரிதென்பது அரித்தென விரித்தல் விகாரமாயிற்று.

20. முதம் = ஆனந்தம். ஆனந்தத்தை யென இரண்டனுருபு விரிக்க. இது முத் என்னும் வடமொழி விகாரமாம்.

21. சீந்தி = சீந்திற்றண்டு. மந்திரம் = மிருத்தியுஞ்சயமந்திரம்.

முருகப்பெருமானின் அருட்பேறு குறித்துத் தவம் செய்வோர்க்கு உணவு அளிப்பதாலும் தவிர்க்கப்படும்.

**கா**லமென் மிருத்தியு கடந்திட வழியிலை
மேலுறை விபுதரும் விதிவயப் படுவரென்
றோலிடு மடிக்குக னுரிமைய ரோதுவர். 22

ஆயுட்காலம் வரையறுக்கப்பட்ட ஒன்று ஆனதால், ஆயுட்கால எல்லையில் தவறாமல் வரும் மிருத்யுநாதனாகிய காலனை வெல்வதற்கு வழி இல்லை. மேல் உலகில் வாழும் தேவர்களும் விதியின் வசப்பட்டவர்களே எனப் பரநாதத்தை எழுப்பும் சிலம்பணிந்த திருவடியை உடைய குகப்பெருமானின் அருட்பேற்றுக்கு உரிமை படைத்துள்ள ஞானியர் கூறுவர்.

கருவிளம் தேமா கூவிளம் கருவிளம்.

**வ**ரநதி யாடன் மந்திரஞ் செபித்திடல்
திரவிய வோமஞ் செய்தலுண் டெனினுநற்
பரிகரிப் பேசிற் கோங்குக பரன்மதி. 23

புண்ணிய நதிகளில் நீராடல், உரிய மந்திரங்களை ஜபம் செய்தல், உரிய திரவியங்களைக் கொண்டு, விதிக்கப்பட்டுள்ள ஓமம் செய்தல் முதலாயின, செய்த தீவினைகளுக்குப் பரிகாரமாகக் கூறப்பட்டிருந்தாலும், உத்தமமான பரிகாரம் (பிராயச்சித்தம்) பிரணவமயமான குகபரனைப் பற்றிய உண்மையான ஞானப்பேற்றை அடைதலே ஆகும்.

கருவிளம் தேமா கருவிளம் கருவிளம்.

**தி**ருத்தலச் சேவை சிவவுரு நிறுவுதல்
கிரிச்சிர மாதி கிளர்பல விரதமும்
இருப்பினு மேலாம் பரிகரிப் பிறைமதி. 24

புண்ணிய தலங்களுக்குச் சென்று தரிசித்தல், சிவ வடிவத்தைப் பிரதிட்டை செய்தல், பிராயச்சித்த ஓமங்கள், விரதங்கள், - இவை முதலாகப் பாவத்திற்குப் பரிகாரமாகப் பல செயல்கள் கூறப்பட்டிருந்தாலும் உத்தமமான பரிகாரம், இறைவனாகிய முருகப்பெருமானின் மகிமையை அறியவல்ல ஞானப்பேற்றை அடைதலே.

கூவிளம் கூவிளம் தேமா கூவிளம்.

செய்துள தீமைக டரு மாறுபன்
மெய்யிடை யூறற வேதங் கூறினும்
துய்யது சேயருண் ஞான சூரியன். 25

முன்னம் செய்யப்பட்டுள்ள தீய செயல்களின் கொடிய பயன்கள் விலகும் வகையில் பல பரிகாரச் செயல்களை எவ்வித இடையூறும் இல்லாமல் செய்யக்கூடிய வகையில் வேதங்கள் கூறியிருந்தாலும், தூய்மையான பரிகாரம் என்பது செவ்வேள் பரமனின் அருளாகிய ஞானக் கதிரோனின் ஒளியே ஆகும்.

கருவிளம் கூவிளம் தேமா கருவிளம்.

குகனருண் ஞானமி லாதார் குயிற்றிய
அகவினை தீர்வண மேலே யதிர்த்தபல்
வகைவழி யாற்றுதன் மாண்பே மரிக்குமுன். 26

குகப்பெருமானால் அருளப்பெறும் ஞானப்பேறு இல்லாதவர்கள் தம்மால் செய்யப்பட்ட பாவச்செயல்களின் தீயபயன் நீங்குமாறு மேலே கூறப்பட்ட பல்வகையான பரிகாரங்களையும் தாம் இறப்பதற்கு முன்னால் செய்து முடிப்பதே பெருமைக்குரிய செயலாகும்.

இச்செய்யுள்கள் : ஏயெனு மசையாற் சிறப்பிலிறாவிடினும், ஒற்றினானு முயிரினானு மீறாய்வரவும் பெறுமெனும் பொருளைக்கொண்டு "ஒத்தவடித்தா யுலையாமரபொடு நிற்பதுதானே நிலைமண்டிலமே. என்னென் கிளவியை யீறாப்பெறுதலு - மன்னபிறவு மந்த நிலைபெற - நிற்கவும்பெறூஉ நிலைமண்டிலமே" என யா - காரிகையுரை வரு சூத்திரத்தானும், அவைகட்கிலக்கியம் : யாப்பருங்கல விருத்தியிலிருத்தலினாலும் நிலைமண்டில வாசிரியப் பாக்களாகாவோவென ஈண்டோராசங்கை நிகழும். அதற்கு, "மூன்றடி யொத்த முடிவினவாய் விடி - னான்ற வகவற்றாழிசை யாகும்." எனும் யாப்பருங்கலச் சூத்திரவழியாய், யா-காரிகையுரைவரு முதாரணச் செய்யுளில் "வானுற நிமிர்ந்தனை வையக மளந்தனை" எனுமடியளவாய் மூன்றடியாய்த் தம்மு ளளவொத்து வந்த விவ்வாசிரியத் தாழிசைகளைப்போல மூன்றடியி லந்நிலைமண்டிலவாசிரியப் பாக்கள் வரினு மித்தாழிசைகளைப்போலத் தம்மு ளளவொத்த முடிவுபெறாமல், விளஞ்சீர் மாஞ்சீ ரடிக்கடிமாறி விரவி வரவேண்டுமென்றறித லியைபு. வேறுகூறின் ; மேலைச் சூத்திர முதலியன விரோதமாம். அவ்வாசிரியப்பா : நான்கடியில் வரும்போதும், அடிக்கடி தொடைசீர் மாறி விரவி வந்தாற்றான் அஃது அளவடிக்கலிவிருத்தமு மாகா தியங்குமென்க. ஆசிரியத்தாழிசையடி : நாற்சீரின் மிக்க சீரானும் வரும்.

செப்பலோசையான் ஒருபொருண்மேன் மூன்றடுக்கி வருவது.

அல்லில் கதிதா னருள்சிறந்த வேலிறை
புல்லநம் முள்ளே புகுமே லவன்றாளிற்
கல்லெனு நன்னாதங் கேளாமோ கேளோய்.

செம்மை யினர்கட் டிகழ்ந்துபுணர் வேலிறை
பொம்மிநம் முள்ளே புகுமே லவன்றாளிற்
கொம்மெனு நன்னாதங் கேளாமோ கேளோய்.

தோமில் குயமான் சுதைமணந்த வேலிறை
போமுனம் முள்ளே புகுமே லவன்றாளின்
மாமணி நன்னாதங் கேளாமோ கேளோய். 27

அன்புடையோய்! இருள்சிறிதும் அணுகாத முக்திநிலையை அருளும் சிறந்த வேல்இறைவன் நம்மோடு இரண்டறக் கலப்பதற்காக நம் உள்ளே புகுந்தான் எனில் அவன் திருவடிச் சிலம்பிலிருந்து 'கல்' என எழும் பரநாத ஒலியைக் கேட்கமாட்டோமா!

கேண்மை மிக்கோய்! நன்கு பக்குவப்பட்டுள்ள ஞானியர்கள் தம்முடைய தளைகளிலிருந்து நீங்கிக் கலந்துகொள்ளும் வேல் இறைவன் அன்பால் விரைந்து நம் உள்ளே புகுந்தான் ஆயின், அவன் திருவடிச் சிலம்பிலிருந்து 'கொம்' என எழும் பரநாதத்தைக் கேட்கமாட்டோமா!

கேண்மை மிக்கோய்! குற்றமற்ற, ஞானமயமான குயத்தை (மார்பகத்தை) உடைய மான்மகளாம் வள்ளிச் செல்வியை மணந்த வேல் இறைவன் இவ்வுடல் நீங்கும் முன் நம் உள்ளத்துள்ளே புகுந்தான் ஆயின், அவனது திருவடிச் சிலம்பின் மணிகளிலிருந்து எழும் பரநாத ஒலிகளைக் கேட்க மாட்டோமா!

## உ. ஆசிரியத்துறை.

நான்கடியா யீற்றயலடி குறைந்து வருவது.

கரத்தி லமர்வேலுங் கட்டழகார் மொய்ம்பிலணி கடம்பு மாறு
சிரத்தி லவிர்முடியுந் தேசுசெறி காதணியுந் திகழ மாசில்
உரத்தி லணிபுரள வொளிர்தேவி யிருவரொடு
வரத்தை யருள்குகனேர் வரினெற்குங் கருக்கட்டு வருவ துண்டோ. 28

திருக்கரத்தில் கொண்டுள்ள வேலும், இளமை அழகு ததும்பும் தோள்களில் அணிந்துள்ள கடம்பமாலையும், ஆறு சிரங்களிலும் விளங்கும் மகுடங்களும், ஒளிமிக்க செவிகளில் அணிந்துள்ள குழைகளும் பொலிவுடன் திகழ்ந்து விளங்கவும், தூய்மை மிகுந்த மார்பில் அணிந்துள்ள ஆபரணமும் பூணூலும் புரண்டு விளங்கவும், ஒளிமிக்க தெய்வானையோடும் வள்ளி நாயகியோடும் வரத்தை அருள்வதற்காக என்முன்னே குகப்பெருமான் எழுந்தருள்வானாயின், எளியேனுக்கும் இனிப் பிறவியாகிய தளையும் பொருந்துமோ?

மேற்படி யீற்றயலடி குறைந் திடைமடக்காய் வருவது.

(சிலேடை.)

மூர்க்கமெள் ளளவிலையென் முத்தமுரு கையற்கு முதிய பாரிற்
சூர்க்கொலை காரனெனு மோர்நாம மெந்நாளுந் தொடரு மாலோ
சூர்க்கொலை காரனெனு நாமமவற் றொடராதேல்
ஆர்க்குநன் மேல்வாழ்க்கை யணுத்துணையு மெய்தாதென் றதிர்க்க நேரும். 29

"கோபம் எள்ளளவேனும் இவனிடம் இல்லை" என, இயல்பாகவே பந்தங்களிலிருந்து விடுபட்டு அனாதிமுக்தனாகத் திகழும் முருகப்பெருமானுக்கு, மிகத் தொன்மையான இவ்வுலகில் "சூர்க்கொலைகாரன்" எனும் பெயரும், எப்பொழுதும் தொடர்ந்து நிற்கலாமா? 'சூர்க்கொலைகாரன்' எனும் பெயர் அவனுக்கு ஏற்படாமல் போயிருக்குமானால் தேவர், மக்கள் முதலான அனைவர்க்கும் மேம்பட்ட இன்பமயமான வாழ்க்கைநலம் அணுவளவேனும் வாய்த்திருக்காது எனக் கூறவேண்டிவரும்.

முதலடியு மூன்றாமடியும் பதினான்குசீரா
யேனையடிகள் பதினாறுசீரா
யிடையிடை குறைந்து வருவது.

தத்தாந் தனன தனனா தானன
தன்னன தையன தன்னன தனதன
தந்தானன தந்தானன தனனா தானன தனனா தான,

தத்தாந் தனதன தத்தன தனனா தந்தன தந்தன தந்தன தனனா
தனனந் தந்தன தனனந் தந்தன
தாந்தன தாந்தன தந்தன தனனா

பட்டாங் கறிவில் பொருளே மாயைமண்
விண்ணென வுள்ளது மன்னது வெனவுணர்
பண்பேறிய கண்காரர்கள் பழியே கூறிட வுளமா மாயை

ஒட்டாங் குணவய முற்றிழி யுலகோ
ரும்பெரு நிந்தைந வின்றிட நெடுநா
ளூறழ்வுந் துந்தொழில் களினைந் தென்றினி
யோங்கிய வான்றளி கண்டதி லகலா

மட்டார்ந் திருள்வெல் குழலார் வாயித
ழின்மலி நல்லமு துண்ணுவ மெனவிழை
வம்பேயுள விண்டேவரை
வலிசான் மாதவ ருரையால் வானம்

விட்டாந் தரைமகள் கர்ப்பவ ழியிலே
வந்தழி யண்டரை யும்புல நினையாள்
விமலன் சந்ததி யெனுமங் கந்தனை
வேண்டிடு வாஞ்சைய ணங்கெனு மகளே.

உள்ளவாறு உணர்ந்தால், மாயை என்பது அறிவில்லாத பொருள். மண், என்பதும் ஜடமே, விண் என்பதும் அறிவிலாப் பொருளே. நற்பண்பு மிகுந்த ஞானியர்கள் இகழ்ந்துரைக்கும் வகையில், இந்த மாயைச் சார்ந்த சாத்விகம், ராஜஸம், தாமதம் ஆகிய குணங்களின் வயப்பட்டு, இவ்வுலகில் இழிந்த நிலையில் உள்ளவர்களும் பழித்துத் தூற்ற நீண்டகாலம் ஐம்பொறிகளின் வழியே சென்று மனம்போன போக்கில் போய், ஒவ்வாத காரியங்களையே செய்து, வானோங்கிய மாளிகையைக் கண்டு, அங்கே தேன்மணம்

கமழும் கரிய கூந்தலையுடைய பெண்களின் வாயில் மலிகின்ற அமுதத்தை உண்ணுவோம் என ஆசைப்படும் இழிகுணமே உடையவர்களும், விண்ணிலுள்ள தேவர்களை ஒத்த ஆற்றல் உடைய தவச்செல்வர்களின் சாபத்தால், வானுலகிலிருந்து நீங்கி, நிலவுலகில் வாழும் பெண்ணின் வயிற்றில் கருவாக நுழைந்து கருப்பப்பை வழியே வளர்ந்து இங்கே பிறந்து அழிபவர்களுமான தேவர்களையும் அணைந்து கொள்வதற்கு சிவபெருமானின் சந்ததியாக விளங்கும் கந்தப்பெருமானைத் துதிக்கும் நெறியில் உள்ள பேராத அன்பு என்னும் பெண் ஒருபோதும் சம்மதிக்க மாட்டாள்.

முதலடியு மூன்றாமடியு நாற்சீரா
யேனையடிக ளைஞ்சீரா யிடை யிடைகுறைந்
திடைமடக்காய்வருவது.

(சிலேடை.)

அயன்மால் புகழ்முருகோ னறுமுக நாங்காணின்
பயமே பெருகிப் பரவி யிடும்போ லும்மன்றே
பயமே பெருகிப் பரவி யிடலின்றேல்
தயவீ யெனவவனந் தாள்பணி வாரோ தவமுடையோர். 31

*1)* திருமாலும் நான்முகனும் புகழும் முருகப்பெருமானாகிய அறுமுகப் பெருமானை நாம் நேரே கண்டால் பயம் தோன்றி அதிகரித்து விடும் அன்றோ! அவ்வாறு பயம் தோன்றி மிகாவிட்டால் தவச்செல்வர்கள் "நின் திருவருள் தா" என அவனது திருவடிகளைப் பணிவார்களோ?

*2)* திருமாலும் நான்முகனும் புகழும் முருகப்பெருமானாகிய அறுமுகப் பெருமானை நாம் நேரே தரிசித்தால், நமது பிறவிப்பயன் நிறைவுற்று முக்திநிலையாகப் பரிணமிக்கும் அன்றோ! அவ்வாறு பிறவிப்பயன் நிறைவுற்று முக்திநிலையாகக் கனியாவிட்டால், தவச்செல்வர்கள் "நின் திருவருள் தா" எனப் பயனேதும் இன்றி வாளா அவனது திருவடிகளைப் பணிந்து போற்றுவார்களோ!

இத்துறைகட்குச் சீர் வரையறையின்மையின், எத்தனை சீரானும் அடிக ணீண்டுங் குறைந்தும் வருமெனக் கொள்க.

## 3. ஆசிரியவிருத்தம்.

அறுசீர்க்கழிநெடிலடியான்வருவன.

மா மா காய் மா மா காய்.

விடையம் விழைந்து செலுமனத்தை மீட்டுள் வாங்கு பூரகமும்
தடையெவ் வளவு மிலாதுவெளி சரிக்க விடுமி ரேசகமும்
அடைய வகத்தே புரிகின்ற வனக கும்ப கமுமோங்கு
நடைமிக் குளரோ டுறவெனையு நடத்தி டாயோ நன்குகனே. 32

வெளிப்பொருள்களை நாடிச்செல்லும் மனத்தை அடக்கி உள்ளே இழுத்துக் கொள்வதாகிய பூரகம், தடை எதுவும் இல்லாமல் மனத்தை வெறும் வெளியில் செல்லுமாறு செய்வதாகிய ரேசகம், மனத்தை உள்ளேயே நிலைநிறுத்துகின்ற தூய்மைமிக்க கும்பகம் - என இவ்வாறு பிராணாயாமத்தைச் செய்யவல்ல அத்யாத்ம யோகப்பயிற்சி உள்ளவர்களோடு சேர்ந்திருக்குமாறு, குகப்பெருமானே!, என்னை இயக்கி அருள்க.

காய் காய் காய் காய் மா தேமா.

மனமடங்கிச் சுகிக்கவென வளியடக்கு மடயோக மும்பற் றாகு
வினைதொடங்கு மனமடக்குஞ் சிவராச யோகமுநல் வினையா ளர்க்கே
தினமியங்கு மவற்றுளெனக் கியைபாய சிவராச யோகே மீக்கொண்
டுனையடைந்து வாழவருள் புரியாயோ தூவிமயி லுகைக்கு மெந்தாய்.33

மனம் அடங்கிச் சுகமாக இருப்பதற்காக மூச்சை அடக்குகின்ற ஹடயோகம் என்பதும் ஒருவகைத் தளையே ஆகும். வெளி விவகாரங்களில் ஈடுபட ஓடும் மனத்தை அடக்குவதாகிய சிவராச யோகம் என்பதும் நல்வினைப்பயன் மிக்கவர்களுக்கே நாள்தோறும் பொருந்துவதாகும். தோகைமயிலைச் செலுத்திவரும் எந்தையே! எனக்கு மிகவும் இயல்பாக விளங்குவது எனப் புலனாகும் சிவராஜயோகப் பயிற்சியையே நான் மேற்கொள்ளுமாறும், அதனால் உன்னை அடைந்து வாழுமாறும் அருள்புரிய மாட்டாயோ!

கூவிளங்காய் கூவிளங்காய் கூவிளங்காய் கூவிளங்காய் தேமா புளிமா.

நாலொடிரு பத்தெனவி யம்புகிற தத்துவந வஞ்செய் பகுதி
மூலமதன் மேலெனவி ளம்புபொருள் சீவனதன் முன்ன ழிவிலா
வேலனெனு மீசனிரு பத்தொடுறு மேழினில்வி லாச வெளியாய்
மேலுளது சுப்ரமணி யம்மெனநி னைத்துறல்வி வேகி நிலையே. 34

நிலம் முதல் பிரகிருதி என்பது வரை உள்ள 24 தத்துவக் கூட்டத்தையும் புதிது புதிதாகப் பரிணமிக்கச் செய்யும் மூலப்பிரகிருதி என்பதற்கு மேலே 25ஆம் பொருளாக விளங்குவது சீவன்; இதற்கும் மேலே 26ஆம் பொருளாக வேற்படை தாங்கியுள்ள குகேசப் பெருமான் விளங்குவான். இதற்கும் மேலே 27ஆம் பொருளாகச் சிதாகாச வெளியாகத் திகழ்வது சுப்பிரமணியப் பிரமம். இவ்வாறு கருதுவதே விவேகம் மிக்க ஞானியின் நிலையாம்.

[வேற்படை தாங்கியுள்ள பெருமான் தடத்தநிலைக்கு உரியவன். சுப்பிரமணியம் எனப்படும் பரவெளி சொரூபநிலைக்கு உரியது.]

விளம் மா மா விளம் மா தேமா.

வித்துளங் குரத்தைப் போலப் பிராணனில் விளைம னத்தைச்
சுத்தமா வடக்கின் மூச்சுந் தோன்றுமோ வம்மார்க் கத்தாஞ்
சித்திசேர் ஞான யோகர் சிந்தையு ணடனங் காட்டும்
சத்திவே லீசா வெற்கு மருளதைத் தயவி னன்றே. 35

வித்திலிருந்து தோன்றும் முளையைப் போல, மூச்சுக் காற்றின் இயக்கத்தைச் சார்ந்துள்ள மனத்தை நன்கு அடக்கினால், மூச்சின் இயக்கமும் அடங்காமல் இருக்குமோ? மனத்தை அடக்கும் நெறியினதாகிய சிவராஜ யோகம் எனப்படும் சித்தி நெறியில் ஈடுபட்டுள்ள சிவஞான யோகியரின் சிந்தையுள்ளே ஆனந்தக் கூத்தைச் செய்யும் சக்திவேல் தாங்கிய ஈசனே! கருணைகூர்ந்து எளியேனுக்கும் அந்த உயர்வான சிவராஜயோகத்தில் திளைக்கும் நற்பேற்றை அருள்வாய்.

34. இதன்கட் கூறியுள்ள 24 தத்துவங்களும் மூலப்பிரகிருதி யென்பதை யறிவிக்கவே "பகுதி மூலம்" என்றதென்க. இதற்கு மேலே 25-ஆம் பொருளே சீவன் என்பதும், 26-வது தடத்தலக்கண ஈசனே "வேலன்" என்பதும், 27-வது சொரூபலக்கண பரமமே "சுப்பிரமணியம்" என்பதும் உணர்த்தப்படுவ வாயின. சுப்பிரமணியம் – 'சுப்ரமணியம்' என மருவிற்று.

கருவிளம் தேமா புளிமா கருவிளம் தேமா புளிமா.

தனதன தானா தனனா தனதன தானா தனனா.

மறுவறு வேலா மயின்மேல் வருமொரு தேவா மலநோய்
தெறுமதி வீரா சிவனே சிவகுரு நாதா திருவே
துறுமிய சேயோய் தொழுவோர் துதிவிழை காதா சுகமே
உறுசிவ யோகே யுயர்வா னுனுமெனை வாவா வுணவே. 36

குற்றத்தைத் தீர்க்கவல்ல வேலோய்! மயில்மேல் வரும் ஒப்பற்ற தேவனே! அனாதியாகவே ஆன்மாவைப் பற்றியுள்ள ஆணவமலம் எனும் நோயை அழிக்கும் வீரனே! சிவபெருமானே! சிவபெருமானுக்கும் குருநாதனாக விளங்குபவனே! ஞானச் செல்வமே! இளநலம் செறிந்துள்ள சேயவனே! தொழுது துதிக்கும் அடியவர்களின் பாடல்களை விரும்பும் திருச்செவிகளை உடையவனே! ஆனந்தம் பொருந்தச் செய்யும் சிவயோக நெறியில் திளைத்து மேம்பட விரும்பும் நான், என்னை அடியோடு இழந்து நிற்பதற்கு என் முன் இப்பொழுதே வருவாயாக!

மா மா விளம் மா விளம் காய்.

எந்தக் கரும மிழைக்கினு மனமொன் றின்பது விளைநிலையிற்
பந்தித் துயரோர் சகசம தேசெய் பண்புடை யோர்கட்கே
இந்தச் சிவயோ குறுநனி யவரு ளின்பந டம்புரியுஞ்
சொந்தச் சிவனே துகளடு குகனே தொண்டெனை யுங்கொள்ளே. 37

எந்தச் செயலைச் செய்வதாக இருந்தாலும், மனத்தை இன்பம் தோன்றக் கூடிய நிலையில் அசையாமல் நிறுத்தி, அந்த இன்ப நிலையில் உயர்கின்ற இயல்பான யோக நெறியில் (ஸஹஜ நெறியில்) திளைக்கும் பண்புடையோர்க்கே இத்தகைய சிவராஜ யோகம் கைகூடும். இவ்வாறு சிவராஜ யோகத்தில் திளைப்பவர்களின் உள்ளத்துள்ளே ஆனந்த நடனம் செய்பவனாக, உயிர்கள் அனைத்துக்கும் சொந்தப்பட்டுள்ள சிவனே! ஆன்மாவில் ஒட்டிக் கொண்டிருக்கும் ஆணவ அழுக்கைப் போக்கும் குகனே! எளியேனையும் தொண்டுகொண்டு ஆட்கொள்க.

கருவிளம் தேமா புளிமா கருவிளம் கருவிளம் கூவிளங்காய்.

தனதன தானா தனனா தனதன தனதன தானதனா.

உடலினு ளேயோ ருடலா யுளதிது வெனவறி யாவெளியார்
உடலினு ளேயோ ருயிரா யுளதறி யவும்வல ரோசொனவா
றுடலுயிர் காணா ருனையே யுறலறி யவும்வல ரோவருளால்
உடலுயி ரோடே யுனைநா னுணரவு முறவுமெ ணாய்குகனே. 38

இந்த உயிரானது உடலினுக்குள்ளே ஓர் சூக்கும உடலாக உள்ளது என அறியமாட்டாத எளியோர், அந்த உடலுக்குள்ளே ஓர் உயிராக உள்ள ஒன்றையும் அறியவல்லவர்களோ? மேலோர் கூறியவாறு, உடலின் தன்மையையும் உயிரின் தன்மையையும் அறியாதவர்கள் உன்னை அடைவதற்காம் நெறியை அறியவும் வல்லவர்களாக ஆவார்களோ? குகப்பெருமானே! இந்த உடலில் நான் வாழும் பொழுதே உன்னை நான் உள்ளவாறு உணர்வதற்கும் உன்னையே அடைந்து மகிழ்வதற்கும் திருவுள்ளம் கொள்ள மாட்டாயோ!

கூவிளம் கூவிளம் கூவிளம் கூவிளம் கூவிளம் கூவிளங்காய்.

பந்தம லிந்தவர் தம்மன மாலுரு வாமது பாறியகால்
நிந்தையி னெஞ்சரு வாயவிர் பேருண் ஞானிக ணீர்மையையும்
அந்தவி ரண்டும கன்றொளிர் மாகதி யாளரி னீர்மையையும்
தந்தெனை யாள்கரு ணைக்கட லேநிறை சந்த்ரஷ டாநநனே.39

மும்மலப் பிணிப்புக்கு ஆட்பட்டிருப்போரின் மனம் உருநிலை வாய்ந்து தூலமாக இருப்பது; உருவத்தையே பற்றவல்ல தூல மனம் ஒய்ந்தால், இகழ்ச்சிக்குப் பொருந்தாத அந்த மனமும் அருவாக, நுண்மையாக விளங்கும். அருவமனத்தைக் கொண்டுள்ளவர்களாக விளங்கும் ஞானிகளின் தன்மையையும், உருவமனம், அருவமனம் ஆகிய இரண்டையும் நீத்து உன்மனாபாவம் உற்றுள்ள மேலோர்களின் தன்மையையும் எனக்கு வழங்கி ஆட்கொள்வாயாக! கருணைக் கடலே! முழுநிலவு போன்று ஒளிரும் ஆறு திருமுகங்களை உடையவனே!

39. சந்த்ரஷடாநநன் - வடசொற்பிரயோகம்.

ஐம்புல வாரிப டிந்தலை வீண்மன மானதின் வாசனைநீத்
திம்பருய் வாரிட நேரிய சாந்தமெ ழும்புமொர் சத்துவமாய்த்
தும்பறு ஞானம தாமென மாதவர் சொல்வண நீயதனை
வம்பற வென்கணு மன்பொடு செய்குற மங்கைம ணந்தவனே.40

ஐம்புலங்களாகிய கடலில் படிந்து அலையும் வீணான மனத்தின் விகாரபாவங்களை அடியோடு விலக்கி இங்கே உய்திபெறும் ஞானியரின் உள்ளத்தில் இயல்பான சாந்தநிலை அரும்பும். அதுவே சத்துவ குணமயமாய்த், துள்ளல் ஏதும் இல்லாததான ஞான நிலை ஆகும் எனப் பெருந்தவச் செல்வர்கள் கூறுகின்றவாறு, அந்த ஞானபாவம் எனக்குள்ளும் தோன்றிச் சிறக்குமாறு நீ அன்போடு செய்தருள வேண்டும், வள்ளி நாயகியை மணந்து அருளியவனே!

கருவிளம் கருவிளம் கருவிளம் கருவிளம் கருவிளம் கருவிளங்காய்.

[சதாக்கரம் (*நூறெழுத்து.)]

**ப**டரறு பரகதி தனையுற நினையினொர் பயனுமி னசைமுழுதுங்
கெடுமங னலைவுடை மனம்வசம் வருமிது கிளருள முடையவர்கட்
கடைதல ருமையிலை யெனவுனி யொருநிலை யனுதின மவர்வுறவென்
கடவுள யிலிறைவ னடிமலர் தொழுவது கடமையி ரவுபகலே. 41

துன்பம் சிறிதும் இல்லாத மேலான நிலையை அடைய விருப்பம் கொண்டால் ஒரு பயனையும் விளைவிக்காத 'ஆசை' எனும் பற்று நீங்கும்; அப்போது மனம் கட்டுக்கு அடங்கும். இந்த மனக்கட்டுப்பாடு உடையோர்களுக்கு, மேலான கதி அடைதல் என்பது அடையமுடியாத ஒன்றல்ல எனக்கருதி நாள்தோறும் ஒரு நிலையிலேயே மனத்தை நிறுத்த, என் கடவுளும் வேல் இறைவனுமான குகப்பெருமானின் திருவடிகளை இரவு பகலாக எப்பொழுதும் வணங்கி நிற்பதே உரிய கடமையாகும்.

*நூறெழுத்து = மெய்யெழுத்தாகிய வொற்றொழித்து. என்னை? "குற்றிகரங் குற்றுகர மென்றிரண்டு மாய்தமுமொற்று மெனவொரு நான்கொழித்துக் - கற்றோ ருயிரு முயிர்மெய்யு மோதினார் கொள்ள." என்றமையால்.

கூவிளம் கூவிளம் கூவிளம் கூவிளம் கூவிளம் தேமாங்காய்.

தானன தானன தந்தன தானன தந்தன தந்தானா.

**நோ**வடி யேன்மன வெந்துய ரோடநு வன்றுய ரன்பாலே
காவடி யார்பதி யென்றுள பூரண கந்தம கிழ்ந்தாடே
மாவடி வேறிய பங்கயன் மாலுமு வந்துதொ ழும்பீடார்
பூவடி மேவுச தங்கைவி டாதுபுல ம்புசி லம்போடே. 42

நினது பெரிய வடிவத்தை நெஞ்சில் நினைத்துள்ள நான்முகனும் திருமாலும் வணங்கும் பெருமைக்குரிய திருவடிகளில் உள்ள சதங்கையும், சிலம்பும் இடைவிடாது ஒலிக்க, வருந்தும் எனது மனத்துயர் அடியோடு அகலுமாறு இனியமொழிகூறி, உயர்ந்த அன்புத் திறத்தால் மகிழ்ந்து ஆடுவாயாக, அடியார்க்கெல்லாம் தலைவன் எனத் திகழும் பூரணனே! கந்தனே! என்னைக் காத்தருள்வாயாக.

கருவிளம் தேமா புளிமாங்காய் கருவிளம் தேமா புளிமாங்காய்.

தனதன தத்த தனந்தானா தனதன தத்த தனந்தானா

மருவல ருட்க வருஞ்சேயோய் மலைகளி னித்த மிருந்தேமா
அரியத வத்தி னுயர்ந்தோரா லறிவரி யத்த னெனுஞ்சேவே
றொருவனும் வட்ட நெடுங்கார்கோ ளுணியுமு னக்கு மனம்போலே
பெரியவ ணக்க மயர்ந்தாரே பிழையன தைச்செய் தரந்தானோ. 43

அசுரர்கள் பயந்து மனம் கலங்கி நிற்குமாறு வரும் செவ்வேள் பரமனே! மலைகளில் எப்பொழுதும் தங்கிப் பெரிய பெரிய தவத்தைச் செய்வோராலும் அறிவதற்கரிய தலைவன் எனத் திகழும் ரிஷப வாகனனாகிய சிவபெருமானும் பூமியை வளைந்து நீண்டுள்ள கடலை உண்ட அகத்திய முனிவரும் தாம் விழைந்தவாறே உனக்கு வணக்கம் செய்து மகிழ்ந்தார்களே, குற்றம் உடைய அடியேனும், அவ்வாறு உனக்கு வணக்கம் செய்யத் தகுதி உடையவன்தானோ?

தேமா கருவிளங்காய் கூவிளம் புளிமா கருவிளங்காய் கூவிளம்.

அந்தத் தினையுமிடை தன்னையு மறிதற் குரியமதி யொன்றிலா
மந்தர்க் கணுகுபல னல்குமிம் மகியிற் பழமறைவி ளம்புமா
றைந்திற் கிரண்டுபழு தில்லையென் றறையப் படுமதனி லென்னைநீ
பந்திப் பொழியநனி பந்தியே பரமற் கினியகுக சம்புவே. 44

பதி, பசு, பாசம் எனும் மூன்றனுள் ஒன்றின் இறுதி, இடை, தொடக்கம் ஆகியவற்றையாவது அறிவதற்குரிய ஞானம் இல்லாத அறிவிலிகளுக்கு, உரிய வினைப்பயன்களைத் தவறாமல் அளிக்கும் இவ்வுலகில், தொன்மையான வேதம் கூறுவது போன்று 'ஐந்திற்கு இரண்டு பழுதில்லை' எனக் கூறப்படும் நிலையில் என்னை, எனது

43. மருவலர் – பகைவர்

பந்தங்களெல்லாம் ஒழியுமாறு பந்தித்து வை, சிவபெருமானின் பேரன்புக்குரிய சம்புவே!

(சம்பு = எல்லா உயிர்களுக்கும் இதம் செய்பவன்; இன்பம் வழங்குபவன்; ஐந்திற்கு இரண்டு பழுதில்லை - என்பது சின்முத்திரை காட்டும் அத்துவிதக் கலப்பை உணர்த்துவது. ஐந்து விரல்களுள் கட்டைவிரலும் ஆட்காட்டி விரலும் முறையே பரம்பொருளும் சீவான்மாவும். ஏனைய மூன்று விரல்களும் ஆணவம், கன்மம், மாயை எனும் முத் தளை)

புளிமா தேமா கூவிளம் புளிமா தேமா கருவிளம்.

உனைய லாதொர் தேவரை யுவகை யோடு பரசுதல்
கனியு ணாது காயுணுங் கயமை மானு மெனவிறா
இனிய ஞான யோகின ரினிது காண்ப ரவர்நிலை
தனையெ நாளு நானுறத் தயவு கூர்தி மழவையா. 45

இளநலமும் இள அழகும் வாய்த்துள்ள தலைவனே! உன்னைத் தவிர்த்து வேறொரு தெய்வத்தை மகிழ்வோடு வணங்குதல் என்பது கனி இருக்கக் காயை விரும்புவதாகிய இழிசெயலை நிகர்க்கும்என, உறுதிப்பாடு உடைய இனிய ஞான யோகியர்கள் இனிதே உணர்கின்றனர். அத்தகைய ஞானயோகியரின் நிலையை அடியேன் எப்பொழுதும் பொருந்தி நிற்குமாறு அருள் பாலிப்பாயாக.

தேமா கூவிளம் கூவிளம் கூவிளம் கூவிளம் கூவிளங்காய்.

ஈடி லாவெழி லீடறு வல்லமை யீடறு கல்வியெலாம்
கூடி வாழவெ னாநினை நல்லவர் கூரயி லோயுனதோர்
ஈடி லாவுரு வானதை வேலுட னேரித யாசனமே
னாடி யோகினி லேயடை வாரருண் ஞானமு மங்ஙனமே. 46

கூரிய வேற்படை உடையோய்! நிகரற்ற எழில், நிகரற்ற வல்லமை, நிகரற்ற கல்வி ஆகிய எல்லாவற்றோடும் கூடி வாழ்வதற்காக விழையும் நல் அன்பர்கள், உனது ஒப்புயர்வற்ற அழகிய வடிவத்தை வேற்படையுடன் கூடியதாகத் தமது இதயமாம் ஆசனத்தின் மேல் தியானித்துத் தியானித்து தாம் விரும்பியவாறே அந்த யோகப்பயனால் அனைத்தையும் அடைவார்கள். அருளால் வரும் பதிஞானம் எனும் உயரிய ஞானத்தையும் அவ்வாறு தியானித்துப் பெற்றுக் கொள்ளலாம்.

விளம் விளம் காய் விளம் விளம் காய்..

**ப**ஞ்சபு லன்வழி யேபோந்து பாழ்படு மனமதை நுதனடுவில்
துஞ்சிட வைத்தது துஞ்சாது சொக்கிடு நேர்மையை யெற்கந்நாள்
அஞ்சய வங்குலி யாவணமா வருளிய நீயெனை முழுதுமினிச்
சஞ்சல மின்றிநி லைக்கவருள் சண்முக மாயொளிர் தண்ணளியே. 47

அறுமுக வடிவத்துடன் காட்சி அளிக்கும் குளிர்ந்த கருணைப் பெருக்கே! ஐம்புலன்கள் வழியேவெளியே வந்து அலைந்து பாழ்படும் மனத்தை அடக்கி நெற்றி நடுவில் புருவ மத்தியில் அசையாமல் நிலைக்க வைத்துத் தூங்காமல் தூங்கி நிற்கும் சிவயோக நெறியை எனக்கு முன்னே ஒருசமயம் நினது அழகிய முன்கை விரலால் உணர்த்தி அருளிய நீ, முழுவதுமாக இனிச் சஞ்சலம் ஏதும் இல்லாமல் எனது யோகநிலையிலேயே நிலைத்திருக்க அருள் புரிவாயாக.

புளிமாங்கனி கூவிளம் கூவிளங்காய்.

புளிமாங்கனி கூவிளம் கூவிளங்காய்.

தனனாதன தானன தானதனா, தனனாதன தானன தானதனா.

**வ**லிநீடெழின் மாசுசி தேசுநிரா மயமேயவு னோருரு மேவவவா
மலிநீருளர் யாவரு மேமனமா மலர்மீதயி லோடொளி சாலுருவே
நலியாமனி றீஇய தேதமதேர் நவைதீருரு வாமனு வேபுரிவார்
கலியாணகு ணாளகு கேசசதா கருதார்வலர் காணரு ணாயகனே. 48

ஆற்றல், மிகுந்த அழகு, மிகுந்த தூய்மைநிலை, பிரகாசம், இயல்பாகவே பாசத்தளையிலிருந்து விடுபட்டிருக்கு நிலை ஆகிய இவை பொருந்தியுள்ள உனது வடிவத்தைத் தாமும் பொருந்திநிற்க அதிகவிழைவு கொண்டார் யாவரும் தமது இதயகமலத்தில் ஒளி வேலவனின் வடிவத்தை நலியாமல் நிறுத்தி அவ்வடிவே அழகிய, குற்றம் தீர்ந்த, உண்மை வடிவாக ஆகுமாறு உரிய மந்திரத்தை உரிய முறைப்படி செபிப்போர்களாக ஆவார்கள். மங்களகரமான குணங்களுக்கு இருப்பிடமானவனே! குகப்பெருமானே!

---

**47.** **அஞ்சய அங்குலி** = அழகிய முன் கைவிரல். (ஸம:)சயம் = முன்கை; வடசொல். ஆவணம் = உரிமை; பி-நிகண்டு காண்க.

**48.** **“மனமாமலர் மீதயி லோடொளி சாலுருவே நலியாம னிறீஇய தேதமதேர் நவைதீருரு வாமனு வேபுரிவார்”**, எனுஞ் சொற்களுக்குத் தமது இதயகமலத்தில் ஒளிவேலனுருவை நலியாமல் நிறுத்தி அவ்வுருவே அழகிய நவைதீர்ந்த (உண்மை) உருவாமாறு மந்திரஞ் செபிப்பார் எனும் பொருள் கொள்க. ஆறு எனுஞ் சொல்லொன்று வருவிக்க.

எப்பொழுதும் தியானித்திருக்கும் அன்பர்கள் நேரே தரிசிக்கும் அருள்மயமான நாயகனே!

இந்த 48-வது செய்யுளடிகளின் சீர்களைப் புளிமா புளிமா வெனப் பிரிக்கின்; எண்சீரில் 134-ம் விருத்தத்தி னளவாம்.

காய் காய் காய் காய் காய் மா

சாந்தமெனுஞ் சத்துவந்தான் றாமதத்தைப்
பெருக்குகிற தசைமிசைத லானுங்
காந்தியறு பழஞ்சோறு கைதொடுத
லானுமிரா சதம்பெருக்குங் காரஞ்
சேர்ந்தனவெல் லாநுகர்த லானுநனி
கெடுமெனவே தெரிந்துநல மாக
மாந்திடுவார் மனமமர்ந்த மாமுருகா
வெனதகத்து மருவியருள் புரியாய். 49

சத்துவ குணத்தைச் சார்ந்ததாகிய சாந்தம் எனப்படும் அமைதி நிலை தாமத குணத்தை மிகுதிப்படுத்தும் மாமிசத்தைப் புசிப்பதாலும், நமது ஒளியையும் அறிவையும் மழுங்கச் செய்யும் பழஞ்சோற்றைப் புசிப்பதாலும், ராசத குணத்தை அதிகப்படுத்தும் காரம் பொருந்திய உணவுப்பொருட்களையெல்லாம் புசிப்பதாலும் மிகவும் குலைந்து போகும் என உணர்ந்து, மேற்கூறப்பட்ட உணவுகளைத் தவிர்த்துச் சத்துவ குணத்தை அதிகப்படுத்தும் உணவுப் பொருள்களையே உண்பவர்கள் எவர்களோ அவர்கள் உள்ளத்தில் இயல்பாகவே குடிகொண்டிருக்கும் பெருமைசால் முருகப் பெருமானே! எளியேனின் உள்ளத்திலும் வெளிப்பட்டு அமர்ந்து அருள்புரிவாயாக.

காய் காய் காய் காய் காய் ★காய்.

ஊனுண்டி றத்தினர்ச தாவுன்னும் யோகெய்தி யோர்ஞான மேவினாலும்
ஈனந்த ணந்தவதி சுத்தமுள சத்துவம தெய்தார்க டாழ்வரென்றே
மானந்த விர்ந்தவுண வுண்டுகிளர் சாதுக்கண் மாசறும னத்தகத்தில்
ஆனந்த நிர்த்தனமி டுங்குமர குருவென்னு மரசென்னை யாளத்தனே.
50

மாமிசம் புசிக்கும் பழக்கம் உடையோர், தியானத்தில் எப்பொழுதும் ஈடுபடச் செய்யும் யோக நெறியில் பொருந்தி ஞானம் அடைந்தாலும், குற்றமற்ற, அதிசுத்தமான சத்துவகுணப் பேறு

வாய்க்கப் பெறாதவர்களாகித் தமது நிலையில் தாழ்ந்தே விளங்குவார்கள் என்பதை நன்குணர்ந்து கொண்டு, ராஜத தாமச உணவுகளை நீத்துச் சாத்துவிக உணவுகளையே உண்டு யோகத்திலும் ஞானத்திலும் மேம்படும் சாதுக்களின் தூய உள்ளத்தில் ஆனந்தக் கூத்து இயற்றும் குமரகுரு எனும் இறையரசனே என்னை ஆட்கொள்ளும் தலைவன் ஆவான்.

*இக்காய்ச்சீர் : இச்செய்யுட்கடையிற் கனிச்சீராய் நிற்கிறது. அதனிடை நிற்குந் தகரவொற்றைச் "சொல்லாரும் வல்லின மெல்லினமோ டிடைத்தோன்று மொற்று - நில்லாது" எனும் விதியானே களைந்தலகிட அது கூவிளங்கா யாமாறு மறிக.

இந்த 50-வது செய்யுளடிகளி னீற்றுச்சீர்களை யிரண்டு மாஞ்சீர்களாக வலகிட்டு எழுசீராகக் கொளினென்னை யெனின்; அவ்வாறு கோடற்குச் சில வியைந்தும் சில வியையாமலும் வருமெனற்கு இச்செய்யுளி னிறுதிச்சீராகிய "யாளத்தனே" என்பது நேர்நேர் நிரையாய்த் தேமாங்கனியென நிற்பதே யுதாரணமாம். ஆகலின், இவ்வொலி யுடைய விருத்தம் : அறுசீரெனவே பெயர்பெறும், இஃதிரட்டித்துவரிற் பன்னிரு சீரெனவே பெயர் பெறுமென்றல் துணிபென்க. இத்துணிபு : அடியில் வருகின்ற 56, 57-ஆம் விருத்தங்கட்குங் கோடலியைபு.

மா மா மா மா மா காய்.

**மோ**கஞ் செய்யீ ருளியெண் ணெய்மீன் மூலங் கடுகணையாப்
பாகஞ் செவ்வாற் கோதும் பையரி பச்சைப் பயறுகுளம்
சாகம் பைங்காய் தேனெய் வெண்ணெய் ததிசுக் காகுமினும்
ஊகந் தருநன் பான்மே லென்றுண் ணுறுவர் பிரான்முருகோன். 51

மோகத்தை மிகுவிக்கும் வெள் உள்ளி, ஈர உள்ளி, எண்ணெய், மீன், கிழங்கு வகைகள், கடுகு - ஆகிய இவை சேர்க்கப்படாததாய் நன்கு பக்குவமாகச் சமைந்த செவ்வாற்கோதுமை, அரிசி, பச்சைப் பயறு, சருக்கரை, இலைக்கறி, பசுங்காய் வகைகள், தேன், நெய், வெண்ணெய், தயிர், சுக்கு, ஞானத்தை மிகுவிக்கும் பால் என்னும் இவையே மேலான சாத்தவிக உணவுகளாகும் எனக் கொண்டு உண்டு வாழ்வோரின் தலைவனே முருகப்பெருமான் ஆவன்.

51. **ஈருளி** = வெள்ளுள்ளியும், ஈரவுள்ளியும். **அரி** = அரிசி. **குளம்** = சருக்கரை. **சாகம்** = இலைக்கறி. **ததி** = தயிர்.

மா காய் காய் மா காய் காய்.

சாத்து விகவுணவா மொழியுச்சி தனிலுப் புப்புளிகா ரமொழித்தோ்
பூத்த பச்சரிசி பசும்பயறும் புரையின் றொரு*சேரிற் குட்படவே
சேர்த்து நன்மிளகுத் துகளிட்டுச் செய்சா தத்துழியா னின்பானெய்
வார்த்த யின்றிரவிற் பால்பழமுண் மாண்பார் நினைசேயென் மனத்துளதே.52

சாத்துவிக உணவுகள் எனக் கூறப்பட்டவைகளுள், நலம் மிகுந்த பச்சரிசி, பச்சைப்பயறு என்பனவற்றை ஒருசேர் அளவுக்குள்ளாக உப்பும் புளியும் சேர்க்காமல் சமைத்து உச்சிப்பொழுது வேளையில் மிளகுத்தூளுடன் கலந்து, அதில் பசும்பாலும் பசும் நெய்யும் சேர்த்து உண்டு, இரவில் பாலும் பழமும் மட்டுமே உண்டு வாழும் சாத்துவிகம் மிகுந்த ஞானியரால் தியானிக்கப்படும் முருகன் எனும் குழந்தை என் மனத்தில் நிரந்தரமாகத் திகழ்கிறது.

தேமா தேமா தேமா தேமா தேமா கூவிளம்.

எண்ணெய் வீவு நாளில் வாதை யீயு மாநெயும்
வெண்ணெய் பாலு மிக்க வுண்ணின் விந்து வூறியே
பெண்ணை நேட நேரு மென்று பெட்பி லாதினி
துண்ணு சீரி யோர்பி ரானெ னொட்ப வேலனே. 53

எண்ணெயை அதிகமாகச் சேர்த்துக் கொண்டால், இறக்கும் தறுவாயில் அதிகமாகத் தேக உபாதை உண்டாகும். நெய், வெண்ணெய், பால் ஆகியவற்றை மிகுதியாக உண்டால், விந்து மிகுந்து உடலின்பத்துக்காகப் பெண்ணின் சேர்க்கையை நாடவேண்டி வரும். இதனை உணர்ந்து, இவற்றை விரும்பாமல், இனிதே நல்லனவற்றை உண்ணும் சீர்மை மிகுந்தோரின் தலைவன், எனக்கு நாயகனான ஒளிபொருந்திய வேலவனே ஆவன்.

கருவிளங்காய் கருவிளங்காய் கருவிளங்காய்
கருவிளங்காய் புளிமா தேமா.

[ சதாக்கரம் (நூறெழுத்து.)]

சருமயத்தை யுடையதொக்கு ளுயிரிருக்கு
நிலைகுறித்த சனமே கொஞ்சம்
வருபசிக்கு நுகர்குணத்தர் மனமடக்கு
வகைபடுப்பர் மயலா னையார்

* 1 சேர் = 14,400 நெல் எடை (சிவஞானதீபம்)

அறிவையிச்சை துயின்மிகுத்த லெனுமவத்தை
களையறுப்ப ரருளாம் வாழ்வு
பிரிவறச்சின் மயமடுப்ப ரடிமையெற்கு
மருளுருத்ரர் பெருமா னேயோ. 54

அடிமையாகிய எனக்கும் அருள்புரியும் உருத்திரராம் சிவகுருவே! அன்னமயமான இந்த உடலுள் பல்வேறு அவத்தைகளில் உயிர் இருக்கும் நிலையை அறியும் ஆற்றல் உடையவரே, பசி நேரும் போது ஓர் அளவே உண்ணும் குணம் உடையவர்; அவரே மனத்தை அடக்கும் வழியிலே பொருந்துவார்; உலக மோகத்தால் வருந்தமாட்டார்; பெண் ஆசை, மிகுதியான தூக்கம் முதலானவற்றை அறவே விலக்குவார்; அருள்மயமான வாழ்க்கையை அடைந்து இறைவனோடு இரண்டற நிற்கும் ஞானமயமான பெருநிலையைப் பொருந்தி விளங்குவார்.

இந்த 54-வது செய்யுட்கணுள்ள காய்ச்சீர்களைப் புளிமா தேமா வெனப் பிரிக்கில், பதின்சீர்க்கழிநெடிலடியுமாம்.

மா விளம் காய் மா மா காய்.

உணவின் றேலுட லாமாக்கை
யுளசத் துண்ணும் வயிற்றனலென்
றெனும்வல் லாருரை யொவ்விடுத
லெவர்கட் கென்னி னுயிர்ப்பசைவு
நணுகும் பேர்க்கது வின்றேலின்
றென்றோர் மெய்யர் நயம்படவே
பணிமந் தாகினி சுதமஞ்ஞைப்
பரியா வருளெற் கருளன்றே. 55

உரிய நேரத்தில் உணவை உட்கொள்ளவில்லையாயின், உடம்பிலுள்ள சத்தினை ஜாடராக்னி எனப்படும் வயிற்றுநெருப்பு எரித்துஉண்டு விடும் எனச் சான்றோர் கூறும் உரை யாவர்க்குப் பொருந்தும் எனில், மூச்சுக்காற்றின் இயக்கம் உடலில் உள்ளவர்களுக்கே ஆகும். மூச்சை மனத்தோடு சேர்த்து முறைப்படி அடக்கும் யோக நெறியினர்க்கு அந்த உரை பொருந்தாது. இந்த உண்மையை உணர்ந்துள்ள ஞானியர் யோகமுறைப்படி வணங்கும் கங்கையின் மைந்தனே! மயிலூர்ந்து வரும் முருகோனே! எனக்கு மேன்மேலும் அருள்புரிவாயாக.

கருவிளங்காய் கருவிளங்காய் கருவிளங்காய்
கருவிளங்காய் கருவிளங்காய் கருவிளங்கனி.
தனனதன தனனதன தனனதன தனனதன
தனனதன தனனதனனா.

நிறைவிலணு வறிவினசை வெனுமனது தனதுநிலை
நிலைகொளின துயர்மவுனமே
உறுமஙனம் வினைகளடி யுடனழியு மலமுமறு
முயிருமுய ரமுதடைமெனா
அறிபவர்கள் சனனமெனு நினைவினொடு மறதியெனு
மவதிலய விளிவுமிலராய்
இறைவனுனை யடைவரென திதயமலர் வதிதருமொ
ரிமயகிரி மகள்குமரனே. 56

தனக்குரிய நிறைவு பெறாமல் தளைகளுக்கு உட்பட்டிருக்கும் ஆன்மாவின் ஞானநிலையில், எப்பொழுதும் அலைந்து கொண்டிருக்கும் மனமானது ஒரு நிலைக்கு வந்து அடங்கினால், மேலான மௌன நிலை பொருந்தும். அப்பொழுது செயற்பாடுகள் முற்றும் ஒழிந்துவிடும்; ஆணவமலமும் நீங்கும். ஆன்மாவும் மேலான அமுதப்பேற்றை அடையும். இவ்வாறு அறிபவர்கள் பிறப்பு எனும் நினைவு, இறப்பு எனும் மறதி ஆகிய இரண்டும் நீங்கப் பெற்றவர்களாகி, அனைத்தும் ஒடுங்கும் காலத்திலும் அழியாதவர்களாகி இறைவனாகிய உன்னோடு இரண்டறக் கலந்து விளங்குவார்கள், எனது இதயமாகிய தாமரைப் பீடத்தில் வீற்றிருக்கும் பார்வதி குமாரனே!

தனனதன தந்தனன தனனதன தந்தனன
தனனதன தந்தனதனா.

விளரியையு டம்பெனவு டையமனத லைந்தவழி
விசையொடுமி யங்குவளிதான்
அளவதுக டந்துவெளி வருமுறுகண் விஞ்சிடும்வ
யதுமழியு மென்றுலகிலே

57. விளரி = வேட்கைப்பெருக்கம்; ளகரவெதுகை காண்க.

தெளிவுநவி லிந்தவுரு நலமடைய வென்றரிய
செபதபமு யன்றுமதையே
குளிர்கொளவ யர்ந்தசுகர் குழுவிடைவி ளங்குமொரு
குமரகுரு தொண்டனிவனே. 57

பெருகி நிற்கும் ஆசையையே (வேட்கைப் பெருக்கத்தை) உடலாகக் கொண்டுள்ள மனம் அலையும்போது, விரைவோடு இயங்கும் மூச்சுக்காற்று தனக்குரிய அளவைக் கடந்து வெளியேறும்; அதனால் துன்பம் மிகுதிப்படும்; ஆயுட்காலமும் குறையும் என உலகில் ஞானியரால் கூறப்படும் இந்தத் தெளிவான உண்மையை உணர்ந்து, இந்த உடல் தெய்வநலம் பெறுவதற்காக செபம் தவம் முதலானவற்றைச் செய்ய முயற்சி மேற்கொண்டு, உடலும் உள்ளமும் குளிர அவற்றையே முறைப்படிச் செய்து ஆன்மசுகம் பெறும் ஞானியர் குழுவில் விளங்கும் குமரகுருவின் தொண்டன் அடியேன்.

தேமாங்காய் தேமா புளிமாங்காய் தேமா புளிமாங்காய் தேமாங்கனி.

உண்டாகி வீயும் பலன்காண வேகோ ளுடம்பான தேதானெனக்
கொண்டாணை யின்றா டகங்கார நெஞ்சங் குழம்பாத டைந்தால்வரை
வண்டாத வண்டங் களுந்தம்வ யந்தா மயிர்ப்பின்றெ னாவவ்வழிக்
கண்டா ரகத்தே யுறுங்கந்த வேளென் கணுங்கூட லேசெய்யுமால். 58

“மீண்டும் மீண்டும் பிறப்பதும் இறப்பதும் ஆகிய பயனைப் பெறவே குற்றம் மலிந்த இந்த உடல் தோன்றியது என உணர்ந்துகொண்டு, ஓர் ஒழுங்கிற்கு உட்படாமல் தன் விருப்பம் போல் அலைபாய்ந்து திரியும் அகங்கார மயமாகிய மனமானது குழப்பம் ஏதும் இல்லாததாய்த் தெளிவு அடைந்தால், அளவில்லாத அண்டங்களும் வயப்பட்டு நிற்கும். இதில் ஐயம் சிறிதும் இல்லை” என நன்குணர்ந்து மனத்தை அடக்கி நிற்கும் மாசற்ற நெறியில் பொருந்தியுள்ள ஞானியர் உள்ளத்தே கோயில் கொண்டிருக்கும் கந்தவேள் பெருமான் என் உள்ளத்திலும் பொருந்தி எழுந்தருள்வான்.

இச்செய்யுளடிகளின் 2-3-ம் சீர்களையும், 4-5-ம் சீர்களையும் தேமாங்காய் தேமாங்காயெனப் பிரிக்கினும் பிரிக்கலாம். அங்ஙனமாயின், மோனைக்குரிய ஐந்தாஞ்சீ ரக்கரம் நான்காஞ்சீரிற் சேர்ந் தெழில்குறையும். இதனாற் சீர்பிரித்தலு மழகுபெறப் பிரிக்க வேண்டு மென்ப தறிக.

தேமா கருவிளம் கூவிளம் தேமா கருவிளம் கூவிளம்.

யாவு மறிந்திடு போதமே நாளும் வளர்ந்தபல் காமரால்
ஈவு மிகுந்திழி பேய்மன மென்ன மருண்டலை யுந்தமை
மேவ நிரந்தரம் வைத்தெலா மிச்சை யெனத்தெரி வாருயர்
ஆவி நிறைந்தொளிர் சோதியே யன்பி னெனக்கருள் சாமியே. 59

அன்பினால் எளியேனுக்கு அருள்புரியும் சுவாமிநாதனான முருகன், அனைத்தும் தன்னாலேயே எனக் கருதும் தற்போதத்தால் நாள்தோறும் மிகுதிப்பட்டுத் தோன்றும் பல்வேறு ஆசைகளால் மேன்மேலும் கர்ம மலத்தை அதிகரித்துக் கொண்டு. பேயின் மனம் போன்று மருண்டு அலைகின்ற தம்மைத் தமது ஆன்ம நிலையிலேயே நிரந்தரமாக நிறுத்திக் கொண்டு, இவ்வுலக ஆசைகள் அனைத்துமே பொய்யானவை எனத் தெளிவாக உணரும் ஞானியர்களின் உயிரில் பரிபூரணமாக நிறைந்து பிரகாசிக்கும் பேரொளியே ஆவான்.

கருவிளம் கூவிளம் கூவிளம் கருவிளம் கூவிளம் கூவிளம்.

தனதன தாந்தன தாந்தனா தனதன தந்தன தன்னனா.

அகமன மாழ்ந்திடி னீண்டபே ரகிலம றைந்திடு மங்ஙனே
குகனொளி தோன்றிடும் வீம்பினே குலைமன முண்டெனி னின்னலீ
சகமது தோன்றிடு மாண்புசா றலைமைம றைந்திடு மென்னுநூல்
பகர்வர ராண்டவ னாம்பரா பரனெனி லங்கயி லண்ணலே. 60

மனமானது உள்ளுக்குள்ளேயே ஆழ்ந்து அடங்கினால், நீண்டு விரிந்துள்ள உலகங்கள் காட்சிக்கு உட்படா. அவ்வாறு உலகக் காட்சி மறையும்போது குகப்பெருமானின் ஒளிக்காட்சி புலனாகும். வீணாக அலைந்து பாழ்படும் மனத்தின் செயற்பாடு இருக்குமானால், துன்பம் தரும் உலகக் காட்சியே தலைதூக்கி நிற்கும்; பெருமைநிலைக்குரிய தான ஆன்மாவின் தலைமைத் தன்மையான ஆனந்த அனுபவமும் குலைந்து போகும். இவ்வாறு கூறும் நூல்களை ஓதி உணர்ந்த மேலான ஞானியர்க்குரிய ஆண்டவனாகிய பராபரன் யார் எனில், அவன் வேற்படை ஏந்தியுள்ள அண்ணலே ஆவன்.

கூவிளம் கூவிளம் தேமா கூவிளம் கூவிளம் தேமா.

பற்பல சூழ்மன மோய்க்கப் பைரவி சாம்பவி பண்பார்
பொற்புயர் கேசரி யுண்டோர் பூர்த்தித ராவிவை மேலாஞ்
சிற்பர முத்திரை தானே சேணிலை யென்றதி லானோர்
தற்பர மாயடை தேவே சண்முக மேயெனை யாளே. 61

பல்வேறு பொருள்களையும் இடங்களையும் நாடி அலையும் மனத்தை அடக்க பைரவி, சாம்பவி, நலம் மிகுந்த கேசரி முதலான யோக முத்திரைகள் உண்டு. அவை நிறைவான நிலையைத் தரமாட்டா. மேம்பட்டதான சிற்பர முத்திரை எனப்படும் சின்முத்திரையே மேம்பட்ட நிலைக்கு உயர்த்தி வைக்க வல்லது என உணர்ந்து அந்த முத்திரையிலேயே லயித்து இருப்போர், தமக்குரிய மேலான பரம்பொருளாகக் கருதிச் சரண் அடையும் தேவனே! அறுமுகப் பெருமானே! என்னை ஆண்டுகொண்டு அருள்க.

கருவிளம் புளிமாங்காய் கருவிளம் புளிமாங்காய் கருவிளம் புளிமாங்கனி.

தனதனந் தனதான தனதனந் தனதான, தனதனந் தனதானனா.

[சதாக்கரம். (நூறெழுத்து.)]

இருதிறம் பகர்நாசி நுனிவிளங் கிலலாட
    மெழிலுறுந் தலைமேலுமே
முருகிருந் தொளிர்பார்வை நனிபொருந் திடனாடன்
    முதல்வனும் படர்வோனுமே
மருவிநின் றிடலாகு முனமொழிந் துளநாலு
    மெனவறிந் தவிர்வாழ்வினார்
அருமருந் தெனுஞான முருகுவந் தெனைமேவி
    னமலவின் புறுவேனரோ. 62

இரவு எனும் உள்மூச்சுக்குரிய துவாரம், பகல் எனும் வெளிமூச்சுக்குரிய துவாரம் எனும் இருதிறன்களை உடைய மூக்கின் நுனியில் பார்வையையும் தியானத்தையும் நிறுத்தல், நெற்றி நடுவில் (புருவமத்தியில்) பார்வையையும் தியானத்தையும் நிறுத்தல், தலைக்கு மேல் துவாதசாந்தத் தானத்தில் பார்வையையும் சிந்தனையையும் நிறுத்தல், தியானிக்கப்படும் முருகனும் தியானிக்கும் ஆன்மாவும் ஐக்கியப்பட்டு நிற்றல் என்பனவே முற்கூறப்பட்ட பைரவி, சாம்பவி,

கேசரி, சின்முத்திரை எனும் நான்காகும் என அறிந்து இவற்றில் ஈடுபட்டு வாழும் ஞானியார்க்கு அருமருந்து எனத் திகழும் ஞானமுருகன் என்னுளத்தில் எழுந்தருளினால், தூய்மையான பேரானந்தத்தை அடைவேன்.

கூவிளம் கூவிளம் கூவிளங்காய் கருவிளம் தேமா புளிமா.

தானன தானன தானதனா தனதன தானா தனனா.

**சேயவ னீடொளி நாடியொரே திடமுறு கான்மா தொனியே**
**மாயமெ னாநவின் மாவிருளே மலையென வாதா டுருவே**
**நேயமில் பேய்பல காணினுமார் நிறையயி லோனே யிவையாம்**
**ஒய்வடை யோமென வேயிழியா ருறுவது சேயோ னடியே. 63**

செவ்வேள் பரமனின் பேரொளியையே தியானித்துக் கொண்டு சிவயோக நெறியில் உறுதிப்பாடுடன் இருக்கும்போது சிற்சில சமயங்களில் பெருமுழக்கம் கேட்கும்; மாயை போன்று பேரிருள் கவியும்; மலைபோன்ற பேருருவத்துடன் ஒன்று வந்து வாதாடி நிற்கும்; அன்பு இல்லாத பல பேய்கள் சூழ்ந்து ஆரவாரிக்கும். இத்தகைய செயல்கள் என்னென்ன நேர்ந்தாலும், "பரிபூரணனான வேலவனின் அருளால் நிகழ்பவையே இவை. இவை போன்ற செயல்களால் இந்த யோக நெறியிலிருந்து விலக மாட்டோம்" என உறுதிப்பாட்டுடன் இருக்கும் ஞானியர் அடைவது, செவ்வேள் பரமனின் திருவடியே ஆகும்.

தேமா புளிமா புளிமா புளிமா புளிமா புளிமா.

தானந் தனனா தனனா, தனனா தனனா தனனா.

**தேவென் குகவே ணினையோர் செயலா லழன்மீ றிடுமேல்**
**மாவின் பமுதார் கலிபோல் வளைபா வனையே புரிவார்**
**வீவின் றெழுசீ தளமே மிகுமே லழல்போ னினைவார்**
**யாவுந் தெரிவே லவனால் யமனூ றுவெல்யோ குளரே. 64**

முற்றறிவுப் பெருமை உடைய வேற்பெருமானின் அருளால் யமனால் நேரும் இறப்பை வென்று திகழக் கூடிய யோக நெறியில் நிற்போர், இறைவனாகிய குகவேளையே இடையறாது தியானிக்கும் போது உடலில் வெப்பம் மிகுதிப்படுமானால் பேரின்ப அமுத

தாரைகள் கடல்போன்று தம்மைச் சூழ்ந்திருப்பதாகப் பாவனை செய்து வெப்பத்தைத் தணித்துக் கொள்வார்கள்; சற்றேனும் குறையாமல் சீதளம் (குளிர்மை) உடலில் மிகுமானால் தம்மை அக்னி சூழ்ந்திருப்பதாகப் பாவனை செய்து, அந்தக் குளிரால் நேரும் நடுக்கத்திலிருந்து நீங்கி நிற்பார்கள்.

எழுசீர்க்கழிநெடிலடியான்வருவன.

கூவிளங்காய் கூவிளங்காய் கூவிளங்காய் கூவிளங்காய்
கூவிளங்காய் கூவிளங்காய் கூவிளம்.

தானதன தத்தனன தானதன தத்தனன
தானதன தத்தனன தானனா.

(இதுமுதலிரண்டும், அஃடோத்தரசதாக்கரம்)

மூவிதம லத்துளொரு மூலமல மற்றுவிடின்
மூடவொர்ம றைப்பிலைபொ னாடுவாழ்
தேவரும்வ ழுத்திடுவர் மூவரும தித்திடுவர்
சீவனமு தத்திருவு மேவுமேல்
வீவொடுபி றப்புமிலை யேயெனும்வி திப்படிசெய்
மேதையரு ளத்தொளிர்கு கேசனே
தாவறவெ னக்குணனி கூடிடுநி னைத்தகதி
சார்தனிஜ மற்புடைய தாசரே. 65

செவ்வேள் பரமனிடம் அன்பு கொண்டுள்ள அடியார்களே! ஆணவம், கன்மம், மாயை எனும் மூன்று தளைகளுள் மூலமலம் எனப்படும் ஆணவம் நீங்கினால், ஆன்ம அறிவை மறைக்கக் கூடியதாக வேறொரு மலம் இல்லை; ஆன்மா சுயம்பிரகாசமாக ஒளிரும்; பொன்னுலகில் வாழும் தேவர்களும், மூலமலம் நீங்கப்பெற்றுள்ள அன்பரைப் போற்றுவார்கள்; பிரம்மன், விஷ்ணு, ருத்திரன் எனும் மூவரும் மதித்து நிற்பர்; ஆன்மா அமுதமயமான பேரின்பச் செல்வத்தைப் பெற்றுச் சிறக்கும்; இனி வரக்கூடிய பிறப்பும் இறப்பும் அற்றுப் போகும். இவ்வாறு ஆகமம் கூறும் நியதிப்படியே தம்மை நன்னெறிப்படுத்திக்கொள்ளும் ஞானியர்களின் உள்ளத்தே ஒளிரும் குகேசன், ஒரு தடையும் இன்றி எனக்குள்ளே எழுந்தருளி என்னுடன் கலந்து கொள்வான். நான் விழையும் பெருநிலையை அடைதல் உறுதி.

1,3,5 ஆம் சீர்கள் : புளிமாங்காய்.

தனதான தத்தனன தனதான தத்தனன
தனதான தத்தனன தானனா.

சிவயோக நிட்டைபுரி பொழுதீனர் பிச்சரெரி
திணிதோளு டைக்குறள்க ளாலுமே
கவரூறு கிட்டிடினு மசையாதி ருத்தலுமெய்
கலையார்ப டைப்புணலு மாழையால்
எவரோதி கழ்ச்சிமொழி களையேபொ றுத்திடலு
மெதிரூழ்ச கித்திடலு மேசதா
தவமாக வுற்றவர்கள் பெறுபேறெ னக்கருடி
தமியேனி னைப்புளகு கேசனே. 66

எனது இடையறாத சிந்தனைக்குப் பொருந்தியுள்ள குகேசப்பெருமானே! சிவயோக நெறியில் நின்று நிட்டை சாதிக்கும் போது, இழிந்தோர்களாலும் பித்தர்களாலும், கோபித்துவரும் திணிந்த தோள்களுடைய குறட்பேய்களாலும் பல்வேறு இடையூறுகள் ஏற்பட்டாலும் தமது உறுதிநிலையில் மாறாது இருத்தலும், சாத்துவிகமான உணவு வகைகளையே புசித்தலும், அறிவின்மையால் ஏனையோர் கூறும் இகழ்ச்சியுரைகளை அன்போடு சகித்துக் கொள்ளுதலும், ஊழ்வினையால் இனி நேரக்கூடிய இன்பதுன்பங்களைப் பொறுமையோடு ஏற்றுக் கொள்ளுதலும் ஆகிய இத்தகைய நியமங்களையே தவமாகக் கொண்டு வாழும் ஞானியர் பெறக்கூடிய உயர்ந்த பேறுகள் அனைத்தையும் எனக்கு வழங்கி அருள்வாய்.

இவ்விரண்டு செய்யுளு மடியொன்றற்கு நெடிலுங் குறிலுமளவொத்த விருபத்தேழெழுத்தைப் பெற்றமையின் அளவியற்றாண்டகமாம். இவ்வா றிருபத்தேழெழுத்தின் மிகுத்து வருமடியுடைச் செய்யுள்களு மத்தாண்டகமாம். ஈண்டு வந்த குழிப்புடைச் செய்யுள்களொப்பக் குழிப்புப்பெறா தெழுத்தளவிற் சீர்கள் பொருந்தி வருவனவு மத்தாண்டகமேயாம். அங்ஙன மொவ்வாது வருவது அளவழிதாண்டகமாம். 27-எழுத்திலிழிந்த விருபத்தாறெழுத்துடைய வடிமுதல் நான்கெழுத்துடைய வடிவரை வரும் 23-அடிகளில், எவ்வடியிலேனு மளவாக நான்கு கொண்டுமுடியுஞ் செய்யுளை : அளவியற்சந்த மெனவும், அங்ஙன மளவொவ்வாது முடிவதை : அளவழிசந்தமெனவும் வித்தகர் விளம்புப என்க.

66. மாழை = அறிவின்மை; நிகண்டுகள் காண்க.

புளிமாங்காய் தேமா புளிமாங்காய் தேமா
புளிமாங்காய் தேமா புளிமா

**வினையென்றி யம்பு பவசங்கம் யாவும் விரைவாயொ ழிந்து சுகவாழ்**
**வினை யொன்ற வென்று துறவேறி ஞான வெளியாவி ளங்கு நினையே**
**நினைநெஞ்சர் நன்கு புரிராச யோக நிறையும்ப டர்ந்த படியே**
**எனையன்ற றைந்த முடிவின்று தாவெ னிறையேகு மார குருவே.** 67

வினைப்பயன் மயமாகவே விளங்கும் பிறவித் தொடர்ச்சி முழுவதும் விரைவில் நீங்கப்பெற்று, பேரின்பமயமான வாழ்வை அடைவதற்காகத் துறவு மேற்கொண்டு, ஞானப் பெருவெளியாக விரிந்திருக்கும் உன்னையே தியானித்திருக்கும் உள்ளத்தினர் முறைப்படிச் செய்யும் ராசயோகத்திலே நிறைவுடன் நான் ஈடுபட்டிருக்கும் போதே, எனக்கு அன்று நீ.கூறியருளிய முடிவான நிலையை இன்றே தந்தருள்க, என் இறைவனே!, குமாரகுரு எனும் சிறப்புப் பெயருக்கு உரியவனே!

தேமாங்காய் தேமா தேமாங்காய் தேமா தேமாங்காய் தேமா தேமா.
தானான தான தானான தான தானான தான தானா.

**தேவாதி தேவ யோகாதி யோக சேவேற னாதர் சேயே**
**மாவாதர் வாத மேலான மாசில் வாசாம கோச ரேசா**
**பாவாணர் கோவி சாகாம கேசை பாலாப கேச வேலா**
**காவாவெ னாமெ யாயோது தாசர் காசாசை மேவு வாரோ.** 68

“தேவர்களுக்கெல்லாம் சக்ரவர்த்தியே! பல்வேறு யோக நெறிகளிலும் தலைசிறந்ததாகத் திகழும் சிவயோக நெறிக்கு முதல் குருவே! இடப ஊர்தியில் வரும் சிவபெருமானின் குமாரனே! தீராத வாதம், தருக்கம் ஆகியவைகளுக்கெல்லாம் அப்பாற்பட்டுள்ளதும் வாக்குக்கு எட்டாததுமாகிய பெருநிலையில் ஒளிரும் ஈசனே! கவிவாணர்களுக்கெல்லாம் அரசனே! விசாகனே! மகேசுவரியின் பாலனே! ஐசுவரியம், ஞானம் முதலான அறுவகைப் பேறுகளை ஈந்தருளும் இறையே! வேலனே! காத்தருள்” என உண்மையான பக்தியுடன் துதிக்கும் மெய்யன்பர்கள் ஒருபோதேனும் காசின் மீது பற்று வைப்பார்களோ?

---

**67.** பவசங்கம் = பவக்கூட்டம். எனையென்னு மிரண்டனுருபு நான்கனுருபாய் மயங்கிற்று.

புளிமா.

தனன தனன தனன தனன தனன தனன தனனா.

ஒருவ னுருவு முமையி னுருவு மொருதி ருவுரு வினிலே
மருவ நெடிய சரண மயிலின் மலர றுமுக சிவமாய்
முருகு கமழ முருகு திகழ முருக னெனவும் வருவோய்
கருது னடியை யருளெ னடியர் கவலை வலையி னுழையார். 69

"ஒப்பற்ற சிவபெருமானின் வடிவமும் உமையம்பிகையின் வடிவும் தனது ஒரு வடிவத்திலேயே பொருந்திநிற்க, நீண்ட கால்களை உடைய மயிலின்மேல் வீற்றிருக்கும் அறுமுகச் சிவனாகச் சிவமணம் கமழவும் பேரழகு பொலியவும், என்றும் இளையோனாய் முருகன் என எழுந்தருள்வோனே! உன்னையே சிந்திக்கும் எனக்கு உனது திருவடியை ஈந்தருள்" எனத் துதிக்கும் அடியார்கள் ஒருபோதும் துன்பம் எனும் வலைக்குள் சிக்கிக் கொள்ள மாட்டார்கள்,

மா மா மா மா மா மா கூவிளம்.

ஆனை யேறு கோவி லார ருட்கு ழந்தை யாண்மையால்
ஆனை யேறு போலு லாவு மாண வத்தை வென்றுளார்
பூனை போலு லாவு வார்கள் பூவின் மிக்க சூதுடைப்
பூனை போலு லாவி டார்கள் பூவு டம்பு போம்வரை. 70

இடபத்தை ஊர்தியாகக் கொண்டும் மலையை வில்லாகக் கொண்டும் திகழும் சிவபெருமானின் திருக்குழந்தையாகும் செவ்வேளின் அருள்வலத்தால், மதம் கொண்டு திரியும் ஆனையைப்போன்று ஆன்மாவை அலைக்கும் ஆணவம் எனும் மலத்தின் பிணிப்பை நீக்கியுள்ள ஞானியர், இரவிலும் பகலிலும் காணவல்ல பூனையைப் போன்று தளைக்கு உட்பட்ட நிலையிலும் தளைகளிலிருந்து விடுபட்ட நிலையிலும் சிவக்காட்சியையே காண்பார்கள். மிகவும் சூதான எண்ணம் கொண்டு உலகில் திரியும் பூனையைப் போன்று வஞ்சனை முதலான இழிகுணங்களுக்கு இடம் கொடுத்து வாழமாட்டார்கள். ஐம்பூதமயமான இந்த உடம்பு நீங்கும் வரையிலும் அவர்கள் இந்தத் தூய்மை நிலையிலேயே இருப்பார்கள்.

நினைவி லாத நிஜசொ ரூப னார்க்கு முத்தி பந்தமென்
பனவெ நாளு மிலைபொ யாத பசுவின் கண்ண வேயெனா
நினையு நெஞ்சர் பந்தம் வீய நியதி செய்து னாணையால்
அனக வாழ்க்கை சேர்வ ரெனையு மாண்ம யூர தேவனே. 71

எளியேனையும் ஆட்கொள்ளும் மயூரநாதப் பெருமானே! (மயூரம் - மயில்.) தமது தேக நினைவு அறவே நீங்கப்பெற்றுத் தமது ஆன்ம சொரூபத்தை உணர்ந்துள்ள ஞானியர்க்கு, உண்மையில் முத்தி என்பதும் பந்தம் என்பதும் இல்லை. இந்த முத்தியும் பந்தமும் மும்மலப் பிணிப்புக்கு ஆட்பட்டுள்ள ஆன்மாவின் கண்ணேயே உள்ளன என உணர்ந்து உன்னையே தியானிக்கும் உள்ளம் கொண்டவர்கள், தமது பந்தங்களெல்லாம் விலகுமாறு முறையான செயல்களை மேற்கொண்டு, உனது கட்டளையால் தூய்மையே வடிவான சிவமயமான வாழ்க்கையை அடைந்து நிற்பார்கள்.

70, 71-ம் விருத்தங்களைக் காய் காய் காய் கூவிளமெனப் பிரிக்கின், அளவடிக் கலிவிருத்தங்களுமாம்.

விளம் மா விளம் மா விளம் விளம் மா.

உலகினி லுளபஃ றொழில்வழி யேயு
முயரதி சயமனைத் தினுக்கும்
பலமலி குருவின் வழிவரு மமல
பரமவித் தைபெரிதெ னாவோர்
நலமுளர் குருவின் வழியதைக் கொளவே
நவையறு வினைபல புரிவார்
தலமிசை யறியா ரெளிதென நினைவார்
தமியனுக் கருள்சிவ குருவே. 72

எளியேனுக்கு எளிவந்து அருள்புரியும் சிவகுருவே! இவ்வுலகில் பலவகைகளிலும் செய்யப்படும் செயல்களின் விளைவால் நேரும் உயரிய அதிசயங்கள் பலவற்றுள்ளும், அருளாற்றல் மிகுந்த குருவின் அருள்வழியே பெறக்கூடிய, குற்றமற்ற மேலான ஞானோபதேசமே மிகப்பெரிய அதிசயமாகும். இதனை உணர்ந்து அந்த அதிசய விளைவான ஞானோபதேசத்தைக் குருவின் வழியே பெறுவதற்காக, நல்லுணர்வுடையோர் குற்றமற்ற புண்ணியச் செயல்கள் பலவற்றையும் செய்வார்கள். நல்லுணர்வில்லா

அறிவிலிகள், ஞானப்பேறு பெறுதல் மிகவும் எளியதே எனக் கருதிக் கொள்வார்கள்.

எக்குரு வினையுஞ் சிவமெனத் தாழ்த
லேசறு சிவகுரு வினுக்கே
தக்கவந் தனமாத் தழைக்குமென் றறியார்
சாத்திரத் திருந்ததைப் பிடித்தே
மிக்கவும் பழகி வெறுங்கைய ராவர்
மிகைதபு குருமொழி நிற்போர்
விக்கின மிலராப் பயனடை வாரெம்
மெய்யருட் *கொடைமடக் குகனே. 73

அடியார்களாகிய எங்களுக்கு வாய்த்துள்ள மெய்ம்மையான தெய்வமே! அருள்வழங்குவதில் கொடைமடம் கொண்டுள்ள குகப்பெருமானே! குருவாக வாய்த்துள்ள எவரையும் சிவபெருமானாகவே கருதி வணங்கினால், அந்த வணக்கம் சிவகுருவாகிய செவ்வேள் பரமனுக்குச் செய்யும் வணக்கமாகவே செழித்துவிளங்கும் என்னும் உண்மையை அறியாதவர்கள், நூல்களில் கூறப்பட்டுள்ள ஒருசில வழிமுறைகளைத் தாமாகவே கடைப்பிடித்து, அவற்றிலேயே நெடுங்காலம் ஈடுபட்டு இறுதியில் பயனொன்றும் கா ணாமல் வெற்றுக் கைகளை உடையவராகவே ஆவார்கள். தமது வினைப்பயன்களை அழிக்கும் குரு உபதேசித்த வழியில் நிற்போர் இடையூறுகளும் தடைகளும் இல்லாதவர்களாகி உறுதிப்பயனை அடைவார்கள்.

***[கொடைமடம் - அடியார் வேண்டிய அளவுக்குக் கொடுக்காமல், வேண்டியதற்கும் மேலே அளவின்றி வழங்கும் குணம் (உரையாசிரியர்)]**

யாவரு மறிந்தே வாழ்ந்திடு நிமித்தம்
யாவையுந் தெரியரன் சீட
பாவம தடைந்தே நினதெதிர் நின்ற
பாங்கினை யினிதுண ராதார்
ஆவலி னீன்றோர் வளர்த்தவ ரினுமே
லருட்குரு வெனவறி வாரோ
நாவலர் புகழ்நன் னறைமலர்ப் பாதா
நான்பணி யொருகுரு மணியே. 74

நாநலம் மிகுந்த பாவாணர்கள் புகழ்ந்து போற்றும் நறுமணம் மிக்க தாமரை போன்ற திருவடிகளை உடையவனே! எளியேன் வணங்கும் ஒப்பற்ற குருமணியே! அனைவரும் உண்மை இது என உணர்ந்து வாழவேண்டும் என்பதற்காகவே, அனைத்தையும் ஒருசேர அறியவல்ல முற்றறிவு உடைய சிவபெருமான் நினது திருமுன் சிஷ்யபாவம் கொண்டு நின்று நினது குருத்துவத்தைப் புலப்படுத்தி நின்றதன் நோக்கத்தை நன்கு உணராதவர்கள், பெற்றோர்கள், வளர்ப்பவர்கள் முதலான அனைவரைக் காட்டிலும் அருட்குரு மேம்பட்டவரே என்பதை அறிவார்களோ?

தங்குரு தமக்கிங் கெதுகுறை செயினுஞ்
சழக்கனென் றிகழவொர் ஞாயம்
எங்கணு மிலைதங் குருவினை மதியா
திருப்பவர் புரிதவ மவமாய்ப்
பொங்கழ னரகு மனுபவித் தலைவார்
பொறியிலர்க் கோதிய குருவுஞ்
சங்கடப் படுமே யெனக்கருள் புரியுந்
தனியிளம் பூரண குருவே. 75

எளியேனுக்கு அருள்புரியும் தன்னிகரற்ற இளம்பூரணப் பெருமானாகிய குருவே! தமக்கு வாய்த்த குரு தவறு செய்வதுபோல் தோன்றினாலும் அந்தக் குரு ஒரு வஞ்சகன் என இழித்துக் கூறுவதற்கு இடம் சிறிதும் இல்லை. தமது குருவை மதிக்காதவர்கள் செய்யும் தவச் செயலும் வீணாகும்; அவர்கள் மேன்மேலும் அதிகரிக்கும் நரக வேதனைகளையே அனுபவித்து பிறப்பு இறப்பு எனும் சுழற்சியில் அலைவார்கள். அவர்களுக்கு உபதேசம் செய்த குருவும் மனவருத்தங் கொள்வார்.

மந்திரங் கருக்கள் பேய்சில யோக
வழிகளிற் சித்திக ளுண்டாம்
தந்திர பமன ரும்பல புரிந்தார்
தரணியி லவையரு ளாமோ
சிந்தனை குறைந்த திருவினர் வாக்கே
செய்திடு மருள்விளை யாடல்
அந்தமெய் வலியே யறிவென வுணர்வா
ரறுமுக நினைப்பணி வோரே. 76

மந்திரம், கருக்கள் எனப்படும் சித்த குளிகை வகைகள், பேய் வழிபாடு, யோகம் முதலானவற்றால் சில சித்திகள் உண்டாகும். கீழான சித்திகளைப் பெற வழிகாட்டும் வாமமார்க்க நூல்களைப் பயின்றோரும் பல சித்திகளைச் செய்தனர். உலகில் அவையெல்லாம் இறையருட் செயல்களாகக் கருதப்படுமோ? உலக சிந்தனை வெகுவாகக் குறைந்து தெய்வ சிந்தனை மிகுந்துள்ள அருட்செல்வம் உடைய ஞானியரின் திருவார்த்தைகளே அருள்விளையாடல்களைச் செய்யவல்லவை. அத்தகைய மெய்யான அருளாற்றலைத் தரவல்ல அறிவே மெய்யறிவு என உணர்வோர் அனைவரும், அறுமுகனே! உன்னையே பணிந்து நிற்பார்கள்.

மாந்தரை மயக்கு மாசையின் மீக்கொண்
    மனத்தினர் செயல்பல நாளுங்
காந்தனல் கொடுபுக் கிடங்கொளுத் திடுவோன்
    கருத்தழிந் தொருபொழு ததிலே
போந்திற முறழு மேயென வுணர்வோர்
    புறநெறி போந்துழல் வாரோ
சாந்தநின் னறிவே தலைப்படு பெரியோர்
    தவப்பொரு ளேகுக தேவே. 77

உலக மக்களை மயக்கித் தம்வசப்படுத்தும் ஆசையை மிகுதியாகக் கொண்டுள்ள மனம் உடையோரின் செயல்கள், பல நாள்களாகப் பெருந்தழல் கொண்டு வீட்டைக் கொளுத்தும் செயலுடைய ஒருவன், கொளுத்திய வீட்டுக்குள்ளேயே ஒருசமயம் புகுந்து நிற்றலை ஒக்கும். இவ்வாறு உணரவல்லோர், உனது அருளுக்குப் புறம்பாக உள்ள வழியில் சென்று வருத்தம் கொள்வார்களோ? சாந்தம் எனும் தெய்வநிலையில் திகழ்வோய்! நின்னைப் பற்றிய முழுமையான ஞானத்தைப் பெற்றுள்ள பெரியோர்களின் தவத்திற்கு உரிய கடவுளே! குகதேவனே!

தன்மதி கெடுத்துப் பிறப்பிறப் பழுத்துந்
    தனக்குள வாணவ மாயை
கன்மமிம் மூன்று மறுமெனிற் சிறிதுங்
    களங்கமில் பொருளெனத் தன்னைச்
சின்மய மாய்க்காண் ஞானியை யினிதா
    டேவநின் னடிதொழு நானுந்
தன்மய மாகத் தயவுசெய் யாயோ
    சரவண பவமுரு கோனே. 78

தனது அறிவை மறைத்துப் பிறப்பிலும் இறப்பிலும் அமிழ்த்தும் ஆற்றல் வாய்ந்தனவாகத் தனக்குள்ளே திகழும் ஆணவம், மாயை, கன்மம் எனும் மூன்றும் நீங்கி நிற்குமானால், களங்கம் அணுவளவும் இல்லாத சுத்தவத்துவாகத் தன்னை ஞானமயமாகவே காணும் ஞானியை இனிதாக ஆட்கொள்ளும் தேவனே! சரவணபவனே! முருகோனே! நினது திருவடிகளைத் தொழும் அடியேனும், மும்மலம் நீங்கப் பெற்று ஞானமயமாக விளங்கக் கருணை பாலிக்க மாட்டாயோ?

தனதன தானா தனதன தானா தனதன தானன தானா.

(ஒற்றிலாச் செய்யுள்.)

சரவண சாதா சசிமக ணாதா சததள வாரிச பாதா
சிரவண ரீசா குறமக ணேசா சிவபத தாரக தேவா
அரவண வோரா கமுளவி ராசா வருளொரு ஞானவி னோதா
கரவண வாமே வருகென வேநீ கருணையி னாலழை யாயே. 79

“சரவணப் பொய்கையில் தோன்றியவனே! தெய்வயானையின் கணவனே! நூற்றிதழ்த் தாமரை போன்ற பாதங்களை உடையவனே! ஞானப்பொருளை உபதேசமாகக் கேட்கும் சீடர்களுக்கு வாய்த்துள்ள குருவே! வள்ளிநாயகியிடம் காதல்கொள்பவனே! சிவநிலைக்கு உரியவனே! பிரணவ நாயகனே! பாம்புகள் பொருந்தியுள்ள திருமேனியை உடைய தெய்வ அரசனான சிவபெருமானால் அருளப்பெற்றுள்ள ஞானமயமான அற்புதத் தோற்றம் உடையவனே! நீ மறையாது வெளித்தோன்றி அடியேனை அன்புடன் வருக என்று அழைத்தருள் புரிவாயாக.

தேமா கூவிளம் தேமா கூவிளம் தேமா கூவிளம் கூவிளம்.

பெத்த நீத்துயிர் முத்தி நாடுயர் பெற்றி யோரென வேயிருந்
தித்த ராதல மூட ராசைகொ ளீன போகநு கர்ந்துசாம்
பித்த ரங்ஙன மூழி தென்பபி ணக்கி லாரிது சொல்வரோ
அத்த னேயயி லத்த னேயெனை யாள னின்கட னேயரோ. 80

ஆணவம் முதலான மூன்று தளைகளிலிருந்தும் விடுபட்டு, முத்தியை அடைய விரும்பும் விவேகம் மிக்க பெரியோர் போலவே

இருந்துகொண்டு, இவ்வுலகில் அறிவற்றவர்களால் இச்சிக்கப்படும் இழிவான போகங்களையே அனுபவித்து, இறுதியில் ஒன்றும் பெறாமல் இறந்துவிடும் பித்தர்கள் "இவ்வாறெல்லாம் இருந்தது ஊழ்வினைப் பயனே" என விதியின்மேல் பழியைப் போடுவார்கள். மாறுபாடற்ற உறுதிப்பொருளாகிய சிவஞானம் கைவரப் பெற்றோர் இவ்வாறெல்லாம் கூற மாட்டார்கள். என் தலைவனே! வேற்படை நாயகனே! என்னை ஆட்கொண்டு அருளல் உனக்குரிய கடமையே அன்றோ!

மூன்றாஞ்சீர்: புளிமா.

தன்னின் மேலறி பவன்ம காகதி சாரும் வேளையி லுள்ளவா
பின்ன மின்றமர் வுறினு டம்புயிர் போல வின்புபி றங்குவான்
அன்ன வேளையில் விலகின் வேறென வாவ னாகலி னீயெனை
நன்னர் மீக்கொளு நிலையில் வையொரு நைவி லாவயி லையனே. 81

தனக்கு மேம்பட்டவனாகிய இறைவனின் சொரூபத்தை அறியும் நெறியில் நிற்பவன் பெரிய பேற்றினை அடையும்பொழுது, தனது நெறியிலிருந்து மாறாமல் உறுதியாகத் தனது நிலையிலேயே நிலைத்திருந்தாலும் தனது உயிருக்கு உடம்பு இருப்பது போன்று தான் இறைவனாகிய உயிருக்கு உடம்பாக விளங்கி நிற்பான். பேறு பெறும் போது நெறியிலிருந்து விலகிவிட்டால் அவனால் அத்துவிதப் பேற்றை அடைய இயலாது; அந்த உயர்நிலைக்கு அயலாகவே விளங்குவான். எனவே, என்றும் அழியாமல் நிலைத்திருக்கும் வேற்படை நாயகனே! என்னை நீ அத்துவிதம் உற்று விளங்கும் மேம்பட்ட நிலையில் வைத்தருள்வாயாக.

புளிமா கூவிளம் புளிமா கூவிளம் புளிமா கூவிளம் கூவிளம்

தனன தத்தன தனன தத்தன, தனன தத்தன தானனா.

இருள றைப்பொரு ளறியு மட்டுமொ ரெழில்வி ளக்கது தேவைபோல்
அருண்மு தற்பொரு ளினைய டுத்திடு மளவு நிட்டைய வாவுவோர்
மருவு முப்பொருண் மறைய நிற்பது மலர்சி வத்துவ மாமெனா
ஒருமு கப்படு வலியை யெற்கரு ளொளிய யிற்கும ரேசனே. 82

ஒளிப்பொருள்களுக்கெல்லாம் ஒளிவழங்கும் வேற்படை ஏந்தும் குமரப் பெருமானே! இருட்டறையில் உள்ள ஒரு

பொருளைக் கண்டுகொள்ளும் வரையில் ஒரு விளக்கின் உதவி தேவைப்படுவது போன்று அருள்மயமான இறைவனைத் தரிசிக்கும் வரையில் நிட்டையின் உதவி தேவைப்படும் என்று அந்த நிட்டையை மேற்கொள்வோர், ஆணவம் கன்மம் மாயை ஆகிய மூன்று இருளும் நீங்கிநிற்க அப்பொழுது சிவநிலை மலர்ச்சி பெற்றுக் காட்சி அளிக்கும் என்னும் நிலை உள்ளதால் ஒருமுகப்பட்ட ஏகாக்ர நிட்டை நிலையை எனக்கு வழங்கி அருள்.

சீர்வாய்பாடு பேதிக்கினும், ஓசைகெடாது நடப்பது.

உருவ மானவொர் குருவி னாலுணர் வுறுதல் போலரு ளுருவொடே
வருகு கேசனை வழிப டாதர மார்க்க மேயதி சீக்கிரம்
அருளு மேனல மதுவ னோனுய ரருவ மாநிலை யாமெனுந்
தெருளர் நாயக பிரிவுறாவருள் செய்தி நானினி துய்யவே. 83

கண்ணுக்கெதிரே வடிவம் கொண்டு தோன்றும் குருவை வழிபடும் செயலானது சீடனுக்கு ஞானப்பேறாகிய நற்பயனை அளிப்பது போன்று ஒரு குறிப்பிட்ட அருள்வடிவம் தாங்கி வரும் குகேசப் பெருமானை வழிபடும் அன்புநெறியானது, வெகுவிரைவில் மேலான நற்பயனை அளிக்கும். உண்மையில் அந்த அருள்வடிவம் அவனது அருவநிலையாகிய நிஷ்கள நிலையைச் சார்ந்ததே ஆகும் எனத் தெளிவாக உணரவல்ல ஞானியர்க்குத் தலைவனே! நான் நன்கு உய்தி அடையும் பொருட்டு, நீங்காத அருட்பேற்றை வழங்கி அருள்!

தேமா கருவிளம் கருவிளம் புளிமா புளிமா புளிமா புளிமாங்காய்.

**தூமா** பிரணவ நிலையுரு வருவாச் சுடரோர் சிவலிங் கமும்வீயாப்
பூமா ணயிலிறை யெனவழி படலாம் பொழிலார் மதுரா புரியாடல்
ஆமா றொருமன னசைஇய பொழுதே யயிலோ னவணஞ் செயலாலே
ஓமா யிடுதலி னெனவுண ருணர்வோ ருனையே விழைவார் குகதேவே. 84

குகப்பெருமானே! தூய்மையும் மகிமையும் மிகுந்த பிரணவத்தின் வடிவமே, ஸகளநிட்களம் எனப்படும் அருவுரு வடிவத்தில் விளங்கும் சிவலிங்கம் ஆகும். இந்தச் சிவலிங்கமும், நித்திய வத்துவானவனும் பொலிவும் மாண்பும் மிக்கவனுமான வேல் இறைவனின் வடிவமே எனக் கருதி அதனை வழிபடலாம். மதுரையம்பதியில் சிவபெருமான் நிகழ்த்திய அறுபத்து நான்கு

திருவிளையாடல்களையும், சித்திரசேனன் என்னும் மன்னன் விரும்பிய நேரத்திலேயே வேல் இறைவன் நிகழ்த்திக் காட்டி அருளியதால் அவனும் பிரணவ ரூபமாகத் திகழ்பவனே ஆவன் என உணரும் ஞானியர் உன்னையே விரும்பித் துதிப்பார்கள்.

மா விளம் மா விளம் மா விளம் காய்.

சகமுஞ் சரவுயிர் பரமுந் தன்னளி சால்சன் னிதியென வேசததம்
திகழுந் திருவுள மொன்றுண் டெனவுணர் தீரர் பவஞ்செய வேதுணியார்
அகமும் புறணியு முணரா விழுதைக ளயருந் துரிதம பாரமெனப்
புகழுன் கருணையை மறவே னல்லருள் புரிமெய்ஞ் ஞானஷ டாநநனே. 85

ஞானமயமான அறுமுகப்பரமனே! உலகம், உயிர், இறை எனும் மூன்றும் தனது சன்னிதியிலேயே திகழுமாறு விளங்கக் கூடிய ஞானவெளி ஒன்று உண்டு என உணரும் உறுதிப்பாடு உடையவர்கள் ஒருபோதும் பாவ காரியம் செய்ய முற்படார்கள். அகம் இது புறம் இது என உணர இயலாத அறிவிலிகளே, அளவற்ற பாவ காரியங்களைச் செய்வார்கள். இந்த உண்மையை எளியேன் உணர்ந்துள்ளதால், புகழ்க்குரிய உனது கருணையை எப்பொழுதும் மறக்கமாட்டேன். எனக்கு நல்லருள் புரிக.

தனனத் தனதன தனனத் தனதன, தனனத் தனதன தனதானா.

[ சதாக்கரம் (நூறெழுத்து.)]

**அ**றிவிற் பெரியவ னழகிற் பெரியவ னறனிற் பெரியவ னரசாண்மா
நெறியிற் பெரியவ னருளிற் பெரியவ னிலையிற் பெரியவ னிஜமாமோர்
செறிவிற் பெரியவ னிணையற் றுளபல செயலிற் பெரியவன் முருகோனே
பொறிபற் றவவனை நினையற் புடையவர் புகழெற் கினியவ ரெனலாமே.86

அறிவில் தன்னிகர் அற்றவன்; அழகில் இணையற்றவன்; அறநெறியை நிலைநாட்டுவதில் இணையற்றவன்; அரசாளும் நெறியில் இணையற்றவன்; அருளில் இணையற்றவன்; இறை நிலையில் இணையற்றவன்; இயல்பாகவே எங்கும் எதிலும் வியாபிப்பதில் இணையற்றவன்; தன்னிகரற்ற பராக்கிரமங்களைச் செய்வதில் இணையற்றவன் - என இவ்வாறு திகழ்பவன் முருகப் பெருமான் ஒருவனே. தன் உணர்வு முழுவதும் அவனையே பற்றி

85. இழுதைகள் = அறிவிலார்கள். துரிதம் = பாவம்; நிகண்டுகள் காண்க.

இருக்குமாறு தியானிக்கும் அன்பு உடையவர்கள் எல்லோரும், அவனைப் புகழும் எனக்கு இனியவர்களாக ஆவார்கள்.

தனனா தனதன தனனா தனதன, தனனா தனதன தனதானா.

[சதாக்கரம். (ஒற்றிலாநூறெழுத்து)]

பிரமா வுணரிறை மறைமா துணரிறை பெரியா ருணரிறை துளவேறோ
ருரமா லுணரிறை மகமா லுணரிறை யுரியோ ருணரிறை யளியாலே
கரமா வுணரிறை கடியா ருணரிறை கலையா ருணரிறை பெருமாயா
மரமா வகிரிறை யெனுநீ ளயிலனை மதியா தவரச டொழியாரே. 87

நான்முகனால் தியானிக்கப்படும் இறைவன்; வேத மங்கையால் தியானிக்கப்படும் இறைவன்; பெரியோர்களால் தியானிக்கப்படும் இறைவன்; துளசிமாலையை மார்பில் அணிந்துள்ள திருமாலால் தியானிக்கப்படும் இறைவன்; இந்திரனால் தியானிக்கப்படும் இறைவன்; அருட்பேற்றுக்கு உரிய அனைவராலும் தியானிக்கப் படும் இறைவன்; அன்பால் தேவேந்திரனது யானையாலும் நினைக்கப்படும் இறைவன்; ஐம்புலன்களையும் அடக்கவல்ல முனிவர்களால் தியானிக்கப்படும் இறைவன்; வேதம் முதலான நூல்களில் வல்லோரால் தியானிக்கப்படும் இறைவன்; மாயையே வடிவான பெரிய மாமரமாகி நின்ற சூரபன்மனைப் பிளந்த இறையவன் - இவ்வாறு பெருநிலையில் திகழும் வேல் நாயகனை உணராதவர்கள் அறியாமையிலிருந்து ஒருபோதும் விடுபட மாட்டார்கள்.

தனன தானன தனன தானன தனன தானன தானதானா.

( இது முதலிரண்டுவிருத்தமும், ஒற்றிலாச்செய்யுள்)

குமர தாரக பரம போதக குழக ஞானஷ டாநநாகா
சமர தானவ பகைவ பாவக சருவ காரண காரணாகா
அமர ராசறு பொருந காவயி லமல பூரண போதுமீதே
அமர ணாவளி யெனுந லோரிட ரடைவ ரோவுயி ரேகுநாளே. 88

87. கரமா = யானை; ஸ்ரீசுப்பிரமணிய வியாசத்தில் வரலாறுகளோர்க.

"குமரப்பெருமானே! பிரணவ வடிவனே! மிகவும் மேம் பட்டுள்ள ஞான குருவே! இளநலம் மிக்கவனே! ஞானவடிவே! அறுமுகப் பரமனே! காத்தருள். போரிட்டுவரும் அசுரர்களின் பகைவனே! நெற்றிக்கண் நெருப்பில் உதித்தவனே! அனைத்திற்கும் காரணமாக உள்ளதற்கும் காரணமாக உள்ளவனே (மூலகாரணனே) காத்தருள். தேவர்களின் துன்பத்தைப் போக்குவதற்காகப் போரிட்டவனே! காத்தருள். வேற்படை ஏந்தியுள்ள தூயோனே! எங்கும் நிறைந்திருப்போனே! அடியார்களின் உள்ளமாகிய தாமரை மேல் வீற்றிருக்கும் தலைவனே! காத்தருள்" - என இவ்வாறு போற்றும் நல்லோர்கள் தாம் உயிரோடு இருக்கும் அளவும் இவ்வுலகில் துன்பம் அடைவார்களோ? அவர்களுக்குத் துன்பம் என்பதே இருக்காது.

ஏழாஞ்சீர்: தனனதானா.

**தொடலை சூடுர வழக வாவறு சுமுக வாவயி லரசுவாகா**
**விடலை வாசிகி யிறைவ வாநிறை விமல வாசிவ குமரவாகா**
**குடிலை வாகுற மகள வாவிடு கொழுந வாவென நவிலுநாவோ**
**ரடலை யேசெறி சுடலை கூடினு மணுவு மாகுல மடைகிலாரே.** 89

"நறுமணமாலை சூடியுள்ள திருமார்புடைய அழகனே! வந்தருள். பொலிவுமிக்க ஆறு திருமுகங்களை உடையவனே! வருக. வேல் அரசனே! வருக; வந்து காத்தருள்க. இளநலம் மிகுந்தவனே! வருக; மயில் இறைவனே! வருக. எங்கும் நிறைந்துள்ள தூயோனே! வருக. சிவகுமாரனே! வருக; காத்தருள்க. பிரணவ வடிவனே! வருக. வள்ளிநாயகி காதல்கொண்டிருக்கும் கணவனே! வருக" - என இவ்வாறு துதிப்போர், கொலையோடு ஒத்த கொடுமை செறிந்துள்ள சுடலைக்குச் செல்லும் தறுவாயிலும் கூட, அணுவளவும் மனக்கலக்கத்துக்கு ஆட்படமாட்டார்கள்.

**88, 89-ம் விருத்தங்களி னடியீற்றுச் சீர்களை இரண்டு மாஞ்சீர்களாகப் பிரிக்கின் ; எண்சீர்க் கழிநெடிலடிகளுமாம்.**

---

**89. தொடலை = மாலை; "தொடலைதாமந் தொங்க றெரியல்" என்னுஞ் சே-திவாகரம்.**

கருவிளம் கூவிளம் கருவிளம் கூவிளம்
கருவிளம் தேமா புளிமாங்காய்.

கொடியப வங்கெட வுயர்துற வண்டிநல் குரவுளர் போலே பெரியோர்தாம்
இடுவவ ணிந்தடர் சடைமுடி முண்டித மெனமறை யேகூ றெதிலேனும்
கடிதியில் விஞ்சுபு வெறியுண லும்புணர் தனமுளர் மண்பொன் மறமாகுஞ்
சுடுவச னங்களு மிலரிறை யென்சிறு துதிமுத லாமோர் முருகோனே. 90

கொடிதான பிறவியை ஒழிப்பதற்கு உயர்நெறியாகிய துறவறத்தைச் சார்ந்து, அற உணர்வுமிக்கோர் கொடுப்பதை வறியோர் போல் ஏற்றுக் கொண்டு சடைமுடி புனைந்தோ, மழித்துக் கொண்டோ சஞ்சரிக்க வேண்டும் என வேதம் கூறும் நெறிமுறை களில் ஏதாவது ஒன்றைக் கடைப்பிடித்துத் தீவிரமாகத் துறவறத்தில் நின்று, கள்ளுண்ணல், மாதரோடு கூடுதல், மண்ணாசை கொள்ளல், பொன்னாசை கொள்ளல், கொடிதான கடும்சொற்களைக் கூறல் முதலான குற்றங்களுக்கு இடம்கொடுக்காமல் வாழும் முனிவர்களின் கடவுள் யார் எனில், எனது சிறிய துதிப்பாட்டுக்களுக்கு முதல்வனாக விளங்கும் முருகப் பெருமானே ஆவன்.

கருவிளம் கூவிளம் கூவிளம் கூவிளம்
கருவிளம் கூவிளம் புளிமாங்காய்.

தனதன தந்தன தானன தந்தன, தனதன தந்தன தனதானா.

சிவதவ வங்கமெ னாநவி லஞ்சடை சிரமுறு முண்டித மிலையேல்வீண்
அவமுள சிந்தைய னேழையி வன்கலை யறிவில னென்றுல கினரேசா
அவதிபு ரிந்தறி வானதி றந்தழி வணவிவ ருந்துவ ரதனாலே
சிவதவ வங்கமெ *நாளும்வி ரும்புவர் திருநிறை யுங்குக னடியாரே. 91

சிவதவத்தின் அடையாளம் எனவும் அங்கம் எனவும் கூறப்படும் சடை அல்லது மழித்திருத்தல் என்பதுபோன்ற எதுவும் இல்லையானால், “வீணான சிந்தனை உடையவன் இவன், அறிவிலி இவன்” என்றெல்லாம் உலகினர் ஏசுவர்; அவ்வாறு ஏசுவதாலும் வேறு பல இடையூறுகள் செய்வதாலும் அவர்கள் அறிவிலராகி, அழிவைப் பொருந்திப் பல்வேறு துன்பங்களுக்கு ஆட்படுவர் (ஏனெனில் ஞானியரைப் பழிக்கக் கூடாது என்னும் நியதி இருப்பதால்). ஆகையால் உலகினர் இவ்வாறு பாவத்துக்கு ஆட்படக் கூடாது என்பதற்காகக், குகப்பெருமானின் அடியார்களாகிய

ஞானியர், தங்களுக்கு விருப்பம் இல்லாவிடினும் சிவ தவத்தின் அங்கங்களாகத் திகழும் அனைத்தையும் விரும்பி ஏற்றுக் கொள்வர்.

★ "நாளும்வி" இதிலுள்ள மகரவொற்றை இவ்வியல் 50-ம் விருத்தத்தி லெடுத்துக்காட்டிய விதியாற் களைந்து கூவிளமெனக்கொள்க. இதனானே வல்லின முன்வரப் பெறாத மெல்லின வொற்றுக்களும், மூவினமு முன்வரப்பெறு மிடையின வொற்றுக்களுஞ் சந்தத்தைச் சிதைக்காவென வறிக. முறையே தந்தச் சத்தமும், தன்ன தையச் சத்தங்களுந் தோன்றா விடங்களில் அச்சிதைவின் றெனவாம். வல்லினவொற் றேறி வருவது தத்த, மெல்லின வொற்றேறிவருவது தன்ன, இடையின வொற்றேறிவரு வது தைய, வல்லின முன்வரப்பெற்று மெல்லினவொற் றேறிவருவது தந்த வெனவு மறிக.

கூவிளம் கருவிளம் கருவிளம் கருவிளம் கருவிளம் கருவிளம் தேமா.

[ சதாக்கரம். = நூறெழுத்து. ]

போனதும் வருவதுங் கருதுத றவிர்ந்துகொள்
புசிப்பினுட் கிடைத்ததை மாந்தி
மேனியி லுடுத்துடை யருந்துத லிரண்டையும்
விருப்புள ரளித்திடி னேற்று
நானென தறுநெறி நனிநடந் துளக்கடி
நணுகிய துறவிக ணாடும்
வானவ ரரசென வருமொரு மழவனை
வணங்கடி யவர்க்கிலை மாலே. 92

கடந்த காலத்தில் நடந்தவைகளையும் எதிர்காலத்தில் நேரக்கூடியனவற்றையும் பற்றிச் சிந்தனை செய்வதைத் தவிர்த்துத் துறவறத்துக்கேற்ற உணவுகொள்ளும் போது, ஏதும் இரந்து கேட்காமல் தானாகவே கிடைக்கும் உணவை உண்டு, விரும்பிய அடியார் அளிக்கும் உடை, உணவு முதலியவற்றை அன்புடன் ஏற்று, 'நான்' 'எனது' என நிகழும் அகப்பற்றையும் புறப்பற்றையும் நீக்கவல்ல நன்னெறியில் ஒழுகி, உள்ளத்தைக் கட்டுப்படுத்தி நிட்டையைக் கூடும் துறவிகள் விரும்பும் தேவராசன் எனவரும் ஒப்பற்ற இளம்பூரணனாகிய முருகனை வணங்கும் அடியார்களுக்கு ஒரு போதும் ஞானநிலையிலோ மனோநிலையிலோ மயக்கம் ஏற்படாது.

92. ...கடி = இன்பம்; நிகண்டுகள் காண்க.

கருவிளம்.

தனதன தனதன தனதன தனதன, தனதன தனதன தனந்தனா.

அரிறபு தவநனி வளர்துற வுடைமையி லணிபணி நறுமண மணிந்திடா
துருவிழி மணியொடு தவளநி றவிசத முவகையு டனிதமு மணிந்துமா
பரிவுகெ ழுகுழவி குணமென வுலகினர் பணிவிடை முதலிய புரிந்தபோ
துரியப ரமடைக வெனுநலர் கதியிவ னுமடைய வருள்புரி கடம்பனே. 93

கடம்பமாலை அணிந்துள்ளவனே! குற்றங்களை ஒழிக்கவல்ல தவநெறியில் ஈடுபட்டு விளங்கத் துறவறநெறியில் நிற்போர் ஆபரணங்களையும் நறுமணக் கலவையையும் அணிந்து கொள்ளாமல் ருத்திராட்ச மணி, திருநீறு எனும் இரண்டையும் மகிழ்ச்சியுடன் நாள்தோறும் அணிந்துகொண்டு, "கள்ளம் கபடமற்ற தூய குழந்தைக் குணம் உடையவர் இவர்" என உலகினர் மதித்து, உரிய பணிவிடைகள் முதலியனவற்றைச் செய்தபோது "உரிய மேல்நிலை அடைக" என வாழ்த்தும் நற்குணம் உடையோராகத் திகழ்வர். அத்தகைய உண்மைத் துறவியர் அடையும் நற்கதியை எளியேனும் அடைய அருள்புரிவாயாக.

புளிமா கூவிளங்காய் புளிமா கூவிளங்காய் தேமா கூவிளங்காய் கூவிளம்.
தனன தந்தனன தனன தந்தனன, தான தந்தனன தந்தனா.

பிறவி யென்றுபுகல் பிணியை வென்றுநிலை பேறெ னுஞ்சுகம்வ ழங்குமேல்
நறவி னும்பெரியு நருண்ம ருந்துதனை நாளு முண்டுலகி னிந்தையாம்
மறமெ னும்பெயரை யுடைய பண்டமணு மான முந்தொடுத லின்றுளே
துறுமு தொண்டரடை பலனு றும்படிசெய் சூழெ னெஞ்சிலுள கந்தனே. 94

இடைவிடாது நினைக்கும் எனது உள்ளத்தில் உள்ள கந்தனே! நினது திருவருள், பிறவி எனக் கூறப்படும் பிணியை வென்று, என்றும் நிலைத்திருக்கும் ஆனந்தப்பேற்றை வழங்கவல்லது என்பது உறுதியாக இருக்கும் போது, உனது தேனினும் இனிய அருளாகிய அமுதத்தை நாள்தோறும் உண்டு, இவ்வுலகில் நிந்தைக்குரிய 'பாவம்' எனும் பெயரையுடைய வஸ்து அணுவளவேனும் தம்மை அணுக

93. **விசதம்**=வெள்ளை; வடசொல். இஃதிங்கே திருநீற்றை யுணர்த்துவதாயிற்று.

94. **துறுமல்** = நெருங்கல்; "துறுமலே சடிலத்தோடு துன்னல்" என்பது கூ – நிகண்டு.

வொட்டாமல் உள்ளுக்குள்ளே செறிந்து அடங்கி ஒருமுகப் பட்டிருக்கும் தொண்டர்கள் அடையக் கூடிய பயனை அடியேனும் அடையும்படிச் செய்தருள்க.

விளம் மா மா காய் மா காய் கனி.

ஒன்றொடி ரண்டு மூன்று காலங்கள் பூசைக்
குரியவென லென்கொலெனினோ
நன்றொடு தீது கூடு ஞாலநடை யாளர்
நலமாக நானாதிகள்
ஒன்றுத லருமை செய்யும் பாரணைமுன் னேனு
முடையானை யேத்தலியையும்
என்றதஃ தென்பர் சித்த சுத்திகொடு சேயை
யெக்காலு நாடுபவரே. 95

ஒருகால வழிபாடு, இருகால வழிபாடு, மூன்றுகால வழிபாடு என வழிபாட்டுக்குரிய முறைகள் உண்டு எனக் கூறுதல் எதற்காக எனில், உள்ளத்தூய்மையோடு எப்பொழுதும் முருகனையே தியானிக்கும் நல்லோர்கள் "நன்மையும் தீமையும் சேர்ந்து திகழும் உலக நெறிப்பட்ட வாழ்க்கையில் இருப்பவர்கள் நன்மை அடையும் பொருட்டாக, பலவகைப் பட்டவற்றையும் அரிதாக ஒருங்கு இணைக்கக்கூடிய உணவு கொள்ளல் என்பதற்கு முன்னதாகவாவது, இறைவனை நினைந்து போற்றுதற்கு வழிவகை செய்யும் என்பதற்காகவே அவ்வழிபாட்டு முறைகள்" எனக் கூறுவர்.

பீடுடை யாதி யேழா மாதங்க டோன்று
பினுமுன்னு மெண்கடிகையும்
ஆடியின் றக்கி ணாய னாரம்ப முன்னு
மருமைத்தை யாரம்பமாந்
தோடமி லுத்த ராய ணத்தின்பி னுஞ்சீர்
துதைகின்ற கார்த்திகைநலங்
கூடுமா வணிதி றத்த வைகாசி யென்று
கூறுமதி தோன்றுமுனமும். 96

பெருமைக்குரிய 'விஷு' எனப்படும் சித்திரை, ஐப்பசி எனும் இரண்டு மாதங்களில் மாதப் பிறப்புக்கு முன்னும் பின்னும் 8

நாழிகையும் தக்கிணாயன தொடக்கமாகிய ஆடிமாதம், உத்தராயணகாலத் தொடக்கமாகிய தைமாதம், சிறப்பு மிகுந்த கார்த்திகை மாதம், நலம் மிக்க ஆவணி மாதம், மாசிமாதம், திறல்மிக்க வைகாசி மாதம் ஆகியவைகளில் மாதப்பிறப்புக்கு முன்பு பதினாறு நாழிகையும் புண்ணியகாலம் ஆகும்.

**மார்கழி புரட்டை யானி பங்குனியென் மாதம்**
**வந்தபினு மேழொன்பது**
**சேர்கடி கையுமா தித்த னரவுதொடு வேளை**
**திகழ்கின்ற மதியையரவஞ்**
**சார்வழி நீங்கு வேளை யுங்கோளி லர்த்தோ**
**தயஞ்செம்ம கோதயமுமே**
**ஏர்வளர் புண்ய கால மிக்கால மூழ்கி**
**யிட்டெந்தை யேத்தனலமாம். 97**

*மார்கழி, புரட்டாசி, ஆனி, பங்குனி எனும் மாதங்களில் மாதப்பிறப்புக்கு பின்பு 16 நாழிகையும், சூரியனை, இராகு கேதுவாகிய பாம்பு தொடும் காலமாகிய சூரியகிரகணத்தில், கிரகணத் தொடக்க காலமும், சந்திரனைப் பாம்புதொடும் காலமாம் சந்திரகிரகணத்தில் கிரகணத்தின் பிற்பாதியும், அர்த்தோதயம், மகோதயம் எனப்படும் காலங்களும் புண்ணிய காலங்களாகும். இந்தப் புண்ணிய காலங்களில் புனித நதிகளில் நீராடி எந்தையாகிய முருகனை வழிபடுவது மிகவும் சிறந்ததாகும்.*

*(ஞாயிறு, அமாவாசை, அசுவினி, அவிட்டம், திருவாதிரை, ஆயில்யம் எனும் நான்கு நட்சத்திரங்களில் ஒன்று - இவை சேர்ந்தால் வியதீபாதம்; ஞாயிறு, திருவோணநட்சத்திரம், வியதீபாத யோகம் கூடி வந்தால் அர்தோதயம்; இதுவே திங்கட்கிழமைகளில் நிகழ்ந்தால் மகோதயம். அர்தோதயம் = 100 கோடி சூரியகிரகணம். மகோதயம் = 1000 கோடி சூரியகிரகணம்)*

**இங்குள்ள 96, 97-ஆம் பாட்டுக்கள் : ஒருவினைகொண்டு முடிதலிற் குளகமாம். "குளகம் பலபாட் டொருவினை கொள்ளும்" என்றார் தண்டியாசிரியரும். எனவே, தனிநின்று முடியுஞ்செய்யுண் முத்தக மாமென்க.**

97. ஏழொன்பதுசேர்கடிகை = பதினாறுநாழிகை.

அடியீற்றிற் கனிச்சீர் பெறு மிச்செய்யுள்கள் : அங்ஙனம் "நாவலூரர்" என்பது போன்ற காய்ச்சீரும் பெறும்.

கூவிளம் கூவிளம் கூவிளம் கூவிளங்காய் கருவிளம் தேமா புளிமா.

கார்த்திகை சட்டிவை காசிவி சாகமுநன் கடிதரு தைப்பூ சமுமா
கீர்த்திசெய் பங்குனி யுத்திர மாசறுசுக் கிரனது வாரங் குகுவை
நீத்தெழு நற்சிவ ராத்திரி யுங்குகனை நெடுவழி பாடு புரிவோர்
பூர்த்திசெய் மெய்யறி வுள்ளவர் சன்னிதியிற் புகுதுவர் வீடெய் துவரே. 98

கார்த்திகை மாதத்தில் கிருத்திகை, ஐப்பசி மாதத்தில் கந்த சஷ்டி, வைகாசி மாதத்தில் விசாகம், நன்மையும் சிறப்பும் தரும் தைப்பூசம், பெரும்புகழ் சேர்க்கும் பங்குனி உத்திரம், வெள்ளிக்கிழமை விரத நாள், அமாவாசையின் சேர்க்கை இல்லாமல் மாசி மாதத்தில் வரும் மகா சிவராத்திரி எனும் இந்தப் புண்ணிய காலங்களில் குகப்பெருமானை மிகவும் சிறப்பாக சர்வ உபசாரங்களுடன் வழிபாடு செய்பவர்கள், பரிபூரணமான ஞானநிலையைப் பெற்றவர்களாக ஆவார்கள்; இறுதியில் குகப்பெருமானின் திருச்சன்னிதிக்குச் சென்று சாமீப நிலையை அடைவார்கள்; பின்னர் சாயுச்சிய நிலையை அடைவார்கள்.

சேயைமு னிட்டொரு காலொரு நூவளவே செயுமெத னுக்கு மனம்போ
லேயுத வுங்கட னுள்ளவ னென்றறிவே னிதவுடை யச்சே யினையே
நோயறு மாநுட ரேயத னாலஞரே நுகர்முன மின்பே நுகர்வீ
ராயநல் வத்துக ளாலுமு ளாலுமவற் ககமகிழ் வாமா பணியே. 99

பிறவி எனும் பிணியிலிருந்து விடுபட விரும்பும் மனிதர்களே! சேயவனை முன்னிட்டு ஒரே ஒரு முறை எள்ளளவுக்கு நன்மை செய்தாலும், அவ்வாறு செய்யும் உயிருக்கு அது விழைந்தவாறே அனைத்தையும் வழங்கும் கடமை உள்ளவன் முருகப்பெருமான். ஆதலால் அந்த முருகப்பெருமானையே, நீங்கள் பல்வேறு இடர்களாலும் அலைக்கப்படுவதற்கு முன்னால் உரிய நல்ல பொருள்களாலும், ஈடுபாட்டுடனும் அவனது திருவுள்ளம் மகிழுமாறு வழிபாடு செய்யுங்கள்.

98. குகுவைநீத்தெழுநற் சிவராத்திரி = அமாவாசை சம்பந்தமில்லாத மஹா சிவராத்திரி. குகு = அமாவாசை.

99. நூ = எள். சூடாமணிநிகண்டு காண்க. நூவு என்றனர் பிங்கலந் கண்டுரைகாரர்.

கூவிளங்காய் கூவிளங்காய் கூவிளங்காய் கூவிளங்காய்
கூவிளங்காய் கூவிளங்காய் தேமா.

தந்தனன தந்தனன தந்தனன தந்தனன, தந்தனன தந்தனன தானா.

மண்டுதிரை யென்பதரு ளென்பதில டங்கவது
வண்பதிய டங்கவிரு ளேயீ
பண்டுமல மிஞ்சறிவ டங்கவது தண்கருணை
பம்பிறைய டங்கவரு ளாலே
கண்டவர றிந்தடைசி தம்பரந டஞ்செயொரு
கந்தகுக நின்கழல்கள் பாடோர்
தொண்டினிது தந்தமுறை யென்றனையு மிந்தவுட
றுஞ்சிடுமு னுண்டுகொள வாவே. 100

மிகுந்து செயற்படும் திரோதான சக்தி அருட்சக்தியில் அடங்க, அருட்சக்தி, அருள்வளம் கொண்டுள்ள இறைவனில் அடங்கும்; அறியாமையை மிகுவிக்கும் அனாதியான ஆணவம், சிவஞானத்தில் அடங்க, சிவஞானம் கருணை நிறைந்துள்ள இறைவனிடத்தே நிறைவுறும் என அருளால் உணர்ந்தவர்கள் உண்மை இது என அறிந்து சேரும் சிதம்பரத்தில் நடனம் செய்யும் கந்தப்பெருமானே! குகனே! நினது கழல்களையே பாடும் இனிய தொண்டினை எனக்கு அருளியது போன்றே இந்த உடல் நீங்குவதற்கு முன்னர் என்னை உன்னோடு ஐக்கியப்படுத்திக் கொள்ள எழுந்தருள்வாய்.

தேமாங்கனி கூவிளம் கூவிளம் கூவிளங்காய்
தேமாங்கனி கூவிளம் கூவிளங்காய்.

தாந்தாந்தன தந்தன தந்தன தந்தனனா
தாந்தாந்தன தந்தன தந்தனனா.

[சதாக்கரம். (நூறெழுத்து.)]

தீங்காஞ்செய னன்கற னன்செய னன்குறவே
தேம்பாண்குழ கன்குக னங்குறவே
ளாங்காந்திமி குந்தவு டம்பிடி யன்றவமா
யாண்டூன்றிறை யென்றுபு கன்றவமா

100. மிஞ்சுதல் = மிகுதல். இது "மிஞ்சுதல் விஞ்சுதன் மீமிசை மிக்கது" எனப் பிங்கல நிகண்டிலும் வருவது காண்க.

யோங்கேண்டுய ரென்றறை கின்றபெ ருங்கடலே
யோம்போம்புணை கொண்டுக டந்திடலே
நாங்காண்பல னென்றுது ணிந்தவர் தம்பதியே
நான்சேர்ந்திடு மொண்பதி யென்பதியே. 101

தீமையாகிய செயல்கள் அடியோடு நீங்கவும், அறச்செயல்கள் மிகுந்து விளங்கவும், இனிய பண்களை வீணையில் இசைக்கும் இளையோனும், குகனும், வள்ளிமாதேவி முன் அழகிய குறவர் கோலம் கொண்டு நின்றவனுமான முருகப்பெருமான், ஒளிமிகுந்த வேற்படையை வீண்செயல்களையே செய்துவந்த சூரனை மாய்க்கச் செலுத்திய இறைவனே என்றெல்லாம் புகழ்ந்து, பயனேதுமின்றித் துயரம் மிகுக்கச் செய்யும் துன்பம் எனப்படும் பெருங்கடலை, எவ்வுயிரையும் எவ்வுலகையும் காக்கவல்ல பிரணவம் எனும் தெப்பத்தால் கடந்து முத்திக்கரையை அடைதலே நாம் சாதிக்கக் கூடிய செயல் எனத் தெளிவாக உணர்ந்துள்ளவர்களின் தலைவன் எவனோ அவன்தான் நான் தியானித்திருக்கும் ஒளிமயமான இறைவன் எனப்படும் தகராகாசப் பெருமான்.

(இறுதியில் உள்ள பதி என்பது தகராகாச இறை எனப் பெ ாருள்படும்.)

---

**எண்சீர்க்கழிநெடிலடியான்வருவன.**

காய் காய் மா தேமா காய் காய் மா தேமா.

நெடியபசுந் தோகையுடை மயில்காள் கேளீர்
நின்மலனாய்ச் சின்மயனாய் நிகரில் லானாய்
அடியவர்கட் கெளியவனா யானந் தத்தே
னாயெங்கு மிருப்பவனா யடியே னுள்ளே
குடிகொளறி வாயென்று முளவோர் செவ்வேள்
குழகுமயி லூர்தியெனு நாமந் தாங்க
வடிவுடைநுங் குலஞ்செய்த தவந்தா னென்னே
மாறாநும் மாண்புடைமை யென்னே யென்னே. 102

101. அங்குறவேள்=(வள்ளிமாதேவிமுன்) அழகிய குறவர்மேனி கொண்டுநின்ற வேள்.

நீண்ட பசுந்தோகையை உடைய மயில்களே! கேட்பீர்களாக. நிர்மலனாகவும், ஞான வடிவினன் ஆகவும், ஒப்பற்ற சிதாகாசமாகவும், அடியவர்களுக்கு எளியவனாகவும், ஆனந்தத் தேனாகவும், எல்லா இடங்களிலும் வெளிப்பட்டு அருள்பவனாகவும், எளியேனின் உள்ளத்தே குடிகொண்டிருக்கும் சிவஞானமாகவும் எப்பொழுதும் திகழவல்ல செவ்வேள் பெருமான் இளமைமிக்க மயில்வாகனன் எனும் திருப்பெயரைத் தாங்க, அழகிய வடிவத்துக்குப் பெயர்போன உங்களது குலம் செய்த தவம்தான் யாதோ? மாறுபடாதிருக்கும் உங்கள் குலத்து மாண்புடைமை என்பதுதான் எத்தகைத்தோ!

காலமறி ஞானிகள்போ லுதயந் தேர்ந்து
களிபெருகக் கூவுநறுங் கோழி காளோ
தூலமறி புன்மதியே துறுமி யாடு
துகளுள்ளா ரெத்துணையுந் தெரியொண் ணாத
மூலமறி யோகிகள்கண் ணாகுஞ் செவ்வேண்
முருகுறுகோ ழிக்கொடியோ னெனும்பேர் தாங்க
ஞாலமறி நுங்குலஞ்செய் துளநோன் பென்னே
நலியாநும் மாண்புடைமை யென்னே யென்னே. 103

காலத்தைக் கணித்துக் கூறும் ஞானியரைப் போன்று சூரிய உதயத்தை அறிந்து மகிழ்ச்சி பெருகக் கூவி அறிவிக்கும் கோழிகளே! தூலப் பொருள்களை மட்டுமே அறிய அற்ப அறிவே மிகுதியாகக் கொண்டு ஆட்டம் போடும் குற்றம் உடையோரால் சிறிதளவும் உணர முடியாத மூலப்பொருளை அறியவல்ல சிவயோகியர்க்குத் தியானப் பொருளாக விளங்கும் செவ்வேள், அழகு பொருந்தியுள்ள கோழிக்கொடியோன் எனும் திருப்பெயரை ஏற்க, உலகம் அறியும் உங்களது குலம் செய்துள்ள நோன்புதான் என்னே! சிதையாத உமது பெருமை நலம் எத்தகையதோ!

அறிவுயிர்கட் குண்டாகுஞ் சனனத் தீட்டு
மாயுமுடிந் தெய்துகிற மரணத் தீட்டும்
பொறியறவுள் ளழுத்துகிற மலத்தின் றீட்டும்
புனிதமிலா திடைகூடும் பாவத் தீட்டுஞ்

சிறிதுமிலா தோட்டிறைவன் கடம்ப னென்னுந்
திருநாமங் கோடற்குக் கடம்பு காணும்
வறிதற்ற குலஞ்செய்த தவந்தா னென்னே
மங்காநும் மாண்புடைமை யென்னே யென்னே. 104

நன்மை தீமைகளை உணரவல்ல மனிதர்க்குப் பிறக்கும்போது ஏற்படும் பிறப்புத் தீட்டும் இறக்கும் போது ஏற்படும் மரணத்தீட்டும், அறிவை அடியோடு மூடி மறைத்து அழுத்தும் ஆணவமலத்தின் தீண்டுதலும், அதனால் தூய்மை இல்லாமல் இடையே வந்து சேரும் கன்மம், மாயை ஆகியவற்றின் தீண்டுதலும் ஆகிய இவையெல்லாம் சிறிதளவேனும் எஞ்சி இருக்காமல் முழுமையாக ஓட்டி விடுகின்ற இறைவனாம் முருகப்பெருமான் 'கடம்பன்' எனும் திருப்பெயரை ஏற்க, கடம்ப மரங்களே!, வீணாகாத உங்களது குலம் செய்துள்ள தவம்தான் என்னே! சிதையாதிருக்கும் உமது பெருமைச் சிறப்புதான் எத்தகைத்தோ!

அழுக்கதனை நீக்கிநலஞ் செய்சீர் சான்ற
வருட்கங்கை யேமறைக டேடிக் காணா
விழுக்கடவு ளானபிரான் வேதன் சூழு
மெய்த்தேவன் வேடரது வேடங் கொள்வோன்
இழுக்கறுசே யோனென்னு மெம்மா னாளு
மெழிற்கங்கை மைந்தனெனும் பெயரொன் றேற்க
வழுக்கறுநீ செய்ததவ மென்னே யென்னே
மாறாநின் மாண்புடைமை யென்னே யென்னே. 105

உடல் அழுக்கை மட்டுமல்லாமல் கொடிய பாவமாகிய அழுக்கையும் நீக்கி நன்மை செய்யும் சீர்மை மிகுந்த அருள்மயமான கங்கை நதியே! வேதங்கள் தேடியும் காண இயலாத சிறந்த இறைவனாகிய தலைவன்; நான்முகன் நாள்தோறும் துதிக்கும் உண்மைத் தேவன்; வள்ளிநாயகியை அடைவதற்காக வேடர்களுக் குரிய வேடத்தை ஏற்றவன்; குற்றமற்ற செவ்வேள் பரமன் - என்றெல்லாம் போற்றப்படும் எம் தலைவனாகிய முருகன் 'காங்கேயன்' (கங்கையின் மைந்தன்) என்னும் திருப்பெயரை ஏற்க, குற்றமற்ற நீ செய்த தவம்தான் என்னே! மாறுபடாத உனது பெருமையின் வளமைதான் என்னே!

நறுமீனே போன்றசிறு சதங்கைக் கால
னவையறுதெய் வானைமணந் தவனோ ராறு
குறுமீனே சோட்டிறைவ னெனுமீ டில்லான்
கோதிலறு மீன்மைந்த னெனும்பேர் தாங்கச்
சிறுமீனே பெருமீனே யனந்த மாகத்
திகழ்பெரிய விண்ணிலொளி திளைக்க வீசும்
அறுமீனே நுங்களருந் தவந்தா னென்னே
யழியாநும் மாண்புடைமை யென்னே யென்னே. 106

நல்ல விண்மீன்கள் போன்று ரத்தினங்கள் ஒளிரும் சிறுசதங்கை அணிந்த திருவடி உடையவன்; குற்றமற்ற தெய்வயானை நாயகியை மணந்தவன்; பராசரமுனிவரின் ஆறுபிள்ளைகளும் சாபவயப்பட்டு ஆறுமீன்களாக இருந்தபொழுது, அந்த மீன்கள் அடைந்திருந்த சாபத்தை நீக்கி உபதேசம் அருளியவன் என ஞானியர் போற்றும் ஈடு இணை இல்லாதவன்; இத்தகைய முருகப்பெருமான் 'கார்த்திகேயன்' (கிருத்திகை மாதர்களின் புதல்வன்) எனும் திருப்பெயரை ஏற்க, சிறிய விண்மீன்களும் பெரிய விண்மீன்களும் ஆக எண்ணற்ற விண்மீன்கள் ஒளிரும் வானத்தில் தனிச் சிறப்புடன் திகழும் ஆறுநட்சத்திர வடிவான கிருத்திகை மாதர்களே! நீங்கள் செய்த தவம்தான் என்னே! அழியாத உம்முடைய பெருமைநலம்தான் என்னே!

ஆண்டன்மை பெண்டன்மை யலியின் றன்மை
யனைத்துமிருந் தவ்வியல்பொன் றில்லா மேலோன்
காண்டன்மை யாளரருட் கண்ணாய் நானா
கலையீயுஞ் சீராளன் கரிய காலன்
ஏண்டன்மை யெருக்கியசெங் காலன் சேயோ
னெனும்பெரிய சாமிவிசா கப்பே ரேற்கச்
சேண்டன்மை சிறந்துசுடர் விசாக மேநீ
செய்ததவ மென்னேசால் பென்னே யென்னே. 107

ஆண் தன்மை, பெண் தன்மை, அலித் தன்மை இம்மூன்றும் உலகில் இருந்தாலும் இவற்றுள் ஒன்றேனும் பொருந்தப் பெறாத மேலோன்; உறுதிப்பொருள் இது என உணரவல்ல ஞானியர்க்கு,

**106.** குள+ஆம்பல் = குளாம்பல் எனவும், மண+ஆளன் = மணாளன் எனவுமாதல் போல, தெய்வ+ஆனை = தெய்வானை யெனமரீ இயிற்று. இம்மருவல் "அகர ஆகாரம் வரூ உங்காலை யீற்றுமிசை யகரநீடலுமுரித்தே" எனுந் தொல்காப்பியச் சூத்திரத்தை யனுசரித்து வருவதென்க.

அருட்கண்ணாக விளங்கி பற்பல கலைகளையும் உணர்த்தி அருளும் சீர்மைமிக்கோன்; கரியநிறம் வாய்ந்த எமனின் கர்வத்தையும் ஆற்றலையும் ஒடுக்கிய சிவந்த பாதங்களை உடைய சிவபெருமானின் குமாரன் - என இவ்வாறு மேம்பாட்டுடன் திகழும் பெரிய கடவுளான முருகப்பெருமான் 'விசாகன்' எனும் திருப்பெயரை ஏற்க, மிகத் தொலைவில் சிறப்புடன் ஒளிரும் விசாகம் எனும் விண்மீனே!, நீ செய்துள்ள தவம்தான் என்னே! உனது பெருமைதான் என்னே!

கொலைபுரியுங் கூரியவன் படையே தாங்கு
குன்றவர்கா ளெம்பெருமா னடியார் ஞான
நிலைபுரியும் பேரருளோ னெடுங்கூர் வேல
னிறைபரமற் கோம்பொருள்சொல் லாசா னென்பான்
அலைபுரியுங் கார்கோள்சூ ழவனி மீதே
ரார்குறவர் மகள்கொண்க னெனும்பேர் தாங்கச்
சிலைபுரிநுங் குலஞ்செய்த தவந்தா னென்னே
சிறுமையினும் மாண்புடைமை யென்னே யென்னே. 108

கொலைபுரிய வல்ல கூரிய, கொடிய ஆயுதங்களை ஏந்தும் குறவர்களே! எம்பெருமான், அடியார்களுக்குப் பூரணஞானப் பேற்றை அருளும் பேர் அருளாளன், நீண்ட கூரிய வேற்படை ஏந்தியவன், இறைவனாம் பரமசிவனுக்குப் பிரணவத்தின் உண்மைப் பொருள் உணர்த்தும் ஞான குரு என்றெல்லாம் புகழப்படும் முருகப்பெருமான் அலைவீசும் கடல் சூழ்ந்துள்ள இவ்வுலகில் 'குறமகள் கணவன்' எனும் திருப்பெயரை ஏற்க, மலையில் வாழ்க்கை நடத்தும் உங்களது குலம் செய்துள்ள தவம்தான் என்னே! கீழ்நிலையில் இருந்தாலும் மிகவும் பெருமையும் சிறப்பும் அடைந்துள்ள உங்களின் மாண்புதான் என்னே,

சீலங்கொள் வோரெல்லாம் வணங்கி யாணர்த்
தேவர்கா ளிளம்பெருமா னிணையில் லாதான்
காலங்கள் கடந்தபிரா னுருவில் லாதான்
கருணையே யுருவாக வுடைய தூயோன்
ஆலங்கொள் கண்டமுளான் மகனாய் நுங்கட்
கருள்சேனா பதியென்னும் பெயரொன் றேற்கக்
கோலங்கொ ணீயிரிழைத் துளநோன் பென்னே
குன்றாநும் மாண்புடைமை யென்னே யென்னே. 109

ஒழுக்கம் நிறைந்துள்ள அனைவரும் வணங்கும் குன்றாத வளம் உடைய தேவர்களே! இளம்பெருமான், இணை இல்லாதவன், காலங்களின் நிலையைக் கடந்து நித்தியமாக விளங்குபவன், வடிவு அற்றவன், கருணையே வடிவாக உடைய தூயோன், ஆலகாலத்தை உண்டதால் நீலநிறம் அடைந்துள்ள கழுத்தை உடைய சிவபெருமானின் குமாரனாக அவதரித்து உங்களுக்குச் சேனாதிபதியாகித் "தேவசேனாபதி" என்னும் திருப்பெயரை ஏற்க, அழகிய வடிவம் வாய்த்துள்ள நீங்கள் செய்துள்ள தவம்தான் என்னே! குறைவுபடாது திகழும் உங்களது மாண்புதான் என்னே!

ஓருருவு மோர்பெயரு மிலியென் றோதெம்
முடையானா யொளிர்சுப்ர மணிய னெல்லாப்
பாருயிரு மாள்பொருட்டே யவையெண் ணொண்ணாப்
பலதாங்கி நிற்கின்றான் பார்வா ழுன்பீர்
சீருருவுஞ் சீர்ப்பெயரு மிலாத வீன
தெய்வப்பேர் வேறுபெயர் தாங்கா தன்னோன்
ஏருயரும் பேர்தாங்கி யேத்த நீவி
ரென்னதவஞ் செய்தீரோ முன்னை நாளில். 110

ஒரு வடிவேனும் ஒரு பெயரேனும் இல்லாதவன் எனக் கூறப்படுபவனாய் எம்மையெல்லாம் ஆட்கொள்ளும் தலைவனாய் ஒளிரும் சுப்பிரமணியப் பெருமான், அனைத்து உலகங்களையும் அனைத்து உயிர்களையும் ஆள்வதற்காகவே எண்ணற்ற வடிவங்களையும் எண்ணற்ற பெயர்களையும் தாங்கி நிற்கின்றான். இவ்வுலகில் வாழும் அன்பர்களே! சிறப்பான வடிவும் சிறப்பான பெயரும் இல்லாத வேறு இழிவான தெய்வங்களின் பெயர்களைக் கொள்ளாமல் முருகப்பெருமானுக்குரிய பெருமைமிக்க பெயரை ஏற்று அவனைத் துதிப்பதற்காக முன்பு நீங்கள் எத்தகைய தவத்தைச் செய்துள்ளீர்களோ!

அசைவற்ற தெய்வமெனச் செறிகு கேசற்
கசைவான திருநடன முளதென் றோதல்
இசைவற்ற தீர்வையெனி னிறைவற் கந்த
விருவகையு மிலையென்றா லாட்ட வாடும்
நசையுற்ற வுலகில்லை யதுதா னில்லா
நறும்பரமு மிலையெனவா மதனா லீசன்
வசையற்ற ஞானியைப்போ லிரண்டு நீரு
மரீஇயிருப் பானென்பார் மதியுள் ளாரே. 111

அறிவுசால் மக்களே! தனது நிலையில் என்றும் மாறாமல் தாணுவாக (தூணாக) அசைவற்றுச் செறிவுடன் விளங்கும் குகப்பெருமானுக்கு, அனைத்துலகங்களையும் அனைத்து உயிர்களையும் அசைவித்து இயக்குவதாகிய திருநடனம் உண்டு எனக் கூறுதல் பொருந்தாத கோட்பாடு எனக் கூறினால், இதன் உண்மை இன்னதெனக் கூறுகிறேன். இறைவனுக்கு, அசையும் நிலை, அசைவற்றநிலை ஆகிய இரண்டும் இல்லை எனக் கூறினால்; இயக்க இயங்குவதாகிய தன்மை உடைய உலகம் என்பது இல்லை; உலகைத் தொழிற்படுத்தும் நிலையில் பரம்பொருளும் இருக்காது எனக் கருத வேண்டி வரும். எனவே இறைவன், செயற்பட்டும் செயற்படாமலும் இருக்கும் குற்றமற்ற ஞானியைப் போன்றே அசைநிலை, அசையா நிலை ஆகிய இரண்டையும் பொருந்தி இருப்பான்.

நனவிற்கா முறுமுலகத் திழிபோ கத்தை
நாணாளு நச்சுமவா நீங்கா தார்க்குக்
கனவித்தை யினர்ஞானா னந்த நூல்கள்
கழறுநிலை கைவருமோ துவித நோக்காம்
மனவித்தி யாசத்திற் கியைந்த மூர்த்த
வழிபாடே கைவருமென் றறையு மாவிற்
பனவிருத்தி யுடையாரத் துவித யோகாற்
பார்க்கவரு குகனேயென் பரிவா யுள்ளான். 112

விழிப்புநிலையில் செயற்படும் இவ்வுலகில் இழிவான போகங்களையே நாள்தோறும் விரும்பும் பேராசை நீங்காதவர்களால் பெரிய ஞானியர்களும், ஞான ஆனந்தமயமான நூல்களும் புலப்படுத்தும் உயர்ந்த நிலையை எட்ட இயலுமோ? இருமைப்பட்ட நிலையைச் சார்ந்த (துவைத பாவம் கொண்ட) வகையில், அவரவர் மனோபாவத்துக்குப் பொருத்தமான உருவ வழிபாடே அவர்களுக்குக் கைகூடும் - என நூல்கள் கூறும். பெரிய ஞானவிருத்தி உடையோர், அத்துவித பாவனையால் சிந்திக்க, அவர்கள் காண எழுந்தருளும் குகப்பெருமானே என் அன்புக்கு உரியவனாக உள்ளான்.

தானதனா தானதனா தனனந் தானா
தானதனா தானதனா தனனந் தானா.

நீரொலிபோ லூரவர்கூ டொலியுஞ் சார்போர்
நீடுயரா லாடொலிகூ வொலியுங் காரார்
காரொலிபோ லாநமனா வொலியுஞ் சாவே
காண்முழுவே ணார்முருடீ யொலியும் போமா
பேரொலியீ நூபுரமார் சரணன் சூர்மா
பீறயிலோ னேயெனுளே பெருகன் பாலே
கீரொலியா லேயவனீ ரடியும் பாடோர்
கேடிலியா னேனருளே கிளரன் பீரே. 113

இறைவனின் அருள்மிகுந்து திகழும் அன்பர்களே! ஒருவர் மரணம் அடைந்ததும் கடலின் அலைஒசை போன்று ஊர் மக்கள் கூடி ஒலிக்கும் ஒலியும், உற்றாரும் உறவினரும் மிகுந்த துன்பம் கொண்டு பலவித ஆட்டங்களுடன் எழுப்பும் ஒலியும், பசிய முகில் போன்று முழங்கி வரும் யமதூதுவரின் நாக்கு எழுப்பும் ஒலியும், இடுகாட்டுக்கு ஏகும் நேரத்தில் முழுமையாக அமைக்கப்பட்ட முருடு எனும் பறை எழுப்பும் ஒலியும் ஆகிய இவையெல்லாம் நேராதிருக்குமாறு பேரொலியை எழுப்பும் வீரக்கழல் அணிந்த திருவடிகளை உடையவன், மாமரமாக நின்ற சூரனைப் பிளந்தெறிந்த வேற்படை ஏந்தும் இறைவன் என் உள்ளத்தே நிறைந்து தோன்றும் அன்புத்திறத்தால், இனிய தமிழால் அவனது இரண்டு திருவடிகளையும் பாடித் துதிக்கும் நித்தியன் ஆனேன்.

காய் காய் காய் மா காய் காய் காய் மா.

சீவசத்தி யெனுமதற்கு மும்மலமுந் தூலஞ்
செறியவற்றிற் கதுசூக்க முயிர்க்கதுவுந் தூலம்
சீவசத்திக் குயிர்சூக்க மவ்வுயிருங் குகனாந்
தேவனது சத்தியினுக் கேதூல மதுவுஞ்
சீவனுக்குச் சூக்கமது வுங்குகற்குத் தூலந்
திகழ்குகனவ் வரியசத்திக் கேசூக்க மெனவோர்
சீவரவ னாகவெனிற் சீவசுதந் திரத்தைச்
சேரிறைவற் களித்திடுவார் தெள்ளுணர்வி னாலே. 114

சீவசத்திக்கு ஆணவம், கன்மம், மாயை எனும் மூன்றும் தூலமாக (பருமையாக) இருக்கும்; உயிர்களில் செறியும் அம்மூன்றனை நோக்க சீவசக்தி நுண்மையானது; உயிரை நோக்க, சீவசக்தி தூலம்; சீவசக்தியை நோக்க உயிர் சூக்குமம். குகப்பெருமானின் அருட்சக்தியை நோக்க உயிர்தூலம்; அந்த அருட்சக்தி, உயிரை நோக்க, சூக்குமம்; உயிர், குகனை நோக்க, தூலமானது. குகப்பெருமானின் நிலை, அருட்சக்தியை நோக்க மேலும் சூக்குமமானது. இதனை உணரவல்ல ஆன்மாக்கள் குகனாகவே ஆகும் சாயுச்சியம் பெற வேண்டுமானால், தமது சீவ சுதந்திரத்தை இறைவனுக்கே தமது தெளிந்த உணர்வால் அர்ப்பணித்து நிற்பார்கள் (தற்போதம் இழந்து நிற்பார்கள்).

தலமுறைநீ ருயிருமலை சலமுறையா சலம்வாழ்
சரவுயிருந் தலமுறையா வெனுமதுபோ லுலகாம்
புலமுடையார் தவநடைசேர் மனமடையார் சிவமா
புண்ணியமுள் ளாருலகோர் வினைவழியி னுழையார்
நலமுடையீ ரிவையுணர்ந்து நசைமனதைத் திருத்தி
ஞாலநுழை யாமலருண் ஞானநுழைந் திருக்க
மலமடுகோ பாலபிரான் வாரயிற்கை மழவன்
மலரடியை நனிநினைமின் வருபகலு மிரவும். 115

நிலத்தில் வாழும் நீர்வாழ் உயிரினங்கள் கடல்நீரில் வாழ மாட்டா. கடல்நீரில் சஞ்சரித்துவாழும் உயிரினங்களும் நிலத்தில் வாழமாட்டா. அதுபோன்றே உலகப்பற்று மிக்கோர் தவநெறியில் ஈடுபடக்கூடிய மனப்பக்குவத்தை அடையமாட்டார்கள். சிவமாக ஆகும் சாயுச்சியப் பேறு பெறும் புண்ணியர்கள், உலகினர் மேற்கொள்ளும் செயல்களில் ஈடுபடமாட்டார்கள். அருள்நலம் பெற உள்ள அன்பர்களே! இதனை உணர்ந்து, ஆசையும் பற்றும் கொள்ளும் மனத்தைப் பண்படுத்தி, உலகநெறியில் நுழையாமல் ஞான நெறியில் ஈடுபட்டிருக்க வேண்டி, ஆணவமலத்தை நீக்கி உயிர்களைக் காக்கவல்ல தலைவனும், நீண்ட வேற்படை ஏந்திய திருக்கரத்தை உடைய இளையோனும் ஆன முருகனின் மலர்போன்ற

115. மனமென்ப திரண்டனுருபேற்புழி மனத்தையென வாதல்போலாகாது, மனதென்ப தவ்வுருபேற்புழி "மனதை" எனவானதறிக. இது அமுதை, விழுதை, பொழுதை யென வருத லொக்கும் இவ்வாறு "மனதின்வண்ணம்" "பேய்மனதை யண்டிநான்" என்றார் பிறருமென வறிக.

திருவடிகளை, தொடர்ந்து வரும் இரவு பகல் எந்நேரத்திலும் மிகுதியாகச் சிந்தித்து இருப்பீர்களாக.

தேமா கூவிளம் தேமா கூவிளங்காய்
புளிமா கூவிளம் தேமா கூவிளங்காய்.

தன்ன தானன தந்த தானதனா, தனன தானன தந்த தானதனா.

**தொ**ன்மை நூலள வின்றி யோதினுமே
சுகுர்த மாவிர தஞ்செய் தானுமரோ
புன்மை மாறிட வென்று பாசனையே
புரியு மீசுர னண்பி லாவிடினோர்
நன்மை யேதென வெந்தை யாயசதா
நடன மேதரு கந்த மாதனவேள்
மென்மை யீரடி நம்பு மாதவரே
விமல மாமரு ளின்ப றாதவரே. 116

தொன்மையான நூல்கள் பலவற்றை ஆழ்ந்து பயின்றாலும் நன்மை விளைக்கவல்ல விரதங்களை மேற்கொண்டாலும், தமது மும்மல அழுக்கு நீங்கவேண்டிச் செய்யும் வழிபாட்டிற்கு இரங்கி அருளும் ஈசுவரனின் அருள் நலம் இல்லாதுபோனால் எவ்வித நன்மையும் ஏற்படாது என உணர்ந்து கொண்டு எப்பொழுதும் நடனம் செய்கின்ற கந்தமாதனமலைக்குரிய செவ்வேளும் எந்தையும் ஆகிய முருகனின் மெல்லிய இரண்டு திருவடிகளையும் உறுதியுடன் நம்பும் பெரிய தவச் செல்வர்களே தூய அருளானந்த நிலையிலிருந்து நீங்காமல் இருப்பார்கள்.

விளம். ஈறு: புளிமா.

**பூ**ரண வருவவு பாசனை யினுமொரு
புரையுமி லுருவவு பாசனை யெளிதென
ஆரண மொழிவண மாசறு பரிவுட
னயருரு வகருமம் யாவும கோசர
காரண னாகிய கடவுள டைகவெனோர்
கடமையை யுடையவர் கருமிக ளோவலர்
சூரண வாநெறி யீதென விழைபவர்
தொழுமுரு காவெனை வளைகவு னருளே. 117

நிறைவான வகையில் இறைவனின் அருவநிலையைத் தியானித்து வழிபடுவதைக் காட்டிலும், ஒரு குற்றமும் இல்லாத உருவ நிலையைத் தியானித்து வழிபடுவது எளிதே என வேதங்கள் கூறுவதற்கேற்பத் தூய்மையான அன்புடன் செய்யப்படும் உருவ வழிபாட்டுத் தொடர்பான செயல்கள் யாவும், வாக்குக்கும் மனத்துக்கும் எட்டாதவனாகிய இறைவனை அடைவதற்கே எனும் கோட்பாட்டோடு அவனை வழிபடும் கடமையில் நிற்பவர்கள் வெறும் கர்மங்களையே நம்பி இருக்கும் கருமவாதிகள் அல்லர். சிறிதும் அழுக்கில்லாத தூய நெறியே இது என உணர்ந்து அந்த வழிபாட்டு முறையை விரும்புவோர் வணங்கித் துதிக்கும் முருகப் பெருமானே! நினது திருவருள் என்னை முழுவதுமாக வளைத்துச் சூழ்ந்துகொள்க.

மா விளம் விளம் மா மா விளம் விளம் மா.

அவனை யேமறந் தாற்றறன் செயலென்
றாம தேதரு முதிப்புட னுலப்பும்
எவனு நானிலை யென்றிழைப் பானே
லேத மின்னெறி யேயுள னவனே
மவுனி யாவனெல் லாஞ்சிவன் செயலா
வழங்க யோக்கிய னெனுமுறை யோர்வோர்
சிவப ரம்பொரு ளீதென வணக்கஞ்
செய்வி சாகவெ னைக்கொள நினையே. 118

இறைவனை மறந்து செய்யப்படும் புண்ணியச் செயல்கள் எல்லாம் தன் செயலே என்றாகி மேலும் மேலும் பிறப்பையும் இறப்பையுமே தரும். எந்த ஒருவனும் 'யான் செய்யவில்லை' என அகங்காரம் இல்லாமல் செய்தால் அவன் மாசற்ற நெறியில் நிற்பவனே ஆவன்; அவனே 'மௌனி' (மோன நிலையை உடையவன்) ஆவன். அனைத்தும் சிவன் செயலே எனக் கருதுவதற்கு அவனுக்கே தகுதி உண்டு என அறநூல் கூறுவதை உணர்ந்துள்ளோர் "சிவபரம்பொருளே இவன்" எனக் கருதி வணங்கும் விசாகப் பெருமானே! என்னை உன்னுடன் ஐக்கியப்படுத்திக் கொள்ளத் திருவுள்ளம் கொள்வாயாக.

தனத்த தன்னன தனதன தனனா, தனத்த தன்னன தனதன தனனா.

திறத்த மண்ணென மழையென விரிவே
திளைத்த விண்ணென வளியென வெரியாம்
நிறத்து மின்னென வுளபொருள் களின்மே
னிகழ்த்து மின்னுயிர் களினிறை பெரியோன்
மறத்தை யெண்ணுநர் புரிசெய றமதா
வலிக்க முன்னுவ திலையிதை யுடையோர்
குறத்தி மன்னவ குருபர வருளே
கொடுத்தி யென்னொரு பரிவெனை நுழையே. 119

தாங்கும் திறம்மிக்க பூமி, நீர், மிகவும் விரிந்து திகழும் ஆகாயம், காற்று, செஞ்சுடர் கொண்டு மின்னும் நெருப்பு எனத் திகழும் பூதப்பொருள்களிலும், பல்வேறுவகைகள் எனக் கூறப்படும் இனிய உயிர்களிடத்தும் வியாபித்து விளங்கும் இறைவனாகிய பெரியோனின் அருள் வலிமையை மதிப்பவர்கள் தாங்கள் செய்யும் செயலை ஜீவ ஆற்றலாகக் கூற நினைப்பதில்லை. ஒப்பிலா அருள்வலிவுடையவனாகிய வள்ளி நாயகனே! குருபரனே! நினது திருவருளையே வழங்கிடுக என்னும் ஒரு அன்புத் திறத்தில் (பக்குவத்தில்) அடியேனை சேர்த்து அருள்க.

மா.

நெஞ்சி னோர்பு விருத்தி மீறி நிகழுஞ் சீவச் செயலு ளோர்கள்
அஞ்சி டாம லிழைப்ப வெல்லா மாதி சிவனின் செயலென் றோதின்
விஞ்சு நரகத் தீயில் வேவர் மீண்ட னந்த யோனி சேர்வர்
கிஞ்ச முந்தப் பாரென் போர்கள் கேண்மை வேல னடிமை நானே. 120

மனத்தில் எழும் மனோபாவங்களால் எல்லைகடந்து நிகழும் தற்போதச் செயல் உள்ளவர்கள், சிறிதும் அஞ்சாமல் செய்யும் கொடிய செயல்களையெல்லாம், அனைத்தையும் தோற்றுவிக்கும் சிவபெருமானின் செயல்களே என்று வாதிட்டால் அவ்வாறு வாதம் செய்வோர், மேன்மேலும் மிகும் நரகத் தீயில் வெந்து அழிவார்கள்; மீண்டும் மீண்டும் அளவற்ற பிறவி எடுப்பார்கள். இந்தத் தண்டனையிலிருந்து ஒருபோதும் தப்ப மாட்டார்கள் என உரைக்கும்

119. வலித்தல் = பேசுதல்; "வலித்தலே *** பேசல்" என்பது தகரவெதுகை. இச்சொற்றானே வலத்தலெனவும் வழுத்தலெனவுந் திரிந்து நிகழ்ந்தவழி அகராதிக்காரரு மவ்வகராதியு ளவற்றைவரைந் தப்பொருட் படுத்தினர்.

நடுவுநெஞ்சுடைய தூயோரோடு அன்புக் கேண்மை கொள்ளும் வேல் இறைவனுக்கு நான் எஞ்ஞான்றும் அடிமையே.

கூவிளம் கூவிளம் புளிமா கருவிளம்
கூவிளம் கூவிளம் புளிமா கருவிளம்.

தானன தானன தனனத் தனத்தன
தானன தானன தனனத் தனத்தன.

கோமள வார்முகை மலையைச் சுமப்பவர்
கோசிக மேகலை யரையிற் றரிப்பவர்
மாமண நாண்மலர் குழலிற் றரிப்பவர்
மாலையி லாடவர் மடியைப் பிடிப்பவர்
ஆமட மாதரை யறவிட் டருட்கட
லாடிட வேநினை யடியர்க் ககப்படும்
ஓமய வேலவ னடியைத் துதித்தலு
மோர்நினை வாதலு முறுவர்க் குமுக்கியம். 121

மென்மையான கச்சணிந்த மார்பகங்களாகிய மலைகளைச் சுமப்பவர்கள், பட்டுச் சேலையையும், மேகலையையும் இடையில் அணிபவர்கள், மிகுந்த மணம் வீசும் மலர்களைக் கூந்தலில் தரித்துள்ளவர்கள், இரவு சூழும் நேரத்தில் ஆடவர்களின் மடியைப் பிடிப்பவர்கள் ஆகிய இளம் விலைமாதர்களிடம் வைக்கும் ஆசையை அறவே அகற்றிவிட்டு, நினது அருட்கடலில் திளைக்க நினைக்கும் அடியார்களுக்கு எளிதில் வாய்த்துள்ள பிரணவ மயமான வேலவனின் திருவடிகளைப் போற்றுதலும், அவனையே ஒருமுகப்பட்ட மனத்துடன் தியானித்திருத்தலும் ஞானமுனிவர்க்கு உள்ள முக்கியமான கடமைகளாகும்.

கூவிளம் கருவிளம் கூவிளம் கூவிளம்
கூவிளம் கருவிளம் கூவிளம் கூவிளம்.

தையன தனதனத் தானனத் தானனா
தையன தனதனத் தானனத் தானனா.

வள்ளியை மணமுடித் தோன்மலர்ப் பாதமே
வல்லையி லுறனயப் பாமெனச் சூழுமா
ஒள்ளிய வெயிறுடைக் கோவணத் தாருமே
யுவ்வியி னிமிர்சடைத் தாபதத் தாருமே

தெள்ளிய மதிமறைக் காடிருப் பாருமே
செவ்விய தலைமழித் தேகறத் தாருமே
எள்ளிய மனமதைத் தானடக் கார்கணே
யெவ்வித மதிமதர்ப் பேறுநட் பாளரே. 122

அன்பர்களே! வள்ளி நாயகியை மணம்புரிந்த முருகப் பெருமானின் தாமரை மலர்போன்ற பாதங்களை அடைதலே, நற்பேறாகும் என நினைக்கும் வெண்பற்கள் கொண்டுள்ள கோவணம் உடுத்த ஆண்டிகளும், தலையில் நிமிர்ந்த சடைமுடி தரித்துள்ள முனிவர்களும், தெளிந்த ஞானக் கருவூலமான வேதங்களாகிய கானகத்தில் இருப்பவர்களும், செம்மையான தலையை மழித்துக் கொண்டு துறவொழுக்கம் பூண்டுள்ள துறவியரும், இகழ்ச்சிக்குரிய மனத்தை அடக்கவில்லை எனில் அவர்களிடம் எத்தகைய ஞானச் செழுமைதான் மிகுந்து விளங்கும்?

தேமா கருவிளம் தேமா கூவிளம் தேமா கருவிளம் தேமா கூவிளம்.

தானா தனாதன தத்த தத்தன, தானா தனாதன தத்த தத்தன

நாமா ரெனாவறி யத்தி ளைப்பவர் நானா விகாரம றுத்த ணைத்திடு
கோமா னனாமய னற்பு தப்பொறி கோணாத போதகன் விட்டு புத்திரி
சீமா னிராகுல சித்த னொப்பறு சேயோ னறாமலி பொற்ப தத்தினை
யேமா சிலாதெணின் முற்பி றப்புட னேயா வுமேயறி நிட்டை பற்றுவர். 123

“நாம் யார்?” “நமது உடல் என்பது என்ன?” - என இது போன்ற ஆய்வில் திளைத்து உண்மையை அறிந்துகொள்ளச் சிந்தனையில் திளைப்போரிடம் நிகழும் பற்பலவிதமான மனோ விகாரங்களை (மாறுபாடுகளை) நீக்கி அவர்களை அணைத்துக் கொள்ளும் தெய்வராஜன், இயல்பாகவே பாசங்களிலிருந்து நீங்கி இருப்பவன், அற்புதமான ஐம்பொறிகளும் நெறிமாறிச் செல்லாத வகையில் உபதேசம் அளிக்கும் ஞான ஆசான்; திருமாலின் மகளாகிய தேவசேனைக்கும் வள்ளிநாயகிக்கும் கணவன்; கலக்கமற்ற சிந்தை உள்ளவன்; இணையற்ற செவ்வேள் - எனத் திகழும் முருகப் பெருமானின் தேன்மிகும் அழகிய பாதங்களையே, தூய்மையுடன் தியானித்திருந்தால், முற்பிறப்பை மட்டுமன்றி, அனைத்தையும் அறியவல்ல ஆற்றலைத் தருவதான சிவநிட்டையில் திளைப்பவர் களாக ஆவார்கள்.

புளிமா கூவிளம் தேமா கூவிளம் புளிமா கூவிளம் தேமா கூவிளம்.

தனன தந்தன தானா தானன, தனன தந்தன தானா தானன.

குமர சம்புகு கேசா வாருணி குரவ கிம்புரி பூணீ டோளிறை
அமரர் கும்பிடு மாதீ தேனினு மமுதி னுஞ்சுவை யாமோர் பூரண
சமர சம்பெற நாயே னாடிது தருணம் வந்ததை யீயா யோகன
திமிர மங்குற மாதே சேதரு திறநெ டும்படை யோடே யார்வொடு. 124

குமரனே! சம்புவே! குகேசனே! அகத்திய மாமுனிவரின் குருவே! கிம்புரி எனும் அணிகலன் அணிந்துள்ள நீண்ட தோள்களை உடைய இறைவ! தேவர்கள் வணங்கும் முதல்வனே! தேனைக்காட்டிலும் அமுதைக் காட்டிலும் மிகுந்த சுவைமயமான நிறைஞானக் கருவூலமே! எளியேன் நின்னோடு ஐக்கியப்படுவதற்கு எண்ணியுள்ள இத்தருணத்தில், செறிந்த இருள் விலகும்படிப் பேரொளிதரும் ஆற்றல்மிக்க நீண்ட வேற்படையுடன் என்முன் அன்பால் எழுந்தருளி, அந்த ஐக்கியப் பேற்றை அளிக்க மாட்டாயோ?

கருவிளம் கருவிளம் கருவிளம் கருவிளம்
தேமா தேமா புளிமாங்காய் கூவிளம்.

தனத்தன தனத்தன தனத்தன தனத்தன
தத்த தான தனத்தத்த தானன.

[அட்டோத்தரசதாக்கரம். (நூற்றெட்டெழுத்து.)]

சிறப்புறு கடைச்சவை தனிற்றமிழ் வளர்த்துரை
செப்பு கீர னினைத்திட்ட வாறணி
விறப்புறு திருப்பர மலைத்தலை யினிற்சுரர்
மெச்சு நீரை யழைத்திட்ட கோவவன்
மறப்புறு நினைப்பற விருப்பொடு குளித்ததின்
மட்டி லாம னினைத்திட்ட வேலவ
பிறப்பறு பரத்துவ வருட்குரு நிலத்துழல்
பிச்ச னேனை வளைத்துக்கொள் யோகிடை. 125

சிறப்புவாய்ந்த கடைச்சங்கத்தில் ஒப்பற்ற தமிழை வளர்த்துக் களவியலுக்கு உரை சொல்லிய நக்கீரனார் விரும்பிய வண்ணம்

அழகு மலிந்த திருப்பரங்குன்றத்தின் உச்சியில் தேவர்கள் போற்றும் கங்கை நதியை வரவழைத்த தெய்வராசனே! மறப்பும் நினைப்பும் நீங்க அந்தக் கங்கைநீரில் நக்கீரனார் முழுகி எழுந்து, அளவின்றி நினைந்து துதித்திட்ட வேலவனே! பிறவி நோயை அறுக்கும் பரத்துவ நிலையில் விளங்கும் அருள் குருவே! இவ்வுலகில் அலைந்து திரியும் பித்தனாகிய என்னை நின்னோடு இரண்டறக் கலக்கும் நிலையில் என்னைச் சூழ்ந்துகொள்!

கருவிளம் கருவிளம் கருவிளம் புளிமா
கருவிளம் கருவிளம் கருவிளம் புளிமா.

தனதன தனதன தனதன தனன, தனதன தனதன தனதன தனன.

(ஐகாரமொழிந்த நெடிலு மொற்றுமிலாச்செய்யுள்.)

அருணிலை புகவென வனுதின நினையு மளியுடை யெனையுண வயிலிறை வருக
கருணிலை தெறுபர சிவகுரு வருக கடகரி முகனிளை யவனனி வருக
தெருணிலை யினரக நடுமணி வருக தினையிடி நுகரொரு குறைவிலி வருக
பொருணிலை யுணரலை யுணிதுரை வருக புதுமல ரணியணி மழமுனி வருக. 126

நினது அருள்நிலையாகிய சன்னிதிக்கண் வருவதற்காக நாள்தோறும் உன்னைத் தியானிக்கும் அன்புடைய என்னை நினக்குள் ஐக்கியப்படுத்திக் கொள்ள வேல் இறைவனே, வருக! ஆணவ இருட்டாகிய தளையை அழிக்கும் பரசிவ குருவே, வருக! யானை முகத்தோனின் இளவலே, சீக்கிரம் வருக! தெளிந்த ஞான உணர்வுமிக்குள்ள அன்பர்களின் இதயவெளியில் எழும் சூரியனே, வருக! வள்ளிநாயகி காதலோடு தந்த தினைமாவை உண்ணும் குறைவில்லாதவனே, வருக! பொருள் இது என உணரவல்லவனும் கடலைக் குடித்தவனுமான அகத்தியமுனிவரின் குருவே! வருக! அன்றலர்ந்த புதிய நறுமணப் பூக்களால் ஆய மாலையை அணிந்துள்ள இள முனியே! வருக!

புளிமாங்கனி புளிமாங்கனி புளிமாங்கனி தேமா
தேமாங்கனி தேமாங்கனி தேமாங்கனி தேமா.

சடமாசுக ஊழிவாகுமொர் சுடுகானிடை நின்றே
தத்தத்தன தத்தத்தன தத்தத்தன தந்தா
தடதாகிட தடதாகிட தடதாகிட தந்தா
தாத்தத்தன தாத்தத்தன தாத்தத்தன வென்றே

நடமாடிறை யருண்மாசறு மழவேயுமை மைந்தா
நச்சுக்குண ரச்சப்பட மொட்டுத்தடி கொண்டே
வடவானல மெனவேவரும் யமதூதுவர் வந்தால்
வாட்டப்பட வாட்டைப்புரி யேத்தெற்குளி ருந்தே. 127

ஜடமயமான மாசுடைப்பொருள்கள் அனைத்தும் அழிவுபடும் சுடுகாட்டின் நடுவில் நின்று "தத்தத்தன தத்தத்தன தத்தத்தன தந்தா தடதாகிட தடதாகிட தடதாகிட தந்தா தாத்தத்தன தாத்தத்தன தாத்தத்தன" என நடனமிடும் சிவபெருமானின் அருளால் அவதரித்த குற்றமற்ற இளையோய்! உமையின் திருக்குமரனே! கொடிய குணமுடையோர் பயந்து நடுங்கும்படி மொட்டுகின்ற தடியைக் கையில் ஏந்தி வடவைத்தீயைப் போன்று உயிர்கவர வரும் யமதூதுவர் என்முன் வந்தால் உன்னைப்புகழும் எனக்குள் இருந்து அவர்கள் அனைவரும் வாட்டப்பட்டு நிற்கத் திருநடனம் செய்தருள்க.

வாய்பாடு பேதிக்கினு மோசைகெடாது நடப்பது.

( நாற்கூற்றிருக்கை.)

ஒருபூரண சிவனார்செவி யொருநுண்பொருள் சொன்னா
யுரமாரரு ளிருதேவிய ரொருசேர விழைந்தாய்
ஒருசூருட லிருகூறுற வொளிவேலெறி தந்தா
யுணர்வேறிடு முத்தேவரு மிருதாடொழ நின்றாய்
ஒருமாமுனி யறிவேயுற வொருபோதனை செய்தா
யுரைமாமறை யிருசம்பவர் முத்தீமுத லானாய்
திருநான்முகன் முக்கண்ணுள னிருமாலுரு வொன்றாத்
திகழுந்திரு வுருவாயினை யெனையும்படர் குகனே. 128

ஒப்பற்ற பரிபூரணனான சிவபெருமானின் திருச்செவியில், பிரணவத்தின் நுட்பமான பொருளைக் கூறினாய். அன்புமிகுதியைக் கொண்ட தெய்வயானையையும் வள்ளிநாயகியையும் ஒருங்கே விரும்பி ஏற்றுக் கொண்டாய். ஒன்றாக இருந்த சூரபன்மனின் உடல் இருகூறுபட, ஒளிமிகுந்த வேற்படையை எறிந்தாய். தத்தம் தொழிலில் ஞானம்மிக்க பிரம்மன், திருமால், உருத்திரன் ஆகிய மூவரும் உனது இரண்டு தாள்களையும் தொழுது வணங்குமாறு வெளிப்பட்டு நின்றாய். ஒப்பற்ற அகத்திய மாமுனிவர்,

முழுமையான ஞானம் பெற ஓர் உபதேசம் செய்தாய். வேதம் ஓதும் அந்தணர்க்கும் அவர்கள் வளர்க்கும் மூன்று அங்கிகளுக்கும் முழுமுதற் பொருளாக ஆனாய். பிரம்மன், உருத்திரன், கரியதிருமால் ஆகிய மூவரும் ஒன்றாக ஒரே வடிவத்தில் விளங்குமாறு ஏகபாதத் திரிமூர்த்தி யாக நின்றாய். இத்தகைய நீ என்மீதும் அன்பு கொண்டு அருள்க.

## நாற்கூற்றிருக்கைச் சித்திரம்.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | 1 | | | |
| | | 1 | 2 | 1 | | |
| | 1 | 2 | 3 | 2 | 1 | |
| 1 | 2 | 3 | 4 | 3 | 2 | 1 |

கருவிளமும், புளிமாவும்.

தனதனத் தனனா தனதனத் தனனா
தனதனத் தனனா தனதனத் தனனா.

துதிரசத் திருவே சுடர்தனிக் குருவே
சுவைமிகுத் துளதூ வுடையபுத் தமுதே
அதிரசப் பயமே யமலமுப் பழமே
யகிலசக் கரையே யறுமுகத் திறையே
மதிரசப் புயலே மதவருட் கடலே
வரதநற் கரனே மலர்முகக் குகனே
முதிரசத் தியனா யுளவெனைப் புரிவான்
முனமடக் கிடுமோர் நிலையினிற் றிணியே. 129

புகழ்தற்கினிய இன்சுவையின் திரளே! ஒப்பற்று விளங்கும் குருவே! சுவைமிகுந்துள்ள புதிய அமுதமே! சுவை செறிந்துள்ள இனியபாலே! குற்றமற்ற வாழை, மா, பலா ஆகிய முக்கனியே! கரையாது இருக்கும் சர்க்கரையே! அறுமுக இறைவனே! ஞான அமுது செறிந்துள்ள மேகமே! ஆனந்தமயமான அருட்கடலே! வரங்கள் அருளும் திருக்கரம் உடையவனே! மலர் போன்ற முகம் கொண்டுள்ள குகனே! (அடியார்களைக் கண்டு மலர்ச்சிபெறும்

129. மதம் (டீ) = மகிழ்ச்சி.

முகத்தை உடைய குகனே) முதிர்ந்த பொய்யனாக இருக்கும் என்னை உனது கருணையால் உள்ளத்தை ஒருமுகப்படுத்தி நிற்கும் யோக நிலையில் ஆழப் பதித்து வை.

தனதனந் தனனா தனதனந் தனனா
தனதனந் தனனா தனதனந் தனனா.

வினைபுரிந் திடுசா திகுலமென் றுளவோ
வினையிறந் திடுமா மதிவனந் தனிலே
உனைவிழைந் தறியா ரெவர்களுங் கடையா
யுளர்நறுங் குணநீ தியின்மிகுந் தறிவால்
உனைவிழைந் தறிவோ ரெவர்களுந் தலையா
யுளரெனுந் துணிபே யுடையவென் பதியே
முனைவரன் புடனே பணியுநன் குகநான்
முழுதுநின் களியே கொளவெழுந் தருளே. 130

வினைப்பயன்களின் தாக்கத்தைக் கடந்துள்ள ஞானமாகிய காட்டில், வினைகளைச் செய்வது தொடர்பாகிய சாதி, குலம் முதலானவை உண்டோ? உன்னை விரும்பி, உனது உண்மை நிலையை அறியாதார் யாவரும்' கடைநிலையில் உள்ளவர்களே. நல்ல குணங்களில் மேலோங்கித் திகழ்ந்து ஞானத்தால் உன்னை விரும்பி உன்னை உள்ளவாறு அறிபவர்கள் அனைவரும் தலைமைச் சிறப்பில் உள்ளவர்களே. இவ்வாறு தெளிவாக உணர்ந்து முடிவு கொண்டுள்ள எளியேனின் இறைவனே! முனிவர்கள் அன்புடன் துதிக்கும் சிறந்த குகனே! நான் உனது ஆனந்த நிலையை முழுவதுமாக அடைவதற்காக என்முன் எழுந்தருள்க.

புளிமா கூவிளங்காய் தேமா கூவிளம்
புளிமா கூவிளங்காய் தேமா கூவிளம்.

தனன தானதன தான தானனா, தனன தானதன தான தானனா.

புகழ்பி ராமணர்க ளான மாசிலார் புகரி லாதகதி மேவு வாரலார்
நிகம மோதவுத வார்பி னாகுவர் நிஜமெ னாமிருதி கூறு நேருளே
அகமி லாதசிவ யோக ரேபிரா மணரெ னாநவிலொர் தீர்வை யாமனோர்
இகழு றாதணவு ஞேய வேலனே யெனைவி டாதுகொளும் வேத நாதனே. 131

புகழப்படும் நிலையினரும் குற்றமில்லாதாருமாகிய பிராம்மணர்கள் குற்றமொன்றும் இல்லாத கதியை (முத்தியை) அடைவார்கள்; அல்லாதவர்கள் வேதங்களை ஓதுவதற்குத் தகுதி இல்லாதவர்கள்; பிற்பட்ட நிலையிலேயே இருப்பார்கள் என மிருதிகள் கூறும். இந்த நியதியில், தீவினைப் பயனோ, பாவமோ இல்லாத சிவயோகியரே பிராம்மணர்கள் எனக் கொள்வது பொருத்தமாகும். அத்தகைய பிராம்மணர்கள், இகழ்ச்சி ஏதும் பொருந்தாமல் வந்து தொழுது பொருந்தும் வேலவனே, என்னை விட்டுவிடாமல் ஆட்கொள்ளும் வேதநாதன் ஆவான்.

கருவிளமும், கூவிளங்காயும்.

தனதன *தத்ததனா தனதன தத்ததனா
தனதன தத்ததனா தனதன தத்ததனா.

வடமொழி யிற்சதுமா மறைபயி றற்கிழிவா
மரபுளர் கட்கதிகா ரமிலையெ னச்சொலினும்
இடரறு பத்திமைஞா னமிவைகள் சொற்றிடுநூ
லினியத மிழ்க்கவியா திகளில வர்க்கிலையோ
சுடர்பர வைக்கினியா ரடியவர் மெய்ப்பெயரே
சொனபதி கத்திடையே யுள்குல மெக்குலமா
மடமதொ ழித்துணர்வா லுணர்திரெ னச்சொலுமேன்
மதியர்ப ழிச்சுமகா குமரனெ னைக்கொளுமே. 132

வடமொழியில் உள்ள நான்கு வேதங்களையும் பயில்வதற்கு இழிவான மரபில் உள்ளவர்களுக்கு உரிமை இல்லை என மிருதிநூல் கூறினாலும் இடர்களைத் தவிர்க்கவல்ல பக்திநெறியையும் ஞானநெறியையும் விரித்துக் கூறும் தமிழ்நூல்களிலும் பாடல்களிலும் இவர்களுக்கு உரிமை இல்லையோ? பக்தியால் மிளிர்ந்த பரவை நாச்சியாருக்கு இனியவராகிய சுந்தரமூர்த்தி நாயனார், மெய்யடியார்களின் திருப்பெயர்களைத் தொகுத்துக் கூறிய திருத்தொண்டத் தொகையில் கூறப்பட்டவர்களின் குலம் எந்தக் குலம்? அடர்ந்துள்ள அறியாமையை விலக்கி, அறிவால் உய்த்துணர்வீர்களாக எனக் கூறும் ஞானியர் போற்றித் துதிக்கும் பெரிய குமரப்பெருமான் உறுதியாக என்னை ஆட்கொண்டு அருள்வான்.

*தத்தனனா வெனுங்குழிப்பு : "தத்ததனா" என வரினும் வரலாமென வறிவித்த தீதென்க. தனவியைந்து "தத்தன" தனனவியைந்து "தத்தனன" எனவாமாறு, தனனாவியைந்து "தத்தனனா" எனவாம். தனனன என வியைவதில்லை. பிறவுமன்ன.

கூவிளமும், கூவிளங்காயும்.

மீசைந ரைத்ததுபோ லாசைந ரைத்தவரே
மேதைய ராமுதியோர் மேனித ளர்ந்ததுபோல்
பாசம னத்தெழுபே மேதளர் வானவரே
பாசறை தீர்பெரியோ ராசது சேர்சிறியோர்
நீசரெ னப்படுவார் பூமிசை மற்றவரென்
னீதியை யுய்த்துணர்வோர் யாவரு மற்புதனார்
தாசரெ னப்படுவா ரன்னவ ராவலொடே
தாழொரு கந்தபிரா னேயெனை யுண்டிடுமே. 133

தங்களின் முகத்து மீசை நரைத்தது போல் ஆசையும் நரைத்தவரே உண்மையான அறிஞர்கள் ஆவர்; முதியோரின் உடல்தசை தளர்ச்சி பெற்றது போலே பாசங்களின் தாக்கம், மனத்தில் எழும் அச்சம் ஆகியவை தளரப்பெற்றுள்ளவர்களே, பிறவியாகிய துன்பத்திலிருந்து நீங்கியுள்ள பெரியோர் ஆவர்; குற்றங்களாகிய பாசம், அச்சம் ஆகியவை நீங்காதுள்ளவர்கள் இவ்வுலகில் என்றைக்கும் சிறியோர் எனப்படும் இழிந்தவர்களாவர் - என இவ்வாறு உள்ள நீதியை உய்த்து உணர்வோர் அனைவரும் அற்புதனாகிய அறுமுகப்பெருமானுக்கு அடியவரே ஆவர். அத்தகையோர் ஆர்வத்துடன் வணங்கித் துதிக்கும் கந்தப்பெருமானே என்னை முழுவதுமாகத் தன்னுள் ஐக்கியப்படுத்திக் கொள்வான்.

புளிமா.

உடலே பெரிதா யுதரஞ் சழிவா யுளருஞ் சரைதா னுளரும் பொருளே
அடர்பா வுளரும் பெரியோ ரலரே யறிவா யவரும் பொருளே யுடையோர்
உடலே சிறிதாய் வயதே குறைவா யுளரென் றிடினும் பெரியோ ரவரே
அடல்வே லனையுந் தெரிவோ ரவரே யறிவா லறிவீர் மனுவா னவரே. 134

பெரிதாகத் திகழும் உடலும், பருத்துச் சரியும் வயிறு உடையவர்களும், வயது முதிர்ச்சி அடைந்தவர்களும், பொருள்வளம் செறிந்துள்ள நிலபுலன் உடையோரும் பெரியோர் அல்லர்; மெய்ப் பொருளை உணரவல்ல அரிய ஞானச் செல்வத்தை உடையோர், தோற்றத்தில் சிறியவராக இருந்தாலும், வயதில் குறைந்திருந்தாலும்

134. சழிவு = சப்பளிந்தது.

அவர்களே பெரியோர் ஆவர். அவர்களே ஆற்றல் மிகுந்த வேலவனின் உண்மை நிலையையும் உணரவல்லவர்களாக ஆவர். மனிதர்களே! இதனை உங்கள் அறிவால் உய்த்துணர்ந்து கொள்ளுங்கள்.

கூவிளங்காய் கூவிளங்காய் கூவிளங்காய் கூவிளங்காய்
கருவிளங்காய் கூவிளங்காய் கருவிளங்காய் கூவிளங்காய்.

தானதந்த தானதந்த தானதந்த தானதந்த
தனனதன தானதன தனனதன தானதனா

தாதுவிஞ்சு சேடிருந்து தாதடங்கு போதுசம்பு
சரணமுற ஞானகுரு நெறியடைமி னேடியெனா
ஓதுகின்ற நூல்விரும்பு ஞாலமைந்த ரேசுமந்த
வுடலுறுதி யோவிடையு மழிவடையு மேயதனால்
மாதுகொஞ்சு பீடைமங்க வோடியன்பர் தேடுகந்தன்
மதிமருவு ஞானிகள்சொல் வழியைவிரை வாயடைவீர்
கோதுகொன்று ளார்விரும்பு வேதமிந்த வாறியம்பல்
குறைவறுவி வேகமென வறிநரும னேகரரோ. 135

ஏழ்வகைத் தாதுக்களும் மிகுந்து வீறுடன் அமையும் உடல் இருக்கும்போதே விருப்பம்போல் உலகவாழ்வில் திளைத்துப் பின்னர் வயதுமுதிர்ச்சியில் தாதுக்களின் வீரியம் அடங்கிநிற்கும் போது இறைவனின் பாதங்களை அடைய, ஞானகுரு கூறும் நெறியைத் தேர்ந்து அடையுங்கள் எனக் கூறும் நூல்களை விரும்புகின்ற உலகமாந்தர்களே! இப்போது உங்கள் உயிரைச் சுமந்துள்ள உடல் உறுதியானதோ? இடையிலேயே அழிந்து போகுமே! அதனால் பெண்களைக் கொஞ்சும் இழிசெயல் நீங்கும் வகையில் இடையறாது விரைந்து செயல்பட்டு, அன்பர்கள் நாடும் கந்தனின் அறிவைப் பொருந்தும் ஞானியர் கூறும் வழியை விரைவில் அடைவீர்களாக! குற்றங்களை அறவே நீக்கியுள்ள ஞானியர் விரும்பும் வேதநூல்கள் இவ்வாறு கூறுவது, குறைவற்ற விவேகமே என அறிகின்றவரும் அனேகர் அல்லரோ!

புளிமாங்காய் கருவிளங்காய் கருவிளங்காய் கருவிளங்காய்
கருவிளங்காய் கருவிளங்காய் புளிமா தேமா.

அறியாமை கடுத்தறிரி பெனுங்கசடு தவிர்ந்துநிஜ
மறைசுருதி பிடித்துநவில் குருமுன் னாகிக்
குறியாத குறிப்பொருளை யுரிமையொடு முணர்ந்துறுதி
கொடுகருவி முதலியன தழையா நீர்மை

136. கடுத்தல் = ஐயம்; "கடுத்தலொப் பையம்" என்னும் ககரவெதுகை.

பெறுமாறு மனமடக்கி யிருப்பவர்கள் விரும்புபரப்
பிரமமெனுந் திருமுருகப் பெருமாள் கூறும்
அறைநாடி யிரவுபகல் வழிபடுமென் கவலையற
வளிப்பதவன் செயலெனலென் றுணிபே மன்னோ. 136

அறியாமை, ஐயம், திரிபு முதலான குற்றங்கள் நீங்கப்பெற்று, மெய்ப்பொருள் நுட்பம் கூறும் வேதத்தைப் பற்றிக் கொண்டு, அதன் நுட்பொருளை உபதேசிக்கும் குருவின் முன்னர் இருந்து, சுட்டி அறியப்பட முடியாததாய், ஆனால் தியானத்துக்கு உட்படுவதாக உள்ள பரம்பொருளை உரிமையோடு நன்குணர்ந்து, உறுதிபூண்டு, கருவி கரணங்கள் உலகநெறியில் தழைக்காத வகையில் மனத்தை அடக்கி ஒருமுகப்படுத்தி தியானத்தில் திளைக்கும் யோகியர் விழைந்து துதிக்கும் பரப்பிரம்மம் என விளங்கும் திருமுருகப் பெருமான் எளிவந்து கூறியருளிய உபதேசமொழியையே இரவு பகலாகச் சிந்தித்து வழிபடுகின்ற எனது மனக்கவலை முழுவதுமாக நீங்கக் கருணைபுரிவது அவனது கடமையாகும் என்பது எனது உறுதியான கருத்தாகும்.

தேமா கூவிளம் புளிமா கூவிளம் தேமா கூவிளம் புளிமா கூவிளம்.

தான தந்தன தனன தந்தன, தான தந்தன தனன தந்தன.

ஆதி முன்பதி சிகர மந்தர மாசி லின்பருள் வகர மொன்றுற
ஓதி னொண்சிவ மெனவெ ழுந்திடு மூறு கொன்றிடு மதன நும்பொருள்
ஏதின் மங்களம் வசிய மென்றெழு மேயி தென்குரு பெயரு ளொன்றென
ஆத லுந்தெரி பவர்கள் கந்தன தாடல் கண்டிட வடிவ ணங்குக. 137

முதலில் இருப்பது பதி எழுத்தாகிய ‘சி’ என்பது; அடுத்து இருப்பது மாசிலா ஆனந்தப் பேறு அருளும் சக்தி எழுத்தாகிய ‘வ’; இந்த இரண்டு எழுத்துக்களையும் சேர்த்து ஓதினால் ‘சிவ’ எனும் சொல் எழும். நமது துன்பங்களையெல்லாம் அகற்றிவிடும் அந்தச் சொல்லின் நுட்பமானபொருள், ‘குற்றமில்லாத மங்களப்பேறு அளிக்கும் ‘வசியம்’ (தன் பால் ஈர்ப்பது) என்பதாகும், இது என் குருநாதனின் திருப்பெயர்களுள் ஒன்றாக (சிவ என்பது) ஆதலையும் உணர்பவர்கள், கந்தப் பெருமானின் அருட்செயல்களையெல்லாம் காண, அவனது திருவடிகளை வணங்குவார்களாக.

இவ்வளவில் வந்துள்ள சந்த பேதங்களன்றிப் பிறபேதங்களும் எண்சீரில் வரும். அவை யெங்ஙனமெனின்; அடுத்த கலியியலில் 94 முதல் 99-வரையுள்ள விருத்தங்க ளொழிந்த பிற அளவடி விருத்தங்களுட் சிலவற்றி னடிச்சந்தங்க ளிரட்டும் வழியிலெங்க.

ஒன்பதின்சீர்க்கழிநெடிலடியான்வருவன.

புளிமா கூவிளம் புளிமா கூவிளம்
புளிமா கூவிளம் புளிமா கூவிளம் கருவிளம்.

கூலந்த வைந்தின கரந்தி ரோதைம
கரம்ப ழங்கறை யிரண்டி ரும்பதி யவங்கியாம்
மலந்த ளும்படி விரும்பு வோர்தலை
மலந்தி ரோதைக ளிரண்டு மேகடை யமர்ந்திடக்
கலந்து கோடலு மிரண்டெ னும்பதி
கனிந்து கோடலு மருஞ்சி காரமெ னுமொன்றையே
மலர்ந்து கோடலு மியைந்த வாறெனும்
வரம்பர் நாடொரு கடம்ப னேயெனை யுணும்பிரான். 138

திருவைந்தெழுந்து மந்திரத்தில் உள்ள ந-என்பது திரோதானத்தைக் குறிக்கும்; ம-என்பது மூலமலமான ஆணவத்தைக் குறிக்கும். சி, வ எனும் இரண்டும் முறையே சிவத்தையும், சிவத்துடன் அபின்னமாக விளங்கும் சக்தியையும் குறிக்கும். ய-என்பது ஆன்மாவைக் குறிக்கும். ஆணவமல அழுக்கு நீங்க வேண்டும் என விரும்புவோர் மலத்தையும் திரோதானத்தையும் குறிக்கும் எழுத்துக்களை இறுதியில் வைத்து, 'சிவாயநம' எனவும், பதி எழுத்துக்கள் இரண்டையும் இறுதியில் வைத்து 'நமசிவாய' எனவும், அரிதான 'சி' எனும் மகாஎழுத்து ஒன்றையே கொண்டு, மகாமந்திரம் எனவும் தத்தமது பக்குவத்துக்கு ஏற்றவாறு கொள்ளும் வரைமுறையில் இருப்பவர்கள் விரும்பித் துதிக்கும் கடம்பனே என்னைத் தன்னோடு ஐக்கியப்படுத்திக் கொள்ளும் தலைவன் ஆவான்.

கருவிளங்காய் தேமா தேமா கருவிளங்காய் தேமா தேமா
கருவிளங்காய் தேமா கூவிளம்.

தனனதன தான தான தனனதன தான தான
தனனதன தான தானனா.

*சகரமுத லாறு மாசில் பதியகர மாவ தாவி
சரதநம பாச மாமெலாம்
நிகழுமொழி மேனி லாவு பொருள்சரவ ணேச னான
நிருமலன மாவெ னாகுமே

138. அங்கி = அங்கத்தை யுடையது, ஆன்மா.

பகரிவையொ டோமு மேறி னெடியதச மாம்வி சேட
பலனுறவ வாவு மூழுளோர்
புகழுமெதை யேனும் வீர வுறுதியொடு கோடி யேசெய்
புனிதமுறின் வீடு மாள்வரே. 139

திருவாறெழுத்து மந்திரத்தில் 'ச' முதலான ஆறு எழுத்துக்களும் பதியைக் குறிக்கும்; ய - எழுத்து ஆன்மாவைக் குறிக்கும்; வாய்மையுடன் விளங்கும் 'நம' எனும் எழுத்துக்கள் முறையே திரோதானம், ஆணவம் என்பனவற்றைக் குறிக்கும். இவ்வாறு நிகழும் மந்திரத்தில் அடங்கியுள்ள உட்கருத்து 'சரவணன் என்னும் ஈசனாகிய நிர்மலன்' என்பதாகும். இது நவாக்கரி எனப்படும் மந்திரம் (சரவணபவாய நம). இதனோடு பிரணவ எழுத்தாகிய ஓம் என்பதைச் சேர்த்துக் கொண்டால் தசாக்கரி மந்திரமாகும் (பத்தெழுத்து மந்திரம்). விசேடமான பலன்களைப் பெற விரும்பும் நல்வினைப் பயன் உள்ளோர், இவற்றுள் யாதேனும் ஒன்றைக் குருமூலமாக உபதேசம் பெற்றுக் கொண்டு, தளராத உறுதிப்பாட்டுடன் ஜபிக்கும் புனிதத்திறன் பெறின் அவர்கள் வீடுபேறு அடைவது உறுதி.

கூவிளம் தேமா கூவிளம் தேமா
கருவிளம் தேமா கூவிளம் கூவிளம் கூவிளம்.
தானன தந்த தானன தன்ன, தனதன தந்தத் தந்தன தானன தானனா.

[சதாக்கரம் (நூறெழுத்து.)]

வாசக மந்த மானத மென்னும்
வகையினி லொன்றிற் கொன்றுயர் வாய்நல மீயுமால்
நாசமி லந்த வாசக மென்ன
நவில்வது துன்பச் சந்தெறு மாமனு வோதிடா
தாசறு மந்த மானத மென்னு
மடைவின்மு யன்றொட் பம்பெறு வீரிலை வேலொடே
ஏசறு கந்த னாமென மின்னி
யெளிவரு மெந்தைக் கின்புள ராமடி யார்களே. 140

---

* இவ்வாறு திருப்பரங்கிரிப்புராணம் 8-வது சருக்கம் 23-வது செய்யுளில், "நவ்வாதிய சவ்வாதி நலஞ்சே ரெழுத்தோதி - யெவ்வாறருள் பெற்றார்" என வருவது காண்க. "இந்த, 139-வது செய்யுளில் ஸ்ரீ சுப்பிரமணிய சடக்கரமும், பொருளும், சடக்கரத்தில் நவாக்கரமும், சடக்கரத்தில் தசாக்கரமுங் கூறி அவற்றுளெதனையேனுஞ் செபிக்கு மளவும், பயனும் விளக்கப்பட்டன."

இலைபோன்று ஒளிரும் வேற்படை ஏந்தி, 'குற்றம் போக்கும் கந்தன் நாம்' என ஒளிவீசி அடியார்களுக்கு எளிவந்து நிற்கும் எந்தையாகிய முருகனுக்கு இன்புடையராகிய அடியார்களே! பிறர் செவிக்கு புலப்படுமாறு மந்திரத்தைச் சொல்லும் வாசகம் எனவும் வெளியே ஒலிவராமல் நாவை மட்டும் அசைத்துச் சொல்லும் மந்தம் எனவும், நாவையும் அசைக்காமல் மனத்தால் ஜபிக்கும் மானதம் எனவும் திகழும் மூவகை ஜபமுறைகளில், முறையே ஒன்றனுக் கொன்று உயர்வான பலனைக் கொடுக்கும். அழிவில்லாத வாசகம் எனக் கூறப்படும் ஜபமுறை துன்பத்தையும் அச்சத்தையும் போக்கும் எனினும், மகாமந்திரத்தை இவ்வாறு வாசகமாக ஓதாது, குற்றங் களைப் போக்கும் மந்தம், மானதம் எனக் கூறப்படும் முறைகளில் ஈடுபட்டு ஞான வொளியையும் மேன்மையையும் பெறுவீர்களாக.

கூவிளம் கருவிளம் புளிமாங்காய் கூவிளம்
கூவிளம் கருவிளம் புளிமாங்காய் கூவிளம் கூவிளம்.
நானன நனநன நனநத்த நந்தநந்
நானன நனநன நனநத்த நத்தன நந்தனா.

**வா**ர்கர விரல்களில் வளர்சுட்டி லொண்கணென்
வாசக செபமணி தனைவைத்து ருட்டுக நன்குநீள்
ஓர்விரன் மிசையொலி யளவிட்டு மந்தமண்
ணோர்புகழ் செபமணி தனைவைத்து ருட்டுக மஞ்சுசேர்
வார்பணி விரன்மிசை யெழின்மிக்கி லங்குநன்
மானத செபமணி தனைவைத்து ருட்டுக பந்தபூ
ஆர்விலர் வலமுற வுமுருட்டு கென்பரம்
மாரண வறுமுக விறைவற்கு ரித்துள வன்பரே. 141

எளியேனின் பரம்பொருளும் வேதநாயகனுமான அறுமுக இறைவனுக்கு உரிமைப்பட்டுள்ள அன்பர்களே! வாசக ஜபம் செய்யும் பொழுது, நீண்டுள்ள கைவிரல்கள் ஐந்தனுள் சுட்டுவிரலில் ஜபமாலையை வைத்து உருட்டி எண்ணுக; நன்கு நீண்டுள்ள நடுவிரலில் மந்த ஜபம் செய்யும் பொழுது, உலகோர் புகழும் ஜபமணி மாலையை வைத்து உருட்டுக; மானத ஜபம் செய்யும் பொழுது நீண்டுள்ள மோதிரவிரலில் எழில்மிகுந்து விளங்கும் ஜபமாலையை வைத்து உருட்டுக. பந்தப்படுத்தும் உலக ஆசையை ஒழித்தவர்கள் வலமாக (மேல்நோக்கி) உருட்டுக.

இதன் குழிப்பில் நா - ந வருமிடங்களில் தா - த வருமாயின் ; நான்காஞ்சீ ரந்தமும், ஐந்தாஞ்சீ ராதியும் 'தந்தா' என நிகழும். அஃதிங்கேலாது. ஆகலின், இப்பாப் போன்று நிகழ் பாக்கட் கிடுகுழிப்பில் நகரமே வரல்வேண்டுமென வறிக.

**பதின்சீர்க்கழிநெடிலடியான்வருவன.**

தேமா.

பூத லோக போக வாசை யேயு ளார்பு கன்ற மந்தி ரங்க ளோதல்
போத சந்த்ர நாடி யோடு போழ்தும் லோக போக மேதும் வேண்டி டாதார்
தீதில் பானு நாடி யோடு போதும் வேத சித்தி முத்தி வேண்டு வோர்கள்
கோதி லங்கி நாடி யோடு போது மென்று கூறு வார்கு கேசர் தாசர். 142

ஐம்பெரும் பூதச் செறிவான இந்த உலகுத் தொடர்பான போகப் பேறுகளைப் பெறும் ஆசை உள்ளவர்கள், முற்கூறப்பட்ட மந்திரங்களை ஜபிக்க வேண்டிய காலம், அறிவை மிகுவிக்கும் சந்திரநாடியில் (இடைகலையில்) மூச்சு ஓடும் காலமாகும். உலகபோகம் ஏதும் வேண்டாதவர்கள் குற்றமற்ற சூரியநாடியில் (பிங்கலையில்) மூச்சு ஓடும் போதும், வேதம் புகழும் அத்துவித முத்திப்பேற்றை விரும்புவோர், குற்றமற்ற அக்னிநாடியில் (சுழுமுனையில்) மூச்சு ஓடும் போதும் மந்திரங்களை ஜபிக்க வேண்டும் என குகப்பெருமானின் அடியார்கள் கூறுவார்கள்.

கருவிளம் கூவிளம் கூவிளம் கருவிளம் தேமாங்காய்
கருவிளம் கூவிளம் கூவிளம் கருவிளம் தேமாங்காய்.

வரதகு கேசவ ணக்கமு னவனது சட்கோண
வரைபொறி செய்துகு ளித்திடு சலமதை வற்றாத
தரமுறு கங்கைகொ தாவரி நருமதை காவேரி
தகையுறு சிந்துச ரச்வதி யமுனைச தாசார
நிரறகு கிட்டிணி தாமிர பருணிநெ டுஞ்சீரே
நிகழொரு பத்திரி யாகவு மவைகணி ஜஞ்சேருஞ்
சரவண தீர்த்தமெ ணாவெணி முழுகுக தப்பாது
தவளவி பூதிநி ரம்பிட வணிகுக தக்காரே. 143

வரங்களை அருளும் குகேசப் பெருமானை வணங்குவதற்கு முன்னம் நீராட வேண்டும். நீராடும்போது, குளித்திடும் நீர்ப்பரப்பில் சட்கோண யந்திரத்தைப் பவித்திர விரலால் வரைந்து, அந்த நீரை

143. நிகழ்தல் = ஒளி விடுதல். இது "துளங்குதனிகழ்தல் சுடர்தல் *** என்றிவை யொளிவிடலாகும்" எனப் பிங்கல நிகண்டிலும் வருவது காண்க. பத்திரி = துங்கபத்திரி. இது தலைக்குறை.

வற்றாத ஜீவநதிகளாகிய கங்கை, கோதாவரி, நர்மதை, காவேரி, தகுதிசான்ற ஸிந்து, ஸரஸ்வதி, யமுனை, நல்லொழுக்க நடைதரும் கிருஷ்ணவேணி, தாமிரபரணி, நெடும்புகழ்மிக்க துங்கபத்திரி என்னும் ஆறுகளாகவும், அவை அனைத்தும் தன்னிடம் சேர்ந்து விளங்குமாறு திகழும் சரவணதீர்த்தம் என்பதாகவும் சங்கல்பித்துக் கொண்டு நீரில்மூழ்கிக் குளிக்க வேண்டும்; பின்னர் வெண்ணிறத் திருநீற்றைத் தமது மேனியில் உரிய இடங்களில் முறைப்படி அணிந்துகொள்ள வேண்டும். அருட்பேற்றுக்குத் தகுதிசான்ற அடியார்கள் நாள்தோறும் இந்த நியதியைக் கடைப்பிடிப்பார்களாக. (சிவஞானதீபம் அனுட்டானவியல் காண்க.)

முதலாம் நான்கா மாறா மொன்பதாஞ் சீர்கள்: கூவிளம்.

காலையின் மாலையி லங்கநி யாசமு மஞ்சேறு
கையினி யாசமு நன்குபு ரிந்துயர் காங்கேயன்
மூலம னுச்செபி யாதவர் தஞ்செப முற்றாமன்
முட்டடை யும்பல னுங்குறை வாமயின் மொய்ம்பீசன்
சீலவெ முத்துவ ரைந்துதி கழ்ந்திடு சட்கோணஞ்
சேர்வழி பாடும தேவித மென்பர ருஞ்சேயோன்
போலொரு மெய்ப்பொருண் மெய்க்குரு வுண்டுகொ லென்றோரும்
புண்ணிய நண்ணிய கண்ணிய வின்புபொ லிந்தோரே.144

காலை, மாலை ஆகிய இரண்டு வேளைகளிலும் முறைப்படி அங்க நியாசத்தையும், அழகுமிகும் கரநியாசத்தையும் செய்துகொண்டு மேம்பட்ட காங்கேயக் கடவுளின் மூலமந்திரத்தை ஜபிக்காதவர்களின் ஜபம் முழுமையாக நிறைவு பெறாமல் தடைபட்டுவிடும்; பலனும் குறைவாகவே கிடைக்கும். (கரநியாசம், அங்கநியாசம் செய்து கொண்ட பிறகுதான் மந்திரத்தை ஜபிக்க வேண்டும்). வேல்தாங்கிய தோளுடைய குகேசனின் திருவாறெழுத்தும் வரையப்பட்டுள்ளதாகத் திகழும் சட்கோண யந்திர வழிபாடும், இந்த நியாசங்களைச் செய்து கொண்ட பிறகுதான் செய்யப்பட வேண்டும். இவ்வாறு, அரிய செவ்வேள் பரமனைப் போன்று ஒரு மெய்யான கடவுளும் மெய்க் குருவும் உண்டோ என ஆய்ந்துணரும் புண்ணியப் பேறு வாய்ந்த, பெருமிதப் பேற்றால் வரும் இன்பம் நிறைந்துள்ள, பெரியோர் இவ்வாறு கூறுவார்கள்.

தேமா விளம் விளம் விளம் மா மா விளம் விளம் விளம் மா.

நல்லை யாசன மளித்திடல் கைகழு நீர்தா
னல்கல் கால்கழு நீர்தரன் முக்குடி நீர்தான்
ஒல்லை யீந்திட லொண்சல மாட்டுத லாடை
யுடுத்தன் முப்புரி நூலிடல் சந்தனம் பூசல்
வல்லை மாமலர் சார்த்துத லட்சதை தூவன்
மாசி லாப்புகை தீபிகை வெண்கருப் பூரம்
தொல்லை யில்லமு தந்துவர்க் காய்மனு மலரென்
சோட சங்குக னுக்கிடு நருங்களி துய்ப்பார். 145

நல்ல ஆசனம் (இருக்கை) அளித்தல், கையைக் கழுவ நீர் அளித்தல், கால் கழுவ நீர் தரல், முக்குடிநீர் (ஆசமனம்) அளித்தல், நீராட்டு செய்தல், ஆடை அணிவித்தல், முப்புரிநூல் சமர்ப்பித்தல், சந்தனப்பூச்சு, தூய மலர்களைச் சார்த்துதல், அட்சதை இடல், தூபம் காட்டுதல், தீபம் காட்டுதல், கற்பூரம் ஏற்றல், புதிய அன்னம் நிவேதித்தல், தாம்பூலம் அளித்தல், மந்திரபுட்பம் சமர்ப்பித்தல் - இவ்வாறு உள்ள பதினாறு வகை உபசாரங்களையும் குகப் பெருமானுக்கு அளிப்பவர்கள் மகிழ்ச்சி நிறைந்த வாழ்க்கையில் திளைப்பார்கள்.

கூவிளம் கருவிளம் கூவிளம் கூவிளம் கருவிளம் கூவிளம்
கூவிளம் கருவிளம் கூவிளம் புளிமாங்காய்.

தத்தன தனதன தந்தன தத்தன தனதன தந்தன
தத்தன தனதன தந்தன தனதானா.

மத்தள மணிதுடி துந்துபி கத்திரி திமிலைக டிண்டிமம்
வட்டணை சிறுபறை மண்கணை பலதாமே
தித்திமி திமிதிமி தெந்தன டட்டட டடடட டுண்டுடு
தெய்த்தன வெனவெளி வந்தருள் குகதேவா
நித்தப ரமகுரு சங்கர சித்திர மயில்வரு சுந்தர
நிட்கள சரவண சம்ப்ரம வயிலீசா
இத்தரை யினிலுனை நம்பிய பத்தனெ னதுதுய ரந்துமி
யிட்டம ருவவரு ளென்றறை யெனையாளே. 146

“மத்தளம், மணி, உடுக்கை, துந்துபி, கத்திரி, திமிலைகள், டிண்டிமம், தாளம், சிறுபறை, மண் கணை (கஞ்சிரா) முதலான பல

இசைக்கருவிகளும் 'தித்திமி திமிதிமி தெந்தன டட்டட டடடட டுண்டுடு தெய்த்தன' எனப் பேரொலியை எழுப்ப வெளி வந்து அருளும் குகதேவனே! நித்தியனே! பரமகுருவே! சங்கரனே! அழகிய மயில்மேல்வரும் சுந்தரனே! நிட்கள நிலையினனே! சரவண! அனைத்தும் பரிபூரணமாக நிரம்பப் பெற்றுள்ளவனே! வேல் இறைவனே! இவ்வுலகில் உன்னை நம்பி இருக்கும் பக்தனாகிய எனது கவலையை ஒழித்தருள், நான் எண்ணியதை அடைய அருள்" எனத் துதிக்கும் என்னை ஆட்கொள்க.

இப்பதின்சீரில், இங்கு வந்த சந்தபேதங்களன்றிப் பிறபேதங்களும் வரும். அவை யெங்ஙனமெனின்; அடுத்த கலியியலில்வரு நெடிலடிக் கலிநிலைத்துறைகளுட் சிலவற்றினடிச்சந்தங்க ளிரட்டும் வழியிலென்க.

---

பதினொருசீர்க்கழிநெடிலடியான்வருவது.

புளிமா கூவிளங்காய் புளிமா கூவிளங்காய்
புளிமா கூவிளங்காய் கூவிளம்
புளிமா தேமா புளிமாங்காய் கூவிளம்.

தனன தந்ததன தனன தந்ததன தனன தந்ததன தந்தனா
தனன தந்த தனத்தந்த தானனா.

உலக வம்புமன முலவு கின்றவரை யொழிவ தின்றுமல பந்தமே
யுயரு மென்று நினைக்கின்ற வேழையேன்
அலகி றந்தவுன தடிய டைந்துசுக மணுக வந்தருள்வ தெந்தநா
ளறைதி யண்டர் துதிக்கின்ற பாதனே
இலகு தங்கமுடி சுடிகை கிம்புரியி ரதன மஞ்சிகைகள் கண்டமா
விழைசி லம்பு தரிக்கின்ற மேனியோய்
மலர்ந ரந்தமுயர் புழுகு கந்தபொடி மலய சங்கமழ்சு கந்தமே
மலிக டம்பு மணக்கின்ற மார்பனே. 147

உலக வாழ்க்கை தொடர்பான போகப்பற்றுக் கொண்டு மனம் உழலுகின்ற வரையிலும் பந்தங்கள் நீங்க மாட்டா; அவை மேன்மேலும் அதிகரிக்கும் எனக் கருதும் எளியேன், அளவைக் கடந்து வியாபித்திருக்கும் உனது திருவடியை அடைந்து

147. கண்டமாஇழை = அழகிய கண்டாபரணம்.

ஆனந்தானுபவத்தைப் பெறும் பொருட்டு என்முன் எழுந்தருள்வது எப்போது? கூறியருள்! தேவர்கள் துதிக்கின்ற பாதங்களை உடையவனே! ஒளிதிகழும் பொற்கிரீடம், நெற்றிச்சுட்டி, கிம்புரி, ரத்தினங்கள் இழைக்கப்பட்டுள்ள குண்டலங்கள், கழுத்தில் அணியும் அழகிய ஆபரணங்கள், சிலம்பு முதலான அணிகலன்களைப் பூண்டுள்ள திருமேனி உடையவனே! மலர், கத்தூரி, புழுகு, மணப்பொடி, மணம் மிக்க சந்தனம், நறுமணம் சிறந்துள்ள கடம்பு முதலானவற்றின் மணம் நிறைந்துள்ள திருமார்பை உடையவனே!

---

**பன்னிருசீர்க்கழிநெடிலடியான்வருவன.**

காய்.

பிருதிவில காரமறல் வகரமனல் ரகரமுயிர் பீடுடைய யகரமேலே
பிரபலம தானவெளி ஹகரமென நிற்கின்ற பீசவிவ ரந்தெரிந்தோர்
திருவுதவு மாமனுவி லனலுடைய பீசமது சேரினல னீங்குமென்று
செப்பிடுவ ரவ்வாறு செப்புமவ ரேபரம சேய்விமல மேனிதானே
பொருவறுபெ ருஞ்சோதி யாயுள்ள தானுமெரி புதல்வனெனு நாமமொன்று
புனிதமுடை யச்சேய வன்பெறுத லானுமெழில் பூக்கின்ற பாவகிப்பேர்ப்
பெருமையுடை யவனாம மனுவிலுள ரகரமொரு பீடையும ளித்திடாது
பேசரிய கறைசீக்கு மருளுதவு மென்பருயர் பெற்றிகள வாவுவோரே.148

உயர்ந்த பேறுகளை விரும்பி நிற்கும் அன்பர்களே! நிலத்தைக் குறிக்கும் 'ல'; நீர்க்குரிய 'வ'; நெருப்புக்கு உரிய 'ர'; காற்றுக்குரிய 'ய'; முதன்மையாய் விளங்கும் ஆகாயத்துக்கு உரிய 'ஹ' - என உள்ள பீஜாக்ஷரங்களைப் பற்றிய நுட்பமான கருத்துக்களை அறிந்துள்ளவர்கள் "பேறுகள் தரும் மகாமந்திரத்தில் நெருப்புக்கு உரிய பீஜமான 'ர' எழுத்துச் சேருமானால், நன்மைகள் நீங்கும் எனக் கூறுவார்கள். ஆனால் அவ்வாறு கூறுபவர்களே சிவகுமாரனின் திருமேனியே ஒப்பற்ற பேரொளி மயமாக இருப்பதாலும், அக்னிகுமாரன் என்னும் ஒரு திருப்பெயரைப் புனிதம் வாய்ந்த செவ்வேள் ஏற்றிருத்தலாலும், அக்னி எனப்பொருள்படும் பாவகி எனும் பெருமைக்குரிய பெயருடைய அவனது திருப்பெயராகிய மந்திரத்தில் உள்ள 'ர' எனும் பீஜம் எவ்விதமான துன்பத்தையும் அளிக்காது; விவரித்துக் கூறுதற்கரிய மலமாகிய பந்தத்தை அழிக்கும்; அருட்பேறுகளைக் கொடுக்கும்" எனக் கூறுவார்கள்.

இதுபோன்ற வோசையுடைச்செய்யுள் : இதில்வருங் காய்ச்சீர்களோடு சிலவிடங்களில் மா, விளம், கனி, பூ வெனுஞ் சீர்களைக்கொண்டும் முடியும். விவரம் - அடியில்வரு 149-வது செய்யுட்கண் வெளியாம். இவ்வா றோசை சிதையாது வருவிருத்தங்களிற் சீர்கள் பேதப்படுதல் வழுவல வென்க.

உச்சவிசை மந்தவிசை யொத்தவிசை யென்பன
வுணர்ந்துகலி காலமதிலும்
உண்மையரு ளீயுமெங் குமரகுரு மனுவைநனி
யுச்சரிக் கின்றவர்களை
நச்சரவு தீண்டாது ககனவா சிகளாக
நவினிசா சரர்கள்பற்றார்
நமன்றமர் நெருங்கார் பெருந்தீ யெனப்பேய்க
ணண்ணாவெ னாவாகமம்
நிச்சய நிகழ்த்துமென வுங்குகன துருவாக
நிகழுமோ ரக்கரத்தில்
நிலவிடு மகாரமு முகாரமு மகாரமு
நிரப்பற்ற விந்துநாதம்
விச்சைதரு பரமென்னு மாறுமுள வெனவுமவை
வேலிறைவ னாறெழுத்தை
மேவுமொரு சூக்கமென வும்பகர்வ ரிவ்வுலகை
வெல்லுரை விளம்புபவரே. 149

இந்த உலக பந்தத்தை வெல்ல வல்ல மெய்ப்பொருளை உரைக்கும் ஞானியர், “உச்சம், சமம், மந்தம் எனும் மூன்று கதிகளில் மந்திரம் ஜபிக்கும் முறைகளை உணர்ந்து, இந்தக் கலிகாலத்திலும் பொய்த்துப்போகாத அருளை வழங்கும் எம் குமரகுருப் பெருமானின் மந்திரத்தை முறைப்படி ஜபிக்கின்றவர்களை விடப்பாம்பு தீண்டாது; ஆகாசத்தில் வாழ்வோர் எனக் கூறப்படும் அசுரர்கள் (நிசாசரர் - இரவில் சஞ்சரிப்போர்) பற்றிக்கொள்ளார்; யமனின் தூதுவர்கள் நெருங்கார்; பெரு நெருப்பு எனக் கூறுமாறு பேய்கள் அணுகிப் பிடித்துக்கொள்ளா” என உறுதியாக ஆகமநூல்கள் கூறும் எனவும் குகப்பெருமானின் உருவமயமாக விளங்கும் பிரணவாக்ஷரம் ஒன்றிலேயே அ, உ, ம, விந்து, நாதம், பரம் எனும் ஆறு சூக்கும எழுத்துக்களும் திகழ்கின்றன எனவும், அந்த ஆறும் வேலிறைவனுக்குரிய ஆறெழுத்துக்களின் சூக்கும நிலைகள் எனவும் கூறுவார்கள்.

இது பதினான்கு சீரடிச்செய்யு ளாகாதென்பதை இவ்வியல் 50-வது செய்யுளின் கீழ் விளக்கிய நியாயத்தினுணர்வதோடு, இதனிரண்டாமடியிலும் "னாவாகமம்" என்பது இரண்டு மாஞ்சீராகாமல் நேர் நேர் நிரையாக நிற்பதுணர்க. ஆதலின், இவ்வோசைப்படு மிதன் முற்செய்யுளும், பிற்செய்யுளும் பன்னிருசீரடிச் செய்யுளேயாத லியை பென்க.

கருவிளம் கருவிளம் கருவிளம் கருவிளம் கருவிளம் கருவிளங்கனி
கருவிளம் கருவிளம் கருவிளம் கருவிளம் கருவிளம் கருவிளங்கனி.

தனாதன தனாதன தனாதன தனாதன, தனாதன தனான தனனா.

சமானமில் பதாதியு டையாய்நிம லதாரக
சதாநட னஞானமுருகா
சராசர மெலாமரு ளியேநிறு வியீறுசெய்
சதாசிவ நகாரியயிலோய்
விமானசு ரநாயக விரோதந டையாளர்கள்
வினோதவி றனூறுவிறலோய்
விவேகப ரிபூரண விலாசம றைநாயக
வியாகர ணநாதகுழகா
அமானக ருணாகர வனாரத திவாகர
வதீதகு ருநாதபரிபூ
அபேதநெ றியாளர கபீடம மரீசுர
வபூருவ சிகாவளபரா
குமாரகு ருதாசனி றைவாகுற மடாடவள்
குரோதமி றெய்வானைதலைவா
குரூபமில் குகேசவெ மையாளென வளாவுநர்
கொளார்பிற வியேய்வரமுதே. 150

நிகரற்ற காலாட்படை முதலான சைன்னியத்தை உடையவனே! நிர்மலமான பிரணவ சொரூபனே! எப்போதும் நடனம் செய்யும் ஞான முருகனே! அசையும் பொருள், அசையாப்பொருள் ஆகிய அனைத்தையும் ஆன்மாக்களின் பொருட்டாகப் படைத்தும் காத்தும் ஒடுக்கியும் வரும் சதாசிவ மூர்த்தியே! பாவங்களாகிய மலைகளுக்குப் பகைவனாக விளங்கும் இந்திரனே! வேற்படை ஏந்தியவனே! விமானத்தில் உலவும் தேவர்களின் தலைவனே! மாறுபாடுமிக்க செயல்களைச் செய்பவர்களாகிய அசுரர்களின் மாயைத் தோற்றங்களையும் ஆற்றலையும் அழிக்கும் வெற்றிச்சிறப்பு

மிகுந்துள்ளவனே! விவேக ஞானத்தின் பரிபூரணநிலையில் விளங்குபவனே! விரிந்துள்ள வேதங்களின் தலைவனே! வியாகரண (இலக்கண) நூலின் முதல்வனே! இளையோனே! அளவற்ற கருணைக்கு இருப்பிடமாக உள்ளவனே! எப்பொழுதும் ஒளிவீசும் சூரியனே! தத்துவ எல்லைக்கு அப்பாற்பட்டுள்ள குருநாதனே! அனைத்தையும் தாங்கும் பூமியைப்போல் அனைத்திற்கும் ஆதாரமாக உள்ளவனே! பேதமற்ற நெறியில் செல்லும் ஞானியரின் இதயமாகிய பீடத்தில் அமரும் ஈசுவரனே! அதிசயமான மயில்மேல் வரும் பரனே! குமரகுருதாசனுக்கு வாய்த்துள்ள இறைவனே! இளமைச் செழுமை மிக்க குறமகள் வள்ளிக்கும், வஞ்சனை இல்லாத தெய்வானைப் பிராட்டிக்கும் கணவனே! அழகற்ற வடிவத்தையும் அழகாக்கும் குகேசனே! எம்மை ஆட்கொள்க" என மனம் கலந்து துதிப்போர் பிறவியை இனி அடையமாட்டார்கள்; அமுத ஆனந்தப் பேற்றையே அடைவார்கள்.

காய் காய் காய் காய் மா மா காய் காய் காய் காய் மா மா.

மந்தசபம் பெரிதிதினு மானதம துயர்விதினும் வனப்பு மீக்கொள்
வன்னவுரு வாகவழி படுமூர்த்தி நினைதலுயர் விதினு மாசார்
பந்தமெனுங் கருவிகடந் தொளிர்குகனை யறிந்துணர்வு படர்ந்த வாறே
படரறுச மாதியினைப் பாராது பார்ப்பதுயர் விதுபோ லீசன்
தந்தமுத னூலுநிகழ்த் திடுமிஙனம் விளக்கியச மாதி தன்னைச்
சாரவிய லாதுதயங் கிடுமிளைஞ ரிரவிமதி சரியா வேளை
வந்திடுமோர் சுழுனைநிகழ் போதுலக நினைவொழிந்து மதியாய் நின்றால்
மரீஇயிடு வாரந்த வறிதறுச மாதியிஃது பாய மன்னோ. 151

வெளியே ஒலி புலப்படாவண்ணம் நாவசைத்துச் செய்யும் ஜபம் பெரியது; அதனைக்காட்டிலும் மானசீகமாக ஜபிக்கும் மானதஜபம் உயர்வுடையது; அதனைக்காட்டிலும் அழகு மிகுந்த மந்திரத் திருமேனியாகிய ஒரு வடிவத்தில் வழிபடு மூர்த்தியைத் தியானித்தல் உயர்வுடையது; அதனைக் காட்டிலும் மாசு நிறைந்த பந்தமாகும் கருவி கரணங்களைக் கடந்து ஒளிரும் குகப்பெருமானை நன்குணர்ந்து, அந்த உணர்வின் வழியே துன்பங்களை நீக்கும் சமாதி நிலையைப் பொருந்தி உலகைப் பார்க்காமலும் இறைவனையே

பார்த்தும் இருப்பது உயர்வுடையது (சாம்பவீ நிலையில் இருப்பது மிக உயர்வு). இவ்வாறுதான் சிவன் அருளிய முதல் நூலாகிய ஆகமம் கூறும். இவ்வாறு கூறப்பட்ட சமாதியைப் பொருந்த இயலாது தயங்கிநிற்கும் இளையோர், பிராணன் இடைகலையிலும் பிங்கலையிலும் செல்லா நிலையில் இயல்பாகவே சுழுமுனை நாடியில் சஞ்சரிக்கும்கால், உலக நினைவைத் தவிர்த்து ஞானமயமாய் நின்றால் உறுதிமிக்க சமாதிநிலையைப் பொருந்துவார்கள். இதுவே தகுந்த உபாயமாகும்.

கூவிளம் மா மா விளம் மா மா விளம் மா மா விளம் மா மா.

சானுமண் டலமீ ரெட்டே மாத்திரை தழைக்கு மீது
சதுத்தச முடனெட் டாகச் சாரொரு பிராணா யாமம்
ஈனமி லுயர்வு பாதி யெனினிழி வாகுங் காலே
யெனினதி யிழிவா மிம்மூன் றினிலெது மேலா தார்க்கு
நூனமின் மூன்றுங் கையி னொடிப்பொழு தளவி னாகு
நுவலரும் பெரிய வாழ்க்கை நுழைவிருப் புதித்த பேர்காள்
வானவ ரெல்லா மேத்து வானவ னான செவ்வேண்
மலரடிப் பரிவி னின்றே மருவுமி னுயர்வா மொன்றை.152

வலது முழங்காலை ஒருமுறை வலமாகச் சுற்றுவதாகிய சானுமண்டலம் என்பது 16 மாத்திரை கால எல்லையில் நிகழும். இது 48 மாத்திரைக்காலமாக நிகழ்வது ஒரு பிராணாயாமம். இது உயர்வான ஒன்று. 24 மாத்திரைக்காலமாக நிகழ்வது தாழ்வான பிராணாயாமம்; 12 மாத்திரைக் காலமாக நிகழ்வது மிகவும் தாழ்ந்த பிராணாயாமம். இந்த மூன்றனுள் எதனையும் செய்ய இயலாதோர்க்கு இம்மூன்று வகைகளையும் கைந்நொடி அளவின் அடிப்படையில் வைத்துக் கொள்ளலாம். புகழ்தற்கரிய பெரிய வாழ்க்கையில் ஈடுபட விரும்பும் அன்பர்களே! தேவர்கள் அனைவரும் போற்றி வணங்கும் தேவதேவனான செவ்வேட் பரமனின் தாமரைமலர் போன்ற பாதங்களில் இடையறாத பற்றுடன் இருந்து, இம்மூன்றனுள் ஏற்ற ஒன்றைக் கைக்கொண்டு பிராணாயாமப் பயிற்சியில் ஈடுபடுங்கள். (இங்கே குறிப்பிடுவது மூச்சடக்கும் பயிற்சி அல்ல, மனத் தடைப்பயிற்சி என அறிக.)

152. சானுமண்டலம் = வலது முழந்தாளை வலது கையான் வலயமாகத் தடவுமளவி லுண்டாகுங்காலம்.

விளம் விளம் மா மா விளம் காய், விளம் விளம் மா மா விளம் காய்.

ஆண்டொரு நூறுபி ராணா யாம மயர்ந்தப லத்தினையே
யாசறு குசைநுனி வீழ்நீர் மாத மருந்துந ரெய்துவரே
நீண்டவி வேகபி ராணா யாம நெறிப்படி யொன்றயர்வோர்
நிறைநதி யெக்கியம் விரதந் தானா தியில்வரு நீள்பயனோ
டேண்டரு சொர்க்கமு மேய்வர் பிரத்யா காரநி தம்புரிவோ
ரெழின்மறை யெக்கியம் யாவுநிதந்தா மிழைத்தவ ராகியவை
காண்டொறுங் காண்டொறு மின்பம தேசெய் கடியுயர் சிவலோகிற்
கைக்கொளு வாரெனு மேயா கமமா கந்தனி னைப்போரே. 153

பெருமைக்குரிய கந்தப்பெருமானை நினைத்திருக்கும் அன்பர்களே! இவ்வாறு நூறு பிராணாயாமம் செய்வதால் வரும் பயனைக் குற்றமற்ற ஒரு தருப்பையின் நுனியிலிருந்து விழும் நீரை ஒரு மாத காலம் அருந்துபவர்கள் அடைவார்கள். நியதிப்படி அதிகமாத்திரைக் காலம் கொண்ட பிரணாயாமத்தை ஒருமுறை செய்வோர், புண்ணிய நதிகளில் நீராடல், வேள்வி செய்தல், விரதம் அனுஷ்டித்தல், தானம் முதலான புண்ணியச் செயல்களைச் செய்தல் முதலியவற்றால் பெறக்கூடிய பயன் அனைத்தையும் பெறுவதுடன் துறக்க உலகப் பேறுகளை அடைவார்கள். தமது ஆன்மத் தொடர் பான பிணிப்பு களிலிருந்து விடுபட்டு (தத்வ நீக்கம் செய்து) இவ்வுலக காட்சிகள் அனைத்தையும் சிவத்தின் வெளிப்பாடுகளாகக் காண்ப தாகிய பிரத்தியாகாரம் எனும் யோக அங்கத்தை நாள்தோறும் செய்பவர்கள் வேதவேள்விகள் அனைத்தையும் நாள்தோறும் முறைப்படிச் செய்த வர்களாகி, பார்க்கும் போதெல்லாம் சிவானந்தத்தையே அளிக்கக் கூடிய தெய்வப்பொலிவு மிகுந்த சிவலோகத்தை அடைந்து அவ் வுலகிற்குரிய பேறுகளை அடைவார்கள் என ஆகம நூல்கள் கூறும்.

புளிமா மா காய் மா மா காய் மா மா காய் மா மா காய்

தெரிதற் கரிய குகதேவைச் சிந்தை நடுவே நாட்டியதிற்
சித்த நனிவைத் திருப்பதுதான் றெளிதா ரணையென் றோர்ந்துதினம்
புரிபொற் புடையார் மூவேழாப் புகலு கின்ற தலைமுறையுட்
புலவார் நரகங் கிடந்தாரைப் பொள்ளென் றெடுத்தே யவர்களுடன்

153. பிரத்தியாகாரம் = சீவவுபாதியை நீக்கிப் பிரபஞ்ச வுபாதியைச் சிவசொருப மாகப் பார்த்தல்.

பெரியற் புதமார் சிவலோகிற் பெரிய போக நுகர்ந்துய்வார்
பிழையில் பொருளைத் தயிலநடை போலத் தியான மேபுரிவோர்
இரிபுற் றளறு கிடக்கின்ற வினமு ழுவதுங் கரையேற்றி
யேய்ந்த வுடம்பு விட்டவர்போ லிருப்பா ரெனுநல் லாகமமே. 154

வெறும் நூலறிவால் மட்டும் அறிவதற்கு அரிய குகப்பெருமானை இதயநடுவண் இறுத்திக்கொண்டு, அவனது உருவத்திலேயே சிந்தனையைப் பதித்து இருப்பதுதான் தாரணை எனும் யோகாங்கமாகும் என உணர்ந்து நாள்தோறும் அதனைச் செய்பவர்கள் தனக்குமுன் 21 தலைமுறைகளில், தீ-நாற்றம் மிகுந்த நரகங்களில் யார்யார் உள்ளாரோ அவர்களை விரைவில் அந்நரகத்திலிருந்து விடுவித்து, அவர்களைப் புனிதர்களாக ஆக்கி அவர்களுடன், அற்புதம் மிகுந்த பெரிய சிவலோகத்துக்குச் சென்று அங்குள்ள இன்பங்களை அனுபவித்து உய்வர்; அருள்செய்வதில் தளராத கந்தப்பெருமானை, இடைவிடாது தைலதாரை போன்று தியானிப்பவர்கள், நன்னெறி நீங்கி நரகம் எனும் சேற்றில் கிடக்கின்ற தன் இனத்தில் உள்ளார் அனைவரையும் அத்துன்பத்திலிருந்து விடுவித்து முத்திக்கரையில் சேர்த்து, இந்தத் தூல உடம்பை இழந்தவர் போன்று ஆகி, சூக்கும உடலுடன் எங்கும் சஞ்சரிக்கும் யோகத்திறத்தில் இருப்பார்கள் என ஆகம நூல்கள் கூறும்.

இப்பன்னிருசீரில், இவ்வளவில் வந்த சந்தபேதங்களன்றிப் பிறபேதங்களும் வரும். அவை யெங்ஙனமெனின்; இவ்வியலுள் முற்போந்த வறுசீர் விருத்தங்களுட் சிலவற்றி னடிச்சந்தங்க ளிரட்டும் வழியிலென்க.

---

பதின்மூன்றுசீர்க்கழிநெடிலடியான்வருவது.

தேமா தேமா தேமா தேமா தேமா தேமா தேமா தேமா
தேமா தேமா தேமா தேமா புளிமாங்காய்.

தத்த தத்த தத்த தத்த தத்த தத்த தத்த தத்த
தத்த தத்த தத்த தத்த தனதானா

எத்த லத்து ருப்பொ ருட்கு மிக்க சித்தி னிறப தற்கு
ளிட்ட முற்ற வர்க்க கத்தி லகலாதே
சத்த சத்தி யைப்பெ ருக்கு நிர்த்த னத்த ருக்க ளித்த
சத்தை வர்ச்சி தப்ப டுத்து னருள்சூழா

155. அளித்தசத்தை – அளித்து + அசத்தை எனப் பிரித்துக் கொள்க.

முத்தர் சித்தர் பத்தர் மெச்சி யுட்ப டுத்து னற்ப தத்தை
முற்று மெற்க ளப்பில் பக்க முடனேயீ
சித்தி ரக்க லைக்கொடிச்சி யற்பு வைத்த ணைத்த ணைத்து
திக்கு நட்பி னிற்க ளிக்கு முருகோனே. 155

எந்த இடங்களிலும் இருக்கும் தூலமான வடிவுடைப் பொருள்கள் அனைத்திற்கும் மேம்பட்டதான சூக்கும ஞான வெளிக்குள் இருப்பதற்கு உளமார விருப்பம் கொண்டுள்ளோர்க்கு, அவர்கள் உள்ளத்திலிருந்து நீங்காமல் இருந்துகொண்டு, ஒலிமயமான மந்திர ஆற்றலை வளர்த்துக்கொண்டு பக்திமேலீட்டால் ஆடிக்களிப்பவர்க்கு 'சத்' இது 'அசத்' இது என உணரும் உணர்வை அளித்து, அவர்களிடமிருந்து 'அசத்' என்பதை விலக்கி அருளும் உனது அருளாற்றலையே நினைத்திருக்கும் முத்தர்கள், சித்தர்கள், பக்தர்கள் ஆகியோர் தங்களுக்குள் நிலையாகக் கொண்டிருக்கும் உனது நல்ல திருவடிகளை முழுவதுமாக அளவிலா அன்புடன் எனக்கு அளித்தருள்வாய்! சித்திர வேலைப்பாடுகள் அமைந்த சேலையை உடுத்துள்ள வள்ளியம்மையிடம் மாறாத அன்பு வைத்து மனத்தில் நிரந்தரமாகச் சேர்த்துக் கொண்டு மேன்மேலும் பொங்கும் அன்பில் மகிழ்ந்திருக்கும் முருகப்பெருமானே!

---

**பதினான்குசீர்க்கழிநெடிலடியான்வருவன.**

புளிமா மா மா மா மா மா விளம் புளிமா மா மா மா மா மா விளம்

அரிய மூல மொன்று மேய வாவி கட்கு ளறிவினின்
றருள்செ யன்பு ளானு மந்த மூல மோடு கருமமும்
பிரிவு றாத பிரள யாக லர்க்கு நல்ல மான்மழு
பிறழு கின்ற பெரிய நான்கு புயமொ டால காலமார்
கரிய கண்ட மூன்று கண்க ணிலவ வந்து பொருவிலாக்
கதியை நல்கு கருணை யானு மூல மாயை கருமமும்
விரிய வுள்ள சகலர் கட்கு வினைநி லத்தர் மேனிதான்
மிளிர வந்த னுக்ர கஞ்செய் விமல னுங்கு கேசனே. 156

விலக்குதற்கு அரிதான மூலமலமாகிய ஆணவம் மட்டும் பொருந்தியுள்ள உயிர்களாகிய விஞ்ஞானகலர்க்கு அவர்களின்

---

155. **அணைத்தல்** = மனத்தின்கட் சேர்த்தல்.

உள்ளிருந்து கொண்டு குருவாக விளங்கி அருள்செய்யும் அன்புள்ளவனும், ஆணவமலத்தோடு கன்மமலமும் சேர்ந்திருக்கும் பிரளயாகலர்களுக்கு மானும் மழுவும் ஏந்திப் பெரிய நான்கு கரங்கள், ஆலகால விஷம் தேங்கியிருக்கும் கரிய கழுத்து, மூன்று கண்கள் விளங்க வடிவத்துடன் வெளிப்பட்டு ஒப்பற்ற கதியை வழங்கும் கருணையுள்ளவனும் ஆணவம், மாயை, கன்மம் ஆகிய மூன்று மலங்களும் முழுமையாகப் படர்ந்துள்ள சகல வர்க்கத்து உயிர்களுக்கு, இந்தக் கன்ம பூமியில் வாழும் மனிதர்க்குரிய வடிவம் ஒளிருமாறு மானுட குருவாக வெளிப்பட்டு அருள்புரியும் விமலனும் எமது குகேசப் பெருமானே ஆவன்.

இச்செய்யுளின் 7-வது 14-வது சீரீறுகளில், மூவினவொற்றுக்களும் வரலாமெனவும்; ஏனைய சீரீறுகளில் வல்லொற்றும், வருஞ்சீர்முதற்கண் வல்லினநிற்க மெல்லொற்றும் வருமாயின் அவை யோசையைக் கெடுக்குமாகலின் வரவொண்ணா வெனவுமறிக. இவ்வாறு வேறு சிலவிருத்தங்கட்குங் கோடன் மரபு. சில விருத்தங்களின் சீர் உதாரணவாய்பாட்டுக்குச் சரியாயிருக்க வச்சீர்கட்கிடையின் மேற்காட்டியவாறு வரும் வல்லொற்று மெல்லொற்றுக்களும், அடியிடைவருஞ் சீரீறுகளின் மாத்திரையளவு குறுக நீளவருங் குறினெடில்களும் ஓசையைக்கெடுக்கும். இவ்வித வழுவொன்றுமில்லா விருத்தங்களே யிக்கண்டத்தி லுள.

தேமா காய் மா காய் மா காய் விளம் மா காய் மா காய் மா காய் விளம்.

அண்ட நேமிவியர் வைபை மானசமொ டைந்தெ னப்புகலும் யோனிசேர்
 ஆவி யாவையுமி ரட்ச கம்புரிய னாதி யீசனும்வி ரத்தியே
கொண்ட கண்டகதி நம்பு சீவரது கொள்ளு மாறெளிதின் முன்னைநாள்
 குமர னானவுனை யேகு ரங்கிமறை கூறு மோம்பொருள்வி ழைந்ததான்
மண்ட லத்துமுயர் விண்ட லத்துமருண் மலிய நிற்குநிலை யெக்கணும்
 மருட புத்தருளி யாளு ஞானகுரு மாசி லாநினைய லாதிலை
தொண்ட னேற்குமருள் கென்ற லட்டுமுரை தூய நின்செவிபு காதெனோ
 தோகை மஞ்ஞைவரு துய்ய னேயமரர் தொழுசு பாவமுரு கையனே. 157

முட்டை, விதை, சூடான ஆவி (வியர்வை), கருப்பை, மானஸம் என்னும் ஐந்தன் இடமாகப் பிறக்கும் உயிர்கள் அனைத்தையும் காப்பாற்றி அருளும் அனாதிப் பரம்பொருளான சிவபெருமானும், வைராக்கியம் கொள்வதால் அடையக் கூடிய உயர்ந்த நிலையை உறுதியாகக் கருதும் தூயோர், அந்த வைராக்கிய விரக்தி நிலையை எளிதாகக் கொள்ளும் வகையில் முன்பு இளங்குமரனாம் நின்திருமுன் சிஷ்ய பாவம் கொண்டு வணங்கி

வேதம் கூறும் பிரணவத்தின் உட்பொருளை உன்னிடமிருந்து கேட்க விழைந்தான். அந்தச் செயலால், மண்ணுலகிலும் விண்ணுலகிலும் அருள்பொங்க நிறைந்து நிற்கும் உனது வியாபக நிலையால் அனைத்து இடங்களிலும் வாழும் உயிர்களின் மருட்சியை அழித்து அவைகளை அருளி ஆட்கொள்ளும் ஞானகுரு, மாசற்ற உன்னைத் தவிர்த்து வேறு யாரும் இல்லை. 'எளியேனுக்கும் அருள்புரிக' என்று நான் ஓயாது கூறும் கூற்று, தூய்மையான நினது செவியில் நுழையாதது ஏனோ? தோகையுடைய மயில்மேல் வரும் தூயனே! தேவர்கள் அனைவரும் தொழுது வணங்கும் உயர்வுநிலையை இயல்பாகவே கொண்டுள்ள முருகையனே!

புளிமா கூவிளம் மா கூவிளம் மா கூவிளம் கூவிளம்
புளிமா கூவிளம் மா கூவிளம் மா கூவிளம் கூவிளம்.

படவ ராவணி யிடைய னாகிய பரசு பாணித னக்குமா
பரிவ றாமக னாக வுந்துணை படர்ச கோதர னாகவும்
சுடரு ஞானவி லாச மேயசு வாமி யாகவு முள்ளவே
டுகளி னித்திய பிரம சாரிசு சீல மார்கிர கத்தனே
அடவி வாழ்முனி சன்னி யாசியு மாவ னான்குமி லானெனா
வறிவி வேகிக ணெஞ்சி னாளும லங்கு சோதிவ்வி யோமமே
மடமு லாமெனை யாளு மாறெதிர் வருத லின்றுகொ னாளைகொல்
வளர்பு லாலுட னீங்கும் வேளைகொன் மதியி லேனறி யேனரோ. 158

படம் உடைய பாம்பினை இடையில் அணிந்திருப்பவனும் மழுப்படை ஏந்திய கையை உடையவனுமான சிவபெருமானுக்கு பேரன்பு நீங்காத குமாரனாகவும், விநாயகப் பெருமானுக்குத் துணையாக வரும் சகோதரனாகவும், பேரொளிமயமான ஞானமலர்ச்சி பொருந்தியுள்ள சுவாமியாகவும் திகழும் செவ்வேள் ஒருவனே துகளற்ற நித்திய பிரம்மசாரி, சீலம் மிக்க இல்லறத்தான், இல்லத்தைத் துறந்து மனைவியோடு காட்டில் வாழும் வானப்பிரஸ்தன், துறவி என நான்கு நிலைகளிலும் திகழ்பவன் எனவும் இந்த நான்கு நிலைகளுக்கும் அப்பாற்பட்டவன் எனவும் அறியும் விவேகஞானம் வாய்க்கப் பெற்றோரின் இதயத்தே எப்பொழுதும் வெளிப்பட்டு விளங்கும் ஒளிநிறைந்த வெளியே! அறியாமை மிகுந்துள்ள என்னை ஆட்கொள்வதற்காக என் முன் வந்து

அருளும் நாள் இன்றோ, நாளையோ, புலால் நிறைந்த இந்த உடல் நீங்கும் காலத்திலோ? மதியிலியாகிய யான் அறியேன்.

கூவிளம் விளம் விளம் விளம் விளம் விளம் காய்
விளம் விளம் விளம் விளம் விளம் விளம் காய்

ஈசனை யுள்ளிட மர்ச்சனை புரிபவ ரெய்துப லத்தினு மேசால
இழிவுறு மேவெளி யர்ச்சனை புரிபவ ரெய்திடு பலனென வேகூறும்
ஆசறு சிவதரு மோத்தர மொழியறி யடியவ ருள்ளிட மேநாளும்
அற்றமி லுன்றனை யர்ச்சனை புரிவத சத்திய மாவது முண்டோசொல்
பாசவு யிர்க்குழு வத்தனை யுஞ்சிவ பதமடை காறுமி ரட்சகனாய்ப்
படர்கிரு பைக்கட லேசுர குஞ்சரி பதியென வருமொரு பரமேசா
நாசமின் ஞானவி னோதமு தால்குடை நாடக வேன்மழ வாகுழகா
நாடெனை யாளிறை யேநறு மாமண நாறடி மான்மக ணாயகனே. 159

இறைவனை இதயமாகிய பீடத்தில் அமர்த்தி அகவழிபாடு செய்வோர் அடையும் பயனைக்காட்டிலும், வெளியே ஓர் உருவம் வாயிலாக அவனை நினைந்து புறவழிபாடு செய்வோர் அடையும் பயன் மிகவும் குறைந்ததே எனக் குற்றமற்ற சிவதருமோத்தரம் எனும் ஆகமம் கூறும். இதனை உணரும் அடியவர் தமது இதய வெளியிலேயே, சிறிதும் சோர்வுபடாது நாளும் உன்னை வழிபாடு செய்வது பொய்யாய்ப் போவதும் உண்டோ? கூறுக. பாசத்தளைக்கு உட்பட்டுள்ள அத்தனை உயிர்க்கூட்டங்களும் சிவபதம் அடையும் வரையிலும் அவற்றைக் காப்பாற்றி அருள்பவனாக விளங்கும் விரிந்துபடர்ந்த கருணைக்கடலே! தெய்வயானையின் கணவன் என வந்தருளும் ஒப்பற்ற பரமேசுவரனே! அழிவில்லாத ஞானமயமான அற்புத ஆடல்களைச் செய்தருளும் முதல்வனே! குடைக்கூத்து ஆடுபவனே! வேல் ஏந்தும் இளைய வீரனே! அழகனே! உன்னை விரும்பும் என்னை ஆட்கொள்ளும் இறைவனே! நறுமணம் வீசும் திருவடியை உடைய மான்மகளாம் வள்ளி நாயகியின் கணவனே!

இப்பதினான்கு சீரில், ஈண்டுவந்த சந்தபேதங்களன்றிப் பிற பேதங்களும் வரும். அவை யெங்ஙனமெனின் ; இவ்வியலுள் முற்போந்த வெழுசீர் விருத்தங்களி னடிச்சந்தங்க ளிரட்டும் வழியிலென்க.

---

159. அற்றம் = சோர்வு.

பதினைந்துசீர்க்கழிநெடிலடியான்வருவது.

கூவிளம் கருவிளம் கூவிளம் கருவிளம்
கருவிளம் கருவிளம் கூவிளம் கருவிளம்
கருவிளம் தேமா கருவிளம் தேமா கருவிளம் கூவிளம் தேமா.

தானன தனதன தானன தனதன, தனதன தனதன தானன தனதன
தனதன தானா தனதன தானா தனதன தானன தானா.

(ஒற்றிலாப் பஞ்சபங்கி. இருநூறெழுத்து.)

பூமக டொழுதிரு நாயகி திரிபுரை
பொறையுடை மலையிறை காதலி நிருமலி
புடவிய ரானா வமுதுண வீடீ புகழுடை யீசுரி பூமா

நாமக டுதிபுரி பூரணி சிவையுமை
நறையளி யுழுகுழ லாரணி யரவணி
நடவிறை பீடா ரிடமுறை தேவீ நகைமலி நாரணி வீயா

மாமக ளருடரு நீறணி பரைநல
மறைதரு கவுரிவ ராகிய மரிதிரி
வடிவென வேவீ சொளிவிழி மாதா மகனென வானவ ரேசா

கோமக ளுழைமக ணாயக னெனவரு
குறைவிலி யறிவது நாடொரு பருமணி
குடிலைவி சாகா துடிநட நாதா குகவெனை யேகொள வாவே. 160

(ஒற்றெழுத்து கலவாமல், 200 எழுத்துக்களைக் கொண்டதாய் விளங்கும் ஒரு பாடலே ஐந்து பாடல்களாக விரிந்து விளங்குவது)

தாமரைச்செல்வியாம் திருமகள் வணங்கும் திருவுடை நாயகி; திரிபுரை; அனைத்தையும் தாங்கும் கயிலைமலை இறைவனுக்கு வாய்த்துள்ள காதலி; மலமற்றவள்; உலகிலுள்ளார் அனைவரும் நீங்காத அமுது உண்ணுமாறு வீடுபேறு அருளும் புகழ்மிக்க ஈசுவரி; பெரிதுபட்டுத் திகழும் அனைத்துப்பொருள்களாகவும் விளங்குபவள்; நாமகள் போற்றும் பூரணி; சிவை; உமை; தேனுண்ணும் வண்டுகள்

160. நகை = இன்பம், ஒளி; பி-நிகண்டு காண்க.

வர+ஈசா = வரேசா. வரங்களைக் கொடுத்தருள் ஈசுரா எனும் பொருண்மைத்து. கோமகள் = தேவயானைப் பிராட்டி; கோ = தேவலோகமெனுஞ் சுவர்க்கம் "கோ...ஏவுரை சுவர்க்கம் வேந்தன்" என்பது வகரவெதுகை. உழைமகள் = மான்மகள் = வள்ளிப்பிராட்டி.

கிளர்த்தும் கூந்தலையுடைய கொற்றவை; பாம்பணிந்துள்ள கூத்தப்பெருமானின் பெருமைக்குரிய இடதுபாகத்தில் உறையும் தேவி; இன்பமும் ஒளியும் மிகுந்துள்ள நாராயணி; நித்தியமாக விளங்கும் மாமகள்; அருள்தரும் திருநீற்றை அணிந்துள்ள பரை; நன்மைதரும் வேதங்களை அருளியுள்ள கௌரி; வராகி; துர்க்கை; சூரியன், சந்திரன், நெருப்பு எனும் மூன்றையும் போல் ஒளிவீசும் மூன்று கண்களை உடைய தாய் - இவ்வாறு அன்பர்கள் போற்ற விளங்கும் உமையம்பிகையின் குமாரன் எனவிளங்குபவனாகி வரங் களைக் கொடுத்தருளும் ஈசுவரனே! தேவயானைப் பிராட்டிக்கும் வள்ளிப்பிராட்டிக்கும் கணவன் என வரும் குறைவிலியே! அறிவானது தேடும் ஒப்பற்ற பெரிய தெய்வ மாணிக்கமே! பிரணவனே! விசாகப்பெருமாளே! வலக்கையில் துடியை ஏந்தி நடனமிடும் நாதனே! குகனே! என்னை முழுவதுமாக ஆட்கொள்வதற்காக வந்தருள்!

பொறையுடை மலையிறை காதலி நிருமலி
புடவிய ரானா வமுதுண வீடீ புகழுடை யீசுரி பூமா
நறையளி யுழுகுழ லாரணி யரவணி
நடவிறை பீடா ரிடமுறை தேவீ நகைமலி நாரணி வீயா
மறைதரு கவுரிவ ராகிய மரிதிரி
வடிவென வேவீ சொளிவிழி மாதா மகனென வானவ ரேசா
குறைவிலி யறிவது நாடொரு பருமணி
குடிலைவி சாகா துடிநட நாதா குகவெனை யேகொள வாவே.

இது, பதினொருசீராசிரியவிருத்தம்.

*160:2* அனைத்தையும் தாங்கும் கயிலைமலை இறைவனாம் சிவபெருமானின் துணைவியே; நிர்மலி; உலகிலுள்ளார் சுவை குன்றாத அமுது உண்ணுமாறு வீடுபேற்றை அருளும் புகழ்மிக்க ஈசுவரி; பெரிதுபட்டுத் திகழும் அனைத்துப் பொருள்களாகவும் காட்சி அளிப்பவள்; தேன் உண்ணும் வண்டுகள் மொய்க்கும் கூந்தலை உடைய கொற்றவை; பாம்பினை அணிகலனாகக் கொண்டு நடனமிடும் இறைவனின் பெருமைக்குரிய இடது பாகத்தில் உறையும் தேவி; இன்பமும் ஒளியும் மிகுந்து விளங்கும் நாராயணி; அழியாதிருக்கும் பெருமைக்குரிய பெண்; வேதங்களை அருளும் கௌரி; வராகி; துர்க்கை; சூரியன், சந்திரன், அக்னி எனும் மூன்றையும் ஒளிவீசும் கண்களாகக் கொண் டுள்ள தாய் - இவ்வாறு

சிறப்புடன் விளங்கும் உமையம்பிகையின் குமாரன் என அவதரித்த, வரங்களை அருளவல்ல ஈசனே! குறைவிலியே! ஞானியர் அறிவால் நாடும் பெரிய தெய்வமாணிக்கமே! பிரணவ வடிவே! விசாகனே! துடியை ஒலித்து நடனமிடும் நாதனே! குகனே! என்னை ஆட்கொள்ள வந்தருள்.

புடவிய ரானா வமுதுண வீடீ புகழுடை யீசுரி பூமா
நடவிறை பீடா ரிடமுறை தேவீ நகைமலி நாரணி வீயா
வடிவென வேவீ சொளிவிழி மாதா மகனென வானவ ரேசா
குடிலைவி சாகா துடிநட நாதா குகவெனை யேகொள வாவே.

இது, எழுசீராசிரியவிருத்தம்.

*160:3* உலகிலுள்ளார், சுவைகுன்றாத அமுது உண்ணுமாறு வீடு பேற்றை அருளும் புகழ்மிகுந்த ஈசுவரி; **பூமா** எனும் நிலையினள்; நடராசப் பெருமானின் பெருமைக்குரிய இடதுபாகத்தில் உறையும் தேவி; இன்பமும் ஒளியும் மிகுந்துள்ள நாராயணி; அழியாத வடிவு எனுமாறு ஒளிவீசும் விழிகளை உடைய தாய் - என விளங்கும் உமையம்பிகைக்கு மகனாக அவதரித்தவனும் வரங்களை அருள் பவனுமான ஈசனே! பிரணவ ரூபனே! விசாகனே! துடியை ஒலித்து நடம் செய்யும் நாதனே! குகனே! என்னை ஆட்கொள்ள வந்தருள்.

புகழுடை யீசுரி பூமா
நகைமலி நாரணி வீயா
மகனென வானவ ரேசா
குகவெனை யேகொள வாவே.

இது, வஞ்சிவிருத்தம்.

*160:4* புகழ்மிக்க ஈசுவரி; 'பூமா' எனும் கம்பீர நிலைக்கு உரியவள்; இன்பமும் ஒளியும் மிகுந்துள்ள நாராயணி என விளங்கும் உமையம்பிகைக்கு அழியாத மகன் என ஆகிய, வரங்களை அருளும் ஈசனே! குகனே! என்னை ஆட்கொள்ள வந்தருள்.

பூமக டொழுதிரு நாயகி திரிபுரை புகழுடை யீசுரி பூமா
நாமக டுதிபுரி பூரணி சிவையுமை நகைமலி நாரணி வீயா
மாமக ளருட்ரு நீறணி பரைநல மகனென வானவ ரேசா
கோமக ளுழைமக ணாயக னெனவரு குகவெனை யேகொள வாவே.

இது, வேறு எழுசீராசிரியவிருத்தம் ஆக-5.

*160:5* திருமகள் வணங்கும் தெய்வத்திருவார்ந்த நாயகி; திரிபுரை; புகழ்மிக்க ஈசுவரி; பூமா எனப்படும் பெருமிதத் தோற்றத்தினள்; கலைமகள் துதிசெய்யும் பரிபூரணி; சிவை; உமை; இன்பமும் ஒளியும் மிகுந்துள்ள நாராயணி; அழியாத; பெருமைக்குரிய மகள்; அருள்தரும் திருநீற்றை அணிந்திருக்கும் பரை - என விளங்கும் பார்வதிக்கு மகன் என ஆகியவனும் வரங்களை அருள்பவனும் ஆன ஈசனே! தெய்வயானைப் பிராட்டிக்கும் வள்ளிப்பிராட்டிக்கும் வாய்த்துள்ள நாயகன் என வரும் குகனே! என்னை ஆட்கொள்ள வந்தருள்.

இப்பங்கிக்கு வேறாகவும் நூற்றுக்கும் மேற்பட்டும் வரு மரிய பெரிய பங்கிகளை முதன் மண்டலமாகிய குமரகுருதாச சுவாமிகள் பாடலிற் காண்க.

---

**பதினாறுசீர்க்கழிநெடிலடியான்வருவன.**

புளிமா விளம் விளம் மா மா விளம் விளம் மா
மா விளம் விளம் மா மா விளம் விளம் மா.

சிவமு மாசிவ சத்தியு மெழிலே
திகழ்மும் மூர்த்தியு மவரடி களுமே
சீர்கொ ணீயென மிளிர்முறை மைக்கென்
சென்னி மீதுபன் னிருவிரன் மேலும்
அவமி லேனைய தேவரு நீயென்
றாகு முறைக்குயர் தலையிலு மாசா
னாயி லங்கிடு முறைக்கில லாட
மதிலுந் தந்தையு மரசுமென் முறைக்கு
நவிலும் வாயெதி ராகவு மெய்ம்மை
நண்ணு வேதிய னாமுறை மைக்கு
நாப்பண் மார்பிலு மொய்த்தாய் முறைக்கு
நல்ல மோட்டிலு மாக்கரங் கூப்பி
உவகை யோடுனைத் தாழ்வே னின்னு
முற்ற வன்னைபி தாகுரு தேவென்
றுன்னு முறைக்கிரு நான்குவந் தனமு
முஞற்று வேனருள் வேலுடை யானே. 161

---

161. அடிகள் = தலைவி. என்னை? "கோமக டலைவி யடிக ளையை" என்பது பிங்கண்டாகலின்.

சிவம், சிவசக்தி, எழில் திகழும் பிரம்மன் திருமால் உருத்திரன் எனும் மும்மூர்த்திகள், அவர்களின் தேவிமார்கள் - ஆகிய அனைவருமே சீர்மைமிகுந்த நீதான் எனப் பொலியும் நிலைமைக்காக உன்பொருட்டு என் சிரசின் மேல் பன்னிரண்டு அங்குலத்துக்கும் மேலே திகழும் துவாதசாந்தத் தானத்திலும், வீணாகாத செயல்களைச் செய்யும் கடவுளரும் நீயே எனத் திகழும் முறைமைக்காக உன்பொருட்டு, என் சிரசின்மேல் பிரம்மரந்திரத் தானத்திலும், ஞான குருவாக விளங்குபவனும் நீயே எனத் திகழும் முறைமைக்காக நெற்றிநடுவிலும், தந்தையாகவும், பரிபாலிக்கும் அரசனாகவும் விளங்குபவனும் நீயே எனத் திகழும் முறைமைக்குப் பேசும் வாயின் எதிராகவும், வேத உண்மையையும் மெய்ப் பொருளையும் அனுபவரீதியாக அறியும் வேதியனாக நீ திகழும் முறைமைக்கு மார்பின் நடுவிலும், ஆன்மாக்களுக்காக நெருங்கிச் சூழும் தாயர் அனைவராகவும் நீ திகழும் முறைமைக்கு வயிற்றுக்கு எதிராகவும் எனது இரண்டு கரங்களையும் கூப்பி, மிகவும் மகிழ்வோடு உன்னை வணங்குவேன். அருளாற்றல் வல்ல வேற்படையை உடையவனே! மேலும் என்னைப் பெற்றெடுத்த அன்னை, தந்தை ஆகவும் எனக்கு எழுத்தறிவித்த குருவாகவும் தெய்வமாகவும் உன்னைக் கருதும் முறைக்காக எட்டு முறை நமஸ்காரமும் அன்போடு செய்வேன்.

கருவிளங்காயும், கூவிளங்காயும்.

தனனதன தானதன தனனதன தானதன
தனனதன தானதன தனனதன தானதனா.

தலைகுனித லாகநவி றலும்விரல்க ளார்வலது
சயமுடியி லேறுதலு மிருகரமு மாசிரமே
தறுகுதலு மேனவிர முறுமிருகை யோடுபய
சரணவிரு சானுநில முறுதலும லார்சிரமேல்
இலகிருகை சேரவிரு சரணுரமு நேமிதொட
வியைதலும்வி சேடசிக ரமதுமிரு தோள்செவியோ
டிருகழலும் வானுதலும் விரிதிணையி லேபடலும்
இணையவுன தேசிலடி தொழுதுபுகழ் வேனினும்வீண்
அலைமனதை யேகமென வறுதலமு ளேநிறுவி
யனுதினம்வி டாதுநினை யுமுவலுறு வேன்வெளியாய்

CENTRE FOR SHAIVA STUDIES Puducherry

அவிர்திசையெ லாநினது சுயநிஜசொ ரூபமென
வகமகிழ்வொ டேகருதி வழிபடுவ லேயினிமே
னிலையறியு மாறருளி யடிமைகொள வேவருதி
நிமலனெனு மாதிசிவ னுடையகும ராவழகார்
நெடியதமிழ் பாடருண கிரிபுகழ்கொள் காதுசெறி
நிருமலகு கேசநெடு வயிரவடி வேலவனே. 162

தலையைத் தாழ்த்திக்கொண்டு துதிகூறுவது, விரல்களைத் தலையின் வலது புறத்தே சேர்த்துக் கொள்வது, சிரசின்மேலே இரண்டு கரங்களையும் சேர்த்துக் கூப்புதல், பின்னர் இரண்டு கைகளும் இரண்டு கால்களும் இரண்டு முழந்தாள்களும் நிலத்தில் படியுமாறு வணங்குதல், நிலத்தில் படிந்தவாறே இரண்டு கரங்களையும் தலையின் உச்சியில் சேர்த்தல், இரண்டு பாதங்களும் மார்பும் பூமியில் அழுந்திப்படியுமாறு தண்டம்போல் கிடத்தல். தலை, இரண்டு தோள்கள், இரண்டு செவிகள், இரண்டு கால்கள், ஒளி பொருந்திய நெற்றி ஆகியவை விரிந்த நிலத்திலே படுமாறு இடமும் வலமுமாகத் திரும்புதல் - ஆகிய இச்செயல்களை உள்ளடக்கிய அட்டாங்க வணக்கத்தை உனக்குச் செய்து உனது மாசற்ற இரண்டு திருவடிகளையும் தொழுது புகழ்வேன்; மேலும் வீணாக அலைந்து திரியும் மனத்தை ஒருமுகப்படுத்தி உள்ளே ஆறு ஆதாரத் தானங்களிலும் நிலைப்படுத்தி நாள்தோறும் தவறாமல் உன்னை நினைத்திருக்கும் உழுவலன்பைக் கொள்வேன். விரிந்த வெளியாக விளங்கும் திசைகள் அனைத்தும் உனக்கு இயல்பாக வாய்த்துள்ள சொரூபநிலையின் வடிவமே என மனமகிழ்வோடு கருதி உறுதியாக வழிபடுவேன். இனியாகிலும் உனது உண்மை நிலையையும் எனது நிலையையும் உள்ளவாறு அறியுமாறு செய்து என்னை அடிமைகொள்ள வருவாயாக! நிமலன் எனத் திகழும் ஆதிசிவனாரின் திருக்குமாரனே! அழகும் பெருமையும் மிடுக்கும் நிறைந்த தமிழில் சந்தக் கவி பாடிய அருணகிரிநாதரின் திருப்புகழை ஏற்றுக்கொள்ளும் செவிகள் நிறைந்துள்ள நிர்மலனே! குகேசனே! நீண்டு ஒளிரும் வஜ்ரவடிவேல் ஏந்தியுள்ளவனே!

இப்பதினாறுசீரில், ஈண்டுவந்த சந்தபேதங்களன்றிப் பிறபேதங்களும் வரும். எங்ஙனமெனின்; இவ்வியலுள் எண்சீர் விருத்தங்களி னடிச்சந்தங்க ளிரட்டும் வழியிலென்க.

"இரண்டுமுதலா வெட்டீறாகத் - திரண்டசீரா னடிமுடிவுடைய - விறந்து வரினு மடிமுடிவுடைய - சிறந்த வல்ல செய்யுளுள்ளே" எனக் காக்கைபாடினியார் சொன்னார்; அதனாலிங்ஙனம் எண்சீரின் மிக்க சீரான்வரு மடிகள் சிறப்பிலவெனச் சிலர் செப்பாரோவெனின்; ஒன்பது, பதினொன்று, பதின்மூன்று, பதினைந்தெனுஞ் சீர்களை யடியாகக்கொண்டு சந்தநயமின்றி முடியுஞ் செய்யுள்களை யன்னணஞ் சிறப்பில வென்றல் அச்சூத்திரக் கருத்தன்றி யிவ்வியலிற் போந்தவைபோன்ற சந்தநயப்புடைச் செய்யுள்களைச் சிறப்பிலவென்றல் கருத்தன்றாம். ஏனைய பத்து, பன்னிரண்டு, பதினான்கு, பதினாறுசீரடிச் செய்யுள்களும் எண்சீரடிக்குட்பட்ட செய்யுட்சந்தங்களே யிரட்டும் வழியின் மிக்க சீரடியாக நிகழ்தலின்; அச்சூத்திரவழியே சிறப்புளவே. "கழி நெடிலடியே கசடறக்கிளப்பி - னறுசீர்முதலா வையிரண்டீறா - வருவன பிறவும் வகுத்தனர் கொளலே" எனவரும் யாப்பருங்கலச் சூத்திரத்தை யனுசரித்த வாறாக "மற்றுமென்பதனாற் பதின்சீரின் மிக்குவருவனவுமுள" என்பதும் யா-காரிகையுரை. இவ்வாறளவாயிரட்டும் வழி முதலடியின் முதலெழுத்திற் கியைந்த வினவெழுத்துக் கொண் டெத்தனைமுறையேனு மிரட்டித் தோரடியாய்நடந் தவ்வடி நான்காகியிறும். விருத்தமெல்லா முதலடிச்சீரெண்ணையே பெயராகப்பெறும். ஐந்தின்மேற்பட்ட வித்தனைச் சீரிரட்டையாசிரிய விருத்தமென்றேனும், நான்கின் மேற்பட்ட வித்தனையடி யாசிரியவிருத்தமென்றேனும் பெயர்பெறா. என்னை? "கழிநெடிலடி நான்கொத்திறின் விருத்தமஃ - தழியா மரபின தகவலாகும்". என்பது யாப்பருங்கலமாகலின்.

## ஆசிரியப்பாவின முற்றிற்று.

## 2-ஆவது ஆசிரியவியன் முற்றிற்று.

ஆக இயல் இரண்டினும் போந்த திருச்செய்யுள் - 284.

# 3 – வது கலியியல்.

## 1. ஒத்தாழிசைக்கலி.

*நேரிசையொத்தாழிசைக்கலிப்பா.*

1. [மூவடித்தரவு ஒன்று]

**ப**ண்டைக்குக் குடமஞ்ஞை பண்ணியதீ தாலிழிந்து
பண்டப்பொற் புயர்காஞ்சிப் பதியெய்தித் தவம்புரிநாள்
வண்டற்ற கதியவைகட் களித்தமுது மழவோய்கேள்.

2. [ஈரடித்தாழிசை மூன்று]

**ஈ**ரிரண்டு கணத்தலைவ ரிழைத்ததெவ் வாலிறந்த
பேருவண மோடனமும் பிழைக்கவருள் கூர்ந்ததுநீ.

அக்காலத் தரியயன்மா லாள்பதிக ணலிவோர்ந்து
மிக்காரும் வளமுன்போல் விளங்கவருள் செய்ததுநீ.

பராசரன் மகாரறுவர் படுசாபந் தீர்த்தவர்க்குச்
சுராசுரர்களுறற்கரிய தூய்மதியன் றீந்ததுநீ.

3. [தனிச்சொல்]

எனவாங்கு.

4. [ மூவடி வெள்ளைச்சுரிதகம் ]

**எ**ண்ணிடு மெற்கு மருள்வாயென் றேத்துமென்
கண்ணுமுற் றுள்ளங் கவர்ந்தரு ளாலெனைத்
திண்ணவிண் வீட்டிற் செலுத்து. 1

*பழங்காலத்தில் (முன் கல்பத்தில்) கோழியும் மயிலும் செய்த தீய செயலால் தம் நிலையிலிருந்து இழிந்து, பொருளும் பொலிவும் மிகுந்திருக்கும் காஞ்சியம்பதிக்குச் சென்று தவம் செய்திருந்தபோது குற்றமற்ற பண்டைய மேல்நிலையை அவைகளுக்கு அளித்தருளிய பேரறிவு முதிர்ச்சி மிக்க இளம்பெருமானே! கேட்டு அருள்க.*

1. வண்டு = குற்றம்; நிகண்டுகள் காண்க.

சிவகணத்தவர்கள் நான்குபேர் செய்த பகைமிக்க செயலால் இறந்துபோன திருமாலின் வாகனமான பெரிய கருடனும், நான்முகன் வாகனமான அன்னமும் உயிர்பிழைத்து எழுமாறு அருள் பொழிந்தது நீயே.

அந்தக் காலத்தில் திருமாலும் நான்முகனும் ஆண்டு கொண்டிருந்த வைகுண்டமும் சத்திய லோகமும் அழிவடைந்ததைக் கண்டு, அந்தப் பதிகள் முன் போலவே வளம்மிகுந்து விளங்குமாறு அருள்செய்தது நீயே.

பராசரமுனிவரின் ஆறு சிறுவர்களும் ஏற்றிருந்த சாபத்தைத் தீர்த்து அவர்களுக்குத் தேவர்களாலும் அசுரர்களாலும் அடைய முடியாத தூய்மையான ஞானப்பேற்றை அன்று வழங்கியதும் நீயே.

என இவ்வாறு

இவற்றையெல்லாம் எண்ணிப்பார்த்து, உன் அருள்வளத்தையே சிந்தித்திருக்கும் எனக்கும் அருள்புரிக எனத் துதிக்கும் என்னிடமும் வந்து பொருந்தி, என் கருவி கரணங்களை உன்பால் ஈர்த்துக் கொண்டு, உனது அருளால் உறுதியான முத்திப்பேறு எனும் வீட்டில் புகுமாறு செய்தருள்க.

இதனானே தரவுமூன்றடிச்சிறுமை யுடைத்தெனவும், தாழிசை யிரண்டடிச் சிறுமை யுடைத்தெனவுமுணர்க. பெருமை பேசப்புகின், தரவுக்குப் பாடுவோனது பொருண்முடிபு குறிப்பாம். ஆகலி னடிவரையறை யிலையென்றாம். தாழிசைக்கு அப்பெருமை நான்கடியும் இடைமூன்றடியுமாம். என்னை? "சுருங்கிற்று மூன்றடி யேனைத்தரவு *** தாழிசைப்பாச்சுருங்கிற் றிரண்டடியோக்க மிரட்டி" என்பது யா - காரிகை யாகலின். தரவடிகுறித்து "உரைப்போருள்ளக் கருத்தினளவே பெருமை" என்பதுமது. ஒரு செய்யுளிற் றரவடிக்குத் தாழிசையடி சுருங்கி நடக்குமெனற்கு இச்செய்யுளே யுதாரணமாம். என்னை? "சுருங்குந்தரவினிற்றாழிசையே" என்பது யா-காரிகையாகலின். இவ்வொத்தாழிசைக் கலிப்பா ஆசிரியச்சுரிதகமும் பெறும்.

### அம்போதரங்க வொத்தாழிசைக் கலிப்பா.

1. [ஆறடித் தரவு ஒன்று]

மடன்மலர்கு டசுரர்குலம் வருமிறையாஞ் சூரனும்வெம்
படர்தடியும் பெருமொய்ம்புப் பதுமனுமே புரிதவசுக்
கெழில்சேருந் தனதுயர்வாழ் வினையளிப்பா னிருவரையும்
பொழில்சேரு முடலொன்றிற் புகவிட்டவ் வுடலையயில்
கொண்டுபிளந் தொருபாதி கொடியாமற் றொருபாதி
தொண்டுபுரி வாகனமாத் துளங்கவருள் செய்தோய்கேள்.

2. [ஈரடித்தாழிசை மூன்று]

முதுமறைச்செந் நெறிமறந்து முதிரகந்தை கொடுநின்ற
பதுமத்தா னடுச்சிகரம் பறித்தபர மேட்டியுநீ.

பொன்னனன வுரம்பிளந்து புரைக்குடரைக் களமணிந்து
மன்னகமே மலிந்தவய மாவுரித்த சிம்புளுநீ.

ஆர்கலியை நனிகலக்கி யகங்கரித்த மயிலையையும்
வார்கமடத் தையுமடக்கு மாண்புடைய தெய்வமுநீ.

3. [பேரெண்ணாகிய நாற்சீரீரடி அம்போதரங்கம் இரண்டு]

உலகினை யளந்தவ னுரமுது கென்பினை
இலகுகங் காளமா வேந்திநின் றவனுநீ.

அம்பக மாந்திரு வலரிடத் தாளிலே
நம்பொடு சார்த்திய நாரண னிறையுநீ.

[அளவெண்ணாகிய நாற்சீரோரடி அம்போதரங்கம் நான்கு]

திண்சலந் தரன்வகிர் திகிரிக் கரனுநீ.
ஒண்பரி திவலவற் குதவு பரனுநீ.
அரியய னுடலெரித் தணிநீற் றரனுநீ.
திரிகுண மிலாவெண் டிறமார் சிவனுநீ.

[இடையெண்ணாகிய முச்சீரோரடி அம்போதரங்கம் எட்டு]

விடமுண்ட கண்டனு நீஇ.
வெங்குரண்ட நாசனு நீஇ.
கந்தர்ப்ப தகனனு நீஇ.
காலுதைத்த காலனு நீஇ.
சசிமிதித்த தாளனு நீஇ.
சசிபரித்த சடையனு நீஇ.
கரியுரித்த கத்தனு நீ இ.
கங்கையணி கடவுளு நீஇ.

2. வலவன் = விட்டுணு; அருச்சுனனுக்குத் தேர்ப்பாகனான காரணத்தா லெய்திய பெயரென்ப. குரண்டம் = கொக்கு.

[ சிற்றெண்ணாகிய இருசீரோரடி அம்போதரங்கம் பதினாறு ]

முத்த னீஇ.
முனிவ னீஇ.
அத்த னீஇ.
அனக னீஇ.
சத்து நீஇ.
சித்து நீஇ.
இன்பு நீஇ.
அன்பு நீஇ.
ஆதி நீஇ.
சோதி நீஇ.
கால நீஇ.
ஞால நீஇ.
அரிது நீஇ.
பெரிது நீஇ.
ஆவி நீஇ.
யாவு நீஇ.

4. [தனிச்சொல்]

அதனால்.

5. [ஆறடி நேரிசையாசிரியச் சுரிதகம்]

நின்னடி நினைந்து நின்னடி புகழ்ந்துன்
இன்னரு ளடைந்தே யென்னையு மறிந்தாள்
உன்னையு மறிந்தே யொல்லையத் துவிதந்
தன்னினீ நானெனாச் சமரச மாக
நிற்கவென் றுள்ளுமென் னினைப்பை
அற்புட னோர்ந்தினி தாள்வதுன் கடனே. 2

இதழ்செறிந்த மலர்களைச் சூடும் அசுரர்குலத்து அரசனாகும் சூரன் என்பானும், கொடிய பகைவரை அழிக்கும் பெரும் தோள் களுடைய பதுமன் என்பானும் செய்த தவத்தைக் கண்டு, அத்தவத்தின் பயனாக எழில்மிகுந்த தன்னுடன் சேர்ந்து வாழும் உயரிய வாழ்வினை அளிக்கும் பொருட்டு அவ்விருவரையும்

அழகும் வன்மையும் வாய்ந்த ஒரே உடலில் புகுந்திருக்குமாறு செய்து, இறுதியில் அந்த உடலை வேல்கொண்டு இரண்டாகப் பிளந்து ஒரு பாதியைக் கொடியாகவும் மற்றொரு பாதியை உனக்குச் சேவைபுரியும் வாகனமாகவும் விளங்குமாறு அருள் செய்த பெருமானே! கேள்.

தொன்மறைகள் கூறும் செவ்விய நெறியை மறந்து, முதிர்ந்த அகந்தை கொண்டு நின்ற நான்முகனின் நடுத்தலையைப் பறித்த பரமேட்டியான பிரம்மசிரச்சேத மூர்த்தியும் நீ;

இரணியாசுரனின் அகன்ற மார்பைப் பிளந்து, ஆபாசக் குடலை கழுத்தில் மாலையாக அணிந்து கர்வம் கொண்டு உலகைக் கலக்கிய நரசிம்மத்தின் தோலை உரித்த சரபேச மூர்த்தியும் நீ;

கடல் முழுவதையும் மிகுதியாகக் கலக்கி அகங்கரித்துத் திரிந்த மீனையும் (மச்சாவதாரம்) ஆமையையும் (கூர்மாவதாரம்) அடக்கி ஒடுக்கி உலகைக் காத்த மாண்புடைய சிவவடிவமும் நீயே!

வாமனனாக வந்து திரிவிக்கிரம அவதாரம் எடுத்து உலகை அளந்து ஆர்ப்பரித்தவனை அடக்கி, அவனது வலிமை மிகுந்த முதுகெலும்பைக் கங்காளம் என்னும் ஆயுதமாக ஏந்திநின்ற சிவமூர்த்தியும் நீயே; கண்ணாகிய அழகிய தாமரைப்பூவைச் சிவபெருமானின் இடதுபாதத்தில் சார்த்தி அர்ச்சித்த நாராயணனின் இறைவனும் நீயே!

உறுதிவாய்ந்த ஜலந்தராசுரனைப் பிளந்த சக்ராயுதம் ஏந்திய கையை உடைய சிவவடிவமும் நீயே! ஒளி மிகுந்த அந்தச் சக்ராயுதத்தை, அருச்சுனனுக்குத் தேரை ஓட்டிய கிருஷ்ணனுக்கு அளித்த பரம்பொருளும் நீயே; திருமால், பிரம்மன் ஆகியோர் உடல்களை எரித்துத் திருநீறாகப் பூசிக் கொள்ளும் காலாதீத சிவனும் நீயே; உலகநெறித் தொடர்பான சாத்விகம், ராஜஸம், தாமஸம் எனும் மூன்று குணங்களும் இல்லாதவனாகவும், முற்றறிவு முதலான எண் குணங்கள் நிறைந்தவனாகவும் விளங்கும் பரசிவமும் நீயே.

ஆலகால விடத்தை உண்ட கழுத்தை உடையனும் நீயே; கொக்கு வடிவில் திரிந்த கொடிய பகாசுரனை அழித்த சிவமூர்த்தியும் நீயே. மன்மதனை எரித்த காமாரிமூர்த்தியும் நீயே. யமனை உதைத்த காலை உடையவனும் காலாந்தக மூர்த்தியும் நீயே. தக்கயாகத்தில் சந்திரனைக் காலால் தேய்த்த வீரபத்திரனும் நீயே. இளம்பிறை

தாங்கிய சடையை உடையவனும் நீயே. கஜாஸுரனாகிய யானையின் தோலை உரித்த முதல்வனாகிய கஜாந்தக மூர்த்தியும் நீயே; கங்கையைச் சடையில் அணிந்துள்ள கங்காதர மூர்த்தியும் நீயே.

நீயே அனாதி முத்தன்; நீயே முனிவன்; தலைவன்; பாபம் அற்றவன்; என்றும் உள்ள பொருளாக 'சத்' என இருப்பவன்; பூரண ஞானமயமாக 'சித்' என இருப்பவன்; ஆனந்தமயமானவன்; அன்புமயமானவன்; ஆதி; சோதி; காலம்; ஞாலம்; அரியது; பெரியது; உயிர்க்கூட்டம்; சராசரப்பொருள் அனைத்தும் - நீயே.

அதனால்.

உனது திருவடியை நினைந்தும் புகழ்ந்தும் உனது இனிய திருவருளை அடைந்து என்னையும் அறியப்பெற்று உன்னையும் முழுதுணர்ந்து, விரைவில் இரண்டற்ற நிலையாகிய அத்துவிதப் பேற்றில் நீயும் நானுமாய் ஏகபோகமாய் நிற்பதற்கு எண்ணியுள்ள எளியேனின் நோக்கத்தை அன்புடன் அறிந்து, இனிதே என்னை ஆட்கொள்வது உனது கடமை ஆகும்.

"இருமூன்றடியே தரங்கக்கும் வண்ணகக்குந் தரவாவது" என யா-காரிகை கூறுமாறு, இவ்வம்போதரங்க வொத்தாழிசைக்கலிப்பாவிற்கு, இதனடுத்து வரு வண்ணகவொத்தாழிசைக்கலிப்பாவிற்கும் தரவடி பெருக்க சுருக்கமின்றி யாறடியேயாம். "ஈரடியிரண்டு மோரடி நான்கு - முச்சீரெட்டு மிருசீரிரட்டியு - மச்சீர் குறையினு மம்போதரங்கம்." என்பது யா-காரிகையுரைவரு சூத்திரமாகலின்; இவ்விரண்டாஞ் செய்யுள்போன்ற செய்யுளி லிடையெண் சிற்றெண் அம்போதரங்க வடிகள்; நான்கு மெட்டுமாகச்சுருங்கி வரினும் வரலாமென்க. அம்போதரங்கம் - அசையடியெனவும், சொற்சீரடியெனவும் பெயர் பெறும்.

"கால நீஇ, ஞால நீஇ, ஆவி நீஇ, யாவு நீஇ" என்பன, பொருளின துண்மையை மறுத்துப் பிறிதொன்றாக வுரைக்கும் பொருளவநுதி யென்னு மோரலங்காரமாம். என்னை? "சிறப்பினும் பொருளினுங் குணத்தினு முண்மை - மறுத்துப் பிறிதுரைப்ப தவநுதி யாகும்" என்பது தண்டியலங்கார மாகலின்.

### வண்ணகவொத்தாழிசைக் கலிப்பா.

1. [ஆறடித் தரவு ஒன்று]

புனல்கொண்டும் பூக்கொண்டும் பூரணனைப் பூசித்துத்
தினமிளிரு முடறானே திருவுடையா ருடலென்றும்
இழிவற்ற புகழ்கூறி யிணையற்ற மனுவோது
தொழினித்த முளநாவே சுசியுடையார் நாவென்றும்
நனவதிலுங் கனவதிலு நாயகனை நனிநினையும்
மனமதுநன் மனமென்று மகிழ்நெடிய வேலோய்கேள்.

2. [நாலடித் தாழிசை மூன்று]

தக்கவரி குமாரிகள்செய் தவநிலைமுன் னெழுந்தருளித்
திக்கனைத்து மேபுகழச் சிலநாளின் மேனுங்கள்
மிக்கவிருப் பம்போல விரைமாலை சூட்டிடுவாம்
பக்கமுளீ ரென்றுரைத்த படிபிழையா திழைத்தனையால்.

பண்டிளமை யறுமுனிவர் பரங்கிரியிற் புரிதவசு
கண்டவர்க ளருகிருந்து கருணைநிஜ நெறியாக
எண்டிசையு மப்பாலு மிணையறநின் றிடலுணர்த்தி
அண்டருமே பெறற்கரிய வரும்பெருவாழ் வளித்தனையால்.

யாக்கையிரு ளென்னவரும் யமனையொரு மசகமென
நோக்குமிக லுளவிடும்ப னுன்னோடன் றெதிர்க்கக்கண்
டூக்கமிகு முனிவரரு முவணையருந் தாமதிக்க
ஆக்கையுயிர் பிரித்தருளி யங்கவனாட் கொண்டனையால்.

3. [முடுகியலாகிய அராக நான்கு]

நிறமலி தமனிய னையரிய சிறைபணி நிருமித வினைமருவினை
அறமலி நெடியவ னயர்தவ நலனுற வடல்வளை யினிதருளினை
மறமலி யரியெனு மெறுழிசெ யிடரற மதுகையு றுகொலைசெய்தனை
திறமலி சுரர்புகழ் குறுமுனி யுயர்கவி செயநல தமிழருளினை.

4. [ நாற்சீரடி அம்போதரங்கம் இரண்டு ]

விந்துவு நாதமும் விளங்க நின்றுமவ்
விந்துவு நாதமும் விலங்க நின்றனை,
ஆரணச் சொல்லிடை யடங்கி நின்றுமவ்
வாரணச் சொல்லையு மகன்று நின்றனை.

[ நாற்சீரோரடி அம்போதரங்கம் நான்கு ]

சின்மய வெளியெனச் செறிந்து நின்றனை.
நின்மல வொளியென நிலவி நின்றனை.
சதசத் தசத்தெனாச் சத்தென நின்றனை.
பொய்த்தவ ரறியொணாப் பொருளென நின்றனை.

[ முச்சீரோரடி அம்போதரங்கம் எட்டு ]

சுகுர்த வருளென விளங்கினை.
துகளி லியல்பென வியங்கினை.
பிரம விபுவென விருந்தனை.
பெரிய பதியென விலங்கினை.
நெடிய திருவென நிரம்பினை.
நிகில குருவென நிகழ்ந்தனை.
நிகரில் கடியென நிமிர்ந்தனை.
நிரவ யவனென நிறைந்தனை.

[ இருசீரோரடி அம்போதரங்கம் பதினாறு ]

தழைவு மாயினை.
விளைவு மாயினை.
சமமு மாயினை.
தவமு மாயினை
அயில னாயினை.
மயில னாயினை.
மழவ னாயினை.
கிழவ னாயினை.
வீர னாயினை.
தீர னாயினை.
முருட னாயினை
திருட னாயினை.
மலைய னாயினை.
புலவ னாயினை.
பூம னாயினை.
ஓம னாயினை.

5. [தனிச்சொல்]

எனவாங்கு.

6. [ஆறடி நேரிசை ஆசிரியச் சுரிதகம்]

எல்லிலு மல்லிலு மென்மனத் தெண்ணியுன்
நல்லடி பரவி நாடுநா யேனைக்
காப்பது கடனாக் கருதியெஞ் ஞான்றுநீ
நீப்பறு திருவரு ணீட்டிடல் வேண்டும்
வீவில்புள் ளிருக்கும் வேளூர்க்
கோவில்வாழ் முத்துக் குமார தேவே.

நீரைக் கொண்டும் பூவைக் கொண்டும் எங்கும் நிறை இறைவனை நாள்தோறும் வழிபட்டு நன்கு ஒளிபெறும் உடலே, அருட்செல்வம் உடையாரின் உடல் என்றும், இழிவு சிறிதும் இல்லாத புகழைப்பாடி, இணையற்ற மந்திரத்தை ஜபிக்கும் பணியை நாள்தோறும் கொண்டிருக்கும் நாக்கே தூய்மையாளரின் நாக்கு என்றும், நனவிலும் கனவிலும் இறைவனையே ஆழ்ந்து சிந்தித் திருக்கும் மனமே நன்மனமாம் என்றும் பக்தர்களுக்குப் புலப்படுத்தி மகிழும் நீண்ட வேற்படை உடையோய்! கேட்டருள்வாயாக.

பக்குவம் வாய்ந்த திருமாலின் புத்திரிகளான அமுதவல்லியும் சுந்தரவல்லியும் செய்த தவத்தின் பயனாக அவர்கள் முன் எழுந்தருளி, "நீங்காத அன்புடையவர்களே! இன்னும் சிறிது காலம் சென்றதும் உங்கள் விருப்பம் போலவே எல்லாத் திசைகளில் உள்ளாரும் புகழும்படி உங்களுக்கு மணமாலை சூட்டுவோம்" என்று கூறியதற்கேற்பப் பின்னர் அவர்களுக்கு மணமாலை சூட்டி நின்றாய்.

முன்பொரு காலத்தில் பராசரமுனிவரின் குமாரர்கள் ஆறுபேர், முனிவர்களாக இருந்து திருப்பரங்கிரியில் செய்த தவத்தைக் கண்டு, அவர்களின் அருகே எழுந்தருளிக் கருணையே உனது இயல்பான நெறி எனத் திகழ, நீ எண்டிசை முழுவதும், அவற்றுக்கு அப்பாலும் இணையற்ற முறையில் நீயே வியாபித்து நிறைந்து இருத்தலை உணர்த்தித் தேவர்களாலும் பெறுவதற்கு அரிய பெருவாழ்வை அவர்களுக்கு அளித்தாய்.

தனது உடல் இருட்டுக்கு நிகராகக் கருநிறத்துடன் வரும் யமனை ஒரு கொசுவைப் போன்று அலட்சியமாகப் பார்க்கும் வலிமை மிகுந்த இடும்பன் உன்னோடு அன்று எதிர்த்துப் போர்புரியக்கண்டு, மனக்கிளர்ச்சி மிகுந்த முனிவர்களும் தேவர்களும் மதித்துப் போற்ற இடும்பனின் உடலையும் உயிரையும்பிரித்து, பின்னர் இடும்பனின் மனைவியின் விருப்பப்படி உடலையும் உயிரையும் சேர்த்து அருளி அவனை நிரந்தரமாக ஆட்கொண்டாய்!

செந்நிறம் செறிந்துள்ள பிரம்மனைச் சிறையில் அடைத்து, அவனுக்குரிய படைப்புத் தொழிலை நீயே மேற்கொண்டாய்; அறத்தை வளர்க்கும் திருமால் செய்த தவத்தின் பயன் நிறைவுற,

வலிமையும் ஆற்றலும் மிகுந்த பாஞ்சஜன்யம் எனும் சங்கத்தை இனிதே அருளினாய். மறம் மிகுந்த விஷ்ணு வராகமாக (பன்றியாக) அவதாரம் செய்த போது, அது செய்த துன்பங்க ளெல்லாம் நீங்குமாறு அந்த வராகத்தை அழித்தாய்; ஆற்றல்மிக்க தேவர்க ளாலும் புகழப்படும் அகத்திய முனிவர் உயர்ந்த பாடல்களைப் பாடி உன்னைத் துதிக்க,நற்றமிழ் நலத்தை அவருக்கு அளித்து அருளினாய்.

விந்துதத்துவம், நாததத்துவம் இரண்டும் வெளிப்படுமாறு நீ செய்தாலும் அந்த விந்து, நாத தத்துவ எல்லைகளுக்கு அப்பால் அதீதனாக விளங்கினாய்; வேத மந்திரங்களில் நீ சான்னித்தியம் கொண்டு நின்றாலும் அந்த வேத மந்திரங்களின் ஆற்றலுக்கும் அப்பாற்பட்டு நின்றாய்.

ஞானமயமான ஆகாசமாக எங்கும் வியாபித்து செறிந்து நின்றாய். நிர்மலமான பேரொளி எனத் திகழ்ந்து நின்றாய். சத்-அசத் (சத்தும் அசத்துமாக இருப்பது); அசத்து, சத்து எனும் மூன்று நிலைகளிலும் நின்றாய். பொய்த்தவத்தோரால் அறிந்துகொள்ள முடியாத பரம்பொருள் என நின்றாய்.

அனைத்துயிர்க்கும் நன்மைசெய்வதான பேரருள் என விளங்கினாய்; மாசற்ற இயல்பே உனது இயல்பாகச் செயல்பட்டாய்; வியாபிக்கும் பொருள்கள் எத்தனை உண்டோ, அத்தனைப் பொருள்களையும் உனது வியாபகத்துள் அடக்கிப் பெருவியாபகம் என விளங்கினாய் பிரகதீசுவரன் எனப் புகழுமாறு பெரும் பெயர்க்குரிய இறைவன் என விளங்கினாய்.

வற்றாத செல்வம் என நிறைந்து நின்றாய்; அனைவர்க்கும் குருவெனச் செயல்பட்டாய்; நிகரற்ற பேரொளி மயமாகக் கிளர்ந்து எழுந்தாய்; வடிவற்றவனாகி எங்கும் வியாபித்து நிறைந்தாய்.

மேன்மேலும் தழைத்தல், விளைச்சல், சமநிலை, தவநிலை - என விளங்கினாய்; வேலன், மயிலூர்தி, இளையோன், முதியோன், வீரன், தீரன், வேடன், திருடன், மலைவாசி, புலவன், பூமிக்கு அதிபதி, பிரணவ அதிபதி - என இவ்வாறு பல வடிவங்களிலும் வெளிப்பட்டு அருளினாய்.

என - இவ்வாறு.

பகலிலும் இரவிலும் என் மனத்தே உனது பல நிலைகளையும் அருட்கோலங்களையும் சிந்தித்து உனது நல்ல திருவடிகளைத் துதித்து உன் அருளை நாடும் எளியேனைக் காத்தருள்வது உனது கடமையே எனக் கருதி எப்பொழுதும் நீங்குதற்கரிய உனது திருவருளை எனக்கு வழங்க வேண்டும்.

அழியாத புள்ளிருக்கு வேளூர் (வைத்தீசுவரன் கோவில்) எனும் தலத்தில் கோயில் கொண்டு வாழும் முத்துக்குமாரசுவாமியே!

பின்வரு வெண்கலியுள்ளும், வெண்டளையான் வருங் கொச்சகக்கலியுள்ளும், கட்டளைக்கலியுள்ளும் வரத்தக்க தேமா புளிமாவெனு நேரீற் றியற்சீர்களும், கலிப்பாவிற் சிறுபான்மை வரத்தக்க கூவிளம் கருவிளமெனு நிரையீற் றியர்சீர்களும் இவ்வொத்தாழிசைக்கலிப்பாக்களின் தரவு தாழிசைகளில் வாராமற் காய்ச்சீரே வந்தவாறறிக. "என, வாங்கு" என்ற தனிச்சொல் : "அடைநிலைக்கிளவி தாழிசைப் பின்னர் - நடை நவின்றொழுகு மாங்கென்கிளவி" எனுந் தொல்காப்பியச் சூத்திரவழிவந்தது. நடை நவின்று வருமெனவே, அல்லாதனவெனப்படும் "அதனால்" முதலியனவுமுள; அவை யித்துணைநடைநவின்று வாராவெனக் கொள்க. அவ்வாங்கு: இடப்பொருட்கிளவியாயேனும், அசைநிலைக்கிளவியாயேனு நிற்கும்.

## 2. வெண்கலி.

கலித்தளையும் வெண்சீர் வெண்டளையும் விரவி
அகவற்றுள்ளலோசையான் வருகின்ற
பதினாறடி வெண்கலிப்பா.

மேலென்று சொலப்பட்ட பொருட்கெல்லா மேலாயெக்
காலுமிருந் தெங்கணுமாக் கழுமுபொரு ளொன்றதனைப்
பரசுப்ர மணியமெனப் பகருமுயர் சுருதியதன்
சரணச்செங் கமலமலர் தங்கியநுண் பூழிகளை
ஆதிபரா பரனென்னு மரனார்தம் மொய்ம்புகளும்
ஓதிசெறி பருப்பதியி னுயர்தனபா ரங்களுமே
சில்காலம் பொருந்தியினி துய்ந்தவெனச் செல்வமிகு
தொல்பிரபா கரன்மைந்தர்க் ககத்தியனார் சொற்றிடம்
காந்தத்தி னுபதேச காண்டத்தி லுளததனால்

வேந்தர்க்கும் வேந்தாகு விட்டுணுவு மேனோரும்
நுன்சரணத் துகண்மாண்பு நுவலரிதெத் துணையுமதைப்
புன்கவிஞ னாநானோ புகலுவலித் தகையுடைநீ
என்றுதிகொண் டெளிவந்துன் னின்னருணன் கீவாயேல்
தொன்றுலகி லெனைப்பொறிய னென்றெவர்தாஞ் சொலவிசையார்
ஆதலினங் குகவெனையுன் னருணிலைவைத் தினிவருதல்
போதலுமில் லாமுடிவிற் போக்கு. 4

காய்முன் நிரை வருவது கலித்தளை.

மேன்மை உடையது என்று புகழப்படும் பொருள்களுக் கெல்லாம் மேலானது என, நித்தியமாக விளங்கிப் பிரபஞ்சமெங்கும் வியாபித்து நிற்கும் பொருள் ஒன்று உண்டு. அதனை, உயர்ந்த வேதங்கள் 'பரசுப்பிரமணியம்' என அழைக்கும். அந்தப் பரசுப்பிரமணியப் பெருமானின் செந்தாமரை போன்ற திருவடிகளில் சேர்ந்துள்ள நுண்ணிய துகள்களை ஆதி பரனார் எனப்படும் சிவபெருமானின் தோள்களும், செறிந்த கூந்தலை உடைய பார்வதிப் பிராட்டியின் பெரிய தனபாரங்களும் சில காலம் பொருந்தப்பெற்று மிகவும் இனிய மேம்பாடு அடைந்து சிறந்தன (குழந்தையாக விளங்கிய முருகன் சிவனார் தோள்களில் ஏறி விளையாடியதாலும் பார்வதியார் அந்தக் குழந்தையை எடுத்துக் கொஞ்சிய போது அதன் திருவடி தனபாரங்களில் பட்டதாலும், குழந்தையின் உள்ளங்காலில் ஒட்டிக்கொண்டிருந்த நுண்துகள் முறையே தோளிலும் மார்பகத்திலும் படிந்தன என்பது குறிப்பு)-எனப் பண்டைக்காலத்தே பிரபாகரன் என்னும் அரசனின் மைந்தர்களுக்கு அகத்திய முனிவர் கூறியருளிய உறுதிக்கருத்து காந்தபுராணத்து உபதேச காண்டத்தில் உள்ளது. அதனால் வேந்தர்க்கும் வேந்தனாக விளங்கும் திருமாலும் ஏனைய கடவுளரும் நினது திருவடித்துகளின் பெருமையைச் சிறிதளவேனும் எடுத்துக்கூற இயலாதவர் எனின் அதனை எளிய கவிஞனாகிய யானோ கூறவல்லேன்? இத்தகைய பெருமை உடைய நீ, எனது துதியை ஏற்றுக் கொண்டு, எளிவந்து இரங்கி, உனது இனிய அருளை வழங்குவாய் ஆயின், காலத்தால் மூத்த இவ்வுலகில் என்னை 'அறிஞன் இவன்' எனக் கூறுவதற்கு யார்தான் இசையமாட்டார்? எனவே, அழகிய குகப்பெருமானே! என்னை உனது அருட்பேற்றுக்கு உள்ளாக்கி, இனி எப்பொழுதும் பிறப்பும் இறப்பும் இல்லா உறுதி நிலையில் என்னை நிறுத்திவை.

பலதளையும் விரவிப் பிரிந்திசைத்துள்ளலோசையான் வருகின்ற
பத்தடி வெண்கலிப்பா.

அருணைநல் லவிமுத்த மணிதில்லை மணியாரூர்
திருமலி பொழின்மதுரை திருக்காளத் தியுமுறையே
நினைக்கமெய் விடுக்கவொரு நிலையுறீஇத் தரிசிக்கச்
செனிக்கவுட் செவிகேட்கச் சிரத்தையுட னருச்சிக்க
முத்தியா மெனநூல்சொன் முறைபோலப் பலனல்கும்
அத்தனார் நின்காற்றண் ணலர்பெரிய தந்தோள்பட்
டுள்ளமா மகிமையினுட் குளிர்ந்தனரக் குளிர்கொண்டே
வள்ளலா யின்பீவர் மலர்ச்சரணம் பினர்க்கென்னின்
அற்றமி லறுமுகவுன் னடிப்பூகம் முடிப்பார்வாழ்
வெற்றென மட்டிடலா மிங்கு. 5

திருவருணை, காசி, அழகிய சிதம்பரம், எழில்நிறைந்த திருவாரூர், அழகும் வளமும் செறிந்த பொழில் சூழ்ந்துள்ள மதுரை, திருக்காளத்தி எனும் புண்ணியத் தலங்கள் முறையே நினைக்க, இறக்க, ஒரு நியதிப்படி தரிசிக்க, பிறக்க, அகச்செவி குளிருமாறு கேட்க, ஈடுபாட்டுடன் அர்ச்சிக்க முத்திப்பேற்றைத் தரும் என நூல்கள் கூறும் முறைமையைப் போன்றே நிறைபலன் வழங்கும் தலைவனார் ஆகிய சிவபெருமான் நினது திருவடியாகிய தண்ணிய மலர் தமது தோள்மீது பட, அத்திருவடி மகிமையால் தமது உள்ளம் மிகவும் குளிரப்பெற்று மகிழ்ந்தனர். அந்தக் குளிர்ச்சியால், அவர் வள்ளல் என ஆகித் தமது திருவடிகளை நம்பி வழிபட்டவர்களுக்கு ஆனந்தப் பேற்றை வழங்குபவர் ஆனார் எனில், மறைந்துவிடாமல் எப்பொழுதும் வெளிப்பட்டு அருளும் அறுமுகப் பரமனே! நினது திருவடி மலரைத் தம் முடிமீது சூடிக்கொள்வார் பெறும் வாழ்வுச் சிறப்பு எத்தன்மையது என அளவிட்டுக் கூற முடியுமோ?

ஆசிரியத்தளையானுந் தன்றளையானும் வருகின்ற
நான்கடி வெண்கலிப்பா.

ஆசறு மயின்மழவ னருந்தமுத முகைகடழல்
தேசவி ரவன்றந்தை திருவுருவுந் தழலேயால்
நாசமி லவற்சுமந்த நறுந்தேவுந் தழலினிய
தாசருள் கவனுமொண் டழல். 6

குற்றமற்ற வேல் இளைஞன் அன்று குழவியாகச் சரவணப் பொய்கையில் இருந்தபோது அருந்திய கிருத்திகை மாதர்களின் அமுதமயமான தனங்கள் நெருப்புமயம்; ஒளிவிளங்கும் அவனது தந்தையின் திவ்விய வடிவமும் நெருப்பே ஆகும்; அழிவில்லாத அவனைச் சுமந்து சரவணப் பொய்கையில் விடுத்த அக்னிதேவனும் நெருப்பே; இன்பாரும் அடியார்கள் தியானிக்கும் குகப்பெருமானும் நெருப்பே.

இப்பாவானே தனியேவருங் கலிப்பா நான்கடிச் சிறுமையுடைத்தென்பதறிக. பெருமை யெத்துணைத்தென்னின்; அளவின்றென்க. என்னை? "எள்ளப்படாக்கலிக் கீரிரண்டாகு மிழிபுரைப்போ - ருள்ளக் கருத்தினளவே பெருமை" என்பது யா-காரிகை யாகலின். வெண்பாவேபோல, ஈற்றடிமுச்சீரா யேனையடி நாற்சீராய் முடிதலின்; இங்கு வந்த பாக்கள் வெண்கலியாம்.

## கலிவெண்பா.

ஒருபொருண்மேல், ஒழுகிசைச்செப்பலோசைத்தாய்த்
தனிச்சொலின்றிப்பதினான்கடியான் வருவது.

தெவ்வற்ற கண்ணுவனார் செப்பியவோர் சாபத்தை
இவ்வழியே தீர்ப்பாமென் றெண்ணியநீண் மாலென்பார்
மாசில் சிவமுனியாய் மானான பார்க்கவியை
ஆசினோக் காற்புணர்ந் தோர்பெண் ணளித்தஃ
துபேந்திரனாம் வேட னுறையுள் வளர்ந்து
நபேந்துபோன் மின்னியிடு ஞான்றுநின் பானல்கி
வாழ்ந்தா ரிரப்பார்க்கும் வாழ்வளிக்கு மாண்புற்றார்
தாழ்ந்தா ருளுந்தாழ் சழக்கனே னென்றருவேன்
நெஞ்சா னினைப்பே னிறைபாக்க ளாற்றுதிப்பேன்
தஞ்சநின் பாதமெனத் தாழ்வேனின் னாமத்தைப்
பன்னுநர்க் குந்தண்டம் பண்ணிடுவே னன்பானே
என்னகத்தி னிற்கு மிரும்பொருளே வேன்மன்னே
பொன்றாக் கருணைப் புணரியினான் புக்குய்தற்
கொன்றா யணைத்தா ளுவந்து. 7

பகைமை அற்ற கண்ணுவ முனிவர் கூறிய சாபத்தை 'இந்த வழியாகத் தீர்ப்போம்' என்று எண்ணிய வடிவத்தால் நெடிய திருமால் குற்றமற்று விளங்கும் சிவமுனிவராக வடிவு கொண்டு, மான் வடிவத்தோடு விளங்கிய திருமகளைக் குற்றமற்ற கண்நோக்காலேயே புணர்ந்து ஒரு பெண்ணை அளித்தார்.

அப்பெண் உபேந்திரன் வேடர்தலைவனாகிய நம்பிராஜனாக விளங்கும் இல்லத்தில் வளர்ந்து, ஆகாயத்தில் ஒளிவீசும் பூரணசந்திரன் போன்று வளர்ச்சி பெற்று விளங்கும் காலத்தில் அவளை உனக்குத் திருமணம் செய்வித்து அளித்து, அந்தப் பேற்றினால் சிறப்புடன் வாழ்ந்தார்; தன்னிடம் வந்து யாசிப்பார் அனைவர்க்கும் உயரிய வாழ்வை அளிக்கும் சக்திபெற்று உயர்வுற்றார். இழிந்தோருள்ளும் மிக இழிந்த, சழக்கனாகிய நான் உனக்கு எதைத் தருவேன்? என் மனத்தால் நினைப்பேன்; சுவை நிறைந்த பாட்டுக்களால் துதிப்பேன்; "உன்பாதமே அடைக்கலம்" எனக் கூறி வணங்குவேன். நின் திருப்பெயர்களை மாலைபோல் தொடுத்துக் கூறும் அன்பர்களின் முன் வீழ்ந்து வணங்குவேன்! அன்பால் என் உள்ளத்தில் வீற்றிருக்கும் வேல்மன்ன! நினது வற்றாத கருணைக்கடலில் திளைத்து உய்வதற்கு, நீ திருவுள்ளம் மகிழ்ந்து நின்னுடன் ஐக்கியப்படுமாறு அணைத்து ஆட்கொள்க!

இடையிடையே தனிச்சொற்பெற்றுப்
பதினெட்டடியான் வருவது.

வனப்புமீ தூர வளர்மணிக்க லாபந்
தனைக்ககன நீட்டித் தலநின்-றெனைக்கொள்
இறைசெவ்வேள் கால்விழைவா ரெல்லாரு நாளும்
குறைவில்லாச் செல்வரெனக் கூத்தா - டிறைமஞ்ஞாய்
நீசூர னாயிருந்து நீடாக்க விண்ணோர்க்கு
மாசூர் புரிந்து மகிழ்போழ்து - தேசாரவ்
விண்ணோருன் மாண்பு விளியவெற்றி கொள்ளவெனா
எண்ணிச்சேய் மூல மிகறருகா - னண்ணவ்
வுடம்புபோ யிந்த வுடம்புறுநீ வேரிக்
கடம்புமா வெட்சியுங் காமர்த் - தடந்தோளிற்
பூணும் பெருமான் புரிவுடையா ரானந்தங்
காணும் படிக்கருளுங் கத்தனொரு - கீணமுமில்
கூரிலை வேற்கையன் குன்றெறிந் தோனடியாஞ்
சீரியதா டாங்கு திருப்பேறு - சார்வுற்றாய்
அவ்விண்ணோர் நாமெல்லா மர்ச்சிக்கும் வாழ்வுற்றான்
றெவ்வனென் றோதத் தெளிந்தென்று - மிவ்வுலகில்
நின்னிறையே யென்னிறையா நேடி யலையெளியேன்
இன்னலுற லாங்கொ லிசை. 8

"அழகு மேலோங்கி விளங்க வளர்கின்ற விசித்திர அழகு வாய்ந்த தோகையை வானளாவ விரித்து, இந்நிலத்தில் இருந்து என்னை ஆட்கொள்ளும் இறைவனாம் செவ்வேளின் திருவடிகளை விரும்புவார் அனைவரும், எப்பொழுதும் குறைவிலாச் செல்வராவார்" எனக் கூத்தாடும் தெய்விகமான மயிலே! நீ சூரபதுமனாக இருந்து, பெருத்த செல்வமுடைய தேவர்களுக்கு மிகவும் கொடுமைகள் இழைத்து மகிழ்ந்திருக்கும்போது, ஒளிமிக்க அந்தத் தேவர்கள் உனது பெருமையும் அரசும் அழிவுபடுமாறு உன்னை வெற்றிகொள்வதற்காக எண்ணிச் செவ்வேள் மூலம் போர்புரிந்தபோது, பொருந்திய அந்த உடல் மறைந்து இந்த மயிலுடம்பு பொருந்திய நீ, தேன் சிந்தும் கடம்பமலர் மாலை, வெட்சிமலர் மாலை ஆகியவற்றை அழகிய தோளில் அணிந்து கொள்ளும் பெருமானும், அன்புடைய அடியார்கள் ஆனந்தப் பேறு பெறும்படியாகக் கருணை பாலிக்கும் முதல்வனும், ஒரு குறைவும் இல்லாத கூரிய வேல் ஏந்திய கையை உடையவனும், கிரௌஞ்ச மலையைப் பிளந்தவனுமான முருகனின் சீரிய திருவடிகளைத் தாங்கும் பெரிய பேற்றை அடைந்தாய். அப்போது அந்தத் தேவர்கள் "நம் பகைவனாம் சூரன் இன்று நாமெல்லாம் கூடி வழிபடும் பெருவாழ்வை அடைந்துவிட்டான்" என்று விம்மிதத்துடன் கூறி நின்றனர். இந்த நிகழ்ச்சியை நன்கு சிந்தித்துத் தெளிந்து எப்போதும் இந்த உலகில் உன் இறையாம் குகனே எனது இறைவனும் ஆவான் எனும் உறுதிப்பாட்டுடன் தேடி அலையும் எளியேன் துன்பத்துக்கு ஆளாகலாமோ? கூறு.

இடையிடையே தனிச்சொற் பெறாதும் பெற்றும் வெண்டளையான்வந்த இவை; பதினான்கடி பதினெட்டடிப் பஃறொடைவெண்பாக்க ளாகாவோ? "அடிபலவாய்ச் சென்று நிகழ்வ பஃறொடை" என்பது யா-காரிகையன்றோ வெனின் ; கூறுதும். தொல்காப்பியத்தில் "நெடுவெண்பாட்டே முந்நான்கடித்தே" எனவும், யாப்பருங்கல அடியோத்து விருத்தியுரையில் "மெய்ப்படக்கிளந்த வெண்பா விரிப்பின் **** ஓரிரண்டு முதலா முறைசிறந் தீரா - றேறுமென்ப வியல்புணர்ந்தோரே" எனவும் வருதற்கேற்ப இலக்கண விளக்கம் 738-ம் சூத்திரவுரையில் "வெள்ளோசை தழுவிவருங் கலிவெண்பா ; பன்னீரடியின் மிக்கே வருமெனக்கொள்க" என விளக்கி யிருத்தலின், பதினான்கு பதினெட்டடியுடைய விச்செய்யுள்கள் கலிவெண்பா

வெனவே பெயர்பெறும். அதனாலிங்கே வைக்கப்பட்டனவெனவும், ஐந்தடிமுதற் பன்னீரடியளவும் வருவெண்பாவையே பஃறொடைவெண்பாவென மேலைக்காரிகை விளக்கிற்றெனவும் இங்ஙனம் பொருள்கோட லியைபாம். இவ்வாறு கொளாவிடின் மேலிரு திறச்செய்யுட்கும் பேதமிலையெனு முரணுண்டாம். சிதம்பரச் செய்யுட்கோவையில் வெண்டளைபெற்றுத் தனிச்சொலின்றி 22-அடியான் வந்த "தொடலைக்குறுந் தொடி" எனுந் தொடக்கத்துச் செய்யுளை வெண்கலியில் வைக்கப்பட்டதூஉம் இம்முரணுண்டாகாமையைக் காட்டும். கந்தர்கலிவெண்பாவு மிங்ஙன முதாரணமாம். அற்றேல், ஸ்ரீ உமாபதிசிவாசாரியர் 190 - அடியிலருளிச் செய்ததூஉம், இடையிடையே தனிச்சீர்பெற்றதூஉமான ஒரு செய்யுளுடைய நூற்பெயர் போற்றிப் பஃறொடை என விளங்குவானே னென்னின்; அதுவும் பஃறொடை யாலாய கலிவெண்பாவே; தொடையாலப்பெயர் பெற்றதெனவாம். அது, "நெடுங் கழிநெடில்" "குறுங்கழிநெடில்" எனப் பிரபந்தப் பெயர்கள் காணப்படல் போலும்.

வெண்பாவுக்குரிய காய்ச்சீர் நான்கனுள்; இடையிற் குறினெடிலிணைந்த நிரையசையுடையனவும், இரண்டு மாஞ்சீராகப் பிரிக்கத்தகுவனவுமான "தம்பிரானே" என்பதுபோன்ற கூவிளங்காயும், "சருவசாரம்" என்பதுபோன்ற கருவிளங்காயும் வெண்பாவில் வரவொண்ணாவெனவும், வரின் ஓசைநயங் கெடுமெனவு மறிக. கலிப்பாவில் வரு காய்ச்சீர்கட்கு மிந்நியாயங் கொள்க.

## 3. கொச்சகக்கலி.

### தரவு கொச்சகக்கலிப்பா.

தனிச்சொல்லுஞ் சுரிதகமுமில்லாது தனியே கலித்தளைபெற்று
ஏந்திசைத்துள்ளலோசையான் வருவன.

காய்.

வளர்தில்லைக் கனகசபை மதுரைவெள்ளிச் சபைசோதி
கிளரால வனரத்ன சபைதளிமங் கெழுநெல்லைத்
தளர்வறுதாம் பிரஞ்சித்ர சபைகுற்றா லநிருத்தம்
அளவின்றிச் செயுமரனு மருணிதியா மறுமுகனே. 9

தெய்வத்திரு வளரும் தில்லைச் சிதம்பரத்துப் பொற்சபை, மதுரையில் உள்ள வெள்ளிச்சபை, ஒளிமிகுந்த திருவாலங்காட்டில் உள்ள ரத்தினசபை, திருநெல்வேலியில் தளர்வற்றுத் திகழும் தாமிர சபை, திருக்குற்றாலத்தில் உள்ள சித்திரசபை ஆகிய ஐந்து சபைகளி லும் திருநடனத்தை எப்பொழுதும் செய்து கொண்டிருக்கும் சிவபெருமானும் அருட்கருவூலமாக விளங்கும் அறுமுகப் பெருமானே ஆவன்.

9. வனரத்ன சபை, சித்ரசபை - வடநூன்முடிபு

நிரை+நிரை+நேர்=கருவிளங்காய்.

தனதனனா தனதனனா தனதனனா தனதனனா.

கடல்கடைமால் விதிமுதனீள் கடவுளரார் மகிமையெலாம்
மடமருவா நினதுமகா மகிமையிலே சிறிதெனவே
அடமறுநூ லறையுமெனா வறிமதியோ ருனதிருதாள்
நடனமதே விழைவரரோ நவைதபுவே லிறையவனே. 10

பாற்கடலைக் கடைந்த திருமால், பிரம்மன் முதலாக உள்ள கடவுளர் அனைவரும் பெற்றுள்ள பெருமையெல்லாம், அறியாமையாம் இருள் அணுகாத உனது அளவற்ற பெருமையில் ஒரு சிறிதளவே என வற்புறுத்தி வேண்டுமென்றே பலவந்தமாகக் கூறும் தன்மை இல்லாத நூல்கள் எல்லாம் உறுதிப்படுத்திக் கூறும் என அறியும் அறிஞர்கள் உனது இரண்டு திருவடிகளின் நடனத்தையே காண்பதற்கு விழைவார்கள்! எனது குற்றங்களைப் போக்கி அருளும் வேற்படை நாயகனே!

நிரை+நேர்+நேர்=புளிமாங்காய்.

தனதான தனதான தனதான தனதான.

[அட்டாட்டாக்கரம் (அறுபத்துநான் கெழுத்து.)]

நனிநாடு நனிநாடு நனிநாடு நனிநாடு
முனிவேறு நமனாள்கண் முரணாகி யணுகாமுன்
அனியாய நணுகாம லருள்பேணு மெமரீர்பொய்
நுனியாத சுரர்சூழு நுதிவேல னிருபாதம். 11

அறநெறிக்குப் புறம்பான எதுவும் பொருந்தப் பெறாமல், இறைவனின் திருவருளையே முயன்று அடைய விரும்பும் எம் அன்பர்களே! கோபம் மிகக் கொண்டு காலனுடைய தூதர்கள் பகைகொண்டு உம்மை அணுகுவதற்குமுன், பொய்யைச் சிறிதளவும் நினைக்காத தேவர்கள் தியானிக்கும் கூரிய வேலேந்தியுள்ள முருகனின் இரண்டு திருவடிகளையும் மிகுதியாக நாடுங்கள்! இடைவிடாது நாடுங்கள்!

10. அடம் = பலவந்தம்; ஹடம் என்னும் வடமொழி விகாரம்.

காய்முன் நிரைவரு கலித்தளையே யேந்திசைத் துள்ளலோசை.
மேற்படி, கலித்தளையும் வெண்சீர் வெண்டளையும் பெற்று
அகவற் றுள்ளலோசையான் வருவன.

காய்.

நமனணுகாச் சிவநிலயங் களிலுமந்த நமனென்பான்
மமதையொடைங் குரோசத்துள் வாராத மாண்புடைய
அமலவவி முத்தங்கா ளத்தியிலு மமர்சிவனார்
குமரனடி நினைவாரைக் குறுகானந் நமன்மாதோ. 12

காலன் நெருங்காத சிவன் கோயில்களிலும், அந்தக் காலன் மமதை கொண்டு ஐந்து குரோச எல்லைக்குள் வர இயலாத பெருமை உடைய காசியிலும் திருக்காளத்தியிலும் எழுந்தருளும் சிவ பெருமானின் குமாரனான முருகனின் திருவடிகளை நினைக்கின்றவர் களை அந்தக் காலன் எந்தக் காலத்திலும் நெருங்க மாட்டான்.

மறலியொரு குரோசமள வுஞ்சரியா மதுரையிலும்
திறமையவ னிருகாவ தஞ்சரியாத் தில்லையிலும்
விறல்வினையர் துயர்தீர்த்து விளங்குசிவ னார்தந்த
அறுமுகனை நினைவாரை யணுகானந் நமன்மாதோ. 13

காலன் ஒரு குரோச எல்லை வரையிலும் அணுகாத மதுரையிலும் ஆற்றல்மிக்க அவன் இரு காவத எல்லை வரையிலும் சஞ்சரிக்காத சிதம்பரத்திலும் வலிமைமிக்க வினைப்பயன்களால் பந்திக்கப்பட்டுள்ள மக்களின் துயரத்தை போக்கி விளங்கும் சிவபெருமான் அளித்த அறுமுகப் பரமனை நினைந்திருக்கும் அடியார்களைக் காலன் அணுகான்.

முதற்சீர்: நேர்+நேர்+நேர்=தேமாங்காய்.

சீர்பூக்கு முயிர்க்குயிராத் திகழ்குகனாஞ் செவ்வேளின்
நார்பூக்கு நிறையருளான் முத்திபெற ஞானமில்லார்
கார்பூக்கு மயிர்வெளுப்புக் கண்டவர்க்கும் பல்லிலர்க்கும்
ஏர்பூக்கு மியோகமிலை முத்தியில்லை யெனவறைவார். 14

11. பின்வரு மிரட்டைத்தொடைச் செய்யுட் கிச்செய்யுளு மிலக்கியமாம்.

12. குரோசம் = ஐந்நூறுகோல் நீளம். என்னை? "நாலிருசாண் கொண்டது நற்கோலா மைந்நூறு கோலியைந்த நீளங் குரோசமாம்–நாலு–குரோசமோர் காவதமாங் குன்றாத சாண்டான்.. விரோதந்தீர் முந்நால் விரல்" என்றமையின்.

சீர்மை பொலிந்துள்ள உயிர்களுக்கு உயிராகத் திகழும் குகப்பெருமானாம் செவ்வேளின் அன்பினால் கிளர்ந்தெழும் நிறைவான அருளால் முத்திபெறுவதற்கான அறிவுவன்மை இல்லாதவர்கள், கருமை மிக்க மயிர் வெண்மையான நரையாகுமாறு வயது மூத்து விட்டவர்களுக்கும், வயது முதிர்ச்சியால் பல் விழுந்து போனவர்களுக்கும், ஆன்ம எழுச்சியைத் தோற்றுவிக்கும் யோகமும் (யோக நெறியும்) வாய்க்காது; முத்தியும் வாய்க்காது எனக் கூறுவர்.

**வே**தாக மப்பொருளை மெய்க்குருவி னினிதோர்ந்த
மேதாவி யோருடம்பு மெய்யிலையென் றொருமெய்தேர்
போதாவி யாவுமெந்தப் புரையுடனின் றானுமவை
ஆதார வேலிறைவ னருளடைந்து வாழுமென்பார். 15

வேதங்களும் ஆகமங்களும் கூறும் மெய்ப்பொருளைத் தகுந்த உண்மையான குருவின் வாயிலாக நன்கு கேட்டுணர்ந்த பேரறிஞர்கள் 'இந்த உடம்பு நிலையானதன்று' என்னும் ஓர் உண்மையை ஆய்ந்தறியும் போது, உயிர்கள் அனைத்தும் எத்தகைய உடலோடு கூடியிருந்தாலும் அவை, அனைத்துயிர்க்கும் ஆதாரமாகத் திகழும் வேல் நாயகனின் திருவருளைப் பெற்று இனிதே வாழும் எனும் உண்மையையும் உணர்ந்து கூறுவார்கள்.

**வா**தாந்த வெளிச்சோதீ மயிலேறுந் திருச்சோதீ
நாதாந்த நிலைத்தேவுன் னவையிலரு ளிகழ்வினையின்
வேதாந்தம் படித்தோரு மெய்ந்நூலை மறுத்தோரும்
போதாந்தம் பிடித்தாலும் புகுதுவரோ பவம்போக்கி. 16

தருக்க வாதத்தின் முடிவில், தருக்கத்துக்கு அப்பாற்பட்டு விளங்கும் பேரொளியே! மயில்மேல் ஆரோகணிக்கும் அழகுப் பேரொளியே! நாதாந்தத் தானத்தில் நிலைபெற்றுள்ள தேவனே! உனது குற்றமற்ற அருளாற்றலை இகழ்ந்துரைக்கும் செயல் கொண்டு வேதாந்த நூல்களைப் பயின்றோரும், உறுதிப்பொருள் கூறும் வேதம் ஆகமம் முதலான மெய்ந்நூல்களை மறுத்துப் பேசுபவர்களும், ஞான எல்லையை எட்டிப் பிடித்தாலும் தமது பாவத்தை ஒழித்து முத்திநிலைக்குச் செல்வார்களோ?

பலதளையும் விரவிப்
பிரிந்திசைத்துள்ளலோசையான் வருவது.

திருமருவு புயமாயன் றிகழ்கமலத் தயனறியாப்
பெருமைமலி பரசிவனும் பீடுசால் செவ்வேளும்
ஒருபொருளென் றுணர்வார்தம் முணர்விலுணர் வாய்விரவும்
அருணிமல குகனேநல் லறிவாவ தருள்குதியே. 17

திருமகள் தழுவும் புயங்களை உடைய திருமாலும், ஒளியுடனும் அழகுடனும் திகழும் தாமரை மலரில் வீற்றிருக்கும் நான்முகனும் அறிய இயலாத பெருமை மிகுந்த பரமசிவனும், வீறும் வெற்றியும் செறிந்த செவ்வேள் பரமனும் ஒரு பரம்பொருளே எனத் தெளிவாக உணர்வோரின் உணர்வில் உணர்வாக (அறிவில் அறிவாக) விரவிக் கொள்ளும் அருள்மயமான, நிர்மலமான குகப்பெருமானே! அறிய வேண்டியதும் அறிவில் ஊறுவதுமான பொருளை அறியும் நல்ல அறிவாவது எதுவோ அதனை எனக்கு அருள் புரிக.

இந்த 17-வது செய்யுளில், நிரையீற்றாசிரிய வுரிச்சீரும், காய்ச்சீராகிய வெண்பாவுரிச்சீரும், நேர்நடுவாகிய வஞ்சி யுரிச்சீரும் வந்தன. "அறிவாவத" என்பது நேர்நடுவான புளிமாங்கனியெனும் வஞ்சி யுரிச்சீராம். இச்சீ ரருகிவரும். இதனானே நேரீற்று மாஞ்சீர்களும், நிரை நடுவான விளங்கனிச்சீர்களும், இத்தரவுகொச்சகத்துள் வாராவென வுணர்க. என்னை? "மாஞ்சீர் கலியுட்புகா கலிப்பாவின் விளங்கனிவந்தாஞ்சீ ரடையா" என்பது யா - காரிகையாகலின்.

கருவிளமும், கருவிளங்காயும்.

தனதன தனதனனா தனதன தனதனனா.

[ஒற்றிலாச்செய்யுள்.]

திருவறு சுடருருவே தெரிவரு மதியுருவே
அருவரு ளொளியுருவே யறைமறை புகழுருவே
குருவரு டருவுருவே குறுமுனி பரவுருவே
இருடபு முருகுருவே யெனுநல ரிடரிறுமே. 18

திருமலிந்த ஆறு சுடர்களாக ஒளிரும் அறுமுகம் கொண்டுள்ள மூர்த்தியே! தெரிவதற்கு அரிதான ஞான வடிவே! வடிவமற்ற ஞானவெளியாக ஆகி நிற்கும் நிலையை அருளும் ஒளிவடிவே! இசைக்கப்படும் வேதங்கள் புகழ்ந்துரைக்கும் மூர்த்தியே! தகுந்த குரு

வாய்க்காதோர்க்குக் குருவருளைத் தரும் குருவடிவே! அகத்திய முனிவர் துதிக்கும் மூர்த்தியே! அறியாமையாகிய இருளை விலக்கும் அழகின் வடிவே! - என இவ்வாறு துதிக்கும் நல்லோரின் துன்பங்கள் விரைவில் நீங்கும்.

உலகுளீர்- தளர்வறுநா வதுதழும்பு சாரநிதந் தலைவனார்
உளர்கழல்க டுதிப்பவருக் குதவறமே யுளர்பண்டைக்
களமொழிந்து கதிகாண்ப ரென்றிடுமா கமமதனால்
இளவுருவக் குகனைநித மேத்துநெறி பற்றுதிரே. 19

உலகத்தில் வாழும் அன்பர்களே! நாவானது தழும்பு ஏறும் வகையில் தளர்ச்சி இல்லாது, தலைவனாகத் திகழும் முருகனின் கழல் ஒலிக்கும் திருவடிகளை நாள்தோறும் துதிப்போர்களுக்கு உதவும் புண்ணியச் செயல் செய்யும் பேறுள்ளோர், தொன்றுதொட்டு வரும் தளைகள் எல்லாம் நீங்கப்பெற்று நற்கதியை அடைவார்கள் என ஆகமநூல்கள் கூறும். அதனால் இளமை செறிந்த வடிவத்துடன் திகழும் குகனை நாள்தோறும் துதிக்கும் நன்னெறியைக் கைக் கொள்ளுங்கள்!

இதில், "உலகுளீர்" என அடிமுதற்கட் கூன்வந்தமையின்; கலிப்பா இடையுங் கடையுங் கூன்வரப் பெறாதெனக் கொள்க. என்னை? "அடிமுதற் பொருளைத் தானினிதுகொண்டு - முடிய நிற்பது கூனென மொழிப" என்பது சூத்திரமாகலின்.

செப்பலோசையான் வெண்டளை பெற்று வருவன.

சேவிருக்குங் கைத்தீக்கை செஞ்சரண தீக்கையென்று
தூவிருக்கு நல்லார் சொலுமாறு தண்ணளியிற்
பூவிருக்கு நான்முகனம் பொற்சிரசு குட்டியுடல்
மாவருத்த மேவவுதை தந்தவனெம் மானேயோ. 20

உரிய நியாசம் செய்து செம்மை பொருந்தியுள்ள கரத்தால் தீண்டி அளிக்கும் தீக்ஷை, செம்மை மிக்க பாதத்தால் செய்யப்படும் தீக்ஷை எனப் பல்வேறு தீக்ஷைகளைப் பற்றித் தூய்மை செறிந்துள்ள ஞானியர் கூறுவது போன்று, உனது குளிர்ந்த கருணையால் தாமரைப்பூவில் இருக்கும் நான்முகனின் அழகிய சிரசில் குட்டிக் கைத்தீக்ஷையையும், அவனது உடல் மிகவும் துன்பம் கொள்ளுமாறு உதைத்துச் சரணதீக்ஷையையும் தந்தருளியவன் எம் தலைவனாம் முருகனே அன்றோ!

வேதற்கு மேலா விளம்புமரிக் கும்மரற்கும்
கோதற்ற வாகனமுங் கொள்கொடியு மோருருவே
பேதற்ற ஞானப் பெருக்கிலமிழ் வாரினிய
காதற்கு ளாமா கருணையிறை யாம்வள்ளி
நாதற்கு வாகனமு நன்கொடியு மீருருவே. 21

நான்முகனுக்கும் மேம்பட்டவர்கள் எனக் கூறப்படும் திருமாலுக்கும் சிவபெருமானுக்கும் குற்றமற்ற வாகனமும், ஏந்தும் கொடியும் ஒரே வடிவமே (திருமாலுக்குக் கருடனே வாகனம்; கருடனே கொடி; அவ்வாறே சிவபெருமானுக்கு இடபமே வாகனம்; இடபமே கொடி) பேதத்தை அறவே நீக்கியுள்ள ஞானக் கடலில் திளைப்பவர்களின் தூய அன்புக்குள் சிக்கிக்கொள்ளும் பெருங்கருணைக் கடவுளாம் வள்ளி மணாளனுக்கு வாகனமும் கொடியும் வேறு வேறாகி இரண்டு வடிவங்களாகத் திகழ்கின்றன. (வாகனம் மயிலாகவும் கொடி கோழியாகவும் இருப்பதால் இரண்டு வடிவம்).

இஃதைந்தடியான் வந்த தரவு கொச்சகக்கலிப்பா.

சுரிதகத்தரவு கொச்சகக்கலிப்பா.

1. [தரவு]

தொடைமிலைச்சு குழல்முடித்த சூர்மகள்போ னோக்குடையாய்
பெடையனத்தை நிகர்த்துலவு பெண்ணரசீ பேரழகீ
இடைசிறுத்து முகைபெருத்த விளவிழும மலிமங்காய்
சடைதரித்த முனிவரருந் தாழ்ந்துவிழை சிறுநகையாய்.

2. [தனிச்சொல்]

எனவாங்கு.

3. [சுரிதகம்]

உணர்வழிந் தரிவைமோ குழிதரா
திணர்முடிக் குகனடி யேத்துமா னவரே. 22

பூச்சரம் சூடியுள்ள கூந்தலை முடித்துக் கொண்டுள்ள, தீண்டிவருத்தும் தெய்வப்பெண் போன்ற பார்வை உடையவளே! பெண் அன்னத்தைப் போன்று நடைபயிலும் பெண்ணரசியே! பேரழகி! இடைசிறுத்தும் மார்பகம் பெருத்தும் விளங்க

இளமைச்செழுமை செறிந்துள்ள மங்கையே! சடைமுடி கொண்டுள்ள சிறந்த முனிவர்களும் தம் நிலையிலிருந்து தாழ்ந்து ஆசை கொள்ளுமாறு விளங்கும் புன்சிரிப்பு உடையவளே!

என, இவ்வாறு.

மனித குலத்தவரே! அறிவு இழந்து பெண்ணின் மோகத்தில் வீழ்ந்துவிடாமல் பூங்கொத்துக்களை சூடியுள்ள குகப்பெருமானின் திருவடிகளைப் போற்றுங்கள்.

### சுரிதகத்தரவிணைக் கொச்சகக்கலிப்பா.

1. [தரவு இரண்டு]

நறுநரலை கடைந்ததே நம்பனெழில் வடிவுகண்டு
பொறிநகிலம் விம்முறுமோ கினியாய பொழுதார்வம்
உறுமுரிமை யான்மாலென் றொருநாமங் கொண்டிடவும்
பொறிவிரும்பி நோற்றதனான் மாதவப்பேர் பொருந்திடவும்.

மூட்டின பொருணீயா முடிசரதம் யாரறிவார்
தாட்டயை கிளர்தாசர் தாமறிவார் சருவவுயிர்
நாட்டிய முனக்குள்ளே நல்வினையுந் தீவினையும்
ஈட்டுயிர்க ளின்கணக்கு மிடுதீர்வு முனக்குள்ளே.

2. [தனிச்சொல்]

அதனால்.

3. [ஆசிரியச் சுரிதகம்]

சேவடி யருளிற் செலுத்தெனைப்
பாவகி யெனும்பேர் படைத்தவெம் பரனே. 23

பாற்கடலைக் கடைந்த விஷ்ணு, சிவபெருமானின் எழில்மிக்க வடிவத்தைக் கண்டு ஆசைகொண்டு, விம்மிப்புடைத்துள்ள தனங்களைக் கொண்டுள்ள மோகினியாக வடிவெடுத்தபொழுது, மிகவும் வேட்கையுடன் நின்ற தன்மையால் 'மால்' (மயக்கம்) எனும் பெயரை ஏற்கவும் சக்ராயுதம் பெற விரும்பித் தவம் செய்ததால் 'மாதவன்' (பெரிய தவம் உடையோன்) எனும் பெயர் விஷ்ணுவுக்குப் பொருந்தவும்

இவ்வாறு அவரது செயல்களை நிகழுமாறு செய்வித்த மூல நாயகன் நீயே எனத் திகழும் உண்மையை யார்தாம் அறிவார்? நினது திருவடிக் கருணை மிகுந்துள்ள அடியார்களே அந்த உண்மையை அறியவல்லார். அனைத்துயிர்களுக்குள்ளே, அவைகளை இயக்கு வதாகிய நாட்டியம் உன்னிடமே உள்ளது; நல்வினைப் பயனையும் தீவினைப் பயனையும் சேர்த்துக் கொள்ளும் உயிர்களின் செயல் களைப் பற்றிய கணக்கும், அந்தச் செயல்களுக்குரிய பயன்களிலிருந்து அவைகளை விடுவிக்கும் சூக்குமமும் உன்னிடமேயே உள்ளன.

அதனால்.

நெருப்பு எனும் பொருளைத் தரும் பாவகி எனும் பெயரை ஏற்றுள்ள எம் இறையே! என்னை நினது சிவந்த திருவடிகளால் பெறக் கூடிய அருளைக் கொள்ளும் நெறியில் என்னைச் செலுத்துக.

இப்பாட்டில் வந்த வொருதனிச்சொல்லோடு பிறிதொரு தனிச்சொல் இரண்டு தரவுக்குமிடையில் வரினும் வரலாம்.

வெண்டளையான்வரு நான்கடித்தர விரண்டுகொண்டு முடிகின்ற
### இயற்றரவிணைக் கொச்சகக்கலிப்பா.

பாலுந்தி நஞ்சாற் கறுத்தவரி பாம்பணியான்
காலுன்னி நோற்ற கனதவத்தின் மானசமாஞ்
சூலுழிநற் கட்டழகே சோபிக்க வந்தவனைத்
தூலுறுப் புச்செயற்குத் தொன்மைசான் மூலமும்
கோலமுமாய்க் கண்டோ மவனே குலதெய்வம்
ஞாலத்தீர் காண்மினென நாவசைப் போர்கல்லாம்
ஆலடியி லுள்ளூன்றி யத்தனசை வற்றபொழு
தேலுமத னென்செய்தா னென்பார்க ளென்குகனே. 24

என் குகப்பெருமானே! “பாற்கடலைக் கடைந்த போது எழுந்த விஷத்தின் சுவாலைகளால் தன் திருமேனி கரியநிறம் அடையப்பெற்று விளங்கியவரும், பாம்பை ஆபரணமாகக் கொண்ட சிவபெருமானின் திருவடியைச் சிந்தித்துத் தவம் செய்தவருமான திருமாலின் மானச புத்திரனாய் அவதரித்த, சீவாத்மாக்களாகிய தூல உற்பத்திக்குக் காமம் காரணமாயிருத்தலாலும் அக்காமத்திற்கு காமத்தேவன் கர்த்தாவாயிருப்பதாலும் அவன் நான்முகன் சிருஷ்டிக்கு உபபலனாய் அவதரித்ததனாலும், “மன்மதனே

சிருஷ்டிக்கு மூலகாரண வடிவினன் ஆவன். அவனே எங்கள் கடவுள்" - என காமுகர் கூறுவர். செவ்வேள் பரமனே! கல்லால மரத்தின் கீழ் சிவபெருமான் தன் உள்ளுக்குள் தானே லயித்து யோகத்தில் திளைத்து அசைவற்று இருந்தபோது மன்மதன் ஆற்றல் என்னவாயிற்று - என உன் அடியவர் வினா எழுப்புவர்.

சிஃறாழிசைக் கொச்சகக்கலிப்பா.

1. [நான்கடித்தரவு ஒன்று]

ஓருருவும் பெயருரு மிலியாகி யுயர்மேல்கீழ்
நேர்நடுவுங் குறுமையுமின் றகண்டமென நிலவொருநீ
சீர்மருவும் பசுவெல்லாஞ் சிவகதியை யெளிதுறுமா
றோர்மருவும் பசுபதிக்கோ ரெச்சமெனத் தோன்றினையே.

2. [தனிச் சொல்]

எனவாங்கு.

3. [மூன்றடித்தாழிசை மூன்று]

உண்மையுண ருன்னடியே யொண்பெயரு முருவிருப்பும்
எண்மையிலை வியனெனவே யெழின்மலர்நீர் கொடுபூசை
பண்ணுநிலை தண்டமிழிற் பரசினது முண்டன்றோ-அதான்று.

சகுணமதே நிர்க்குணமா நிலவுமெனத் தலைநூல்கள்
புகலுரைக ணிசமெனவென் புந்திமதித் தவ்வாறு
திகழுனது திருநாமஞ் செபித்ததுநா னுண்டன்றோ-அதான்று.

நானழைப்பேன் வாவெனவந் நாள்வரலா நீயென்று
போனநின தருள்வாக்குப் பொய்யாதென் றனுதினமுன்
கானளினங் களையேநான் கருதியது முண்டன்றோ.

[பெயர்த்தும், தனிச்சொல்]

அதனால்.

4. [ஆசிரியச்சுரிதகம்]

தெய்வச் சோழன் சிந்தைசெய் துற்ற
திருவே தணிகைத் தேவே சுவர்க்கர்
கோவே பரம குருவே குருந்தே

குன்றக் கொடிச்சி கொள்ளருட் டலைவா
சத்தியச் சைவ சமயக் கரும்பே
நெடில்வேன் மன்னே நிகழுன்
னடியே யடைமா றடியேற் கருளே.

தனக்கென ஒருவடிவமோ ஒரு பெயரோ இல்லாதவனாகி மேற்புறம், கீழ்ப்புறம், நேர், நடு, குறுக்கு முதலானவை இல்லாதவனாகி அகண்ட வடிவாய் (பிரிக்கப்படாத முழுவடிவாய்) விளங்கும் நீ சீர்மைநிலையைப் பெறுதற்கு உரிமை உடைய உயிர்க்கூட்டங்கள் எல்லாம் சிவகதியை எளிதில் அடையுமாறு, ஒரு வடிவுடன், அழகுமிக்க பசுபதியாம் சிவபெருமானுக்கு ஒப்பற்ற வாரிசு (மகன்) எனத் தோன்றினாய்!

என இவ்வாறு.

உண்மை இன்னது என உணரும் உன் அடியேன் "ஆற்றல் மிக்க உனது பெயரும், வடிவத்தில் உனது சான்னித்தியமும் (இருப்பு) எளியன அல்ல; பெருமை மிக்கவை" என உணர்ந்து அழகிய மலரும் நீரும் கொண்டு உனக்கு வழிபாடு செய்த நிலையில் தண்தமிழால் உன்னைப் போற்றித் துதித்ததும் உண்டு அல்லவோ!

சகுனம் எனப்படும் வடிவநிலையே நிர்க்குணம் எனப்படும் வடிவம் கடந்த அருநிலை என முதல்நூல்களாகிய வேதங்களும் ஆகமங்களும் கூறும் கருத்துக்கள் உண்மையானவையே என என் அறிவால் நுனித்தறிந்து, அவ்வாறு சகுனமாகவும் நிர்க்குணமாகவும் விளங்கும் உனது திருப்பெயராகிய மந்திரத்தை நான் ஜபித்ததும் உண்டன்றோ!

"நான் 'பழநிக்கு வா' என அழைப்பேன்; அவ்வாறு அழைக்கும் போது வரலாம்" என்று கூறி காட்சியினின்றும் மறைந்துபோன உனது அருள்வாக்கானது சிறிதும் பொய்க்காது எனும் உறுதிகொண்டு நாள்தோறும் உனது திருவடித் தாமரைகளையே சிந்தித்திருந்ததும் உண்டன்றோ!

அதனால்.

தெய்வ ஆற்றல்மிக்க சோழமன்னன் சிந்தித்து அடைந்த செல்வமே! திருத்தணிகைத் தெய்வமே! வானுலகர்க்கு அரசே! பரம

குருவே! சிவக் குழந்தையே! வள்ளிமலைச் செல்வியாகும் குறமகளைத் திருமணம் செய்து கொண்டு அருளிய நாயகனே! சத்தியநெறியாகும் சைவசமயத்தின் சாரமான கரும்பே! நீண்ட வேற்படை ஏந்தும் அரசே! எங்கும் திகழும் உன் திருவடிகளையே அடையுமாறு எளியேனுக்கு அருள்புரிவாய்!

பஃறாழிசைக் கொச்சகக்கலிப்பா.

1. [ நான்கடித்தரவு ஒன்று ]

சொல்லானும் பொருளானுஞ் சுட்டரிய விபுவாய்மற்
றெல்லாமா யல்லவுமா யிருக்குமொரு நிலைநின்று
பல்லுயிரும் பரமசுகப் பரிவணுகிப் பிழைத்திடுமா
றல்லறெறு மைம்முகத்தோ டதோமுகமு மானோய்கேள்.

2. [ஈரடித்தாழிசை யாறு]

நுன்னருளிற் றிளைத்துய்யு நுணங்கியோர் வழிச்செல்லா
தின்னலுறு மிழுதைகளோ டிவன்கூட லினிமுறையோ.

விரைகமழுன் னடிமலரே விழைந்துதுதிக் கின்றவொரு
தரமுடையே னருள்விழுமஞ் சாராது முய்வேனோ.

சந்ததமுங் கம்பலையென் சலராசிக் கண்ணாழ்ந்து
சிந்தைமயங் கிடினினிய திருவருளி னலமாமோ.

திருவருளைத் தினமெண்ணித் தெருளின்றிக் கலுழ்வேனேற்
குருவருணன் குடையார்தங் குணநலமு நலமாமோ.

தினமுமன நான்வாடத் திருவருட்குப் பிரிவாயேல்
எனையடைநர்க் கேதுறுக ணென்றதுவும் பொய்யாதோ.

இன்றெனது முகம்வாடி யிளைக்கமறைந் திருப்பாயேல்
அன்றெனது முன்சொன்ன வறைக்கானி யணுகாதோ.

3. [தனிச்சொல்]

அதனால்.

4. [நான்கடியாசிரியச் சுரிதகம்]

என்முகம் பார்த்தீண் டிரங்கனின் கடன்காண்
நன்முகத் தறுமீ னகிலப்பா லுண்ட
இளம்பூ ரணனே யிறும்பு
களம்பூ ணெழில்சால் கதிர்வே லிறையே. 26

வாக்கினாலோ, வேறொரு வடிவுடைப் பொருளாலோ 'இன்னது' என விளக்குதற்கு அரிய ஞான ஆகாயமாகவும், அனைத்தும் ஆகவும், அனைத்தும் அல்லாததாகவும் இருக்கும் அதீத நிலையிலிருந்து கீழே இறங்கி, உயிர்க்கூட்டங்கள் அனைத்தும் மேலான ஆனந்த அனுபவத்தை அடைந்து உய்திபெறும் பொருட்டாக, துன்பத்தை ஒழிக்கும் ஈசானம் முதலான ஐந்து திருமுகங்களோடு, கீழ்நோக்குவதான அதோ முகம் என்பதும் சேர, அறுமுக வடிவுகொண்டு வெளிப்பட்டோய்! கேட்டருள்வாயாக.

நினது திருவருளில் திளைத்து உய்திபெறும் நுண்ணறிவு சான்ற பெரியோர் வழிச்செல்லாமல், அல்லன செய்து அல்லல் உறும் பேய்த்தன்மை மிக்கவர்களோடு எளியேன் இனியும் சேர்ந்திருத்தல் முறையோ?

நறுமணம் கமழும் உனது திருவடித் தாமரைகளையே விரும்பித் துதிக்கும் சீர்மைமிக்க நெறியில் இருக்கும் எளியேன் உனது திருவருளாகிய சிறப்பையும் செல்வத்தையும் அடையாமல், உய்திபெறுவேனோ?

எப்போதும் துன்பம் எனப்படும் கடலில் ஆழ்ந்து சிந்தை மயங்கும் நிலையிலேயே நான் இருப்பேன் ஆனால், அது உனது இனிய திருவருளின் உயர்நிலைக்கு அழகாக இருக்குமோ?

நினது திருவருளையே நாள்தோறும் நினைத்திருந்தும், ஒரு தெளிவும் இல்லாமல் நான் மனம் கலங்குவதாக இருந்தால் குருவருளை முறையாக நன்கு பெற்றுள்ள அன்பர்களின் குணநலன்களும் நலமாகத் தோன்றுமோ?

நினது திருவருளுக்குப் புறம்பாகி நாள்தோறும் நான் வாடி இருப்பேனாயின் நீ முன்பு தேவர்கள் முன்னிலையில் "என்னைச் சரண் அடைந்தார்க்கு ஏது துன்பம்?" என நீ கூறியதும் பொய்த்துப் போகாதோ!

26. இறும்பு = தாமரைமலர்.

இன்று நான் முகம்வாடி, அருள் பலம் இல்லாமல் இளைத்து இருக்குமாறு நீ என்னை மறந்து இருப்பாய் ஆயின், அன்று என் முன்னே கூறியருளிய அருள்வாக்கிற்கு ஊறு நேராதோ?

அதனால்.

எனது வாடி இருக்கும் முகம் கண்டு, இப்பொழுதே மனம் இரங்கி ஆட்கொள்ளல் உனது கடமையே ஆகும். அருள்செறிந்த முகம்கொண்ட கிருத்திகை மாதர் அறுவரின் முலைப்பால் உண்ட இளம்பூரணனே! தாமரை மலர் மாலையை கழுத்தில் கொண்டு எழில்பெற்றுள்ள ஒளிமிக்க வேற்படையின் நாயகனே!

### மயங்கிசைக் கொச்சகக்கலிப்பா.

1. [நான்கடித்தரவு இரண்டு]

மணிமலி யுவணைவரர் மாமுனிவர் களைநோக்கா
அணிமலி யெமைப்பூசித் தடையரும் பேறனைத்தும்
திணிமலி சரவணவேள் செயற்குரியா னறிமினெனாத்
துணிமலி பிறைமுடியன் சொற்றவுய ருரைக்குரியோய்.

அறுமீனுக் கறுசேயா யன்றிருந்த போழ்தாற்றல்
உறுமரிய திருலீலை யுஞற்றுவா னொருகணத்தே
மறுமேவா வெண்ணிறந்த வடிவங்க டன்கண்ணே
தொறுவுறவே காட்டியவை தோன்றியவா மறைத்தோய்கேள்.

2. [ஈரடித்தாழிசை யாறு]

சலசப்போ தமர்செல்வி தான்புகழு முமைகொங்கைக்
கலசப்பா லினிதுண்டு கயிலைபுக் கிருந்தனையால்.

வெண்காந்தள் பற்றைமுத லாயநல் விரைமலர்கொண்
டொண்காந்தித் தாளர்ச்சித் துய்வார்பங் குற்றனையால்.

சிறைபுக்க சயந்தற்குந் தேவர்க்குங் கனவிற்போய்ச்
சிறைமீட்டிக் காப்பலெனச் சொனவண்ணஞ்செய்தனையால்.

விண்ணிருடி களின்முதன்மை மேவவென யாழ்முனிவன்
பண்ணுதவ மோர்ந்தந்தப் படியருடே வாயினையால்.

27. தொறு = கவட்டம்;

பற்றை = செங்காந்தள்.

பிரமன்சொற் படியுன்றன் பேராயி ரந்துதிக்குஞ்
சுரர்மிக்க பொறிபெறீஇச் சுகிக்கவருள் கூர்ந்தனையால்.

அறுவாய்நோன் பாற்றியவோ ரந்தணனை யரியதிருப்
பெறுமனுவாம் வேந்தாகப் பிறங்கவருள் புரிந்தனையால்.

3. [தனிச்சொல்]

என வாங்கு.

4. [முடுகியலாகிய அராக நான்கு]

ஆசறு நின்சர ணாசையில் விஞ்செனுண்
மோசமி லந்தர மோகமெ ழுந்தது.
விரிதரு முலகது பருவர லெனநவி
லுரியவ ருரைகளெ னுளநனி மருவின.
தத்துவ ஞானம தித்தழி யாநில
யத்தினை யேநினை புத்தியு மேயது.
அருளைய டைந்திடி னமுதுறு மென்றெணு
மொருமதி விஞ்சிய துணர்வுவி ளைந்தது.

[பெயர்த்தும், ஈரடித்தாழிசை யாறு]

சண்பைநகர்த் திருஞான சம்பந்தற் பார்த்ததுபோற்
கண்குளிர்வி னென்னையுநீ கருதிநிதம் பாராயோ.

வாகீசர் பனுவலெலாம் வள்ளுறையக் கேட்டதுபோல்
ஓகையினென் பனுவலையு முற்றுநீ கேளாயோ.

சுந்தரத்தின் முடியிலடி சூட்டியாட் கொண்டதுபோல்
என்றனக்குஞ் சேவடிப்பூ விரண்டினையுஞ் சூட்டாயோ.

வாதவூ ரடிகளுக்கு மனமுவந்து சொற்றதுபோற்
சீதமலர்ச் செவ்வாயைத் திறந்தெனக்குஞ் சொல்லாயோ.

ஏழாட்டைத் தண்டிதனை யெடுத்தாசீர் வதித்ததுபோற்
கேழாட்டி னென்னையுநின் கிருபைகொளச் செய்யாயோ.

கண்ணப்பு மொருவனைமுன் கரம்பற்றிக் கொண்டதுபோல்
அண்ணலெனை யுங்கரத்தி னாற்பற்றிக் கொள்ளாயோ-அனுவை நீ.

27. அறுவாய் = கார்த்திகை.

5. [இருசீரோரடி யம்போதரங்கம் எட்டு]

ஆட்டினா லாடாதோ.
ஆட்டாக்கா லாடிடுமோ.
ஊட்டினா லுண்ணாதோ.
ஊட்டாக்கா லுண்டிடுமோ.
ஓட்டினா லோடாதோ.
ஓட்டாக்கா லோடிடுமோ.
காட்டினாற் காணாதோ.
காட்டாக்காற் கண்டிடுமோ.

[பெயர்த்தும், தனிச்சொல்]

அதனால்.

6. [நான்கடி யாசிரியச் சுரிதகம்]

எனாது போத மென்ப திணையினுன்
தனாது போத மாகத் தழைத்துநான்
மேம்படு பொருளாய் விளங்க
ஓம்பரு ணிட்டையின் றுதவி யருளே. 27

நவரத்தினங்கள் மிகுந்துள்ள தேவலோகத்துள்ள சிறந்த அமரர்கள், பெருமுனிவர்கள் ஆகியோரை நோக்கி "அருள் அழகு மிகுந்துள்ள எம்மைப் பூசித்து அடையக்கூடிய அரிய பேறுகள் அனைத்தையும், வலிமையும் ஆற்றலும் மிகுந்துள்ள சரவணவேள் உங்களுக்கு வழங்குவதற்கு உரியான், அறிவீர்களாக" என பிறைத் துண்டம் அணிந்துள்ள சடைமுடியை உடைய சிவபெருமான் கூறிய உயர்ந்த வாசகத்துக்கு உரிமையானவனே!

கிருத்திகை மாதர்கள் ஆறுபேர்க்கும் தனித்தனியே ஒவ்வொரு குழந்தையாக அன்று விளங்கிய போது, தெய்வ ஆற்றல் மிகுந்த ஒரு திருவிளையாடலைச் செய்ய எண்ணி, ஒரு கணநேரத்தில் குற்றம் பொருந்தாத எண்ணற்ற வடிவங்கள் தன்னுள்ளே கூட்டமாகத் தோன்றுமாறு காட்டிப் பின்னர் அவை அனைத்தையும் தனக்குள்ளேயே மறையுமாறு செய்தவனே! கேட்டருள்.

சரவணப்பொய்கையில் தாமரைப் பூவில் குழந்தையாக விளங்கியபொழுது, திருமகள் தன்னால் புகழப்படும் உமையம்பிகையின் திருமுலையாகிய பொற்கலசத்திலிருந்து பெருகிய ஞானாமுதப்பாலை உண்டு கயிலைமலைக்குச் சென்று அங்கே சிவபிரானோடு சேர்ந்திருந்தாய்.

வெண்காந்தள், செங்காந்தள் முதலான நல்ல நறுமண மலர்களைக் கொண்டு பேரொளி வீசும் உனது திருவடிகளை வழிபட்டோரிடமாகச் சேர்ந்திருந்தாய்.

சூரபதுமனால் சிறையில் இடப்பட்ட சயந்தனுக்கும் மற்றுமுள்ள தேவர்களுக்கும் கனவில் சென்று "கவலையுறேல். உங்கள் அனைவரையும் சிறையிலிருந்து விடுவித்துக் காப்பேன்" எனக் கூறியவண்ணமே அவர்களை விடுவித்து அருளினாய்.

தேவரிஷிகளுக்குள்ளே தான் முதன்மைத் தானம் பெறவேண்டி யாழ்முனிவனாகிய நாரதன் செய்யும் அரிய தவத்தை அறிந்து, அவன் விருப்பப்படியே அருள் புரியவல்ல தெய்வம் என விளங்கினாய்.

நான்முகன் கூறியவாறே உனக்குரிய ஆயிரம் திருப்பெயர் களையும் முறைப்படி ஜபித்துப் போற்றிய தேவர்கள், கூரிய ஞானமும் மிகுதியான வளமும் பெற்று இன்பமாக வாழ்ந்திருக்க அருள்புரிந்து நின்றாய்!

கிருத்திகை விரதத்தை முறைப்படி அனுட்டித்த அந்தணன் ஒருவன், பெறுதற்கரிய செல்வத்தைப் பெற்றுள்ள மனு அரசனாக விளங்குமாறு அருள்புரிந்தாய்!

என, இவ்வாறு.

குற்றங்களைப் போக்கும் உனது திருவடிமீது கொண்டுள்ள ஆசை மேன்மேலும் அதிகரிக்கும் என்னுள்ளே, பழித்துக்கூற இயலாத தெய்வத் தொடர்பான மோகம் எழுந்தது; விரிந்து பரந்துள்ள இவ்வுலகநிலை, துன்பமயமானது எனக் கூறும் தகுதிசான்ற பெரியோர்களின் வாசகங்கள் என் உள்ளத்தே ஆழப் பதிந்தன; தத்துவ ஞானத்தை உயர்வாகக் கருதி, அழியா நிலயமாகிய முக்தி வீட்டையே நினைக்கின்ற புத்தியும் எனக்கு வாய்த்தது; நினது

திருவருட்பேற்றை அடைந்தால் ஞானானந்தமான அமுதப்பேறு கிடைக்கும் என நினைக்கும் ஓர் எண்ணம் மேலோங்கியது; அதற்கேற்ற நல்லறிவும் எனக்குள்ளே விளைந்தது.

சீகாழியில் அவதரித்த திருஞானசம்பந்தப் பெருமானைக் கண்குளிரக் கண்டு அருளியது போன்றே என்னையும் கருதிஏற்றுக் கொண்டு நாள்தோறும் என்னைப் பார்க்க மாட்டாயா?

திருநாவுக்கரசர் பாடிய பதிகமாலைகளையெல்லாம் நின் செவிகளில் தங்கி இருக்குமாறு ஆர்வத்துடன் கேட்டதுபோல், என் பாடல்களையும் மகிழ்ச்சிபொருந்த உற்றுக் கேட்க மாட்டாயா நீ?

சுந்தரமூர்த்தி சுவாமிகளின் தலையில் திருவடியை வலுக்கட்டாயமாகச் சூட்டி ஆட்கொண்டது போன்றே என் தலைமேலும் நினது திருவடித் தாமரைப் பூக்கள் இரண்டையும் சூட்ட மாட்டாயோ?

மாணிக்க வாசகப் பெருமானுக்கு மனம் உவந்து ஞானோபதேசம் செய்தது போன்று, உனது குளிர்ச்சிமிக்க மலர்போன்ற சிறந்த வாயைத் திறந்து எனக்கும் உபதேசம் செய்ய மாட்டாயா?

ஏழாண்டுச் சிறுவனாக இருந்த தண்டியை (சண்டேசுரனை) ஆதரவுடன் எடுத்து அவனது சிரசில் கைவைத்து ஆசீர்வதித்தது போன்றே, எனது குற்றங்களைக் களைந்து தூயன் என ஆக்கி உனது அருட்செல்வத்தை யான் கொள்ளுமாறு செய்யமாட்டாயா?

தன் கண்ணை இடந்து அப்பும் வேடனின் (கண்ணப்ப நாயனாரின்) கரத்தை அன்று 'நில்லு கண்ணப்ப' எனக் கூறிப் பற்றிக் கொண்டது போன்றே, அண்ணலே!, என்னையும் உனது திருக்கரத்தால் பற்றிக் கொள்ள மாட்டாயா? -

உடலெடுத்திருக்கும் உயிர்களுக்கெல்லாம் தலைவன் நீயே அன்றோ!

அணுவை நீ ஆட்டினால் ஆடாதோ! நீ இயக்காவிட்டால் அது இயங்குமா? ஒவ்வோர் உயிர்க்கும் வினைப்பயனை ஊட்டினால் அது அனுபவிக்காதோ? நீ அவ்வாறு ஊட்டவில்லை ஆனால் அது

வினைப்பயனை அனுபவிக்குமா? வான்வெளியில் கோள்களைச் செலுத்தினால் அவை செல்லாவோ! அவ்வாறு நீ செலுத்தாவிட்டால் கோள்களால் இயங்க இயலுமா? நீ உள்ளிருந்து 'சத்' இது 'அசத்' இது எனக் காட்டினால் உயிர் காணோதோ? நீ அவ்வாறு உள்ளிருந்து காட்டவில்லை ஆனால் உயிரால் காண முடியுமோ?

அதனால்.

எனது சிற்றறிவை, இணையற்ற உனது பேரறிவு மயமாகத் தழைக்கப் பெற்று நான் மேம்பட்ட ஆன்மாவாக விளங்க, உயர்நிலைக்கு உயர்த்தும் அருள் நிட்டை நிலையை இன்று எனக்கும் வழங்கி அருள்வாயாக!

இச்செய்யுள் : தரவு, தாழிசை, அராகம், அம்போதரங்கம், தனிச்சொல், சுரிதகமெனக் கலிக்கோதப்பட்ட ஆறுறுப்பும் மிக்குங் குறைந்தும் பிறழ்ந்தும் உறழ்ந்தும் மயங்கியும் வந்தமையான், மயங்கிசைக் கொச்சகக்கலிப்பாவெனப் பெயர்பெற்றது.

அராகவுறுப்பு : நான்கடிமுத லெட்டடியந்த மெத்தனையடியானு நாற்சீர் கொண்ட வளவடிமுத லெல்லா வடியானும் வரப்பெறுமெனக் கொள்க. என்னை? "அளவடி முதலா வனைத்தினு நான்கடி - முதலாயிரட்டியு முடுகிய நடக்கும்" என்பது யா-காரிகை யுரைவரு சூத்திரமாகலின் வண்ணக வொத்தாழிசைக்கலிப்பாவில் வருமாறு குறிலிணை பயின்றவடி; அராகமெனப்படும். அஃதப்பாவிற் கவ்வாறே வரல்வேண்டு மென்க.

"அடக்கியல் வாரந் தரவோ டொக்கும்" எனவரு தொல்காப்பியச் சூத்திரப்படி அடக்கியலாகிய சுரிதகமானது தரவடிக் கொத்தவடியாகவரு விவரம் : ஒத்தாழிசைக்கலிகளிற் காண்க. அக்காப்பியம் "தரவியலொத்து மதனகப்படும்" எனக் கூறுமாற்றான், ஏனைய கலியிலு மச்சுரிதக மவ்வா றொத்துவருதலைப் பஃறாழிசைக் கொச்சகக் கலியிலும், தரவடிக் கதிகவடியாக வருதலைச் சிஃறாழிசைக் கொச்சகக்கலியிலுங் காண்க. "வெண்பா வாசிரியங் கலியே வஞ்சியென - நுண்பா வுணர்ந்தோர் நுவலுங்காலை - யிரண்டு மூன்று நான்கு மிரண்டுந் - திரண்ட வடியின் சிறுமைக் கெல்லை" என யா-காரிகை யுரைவரு சூத்திரமிருத்தலின்; ஆசிரியப்பா : இரண்டடிச்சுரிதகமாயும் வருதலைச் சுரிதகத்தரவு சுரிதகத்தரவிணைக் கொச்சகக்கலிகளிற் காண்க. நேரிசை யொத்தாழிசைக்கலி யல்லாத மற்றக் கலிகளில் ஆசிரியச்சுரிதக வீற்றயலடி : முச்சீரின்றி நாற்சீராய் வருதலுஞ் சிறுபான்மையெனக் கொள்க.

---

தாழிசை ஆறிலும் - பார்த்ததுபோல், கேட்டதுபோல், முடியிலடி சூட்டியாட் கொண்டதுபோல், மனமுவந்து சொற்றதுபோல், ஆசீர்வதித்ததுபோல், கரம்பற்றிக் கொண்டதுபோல் என அறுதிறமெடுத்துக் காட்டினமை சரித்திரங்களிலுள்ள வாறென்றோர்க. இவ்வித காரியங்கள் எவர்மாட்டு நிகழாதிருப்பினும் என்மாட்டு நிகழவேண்டுமென்னு நோக்கத்தானே அவற்றை யெடுத்துக்கூறத் துணிந்தார் அடிகளென்றல் ஈண்டேற்புடைமையாம்.

## 4. கட்டளைக்கலிப்பா.

எள்ளுக் குள்ளெண்ணெ யென்ன வனைத்திலு
மிருக்கு மோர்சச்சி தானந்த மாமுன
துள்ளத் திற்கிறை யேனுமொவ் வாநடை
யுற்று ளோருநின் பேருரு வாதிகள்
எள்ளி னோருமு னன்பர் கலங்கிட
வேசி னோரும்பொன் னாடர்க ளென்னினும்
அள்ள லாதி துவாந்தம்புக் கேங்குவா
ரன்பி னாலெனை யாண்முரு கையனே. 28

மாறாத நினது அன்பால் என்னை ஆட்கொள்ளும் முருகையனே! எள்ளுக்குள்ளே எண்ணெய் நீக்கமற நிறைந்திருப்பது போல், அனைத்து இடங்களிலும், அனைத்துப் பொருள்களிலும் வியாபித்து ஒப்பற்ற சத்-சித்-ஆனந்த வடிவாக விளங்கும் உனது திருவுள்ளத்துக்கு அணுவளவேனும் பொருந்தாத செயல்களைச் செய்பவரும், நினது பெரிய மூர்த்தங்கள் முதலானவற்றை இகழ்ந்தோர்களும், உனது அடியார்கள் மனம் கலங்கி நிற்குமாறு ஏசினோர்களும், அவர்கள் தேவர்களே எனினும், அன்னோர் அள்ளல் முதலான இருள்மலிந்த நரகங்களுக்குச் சென்று துன்புற்று ஏங்கி நைவார்கள்.

ஏக நோக்குறு வோர்பித்தர் பாலர்போ
லேக தேச மிருப்ப ரெனாநவில்
யோகர் சொற்பொரு ளிற்றென வேயுணர்
யூக மற்றவர் புத்தியில் பித்தரை
மோகந் தீர்பர மென்றுகொண் டாடுவர்
முத்தி வேட்கை யுளார்க்கிரங் கின்னருள்
மேக மாமுரு கையவுன் றாண்மலர்
வேண்டு மென்னெஞ்சு மம்மடங் கொள்ளுமோ. 29

“ஒன்றையே நோக்கியிருக்கும் ஏகாக்கிர சிந்தை உடையோர், பித்தரைப் போலவும் சிறுவர்கள் போலவும் தம்மைக் காட்டிக் கொள்ளாமல் அங்கங்கே இருப்பவர்கள்” எனக் கூறப்படும் யோகஞானியரின் உபதேசங்களின் உண்மையான பொருள் இது என

28. துவாந்தம் = இருள்நரகம்; வடசொல்

உணர அறியாமக்கள், அறிவுக் கூர்மை இல்லாதவர்களையும் அறிவில்லாத பித்தர்களையும் 'மோகத்தை தீர்க்கவல்ல பரமஞானி' என கொண்டாடுவார்கள். முத்தியில் வேட்கை கொண்டுள்ள அன்பர்களுக்கு மனம் இரங்கி அருள்மழை பொழியும் கருணை மேகமாம் முருகையனே! உனது திருவடித் தாமரைகளை விரும்பி நிற்கும் எனது உள்ளமும் இத்தகைய அறியாமையைக் கொள்ளுமோ?

கருவி யாவுங் கடந்தவ ரேனுமக்
கருவி யோடுறு காற்சிவ சன்னிதி
மருவி யானந்தக் கண்ணம் வடித்திடன்
மலர்க்க ரங்களைக் கூப்புதல் வாழ்த்துதல்
திருவெண் ணீறிடல் தேசிகற் போற்றுதல்
சிவசி வாவெனச் செப்பல் விடாரிவை
அருகி னோரெவ ருங்குண மில்லரென்
றறிவ தேயென் விவேகமெண் கண்ணனே. 30

ஞான இந்திரியங்கள் முதலான கருவிகளின் உலகரீதியான இயக்கத்திற்கு ஆட்படாமல், அவற்றின் செயல்களைக் கடந்தவர்களாக இருந்தாலும் அந்தக் கருவிகளோடு கூடி இருக்கும் போது சிவமேனித் திருமுன் நின்று ஆனந்தக் கண்ணீர்வடித்தல், மலர்போன்ற கைகளைக் கூப்புதல், துதித்தல், திருநீறு பூசிக்கொள்ளல், ஞானகுருவை வணங்கல், "சிவசிவ" எனும் மந்திரத்தை விடாது உச்சரித்தல் எனும் இத்தகைய செயல்களைச் செய்யாமல் இருக்கமாட்டார்கள். எண்கண் தலத்து இறைவா! இத்தகைய செயல்களைச் செய்யாமல் வழுவியவர்கள் அனைவரும் குணம் இல்லாதவர்களே ஆவர் என அறிவதே விவேக ஞானம் ஆகும்.

அறிவில் பாச பதார்த்தமு மொன்றனை
யந்த ரங்கத்தில் வைத்திருப் போரையும்
சிறிய போதப் பசுப்பிடிப் போரையுந்
தெளிவி லாவிழி தெய்வங்கொள் வோரையும்
நறிய நின்னடி பற்றிநிற் கின்றவென்
னன்னெஞ் சானது ஞானிக ளாமதித்
தறிஞர் பூசனை செய்யவெண் ணாதுகா
ணழகு மாமயி லூருமெண் கண்ணனே. 31

30. கண்ணம் என்னுந் தொடரில் அம் = நீர். நிகண்டுகள் காண்க. எண்கண் = குமரவேள் திருவிளையாடற் கேத்திரங்களுள் ஒன்று.

அழகார்ந்த மயில்மேல் ஏறிவரும் எண்கண் தலத்து இறைவ! அறிவற்ற சடவத்துக்களுள் ஒன்றை உள்ளுக்குள்ளே வைத்துக் கொண்டு அதன் நினைவாகவே இருப்போர்களையும், சிற்றறி வுடைய, பக்குவமற்ற ஆன்மாக்களைத் துணை எனக் கொண்டவர் களையும், தெளிவில்லாத இழிந்த சிறு தெய்வங்களை வழிபடும் செயல் உடையவர்களையும், ஞானிகளாக மதித்து, ஞானியர்க்குச் செய்ய வேண்டிய வழிபாட்டைச் செய்ய, உனது மேம்பட்ட திருவடி களையே உறுதியாகப் பற்றியுள்ள எனது உள்ளமானது ஒருப்படாது.

எட்டெ னுங்குடி வான்மிகி சோலையி
லிராம தேவரு மேர்ப்பரங் குன்றினில்
மட்டி லாமச்ச மாமுனி வேங்கட
மலையிற் கொங்கணர் மாவரங் கத்திலே
சட்டை மாமுனி யுந்தங்கி னாரவட்
டழைக்கு நன்மையெல் லாமவர் சித்தெனாக்
கட்டு ரைக்குமெல் லாருந் தலைத்தெய்வக்
கருணை நீத்தவ ரேகந்த சாமியே. 32

கந்தவேள் பரமனே! எட்டுக்குடியில் வான்மீகியும் பழமுதிர் சோலையில் இராமதேவரும் திருப்பரங்குன்றில் அளவற்ற பெருமை யார்ந்த மச்சமுனியும் வேங்கடமலையில் கொங்கணரும், திருவரங்கத் தில் சட்டைமுனியும் சமாதிகொண்டுள்ளதால் எட்டுக்குடி முதலான தலங்களில் தழைத்திருக்கும் நலன்களெல்லாம் அவர்களது சித்தின் ஆற்றலே எனக் கதைகட்டி உரைப்பார் அனைவரும் மூலதெய்வமாகிய உனது கருணைக்கு அப்பாற்பட்டவர்களே ஆவர்.

தில்லை யிற்றிரு மூலர் வயித்தியன்
சேதி மப்புலந் தன்வந்திரி யுங்கெடாத்
தொல்லை யாரூர் தனிற்கம லன்சுடர்
சுடரண் ணாமலைக் கண்ணிடைக் காடரும்
வல்லை மேவொரு சேதுவி னந்தியும்
வதிந்தா ரம்பரெல் லாமவர் சித்தெனாச்
சொல்லும் யாவரு மைந்தொழி னாயகன்
றுப்பெண் ணாதவ ரேகந்த சாமியே. 33

33. வயித்தியன் சேதிமம் = வைத்தியேசுரன் கோவில்.

கந்தவேள் பரமனே! தில்லைச் சிதம்பரத்தில் திருமூலரும், வைத்தீசுவரன் கோவிலில் தன்வந்திரி முனிவரும் அழியாததும் தொன்மையானதுமான திருவாரூரில் கமலமுனியும், தீபவொளி சிறக்கும் திருவண்ணாமலையில் இடைக்காடரும், இராமேசுவரத்தில் நந்திமுனியும் வதிந்து சமாதி கொண்டதனால், அந்த இடங்களில் உள்ள வளங்களும் நலன்களும் அவர்களது சித்தியின் திறத்தாலேயே எனக் கூறும் அனைவரும், படைத்தல் முதலான ஐந்தொழில்களுக்கும் நாயகனான உனது அளவற்ற ஆற்றலை உணராதவர்களே ஆவர்.

சதுரர் சூழ்பழ நிப்புலம் போகர்மா
தணிகை யிற்கரு வூரரங் கேரளப்
பதிய னந்தன் படுக்கையில் வண்டமிழ்
பாடு கும்ப மகாமுனி வைகைபாய்
மதுரை யிற்சுந்த ரானந்த ராதியோர்
வதிந்தா ரம்பரெல் லாமவர் சித்தெனாக்
கதறெல் லாரு மனாதிப் பிரான்செயல்
கருதா வேழைக ளேகந்த சாமியே. 34

கந்தவேள் பரமனே! ஞானியரும் யோகியரும் சூழும் பழநியில் போகரும், திருத்தணிகையில் கருவூராரும், கேரள நாட்டிலுள்ள திருவனந்தபுரத்தில் வளத்தமிழ் பாடும் அகத்திய முனிவரும், வைகையாறு பாயும் மதுரையில் சுந்தரானந்தர் முதலானோரும் வாழ்ந்து சமாதி கொண்டதனால், அந்த இடங்களில் காணப்படும் வளங்களெல்லாம் அவர்களது சித்தியின் ஆற்றலாலேயே எனப் பிதற்றும் அனைவரும், ஆதியும் அந்தமும் இல்லாத தலைவனாகிய உனது செயலின் திறத்தைச் சிந்தித்துணராத அறிவிலிகளே ஆவர்.

சருவ சீவரு மீச வுபாசனை
தன்னின் மேம்படு வாரஙன் மேம்பட
அருளு நாயக னாளர சாகவு
மருள்பெ றும்பசு வாட்பட் டிருக்கவும்
மருவு தீர்வையுண் டாமென வோரவோர்
மதியி லாரடி யார்களை யேபெரும்
பொருளெ னச்சொலி நாத்திக ராவரென்
புந்தி மேய புராண விசாகனே. 35

எனது அறிவுக்குள் எழுந்தருளும் பரிபூரணமான விசாகப் பெருமானே! எல்லா உயிர்களும், தெய்வ வழிபாடாகிய உபாசனை நெறியில் மேம்பட்டு நிற்கும் நிலையில் உள்ளவையே. அவ்வாறு மேம்படுமாறு அருளை வழங்கும் முதல்வனாம் ஈசன் ஆட்சி செய்யும் அரசனாகவும், அருளைப்பெறும் உயிர்க்கூட்டங்கள் ஆட்பட்டு நிற்கும் அடிமைகள் எனவும் கூறப்படும் முடிவான கோட்பாடு ஒன்று உண்டு என உணர்வதற்குச் சிறிதும் அறிவில்லாதவர், அடியார்களையே "பெருமைக்குரிய கடவுளர் இவர்கள்" (பரம்பொருள்) எனக் கூறி தெய்வநிந்தை செய்யும் நாத்திகர்களாக ஆவார்கள்.

மகத்தெ னச்சொல்விட் சேப மடங்கநின்
　　மகிமை நாமம் விடாமற் செபிப்பதும்
சுகத்தை மூடிக லாவர ணங்கெடச்
　　சுத்த மூர்த்தித் தியானம் விடாமலே
அகத்திற் செய்வது மஞ்ஞமெ னல்லற
　　வகந்தை விட்டரு ளின்வய நிற்பதும்
இகத்தை நீக்குநர் செய்கையென் றுள்கிடா
　　ரெம்மெய் கண்டுயர் வாரயி லீசனே. 36

வேற்படை நாயகனே! 'மகத்' எனும் தத்துவம் வாயிலாக நேரும் பொய்த் தோற்றங்கள் (விட்சேபம்) அடங்க, நினது மகிமை மிக்க மந்திரப்பெயர்களை இடைவிடாமல் செபிப்பதும், ஆனந்த அனுபவத்தை மறைப்பதாகிய, வலிய திரைகள் நீங்கத் தூய்மைமிக்க ஒரு தெய்வ வடிவத்தை இடைவிடாமல் உள்ளுக்குள்ளே தியானம் செய்வதும், அறியாமை எனும் இருள் அகல, தான் என்னும் அகந்தையை விட்டு (தற்போதம் அற்று) இறைவனின் அருள் வயப்பட்டு நிற்பதும் ஆகிய இவையெல்லாம் இவ்வுலகப் பற்றை நீக்கும் துறவியரின் செயல்களாகும் என எண்ணிப் பார்க்காதவர்கள், எந்த உண்மையை உணர்ந்து மேம்படப் போகிறார்கள்?

[இது முதலிரண்டு பாட்டும்; இடையிறுதிமுற்று மடக்கு (யமகம்)]

கமழ்க டம்பணி பூணறுங் கண்டனே
　　கரையில் விண்மண்ணு நிற்கும கண்டனே
இமிழ்சி லம்பணி தாங்கிரு காலனே
　　யெவையுந் தந்துபின் வாங்கொரு காலனே

தமிழ்நெ டுங்கவி பாடுநர் நாதனே
தந்தைக் குங்குரு வானவ நாதனே
அமிழ்த ராசைகொள் பேரின்பக் கட்டியே
யடிய னேனையு மாணலங் கட்டியே. 37

நறுமணம் கமழும் கடம்பமலர் மாலையை அணியும் கழுத்து உடையவனே! எல்லையற்ற நிலவுலகத்திலும் விண்ணிலும் வியாபித்துப் பொருந்தி அகண்டமாக விளங்கும் (பிரிவுபடாததாக விளங்கும்) ஞானவெளியே! ஒலிக்கின்ற சிலம்புகளை அணிந்துள்ள இரண்டு திருவடிகளை உடையவனே! அனைத்தையும் கால எல்லைக்குள் வைத்துப் படைத்து, உரிய காலம் வந்ததும் ஒடுக்கும் ஒப்பற்ற காலவடிவாக இருப்பவனே! தமிழால் பெரிய பெரிய பாடல்களைப்பாடும் கவிஞர்களுக்குத் தலைவனே! தந்தையாகிய சிவபெருமானுக்கும் குருவென விளங்கிய ஆதியும் அந்தமும் இல்லாப் பரம்பொருளே! ஞானஅமுதம் துய்க்கும் யோகியரும் ஞானியரும் விழைந்துநிற்கும் பேரின்பத் திரட்சியே! உரிய நற்கதியை உறுதியாக வழங்கி எளியேனையும் ஆட்கொண்டு அருள்க.

தேமா கூவிளம் கூவிளம் கூவிளம்
தேமா கூவிளம் கூவிளம் கூவிளம்.

தான தானன தானன தானனா, தான தானன தானன தானனா.

ஆட ராவணி வோனரு ளாளியே யாறெ னாநவின் மாதளி யாளியே
பீட றாவறி வாமருள் வாரியே பீலி மாமயி லேறுப வாரியே
நாட வாவினர் காணுக ணாடியே நாச மேதுமி லாதவி ணாடியே
சீட ராமவ ரேபல கோடியே சேரு மாறெனை யேநனி கோடியே. 38

படம் எடுத்து ஆடும் பாம்பை அணியும் சிவபெருமான் அருளிய ஆண்டவனே! ஆறுபடை வீடுகளை கோயிலாகக் கொண்டு ஆள்பவனே! பெருமை நீங்காத அறிவெனும் அருட்கடலே! தோகை வாய்ந்த பெரிய மயில்மேல் ஏறிவரும், பிறவிப்பகையே! (இனிப்பிறப்பதை தடுப்பவன்). உயர்ந்த முத்திப்பேற்றை நாடும் முனிவர்கள் கண்டு நிற்கும் தெளிந்த கண்ணாடி போன்றவனே! அழிவற்றுள்ள சிற்றம்பலத்தில் ஆனந்த நடனத்தைச் செய்பவனே! கோடிக்கணக்கான சீடர்கள் உன்னைச் சேர்ந்து சூழ்ந்திருப்பது

போன்று அடியேனும் சேர்ந்து நிற்குமாறு என்னை விரைந்து ஆட்கொண்டருள்க.

வண்ணத்திடை, மடக்கு நடக்கு நேர்மையை முதன்மண்டலத்தில் ஸ்ரீ கதிர்காம வேலர் வண்ணத்தின் கட்காண்க.

இங்கு 28-முதல் 38- வரை வந்த யாப்புகள் : எண்சீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்த மாகவோ வெனின்; "மாச்சீர் முன்வரு நாற்சீ ரடியே - நேர்முத னிரைமுத னிரனிறை யானே - பதினோரெழுத்தும் பன்னீ ரெழுத்து - மியைந்தரை யடியாய் நடந்தஃ திரட்டித் - தொத்துநான் கிறுவது கட்டளைக் கலிப்பா" என்பது சூத்திரம். ஆகலி னாகாவென்க. இச்செய்யுள்களி னடிகளி னான்கா மெட்டாஞ்சீர்கள் : காயின்றி விளமாகவே வரல்வேண்டும். அன்றெனி னோசைகெடுமெனவும், 29-வது செய்யுள் முதலடியிற் 'பாலர்போ' எனுஞ் சீரில்வந்த ரகரவொற்றைப்போல இடையின வொற்றுக்களும், வல்லினமுன்வரப்பெறாத மெல்லினவொற்றுக்களும் வரின் ஓசைகெடா தெனவு முணர்க.

கலிப்பா முற்றிற்று.

---

# கலிப்பாவினம்.

---

## 1. கலித்தாழிசை.

இரண்டடியா யீற்றடிமிக்கு ஒருபொருண்மேன்
மூன்றடுக்கி வருவது.

செய்வினை தீர்த்துன் சேவடி வைத்திடவெம்
தெய்வத் திணிவேலோய் நட்ட மென்பா னடியாயோ.

மொய்வினை தீர்த்துன் முத்தடி வைத்திடவெம்
செய்ய திருவேலோய் நட்ட மென்பா னடியாயோ.

பொய்வினை தீர்த்துன் பொன்னடி வைத்திடவெம்
துய்ய சுடர்வேலோய் நட்ட மென்பா னடியாயோ. 39

நான் முன்செய்துள்ள வினைகளின் பயன்களெல்லாம் ஒழித்து உனது சிவந்த திருவடியை என் மேல் வைப்பதற்காக, தெய்வ ஆற்றலும் வலிமையும் மிகுந்த வேற்படை ஏந்தியுள்ள எம் தலைவனே; என்னுளத்தே அருட்கூத்து நிகழ்த்த மாட்டாயோ?

சிறந்த வேற்படை ஏந்தியுள்ள எம் தலைவனே! என்னைச் சூழ்ந்து மொய்த்திருக்கும் வினைப்பயன்களையெல்லாம் ஒழித்து

நினது முத்துச்சிலம்பு அணிந்துள்ள திருவடியை என் தலைமேல் வைப்பதற்காக என்னுள்ளத்தே அருட்கூத்து நிகழ்த்த மாட்டாயோ?

தூய ஒளிமிக்க வேலவனே! பொய் முதலான குற்றங்களால் முன்னம் விளைந்துள்ள வினைகளின் பயன்களையெல்லாம் போக்கி நினது பொன்னார் திருவடியை என் தலைமேல் வைத்திட என்னுள்ளத்தே அருட்கூத்து நிகழ்த்த மாட்டாயோ?

மேற்படி, வேறு.

தெளிபத்தி யாம்வலையிற் சிக்கிவயப் படுகுகவேள்
அளிபற்று சேவடியை யணைமினோ போமுன் னடியார்காள்.

வேண்டுவன வீகருணை மேன்கற்ப கக்கரவே
லாண்டவனார் சேவடியை யணைமினோ போமுன் னடியார்காள்.

எம்மையடை வார்க்கென்று மின்னனலி வேதென்ற
அம்முருகன் சேவடியை யணைமினோ போமுன் னடியார்காள்.40

அடியார்களே! தெளிந்த பக்தி எனப்படும் வலையில் சிக்கி அன்பர்களின் வசப்பட்டு நிற்கும் குகவேளின் கருணைக்கு இருப்பிடமான திருவடியை உங்கள் உடலம் நீங்குதற்குமுன் சரண் அடையுங்கள்.

அடியார்களே! வேண்டிய பொருள்களை வேண்டியதற்கு மேலாகவே தரும் கருணையை உடைய மேம்பட்ட கற்பகத்தரு மயமான கையை உடைய வேலவனாகிய இறைவனின் திருவடிகளை நீங்கள் இறப்பதற்குமுன் சரண் அடையுங்கள்.

அடியார்களே! "எம்மைத் தஞ்சம் என வந்து அடைந்தவர்க்கு எந்நாளும் துன்பமும் நலிவும் உண்டோ?" எனக் கூறிய அழகிய முருகனின் திருவடிகளை நீங்கள் இறப்பதற்குமுன் சரண் அடையுங்கள்.

மூன்றடியா யீற்றடிமிக்குத் தனியேவருவன.

வாழ்விவை யெனவே மதித்திங் கீட்டெவையும்
பாழ்பட வுயிரும் பதைக்க வுடனீக்கும்
ஊழ்வினை தெரியீ ரோசே யருளுக் குரியாரே. 41

சேயவனின் திருவருளுக்கு உரிமைப்பட்டுள்ள அடியார்களே! இவ்வுலக இன்பப் பேறுகளே வாழ்க்கை எனக் கருதிக்கொண்டு நீங்கள் சம்பாதித்து வைக்கும் அனைத்துப் பொருள்களும் நிலையின்றி அழியும்; உயிரும், உடல் பதைபதைக்க உடலைவிட்டுப் பிரியும். இவ்வாறு செய்யவல்ல ஊழ்வினையை அறிய மாட்டீர்களா?

**இ**ன்றிருந் தெதிர்நா ளிலதாம் பொருளேமெய்
என்றிருந் துளநா டொலையா தெறுழ்வேலன்
பொன்றுலங் கடியா மலரே நாடீர் புவியாரே. 42

உலகோரே! இன்றைக்கு இருந்து நாளை வரும் காலத்தில் இல்லாமல் போகும் அழிபொருளே இவை அனைத்தும் என்னும் உண்மையை உணர்ந்திருந்து, இனிவர உள்ள நாள்களை வீணாக்கி அழிக்காமல் நாள்தோறும் வேலவனின் பொன்மை மிகுந்து விளங்கும் திருவடி மலர்களையே விரும்பி நிற்பீர்களாக.

**வ**ல்லுறழ் முலையார் மயல்பட் டுழன்றுமுகை
வல்லெனப் பெயர்த்து மதியற் றதினுழைதல்
நல்லுணர் வாமோ நவில்வீர் சேய்வாழ் நகரீரே. 43

கந்தலோக வாழ்விற்கு உரியோர்களே! கச்சணிந்த தனத்தியர் மயலில் உழன்று வருந்தியும், அறிவின்றி மீண்டும் அம்மயலில் உழல விழைதல் நல்லுணர்வாகுமோ?

**தோ**தகஞ் சிருட்டி தொடங்கி யனுபவித்தும்
போதுமென் றுணராப் புரைசேர் மனமுடையீர்
காதலி லினுநில் லாமே குகனைக் கருதுமினே. 44

படைப்புக் காலம் தொடங்கி இன்றுவரை துன்பத்தை அனுபவித்திருந்தாலும் இப்பிறவி போதும் என்று உணராத குற்றம் பொருந்தியுள்ள மனம் உடையோரே! இனியேனும் இவ்வுலக ஆசையில் ஈடுபட்டு நிற்காமல், குகப்பெருமானைச் சிந்தித்து இருங்கள்.

நான்கடியா யீற்றடிமிக்குத் தனியேவருவது.

**கை**வரு பொற்பயனே கருதிக் கறையேசால்
பொய்ம்மனு டர்ப்புகழும் பொறியில் புலவீர்காள்
சைவரு ணச்சொருசேய் சரணைப் புகழ்வீரேல்
ஐயுற லற்றவர்கா ணருளும் பொருளு மடைவீரே. 45

கைம்மேல் பெறக்கூடிய செல்வங்களின் பயனையே கருத்தில் கொண்டு குற்றம் மிகுந்துள்ள பொய்ந்நெறி மனிதர்களையே பாடிப்

புகழும் அறிவற்ற புலவர்களே! சைவர்கள் உளமார விரும்பும் ஒப்பற்ற சேயவனின் திருவடிகளைப் புகழ்ந்தால், அவனது திரு வருளில் மாறாத நம்பிக்கை வைத்திருப்பவர்கள் பெறக்கூடிய அருட் செல்வத்தையும் பொருட்செல்வத்தையும் உறுதியாக அடைவீர்கள்.

நான்கடியா யீற்றடிமிக்கு. இடைமடக்காய்த் தனியேவருவது.

**வலம்பனா ளுஞ்சான் மலைச்சார் புறைவார்முன்**
**சிலம்பனாய் நின்றான் றிருக்கா னினைநெஞ்சே**
**சிலம்பனாய் நின்றான் றிருக்கா னினையாயேல்**
**புலம்பனா வாயால் பொச்சாப் புண்ணே னினைநெஞ்சே. 46**

நெஞ்சே! யாரையும் கைகொடுத்துக் காப்பாற்றும் பெருந் துணைவன்; அவனால் எப்பொழுதும் ஆளப்படும் வளம்நிறைந்த மலையிடங்களில் வாழும் வேடர்களின் முன்னே மலைவாழ் வேடுவ னாக நின்றவன் - எனத் திகழும் முருகனின் திருவடிகளை நினைத்திரு; எல்லா மலைகளுக்கும் உரிய முருகனின் திருவடிகளை நீ நினையா திருந்தால் தனித்துவிடப்பட்டு மிகவும் வருந்துவாய். ஆகையால் ஒருபோதும் மறவாமல், நெஞ்சமே, அவனைச் சிந்தித்து இரு.

நான்கடியா 'யீற்றடிமிக்கு இரண்டாமடி குறைந்து'
முதலடியு மூன்றாமடியு மொத்து. இடைமடக்காய்த் தனியேவருவது.

**குருகு நிலவு கோடை சூடி**
**முருக னடன மாடுமே**
**முருக னடன மாடு மோதங்**
**கருது மடியர் காணு மாறு கடுகியே. 47**

இளமைப்பொலிவு மிக்கவனும், வெண்காந்தளாலும் செங்காந்தளாலும் தொடுக்கப்பட்ட மாலை அணிந்துள்ளவனும் ஆன முருகன் நடனம் ஆடுவான்; பேரானந்தம் பெற விரும்பும் அடியார்கள் காணுமாறு மிகுதியாக ஆடுவான்.

இக்கலித்தாழிசைகள் : சீர்வரையற்ற விரண்டடியும் பலவடியுங் கொண்டுமுடியும். என்னை? "அடியெனைத்தாகியு மொத்துவந் தளவினிற் - கடையடி மிகுவது கலித்தாழிசையே" என்ப தியாப்பருங்கலமாகலின்.

---

47. **கோடை** = வெண்காந்தள்; என்ப. "வெண்காந்தள் செங்காந்த ளென்றிரு விகற்பமுங் - கொண்டே வழங்குங் கோடைப் பெயரே" என்னுஞ் சேந்தன் திவாகரச் சூத்திரத்தால் வெண்மையுஞ் செம்மையுமான இருதிறக்காந்தளுங் கோடலே ஏற்புடைத்து.

## 2. கலித்துறை

நெடிலடிக் காப்பியக்கலித்துறை யென்னும்

**கலிநிலைத்துறை.**

தேமா கூவிளம் கூவிளம் தேமா புளிமாங்காய்.

**ஊரும் பேரறை நாவிழி மூக்கு முறுகாதும்**
**சீருங் காயமு நின்னன வென்று தெரியாமே**
**ஊரும் பேருரு வாதியெ லாநம் முடையென்னா**
**ஆரும் பேதைய ரோவுணர் வார்நூ லயிலோனே.** 48

வேல் இறைவனே! ஊர், பெயர், பேசும் நாக்கு, கண், மூக்கு, நன்கு பொருந்தும் காது, முதலானவையும் சீர்மையும் அழகும் பொருந்திய இந்த உடலும் நின்னுடையனவே (நீ அளித்தவையே) எனத் தெரியாமல் ஊர், பெயர் முதலானவற்றையெல்லாம் தம்முடையனவே என எண்ணும் யாவரேனும், அவர்கள் அறிவற்ற வர்களே, அவர்களோ சிறந்த நூல்களைப் பயின்று உணர்வார்கள்?

தேமா புளிமா தேமா புளிமா புளிமாங்காய்

தான தனத்தா தான தனத்தா தனதானா.

**வீவு ஞுதிப்பே மேவு சகத்தாள் வினையீரே**
**மூவர் முதற்றே வாக விருப்போன் முதுவேதா**
**யாவு நினைப்பா லீயு முரத்தான் யதிராசா**
**தூவி மயிற்கோ னேய மிகுத்தோர் சுகமேலே.** 49

இறத்தல், மீளும் பிறத்தல் எனும் இவற்றையே பொருந்தியுள்ள இவ்வுலகில் ஓயாமல் வினைகளைச் செய்துகொண்டிருக்கும் உலகீரே! பிரம்மன், விஷ்ணு, உருத்திரன் எனும் மூவர்க்கும் முதற்கடவுளாக இருப்பவன், தொன்மையான வேதமூர்த்தி; அனைத்தையும் தனது சங்கல்பத்தாலேயே (எண்ணத்தாலேயே) படைக்கும் ஆற்றல் வாய்ந்தவன்; துறவியர்க்கெல்லாம் அரசன்; தோகை உடைய மயில்வாகனத்தில் வரும் தலைவன் - என விளங்கும் முருகனிடம் மிகுதியான அன்புவைப்போர் அடையும் ஆனந்தப் பேறு மிகவும் மேம்பாடு உடையதாகும்.

தேமா கூவிளம் கூவிளம் தேமா கூவிளங்காய்.

ஈரைந் தாகிய வங்குலி கூப்பி யீரெழிற்கை
சேர நெஞ்சிலு நெற்றியின் மேலுஞ் செய்வதுபோல்
ஓரைந் தைந்தையுஞ் சேயவன் பாதத் தொட்டிவிடா
வீரம் விஞ்சிட நாடுதிர் மோக்க வேட்கையரே. 50

வீடுபேற்று வேட்கை உள்ளவர்களே! பத்து விரல்களையும் கூப்பி இரண்டு கரங்களையும் சேர்த்து மார்புக்கு நேராகவும் நெற்றிக்கு நேராகவும் வணக்கம் செய்வதுபோன்று ஞான இந்திரியங்கள் ஐந்தையும் கர்ம இந்திரியங்கள் ஐந்தையும் செவ்வேள் பரமனின் திருவடிகளில் ஒப்படைத்துவிட்டு, எந்தச் சூழலிலும் அவனை விட்டுவிடாமல் இருக்கும் வீரம் மிகுந்து விளங்க, அவனையே நாடி நிற்பீர்களாக.

மட்டி லீகரும் பேனமுக் கேறு வார்கதுப்பை
வெட்டி யந்தலை முண்டிதம் பார்த்த மேன்மையைப்போல்
எட்டு நெஞ்செழு மிவ்வுல காசை யேமழித்துப்
பிட்டு ணீசுரன் மைந்தனை நாடிற் பீடுறுமே. 51

அளவில்லாத ஈரும், கரிய பேன்களும் அழுக்கும் சேர்ந்துள்ள தலைமயிரை வெட்டி அழகிய தலை மொட்டையாகுமாறு செய்து காணும் ஒரு தகுதியான செயலைப்போன்றே, எவற்றையும் பற்றிக் கொள்ளும் நெஞ்சில் எழும் உலகப்பற்று முதலான குற்றங்களையும் அடியோடு மழித்துவிட்டுப் பிட்டுக்கு மண்சுமந்த சிவபெருமானின் திருக்குமாரனை நாடினால் பெருமை பொருந்துமே!

கூவிளம் தேமா கூவிளம் தேமா தேமாங்காய்.

கூடுந றுங்கே சங்களி லொன்றுங் கொய்யாமல்
நீடுதல் கண்ட வாறணி மன்றுண் ணின்றாடு
பீடுடை நம்பர் நந்தன னின்பம் பெய்மேகம்
நாடுத வந்தா னீளினி னைந்த நன்காமே. 52

சடையாகக் கூடும் அழகிய உரோமங்களில் ஒன்றும் கொய்யாமல் அது நீண்டு வளர்ந்து விளங்குவதைக் கண்டிருப்பது போன்றே, சிற்றம்பலத்துள் எப்பொழுதும் திருக்கூத்து இயற்றும் பெருமை மிக்க நம் இறைவன் சிவனின் குமாரனும், இன்பத்தைப்

பொழியும் கருணைமேகமும் ஆன முருகனை நாடி நிற்கும் தவமும் உம்மிடம் நீண்டு விளங்கினால், நினைத்தவை அனைத்தும் நன்றாக நிறைவேறுமே!

தானன தான தானன தான தானானா.

நாரண னான ராமனும் ராம னாடார்வே
பூரண மான வேடனு நீறு பூசீசா
காரண னேயெ னாநினை வேலர் காறானே
ஆரரு ளீதெ ணாரரு ளாழி யாடாரே. 53

நாராயணனின் அவதாரமான இராமபிரானும், இராமபிரானின் வரலாற்றினை விரும்பியபடி நடித்துக்காட்ட தரிசனமும் பூரணப்பேறும் அடையப்பெற்ற (கங்கை நதிக்கு வடக்கில் சிங்கிபேரி எனும் நகரைச் சேர்ந்த) குகன் என்னும் வேடனும், "திருநீறு விளங்கும் ஈசனே! மூலகாரணனே!" - எனத் தியானித்ததும், வேலவராகிய முருகனின் திருவடிகளே. அருள்நிறைந்த அவன் திருவடிகளைக் கருதாதவர்கள் அருட்கடலில் திளைத்தல் அரிது.

இரண்டாஞ்சீர்: புளிமா. ஐந்தாஞ்சீர்: புளிமாங்காய்.

வான்மதி வளர்செவ் வேணியன் மொய்ம்பா மலையேறி
கூன்மதி யெனுட னீவிளை யாடுங் குணியோவென்
மேன்மதி முகவெம் மானயி லானை விழைவோரே
தேன்மதி யுறுவார் கீழ்நடை மேவார் திகையாரே. 54

வானில் உலவும் இளம்பிறை வளர்கின்ற சிவந்த சடைமுடி உடைய சிவபெருமானின் தோள்களாகிய மலைகளில் ஏறி "வளைந்திருக்கும் சந்திரனே! என்னுடன் விளையாடும் குணமுடையவனோ நீ?" எனக் கூறும் மேம்பட்ட பூரணமான ஞானப்பேற்றை அருளும் எம்மானாகிய வேலவனை விரும்பும் அடியார்களே ஆனந்தத் தேனைப் பொழியும் ஞான நிலையை அடைவார்கள்; அவர்கள் இழிந்த செயல்களை மேற்கொள்ள மாட்டார்கள்; எந்தச் சூழ்நிலையிலும் திகைத்து நிற்க மாட்டார்கள்.

53. "வேடன்" இவ்வேடன் பெயர் குகனெனப்படும். வரலாறு ஸ்ரீ சுப்பிரமணிய வியாசத்தில் காணலாம்.

தேமா கூவிளம் தேமா கூவிளம் கூவிளம்.

தத்த தத்தன தத்த தத்தன தத்தனா.

சொக்க ரிக்குடி மக்க ளுக்குள துக்கமால்
பொக்கெ னக்கெட வக்கி புக்கெழு மக்கியாய்
நக்க டுக்கைகொ ணக்கர் பக்கந டக்குமா
வுக்கி ரக்குக னுக்கு மிக்கதி ருக்குமோ. 55

"பொன்னுலகர்க்கும் இம்மண்ணுலகர்க்குமுள்ள துக்கம் பொருக்கெனவொழிய நக்கபிரானருடைய அக்கினிக் கண்களிற் புகுந்து அறுசுடர்வடிவாகிச் சிறந்த கொன்றையந்தார்புனை அந்நக்கனார்புரி காரியச்சார்பாக நின்றருள் பேராற்றலுடைக் குகபிராற்கும் பெரிய பொருளிருக்குமோ? இராது.

சீர்தோறும் இரண்டாம் எழுத்துக் ககர ஒற்றாயுறத் தொடுக்கப்பட்டது.

சொக்கு = அழகு. இதனையுடைய பொன்னுலகரே சொக்கரெனப்பட்டனர்.

பொருக்கெனவென்பது பொக்கெனவெனவும், அங்கியென்பது அக்கியெனவும் விகாரப்பட்டன. அங்கி - அக்கினி.

- [பாம்பன் சுவாமிகள் அருளிய திருப்பா - கடவுள் வணக்கம் 3வது திருப்பாடல் (திட்ப) உரை].

கூவிளம் கூவிளம் கூவிளம் கூவிளம் தேமாங்காய்.

ஏசறு சென்னியின் மாமணி மின்முடி யேதாங்கும்
ஆசையொ டிவ்வுல காளினு முண்ணல மாமோசேய்
தேசவிர் பொன்னடி யேமுடி மேலணி தெய்வீக
தாசரு ளங்களி யேகொளும் வாதனை சாராதே. 56

குற்றமற்ற சிரசின்மேல் பெரிய மணிமுடி சூட்டிக்கொள்ளும் ஆசையோடு இவ்வுலகம் முழுவதையும் ஆளும் நிலை வந்தாலும், உள்ளம் தூய்மையாம் நலம் பெற்றுச் சிறக்குமோ? நலம் வாய்க்காது. ஆனால் சேயவனின் ஒளிமிகுந்த பொன்மயமான திருவடிகளையே முடிமேல் கிரீடமாக அணிந்துகொள்ளும் தெய்வத்தன்மை மிக்க

55. பொருக்கென வென்பது பொக்கெனவென மரீஇயிற்று. அங்கி; அக்கி யென வலித்தல் விகாரமாயிற்று. இச்செய்யுணடைத் தொடைவிவரம்; இவ்வியல் 131 வது விருத்தத்தின் கீழே விளக்கப்பட்டிருக்கிறது.

அடியார்கள், உள்ளம் களிகொள்ளத் திகழ்வார்கள்; உலகப்பற்று எனும் நோய் அவர்களைச் சாராது.

தேமா புளிமா புளிமா புளிமா புளிமா.

தந்தா தனனா தனனா தனனா தனனா.

ஒன்றாய் மிகையா யுயிரா யுடலா யுறவாய்
அன்றா யறிவா மொளியாய் வெளியா யருளாய்
நின்றே நிறைதே வொருதே வதுவே நிகழ்சேய்
என்றே யுணர்வா ரணவார் நசைநோ யினையே. 57

ஒன்றாகவும், பலவாகவும், உயிராகவும், உடலாகவும், உறவாகவும், இவை அனைத்தும் அல்லாததாகவும், அறிவாகவும், ஒளியாகவும், வெளியாகவும், அருள்மயமாகவும் வெளிப்பட்டு எங்கும் வியாபித்திருக்கும் கடவுள் ஒருவரே; அந்தக் கடவுளே, அனைத்தாகவும் விளங்கும் முருகப்பெருமான் - என இவ்வாறு உணர்பவர்கள் ஆசை என்னும் நோயைப் பொருந்தார்.

தேமா தேமா தேமா தேமா தேமாங்காய்.
தானா தானா தானா தானா தானானா.
[நெட்டெழுத்துச் செய்யுள்]

காரீ மாலோ டானா வேதா காணாமா
சீரீ மாதே வாமே லோனீ சேயானோ
னாரீ காலே பாடே ணேசா னாவோரா
லேரீ தூமா னாவா ரேசா லேகாரே. 58

அழகிய திருமாலோடு, தன் செயலினின்று நீங்காத பிரம்மனும் காணமுடியாத, பெரிய பேறுகளை வழங்கும் பெரிய கடவுளும் மேம்பட்டவனுமான சிவபிரான் தந்தருளிய குமாரன் ஆனவனின் அன்பை அளித்தருளும் திருவடிகளையே பாடும் பெருமை நிறைந்த

58. காரீ = அழகு பயக்கின்ற. கார் = அழகு; "மழைபடு காலமுங் காரெனுங் கட்டுரை - ஆகுமயிரு மழகுமற் றதற்கே" என்றியம்புதல் பிங்கலந்தை. மானாவார் = மலையென வுயர்தன்மை யுடையராவர்; மான் = மலை; பிங்கலந்தை காண்க. மன்னாவா ரென்பது மானாவாரென நீண்டதெனினும், மகான் மானென வாயதெனினுமாம். ஏசால் = குற்றத்தால்.

நா உடையோர், நினைப்பார்க்கு ஊக்கத்தைக் கொடுக்கும் தூய ஞானியர்களாகவே விளங்குவார்கள். அவர்கள் பழிபொருந்தும் வகையில் வாழ்க்கை நடத்த மாட்டார்கள்.

கருவிளம் தேமா புளிமா புளிமா புளிமா.

தனதன தானா தனனா தனனா தனனா.

திருமுரு காமா சிலைபோழ் திறலோய் தெருளோய்
குருமுரு காகோ குகவே டழைநீள் குருகே
றொருமுரு காமான் மகளார் வலவா வுரனார்
செருமுரு காகா வெனவோ துநர்பார் செனியார். 59

“திருமுருகனே! பெரிய மலையைப் பிளந்த பேராற்றல் உடையவனே! தெருண்ட ஞானவடிவே! குருவாக வந்தருளும் இளம்பூரணனே! கோவே! குகவேளே! தழைத்த தோகையை உடைய மயில்மேல் ஏறும் அழகனே! மான்மகளாம் வள்ளிநாயகிக்கு வாய்த்த தலைவனே! பகைவர்களின் ஆற்றலை அழிக்கும் தலைவனே! காத்தருள்” - எனப் பாடுவோர் இனி இவ்வுலகில் மேலும் பிறவியை எடுக்கமாட்டார்கள்.

புளிமா புளிமா கருவிளம் கருவிளம் கூவிளங்காய்.

தனனா தனனா தனதன தனதன தானதனா.

அறுகா லளிமூ சலர்பல தருதரு வார்வளமே
சிறுகா லனம்வாழ் பலகுள முளவெழில் சேர்பொழிலே
உறுகா லனிலா மதுரையி லுறைமுரு கோனஞரே
தெறுகா றருவா னடிநினை மதியினர் சீர்பெறவே. 60

வண்டுகள் மொய்க்கும் மலர்கள் பலவற்றைத் தரும் மரங்களாகிய வளங்களும், சிறிய கால்களை உடைய அன்னம் வாழும் பல குளங்களும் அழகுமிகும் பொழில்களும் கொண்டு, யமனின் தொழில் இல்லாத மதுரையம்பதியில் கோயில் கொண்டுள்ள முருகன், தன்னை நினைக்கும் அடியார்கள்

59. வலவன் – வல்லவன் = காதலன்.

60. தெறுதல் = அழித்தல்; “அளியுந் தெறலு மெளிய வாகலின்” என்றார் பெரும்பாணாற்றுப் படையினரும். “நெரித்த றெறுதல்” என்பது சே – திவாகரம்.

சீர்பலபெற்றுச் சிறக்குமாறு, துன்பங்களை அழிக்கும் தனது திருவடிகளைத் தந்தருள்வான்.

ஐஞ்சீரா னடக்கு மிக்கவிகளி னடிகளில், எச்சீர்க்கண் மோனையெழுத் தல்லது இனவெழுத்து வரினு மிதுகாறும் வந்த வாறாக ஐந்தாஞ் சீர்க்கண் வருவதே சிறப்பு. பின்வரு கட்டளைக்கலித்துறைக்கு மிவ்விதி கோட லியைபு.

தேமா கூவிளம் கூவிளம் கருவிளம் புளிமா.

அம்பொ னோதியை யார்திருத் தவரெனக் குனித்தோன்
வெம்பு வஞ்சகர் முப்புர வியன்கெடச் சிரித்தோன்
நம்பு மாமக னாகிய நறுங்கய முகத்தான்
தம்பி யன்புடை யார்நமன் விடுதுயர் தடுப்பார். 61

அழகிய பொன்மயமான மேருமலையை வில்லாக வளைத்தவனும் சீறிவரும் அசுரர்களின் மூன்று கோட்டைகளும் தமது நிலைகெடும்படிச் சிரித்து அழித்தவனும் ஆன சிவபெருமான் அன்புடன் விரும்பும் திருக்குமாரனான யானைமுகக் கடவுளின் தம்பி எனத் திகழும் முருகனிடம் அன்புகொண்டிருப்பவர்கள் இயமன் விளைவிக்கும் துன்பத்தைத் தடுக்கவல்ல ஆற்றலுடையவர் ஆவர்.

சீர்வாய்பாடு சிதையினு மோசை கெடாது நடப்பன.

தரும மூர்த்தியென் சண்முகன் றாணினைந் தாற்று
கரும யாகமு ளார்க்கிடு புண்ணியங் கரிசில்
பெருமை யாயொரு பிறப்பள வுந்தவ யாகக்
குருமை யார்க்கிட னூறள வும்பலன் கொடுக்கும். 62

'தருமத்தின் முழுவடிவம் இவன்' எனக் கூறப்படும் அறுமுகப் பரமனின் திருவடிகளை நினைந்து செய்யப்படும் வேதவழிப்பட்ட கருமயாகங்களைச் செய்யும் புண்ணியச் செயல், குற்றமற்ற பெருமை உடையதாகி ஒரு பிறப்பளவும் பயன்தரும்; தவமாகிய வேள்வியைச் செய்யும் பெருமை உடையார்க்குச் செய்யப்படும் புண்ணியம் நூறு பிறப்பளவும் பயனைத் தரும்.

---

62. கரிசு = குற்றம்; முதன் மண்டலத்து 67-21 ன் குறிப்புரை யெடுத்துக்காட் டோக. நூறளவு மென்றதற்கு, நூறுபிறப்பளவுமெனப் பொருள் கொள்க.

சேய வன்றன தாணினைந் தேசறு செபஞ்செய்
நேய யாகமு ளார்க்கிடு புண்ணிய நிரம்பா
ஆயி ரம்பிறப் பளவுந் தியான வியாகர்க்
கீயு நன்மையொர் பிரமகற் பாந்தமின் பிசைக்கும். 63

சேயவனின் திருவடிகளை நினைந்து, குற்றமற்ற செபம் செய்வதாகிய அன்பு வேள்வியை நடத்துவோர்க்குச் செய்யப்படும் புண்ணியம் பல ஆயிரம் பிறப்பளவும் இன்பத்தைக் கொடுக்கும். அவனையே நினைந்து தியானமாகிய யாகம் செய்வார்க்கு இடும் புண்ணியம் ஒரு பிரம்ம கற்ப முடிவு வரையிலும் இன்பத்தைக் கொடுக்கும்.

தீனர் நாயக னாயவர் பூசைகொள் செவ்வேள்
கான மேதரு தாளச ரோருகக் கடிசால்
ஞான யாகமு ளார்க்கிடு நல்லவை பெரிய
மான மாம்பிர ளயமள வும்பலன் வழங்கும். 64

ஏழைகளின் தலைவனாக விளங்கி, அவர்கள் செய்யும் எளிய வழிபாட்டை அன்புடன் ஏற்றுக் கொள்ளும் செவ்வேளின், சந்தபேத இன்னிசையை எழுப்பும் சதங்கை பூண்ட திருவடித் தாமரைகளைப்பற்றிய பழுதற்ற ஞானத்தின் அடிப்படையிலான மானச யாகம் செய்வார்க்கு இடும் நல்ல தருமங்கள் பெரிய அளவு எனப்படும் பிரளய முடிவு வரையிலும் பயன் கொடுக்கும்.

முதற்சீர் : கருவிளம்.

கரவயிற் பெருமான் றிருவருட் பொலிவினைக் கண்டால்
இரவொடு பகலும் மிரவினிற் பகலிர வுகளும்
பரவிய பகலிற் பகலிர வென்பவு மிலைவான்
இரவியி னுயர்வா மறிவுள ததையுயி ரேயும். 65

திருக்கரத்தில் வேல் தாங்கிய பெருமானாம் முருகனின் திருவருள் விலாசத்தை நேரே தரிசிக்கும் பேற்றினால் இரவு, பகல் என்பனவும், பிரம்ம ஆயுளின் பின்பாதியான இரவுக்குரிய பகற்பொழுதுகளும் இரவுப்பொழுதுகளும், அதன் முன்பாதியான பகலுக்குரிய பகற்பொழுதுகளும் இரவுப்பொழுதுகளும் புலப்படா; சூரியன் இயங்கும் பூத ஆகாசத்துக்கும் மேலாக ஞானாகாசம் ஒன்றுளது. அந்த ஞானாகாசத்தில் ஆன்மா நிலைத்து நிற்கும்.

தேமா கூவிளம் கூவிளம் கூவிளம் கூவிளம்.

முன்பி னீட்டிய குற்றமெ லாமற முன்னியே
அன்பர் மாட்டரு ளேவளர்க் கின்றகண் ணாளநான்
இன்பம் வேட்டுனை யேபுகழ் வேலையி லிங்குளேன்
துன்ப மோட்டுபு கோடிக டம்பணி சூடியே. 66

முற்பிறவியிலும், அடுத்துத் தொடர்ந்து வந்த பிற்பிறவிகளிலும் சேர்த்துக்கொள்ளப்பட்ட வினைப்பயன்கள் எல்லாம் நீங்க வேண்டி உன்னை நினைக்கும் அன்பர்களிடம் உனது அருளை வளர்த்துவரும் கண்போன்றவனே! எளியேன் உனது திருவடி இன்பத்தையே விழைந்து உன்னை மட்டுமே புகழ்கின்ற பணியில் இவ்வுலகில் உள்ளேன். கடம்ப மலர் அணிந்து கொள்வோய்! என் துன்பங்களை யெல்லாம் ஒழித்துத் தூய்மையாக்கி என்னை ஐக்கியப்படுத்திக் கொள்க.

வானை நோக்கும ரங்களு லாத்தரு வானரம்
போனை வேனுனை யேபிடி யேனிருள் போழுநீ
பூனை போலெனை யேகொடு போகுதி பூம்புன
மானை நேடிவ னம்புகு நெட்டயின் மள்ளனே. 67

பொலிவார்ந்த தினைப்புனத்தில் இருந்த மான்போன்ற வள்ளி நாயகியைத் தேடி வள்ளிமலைக் காட்டிற்குள் சென்ற நீண்ட வேற் படை தாங்கிய வீரனே! வானத்தை நோக்கி உயர்ந்து வளர்ந்துள்ள மரங்களில் குட்டியோடு தாவித்திரியும் குரங்கு போன்று, உன்னை நான் பிடித்துக் கொள்ளவில்லை. அறியாமையாகிய இருளை விலக்கும் நீ பூனை தனது குட்டியைக் கவனத்துடன் கவ்விக்கொண்டு செல்வது போன்று என்னை நீ கொண்டு செல்ல வேண்டுகிறேன்.

(மர்க்கட நியாயம், மார்ஜால நியாயம் என்னும் இரண்டு நெறிகளில் மார்ஜால நியாயம் ஏற்றுக்கொள்ளப்படுகிறது)

தேமாங்காய் புளிமாங்காய் புளிமாங்காய் புளிமாங்காய் தேமாங்கனி.

கோவென்ற படைமீளி யனைவோரு நனிநாடு கோவாளிதான்
நோவென்ற சிகியாகி வருகால மதிலேறி ஞொள்காதகு
ரேவென்ற திதிபால ருயர்வாழ்வு தரல்போல வேசூழுநான்
காவென்ற பொழுதேகை தருவாயொர் விபுவாய காங்கேயனே. 68

ஒப்பற்ற ஞானவெளியாக வியாபித்துள்ள காங்கேயனே! வஜ்ராயுதம் எனும் ஆயுதத்தைக் கொள்ளும் வலிமை மிக்கோனும், அனைவோராலும் விரும்பப்படும் சொர்க்க உலகத்தை ஆள்பவனுமான இந்திரன், துன்பம் நீங்கிய மயிலாக உருவெடுத்து போர்க்களத்தில் உன்னைத் தாங்க வந்தபோது, அந்த மயிலின் மேல் ஏறி, மென்மை அடையாத அசுரர்களையும் சூரபன்மனையும் வென்று, அதிதியின் மக்களாகிய தேவர்களுக்கு உயர்வான வாழ்வைத் தந்தது போன்றே, உன்னையே எண்ணியிருக்கும் நான் 'காத்தருள்வாய்' என வேண்டிய கணத்திலேயே கைகொடுத்து ஆட்கொள்வாயாக.

தேமா கூவிளங்காய் கூவிளம் புளிமா புளிமா.

தான தந்தனன தந்தன தனந்த தனனா.

நீடை கொண்டவிரு மிஞ்சிகொ ளிலஞ்சி நிலைவாழ்
கோடை மஞ்சரிவி ரும்புள மலிந்த குமரா
பாடை வந்திடுமு னங்கரு துகின்ற படியே
பீடை வென்றமல வின்பது பிறங்க நினையே. 69

மிகவும் நீண்டு உயர்ந்து விளங்கும் திருமதில் சூழ்ந்துள்ள இலஞ்சி எனும் தலத்தில் கோயில்கொண்டு எழுந்தருளி காந்தட்பூங்கொத்துக்களைச் சூடிக் கொள்ள விரும்பும் உள்ளம் மிகப்பெற்று விளங்கும் குமாரப் பெருமானே! உடலை விட்டு உயிர் நீங்கும் நேரம் என்னை நெருங்குவதற்கு முன்பாக, நான் எண்ணுகின்ற படியே எனது துன்பங்களையெல்லாம் அகற்றி, உன்தொடர்பான குற்றமற்ற இன்பம் எனக்குள் விளங்கத் திருவுள்ளம் கொள்வாயாக.

கூவிளங்காய் காய் காய் காய் தேமா.

மாதமொரு பூப்பூத்து வருடமொரு காய்காய்க்கும் வல்லி
ஏதுமிடை யூறின்றிப் படருமர மாயிருந்த வென்னை
வாதனையிஃ தாமெனவென் மனமிருந்து வேறுசெய்த வாறு
கோதிருளும் வேறுபட வருள்புரிதி வேல்பிடித்த கோவே. 70

வேற்படை ஏந்தியுள்ள அரசே! மாதம் ஒரு பூவைப் பூத்து வருடத்திற்கு ஒரு காயைக் காய்க்கும் கொடியானது இடையூறு ஏதும் இல்லாமல் படர்வதற்கேற்ற மரமாக இருந்த எனக்கு 'இது

69. இலஞ்சி = திருவிலஞ்சி யென்னுங் குமார கேத்திரம்.

துன்பமயமான வாழ்க்கை' என என்மனத்துள் இருந்து உணர்த்தி, அந்த இல்லறவாழ்க்கையைப் பிரித்து வைத்தது போன்றே, குற்றமான ஆணவமாகிய இருளும் பிரிந்து வேறுபட்டு நிற்க அருள்புரிவாயாக.

(மாதம் ஒரு பூ = மாதவிடாய்; வருடம் ஒரு காய் - குழந்தை; வல்லி - மனைவி)

ஐந்தாஞ்சீர்: புளிமா.

**எண்ணிறந்த விவகாரத் துள்ளுழன்று நாளுநின்ற வெனைநீ**
**நண்ணிவந்து நறுமதிதான் சொல்லியதண் ணளிவழியி னடப்பான்**
**பெண்ணலமும் பொன்னலமு மண்ணலமு நான்விடுத்த பிறகும்**
**உண்ணலநன் கெய்தாத தென்கொனுதி வேற்பெரும வுரையே.** 71

கூரிய வேற்படை ஏந்தும் பெருமானே! எண்ணற்ற உலக விவகாரங்களுள் ஈடுபட்டு நாள்தோறும் வருந்திநின்ற என்னை நீ நெருங்கிவந்து நல்ல அறிவுரை கூறித் திருத்திய உனது குளிர்ந்த அருளின்வழியே நடப்பதற்காகப் பெண்ணாசை, பொன்னாசை, மண்ணாசை ஆகியவற்றை நான் விட்டுவிட்ட பிறகும், என் உளத்துள் தோன்ற வேண்டிய ஆனந்தசுகம் நன்கு பொருந்தாமல் இருப்பது ஏனோ?

புளிமா கூவிளங்காய் தேமா தேமா புளிமாங்காய்.

**மணிகொள் பொற்பணிக ளேபூண் மாதா மகனாம்வீ**
**யணிகொள் மற்புயவி சாகா நாகா வருளாளா**
**திணிகொள் வஜ்ரவயி லீசா தேசா சிறியேனோர்**
**துணிகொள் சிற்ககன மாநீ யாமா துயிலீயே.** 72

நவரத்தினங்கள் இழைக்கப் பெற்றுள்ள பொன்னாபரணங்களைப் பூண்டிருக்கும் அன்னையாம் பார்வதி தேவியின் மகனும், மலர்மாலை பூண்டுள்ள வலிய தோள்களை உடையவனுமான விசாகப் பெருமானே! மலைகளுக்கு உரியவனே! அருளாளனே! உறுதிப்பாடு மிகுந்த வஜ்ரவேல் ஏந்தும் ஈசனே! ஒளிமயமானவனே! சிறியவனாகிய எளியேன் தெளிந்த ஞான வெளியாக விளங்கும்

**72.** **வஜ்ரம்** = நவமணிகளுளொன்றாய வைரம்; வடநூன்முடிபு. **துணி** = ஒளி; பி - நிகண்டு காண்க.

நீயாகவே விளங்கும் நிலையைக் காணத்தக்க உயர்ந்த நிட்டை நிலையை அருள்க.

தேமாங்காய் தேமாங்காய் கருவிளம் கருவிளம் தேமாங்காய்

தந்தத்தா தந்தத்தா தனதன தனதன தந்தத்தா.

பந்தப்பா டஞ்சிச்சூர் பரிவுறு பெரியவர் பண்டத்தா
நந்தப்பா நெஞ்சுக்கோர் நலமரு ளிறையென நண்புற்றோர்
எந்தப்பா டுஞ்செற்றா ளிதவரு ளறுமுக வென்கட்டார்
சந்தப்பா கொண்டப்பா சமநிலை யெனைநனி தம்பித்தாள். 73

அப்பனே! உலக பந்தங்களைக் கண்டு பயந்து, அவற்றிலிருந்து விடுபட விரும்பிய பெரியோர் முன்பு, "தலைவனே! ஆனந்த நிலையில் கிளர்ந்து விளங்கும் ஐயனே! மனத்திற்கு அருள்நலம் வழங்கும் இறையே" என்றெல்லாம் துதித்து உன்மீது அன்புகொண்டு நிற்க, அவர்களின் துன்பங்கள் அனைத்தையும் ஒழித்து ஆட்கொள்ளும் தயைநிறைந்த அறுமுகனே! எனது இனிமை செறிந்த சொன்மாலை ஆன சந்தப்பாக்களை ஏற்றுக்கொண்டு, உன்னோடு ஐக்கியப்பட்டு ஒத்து விளங்கும் நிலையில் என்னை உறுதியாகப் பதித்து வைக்க.

---

கட்டளைக்கலித்துறை.

பாதமொன்றற்குப் பதினாறெழுத்து.

பூவாய விந்த வுலகத்து வாழ்வைய பொய்யெனத்தம்
நாவார வோதிமெய்ஞ் ஞானோப தேச நவில்கவென்பார்
தாவாய வில்லத் தவாவினை விட்டே தழுவுமென்னிற்
போவார் மறுமொழி சொல்லாது வீணர்தண் போரியனே. 74

குளிர்ச்சி பொருந்திய திருப்போரூரில் எழுந்தருளும் பெருமானே! "இந்தப் பூமியாம் உலகில், மனிதவாழ்க்கை என்பது, ஐயனே!, நிலையானதன்று" என நாவாரச்சொல்லி "எமக்கு ஞான உபதேசம் வழங்குக" என்று வேண்டுவோரிடம் "துன்பம் மிகுந்துள்ள இல்லற வாழ்வில் உள்ள ஆசையை விலக்கிவிட்டுத் துறவறத்தை மேற்கொள்ளுங்கள்" எனக் கூறினால், அந்த வீணர்கள் மறுமொழி ஒன்றும் சொல்லாது திரும்பிப் போய்விடுவார்கள்.

---

74. போரி = திருப்போரூர்.

ஓயாத நாட்டத்தி னின்றே யடையரு ளுண்மைநிலைக்
கேயாசை வைப்பவர்க் கிங்கொரு பாடு மியைவதின்றென்
றாயாத பேர்க்கந்த வுண்மைதா னெவ்வா றறிவிலுறுஞ்
சேயாகி யெங்கு நிறைவா யிருக்கின்ற சின்மயனே. 75

செவ்வேள் பரமனாகி எங்கெங்கும் வியாபித்து நிறைந்திருக்கும் ஞானமயமானவனே! இடைவிடாத நிட்டை நிலையில் இருந்து அடையப்படும் அருள்மயமான சத்தியப் பேற்றின்மீது ஆசை வைத்துள்ளவர்களுக்கு இங்கே ஒரு துன்பமும் நேராது என ஆய்ந்து உணராதோர்க்கு அத்தகைய சத்தியப்பேறுதான் எவ்வாறு அறிவில் உதிக்கும்?

கண்ணன் சனகன் முதலாய பேர்கண்மெய்க் கண்ணுளராய்
எண்ணில் வினைசெய்ய வில்லைகொ னாஞ்செயி னென்னையென்பர்
அண்ணிய சன்மத்திற் றானே மருளற்ற வாற்றலவர்
நண்ணின ரென்றறி யாதார் திருவள்ளி நாயகனே. 76

“திருமிக்க வள்ளிநாயகியின் தலைவனே! கண்ணன், சனகமகாராசன் முதலானோர், இந்த உடம்போடு கூடியிருந்தே எண்ணற்ற செயல்களைச் செய்யவில்லையா? நாம் செய்தால் என்ன?” எனக் கேட்போர், பொருந்திய இந்தப்பிறப்பிலேயே அவர்கள் மருட்சியற்ற ஞான ஆற்றலைப் பொருந்தி இருந்தனர் என்னும் உண்மையை அறியாதவர்கள் ஆவர்.

(ஞானப் பக்குவம் பெற்று வினைகளைச் செய்தால், வினைப் பயன் ஒட்டாது; ஞானமின்றிச் செய்தால் வினைப்பயன் தாக்கும்)

செத்தறச் சுத்தி புரிந்தநற் செம்பினைச் சேற்றினடு
வைத்தெடுத் தானுங் களிம்பூ றிடாதந்த வாறிச்சையின்
வித்தவித் தானா வருட்கட லாமுன் விபுத்துவவான்
சித்தணைந் தாற்பின்பு செய்வினை பற்றாது சேயவனே. 77

செவ்வேள் பரமனே! சிறிதளவும் விடுபடாமல் நன்கு வேதித்துச் சுத்தம் செய்யப்பட்ட நல்ல செம்பினைச் சேற்றின் நடுவே வைத்து எடுத்தாலும் அதில் களிம்பு ஊறாது. அதுபோன்றே, ஆசையின் விதையை அவித்து, நிலையான அருட்கடலாகும் உனது வியாபக மான ஞானவெளியை உணரும் பெரும் பேற்றினை அணைந்தால் பிறகு செய்யப்படு வினைகளுள் ஒன்றேனும் ஆகாமிய கன்மமாகச் சேராது.

இப்பா ரெமக்குள்ள வேலையுங் காலமு மெண்ணங்களும்
தப்பாம லின்னுஞ் சிலநாளிற் றீருமச் சந்தர்ப்பமா
துப்பாய முத்தியை நாடுவே மென்பார் துணிபுநரி
உப்பாழி வற்றுமென் றொள்வேலை காத்தலொக் குங்குகனே. 78

குகப்பெருமானே! "இவ்வுலகில் எமக்கு உள்ள வேலையும், அதற்குரிய நேரமும், விருப்பங்களும் இன்னும் சில நாள்களில் நிறைவுபெற்றுவிடும். அந்தச் சமயத்தில் தூய்மைமிக்க முக்திப் பேற்றை நாடி முயல்வோம்" எனக் கூறுவாரின் கருத்து நரியானது உப்புநீர்க்கடல் முழுதும் வற்றியபின்பு மீன் பிடிக்கலாம் என எண்ணி, ஒளிமிக்க கடற்கரையில் காத்து இருத்தலை ஒத்து விளங்குவதாகும்.

நெஞ்சு முடம்பு மசைவறச் செய்துன்னு நிட்டையது
நெஞ்சு முடம்புந் தளராத வர்க்கே நிலைத்தலின்றேல்
நெஞ்சு முடம்புந் தளர்ந்தவர்க் கோவுண் ணிரம்புமென்றன்
நெஞ்சு முடம்பும் பணிந்துய்ய வாக்கயி னின்மலனே. 79

வேற்படை ஏந்தியுள்ள தூயோனே! மனத்தையும் உடலையும் அசைவற்று இருக்குமாறு செய்து, தியானத்தில் இருக்கும் நிட்டையானது மனமும் உடலும் தளராது இருக்கும் திடநிலை உள்ளவர்களுக்கே முறையாக வாய்ப்பது இல்லை எனில், மனமும் உடலும் தளர்ந்துள்ளவர்களுக்கோ அந்த நிட்டை கைகூடி நிறைவு பெறும்? என் மனமும் உடலும் நின்னையே பணிந்து உய்திபெறும் வகையில் என்னை வழிநடத்திச் செல்வாயாக.

நீக்க மிலாநெடுந் தூக்கமுண் மூர்ச்சையி னிற்றலென
நாக்கை வலத்தொளை யேற்றிநிற் கின்றதை நன்றென்பர்கொல்
போக்கும் வரவுமி லாச்சிவ யோகப் பொருத்தமுளோர்
ஊக்க முடையர்துஞ் சாதுன்னு நெட்டயி லுத்தமனே. 80

ஞானப் பேற்றில் ஊக்கம் கொண்டிருப்போர் சோர்வடையாமல் எப்பொழுதும் தியானிக்கும் நீண்ட வேற்படை ஏந்தும் உத்தமனே! நீங்காத, நீண்ட உறக்கமாகிய சமாதிநிலை என்பது உள்ளுக்குள்ளே மூர்ச்சை நிலையில் இருத்தலே எனக் கருதி நாக்கை மூக்கின் வலத்தொளையில் சேர்த்து நிற்பதை, நினைப்பும் மறப்பும் அற்ற சிவயோகத்தில் திளைத்திருக்கும் பெரியோர் நன்று எனக் கூறுவார்களோ?

இச்செய்யுள் போன்றவற்றைக் கோவைக்கலித்துறை யென்ப, என்புழி, மற்றது "நேர்முந் துறிற்பதி னாறெழுத் தாகி நிரைமுதலாஞ் - சீர்முந் துறிற்பதி னேழாய் முடிந்துசெ் பாரடிக - ளேர்முந்து நான்கொத் திருபது சீரா லியன்றிடுமேற் - நேர் முந்து பேரல்குன் மாதே யஃது திலதமன்றே" எனும் வீரசோழியச் செய்யுட்படி, திலதக்கலித்துறையெனவாம். கட்டளைக்கலித்துறைதானே யிவ்வா றிருதிறப்படுமென்க. ஈண்டு 80-வது செய்யுள் கோவைக்கலித்துறையாவ தெங்ஙனமெனின்; கடையடியில் "துஞ்சாது" எனு மூன்றாஞ் சீர்ச்சொல் பிளப்புண்டு முற்சீரோடொன்றி யொழுகிய வோசைத்தாய் வந்ததனாலென்க. இவ்வா றிரண்டாஞ்சீர் நான்காஞ்சீர்களும் பிரிதொழுகின்; மிக்க சிறப்பெனவுங் கூறுப.

## [சதுரங்கபந்தம்]

வாளா ரநாதி மயிலேறுஞ் சுந்தர மேயமகா
வேளா மயிலோய் விமலர்கண் வந்த சமாதியர்கோ
வாளா யெனுநாவுள் ளார்நா ரருந்தெங்க ளாரியற்கே
யாளாகி வாழ்வது மாணப் பெரிதெனு மாகமமே. 81

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| வா | ழ் | வ | து | மா | ண | ப் | பெ |
| கி | ளா | யா | கே | ற் | ய | ரி | ளா |
| ர் | நா | ர | ரு | ந் | தெ | ங் | க |
| ளா | ள் | வு | நா | னு | யெ | ளா | வா |
| ந் | த | ச | மா | தி | ய | ர் | கோ |
| வ | ண் | க | ர் | ல | ம | வி | ய் |
| ய | ம | கா | வே | ளா | ம | யி | லோ |
| மே | ர | த | ந் | சு | ஞ் | று | லே |

"ஒளிநிறைந்த, ஆதியந்தமற்ற மயிலில் ஏறும் அழகுபொருந்திய பெரிய செவ்வேள் பரமனாகும் வேலவனே! தூய்மையே வடிவான சிவபெருமானின் நெற்றிக் கண்ணிலிருந்து வெளிப்பட்டவனும், சமாதிநிலையில் எப்பொழுதும் இருக்கும் யோகியர்க்கெல்லாம் தலைவனுமான முருகனே! ஆட்கொண்டு அருள்" எனத் துதிக்கும் நாக்கு உடைய அன்பர்களின் தூய அன்புத்திறத்தைத் துய்க்கும் எங்கள் உத்தமனுக்கே அடிமைப்பட்டு வாழ்வதுதான் மிகவும் பெருமை உடையது என ஆகமம் கூறும்.

பாதமொன்றற்குப் பதினேழெழுத்து.

**அ**றிவான சாயுச்சி யந்தா வலதரு ளாற்பசுமை
செறிவான புன்புழு வைச்செங் குளவி செயுமுறைபோற்
பொறிவான நாடர் பிரானீ யெனையும் புரிதிவண்மை
முறிவான நெஞ்ச ரறியாத வாறு முககுருவே. 82

வறியார்க்கு ஒன்றை ஈயும் கருணை நீங்கியுள்ள வன்மைமிக்க நெஞ்சத்தை உடையோர்களால் அறிய முடியாத ஆறுமுக குருமுதல்வனே! எனக்கு ஞானவெளியாக நிறைவதாகிய சாயுச்சிய முத்திநிலையைத் தந்தருள். இல்லையேல், பசுமை செறிந்துள்ள சிறிய புழுவைச் செங்குளவி கொட்டிக் கொட்டித் தன் வடிவுடையதாக அதனை ஆக்குதல் போன்று, ஞானம் மிக்க வானுலகத்தாரின் தலைவனே! நீ என்னையும் பயிற்றிப் பயிற்றி உனது நிலையை அடைந்துள்ளவனாக என்னை ஆக்கி அருள்க.

[அடி முதற்சீர் மடக்கு. (யமகம்)]

**பி**ணிமுகங் கோடிகண் டாசைகொள் பேரெழிற் பீலியுடைப்
பிணிமுகங் காதலித் தேறி யுலாத்தரு பேழயிலோய்
பிணிமுகங் காணென் கலக்கற வென்னைப் பிறங்கருளிற்
பிணிமுகங் காட்டியுன் சேவடிச் சீர்வைத்துப் பேணுதியே. 83

கோடிக்கணக்கான பறவைகள் கண்டு ஆசைகொள்ளும் பேரெழில் வாய்ந்த தோகையை உடைய மயில்மேல் மிகவும் விரும்பி ஏறி உலாவரும் பெருமைமிக்க வேற்படை நாயகனே! பிறவியெனும் நோயின் முளையை விடாது காணும் எனது மனக்கலக்கம் நீங்குமாறு என்னை, என்றும் குறையா நினது கருணைத் திறத்தால் பிணித்துக்கொள்; அருள்முகம் காட்டி உனது சிவந்த திருவடிகளாகிய செல்வச்செழிப்பை என் முடிமீது வைத்துக் காத்தருள்வாயாக.

[அடிமுதலிரண்டுசீர் மடக்கு. (யமகம்)]

**வ**ளைக்கை யெனக்கு மிலையுமை மைந்தவிம் மாநிலத்தோம்
வளைக்கை யெனக்கு மரபத னான்மல மாய்த்தருள்கு
வளைக்கை யெனக்கு யிலவுள்ள கட்குற மாதணங்கெ
வளைக்கை யெனக்கு நலமென்று நாடொரு வாலியனே. 84

வளையல் அணிந்த கையினள் எனப்படும், சங்குமணியை அணிந்துள்ள உமாதேவியின் குமாரனே! இப்பெரிய உலகில் தோன்றும் குற்றங்களை முழுமையாக என்னிடம் சேர்த்துக்கொள்ளும் தன்மை ஆணவமலத்தோடு கூடியுள்ள எனக்கு இயல்பு. ஆதலால் அந்த ஆணவ மலத்தைக் கெடுத்து அருள்புரிக. குவளைமலர் போன்ற கண்களுக்கெல்லாம் கடவுளென்று சொல்லும்படியாக உள்ள கண்களை உடையவளுங் குறவர் குடியில் வளர்ந்தவளுமான வள்ளிநாயகியின் அழகு, அனைத்துப் பெண்களின் அழகுக்கும் அழகாகும். எனக்கு(ம்) நலமாம் என விரும்புகின்ற, ஈடுஇணையற்ற கட்டிளமைக் கடவுளே!

இதன்பொருள் : வளைக்கையென் = வளையலணிந்த கையினளெனப்படும், அக்குமிலையுமை = சங்குமணியையணிந்த வுமாதேவியுடைய, மைந்த = மகனே, இம்மாநிலத்தோம் = இப்பெரிய பூமியிலுண்டாங் குற்றங்களை, வளைக்கை = வாரிக்கொள்ளுந்தன்மை, எனக்குமரபு = [ஆணவமலத்தோடு கூடிய] எனக்கியல்பு, அதனான்மலமாய்த்தருள் = ஆகலின் [அந்த] ஆணவமலத்தைக்கெடுத் தனுக்கிரகஞ் செய்வாயாக, குவளைக்கு ஐயென = குவளை மலர்போன்ற கண்களுக்கெல்லாங்கடவு ளென்று, குயிலவுள்ள = சொல்லும்படியாகவுள்ள, கண்குறமாது = கண்ணையுடைய வளுங் குறவர்குடியில் வளர்ந்தவளுமான வள்ளிநாயகியினது, அணங்கு = அழகானது, எவள் ஐக்குஐ - எந்த ஸ்திரீயின தழகுக்குமழகாம், எனக்கு நலம் = எனக்கு நலமாம், என்று = என, நாடு = விரும்புகின்ற, ஒரு வாலியனே = சமானமற்ற கட்டிளமைக் கடவுளே, என்றவாறு, எனக்கு மென்பதிலுள்ள உம்மையை, ஐக்கு என்பதோடுங் கூட்டுக.

[மேற்படி, நிரோட்டகம் (இதழ் குவியாப் பாட்டு)]

தகையயி லானை நிரஞ்சன ஞானத் தனிக்கடியைத்
தகையயி லானை நனிகாத்த கண்ணன் சதாநினைதீ
தகையயி லானை யெயிற்றத்த னாரிளை ஞன்றனையார்
தகையயி லானை யிறைஞ்சடி யார்கட் சழக்கிலையே. 85

சோர்வு எனும் மயக்கத்தை, அம் மயக்கத்தின் கண் இருந்தும், உயிர்களைப் போன்று அனுபவிக்காதவனை, களங்கமற்ற ஞானமாகிய ஒப்பற்ற சோதியை, அழகுடைய வீட்டுப்பசுக்களை மிகவும் பரிபாலித்த திருமால் நாளும் தியானிக்கின்ற தெய்வமும், தீமையை அழிக்கும் கூரிய யானைக்கொம்பைக் கரத்தில் கொண்டுள்ள விநாயகப் பெருமானுக்குத் தம்பியும் ஆனவனை, வேலாயுதக் கடவுளை வணங்கும் அடியார்களிடத்தில் துன்பங்களுக்குக் காரணமான குற்றங்கள் பொருந்தாது.

இ - ள். தகை = சோர்வெனு மயக்கத்தை, அயிலானை = [அம்மயக்கத்தின் கண்ணிருந்தும் உயிர்களைப்போல] அனுபவியாதவனை, நிரஞ்சன = களங்கமில்லாத, ஞானத்தனிக்கடியை = ஞானமாகிய வொப்பற்ற சோதியை, தகைய = அழகுடைய, இல்லானை = வீட்டுப்பசுக்களை, நனிகாத்த = மிகவும் பரிபாலித்த, கண்ணன் = திருமாலானவர், சதாநினை = நாளுந்தியானிக்கின்ற [தெய்வமும்], தீது = தீமையை, அகை = அறுக்கத்தக்க, அயில் = கூரிய, ஆனையெயிற்றத்தனார் = யானையினது கொம்பைக்கரத்தில் வைத்திராநின்ற விநாயகக்கடவுட்கு, இளைஞன்றனை = தம்பியுமானவனை, ஆர்தகை = ஆர்ந்தபெருமையுடைய, அயிலானை = வேலாயுதக்கடவுளை, இறைஞ்சடியார் = வணங்குகின்ற தாசர்கள், கண் = இடத்தில், சழக்கிலை = [துன்பங்கட்கேதுவாய] குற்றமில்லை. என்றவாறு, ஏ=ஈற்றசை. [அயிலல் = உண்டல். அகைத்தல் = அறுத்தலென்பதைக் ககரவெதுகையிற் காண்க.]

மேலே நிரஞ்சனமென்றசொல் : வடமொழி. தென்மொழியில் வடமொழி வரலாங்கொ லென்னின்; வரலாமென்க. என்னை? "செந்தமிழ்ச் செய்யு டெரிந் துணர்ந்து செந்தமிழ்க்கண் - வந்த வடமொழியை மாற்றாதே - சந்தம் - வழுவாமற் கொண்டியற்று மாண்பினார்க் குண்டோ - தழுவாமை நிற்குந் தமிழ்." என்பது யாப்பருங்கல விருத்திவரு முதாரணச்செய்யு ளாகலின்.

கொம்பில்லா நிரோட்டகச் செய்யுள்களை, இந்நூன் முதலாங்காண்டம் "சத்திய போதகம்" என்னும் 57-ஆந் திருப்பதிகத்திற் காண்க.

கருவிளம் கூவிளம் கூவிளம் கூவிளம் கூவிளங்காய்.
தனதன தானன தானன தானன தானதனா.

அலைவளர் சாகர மேவளை காசினி யாசையரோ
கலைவளர் மாமதி போலெழின் மாமயல் காதருடான்
இலைவளர் வேலிறை யேயுறு மோநவி லேழைமையேன்
முலைவளர் கோதையர் மோகமு றாதுயு மாறருளே. 86

வேற்படைக்கு இறைவனே! அலைகள் செறியும் கடல் சூழ்ந்துள்ள இம்மண்ணுலகில் ஆசையானது நாளுக்குநாள், நிலவின் கலைகள் வளர்வது போன்று தோன்றிக்கொண்டே இருக்குமாயின், பெரிய மயக்கத்தை அழிக்கும் உனது பேரருள்தான் உண்டாகுமோ? கூறுக. எளியேன், மார்பகம் வளரும் பெண்களின் மேல் மோகம் கொள்ளாமல் உய்தி பெறுமாறு அருள்புரிவாயாக.

இக்கட்டளைக்கலித்துறைகள் : "அடியடி தோறு மைஞ்சீ ராகி - முதற்சீர் நான்கும் வெண்டளை பிழையாக் - கடையொரு சீரும் விளங்கா யாகி - நேர்பதி னாறே நிரைபதி னேழென் - றோதினர் கலித்தறை யோரடிக் கெழுத்தே" எனுஞ் சூத்திரப்படி வந்தன. அடிகளின் கடைச்சீர்கள் : விளங்காயாக வரல்வேண்டு மென்றதற்கு மாறாக 77-ஆம்

86. எழின் = எழுமாயின்.

தூக்கில் "வாறிச்சையின்" எனக் கனிச்சீரும், 80-ஆம் தூக்கில் நன்றென்பர் கொல்" எனப் பூச்சீரும் வரலாங்கொ லென்னின்; "சொல்லாரும் வல்லின மெல்லின மோடிடைத் தோன்றுமொற்று-நில்லாது நேர்நிரை நேராய் முடியும்" எனும் விதியானே இடைநிற்கு மொற்றொழிக்க அவை விளங்கா யாதலின் வரலாமென்க. இது பற்றி முதன்மண்டலத்திலே பகலெல்லாம் எனும் 41-ஆம் பிரபந்தத் திரண்டாஞ் செய்யுட் குறிப்பி லினிது விளக்கியிருக்கிறது; அவ்வுழிக்காண்க. நான்கடியே கொண்டு முடியு மித்துறைகள் : மேற்போந்த கட்டளை யுடைமையோடு தூக்கு ஈற்றில் ஏகாரம் வரப் பெறுமெனுங் கட்டளையு முடையன. ஏகாரம் பெறாது முடியுமாயின், அது கட்டளைக் கலித்துறையெனப் பெயர் பெறாமற் கலிநிலைத்துறையெனப் பெயர்பெறு மெனக.

---

நேரடியாகிய அளவடி விருத்தமென்னும்

## 3. கலிவிருத்தம்.

கூவிளம் கூவிளம் புளிமா கூவிளம்.

**சொ**ல்லுய ராரியன் சுருதி போற்சொலும்
நல்லுரை யேற்றவர் நடுவிற் சோர்வுறா
மல்லுயர் சிந்தையின் மதித்த வான்பொருள்
வில்லுயர் நின்னடி விளங்கொள் வேலனே. 87

சூரியன் முதலான ஒளிப்பொருள்களுக்கெல்லாம் ஒளி தருவதாக விளங்கும் பேரொளி மயமான வேற்படை ஏற்றுள்ளவனே! புகழ்மிக்க ஞானியர்கள் வேதங்களுக்கு நிகராக விளங்குமாறு கூறிய உறுதி உரைகளை ஏற்றுக் கொண்டவர்கள், இடையில் சோர்ந்து விடாமல் தொடர்ந்து தமது பக்குவம் சிறந்த சிந்தனையில் தியானித்துக் கொண்டிருக்கும் சிறந்த பொருள் எது எனில், அது ஒளிமிக்க நினது திருவடியே ஆகும்.

### அசைக்குறுப்பு முதலியன வுணர்த்துஞ் செய்யுள்.

முதற்சீர் : கருவிளம்.

**ப**ணமலி பாம்புகொள் பரற்கி யாணரென்
மணமலி சேயென வருமெஃ கீசுரா
நிணமலி யாக்கையி னிரம்பிக் கோஒதுண்
குணமலி யாவியென் குறையை நூறியாள். 88

படம் விரிந்துள்ள பாம்புகளை அணிகலன்களாகக் கொண்டுள்ள பரமசிவனாருக்குப் புதிய செல்வம் என வாய்த்துள்ள மணம்மிகுந்த குமாரன் என வரும் வேல் இறைவா! தசைகள்

செறிந்துள்ள இந்த உடலில் நிறைவாக இருந்து, குற்றங்களைச் செய்வதையே குணமாகக் கொண்டு செழிக்கும் உயிராக உள்ள எனது குறைகளையெல்லாம் அழித்து ஆட்கொள்வீராக.

இதனுள்ளே, அசைக்குறுப்பெனப்படுங் குறில், நெடில், உயிர், மெய், உயிர்மெய், ஆய்தம், வல்லினம், மெல்லினம், இடையினம், "கோஓது" என அளபெடை, "பரற்கியாணர்" எனக் குற்றியலிகரம், "பாம்பு" எனக் குற்றியலுகரம், "குறையை" என ஐகாரக் குறுக்கமாகிய எழுத்துப் பதின்மூன்றும் வந்தவாறு காண்க. அன்றியும் -

யா - என நெட்டெழுத்துத் தனிநின்றும், கி-எனக் குற்றெழுத்துத் தனிநின்றும், பாம் - என நெட்டெழுத்து ஒற்றடுத்து நின்றும், பிக் - எனக் குற்றெழுத்து ஒற்றடுத்து நின்றும் நேரசை நான்கும் வந்தவாறும்; பண - எனக் குறிலிணைந்து நின்றும், சுரா - எனக் குறினெடி லிணைந்து நின்றும், பரற் - எனக் குறிலிணைந் தொற்றடுத்து நின்றும், றியாள் - எனக் குறினெடி லிணைந் தொற்றடுத்து நின்றும் நிரையசை நான்கும் வந்தவாறுங் காண்க. இவ்வசைகள் சேர்ந்து சீராகு முறையை, இதுகாறுஞ் செய்யுள்களின் மேலே தீட்டப்பட்ட "தேமா" வாதி சீருதாரண வாய்பாடுகளும், இனித் தீட்டப்படும் அவ்வாய்பாடுகளு நனியுணர்த்தும். நேரசை யோரலகு பெறும். நிரையசை யீரலகு பெறும்.

கூவிளம். ஈறு புளிமா.

நூல்வழி தேறிய நுண்ணுணர் வோங்குபு
மால்வழி யேபிற வென்றறி மாண்பினர்
தோல்வழி நின்னடி சூழுவர் சூழ்கலர்
நீல்வழி கூடுவர் நீளயி லரசே. 89

நீண்டுள்ள வேற்படை தாங்கும் அரசே! முதன்மை நூல் களாகிய வேதங்களும் ஆகமங்களும் கூறும் வழியை நன்கு உணர்ந்து தெளிந்துள்ள நுட்பமான ஞான உணர்வு மிகப்பெற்று, பிற நூல்கள் கூறும் ஏனைய வழிகளெல்லாம் மயக்கத்தைத் தருபவையே என அறியும் மாண்பு உடையவர்கள் எப்பொழுதும் அழகு பொங்கி வழி யும் நினது திருவடிகளையே சிந்தித்திருப்பார்கள். அறியாமையாகும் இருள்மிக்க நெறியில் செல்வோர் அவ்வாறு சிந்திக்க மாட்டார்கள்.

கருவிளம். ஈறு புளிமா.

ஒருசிவ னெழுதிய வுயர்திரு முறையுநல்
இருவரொ டொருவர்செய் யிசைமலி முறைகளும்
நிருமல வருணைய னிறைபுகழ் களுமுணர் 90
அருளுடை யவரயி லரையவு னடியர்.

89. தோல் = அழகு.

வேல் இறைவனே! ஒப்பற்ற சிவபெருமான் தமது கைப்பட எழுதிக் கொண்ட உயர்ந்த திருமுறையாகிய திருவாசகத்தையும், திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் எனும் மூவரும் பாடி அருளிய பண்செறிந்த திருமுறைகளையும் நிர்மலமான அருணகிரி நாதர் பாடி அருளிய சந்தம் நிறைந்த திருப்புகழ் பாடல்களையும் பயின்று உணரும் அருள் உடையவர்களே உன் அன்புக்கு உகந்த அடியார்கள் ஆவர்.

### [மேற்படி, குற்றெழுத்துச்செய்யுள்]

குககுக குககுக குருபர வெனநனி
புகனல முளருமு னணியடி புகழளி
மிகவுறு நருமர ஹரமனு விரதரு
மகமுனு நருமரு ளமுதுற லுறுதி. 91

குகனே! குகனே! குகனே! குகனே! குருபர! என இடையறாது ஜபிக்கும் நற்செயல் உள்ளவர்களும், உனது திருவடிகளைப் புகழும் மிகுதியான அன்பை உடையவர்களும், 'ஹரஹர' எனும் சிவமந்திரத்தைக் கூறும் நியதியை உடையவர்களும், உள்ளத்தில் உனது திருவடிவைத் தியானிப்பவர்களும் உனது அருளாகிய அமுதத்தை அடைதல் என்பது உறுதி.

கூவிளம் கருவிளம் கூவிளம் கருவிளம். ஈறு புளிமா.

பொய்த்திடு மலகைகள் பொய்ப்பத நினைபவர்
பொய்க்கதி யுறுவது பொய்ப்பிலை யவர்வழி
பொய்த்திட வெனைவளை பொய்ச்சட முளவரை
பொய்ப்படர் பொடிவளர் பொற்பயி லரசே. 92

திருநீறு பொலிந்து விளங்கும் அழகிய வேற்படை அரசே! பொய்யாக மறைந்துபோகும் பேய்களின் பொய்த்தன்மையான அடிகளை நினைப்பவர்கள் பொய்யான, நிலையற்ற கதியை அடைவார்கள் என்பது பொய் இல்லை. அத்தகையோரின் தீயவழி பொய்த்துப் போகுமாறு, என் உயிருக்கு உறையுளாக வளைந்துள்ள இந்தப் பொய்யான தேகம் இருக்கும் வரையிலும் பொய்யான நெறிகளை அழித்தருள்.

கூவிளம் தேமா கருவிளம் கூவிளம். ஈறு புளிமா.

மாயவ ளக்கர் மயலற வேசொலு
பாயமு றைச்செந் நெறியுறு பாவகர்
காயம தைப்போ டளவுன கான்மலர்
நேயமி ருப்பர் நெடிலயி லரசே. 93

நீண்டுள்ள வேற்படை அரசே! மாயத்தன்மை மிக்க இவ்வுலக வாழ்வு எனும் சேற்றில் உழலும் மயக்கம் நீங்குவதற்காகச் சொல்லப்படும் முறையான உபாயமாகும் செம்மை நெறியில் ஈடுபடும் தூயோர் இந்தப் பூத உடல் நீங்கும் வரையிலும் உனது திருவடிகளாகிய மலர்களில் அன்பு வைத்திருப்பார்கள்.

அடிதோறு முதலெழுத் தொன்றத்தொடுக்கும்

அடிமோனைத் தொடைச்செய்யுள்.

தேமா கூவிளம் கூவிளம் கூவிளம்.

மேவு வாருனை வேண்டுநர் மேன்கதி
மேவு வாருனை வேண்டலர் வீழ்கதி
மேவு வாரக மேயொளிர் மேனுதி
மேவு வாரயில் வேந்தெனு மீசனே. 94

பக்தி பொருந்தப் பெற்றுள்ள அடியார்களின் இதயத்தே ஒளிர்பவனும், மிகவும் கூர்மை பொருந்திய நீண்ட வேற்படைக்கு வேந்தனுமான ஈசனே! உன்னை வேண்டித் துதிப்பவர்கள் மேன்மை சான்ற நற்கதியையே அடைவார்கள்; உன்னைத் துதிக்காதவர்கள் வீழ்கதியை (இழிவான நிலையை) அடைவார்கள்.

அடிதோறு மிறுதிச்சீ ரொன்றத்தொடுக்கும்

அடியியைபுத் தொடைச்செய்யுள்.

சீர்வாய்பாடுசிதையினு மோசைகெடாது நடப்பன

கோமி னையன்வி லென்பதுங் குன்றமே
மாமன் வன்குடை யென்பதுங் குன்றமே
நீமன் னுந்தென் னிகேதனங் குன்றமே 95
பூமி னின்னயில் போழ்ந்ததுங் குன்றமே.

95. ஐயன் = பிதா

இடபவாகனத்தின் மேல் ஒளியுடன் விளங்கும் உன் தந்தையாம் சிவபெருமான் ஏந்தியுள்ள வில் என்பதும் குன்றமே; நினது மாமன் ஏந்திய வலிமைமிக்க குடை என்பதும் குன்றமே; நீ வெளிப்பட்டு விளங்கும் அழகிய இருப்பிடமாகிய படைவீடுகள் என்பதும் குன்றமே; பொலிவுமிகுந்த நினது வேற்படை பிளந்ததும் குன்றமே.

இதிலிறுதி யெழுத்தையு மொன்றத்தொடுக்கலாம். அதற்கித்தூக்கே காட்டாம்.

அடிதோறுமுறு முதலெழுத்தெல்லாந் தம்மிலொத்த
வளவினவாய் வர இரண்டாமெழுத்தொன்றத் தொடுக்கும்

**அடியெதுகைத்தொடைச்செய்யுள்.**

அழகு டம்பு ளமேத்திய மாருநேர்
பழவு யிர்க்கணு மாசு படர்ந்ததான்
மழவ னாய்வரு வானவ னேயது
கழலு மாறு கடைக்கணித் தாளெனை. 96

இளமை நலம் பொருந்திய வீரனாக வரும் மேலான தேவனே! அழகிய உடம்பினுள்ளே மலம் பொருந்துவது போன்று, தொன்மை யான இந்த உயிர்களிடத்தும் ஆணவமாகிய மாசு படர்ந்துள்ளது. அந்த மாசு நீங்குமாறு நினது கடைக்கண் பார்வை தந்து ஆட்கொள்க.

செய்யு நற்கடன் றீர்ந்தவெச் செவ்வியும்
மெய்யும் பொய்யு மிழற்றுரை யாய்ந்துமெய்
உய்யு மாறுனை யுன்னு மெனைக்கொளாய்
கையுங் காலுமில் கந்த சுவாமியே. 97

கை, கால் முதலான அங்கங்களுடன் கூடிய ஒரு வடிவம் என்பது இல்லாமல், நிட்களமாய், ஞானவெளியாக விளங்கும் கந்தசுவாமியே! செய்யப்பட வேண்டிய நற்கடமைகள் அனைத்தும் செய்துமுடிக்கப்பட்ட எந்தச் சூழ்நிலையிலும் மெய்யும் பொய்யும் கலந்து கூறப்பட்டுள்ள நூல்களை ஆய்ந்து, மெய் இன்னது என உணர்ந்து உய்தி பெறுமாறு உன்னை எண்ணி இருக்கும் என்னை ஆட்கொள்வாயாக.

சொல்லானும் பொருளானு மடிதோறு முதற்கண்ணே
மறுதலைப்படத்தொடுக்கும்.

### அடிமுரண்டொடைச்செய்யுள்.

**வெண்பொன்** போற்பல் விளங்கந்த ணாளர்சூழ்
**பொன்**கொண் மன்றுட் புராணன் குமாரனே
**பைங்**கண் மாகணம் பாடிப் பழிச்சுநின்
**செங்**க ழற்செல்வ மென்றெனைச் சேருமோ. 98

வெள்ளிக்காசு போல் ஒளிவீசும் பற்களைக் கொண்டுள்ள அந்தணர்கள் சூழ்ந்துள்ள பொன்னம்பலத்தில் நடனமாடும் பழையோன் ஆகிய சிவபெருமானின் குமாரனே! பசிய கண்களை உடைய பெரிய பூதகணங்கள் பாடிப் போற்றும் நினது சிவந்த திருவடிகளாகிய செல்வப்பேறு என்றைக்கு என்னை வந்து சேருமோ, அறிகிலேன்.

அடிதோறு முதற்கண்ணே யளபெடையொன்றத் தொடுக்கும்

### அடியளபெடைத்தொடைச்செய்யுள்.

**சீஇர்** விஞ்சிய தேவர்கள் வாழ்விசும்
**பூஉர்** பம்பெழி லோகையின் மேனவில்
**ஓஒர்** சின்மய வோகைநல் காய்குகப்
**பேஎர்** கொண்ட பிரானெனு மெந்தையே. 99

குகன் எனும் சிறப்புப் பெயருக்குரிய தலைவன் என விளங்கும் எந்தையே! விழுமிய செல்வம் நிறைந்துள்ள தேவர்கள் வாழும் தேவலோகத்து அமராவதியில் உள்ள எழுச்சிதரும் மேலான இன்பப் பேற்றைக் காட்டிலும் மிக உயர்வானது எனக் கூறப்படும் இணையற்ற ஞானஆனந்தப் பேற்றை அளித்தருள்வாயாக.

### அந்தாதித்தொடைச்செய்யுள்.

புளிமா கருவிளம் தேமா புளிமா

திருவே லவனரு டேடார் **வினெரி**
எரியஞ் செனையினி யேயெம் **மருளே**
**அருளே** யெனுமடி யார்தே நினைதி
**அரு**ளே யெனுமடி யார்தே நினைதி. 100

திருமலிந்த வேலவனின் அருளைத் தேடும் தீவிர ஆர்வம் காரணமாக, எரிக்கும் நெருப்பு மயமான இவ்வுலக வாழ்வைக் கண்டு அஞ்சும் என்னை இனிமேலாயினும், "எம் அருள்வடிவே! அருள்புரிக" என வேண்டும் அடியார்களுக்கு வாய்த்துள்ள தெய்வமே! நினது திருவுளத்தில் கொண்டு இரங்கி அருள்க. அருள்மயமாகவே விளங்கும் திருவடிகளை உடைய தேவனே! எளியேனையும் நினைத்து இரங்கி அருள்வாயாக.

இச்செய்யுளில், அடிதோறு மிறுதிக்கண்ணின்ற "எரி" எனு மசையையும், "அருளே" எனுஞ் சீரையும், "அருளேயெனுமடியார்தேநினைதி" எனு மடியையும், "தி" எனு மெழுத்தையு மற்றையடிக்காதியாகத் தொடுத்தமையின், அந்தாதித் தொடை நான்கும் வந்தவா றறிக.

ஓரடிமுழுது மொருசொல்லேவரத்தொடுக்கும்

## இரட்டைத்தொடைச்செய்யுள்.

புளிமா.

தனனா தனனா தனனா தனனா.

**நனிசூழ் நனிசூழ் நனிசூழ் நனிசூழ்**
தனிவே லவனார் சரண்மா மலரே
தொனிபோ யிருளாய் வளையோர் துகள்போய்
இனிதா நலமே யெழுமா றுளமே. 101

எனது நெஞ்சமே! நாதநிலைக்கும் அப்பாற்பட்ட நாதாதீத நிலையை அடையவும், இருளாக அடர்ந்து சூழ்ந்திருக்கும் ஆணவம் எனும் மாசு நீங்கவும், இனிதான ஆனந்த அனுபவம் தோன்றவும் இணையற்ற வேற்படை நாயகனின் திருவடி மலர்களையே இரவு பகலாக எந்த வேளையிலும் நன்றாகத் தியானித்திரு.

மோனை முதலிய தொடையுந் தொடைவிகற்பமும்

போலாது வேறுபடத் தொடுக்கும்

## செந்தொடைச்செய்யுள்.

மா கூவிளம் கூவிளம் தேமா.

நீண்ட வைச்சுரி யந்திரு வீரம்
மனவை ராக்கிய நற்புகழ் ஞானம்
ஆறு முள்ளப கேசனி ளங்கோ
விசாக னென்றறி வார்தெளி வுள்ளார். 102

சிவசாம்ராஜ்யத்து இளவரசன் எனவும் விசாகன் எனவும் திகழும் முருகப் பெருமானே அழிவிலா ஐசுவரியம், திரு, வீரம், மன வைராக்கியம், நற்புகழ், ஞானம் எனப்படும் ஆறு குணங்களையும் கொண்டுள்ளதால் **பகவான்** எனும் சிறப்புப் பெயருக்கு உரியவனாகத் திகழும் ஈசன் ஆவான்.

*(பகம் என்பது ஐசுவரியம் முதலான ஆறையும் குறிக்கும் சொல்)*

இதனைச் செந்தொடைச்செய்யு ளென்றல், காராட்டை வெள்ளாடென்றாற் போலும். இதனை மங்கலவழக் கென்ப. அழகிலாவிச்செய்யு ளிங்ஙன மிலக்கியங் காட்டு நிமித்தமாகவே சொலப்பட்டதென வறிக. "மேவுவாருனை" என்னுஞ் செய்யுண்முதல் இச்செய்யுள்வரை, அடிமோனைத் தொடையாதி தொடை யெட்டுங் காட்டப்பட்டன.

இச்செய்யுள் : நிலைமண்டில வாசிரியப்பா வாகாதென்பதை, ஆசிரியவியல் 26-ஆம் செய்யுளடியில் விளக்கிய நியாயத்தி னுணர்க.

அடிமுதலிருசீர்க்கண்ணு முதலெழுத்தொன்றத் தொடுக்கும்

## இணைமோனைத் தொடைச்செய்யுள்.

முதற்சீர்: தேமா

**வா**கை **வா**ரணத் தோகையற் பாடும்
**ஓ**கை **யோ**ங்கிய பின்பவ னன்பின்
**ஈ**கை **யீ**டெனக் குற்றன நீருந்
**தோ**கை **தோ**ன்றவற் பாடுதி ரன்பீர். 103

கோழியை வெற்றிக் கொடியாகக் கொள்பவனும் மயிலை வாகனமாகக் கொள்பவனுமான முருகப் பெருமானைச் செந்தமிழால் பாடும் மிகுந்த மகிழ்ச்சி அடையும் நிலை சேர்ந்த பிறகு அவனது அருளால் பொற்செல்வமும் பெருமையும் எனக்கு நன்கு பொருந்தின. அன்பர்களே! நீங்களும் மயில்வாகனத்தில் தோன்றும் அவனைத் துதிப்பீர்களாக.

இறைவனைப் பாடுமகிழ்ச்சிமிக்குற்ற பின்னர்த்தான் அவனன்பினால் எனக்குப் பொன்னும் பெருமையும் உற்றனவென்று ஆசிரியர் இத்திருச்செய்யுட்கட் குறிப்பிடுவாரா யினார். இவ்வாய்மையைக் கிருபை கெழுமிய நெஞ்சினர் பெரிதும் கவனிக்கக் கடவரே.

103. **தோகை** = மயில்.

அடிமுதற்சீரு மூன்றாஞ்சீரு முதலெழுத்தொன்றத் தொடுக்கும்

## பொழிப்புமோனைத்தொடைச்செய்யுள்.

முதற்சீர்: புளிமா; மூன்றாஞ்சீர்: கருவிளம்.

**அ**ருண்மு தற்பொரு **ள**றுமுகற் பாடு
**தி**ருவி ழந்துமை **தி**மிர்நுதன் மாந்தர்
**உ**ருவி யந்தணி **யு**யர்கவி பாடின்
**வ**ருவ தென்சொலும் **வ**ளர்புவி யீரே. 104

புவியில் வளரும் மக்களே! அருட்கொடை வழங்கும் முழுமுதற் பொருளாம் அறுமுகனைப் பாடும் நற்பேற்றை இழந்து, கண்களுக்கு மையிட்டும், நெற்றியில் திலகமிட்டும் வரும் பெண்களின் உருவச்சிறப்பை வியந்து அலங்காரம் நயம் மிகும் பாடல்களையே பாடிக் கொண்டிருந்தால் என்ன பயன் விளையும்? கூறுவீர்.

அடிமுதற்சீரு மிறுதிச்சீரு முதலெழுத்தொன்றத் தொடுக்கும்

## ஒரூஉமோனைத்தொடைச்செய்யுள்.

புளிமா கருவிளம் கருவிளம் புளிமா.

தனனா தனதன தனதன தனனா

**ப**கவா னறுமுக னடிபுகழ் **ப**ரிவேம்
**உ**கமே வெவரையும் வியனென **வு**னியே
**ப**கரே மொருகவி யெனுநிலை **ப**டர்வோர்
**து**கடீ ரருணிலை யடைவது **து**ணிபே. 105

பகவான் அறுமுகப்பரமனின் திருவடிப்பெருமையைப் புகழ்ந்துபாடும் அன்புத்திறத்தில் உள்ளோம். இவ்வுலகில் உள்ள எவரையும் பெருமை வாய்ந்தவர் என எண்ணிப் புகழ்ந்து ஒரு பாடலைக் கூடப் பாடமாட்டோம் - எனும் ஓர் உறுதிப்பாட்டில் நிலைத்து நிற்பவர்கள் குற்றமற்ற அருட்பேற்றை அடைவது உறுதியே ஆகும்.

அடிமுதற்சீரு மிரண்டாமூன்றாஞ்சீரு முதலெழுத்தொன்றத்தொடுக்கும்
### கூழைமோனைத்தொடைச்செய்யுள்.
கூவிளம் கூவிளம் கூவிளம் தேமா.

கங்கைப கஞ்சசி கண்டம ணிந்தோன்
பங்குறு பண்புமை பங்கயக் கைம்மே
வங்கிள ரள்ளயி லத்தனைப் பாடல்
சங்கையில் சத்தனை சற்சனர் மாட்டே. 106

கங்கையாறு, கொக்கின் இறகு, இளம்பிறைத் துண்டம் ஆகியவற்றைச் சடையில் அணிந்துள்ள சிவபெருமானின் இடப் பக்கத்தே சேர்ந்துள்ள பண்புசால் உமையம்பிகையின் தாமரைமலர் போன்ற கையில் பொருந்தித் தவழ்ந்து அழகுமிகும் கூரிய வேற்படை ஏந்தும் தலைவனாம் முருகனைப் பாடுதல் என்பது, சாத்துவிக குணம் ஐயமின்றிச் சேர்ந்து நிறைந்துள்ள நற்பண்புமிக்க சான்றோரிடம் மட்டுமே உள்ளது.

அடிமுதற்சீரு மூன்றாநான்காஞ்சீரு
முதலெழுத்தொன்றத் தொடுக்கும்
### மேற்கதுவாய்மோனைத்தொடைச்செய்யுள்.

தேடரு மங்குக தேவனைத் தேடிப்
பாடணி யிற்றன பாடுறு பாங்கும்
ஆடருள் வல்லமை யாரழ காதி
கூடிட வாற்றுவர் கூர்மதி கூர்ந்தோர். 107

கூர்த்த ஞானம் வாய்க்கப் பெற்றுள்ள நற்பண்பு மிக்கோர், தேடி அடைவதற்கு அருமையாக உள்ள அழகிய குகனை நாடிப் பாடும் ஒழுங்குமுறையில், தமது பாட்டுத் திறத்தோடு, ஆடும் ஆற்றலும், நிறைந்த அழகு முதலான சிறப்புகளும் சேர்ந்து பொருந்தி இருக்குமாறு பாடல்களைப் பாடுவார்கள்.

---

106. பகம் = கொக்கு; நிகண்டுகணோக்குக. கொக்கினிறகைக் கொக்கெனக் குறிப்பிட்டவாறு.

107. அருமை அருமென மரீஇயிற்று. இவ்வாறு, சிவப்பிரகாசம் முதற்சூத்திரம் 6-ல் "போற்றலருமருள்" எனவும், திருவாசகம் திருப்பொற்சுண்ணம் 5-ல் "நறுமுறு" எனவும், தாயுமானார் பாடலில் "பேசருமனந்தபத" எனவும் வருதல் காண்க.

அடிமுதற்சீரு மிரண்டாநான்காஞ்சீரு
முதலெழுத்தொன்றத் தொடுக்கும்
கீழ்க்கதுவாய்மோனைத்தொடைச்செய்யுள்.

**தெ**ள்ளிய **தெ**ன்கவி வாணரைத் **தெ**வ்வாற்
**க**ள்ளமில் **க**ல்வியி லார்நனி **க**ண்ணார்
**எ**ள்ளவ **ரெ**வ்வுரை யுங்கெட **வெ**ந்தாய்
**வ**ள்ளிமன் **வ**ண்பதம் பாடுவர் **வ**ல்லார். 108

கள்ளமற்ற முறையான கல்வி நலம் வாய்க்கப் பெறாதோர் பகைமை உணர்வால், தெளிவான அழகிய பாடல்களைப் பாடவல்ல கவிஞர்களை நன்கு மதித்துப் போற்ற மாட்டார்கள். இகழ்ந்து கூறும் அவர்களது கருத்துக்களெல்லாம் பயனற்றுப் போகுமாறு தமிழ்க்கவி வல்லோர், எம்முடைய வள்ளிநாயகி மணாளனின் வண்மைமிக்க திருவடிகளைப் பாடுவார்கள்.

அடிநாற்சீரு முதலெழுத்தொன்றத் தொடுக்கும்
முற்றுமோனைத்தொடைச்செய்யுள்.

கருவிளம் கருவிளம் கருவிளம் புளிமா.

**ம**லர்ந்தநன் **ம**ருமலி **ம**லரணை **ம**றுவில்
**அ**லங்கலென் **ன**ணிமண **ம**றுமிழி **வ**டையும்
**உ**லம்பழ **கு**ரையணி **யு**லர்விழி **வு**றலின்
**றி**லங்கிடு **மி**தையயி **லி**றைக்கிட **லி**யைபே. 109

நன்கு மலர்ந்துள்ள, நறுமணம் மிகுந்த குற்றமற்ற மாலைகள், சிறிது நேரத்துக்குப்பிறகு மணமற்றுப் போகும்; கீழே வீசப்படும் இழிநிலை அடையும். ஆனால் சந்தஒலி மிகுந்த அழகு நிறைந்த சொற்களால் ஆகிய பாமாலை வாடாது; இழிநிலையும் அடையாது; எப்பொழுதும் சிறப்புடனேயே திகழும். இத்தகைய பாமாலைகளை வேல் இறைவனுக்கு அணிவித்தல் மிகவும் பொருத்தமான செயலே ஆகும்.

அடியினிறுதியைமுதலாகக்கொண்டுவரு மிறுதித்தொடையாகிய
இயைபுத்தொடைச்செய்யுள்.
தேமா தேமா தேமா தேமாங்காய்
[இதுமுத லிரண்டுவிருத்தமும், நெட்டெழுத்துக்கவி]

மாதா வேனை மாகா மாவேகா
வேதா தூயா வீமா மாமாயா
நாதா வேலா ஞானே சாநீதா
போதா நாகா போகா நீயேகா. 110

பெரிய ஞானவெளியே! பெரிய பொருள்களையும் பெரிய தெய்வநிலைகளையும் உனக்குள்ளே கொண்டு ஏகனாக ஒளிர்பவனே! வேத மயமானவனே! தூயோனே! பகைவரை அச்சுறுத்தும் வீரத் தோற்றம் உடையவனே! மகாமாயையை இயக்குபவனே! நாதனே! வேலனே! ஞானத்தின் திரளாக உள்ள ஈசனே! நியாய பரிபாலனே! ஆகம வடிவே! மலைகளுக்கு உரியவனே! பெருத்த துன்பத்துக்கு ஆட்பட்டுள்ள என்னை நீதான் காத்தருள வேண்டும்.

தானா தானா தானா தானானா.

தூவா னோநா னேநீ தானாமா
தூவே பூவே தோலா வேலோனே
கோவே வீட கோனே வானோனே
தேவே வாவே சேயே மாதாயே. 111

விரிந்து பரவியுள்ள வானமாக நான் ஆவேனோ? நீயே அந்த ஞானகாசமாக உள்ளாய். தூயோனே! தெய்வ ஆற்றல்களாகிய மணத்தைப் பரப்பும் பூவே! தோல்வி அடையாத வேற்படை உடையவனே! அரசே! வீடு பேற்றை அருளும் தேவச் சக்கரவர்த்தியே! கந்தலோகத்தில் இருப்பவனே! ஐந்தொழில்களையும் விளையாட்டாகச் செய்பவனே! அமிழ்த நிலையை உடையவனே! செந்நிறம் வாய்ந்தவனே! அனைத்துயிர்களுக்கும் வாய்த்துள்ள ஒப்பற்ற அன்னையே!

இவ்விரண்டு செய்யுளுள்; முதற்செய்யுண் முதலடி யிறுதிச்சீ ரிரண்டும் இறுதி யெழுத் தொன்றத் தொடுத்தமையால், இணையியைபு. இரண்டாமடி யிரண்டாஞ்சீரு மிறுதிச்சீரும் அவ்வாறு தொடுத்தமையால், பொழிப்பியைபு. மூன்றாமடி முதற்சீரு மிறுதிச்சீரும் அவ்வாறு தொடுத்தமையால், ஒரூஉவியைபு. நான்காமடி முதற்சீரொழிந்த ஏனை முச்சீரும் அவ்வாறு தொடுத்தமையால், கூழையியைபு. இரண்டாஞ் செய்யு ளிரண்டாமடி யீற்றயற்சீ ரொழிந்த ஏனை முச்சீரும் அவ்வாறு தொடுத்தமையால், மேற்கதுவா யியைபு. மூன்றாமடி முதலயற்சீ ரொழிந்த ஏனை முச்சீரும் அவ்வாறு தொடுத்தமையால், கீழ்க்கதுவா யியைபு. நான்காமடி நாற்சீரும் அவ்வாறு தொடுத்தமையால், முற்றியைபு.

### எதுகைத்தொடைச்செய்யுள்.

நான்காஞ்சீர் : கூவிளங்காய்.

நம்பா வெம்பா நல்லா ருள்கயிலா
வம்பா வென்பார் கொம்பா மன்முலையார்
அம்பார் கண்ணா னையா ரம்பிகைசேய்
அம்பா தம்பே ணும்பே றண்ணுவரே. 112

அடியார்களின் நம்பிக்கைக்கு உரியவனே! சீற்றத்துக்கு இடம் கொடுக்காத நல்லோர் தியானிக்கும் வேலவனே! புதிய புதிய தோற்றம் கொள்பவனே! - என இவ்வாறெல்லாம் துதிப்போர் யானைக்கொம்பு போன்ற அழகிய மார்பகம் உடைய பெண்களின் அம்பு போன்ற கண்களின் பார்வையால் மோகவயப்பட்டு வருந்த மாட்டார்கள். உமை அம்பிகையின் குமாரனான செவ்வேளின் அழகிய திருவடிகளை மேன்மேலும் போற்றும் அருட்பேற்றை அடைவார்கள்.

தேமா.

### [மெல்லினமிலாச்செய்யுள்.]

தீயார் தேடா வாயா வாயா
வீயா வாயா வில்லா காயா
தூயா சேயா தூயா டாயா
தாயா வாவா தாளீ தற்கே. 113

தீயோரால் நாடி அணுக முடியாத அதீதமான இடத்தை உடையவனே! உண்மை உடையோனே! கெடாத ஊதுகுழல் உடையோய்! வில் ஏந்தியவனே! அருள்மயமான திருமேனி உடையவனே! தூயோனே! சேயவனே! தூய ஆதாயமாக விளங்குபவனே! நினது திருவடிகளைத் தருவதற்குத் தாய்க்கருணையுடன் விரைவில் வருவாயாக!

---

112. நையார் = வருந்தார்.

113. வாய் = இடம், உண்மை, ஊதுகுழல். வாயா = இடமுடையவனே. வாயா = உண்மையுடையோனே. வீயாவாயா = கெடாத ஊதுகுழலுடையாய். "வாய்குழலிடம் வாய்மைப்பேர்" என்பது யகரவெதுகை.

தூய ஆடாயா எனற்பாலது "தூயா டாயா" எனப்பொருந்திற்று. செல்வ முடையான் செல்வனெனப் பட்டவாறு ஆயமுடையான் ஆயனெனப்பட்டனன். ஆயம் = ஆதாயம்; யகரவெதுகை காண்க. தாயா = தாய்போலு முரிமையுடையாய்.

இவ்விரண்டு செய்யுளுள்; முதற்செய்யுண் முதலடி முதற்சீரு மிரண்டாஞ்சீரு மிரண்டாமெழுத் தொன்றத் தொடுத்தமையால், இணையெதுகை. இரண்டாமடி முதற்சீரு மூன்றாஞ்சீரும் அவ்வாறு தொடுத்தமையால், பொழிப்பெதுகை. மூன்றாமடி முதற்சீரு மிறுதிச்சீரும் அவ்வாறு தொடுத்தமையால், ஒரூஉ வெதுகை. நான்காமடி யிறுதிச்சீ ரொழிந்த ஏனை முச்சீரும் அவ்வாறு தொடுத்தமையால், கூழையெதுகை. இரண்டாஞ்செய்யுண் முதலடி முதலயற்சீ ரொழிந்த ஏனை முச்சீரும் அவ்வாறு தொடுத்தமையால், மேற்கதுவாயெதுகை. இரண்டாமடியிறுதி யயற்சீ ரொழிந்த ஏனை முச்சீரும் அவ்வாறு தொடுத்தமையால், கீழ்க்கதுவாயெதுகை. மூன்றாமடி நாற்சீரு மவ்வாறு தொடுத்தமையால், முற்றெதுகை.

## முரண்டொடைச்செய்யுள்.

புளிமா புளிமா தேமா கருவிளம். ஈறு புளிமா

**பெரிதுஞ் சிறிதும் பேசும் படியிழி**
**தெருளுந் தனுளார் பேதுஞ் சிகுநனி**
**விரிவிண் குகனை மெய்யுட் குவிவுடன்**
**ஒருகா லிருகான் முக்கா லுனினே.** 114

வியாபித்து விரிந்துள்ள ஞான ஆகாயமாகத் திகழும் குகப்பெருமானைத் தனக்குள்ளேயே, ஏகாக்ர சித்தத்துடன் ஒரு போதோ, இரண்டு வேளைகளிலோ, மூன்று காலங்களிலுமோ சிந்தித்தால், உயர்ந்தது, தாழ்ந்தது என்றெல்லாம் கூறப்படும் நிலைகளை உடைய இழிந்த அறிவும், தனக்குள்ளே பொருந்தியுள்ள அச்சமும் நன்கு நீங்கிவிடும்.

(சிற்றறிவு நீங்கிப் பேரறிவாம் சிவஞானம் உண்டாகும்)

முதற்சீர்: தேமா; மூன்றாஞ்சீர்: புளிமா.

**மாறா வருள்வேன் மனன்மெய் யடியவர்**
**காறே கதையா ரமிதஞ் சமமற**
**ஈறே முதலே பறையா ரிடையிடை**
**ஏறா ரிழியார் கருதார் மறவார்.** 115

மாறாத அருளுடைய வேல் இறைவனின் மெய்யடியவர்கள் பரம்பொருளுக்கு ஓர் எல்லை கூறமாட்டார்கள்; அளவுக்கு உட்படாதது, சமமானது என்பன போன்ற நிலைகள் நீங்கிநிற்க இது இறுதி, இது முதல் என வரையறை செய்து பேசமாட்டார்கள்; இடையிடையே தமது நிலையினின்று உயர்தலோ தாழ்தலோ இல்லாதவர்கள்; நினைப்பும் மறப்பும் அற்றவர்கள்.

இவ்விரண்டு செய்யுளுள்; முதற்செய்யுண் முதலடி முதற்சீரு மிரண்டாஞ்சீருஞ் சொல்லானும் பொருளானு முரணத்தொடுத்தமையால், இணைமுரண். இரண்டாமடி முதற்சீரு மூன்றாஞ்சீரும் அவ்வாறு தொடுத்தமையால், பொழிப்புமுரண். மூன்றாமடி முதற்சீரு மிறுதிச்சீரும் அவ்வாறு தொடுத்தமையால், ஒரூஉமுரண். நான்காமடியிறுதிச் சீரொழிந்த ஏனைமுச்சீரு மவ்வாறு தொடுத்தமையால், கூழை முரண். இரண்டாஞ் செய்யுளிரண்டாமடி முதலயற்சீரொழிந்த ஏனை முச்சீரு மவ்வாறு தொடுத்தமையால், மேற்கதுவாய்முரண். மூன்றாமடி யிறுதி யயற்சீரொழிந்த ஏனை முச்சீரு மவ்வாறு தொடுத்தமையால், கீழ்க்கதுவாய்முரண். நான்காமடி நாற்சீரு மவ்வாறு தொடுத்தமை யால், முற்றுமுரண்.

## அளபெடைத்தொடைச்செய்யுள்.

தேமா கூவிளம் தேமாங்காய் மா.

**ஆ**அன் பா**அ**லு மஃகல்கொள் ளாத
**தேஎன்** பாகுநெய் **திண்ண்**கண் டாசில்
வா**அன்** கன்னலும் பின்போக மரூஉ
நா**அன்** பேஎணு நன்**ன்**செவ் வேள்கேள். 116

நான் நாள்தோறும் அன்புடன் போற்றித் துதிக்கும் செவ்வேள் பரமனின் நட்பானது, பசுவின்பாலும், குறைவில்லாத தேன்பாகும், நெய்யும், கெட்டிப்பட்டிருக்கும் கற்கண்டும், சிறந்த கருப்பஞ்சாறும் சுவையில் பின்னிட்டுப் போகுமாறு என்னிடம் பொருந்திவிளங்கும்.

**தூஉ** மாமணி துன்**ன்**றொர் தா**அ**ர்
பூஉ ணீ**இ**ணல் வேலண்ணல் பூஉங்
கா**அ** னாஅடல் கா**அ**ண்ட லோஓங்
கேஎ ரேறுந ரெந்தைக ளாவார். 117

தூய சிறந்த ரத்தினங்கள் செறிந்துள்ள மாலையை அணிந்துள்ள, நீண்டிருக்கும் நல்வேற்படை கொண்டுள்ள தலைவனின் பூப்போன்ற திருவடிகளைச் சிந்தித்தல், தரிசித்தல் முதலான செயல்களில் சிறந்து விளங்கும் உயர்வு மிக்குள்ளோர், எந்தையாம் குகனின் சாருப நிலையை அடைந்து அபரசுப்பிரமணியர்களாகவே திகழ்வார்கள்.

இவ்விரண்டு செய்யுளுள் ; முதற்செய்யுண் முதலடி முதற்சீரு மிரண்டாஞ்சீரு மளபெழத் தொடுத்தமையால், இணையளபெடை. இரண்டாமடி முதற்சீரு மூன்றாஞ்சீரு மவ்வாறு தொடுத்தமையால், பொழிப்பளபெடை. மூன்றாமடி முதற்சீரு மிறுதிச்சீரு மவ்வாறு தொடுத்தமையால், ஒரூஉவளபெடை. நான்காமடி யிறுதிச்சீரொழிந்த ஏனைமுச்சீரு மவ்வாறு தொடுத்தமையால், கூழையளபெடை. இரண்டாஞ் செய்யுண் முதலடி முதலயற்சீ ரொழிந்த ஏனை முச்சீரு மவ்வாறு தொடுத்தமையால், மேற்கதுவாயளபெடை. இரண்டாமடி யிறுதியயற்சீ ரொழிந்த ஏனை முச்சீரு மவ்வாறு தொடுத்தமையால், கீழ்க்கதுவாயளபெடை, மூன்றாமடி நாற்சீரு மவ்வாறு தொடுத்தமையால் முற்றளபெடை.

"வாகை" எனத் தொடங்கும் 103-வது செய்யுண்முத லிச்செய்யுள்வரை, தொடைவிகற்பம் முப்பத்தைந்துங் காட்டப்பட்டன. இவற்றோடு முன்னர்க்காட்டிய தொடை யெட்டையுங் கூட்டின்; தொடை நாற்பத்து மூன்றாகும். ஆகவே "இழுக்கிலடி தொடைநாற்பத்துமூன்று" என யா-காரிகையில் வருமாறு இந்நூற்கண்ணுந் தொடையும், தொடைவிகற்பமும் வந்தவா றறிக. இத்தொடை தொடைவிகற்பங் களன்றி யடிதோறு மிறுதிச்சீர்க்கண் மறுதலைப்படத் தொடுப்பது கடைமுரண், கடையிருசீர்க்கண்ணு மறுதலைப்படத்தொடுப்பது கடையிணைமுரண், இரண்டாஞ்சீர்க்கண்ணு நான்காஞ்சீர்கண்ணு மவ்வாறு தொடுப்பது பின்முரண், முதற்சீர்க்கண்ணின்றி யொழிந்த முச்சீர்க்கண்ணு மவ்வாறு தொடுப்பது கடைக்கூழைமுரண், இடையிருச்சீர்க் கண்ணு மவ்வாறு தொடுப்பது இடைப்புணர் முரணெனவுங் கூறுப. இவ்வாறு ஏனைய மோனைத்தொடை, இயைபுத்தொடை, எதுகைத்தொடை, அளபெடைத்தொடை யென்பவற்றுக்கு மொட்டிக்கொள்க. இவ்வியல் 102-வது தொடர்பாகிய செந்தொடைச் செய்யுள்போன்ற செய்யுளடி யிலெங்கேனு மடியின் முதனிற்கு மோனையெழுத்துக்குரிய இனவெழுத்துவரி னதனை, மருட்செந்தொடை யென்க.

பின்வரு வழியெதுகை வழியாக வழிமுரண்டொடை யொன்று சொலப்படும். அஃதளவடியின் மேற்பட்ட நெடிலடி, கழிநெடிலடிகளிலேயே வரத்தக்கது. பின்வருவருக்கவெதுகைவழியாக வருக்கமோனை யொன்று சொலப்படும். இதற்கிலக்கியம் ஆசிரியவியலில் "தருமமும்" எனத்தொடங்கும் 12-வது செய்யுள். அதிலடிதோறு முதலில், தகரவருக்கம் வந்தமை காண்க. இம்மோனை : ஆசிரியப்பாவிற்கேயியையுமா கலி னங்குத்தர நேரிட்டது. இடையிட்டெதுகை, விட்டிசை வல்லொற்றெதுகை, விட்டிசைமோனை யென மூன்று கூறப்படும். அவை, கட்டழகில்லா நடையு மோசையுமுடையனவென்க.

### வருக்கவெதுகைச்செய்யுள்.

தேமாங்காய் தேமா தேமாங்காய் தேமா.

தானான தான தானான தான.

**தா**மேவு போத மேதேவர் தாழ்வில்
பூ**மா**லை சூடு போர்வேலன் மீது
பா**மா**லை பாடி யேபேணு தாசர்
நா**மூ**ட ராகி டோநாளு நாடு. 118

சிற்றுணர்வே! தேவர்களின் சிறந்த பூமாலைகளை அணியும் போராற்றல்மிக்க வேலவன் மீது, நாளும் பாமாலைகளால் போற்றித் துதிக்கும் அடியார்களாகிய நாம் சிறப்புடையவர்கள் ஆவோம்.

இதில், இரண்டாமெழுத்து அளவொத்த மகரவருக்கம். ஆதலின், இது மகரவருக்கவெதுகை. இவ்வா றேனையவெழுத்து வருக்கம் வரினும், அவ்வவ்வருக்க வெதுகையாம்.

## நெடிலெதுகைச் செய்யுள்.

தேமா தேமா கூவிளம் தேமா.

ஏரார் பெண்கா ளெம்பெரு மானைக்
கூடா வாழ்வென் வாழ்வருள் கூராய்
ஆனா வன்பா லாள்குக வென்றோர்
வாதே செய்துய் வேபெற வாரீர். 119

அழகு மிகுந்த பெண்களே! எம்பெருமானாகிய முருகனைக் கூடாத வாழ்வு எத்தகைய பயனற்ற வாழ்வு! "அடியார்களை ஆட்கொள்ளும் குகப்பெருமானே! நீங்காதிருக்கும் அன்பால் எம்மீது அருள்மிகுந்து வந்து கூடிக்கொள்" என விடாப்பிடியாகப் பாடி உய்திபெற வாருங்கள்.

(இது தலைவி, தனது தோழியர்களுக்குக் கூறுவது)

இதில், இரண்டாமெழுத் தொன்றாவிடினும், அவ்வெழுத்தின்மே லேறிய நெடிலொப்புமையாம். அவ்வழி யிது நெடிலெதுகை. இது, பெரியதோர் சிறப்புடையதன்று.

## வல்லினவெதுகைச்செய்யுள்.

கூவிளம் புளிமா கூவிளம் தேமா.

தத்தன தனனா தந்தன தான.

மச்சறு தகைசான் மங்கைய ரேகை
கொட்டியுண் மகிழ்வே கொண்டொரு ஞான
முத்தியை யருள்சேய் மொய்ம்பணி பாட
இக்கணம் வருவீ ரின்பரி வோடு. 120

மருளற்றுத் தெளிவான உணர்வுபெற்றுள்ள பெண்களே! ஒப்பற்ற முத்திப்பேற்றை அருளும் செவ்வேள் பரமனின் தோள் அழகையும் ஆற்றலையும் கைகொட்டி உள்ளத்தில் மகிழ்ச்சி கொண்டு பாடுவதற்கு இனிய அன்புடன் இக்கணத்திலேயே ஓடிவாருங்கள்!

(இதுவும் தலைவி தோழியர்களுக்குக் கூறுவது)

இதில், இரண்டா மூன்றா மெழுத்துக்கள் வல்லினமாதலின்; இது வல்லின வெதுகை.

---

119. ஆனாஅன்பால் அருள்கூராய் என மாறுக. அருள்கூராய் = கிருபை கூர்வாயாக.

120. மஸ்து எனற்பாலது "மச்சு" என வேய்ந்தது; மருளெனும் பொருண்மைத்து.

## மெல்லினவெதுகைச்செய்யுள்.

கூவிளங்காய் காய் மா தேமா.

**எம்**பெருமா னாஞ்செவ்வே ளியற்பே ரோதிக்
**கண்**டவொலி கலகலக்கக் கனிந்து பாடிச்
**சுந்**தரமா நடிப்பதற்குத் தொடர்ந்து வாரீர்
**மஞ்**சொழியா விளங்கன்னி மாரே யன்றே. 121

அழகு நீங்காமலிருக்கும் இளம் கன்னியர்களே! எம்பெருமான் செவ்வேள் பரமனுக்கு இயல்பாகவே வாய்த்துள்ள 'குகன்' 'முருகன்' முதலான இயற்பெயர்களைக் கூறிக் கழுத்திலிருந்து எழும் ஒலி தழுதழுக்க மனம் கனிந்து பாடி அழகாக நடனம் செய்வதற்குக் கூட்டம் கூட்டமாக வாருங்கள்! நாள்தோறும் தொடர்ந்து வாருங்கள்.

(இதுவும் தலைவி தோழியர்களுக்குக் கூறுவது)

இதில், இரண்டாமெழுத்து மெல்லினமாதலின் ; இது மெல்லினவெதுகை.

## இடையினவெதுகைச்செய்யுள்.

கூவிளம் தேமாங்காய் கூவிளம் தேமா.

**மெய்**யுரை யோர்சூழு மேதைவி சாகன்
**நல்**லரு ளேவாழி நாளுமெ னாவாட்
**கொள்**ளடி யேபாடி நாடுதிர் கோல
**மவ்**வலை நேர்மூரன் மாமுகை யீரே. 122

அழகிய முல்லைப் பூவை ஒத்த சிறிய வெண்பற்களையும் பெருத்த மார்பகமும் உடைய பெண்களே! மெய்ப்பொருள் கூறும் ஞானியர் தியானிக்கும் முற்றறிவு உடையோன், விசாகன் எனும் முருகனின் நல்லருள் என்றென்றும் வாழ்க! என, அடியார்களை விரைந்து ஆட்கொள்ளும் அவனது திருவடிகளையே பாடி, அவனையே நாடுங்கள்.

(இதுவும் தலைவி தோழியர்களுக்குக் கூறுவது)

இதில், இரண்டாமெழுத்து இடையின மாதலின் ; இஃதிடையின வெதுகை.

## தலையாகெதுகைச்செய்யுள்.

மூன்றாஞ்சீர்: கருவிளம்.

**தொண்டக** மேநாளுந் தொனிதரு சீறூர்
**அண்டக** னீணாக வணிபுற வுள்ளீர்
**முண்டக** னார்பேணு முருகன பாதங்
**கண்டக** மேமாவின் களிகொள வாரீர். 123

குறிஞ்சிப்பறை நாள்தோறும் முழங்கும் சிற்றூர்கள் செறிந்துள்ள, அகன்று நீண்டுள்ள மலை வரிசைகள் சூழ்ந்துள்ள மலைப்புறவங்களில் உள்ளவர்களே! தாமரை மலரில் வீற்றிருக்கும் நான்முகன் அன்பால் துதிக்கும் முருகப்பெருமானின் திருவடிகளைத் தரிசித்து நமது உள்ளம் இனிய மகிழ்ச்சி கொள்ளுமாறு திரண்டு வாருங்கள்.

இதில், "சீர்முழுதொன்றிற் றலையாகெதுகை" எனும் விதிப்படி முதற்சீரிரண்டாமெழுத்துமுத லெல்லாவெழுத்தும் ஒன்றத் தொடுத்தமையால், இது தலையாகெதுகை. "ஒரெழுத்தொன்றினிடை" என்றபடி யிரண்டா மெழுத்தொன்றுமட்டு மொன்றத் தொடுப்பது இடையாகெதுகை. இது முன்னர்க்காட்டிய அடியெதுகையைச் சேரும். அது 96-வது யாப்பு. "கடைபிறவே" என்றபடி மேலிருவகைக்கும் வேறுபடுவது கடையாகெதுகை. இதற்கிலக்கியம் : மற்றவெதுகைகளே. அதனால், இங்கிரண்டியாப்புத்தரவில்லை.

## மூன்றாமெழுத்தொன்றெதுகைச்செய்யுள்.

தேமா கூவிளம் தேமா கூவிளங்காய்.

$\frac{\text{தன்ன}}{\text{தைன}}$ தானன தான தானதனா.

**செம்மை** நாய்கழு கோமை சேர்சுரமார்
**நன்மை** மானுடர் காளெ னானறவே
**மெய்மை** யோதிய வேல னார்பெயரே
**உண்மை** யாநித மோதி வாழ்மினரோ. 124

நற்பேற்றைக் குறிக்கோளாகக் கொண்டுள்ள மானுடர்களே! செந்நாய், கழுகு, நரி முதலானவை சேர்ந்துள்ள புறங்காட்டில் என்னுடைய அகங்காரம் ஒழியுமாறு மெய்ப்பொருளை உபதேசித்து அருளிய வேலவனாரின் திருப்பெயர்களையே நாள்தோறும் உண்மையான அன்புடன் ஓதி வாழ்வீர்களாக.

இதில், 'மை' என மூன்றாமெழுத் தொன்றத்தொடுத்தமை காண்க.

---

**123. தொண்டகம்** = குறிஞ்சிப்பறை.

## ஆசெதுகைச் செய்யுள்கள்.

தான தந்தன் *தல்ல தத்தனனா.

மாமல் குங்குளிர் குல்லை வச்சிகளீ
பூமல் கும்பொழின் முல்லை யச்சுதனார்
தூமல் குந்துதி சொல்லு மற்புடையீர்
சேயீமல் கன்பதர் செல்லு மிக்குயர்வீர். 125

அழகு மலிந்துள்ள துளசியும் காயாம் பூக்களும், நறுமணம் நல்கும் பூச்செறிந்த பொழில்களும் உடைய முல்லை நிலத்துக்குரிய திருமால் மீது தூய்மை மிகும் தோத்திரங்களைக் கூறி வழிபடும் அன்பர்களே! செவ்வேள் பரமனின் அருளைப்பெருக்கும் பக்திவழியிற் செல்லுங்கள்! மிகவும் உயர்வினை அடைவீர்கள்.

*தைய வெனுஞ் சந்தத்தையே, தல்ல வென விகற்பிக்கும் வழி விகற்பித்ததுணர்க.
இதில், ஆசாக யகரவொற் றிடை வந்தது காண்க.

தாத்த தானன தான தானதன.

ஏர்க்கு ழாமுழு மேசி லாமருத
மாக்க ளேபெரு வான மாமுருக
ஆக்கை போமுன மாள வாவெனவொர்
நோக்க மாகுதிர் நூறு வீர்துயரை. 126

கூட்டமாகச் செறிந்துள்ள கலப்பைகள் உழும் குற்றமற்ற மருதநிலத்து வாழும் மக்களே! "பெரிய வானமாக விரிந்து வியாபித்துள்ள பெருமைசால் முருகப்பெருமானே! இந்த உடல் நீங்குவதற்கு முன்னால் ஆட்கொள்வதற்காக எழுந்தருள்" எனத் துதிக்கும் ஒரு நோக்கம் உடையவர்களாகத் திகழுங்கள்; அதனால் துன்பங்களை அழிப்பீர்கள்!

இதில், ஆசாக ரகரவொற் றிடைவந்தது காண்க.

---

125. குல்லை = துளசி. வச்சி = காயா; பிங்கலந்தை "பூவை யஞ்சனி... வச்சிகாயா" எனக் கூறுதலினறிக. துளசி முல்லை நிலத்ததெனும் மாத்திரையே குறிப்பார்க்குக் காயாவும் அந்நிலத்ததெனக் குறிக்க வேண்டும் என்றலுணர்த்து மாறே அவ்விரண்டினையும் "குல்லை வச்சிகள்" என விணைத்துரைத்தன ரென்க.

தான தல்லன தான தானதனா.

ஓவ லில்லலை வீசு மோர்கடனீர்
மேவு முள்ளிக டாழை வீறிடையீர்
கோல்வி டல்லக வூழர் கோள்கடிசேய்
தாவி னல்லடி தாழ்வி ரேலுயர்வீர். 127

ஓயாது அலைகள் வீசும் கடற்பரப்பைச் சார்ந்து முள்ளிச் செடிகளும், தாழைகளும் செறிந்து வளரும் நெய்தல் நிலத்தில் வாழ்பவர்களே! பிடிக்கும் பற்றுக்கோலாம் அறிவை விடுத்து, இருளான அறியாமை, பாவம் என்பனவற்றைக் கொள்ளும் தீய நெறியில் நிற்போரின் குற்றங்களைப் போக்கவல்ல சேய்ப்பரமனின் அழியாத நல்ல திருவடிகளை வணங்குவீர்களாயின், உயர்நிலை அடைவீர்கள்.

இதில், ஆசாக லகரவொற் றிடைவந்தது காண்க.

தான தன்னன தான தந்தனனா.

போதல் பின்னுறல் கூறு புந்தியர் நூல்
ஓதல் பன்னுத லோடு என்புடையார்
ஈத லெண்ணுவ ரேதில் கந்தனையே
தாழ்த றண்ணல மாகு மென்றறிவார். 128

தீவினைகளைப் போகச் செய்தல், நற்செயல்களைச் செய்தல் முதலான வழிமுறைகளைக் கூறும் ஞானியர் நூல்களை ஓதுதல், விரித்து உரை செய்தல் ஆகிய செயல்களோடு உன்னிடம் ஆழ்ந்த அன்பும் கொண்டுள்ளோர் பிறருக்கு வேண்டியன ஈந்து மகிழ்வதை விரும்புவர்; குற்றமற்ற கந்தப் பெருமானை வணங்குதலே மிகுந்த நன்மை பயப்பதாகும் என அறிவார்கள்.

இதில், ஆசாக ழகரவொற் றிடைவந்தது காண்க. "யரலழ வென்னு மீரிரண்டொற்றும் - வரன்முறை பிறழாது வந்திடை யுயர்ப்பினஃ் - தாசிடை யெதுகையென் றறைதல் வேண்டும்" எனும் யா-காரிகையுரைவரு சூத்திரப்படி, இங்ஙனமாசெதுகை நான்கு நனி காட்டப்பட்டன.

## ஆசிடையிட்டுவரும் வல்லினவெதுகைச் செய்யுள்.

தான தையன தந்த தானதனா.

காதன் மல்குயி ரென்ற காரிகைதான்
ஏர்கொ ளுள்ளிட மென்ற பூவணைமேல்
ஆத வுள்ளமெ னங்கை யாலணையா
ஏத மில்லயி லெந்தை மேவுவளே. 129

மாசற்ற அன்பு மிகும் ஆன்மா எனும் பெண், அழகிய தனது இதயவெளி எனும் பூம்படுக்கை மேலே, முருகனையே விரும்பிய மனம் எனும் அழகிய கையால் அணைத்துக்கொண்டு, குற்றமற்ற வேற்படை நாயகனாம் எந்தையோடு இரண்டறக் கலந்துகொள்வாள்.

இது, 'த-கொ' எனும் வல்லினமொன்றிய வெதுகை. இவ்வல்லினத்திடையில், ஆசாக ரகரவொற்று வந்தது காண்க.

## இரண்டடியெதுகைச்செய்யுள்.

தான தந்தன தான தந்தனனா.

சூரி யன்றொழு தூய வந்தணரே
ஏரி லங்கயி லீச னங்குமுளான்
நாளு மென்றவ னாடு நண்புறினே
பீளு டம்படை பீடை வெந்திடுமே. 130

நாள்தோறும் மூன்று வேளைகளிலும் சூரியனைத் தொழும் அந்தணர்களே! அழகு விளங்கும் வேல் இறைவன் சூரியனுள்ளும் எப்பொழுதும் இருக்கின்றான் என உணர்ந்து அவனையே விழைந்து நிற்கும் அயரா அன்பைப் பெற்றால் அழியும் தன்மை உடைய உடலை மேலும் மேலும் பெறவைப்பதாகிய பெரும் துன்பமானது வெந்து அழிந்து போகும்.

இதில், முன்னிரண்டடியு மோரெதுகையாய்ப் பின்னிரண்டடியு மோரெதுகையாய் வந்தவாறு காண்க.

129. ஆதர உள்ளம் = "ஆதவுள்ளம்" எனப்பொருந்திற்று. விரும்பியவுள்ள மென்பது பொருள்.

## உயிரெதுகைச்செய்யுள்.

தான தந்தன தன்ன தானதனா.

**கானி** லங்கடி துன்ன வேகமழ்தார்
கோடி தந்தெழில் வண்மை கூர்செடிகாள்
ஆசி னுஞ்சும மண்ணல் சேயுருவே
**சாரி** னுஞ்சிறு சன்ம மோசனமாம். 131

காட்டு நிலம் எங்கும் நன்மணம் செறிந்து விளங்குமாறு மணம்கமழும் கோடிக்கணக்கான மலர்களைத் தந்து எழில்வளம் மிகுந்துள்ள செடிகளே! குற்றமற்ற உம்முடைய மலர்களெல்லாம் தலைவனாகிய சேயவனின் வடிவத்திற்கு அர்ச்சனை செய்யப்பட்டுச் சேருமாயின், உங்களது சிறிய பிறவியும் விமோசனம் பெறும்; நீங்கள் உயர்நிலை அடைவீர்கள்.

இதில், இரண்டாமெழுத் தொன்றாவிடினும், இரண்டாமெழுத்தின்மே லேறிய இகரவுயிர் ஒன்றிவந்தமையினால் இஃதுயிரெதுகையாயிற்று. இது பெரியதோர் சிறப்புடையதன்று.

## வழியெதுகைச்செய்யுள்.

இச்செய்யுள் : முற்போந்த கலிநிலைத்துறைகளுள் 55-வது யாப்பு. அந்த யாப்பி னெதுகை யிங்கே காட்டப்படுவதாயின், முன்னர்க்காட்டிய முற்றெதுகையாய் முடியும். ஆகலின், அளவடியின்மிக்க வடிகளானே வரத்தக்க வதனை யங்குக்காட்ட நேரிட்டது. அதிற் சீர்தோறு மிரண்டாமெழுத்தாகிய ககரவொற்று வந்தமை காண்க. ஒற்றன்றி யுயிர்மெய்யெழுத்தும் வரும். இவ்வாறு முற்றும் வருதலின்றிச் சிலசீர் விட்டியைந்து வரினும் வரலாம். அனுப்பிராசமெனும் வடமொழியை வழியெதுகை யென்பது தமிழ் வழக்கு. எதுகைகளிற் றலையாகெதுகை சிறப்பாதல் போல, இதுவும் பெரியதோர் சிறப்புடைத்து.

---

## நெடின் மோனைச்செய்யுள்

தேமா தேமா கருவிளம் கூவிளங்காய்

**கா**னார் பக்கி களேயறி வார்பெரியோர்
**கோ**னா யிட்டர் குழாமுட னேவருசேய்க்
**கா**னா வன்பி னருஞ்சிறை வீசுமினோ
**ஊ**னா ரங்க முறாநல மேவிடுவீர். 132

---

131. தார் = மலர்.

காட்டில் வாழும் பறவைகளே! அறிவு நிறைந்த யோகியர்களின் தலைவனாய் அடியார் கூட்டத்துடன் வரும் சேய்ப்பரமனுக்குத் தளராத அன்புத்திறத்தால் உமது அரிய சிறகுகளைக் கவரிபோல் வீசுங்கள். ஊன் நிறைந்த உடலைப் பெறாதிருக்கும் நலமாகிய வீடுபேற்றை நீங்கள் அடைவீர்கள்.

இதில், அடிதோறும் வந்த முதலெழுத்து : நெட்டெழுத்தாகலின் நெடின்மோனை. அடிதோறு முதலெழுத் தொன்றத்தொடுக்கும் அடிமோனைக் கிதுவேறு. அம்மோனை முன்னர்க்காட்டப்பட்டது. இந்நெடின்மோனையுஞ் செந்தொடைச்செய்யுட் கின்றெனபதை யுணர்த்துவான் இதனையுமொரு மோனையெனக் கூற்றுவல்லார் கொள்வ ரென்க.

### வல்லினமோனைச்செய்யுள்.

காவாழ் கிள்ளை களேமயில் காளடியார்
கோவா மெந்தை குகேசன சீரெழிலே
பாவா மாறு பகர்ந்தினி தாடுமினோ
தூவா ரோகை சுரந்திடு நும்மகமே. 133

காட்டில் வாழும் கிளிகளே! மயில்காள்! அடியார்களுக்கு அரசாகும் எந்தை குகேசனின் சீரிய எழிலையே பொருளாகக் கொண்ட பாடலாகத் திகழுமாறு ஒலி எழுப்பியும் நாட்டியம் ஆடியும் திகழுங்கள் (கிளிகள் பாட, மயில் நாட்டியம் ஆட வேண்டும்). அவ்வாறு செய்தால் உங்கள் உள்ளத்தில் தூய மகிழ்ச்சி சுரந்திடும்.

இதில், அடிதோறும் வந்த முதலெழுத்து வல்லெழுத்தாகலின் வல்லினமோனை. இவ்வாறு மெல்லெழுத்துவரின் மெல்லினமோனை. இடையெழுத்துவரின் இடையினமோனை யெனவுங் கொள்க.

### இரண்டடிமோனைச்செய்யுள்.

தேமாங்கனி கூவிளம் கூவிளம் கூவிளங்காய்.

தாத்தந்தன தானன தானன தானதனா.

நீற்கண்டன ராமக னாய்வரு நீளுயிரார்
நீற்கண்டற வேபுரி நேரயி லாள்கரவேள்
வாற்கெண்டைகண் மால்கொளு மேர்கெழு மான்மகள்கோ
வாற்கெண்டைகள் பாய்புய மாதிரம் வான்வரையே. 134

நஞ்சுண்டு கருத்துள்ள கழுத்தை உடைய சிவபிரானின் குமாரனாக வரும் வேள்; நீண்ட பிறப்புக்கு உட்படும் உயிர்களைப்

பந்தப்படுத்தும் இருளாகிய ஆணவக்கட்டு அறுமாறு செய்யும் நீண்ட வேலைச் செலுத்தும் திருக்கரத்தை உடைய வேள்; நீண்ட கெண்டை மீன்கள் போலும் அழகிய கண்களை உடையவளும் முருகன்மேல் காதல் கொண்டுள்ளவளுமான மான்மகளாம் வள்ளியின் தலைவன்-என விளங்கும் குகனின் தூய பொற்சரடாகிய பூணூல் விளங்கும் தோள்க்ள் திசையனைத்தும் படர்பவை; மலைகளைப் போன்றவை.

இதில், முன்னிரண்டடி முதலெழுத்து மொருமோனையாய்ப் பின்னிரண்டடி முதலெழுத்து மொருமோனையாய் வந்தவாறு காண்க. கட்டு : கண்டெென மெலிந்தது.

## அனுமோனைச்செய்யுள்.

புளிமா கூவிளங்காய் தேமா கூவிளம்

தனன தானதன தான தானன.

**செருநர் காதுகுக தேவை வேலொடு**
**திருவு லாமிதய நாடு சீரியர்**
**தெருள ராயிதய தேசு கூடுவர்**
**சிரம மேதுமடை யாது தீவிரம்.** 135

பகைவரை அழிக்கும் குகப்பெருமானை வேலோடு சேர்த்து பக்தித்திரு மிகுந்துள்ள இதயத்துள் தியானிக்கும் சீரிய தன்மை உடையோர், இடர்ப்பாடு சிறிதும் இல்லாமல், தீவிரமான பக்குவம் அடைந்து தெளிவான ஞானம் உடையவர்களாகி, இதயத்தில் பேரொளி கூடப்பெறுவர்.

இதனில், அடிதோறும் வந்த முதலெழுத்து அனுவெழுத்து. அதனாலிது அனுமோனை. அனுவெழுத்து இனவெழுத்தெனவுங் கூறப்படும். விவரம் : அ - ஆ - ஐ - ஔ தம்முளினமாம். இ - ஈ - எ - ஏ தம்முளினமாம். உ - ஊ - ஒ - ஓ - தம்முளினமாம். இவையேறிய வுயிர்மெய்யு மிவ்வாறாம். ஒற்றினுள் ச - த தம்முளினமாம். ஞ - ந தம்முளினமாம். ம - வ தம்முளினமாம். அன்றி, ய - இ - எ - தம்முளினமெனக் கோடற்கும், ஆன்றோர் செய்யுள்வழக் குண்டு. முதலெழுத்தாய மோனையெழுத்தேனும், உரிய வினவெழுத்தேனுஞ் செந்தொடைச்செய்யு ளொழிந்த எல்லாச் செய்யுட்கு மடிதோறும் வரத்தொடுப்பது சிறப்பாம். இக்கண்டத்திலுள்ள செய்யுளனைத்து மிச்சிறப்புடையனவே. அடிமுதற்சீரொழிந்த வேனைச் சீர்களி லெச்சீரிலேனு முதலில் வரத்தக்க அவ்வெழுத்தானது, சீர்க்கு இடைகடையில் வருமாயின் அது மேற்சிறப்பினின்றும் போலியென வங்கீகரிக்கப்படும். இதற்குதாரணம் : இவ்வியல் 125-வது தூக்கிரண்டாமடி யிரண்டாஞ்சீரும், 131-வது தூக்குமுதலடி யிரண்டா நான்காஞ் சீர்களும், 55-வது தூக்கு மூன்றாமடி நான்காஞ் சீருமாம். இவ்வா றவ்வெழுத்துவரப் பெற்றவையன்றிப் பெறாத வாசிரியவடி : பொழிப்பெதுகையாலு நடக்கும். இதனை, ஆசிரியவியல் 9-10-11-12-8-ம் செய்யுள்களி லறிக. நிற்க;

இச்செய்யுள்காறுங் காட்டிய தொடை தொடைவிகற்ப முதலியவற்றுட் சில : தொடைகாட்டத் தொடங்கிய கலிவிருத்தத்திற்கு முற்போந்த செய்யுள்களில்

வந்திருப்பினும், அவற்றை யொருங்கே யறிகுந ரறியுமா றிங்ஙனங் காட்டிய வொழுங்கு கவினென்க.

ஈண்டு வந்தவாறு நாற்சீர்கொண்ட அளவடியிலேயே நடைபெறத்தக்க தொடைவிகற்பம் முப்பத்தைந்தும், இரட்டைத்தொடையும், வழியெதுகையும், 117-வது விருத்தத்தினடியில் வெளியிட்ட வழிமுரண்டொடையு மொழிந்த மற்றைய தொடை யனைத்தும் : குறள், சிந்து, அளவு, நெடில், கழிநெடில் எனு மடி யைந்தினு நடைபெறூஉம் என்க.

முதற்சீர்: தேமா.

ஆசி றம்முடலை லிங்க மாநினை
நேச மோடுயிரி னின்றவ் வாறதில்
நாச மில்குகனை நாட்டு வோருயர்
தேசி லங்குசிவ லிங்க மாகுவர். 136

குற்றமற்ற தமது உடலைச் சிவலிங்கமாகவே பாவித்துக் கொண்டு நிற்கும் அன்புத்திறத்தோடு, தமது உயிரையும் சிவலிங்க மாகக் கருதி அதில் குகப்பெருமானை நாட்டித் தியானிப்போர் உயர்ந்த பேரொளி விளங்கும் சிவலிங்க வடிவாகவே திகழ்வார்கள்.

மா புளிமா புளிமா புளிமாங்காய்.

தோலார் திருலீ லைகளைச் சொலுமுந்தை
நூலே யறியா நொசிவுள் ளவர்முன்னோர்
காலே தறிவார் கதியென் னடைவாரேர்
வேலா விமலா விபுவா யவிர்சோதீ. 137

அழகிய வேலனே! விமலனே! ஞானவெளியாகப் படர்ந்து விளங்கும் பேரொளியே! அழகும் சுவையும் செறிந்த திருவிளையாடல்களைப் பற்றிக் கூறும் தொன்மையான நூல்களைப் பயின்று அறியாது அணுத்தன்மை (சிறுமைத்தன்மை) உடையோராக இருப்போர், முன்னோர்களின் தோற்றத்தைப் பற்றி யாது அறிவார்கள்? என்ன கதியை அடைவார்கள்?

குளவம் பகமா றுளவெங் குருநாதா
அளவில் கலையே தமிலா தறிவோராய்க்
களமில் களனே பெறினுங் கவிநாதர்
மிளிருன் கழலைப் புகழ்நூல் விழையாரோ. 138

137. நொசிவு = நுண்மை = அணு; சூடாமணி நிகண்டு காண்க.

138. குளஅம்பகம் = நெற்றிக்கண். களன் = நாதமெனப்படும் ஓதையென்பதை, சூடாமணி நிகண்டு "அரவமே களனே யோதை" என்பத னாலறிக.

ஆறு நெற்றிக் கண்களைக் கொண்டுள்ள எம் குருநாதனே! அளவற்ற கலை நூல்களைப் பிழையற அறிவோர்களாகிக் களங்க மற்ற நாத அனுபவம் நல்கும் இசைத்திறத்தைப் பெற்றிருந்தாலும் பெரும் கவிஞர்கள், பேரொளியுடன் திகழும் உனது திருவடிகளைப் புகழும் நூல்களைப் பயில்வதை விரும்ப மாட்டார்களோ?

செல்வப் பொருளோர் செயுநல் வினைபோலே
கல்விப் பொருளோர் கமழுன் கழன்மேதை
சொல்வித் தையிலே யுயர்வார் துகடீர்வார்
நல்வித் தகவே லிறைமா நடையானே. 139

செல்வச் சிறப்பால் பொருள்வளம் பெற்றுள்ளோர், செய்யும் புண்ணியச் செயலைப் போன்றே, கல்விச் சிறப்பால் பொருள் நிறைந்த நூல் எழுதும் சான்றோர், நறுமணம் கமழும் உனது திருவடிப் பெருமையைப் புகழ்ந்து கூறும் திறத்திலே உயர்ந்து விளங்குவாராயின் அவர்கள் குற்றங்கள் அனைத்தும் நீங்கப் பெற்றுள்ள தூயோராக விளங்குவார்கள். நல்ல நிறை ஞானப்பெருநிலை உடையோனே! வேற்பெருமை கொண்டு விழுமிய செயல்களைச் செய்வதில் வீறுடன் திகழ்பவனே.

நான்காஞ்சீர்: கூவிளங்காய்.

வீடு வெறுக்கா தொருசெவ் வேள்பெயரிற்
பாடு திருப்பா வுயர்வே பாடதினும்
வீடு வெறுத்தே வெளிநின் றோரருளாற்
பாடு திருப்பா வுயர்வே பாடகரே. 140

வீட்டைத் துறந்து துறவறம் மேற்கொள்ளாமல் இல்லறத்தில் இருந்தவாறே செவ்வேள்பரமனின் மேல் பாடுகின்ற திருப்பாடல்கள் உயர்வுடையனவே. ஆயினும் அவற்றைக் காட்டிலும் வீட்டைத் துறந்து வெளிவந்து துறவற நடை புகுந்து, ஒப்பற்ற திருவருளால் செவ்வேள்மேல் பாடும் திருப்பாடல்கள் மிகுதியும் உயர்வுடையவையே! பாடகர்களே!

இச்செய்யுட்கண் அறிவுறுத்த உண்மை, ஆகூழுள்ளார் அந்தரங்க நீத்தகலுமாறு முளதாமோ?

139. இறை = பெருமை.

தேமா கூவிளம் தேமா கூவிளம்.

முந்தை நோன்மையி னானன் முத்தமிழ்
வந்து ளார்குகன் வாழ்த்தி யின்னருட்
சிந்து மூழ்கிவி டாத சேர்க்கையிற்
சொந்த மாயுறு வார்சு வாமியை. 141

முற்பிறவிகளில் செய்த சீரிய தவத்தின் பயனாக, முத்தமிழ்ப் புலமை சிறப்புற வாய்க்கப் பெற்றுள்ளவர்கள், குகப்பெருமானைத் துதித்துப்பாடி இனிய அருட்கடலில் மூழ்கி, இடையறாது நிகழும் அத்துவிதக் கலப்பில், சுவாமியாகும் குகப்பெருமானைச் சொந்தப்படுத்திக் கொள்வார்கள்.

முதற்சீர்: புளிமா.

எனக்கு நற்றமி ழீந்த சேயருள்
நினைக்கு நெஞ்சுடை யோய்தள் ளாடிடின்
தனக்கி லாபமெய் தாது தாழ்வெளி
மனக்கு மீனம தாமம் மானசம். 142

எனக்கு நற்றமிழ்த் திறத்தை அளித்தருளிய செவ்வேட்பரமனின் அருளாற்றலைச் சிந்திக்கும் உள்ளம் உடையோய்! மனத்தடுமாற்றம் கொண்டால் ஆன்மாவாகிய தனக்கு எந்தப் பயனும் விளையாது. தடுமாற்றம் கொள்ளும் மனம், தாழ்ந்த இடமாகிய நரகத்தைக் காட்டிலும் இழிந்ததாகும்.

கூவிளம் கூவிளம் புளிமா கருவிளங்காய்.

தேனுறழ் முத்தமிழ் விரகு சிறந்துளவுன்
மீனுறழ் சித்திர ஞெகிழி மிடைந்தசரண்
பானினை வுற்றவர் பயில்கலை விஞ்சையராய்
மேனிலை பற்றுவர் விரைசெய் கடம்பணியோய். 143

மணம்வீசும் கடம்பமாலையை அணிந்துள்ள பெருமானே! தேன்போன்ற இனிமை சிறந்துள்ள முத்தமிழ்ப் புலமை முழுதுற இயல்பாகவே வாய்த்துள்ள உனது விண்மீன் ஒத்த ரத்தினமணிகள் இழைக்கப்பட்ட அழகான சிலம்புகள் செறிந்துள்ள திருவடிகளிடம்

143. ஞெகிழி = சிலம்பு. மிடைதல் = நெருங்கி நிற்றல்; துதைதலென்றுங்கூறுப.

சிந்தனையை வைத்திருப்பவர்கள் பயிலுதற்குரிய பல கலைகளிலும் பேராற்றல் வாய்ந்தவர்களாகி, உயர்ந்த நிலையை அடைவார்கள்.

தேமா கூவிளங்காய் கூவிளம் தேமா

சேடை கொண்டதமிழ் செவ்விய தேவ
பாடை யென்றறவர் பன்னுவர் தேமார்
கோடை யங்குகனை யேயிது கொண்டு
பாடை யிங்கிதம ராமதர் பண்ணும். 144

பெருமையிற் சிறந்த நிலை கொண்டுள்ள தமிழ்மொழியைத் தேவமொழி என அறநெறிப்பட்ட பெரியோர் கூறுவர். மணம் நிறைந்த வெண்காந்தளும் செங்காந்தளும் அணியும் அழகிய குகப் பெருமானை இந்தத் தமிழால் பாடும் உயர்ந்த மனப்பாங்கானது, நீங்காத மனமகிழ்ச்சியைக் கொடுக்கும்.

கூவிளங்கனி தேமா கூவிளங்கனி தேமா+

மங்கலமுத லீரைந் தங்கமுமுள மாணார்
இங்கிதகவி மாலை யேசினின்முடி வேய்வோர்
தங்கமினுட லோடு சங்கமொருவி யந்தந்
துங்கவமுது சேர்வர் சுந்தரமுரு கோனே. 145

அழகே வடிவான முருகப்பெருமானே! மங்கலம், சொல், எழுத்து, தானம், பால், உணவு, வருணம், நாள், கதி, கணம் எனப்படும் பத்து அங்கங்களும் பொருந்தியுள்ள பெருமையும் நயமும் செறிந்த பாமாலைகளை நினது குற்றமற்ற மகுடத்தின் மேல் சூட்டுவோர்கள், பொன்னொளி செறிந்த உடல் வாய்க்கப்பெற்று, கருவிகளின் சேர்க்கையிலிருந்து நீங்கி, புகழுக்குரிய உயர்ந்த அமுத நிலையை அடைவார்கள்.

+ இச்செய்யுள் ; முதற்சீரையு மூன்றாஞ்சீரையும், தேமா புளிமா வெனப்பிரிக்கின்; அறுசீர்க் கழிநெடிலடி விருத்தமுமாம்.

145. மங்கலமுதலீரைந்தங்கம் = மங்கலம், சொல், எழுத்து, தானம், பால், உணவு, வருணம், நாள், கதி, கணம். இவற்றை முதன்மொழிப் பொருத்தமாகிய தசாங்கமென்ப. முதன்மொழியாகு மங்கலமொழியில், இரட் டை மங்கலமும் புகலொண்ணா தென்ப.

[ஒற்றிலா வல்லினச்செய்யுள்.]

தானனதன தானா தானனதன தானா.

தீதறுசுக போதா சேடகடக கோகா
சாதறெறுகு கேசா சாடுதவறு சாடு
சூதறுபகை தீதீ சோதிபதிப கேசா
கோதறுகடி தாதா கோடிபடிக பாதா. 146

தீமைகளைப் போக்கவல்ல ஆனந்தமயமான ஞானமூர்த்தியே! பெருமைக்கு உரியவனே! கடகம் அணிந்துள்ள அரசே! காத்தருள். இறப்பைத் தடுக்கும் குகேசனே! தவறுகளை அடியோடு அழித்துவிடு. வஞ்சனை செய்யும் பகை முதலான குற்றங்களை முழுவதுமாகத் தீய்த்துவிடு. பேரொளியே! வைராக்கியம், அழகு, ஈசுவரத்தன்மை, புகழ், செல்வம், ஞானம் என்னும் ஆறும் வாய்த்துள்ள ஈசனே! குற்றமற்ற இன்பநிலையை நிலையாகத் தந்தருள்! கோடிக்கணக்கான பளிங்கினைப் போன்ற திருவடிகளை உடையவனே!

இதில், வன்கணவெழுத்தாறும் வந்தன.

[மெல்லினச்செய்யுள்.]

முன்மைமனுமுன் ஞான முன்னுமனனை நண்ணா
நன்மைநினைநன் மோன நண்ணினஙன நண்ணு
மென்மைமுனிமன் னேம னெண்ணமெனைமு னாமே
மென்மைமணிமின் மஞ்ஞை மின்னுமினிமை மன்னே. 147

ஜபவகைகளுள் முதற்கண் உள்ள வாசக ஜபமந்திரம், பதிஞானத்தைக் கருதியுள்ள மனநிலையைத் தொடாது. நன்மையைக் கருதி நிகழும் மௌன நிலையை (மானசு ஜபத்தை) உரியதாகக் கொண்டால், பதிஞானத்தைக் கருதும் மனோபாவம் பொருந்திநிற்கும். இரவும் பகலுமாக எந்நேரத்திலும் குற்றத்தைக் கோபிக்கும் இராசனான இயமன் எண்ணியுள்ள எண்ணம் என்னை நோக்காமல் இருக்க, மெல்லிய கருநீல விழிகளைத் தோகையில்

147. முன்மை மனு = முதற்கணுள்ள வாசக ஜெபமந்திரம். முன்ஞான முன்னுமனனை = பதிஞானத்தை நினைக்கும் மனத்தை. நண்ணாது = கிட்டாது; துவ்விகுதி தொக்கது. எல் மை முனிமன் = இரவும் பகலும் குற்றத்தைக் கோபிக்கும் இராசனான இயமன். எல் = இரவும் பகலும். மை = குற்றம்.

கொண்டு ஒளிவீசும் மயில்மேல் மிளிரும் ஆனந்தவடிவே! என்னையும் கருதிக் கொள்ளே!

இதில், மென்கணவெழுத்தாறும் வந்தன.

[இடையினச் செய்யுள்]

வையவயவு லாவு வாலிலிழிவர் வாயால்
வையவளவி லாரி லேவிழைவரை வாரி
வெய்யவழலி லீயோர் வேலையுரிய ராவோர்
வெய்யவலலை யேவில் வேலவவளி யாயே. 148

பூலோக ஆசையில் உலாவும் தூய்மை இல்லாக் கயவரும் தமது வாயால் இகழுமாறு, அளவில்லாக் குற்றங்களையே விரும்பிச் செய்பவர்களை வாரி வெம்மை மிகுந்த கொடிய நெருப்பில் இடுவதாகிய ஒரு வேலையைச் செய்யும் உரிமை உடையரானோர் எனக்கும் கொடிய துன்பத்தை ஏவினால், வேலவனே, அப்போது விரைந்து காத்தருள்வாய்.

இதில், இடைக்கண வெழுத்தாறும் வந்தன.

காய் காய் காய் புளிமா.

வம்புமலர் முடிமுருகன் மதியுடையா ரெவரும்
பம்புமளி யால்விரும்பப் படுபொருளா யிடலால்
நம்பனெனும் பெயருமனை வானெனுநன் னடையர்
கும்புபடர் குகவெனையுங் கொளவருளி னினையே. 149

அன்றலர்ந்த புதிய மலர்கள் விளங்கும் திருமுடியை உடைய முருகன், ஞானியர் அனைவராலும், பொங்கி எழும் அன்பால் பெரிதும் விரும்பப்படுகின்ற கடவுளாக இருப்பதால் "நம்பன்" (விருப்பத்துக்கு உரியோன்) எனும் திருப்பெயரையும் கொண்டுள்ளான் எனக் கூறும் நன்னெறியாளர்களின் திருக்கூட்டம் வணங்கும் குகப்பெருமானே! எளியேனையும் ஆட்கொள்ள நினது அருள் உள்ளத்தில் நினைப்பாயாக.

148. வையவயவுலாவு வாலிலிழிவர் வாயால் வைய = பூலோக ஆசையிலுலாவு தூய்மையில்லாக் கயவரும் தம் வாயால் ஏச. அரில் = குற்றம்; "ஆரில்" என நீட்டல் விகாரமுற்றது.

கரியபிரான் மருகனெனக் கனகமயில் வருவோன்
பிரியமுளார் மனம்போலப் பேருதவி செயலாற்
பெரியபிரா னெனும்பெயரும் பெறுவனெனா வறிவோர்க்
குரியபரா பரவெனையு முவகையொடு நினையே. 150

கரிய நிறமுடைய தலைவனான திருமாலின் மருகன் எனப் பொன்மயிலில் வருவோன் ஆன முருகப்பெருமான் அன்புடைய அடியார் எண்ணிய எண்ணியாங்கு அடையப் பேரருள் செய்வதால் 'பெரியபிரான்' எனும் திருப்பெயரையும் பெற்றுள்ளான் என அறியவல்ல ஞானியர்க்கு உரிய பராபரனே! எளியேனையும் உவகையோடு நினைத்து அருள்புரிவாயாக.

வச்சிரத்தோ டயில்பிடிக்கு மருமரைக்கை மழவன்
எச்சகப்பே ரழியினுந்தா னழிவடையா வெழிலால்
அச்சுதப்பே ருறுவனெனா வறியறிஞர் மனமே
வுச்சிதப்பா வகியெனையு முவகையொடு நினையே. 151

வஜ்ராயுதம், வேல் ஆகியவற்றை ஏந்தும் மணம்மிக்க தாமரைமலர் போன்ற கரங்களை உடைய இளம்பெருமான் எந்த உலகத்தில் உள்ளவர்கள் அழிந்தாலும் தான் அழிவடையாமல் இருக்கும் எழில் திறத்தால் 'அச்சுதன்' (அழியாதவன்) எனும் திருப்பெயரையும் ஏற்பான் என அறியும் அறிஞர்களின் உள்ளத்தில், உயர்வுடைய அக்னி சொரூபமாக விளங்குபவனே! எளியேனையும் உவகையோடு நினைத்து அருள்புரிக.

[விருத்தமும், துறையும்]

எண்ணரிய குகபரம்விண் ணென்னுமறி வுடனும்
மண்ணுலக கிரியையொடு மன்னிமிளிர் வதனால்
விண்ணுமண்ணு மதுவயவென் றேயறியும் விறலோர்
நண்ணுநடை வருகுமர நம்பெனையு நினையே. 152

நினைப்பதற்கரிய குகபரம்பொருள் வெளி (ஆகாயம்) எனப்படும். ஞானநிலையுடனும் மண்ணுலகம் எனப்படும் கிரியை நிலையுடனும் பொருந்தி விளங்குவதால், ஆகாயமும் நிலமும் வலிமையுடைய அந்தக் குகபரமே என்று உறுதியாக அறியும்

152. வயவுஅது என மாறுக. வலியுள்ள அது (= அக்குகபரம்) என்பது பொருள். வயவு = வலி. வலியோனை வயவன் என்பதும் இம்மொழிபற்றி யன்றோ.

அறிவாற்றல் உடையோர் மேற்கொள்ளும் வழிபாட்டு முறைகளில் வெளிப்பட்டு வரும் குமரனே! உன்னை விரும்பி இருக்கும் எளியேனையும் நினைத்து அருள்க.

எண்ண ரியகு கபரம்விண் ணென்னு மறிவுடனும்
மண்ணு லககி ரியையொடு மன்னி மிளிர்வதனால்
விண்ணு மணும துவயவென் றேயறி யும்விறலோர்
நண்ணு நடைவ ருகுமர நம்பெ னையுநினையே.

இது, கட்டளைக் கலித்துறை.

(சொல்லும் பொருளும் வேறுபடாமல் அடியும்
தொடையும் வேறுபட்டு வரும் பிறிதுபடுபாட்டு)

[விருத்தமும், அகவலும்.]

பூமணமே புனன்மணமே பொங்களிமா மணமே
காமணமே கனிமணமே கம்மெனவே கமழு
மீமருவீ கமலைவள மேயவொரு தளியுய்
சேமகுகா வுவகைநெய்தை செய்யவெற்கு நினையே. 153

பூவின் நறுமணம், நீரின் மணம், மலர்தோறும் நிறைந்து சிந்தும் தேனின் மணம், சோலைமணம், கனிகளின் மணம் எனும் இவை 'கம்' எனக் கமழ்ந்து மேலாம் மணத்தை நல்கும் திருவாரூரில் வளம்செறிந்த கமலாலயம் எனும் திருக் கோயிலில் எழுந்தருளிப் பொலியும் க்ஷேமமே வடிவான குகனே! எளியேனுக்கு மகிழ்ச்சிப் பெருக்கைச் செய்வதற்கு நினைத்தருள்க.

மீமரு ஈ கமலை=மேலாம் மணத்தை நல்குந் திருவாரூர்.

(இது அகவல்)

பூமண மேபுனன் மணமே பொங்களி
மாமண மேகா மணமே கனிமண
மேகம் மெனவே கமழு மீமரு
வீக மலைவள மேய வொருதளி
யுய்சே மகுகா வுவகை
நெய்தை செய்ய வெற்கு நினையே.

இஃதாறடி நேரிசையாசிரியப்பா.

ஒரே வாய்ப்பாட்டில், 152, 153-ஆஞ் செய்யுள்களாகவந்த இரண்டு விருத்தங்களுள் ஒன்று கட்டளைக் கலித்துறையாக நடைகொள்ளவும், ஒன்று நேரிசை யாசிரியப்பாவாக நடைகொள்ளவும் அமைத்த ஆற்றல், மதியுடையார் மதிக்கும் புலப்படாது போங்கொல்?

153. அளி = கள்.

[திரிபாகி.]

மூன்றெழுத்து மெம்பெருமான் முருகிருக்கை முதலிற்
றோன்றெழுத்து மீற்றெழுத்துந் துரைமுருகன் கரணம்
ஊன்றெழுத்து ளிடைகடைதா மோங்குமர நிலையங்
கான்றிளைக்குங் கோதைசொல்லிற் கமலைகலை மலையே.154

மூன்றெழுத்துக்களை உடைய சொல் ஒன்றில் மூன்று எழுத்துக்களும் எம்பெருமான் முருகப்பெருமானுக்குக் கோயிலாகும்; இந்தச் சொல்லில் முதலில் தோன்றும் எழுத்தும் இறுதி எழுத்தும் முதல்வனாகிய முருகன் கொள்ளும் கரணம் ஆகும்; இந்தச் சொல்லில் நிலைபெற்றுள்ள எழுத்துக்களுள் இடையில் உள்ள எழுத்தும் இறுதியில் உள்ள எழுத்தும் சேர்ந்தால் பிரணவ வடிவான குமரன் கொண்டுள்ள இருப்பிடமாகும். தெய்வப்பொலிவு செறிந்துள்ள இந்த எழுத்துக்களின் ஒழுங்குமுறையைக் கூறினால் கமலை, கலை, மலை எனும் மூன்று சொற்களாகும்.

இதில், மூன்றெழுத்து - கமலை. இது திருவாரூர். கமலையில் முதலெழுத்துங் கடையெழுத்துங் கலை. இது கரணமென்னுங் கூத்துவிகற்பம். இடையெழுத்துங் கடையெழுத்தும் மலை. இவை பொருந்தப் பொருள் கொள்க.

நான்காஞ்சீர்: தேமா.

கன்மநெறி காய்ந்தவர்கள் போனனிக தைத்தே
தன்மநெறி காய்ந்துகறை யண்மூவினை தன்னைக்
கொன்மனசி லெள்ளளவு நீக்குமதி கொள்ளார்
சன்மமென வாகுவர்சொல் சண்முகபி ரானே. 155

அறுமுகப் பரமனே! கரும மார்க்கத்தை வெறுத்தவர்கள் போலப் பிதற்றி அறநெறியை வெறுத்தும், பாவம் செறியும் செயலைப் பயனில்லாத தமது மனத்திலிருந்து எள்ளின் அளவாவது நீக்குவதற்கு உள்ளம் விரும்பாமலும் இருப்போர் எப்படிப்பட்ட பிறப்பு உடையவர்களாக இருப்பார்கள்? கூறுக.

155. கொன் = பயனின்மை.

தேமா தேமாங்காய் தேமா தேமாங்காய்.

தானா தானானா தானா தானானா.

[நெட்டெழுத்துச் செய்யுளும், மாலைமாற்றும், திரிபங்கியும், துவிதநாகபந்தமும்.]

1. சேயா சேயாதே தேயா சேயாசே
மாயா மாயாவா வாயா மாயாமா
வாயா மாவாயா மாயா சேமாசே
யோயா நேயாவோ யாயே தேயாளே. 156

சேயவனே! சேயவனே! கடவுளே! எனது சிறுமையைக் கெடு. சிறுமைக்கு நமனாக உள்ளவனே! சக்தி ரூபமாகச் சுருங்கி இருந்து வியக்தி ரூபமாக விரியும் மாய மாயைக்கு அதிபதியே! என்முன் வந்தருள்வாயாக. உயிர்களோடு அத்துவிதமாக இருந்தும் அவைகட்குக் கிட்டாத மகாசிவராத்திரி அத்தனே! உண்மைப்பாடு உடையோனே! சிறந்த வாக்கு உடையானே! மாயவித்தைகள் உடையானே! சேமம் உடையானே! இளநலம் உடையானே! அன்பர்மாட்டு ஒழியா நேயம் உடையானே! என் கண்ணதாய ஏது (பேதைமை) எனும் குற்றத்தை ஒழித்தருள்; ஆண்டருள்!

வஞ்சித்துறை

2. சேயா சேயாதே
தேயா சேயாசே
மாயா மாயாவா
வாயா மாயாமா.

3. வாயா மாவாயா
மாயா சேமாசே
யோயா நேயாவோ
யாயே தேயாளே.

இதனில், 1,2-ம் அடிகள் தம்மின் மாலைமாற்றாம். நான்கடிகளையும் முறையே யிரண்டிரண்டு சீராகப்பிரித்துப் படிக்கும்போது பாம்புக்கொரு பாட்டாகப் பொருளோடு முடிகின்ற மேற்காட்டிய மோனைபிழையா விரண்டு வஞ்சித்துறைகளாகும். ஆகவே யிவ்விருத்தம் : குழிப்புடைய நெட்டெழுத்துச் செய்யுளும், மாலைமாற்றும், திரிபங்கியும், துவிதநாகபந்தமு மாயிற்றென்க.

இதன்பொருள். சேயாசேயா = சேயவனே சேயவனே, தே = கடவுளே, தேய் ஆசு = [எனது] சிறுமையைக்கெடு, ஆசு ஏமா = சிறுமைக்கு நமனாயுள்ளானே, யாமாயா = [சத்திரூபமாகச் சுருங்கியிருந்து] வியக்திரூபமாக விரியும் மாய மாயைக் கதிபதியே, வா = [என்முன்] வந்தருள்வாயாக, வாயாமாயாமா = [உயிர்களோ டத்துவிதமாயிருந்து மவைகட்குக்] கிட்டாத மகாசிவராத்திரியத்தனே, வாயா = உண்மைப்பா டுடையானே, மாவாயா = சிறந்த வாக்குடையானே, மாயா = மாயவித்தைகளுடையானே, சேமா = சேமமுடையானே, சேய் = இளநலமுடையானே, ஓயாநேயா = [அன்பர்மாட்டு] ஒழியா நேயமுடையானே, ஓயாய் ஏது = [என்கண்ணதாய] ஏதெனுங் குற்றத்தை யொழித்தருள், ஆள் = ஆண்டருள். என்றபடி, ஏ யிரண்டும் அசை.



தேமாங்கனி புளிமாங்கனி புளிமாங்கனி புளிமா.

தைன்னாதன தனத்தத்தன தனத்தந்தன தனத்த

**பொ**ய்ந்நூல்வழி யொழித்துக்குரு புரக்குந்திற முரைக்கும்
மெய்ந்நூல்வழி பிடித்துத்தவ மிகுக்கும்பொறி யடக்கர்
செய்ந்நூல்வழி சிறக்கக்களி திளைத்தின்பமு தளிக்கும்
மொய்ந்நூல்புக ழயிற்கைக்குக முருக்கென்றுயர் முருக்கு. 157

பொய்யான வழியைக் காட்டும் நூல்கள் கூறும் நெறிமுறைகளைத் தவிர்த்துக் குரு அனுக்கிரகித்து அருளும் திறத்தை எடுத்துக்கூறும் மெய்ந்நூல்கள் கூறும் வழிகளைக் கடைப்பிடித்துத், தவத்தில் ஈடுபடும் வகையில் ஐம்பொறிகளையும் அடக்கவல்ல முனிவர்கள் செய்தருளிய நூல்கள் கூறும் வழியே நின்று நான் சிறப்படைய, மிகவும் மகிழ்ச்சியில் திளைத்து இன்பமாகிய அமுதை அளித்தருளும் குகனே! எண்ணற்றனவாய் மிகுந்துள்ள நூல்கள் புகழும் வேல்பிடித்த கரம் உடைய குகப்பெருமானே! என் துன்பத்தை அடியோடு அழித்தருள்.

முதற்சீர்: நிரை + நேர் + நிரை = புளிமாங்கனி.

தனனாதன தனனாதன தனனாதன தனனா.

**எ**யிலேறிய புவியாமிதி லெளியேன்மட முடைமா
பயிலேறிய முகையார்தரு பயனாடுத லறிவாம்
வெயிலேறிய பெரியார்நடை விடலேவிழை யினுமே
மயிலேறிய முருகாவெனை மறவேலெனை மறவேல். 158

நகரங்களும் ஊர்களும் மிகுந்துள்ள இம்மண்ணுலகில் எளியேன் இளமைசெறிந்த, நெருக்கம் கொண்டுள்ள பெரிய மார்பகம் உடைய பெண்கள் தரும் இன்பத்தை நாடுதல், அறிவு எனும் பேரொளி மிகுந்த பெரியோர் சென்ற அறநெறியைத் தவிர்த்தல் - இந்த இரண்டையும் விரும்பி நின்றாலும், மயில்மேல் ஏறியுள்ள முருகப்பெருமானே, என்னை மறந்துவிடாதே! எளியேனை மறந்து விடாதே.

**பு**லைமாதருள் கிடுமாறவர் புணர்மாமறை யவரும்
முலைமாதருண் மறையோர்மகண் முலைபுல்லிய கலரும்
அலைமாதருள் கெவருந்திரு வமுதம்பெற விலையோ
மலைமாதருள் குமராவெனை மறவேலெனை மறவேல். 159

புலையர் குலத்து மகளிர் விரும்புகின்றவாறே அவர்களைக் கூடிய அந்தணர்களும், தாயர் பெற்றெடுத்த அருட்குணம் உடைய அந்தணர் குலத்தைச் சார்ந்த பெண்ணின் மார்பகத்தைத் தழுவிய சண்டாள இனத்தவரும், அலைபாயும் மனத்தை உடைய விலைமகளிரை நினைத்து இருப்பவர்களும் அருட்செல்வம் பொலியும் மேலான அமுத நிலையை அடையவில்லையா? மலைமகளாம் உமை அம்பிகையின் திருக்குமாரனே! என்னை மறந்துவிடாதே! எளியேனை மறக்கற்க.

**வி**திமீறிய பெயரும்புலை மிசையுந்தவ றுளரும்
பதிமீறிய பெயரும்பல பலகோதுசெய் தவரும்
திதிமீறிய கதிமேவினர் சிறியேனவை யுறினும்
மதிமீறிய குகனேயெனை மறவேலெனை மறவேல். 160

158. பயில் = நெருக்கம்; "மந்தியுமறியா மரன்பயிலடுக்கத்து" என்றார் திருமுருகாற்றுப்படை யினரும். மகளிர்செய்யுஞ் சைகை யென்றுங் கிளத்துவதுண்டு.

160. திதி = சிராத்தம்.

அறநூல் கூறும் விதிமுறைகளை மீறி நடந்தோர்களும், புலால் உண்ணும் குற்றத்தை உடையராக இருந்தோரும், வேதநெறி காட்டிய கடவுளின் வாக்கை மீறி நடந்தோரும், மற்றும் பல குற்றங்களைச் செய்தவர்களும், சிராத்தம் செய்யாமல் விடுவதால் நேரும் இழிந்த கதியை அடைந்தனர். சிறியேனாகிய யான் அத்தகைய தவறுகளைச் செய்திருந்தாலும், ஞானத்திறத்தில் மிகவும் உயர்ந்து விளங்கும் குகப்பெருமானே! எனை மறக்கற்க; மறக்கற்க.

சீர்வாய்பாடு பேதிக்கினும் ஓசைகெடாது நடப்பது.

ஓரைந்தையும் வென்றோர்நவி லுரையின்படி யேயிய்
ஈரைந்துகொ டேயுன்னடி யிணையேதொழு மெவரும்
ஊரைந்தினு முயர்திய்யொரு மூன்றெய்துவ ரேநார்
வாரைந்தொழின் முருகாவெனை மறவேலெனை மறவேல். 161

ஐம்புலன்களையும் வென்ற ஆன்றோர் கூறியுள்ள நெறிமுறைப்படியே, பத்துவிரல்களையும் சேர்த்துக்கொண்டு உனது இரண்டு திருவடிகளைத் தொழும் எவரும், பிரம்ம உலகு, திருமால் உலகு, உருத்திரன் உலகு, மகேசுவரன் உலகு, சதாசிவ உலகு என்னும் ஐந்தினும் மேம்பட்ட கந்த உலகில் சாலோகம், சாமீபம், சாரூபம் எனும் மூன்று முத்திநிலைகளையும் அடைவார்கள். உயிர்கள் மேல் கொண்டுள்ள அன்பால் படைத்தல் முதலான ஐந்தொழில்களையும் நிரலே செய்துவரும் முருகப்பெருமானே! என்னை மறக்கற்க; எளியேனை மறக்கற்க.

கருவிளங்கனி கருவிளங்கனி கருவிளங்கனி புளிமா.

இறைமறைமுடி வெனுமுறைகளி லிடைவருகவி படனம்
முறையொடுபணி யொருபுனிதமு முயலுநியம மிலராய்
நிறை பொருணமை யலதிலையென நினதடிமலர் பரவாக்
கறையருறுவ தவலமெனது கறைதெறுகர வயிலோய். 162

இறைநூலாகும் வேதத்தின் முடிவுப்பகுதியாம் உபநிடதங்களில் இடையிடையே வரும் மந்திரப்பாடல்களை முறையாகப் பயின்று மனனம் செய்து ஒப்பற்ற புனிதத்தன்மையை அடைய முயலும் நியமம் இல்லாதவர்களாகி "எங்கும் வியாபித்து நிறைந்துள்ள கடவுள் நம்மைத் தவிர்த்து வேறு எதுவும் இல்லை; நாமே கடவுள்"

என விபரீதமாகக் கருதிக்கொண்டு, உனது திருவடித் தாமரைகளை வணங்காத குற்றத்தை உடையோர் பெறக் கூடியது துன்பமே தவிர வேறு எதுவும் இல்லை. எனது குற்றங்களையெல்லாம் போக்கி அருளும் வேற்கரத்து இறைவனே!

கருவிளங்கனி.

தனனதனன தனனதனன, தனனதனன தனனதனன.

மருணைவுறமெய் கருதுமறிஞர் மனமுணடன மிடுகுருபர
கருணையிறைவர் புதல்வபெரிய கலைஞரினிது புகழறுமுக
அருணைவளரு மருணகிரியி னமலபரம சரவணபவ
இருணைவுறவு னடியைநினையெ னிடர்தொலைவுற வருடியருடி. 163

மயக்க அறிவு அடியோடு நைந்துவிலக, உண்மையைச் சிந்திக்கும் அறிஞர்களின் இதயத்துள் நடனம் செய்யும் குருபரனே! கருணைக்கு இருப்பிடமான சிவபெருமானின் திருக்குமாரனே! பெரிய பெரிய வேத விற்பன்னர்களும் கலைகளில் வல்லோரும் இனிதே புகழ்ந்து துதிக்கும் அறுமுகப் பரமனே! அருணாசலத் தலத்தில் வாழ்ந்த அருணகிரிப் பெருமானின் அமல நாயகனே! பரமனே! சரவணபவ என்னும் ஆறெழுத்துக்களைத் திருப்பெயராகக் கொண்டுள்ளவனே! உனது திருவடியை நினைக்கும் எனது ஆணவ இருள் சிதைந்து ஒழியவும், எனது துன்பங்கள் நீங்கவும் மேன்மேலும் அருள்புரிவாயாக.

"நேரீற்றியற்சீர், வெண்கலியுள்ளுங் கொச்சகத்துள்ளும் வருதலும் **** செய்யுளோத்துள்ளே சொல்லப்பட்டன" என யா-காரிகையொழிபியன் மூன்றாஞ் செய்யுளுரையிருத்தலினாலும், கொச்சகக்கலி வெண்டளை பெற்றும் வருகின்ற வழக்கிருத்தலினாலும் இக்கலியியலில் வெண்டளை பெற்றுள்ள 100, 101 ஆம் செய்யுள்கள் : தரவுகொச்சகக்கலிப்பா வாகாவோவெனின்; கூறுதும் - வெண்டளை யான்வரு தரவுகொச்சகத்திலும் கலிக்குரிய நிரைமுதல் நேர்முதலாகிய காய்ச்சீர்கள் பொருந்துகின்ற வெண்சீர் வெண்டளையும் வரவேண்டு மென்றல் மரபாகும். ஆகவே, மேலெடுத்துக்கொண்ட விரண்டு செய்யுளுங் காய்ச்சீர் பொருந்தா இயற்சீர் வெண்டளையானே வந்தமையின்; அவை தரவு கொச்சகக்கலியெனப் பெயர் பெறாமற் கலிவிருத்தமெனப் பெயர் பெறுதலியைபேயென்க. மேலுரையில் "வருதலும்" எனற்கு நேரீற்றியற்சீராகிய மாஞ்சீர் முற்றும் வரு வழக்குண்டெனப் பொருள் கொள்ளற்க. அற்றாகலினன்றே "துள்ளலோசையிற் சிறிதும் வழுவாது நாற்சீர் நாலடியான் வருவது தரவு கொச்சகக்கலிப்பா வென்றும், துள்ளலோசையிற் சிறிது வழுவி நாற்சீர் நாலடியான் வருவது கலிவிருத்த மென்றுந் தெரிந்துணரப்படு மெனக்கொள்க" என மேலைக்காரிகை யுறுப்பியல் 14ஆம் பாட்டுரையிலும் விளக்கப்பட்டிருக்கிறது. "மாஞ்சீர்

கலியுட் புகாகலிப் பாவின் விளங்கனி வந்-தாஞ்சீ ரடையா வகவ லகத்துமல் லாத வெல்லாந்-தாஞ்சீர் மயங்கும்" எனும் மேற்படி காரிகையின்படி, மாஞ்சீரும் விளங்கனிச்சீருமல்லாத காய்ச்சீரும் விளஞ்சீரும் வெண்டளைபெறாத தரவுகொச்சகக் கலியுட்புகுங்காலத்துங் காய்ச்சீர்கட்கு விளஞ்சீர்கள் குறைவாகவேண்டுமென்ற லினிது பொருந்தும், இக்கலியியல் 18-வது செய்யுள்போலச் சமமாயினு மாகலாம். இன்றி விளஞ்சீர்மிகுந்து ஓசையளவாய் நிகழின் அதனைக் கலிவிருத்த மெனலே மேல்விதி யுரைகட்கு மியைபென்க. நிற்க.

"அளவடி நான்கின கலிவிருத் தம்மே." எனும் யாப்பருங்கலச் சூத்திரவழி யிவ்வியற் பாவினத்துள் வந்த கலிவிருத்தமெல்லாம் : இருபதெழுத்தின் மிக்க நாற்சீ ரடிப்பாவும், இருபத்துநான்கெழுத்தின் மிக்க நாற்சீ ரடிப்பாவினமு மில்லையென் றுணருமாறு, யாப்பருங்கலச்செய்யுளோத்து விருத்தியுரையில் விளக்கியபடியே, எட்டெழுத்து முதலிருபத்துநான்கெழுத்தின் காறு மளவா யுயர்கின் றவடிக்ளையே யுடையன. 162, 163-ஆம் விருத்தங்களிலுள்ள கனிச்சீர்களைப் புளிமா புளிமா வெனப் பிரிக்கில் முன்னையது எழுசீர்க்கழிநெடிலடிவிருத்தங்களுள் 69-வது செய்யுளளவும், பின்னையது எண்சீர்க்கழிநெடிலடி விருத்தங்களு ளொன்றுமாம்.

கலிப்பாவின முற்றிற்று.

3வது கலியியன் முற்றிற்று.

ஆக இயல் மூன்றினும் போந்த திருச்செய்யுள் 447

# 4வது வஞ்சியியல்.

1. இருசீரான் வரும்

## குறளடி வஞ்சிப்பா.

ஒன்றிய வஞ்சித்தளை பெற்று, ஏந்திசைத்
தூங்கலோசைத்தாய் வருவது.

இலகம்பர மிலையென்றெவர்
சொலினும்பல துதைபேருல
குளதாலது வுளதென்றறி
உளமாதவ ருளமேவொரு
சிவனேநிறை திருவேலிறை
யவனேயெனை யணைவேளென
நினையென்னையு நினதொள்ளருள்
துனைவன்பொடு தொடராதினி-வாளா
இருக்கவோர் நீதி யேது
திருக்கிளர் குழகா செப்பியருளே. 1

விளங்கும் வெளி எனும் ஆகாயம் இல்லை என எவர் கூறினாலும் பலவாக நெருங்கித் திகழும் பெரிய உலகங்கள் உள்ளதால் அந்த உலகங்கள் இருப்பதற்கு இடம் கொடுக்கும் ஆகாசம் உள்ளது என அறிகின்ற உள்ளமுடைய மகா முனிவர்களின் உள்ளத்தே பொருந்தி விளங்கும் ஒப்பற்ற சிவபெருமானே; ஆற்றல் நிறைந்து விளங்கும் திருமிக்க வேல்இறைவன்; அவனே என்னை இரண்டறக் கலந்து கொள்ளும் செவ்வேள் என உறுதியாக நம்பி இருக்கும் எளியேனையும், நினது ஒள்ளிய திருவருள் விரைவாகக் கிளர்ந்தெழும் அன்புப் பெருக்குடன் தொடர்ந்து வராமல் சும்மா இருக்க ஒரு நியாயமும் உண்டோ? அழகுநலம் மிளிரும் இளையோய்! கூறி அருள்.

இது, "வாளா" என்னுந் தனிச்சொற்பெற்று இரண்டடி யாசிரியச்சுரிதகத்தாலிற்றது. கனிமுன் நிரை வருவது ஒன்றிய வஞ்சித்தளை.

1. துனைவு = விரைவு; சே - திவாகரமும், பி - நிகண்டும் பார்க்க.

ஒன்றாத வஞ்சித்தளை பெற்று,
அகவற்றூங்க லோசைத்தாய் வருவது.

ஈராயிர மோர்நாவனும்
ஓராயிர மோங்குன்பெயர்
மாண்போதிடு வானோவவை
நான்பேசவு நண்ணுங்கொலை
ஏனற்பர ணேழைக்கினி
தாநட்புடை யாதீயளி-யருளால்
கயிலைக் கபாடந் திறக்கச்
செயுமற் புதவருட் சிவசே யவனே. 2

இரண்டாயிரம் நாக்குகளை உடைய ஆதிசேடனும் ஆற்றல்மிக்குத் திகழும் உனது ஓராயிரம் திருப்பெயர்களின் மாண்பை எடுத்துரைக்க வல்லவனோ? அந்தத் திருப்பெயர்களின் மாண்புகளை நான் பேசவும் இயலுமோ? பசுமை செறிந்துள்ள ஏனற்புனத்தே பரண்மீதிருந்த வள்ளிநாயகியிடம் இனிதான காதல் அன்பு கொண்டிருக்கும் ஆதிப்பொருளே! நினது அருள்திறத்தால் பிரம்மரந்திரத் தானத்தின் கதவைத் திறக்கச் செய்யும் அற்புதனே! அருள்மயமான சிவனே! செவ்வேள் பரமனே!

இது, "அருளால்" எனுந் தனிச்சொற்பெற்று, இரண்டடி யாசிரியச்சுரிதகத்தா லிற்றது. கனிமுன் நேர்வருவது ஒன்றாத வஞ்சித்தளை.

பலதளையும் விரவிப் பிரிந்திசைத் தூங்கலோசையான் வருவன.

அறிவே - ஓங்கேதமி லோர்மகிழ்ச்சி
வீங்காரியர் விரவெனையினி
நீங்காதுற நிறைவிசாக - நாளும்
காலா யுதவங் கதலியும் 3
வேலா யுதமும் விளங்கெழுந் தருளே.

சிவஞானம் மேலோங்கி நிற்கக் குற்றமொன்றும் இல்லாத ஓர் உவகை நிலை மிகுதியாக எழப்பெற்று விளங்கும் ஞானியர்களோடு கூடியுள்ள என்னை இனி ஒருபோதும் நீங்காமல் கலந்திருக்க, நிறைவான விசாகப்பெருமானே! கோழிக்கொடியும் வேலாயுதமும் நினது கரத்தில் விளங்க நாள்தோறும் என்முன் எழுந்தருள்க.

3. கதலி = கொடி யென்பதை "தேறு கொடிவாழைகதலி" எனு மூரிச்சொல் நிகண்டா லறிக.

இஃதடிமுதற்கண் "அறிவே" எனுஞ் சீர்க்கூனும், ஈற்றில் "நாளும்" எனுந் தனிச்சொல்லும் பெற்று, இரண்டடியாசிரியச் சுரிதகத்தா லிற்றது. இப்பாவில், "ஓங்கேதமில்" எனு நிரையீற்றுக் கனிச்சீர்முன் "ஓர்" என நேர்வருதலின் ஒன்றாத வஞ்சித்தளையும், "ஓர்ம கிழ்ச்சி" என்பது நேர் நேர், நேர் நேர் என வலகிடவு நிற்றலின் நேரொன்றாசிரியத்தளையும், அச்சீர் : நேர் நிரை நேர் என வலகிடவு நிற்றலிற் காய்ச்சீராகி யிரண்டாமடி முதற்சீராகிய நேரோடொன்றுங்கால் வெண்சீர் வெண்டளையும், அச்சீராகிய நேர் நேர் நிரைக் கனிச்சீர்முன் "விர" எனு நிரை வருதலின் ஒன்றிய வஞ்சித்தளையு மாமாறுகாண்க. பிறவு மன்ன.

அடியிறுதியில், உகரவீற் றியற்சீர்க்கூன் பெற்று வருவது.

**மா**றாநானென் மதமணப்ப
வீறார்நீல மேனிகாட்டி
வருமாணவ வாரணம்போழ்
அருண்மாசிங்க மாமுருகா - வறிவு-நிமிர்வான்
என்மலம் போழ்நா ளெந்நாள்
நின்மல மலர்வாய் நீதிறந் துரையே. 4

மாறாமல் தொடர்ந்து எழும் 'நான்' எனும் மதம் தோன்றி மணம் செய்ய, வீறுபொருந்திய கரிய உடலைக் காட்டி மதர்ப்புடன் வரும் யானையைப் பிளக்கும் அருளாற்றல் மிகுந்த சிங்கமாம் பெரிய முருகையனே! எனக்குள் பூரண ஞானம் தோன்றி நிற்க, என் ஆணவ மலத்தைப் பிளக்கும் நாள் எந்த நாள்? நிர்மலமான உனது மலர்போன்ற வாயைத் திறந்து கூறியருள்.

இது, "அறிவு" என்னுங் கூனும், "நிமிர்வான்" என்னுந் தனிச்சொல்லும் பெற்று, இரண்டடி யாசிரியச்சுரிதகத்தா லிற்றது.

அடிநடுவி லசைக்கூன் பெற்று வருவது.

**ம**லமேவிய-வுயிர் மசகமுண்டாம்
புலமேவிடு-மெனிற் புன்கொசுகாம்
வலமேவிப-முறின் வயமாவாம்-அதனால்
அளவினின் னடிநா னடையக்
களவினின் னுளத்தே கருதுவே லோயே. 5

உடன்தோன்றிய மலம் (சகஜம்) எனப்படும் ஆணவம் மூடியுள்ள உயிரானது, கொசுவுக்கு உரிய புலம் எனப்படும் உடலைச் சாரும் எனில் அற்பமான கொசுவின் அளவே இருக்கும். வெற்றி மிகும் யானையின் உடலைச் சாரும் எனில் வலிமைமிக்க யானையின்

அளவே இருக்கும். அதனால் அளவுக்கு உட்படாத நினது திருவடிகளை நான் அடையும் வண்ணம் கபடமில்லாத நினது திருவுள்ளத்தே, வேற்பெருமானே! எண்ணம் கொண்டருள்க.

அடியிறுதியி லசைக்கூன் பெற்று வருவது.

ஆகமொன்றுயி ரருள்விழித்திடி-னரு
ளேகிநின்றிடு மிருள்விழித்திடி-னிரு
ளாகிநின்றிடு மவிர்கலைப்படி-னது
வாகநின்றிடு மன்றோவெனு-மறை-அதனால்
களிமுக மண்டலங் காட்டியிவ்
வெளியனைக் கோடி யென்னுளக் குகனே. 6

உடலைப் பொருந்தும் உயிர் அருள்வடிவத்தைக் காணின் அருளாகவே விளங்கும்; இருளைச் செய்யும் பொருளைக் காணின் இருளாகவே நின்றிடும்; விளங்கும் மந்திரமயமான கலைகளோடு பொருந்தினால், கலைகளின் மயமாகவே நின்றிடும் அன்றோ? - என ஆகமம் கூறும். (உயிர், எதைச் சார்ந்து நிற்கிறதோ, அதன் மயமாகவே, படிகம் போன்று விளங்கும் என்பது ஆகமக் கருத்து) என் உள்ளத்தே குடிகொண்டிருக்கும் குகப்பெருமானே! அதனால் நினது ஆனந்தமயமான முகமண்டலத்தைக் காட்டி எளியேனை ஏற்றுக் கொள்க.

(ஞானாமிர்த ஆசிரியர் வாகீச முனிவர் போன்று, சுவாமிகள் இப்பாடலில் மறை என்னும் சொல்லை ஆகமம் என்னும் பொருளில் வழங்கியுள்ளார்)

இந்த 5, 6-ஆம் பாட்டுக்கள் : "அதனால்" என்னுந் தனிச்சொற்பெற்று, இரண்டடி யாசிரியச்சுரிதகத்தா லிற்றன.

"அடிமுதற்பொருளைத் தானினிது கொண்டு - முடிய நிற்பது கூனென மொழிப" "வஞ்சியி னிறுதியு மாகு மதுவே - யசைகூனாகு மென்மனார் புலவர்' எனும் யா-காரிகையுரைவரு சூத்திரப்படி 3,5,6ஆம் செய்யுள்களில், ஆதி நடு இறுதியாக வந்தவாறு வருவதில் நடுவு மிறுதியு மசை கூனாய் வருதல் சிறப்பு. சீர்கூனாய் வரினும் 4-வது செய்யுளில் வந்தவாறு, உகரவிறுதியாகிய நேரீற்றியற்சீராயல்லது வேறு வகையாக வாராதென வறிக.

மான் பயந்தவொர் மகளும்
வான றுங்கய மகளும்
மேன்படுஞ்சும மிலைந்தென்
மேன்மிகுந்தயை மேவா
நீன்மயின்மிசை நின்பாங்-கிலகவே
வருமெழில் கண்டுநான் மகிழுமா
றருளலென் றோநீ யயில்வே லரசே. 7

சூரிய வேற்படை அரசே! தினப்புனத்தே மான் ஈன்ற மகளாம் வள்ளிநாயகியும், தேவலோகத்தே வாழ்ந்த பொலிவுமிக்க தெய்வயானையும் மணத்தாலும் அழகாலும் மேம்பட்ட மலர்மாலைகளை அணிந்து நினது இரு பக்கங்களிலும் விளங்க என்மேல் மிகுந்த கருணைகொண்டு நீலமயில் மேல் வரும் அழகைக் கண்டு நான் மகிழுமாறு நீ அருள்புரிதல் என்றோ?

பொன்விசும்பிறை புதல்வி தன்னுளம்
இன்புறும்படி யிணையினன் மணம்
புரிவானெழில் பொலியொருபரங்
கிரிமீதுயர் கிரிமகளொடு
வாலசந்திர மௌலிமாலயன்
கோலவந்தணர் கோவிபுதருங்- குழுமு
திருமணச் சவையிற் சிறந்த தெய்வப்
பொருளெனத் திகழ்ந்த புலவ
கருணையி னென்மலங் கழீஇ யருளே. 8

தேவலோகத்து அரசனாம் இந்திரன் வளர்த்த மகள் தெய்வ யானைப் பிராட்டியின் திருவுள்ளம் இன்புறுமாறு, இணையற்ற நல்ல திருமணத்தைச் செய்துகொள்வதற்காக, எழில்விளங்கும் திருப்பரங் குன்றத்தில், புகழ் உயர்ந்த மலைமகளுடன் இளம்பிறை சூடிய சடை முடியுடைய சிவபெருமான், திருமால், நான்முகன், தேவகுருவாம் பிரகஸ்பதி, தேவர்கள் முதலான அனைவரும் கூடியுள்ள திருமணச் சபையில், தெய்வச் சக்ரவர்த்தியாகச் சிறந்துள்ள முழுமுதற்கடவுள் என விளங்கிநின்ற ஞானமூர்த்தியே! நினது கருணைத் திறத்தால் எனது ஆணவம் எனும் அழுக்கைத் துடைத்து அருள்க.

இவ்விரண்டு செய்யுளும் முறையே "இலகவே" "குழுமு" எனுந் தனிச்சொற்கள் பெற்று, இரண்டடி மூன்றடி யாசிரியச் சுரிதகங்களா னிற்றன.

2. முச்சீரான்வரும்

## சிந்தடிவஞ்சிப்பா.

ஒருபூரண வறிவெனச்செறி யுனைமுதலாந்
திருவாவண மெனுங்கலைவரை திகழுமண்ட
மணிபோலொளி ராயிரத்தொடு மருவிருநான்
கணியார்சிவ லிங்கமாகவு மருண்மகேச
நிலைமாகண பதியயிற்குக னிர்க்குணஞ்சால்
நலவீசுர னாகவுநறுஞ் சாதாக்கிய
மதிலேயுறு சிவனாகவு மரியசத்தியில்
வதியோர்பொரு ளாகவுமதன் வலமிலங்கைந்
தெனுமாவண மிருக்குமேரு ரூபமாகவும்
நனவாறெனு மாவரணத்தி னல்லநிர்க்குணம்
உடையாமிய முகமூர்த்தியு மோங்குமேழில்
நடராசநிர்க் குணமூர்த்தியு நவையிலெட்டில்
உமைநாதனு மாகவுமுடி போதுமொன்பதில்
இமையோர்புக ழின்பவறிவி லிங்கமாகவும்
எணிமானச பூசைபுரியு மேமாப்பெனை
நணுமோநசை தீர்பெருந்தவர் நாயகநவி -னினையே
நம்பெனைக் கைவிடே னாளும்
அம்பிகை மகனா யவிர்சே யவனே. 9

## பதவுரை - முனைவர் S.P. சபாரத்தினம்

ஒரு பூரண அறிவு எனச்செறி உனை = ஒப்பற்ற நிலையில் பரிபூரண நிலை வாய்ந்ததாக விளங்கும் ஞான விண்ணாகவே எங்கும் வியாபித்துத் திகழும் உன்னை - முதலாம் திருவாவணம் எனும் கலைவரை = முதலாவது ஆவரணம் எனத் திகழும் எல்லை வரையிலும் - திகழும் அண்டமணிபோல் ஒளிர் ஆயிரத்தொடு மருவு இரு நான்கு அணியார் சிவலிங்கமாகவும் = பேரொளியோடு விளங்கும் சூரியன் போன்று திகழும் 1008 உருவங்களைக் கொண்டுள்ள அழகு மிக்க சிவலிங்க வடிவமாகவும் - அருண்மகேசநிலை கணபதி = அருட்பேறு தரும் மகேசுவர தத்துவ நிலையில் கணபதி வடிவாகவும் - அயில்குகன் நிர்க்குணம் சால் நல

9. ஆவணம் – ஆவரணம் என்பதன் மரூஉ; அரண், மறைவு எனும் பொருள் கொள்ளலாம். இமையோர் = விளக்கமுடையார்; இமை = விளக்கம்.

ஈசுவரனாகவும் = ஈசுவர தத்துவ நிலையில் சாத்விகம் முதலான குணங்களற்றுத் திகழும் வேற்படை ஏந்திய குக வடிவாகவும் - நறும் சாதாக்கியம் அதிலே உறு சிவனாகவும் = சாதாக்கிய தத்துவ நிலையில் திகழும் சிவ வடிவாகவும் - சத்தியில் வதியோர் பொருளாகவும் = சத்தி தத்துவ நிலையில் திகழும் நாதவடிவான அதீத வத்துவாகவும் - அதன் வலம் இலங்கு ஐந்து எனும் ஆவணம் இருக்கும் ஏர் உருபமாகவும் = முதலாம் ஆவரணத்தைச் சூழ்ந்து விளங்கும் ஐந்து ஆவரணங்களில் வெளிப்பட்டு நிலைத்திருக்கும் இத்தகைய எழில்மிக்க வடிவாகவும் (அதாவது இரண்டாவது ஆவரணத்தில் கணபதி, மூன்றாவது ஆவரணத்தில் வேற்குகன், நான்காவது ஆவரணத்தில் சிவம், ஐந்தாவது ஆவரணத்தில் சத்தி தத்துவ நாத பிம்பம் எனும் இந்த எழில் வடிவங்களாகவும்) - நனவு ஆறெனும் ஆவரணத்தில் நல்ல நிர்க்குணம் உடைய யாமிய முக மூர்த்தியும் = விளக்கத்துடன் பொலியும் ஆறாவது ஆவரணத்தில் நிர்க்குணச் சிறப்புமிக்க தக்ஷிணா மூர்த்தி வடிவாகவும் - ஏழில் நடராச நிர்க்குண மூர்த்தியும் = ஏழாவது ஆவரணத்தில் நிர்க்குணச் சிறப்பு மிக்க நடராச வடிவாகவும் - நவையில் எட்டில் உமைநாதனும் ஆகவும் = குற்றமற்ற எட்டாவது ஆவரணத்தில் உமா மகேசுவர வடிவமாகவும் - முடிவு ஓதும் ஒன்பதில் இமையோர் புகழ் இன்ப அறிவு இலிங்கமாகவும் = முடிவாகத் திகழும் ஒன்பதாவது ஆவரணத்தில், அருள் ஞான விளக்கம் மிக்க சித்தர்களும் ஞானியர்களும் போற்றித் துதிக்கும் சச்சிதானந்த மூர்த்தியாகவும் அல்லது ஞானானந்த லிங்க வடிவாகவும் - எணி மானச பூசை புரியும் ஏமாப்பு = இவ்வாறு நிரலே ஆழ்ந்த சிந்தனையுடன் தியானித்து மனத்தளவால் செய்யப்படும் மானசிக பூசையை எவ்விதக் குறைவும் இன்றி முழுமையாகச் செய்யும் இன்பக் களிப்பு எனை நணுமோ, நவில்! - அடியேனாகிய எனக்கும் வாய்க்குமோ? கூறியருள்க.

நசை தீர் பெருந்தவர் நாயக = தேகக் குற்றத்தையும் ஆன்மக் குற்றத்தையும் நீங்கியுள்ள பெரிய தவச் செல்வர்களுக்கெல்லாம் தலைமைத் தெய்வமாக விளங்குபவனே!

நினையே நம்பு எனைக் கைவிடேல் = எப்பொழுதும் உன்னையே நம்பியுள்ள என்னைக் கைவிட்டு விடாதே.

நாளும் அம்பிகை மகனாய் அவிர்சேயவனே = எப்பொழுதும் சிவசக்தியாகிய சிவகாம சுந்தரி அம்பிகையின் திருக்குமாரனாக விளங்கும் செவ்வேள் பெருமானே!

## பொழிப்புரை

பரிபூரண நிலையில் ஒப்பற்ற ஞானவெளியாகவே எங்கும் வியாபித்து விளங்கும் உன்னை முதலாவதான பொலிவுமிகுந்த ஆவரணத்தில் பேரொளிச் சூரியன் போன்று திகழும் 1008 சிவலிங்க வடிவாகவும், இரண்டாம் ஆவரணத்தில் கணபதியாகவும், மூன்றாம் ஆவணரத்தில் வேற்படை ஏந்தியுள்ள குகனாகவும் நான்காம் ஆவரணத்தில் சிவவடிவாகவும், ஐந்தாம் ஆவரணத்தில் நாதப்பிரம்ம மாகவும், ஆறாவது ஆவரணத்தில் நிர்க்குணமான தக்ஷிணாமூர்த்தி வடிவாகவும், ஏழாவது ஆவரணத்தில் நிர்க்குணமான நடராஜ வடிவாகவும், எட்டாவது ஆவரணத்தில் உமாமகேசுவர வடிவாகவும், ஒன்பதாவது ஆவரணத்தில் ஞான - ஆனந்த லிங்க வடிவாகவும் தியானித்து மானஸ பூஜை செய்வதால் வரும் இன்பக் களிப்பு எளியேனுக்கும் வாய்க்குமோ! குற்றமற்றுள்ள தவச் செல்வர்களின் தலைவனே! கூறியருள். எப்பொழுதும் உன்னையே நம்பியுள்ள என்னைக் கைவிட்டுவிடாதே. உமை அம்பிகையின் திருச்செல்வக் குமாரனாக எப்பொழுதும் விளங்கும் செவ்வேள் பரமனே!

## குறிப்பு

இத்திருப்பாட்டில் நம் சுவாமிகள் ஓர் அற்புதமான வழிபாட்டு முறையையும் ஒன்பது ஆவரணங்களின் நடுவில் தத்துவாதீதமாக முருகப் பெருமானைத் தியானிக்கும் முறையையும் வெளிப்படுத்தி அருள்கிறார். இதுபோன்ற ஒரு தியான பாவனையைச் சுவாமிகளைத் தவிர மற்ற யாராலும் வெளிப்படுத்த முடியாது. இது போன்ற அரிய பெரிய உண்மைகளையும் ரகசியங்களையும் சுவாமிகள் பல்சந்தப் பரிமளம் வாயிலாக அள்ளி அள்ளிக் கொடுத்து இருக்கிறார்கள். குறிப்பாகச் சுவாமிகளின் அடியார்களும் பொதுவாகத் தமிழர்களும் இவற்றையெல்லாம் ஐயம் திரிபற எப்பொழுது எவ்வாறு உணர்ந்து கொள்ளப் போகிறார்கள்?

சுவாமிகள் அருளிய பாடல்களின் நுட்பங்களை நன்கு உணர்ந்து கொள்வதுதான் அவருக்குச் செய்யும் தூய வழிபாடாகும்.

ஓந்தாரகப் பொருளுரைத்ததொவ் வாதெனப்படர்
பூந்தாமரைப் போதனைச்சிறை புகவிடுத்தருள்
ஆஞ்சீருரு வோடிருந்தய னார்கிருத்தியஞ்-செய்த
ஐயநின் னருணா டடியேன்
பையுளி லருட்கடல் படியநன் கருளே.

10. பையுள் = துன்பம், நோய்.

'ஓம் எனும் பிரணவத்திற்குப் பொருள் கூறிய முறை பொருத்தமானது அன்று - என்பதால், விரிந்த தாமரைப் பூவாம் இருக்கையைக் கொண்டுள்ள நான்முகனைச் சிறைக்குள் இருக்குமாறு செலுத்தி, அருள்மயமான சீரிய படைப்புக் கோலம் தாங்கி இருந்து நான்முகனுக்குரியதான படைப்புத் தொழிலைச் செய்தருளிய ஐயனே! நினது அருளை நாடி இருக்கும் அடியேன், துன்பமற்ற அருட்கடலில் படிந்து திளைக்குமாறு இனிதே அருள்புரிவாயாக!

[மொழிதிருப்பு]

**வசைகுழுமு** மெனையருட்பெரு வாரியெனிலொ
டிசையிதன்மு னெமுசீர்மொழி திருப்பிமொழித - லெந்நாள்
உனைநினை வோர்க்கு வீடு
நனியெளி திலையோ ஞாங்க ரரசே. 11

'இகழ்ச்சிக்குரிய குற்றங்கள்' சூழ்ந்துள்ள எளியேனை, இத்திருப்பாட்டின் முதற்சீராகிய **வசைகுழுமு** என்ற மொழியைத் திருப்பி, "அருட்கடலாகிய என்னில் **முழுகுசைவ**" எனக் கூறும் நாள் எப்போது நிகழும்? வேற்படை அரசே! உன்னைத் தியானிப்போர்க்கு **வீடுபேறு** மிகவும் எளிதே அன்றோ!

இங்குவந்த, 9,10,11ஆம் பாட்டுகள் : முறையே "நினையே" "செய்த" "எந்நாள்" எனுந் தனிச்சொற்கள் பெற்று, இரண்டடி யாசிரியச் சுரிதகங்களா லிற்றன. இறவே, வஞ்சிப்பா : வெள்ளைச் சுரிதகத்தா லிறாதென்ப தறிக.

யா-காரிகையில், "வஞ்சிக்கு மூன்றடி... யிழிபு" எனக் கூறியிருக்க, இங்குவந்த 11-வது செய்யு ளிரண்டடிச் சிறுமை பெற்றதென்னை யெனின்; "வெண்பா வாசிரியங் கலியே வஞ்சியென நுண்பா வுணர்ந்தோர் நுவலுங் காலையிரண்டு மூன்று நான்கு மிரண்டுந் - திரண்ட வடியின் சிறுமைக்கெல்லை" என மேலைக்காரிகை யுரைவரு சூத்திர மிருத்தலின்; இரண்டடிச்சிறுமையும் பெறுமென்க. அடிப்பெருமை யெத்துணைத்தென்னின்; "உரைப்போருள்ளக் கருத்தினளவே பெருமை" என்க. குறளடியானுஞ் சிந்தடியானும் வராநின்ற இருதிறவஞ்சிப்பாவிலும், வஞ்சியுரிச்சீராகிய கனிச்சீரோடு பூச்சீர் நிழற்சீரெனும் பொதுச்சீர் பதினாறும் வருமென்பர் வண்டமிழர்.

வஞ்சிப்பா முற்றிற்று.

# வஞ்சிப்பாவினம்.

### 1. ஒருபொருண்மேன் மூன்றடுக்கிவரும்

## வஞ்சித்தாழிசை.

மாங்காய் புளிமாங்காய்.

ஆறொன்று மணிவேணி
வீறொன்று விழிவந்தோய்
சேறொன்று னடியன்றி
வேறொன்று விழையேனே;

கவினொன்று கனலாடி
சவியொன்று விழிவந்தோய்
துவரொன்று னடியன்றி
இவணொன்று விழையேனே;

நீலொன்று நிகழ்கண்டன்
பாலொன்று விழிவந்தோய்
ஓலொன்று னடியன்றி
மேலொன்று விழையேனே. 12

கங்கையாறு பொருந்தியுள்ள அழகிய சடைமுடி உடைய சிவபெருமானின் வீறுமிக்க நெற்றிக் கண்ணிலிருந்து வெளிப்பட்டு வந்தவனே! இனிமை பொருந்தியுள்ள உனது திருவடி அல்லாமல் வேறு ஒன்றையும் விரும்பமாட்டேன். கவின் செறிந்த நெருப்பின் நடுநின்று ஆடும் சிவபெருமானின் ஒளிபொருந்திய நெற்றிக் கண்ணிலிருந்து வெளிப்பட்டு வந்தவனே! பவழம் போன்று சிவந்துள்ள நினது திருவடி அல்லாமல், இவ்வுலகில் வேறு ஒன்றையும் விரும்பமாட்டேன். நீலநிறம் பொருந்தியுள்ள கழுத்தை உடைய சிவபெருமானின் நெற்றியில் திகழும் கண்ணிலிருந்து வெளிப்பட்டு வந்தவனே! சந்தபேதங்கள் சூழ்ந்துள்ள நினது திருவடியை அன்றி, மேம்பட்டதாக வேறு ஒரு பொருளையும் விரும்ப மாட்டேன்.

12. அணி= அழகு, பெருமை. சேறு = இனிமை.

புளிமாங்காய் புளிமாங்காய்.

பலதுன்பு பயினோய்கள்
வலிகொண்டு வருமேனும்
கலிவென்ற முருகன்கால்
மலரென்று மறவேனே;

சலமுந்து சமனார்மொய்
மலையஞ்ச வருமேனும்
கலைதந்த குமரன் கால்
மலரென்று மறவேனே;

உலகுந்தி யொழிமாறெல்
மலிசண்டன் வருமேனும்
மலருந்து மயிலன்கால்
மலரென்று மறவேனே. 13

பலவகையான துன்பங்களும், நெருங்கிச்சூழும் நோய்களும் ஆற்றல் மிக்கனவாய் எனைச் சூழ்ந்துகொள்ள வருவதாக இருந்தாலும் காலத்தின் ஆற்றலை வென்றுள்ள முருகனின் திருவடி மலர்களை என்றென்றும் மறக்க மாட்டேன்;

தணியாக் கோபம் கொண்டு காலன், திரண்டுள்ள மலைகள் நடுங்க எனை நெருங்கி வந்தாலும், பல்வேறு ஞான நிலைகளைத் தந்தருளிய குமரப்பெருமானின் திருவடிமலர்களை ஒருபோதும் மறக்கமாட்டேன்;

உலகமாகிய ஆதாரம் ஒழியுமாறு இரவுபோலும் உடல்மிகுந்த இயமன் என்னை நெருங்கி வருவதாக இருந்தாலும், மலர்கள் குவிந்திருக்கும் வேலவனின் திருவடி மலர்களை என்றைக்கும் மறக்கமாட்டேன்.

இச்செய்யுளிரண்டும், "குறளடி நான்மையிற் கோவை மூன்றாய் - வருவன வஞ்சித் தாழிசை தனிவரிற் -றுறையென மொழிப துணிந்திசி னோரே" எனும் யாப்பருங்கலச் சூத்திரவழியே வந்தன.

13. சலம் = தணியாக் கோபம். எல் மலி சண்டன் = இரவுபோலும் உடல் மிகுந்த இயமன்.

## 2. குறளடித்துறை யெனும்
## வஞ்சித்துறை.

தேமா கருவிளம்.

**வானோர் வழிபடு**
**கோனே குமரவுன்**
**தேனார் திருவடி**
**தானே தனிநிலை.** 14

தேவர்கள் அனைவரும் வழிபடுகின்ற தேவச்சொர்க்கச் சக்ரவர்த்திப் பெருமானே! குமரனே! தேன்மலர்கள் சூழ்ந்துள்ள உனது திருவடி நிலையே, அனைத்தினும் உயர்ந்ததான தனித்துவம் வாய்ந்த பெருநிலை ஆகும்.

தானா தனதன.

**தீயார் தெறுகுக**
**மாயா மகியலை**
**நாயே னலமுற**
**வீயா விறலருள்.** 15

தீயோர்களாகிய அசுரர்களை அழிக்கும் குகப்பெருமானே! மாயையிலிருந்து தோன்றிய இப்பூமியில் அலைந்து திரியும் எளியேன் நினது அத்துவிதக் கலப்பென்னும் நலம் உறுமாறு, அழியாத மனோபலத்தை வழங்கி அருள்.

புளிமா கூவிளம்.

தனத்த தானன.

**செனித்த சீவருள்**
**மனத்தின் மாவொளி**
**மினுக்கும் வேலவ** 16
**எனக்கு மீயொளி.**

உடலெடுத்துள்ள உயிர்களின் உள்மனத்தில் பேரொளி வீசித் திகழும் வேலவனே! எளியேனுக்கும் பேரொளிப் பொலிவை வழங்கி அருள்.

தேமா கூவிளம்.

ஓர்ப்பா ருண்ணசை
தீர்த்தாள் சேயினைப்
பார்ப்பார் பந்தனம்
ஆர்க்கா தென்றறி. 17

தன்னைச் சிந்தித்து வணங்கும் அடியார்கள் கொண்டுள்ள விருப்பங்களை நிறைவேற்றி அருளும் செவ்வேள் பரமனைத் தரிசிப்போர்களை பந்தங்கள் எவையும் கட்டுப்படுத்தித் துன்பம் விளைவிக்காது என அறிக.

கூவிளம் புளிமா.

எங்கணு மிலகேண்
அங்கர வயில்வேள்
சங்கமர் தடையை
யுங்கொள வுளதோ. 18

எங்கும் நிறைந்து விளங்கும் பெருமையும் அழகும் பொருந்தியுள்ள வேற்படையை அழகிய கரத்தில் ஏந்தியுள்ள செவ்வேள் பரமனின் அடியார் திருக்கூட்டத்தினர் மேற்கொள்ளும் செயல் தடைபட்டு நிற்கவும் வழி உண்டோ?

இந்த 18-வது செய்யுள் : "தந்தன தனனா" எனுங் குழிப்புப் பெறாதோ வெனின்; பெறாதென்க. நியாயம் - "தடையை" எனுஞ் சீரிலுள்ள வீற்றைகாரம், நெடிலேயாயினும் அது : ஆ-ஈ-ஊ-ஏ-ஓ எனு நெடில்களைப் போலப் பாட்டகத்து நீண்டொலியா நீர்த்தாகலின். ஆகவே அத்தடையை யென்பதி னிடையிலுள்ள ஐகாரங் குறுகியவாறே யதனீற்றைகாரமுங் குறுகி, "தனன" எனுங் குழிப்பே பெறும்; அஃதிங் கேலாதென்க. இது போலவே நெடிலாகிய ஔகாரமு மாண்டு நீண்டொலியா நீர்த்தென்க. "மூன்றுயி ரளபிரண் டாநெடி லொன்றே - குறிலோ டையௌக் குறுக்கம்" என நன்னூ லுரைக்குமாற்றானும், "ஐகார நைவே லோருங் குறிலியல்" - என யா-காரிகை கூறுமாற்றானுஞ் செய்யுளிடையில் வரு மைகாரங் குற்றெழுத்தேபோலக் குறுகி நின்று குறின்மாத்திரையே பெறுமென்றறிக. சில விடங்களில் அவ்வைகாரந் தன்னெடிற்றன்மை குன்றாமல் நேரசையாயு நிற்கும். உதாரணம் : கலியியல் 112-ஆஞ் செய்யுண் மூன்றாமடியினது மூன்றாஞ்சீர் போல விந்நூற்கண்ணே பலவாம். இவ்வாறே ஔகாரமுமாம். உதாரணம் : வெள்ளியல் 118-ஆம் செய்யுளீற்றடியினது மூன்றாம் நான்காஞ் சீர்கள்போலப் பலவாம். இவ்வௌகார நடை; அவ்வென வியைவதாய், "தை" எனுங் குழிப்பிற் சேர்வதாயுளது. இது போல ஆய்தம் புகுந்த மொழியும், "தைய" எனுங் குழிப்பிற் சேருமெனினும், அது குன்றிய வோசைத்தாம்.

17. ஓர்ப்பார் = மனத்திடனுடையார். பொறுமையாள ரென்றும் புகலலாம்.

கூவிளம் விளம்.

புங்கவர் புகழொரு
மங்கள மழவிறை
எங்கவ ரெண்ணினும்
அங்கெழு தருமறி. 19

தேவர்களும் உயர்ந்த ஞானியர்களும் புகழ்ந்து துதிக்கும் ஒப்பற்ற மங்களகரமான இளம் கடவுளை எங்கு எவர் நினைத்தாலும் அங்கே எழுந்தருள்வான் என்பதை அறிக.

தேமா புளிமா.

அள்ளா ரயிலன்
புள்ளார் புரிவன்
கள்ளார் கழலே
உள்ளா ருவகை. 20

கூரிய வேற்படை ஏந்தியவன், மயில்மேல் விளங்கும் அன்புடையான் என விளங்கும் முருகப்பெருமானின் தேன்மலர்கள் நிறைந்துள்ள திருவடிகளை உள்ளத்தில் கொண்டுள்ளோர் உவகை உள்ளவர்களாகத் திகழ்வார்கள்.

எஃக னெணார்பூ
வெஃகல் விடாருள்
அஃக லறார்வீ
டெஃகி யிராரே. 21

வேல் இறைவனைத் தியானிக்காதவர்கள் மண்ணாசையிலிருந்து விடுபடமாட்டார்கள்; மனத்தைச் சுருக்கி வைக்கும் குற்றங்களிலிருந்து நீங்காதவர்கள் உயர்நிலையாகிய முத்தித் தானத்திற்கு ஏறிச் செல்ல மாட்டார்கள்.

பத்தர் குழாமும்
சித்தர் குழாமும்
சத்தி விசாகன்
வித்தை யுளாமே. 22

21. வெஃகல் = விருப்பு. எஃகல் = ஏறுதல்; "எஃகலு மெக்கலு மிவர்தலு மேறுதல்" என்பது சே – திவாகரம்.

அடியார்களின் திருக்கூட்டச் சேர்க்கையும் சித்தர் பெருமக்களின் திருக்கூட்டச் சேர்க்கையும், வேற்படை ஏந்திய விசாகனின் அருட்செயலால் அமைவனவாகும்.

இந்த 22-வது தூக்கடிகளில், மோனையெழுத்தேனும், மோனையினவெழுத்தேனும் வரவில்லை. இதுபோலவே, பல்லோர் பாடிய வஞ்சித்துறை பலவு நடைபெற்றனவென்பதை யுணர்த்துவானிவ்வொரு செய்யு ளவ்வாறு சொலப்பட்ட தென்க.

புளிமா புளிமா.

கருள்கீழ் கதிர்வேல்
முருகே முனுவோர்
ஒருபே ரொளியை
அருளா லறிவார். 23

மூல இருட்டாகிய ஆணவத்தைப் பிளக்கும் கதிர்வேல் முருகனை நினைப்போர் அவனது ஒப்பற்ற பேரொளி நிலையை, அவனது அருளால் நன்கு அறிபவர்களாக ஆவர்.

தேமா தேமா.
தையா தையா.

பொல்லார் பொல்லான்
நல்லார் நல்லான்
எல்லே மில்லான்
வல்வேல் வல்லான். 24

இரவு எனவும் பகல் எனவும் வரும் காலபேதங்களைக் கடந்தவனும் வலிய வேற்படை ஏந்தும் ஆற்றல் மிக்கவனும் ஆகிய முருகப்பெருமான் பொல்லாதவர்களுக்கும் பொல்லாமை தந்து காப்பாற்றுவான்; நல்லார்களுக்கு நன்மை தந்து காப்பாற்றுவான்.

மண்ணாண் மன்னன்
விண்ணாள் விண்ணன்
கண்ணாள் கண்ணெண்
கண்ணாள் கண்ணன். 25

24. எல்லேம் = பகலும் இரவும்; ஏமம் ஏம் எனநின்றது.

25. கண்ணாள் = நாமகள். கண் = ஞானக்கண்; எண் கண் = ஒரு கேத்திரம். கண்ணன் = ஞானக்கண்ணன்.

நிலவுலகை ஆளும் மன்னனிடமும், தேவலோகத்தை ஆளும் இந்திரனிடமும் தனது சக்தியைப் பதித்திருப்பவன்; நாமகளுக்குக் கண்போன்று இனியவன்; எண்கண் எனும் திருத்தலத்தை ஆளும் ஞானக்கண் உடையோன் - எம்பெருமான் முருகன்.

விளம் காய்.

தனதன தனதானா.

ஒருநினை வுடனேயோ
முருகனை முனினானீ
கருதிய களிதானே
மருவுமை மனனேகாண். 26

மென்மையான மனமே! ஒருமுகப்பட்ட நினைவுடன் முருகப்பெருமானைத் தியானித்தால் நீ கருதியிருக்கும் பேரின்பநிலை உறுதியாக உன்னை வந்து அடையும். உணர்ந்துகொள்.

[இதுமுதன் மூன்றுதுறையுங் கொம்பில்லாச்செய்யுள்]

நாரணன் ஞானியரன்
காரணர் கான்முளைதான்
ஆரண னாலடியான்
பூரண புங்கவனால். 27

நாரணன், நான்முகன், ருத்திரன் எனும் மூவர்க்கும் காரணராகிய சிவபெருமானின் திருக்குமரனே வேதம் அருளியவனாகவும் கல்லாலின் கீழே உள்ள தக்ஷிணாமூர்த்தியாகவும் விளங்கும் பரிபூரணன்; மிகவும் உயர்ந்தவன்.

உரைமன முள்ளடங்கா
மரைமுக மாமுருகன்
உரைமன மூக்கமுறப்
பரவுநர் பால்வருவான். 28

வாக்கிற்கும் மனத்திற்கும் அடங்காதவனும் தாமரைமலர் போன்ற முகம் உடையவனுமான பெருமைக்குரிய முருகன், துதிக்கும் மனமானது மேன்மேலும் ஊக்கம் கொள்ளுமாறு வேண்டி வணங்குவோரிடம் எளிவந்து நின்று கருணைபாலிப்பான்.

தனதன தனதல்லா.

நிதநனி நினைநல்லார்
இதயமு ளிலகுள்ளான்
நதிசுத னலிவில்லான்
மதமுளர் மனநில்லான். 29

நாள்தோறும் முறைப்படி நன்கு தியானிக்கும் நல்ல அடியார்களின் இதய நடுவண் வெளிப்பட்டு நிற்கும் கருணை உள்ளம் உடையவன்; கங்கை நதியின் குமாரன்; அழிவில்லாதவன்; செருக்கு உள்ளவர்களின் மனத்தில் வெளிப்படாமல் விலகிநிற்பான்.

கருவிளங்காய்.

மணியனையான் மலரொளியோன்
துணியனையான் சுடரயிலோன்
பணியுடையார் பழமலமாப்
பிணியடையார் பெரிதடைவார். 30

தெய்வங்களுக்குள்ளே மாணிக்கம் போன்று உயர்ந்தவன்; எங்கும் மலர்ந்து பரவும் ஒளிப்பெருக்கு உடையவன்; கஞ்சுகப்பான்மை எனும் நியாயப்படி அடியார்களைச் சூழ்ந்து கொண்டு கவசம்போல் நின்று காப்பாற்றுதலில், உடலைச் சூழ்ந்துகொள்ளும் துணியைப் போன்றவன்; ஒளிக்கும் ஒளிகொடுக்கவல்ல பேரொளிமயமான வேற்படை உடையோன்; இத்தகைய முருகப்பெருமானைப் பணியும் செயலில் ஈடுபட்டிருப்போர் அனாதியான ஆணவத்தால் நேரும் மறைப்பு எனும் பெரிய பிணியை அடைய மாட்டார்கள்; பெரிதுபட்டுள்ள ஞானநிலையை அடைவார்கள்.

கூவிளங்காய்.
தானதனா தானதனா.
[பாடக மடக்கு. (யமகம்)]

நானிலையே னானிலையே
வேன்முருகா வேன்முருகா
மேன்மதியாய் மேன்மதியாய்
மான்மருகா மான்மருகா. 31

நான் எனும் அகங்காரம் என்கண் இல்லையாயின் நான் உள்ள நிலையிலேயே மேலான ஞான வடிவாகி வேல் இறைவன் எனப்படும் இளம்பூரணன் ஆவேன். இனி எனது எளிய நிலையைக் கருத்தில் கொள்வாயாக. முருகப்பெருமானே! மான்கள் உலவும் சோலையில் எழுந்தருளிய திருமாலின் மருகனே!

இதன்பொருள், நானிலையேல் = நானென்னுமகங்காரம் [என்கண்] இல்லையாயின், நானிலையே = நானிற்கு நிலையிலேயே, மேன்மதியாய் = மேலானவறிவு வடிவமாகி, வேன்முருகாவேன் = வேலிறையெனப்படு மிளம்பூரண னாவேன், மேல் = இனி, மதியாய் = [என்னெளிமையை] மதித்தருள்வாயாக, முருகா = முருகக்கடவுளே, மான்மரு=மான்மருவும், காமால்=சோலையிலெழுந்தருளிய திருமாலின், மருகா = மருமகனே, என்றவாறு.

தேமாங்காய் கூவிளம். ஈறு: தேமா.

மின்செய்யும் வீட்டினை
நின்செய்கை நீட்டுமவ்
வின்செய்கை யின்றெனில்
என்செய்வ லீங்கே. 32

ஒளிமயமான ஞானவெளியாம் வீடுபேற்று நிலையை உனது அருட்செய்கை அளித்தருளும். அத்தகைய இனிய அருட்செய்கை எனக்கு இல்லை எனில் இவ்வுலகில் என்செய்வேன்?

கூவிளங்காய் புளிமா.

அங்கிளிநே ரதர
மங்கையர்மா மயலால்
இங்கலையே னினியாள் 33
சங்கரர்தாழ் தகையே.

சிவபெருமான் சிஷ்யபாவம் செய்துகொண்டு வணங்கும் பெருந்தகைமை உடையோய்! அழகிய கிளியை ஒத்திருக்கும் செவ்விதழ் கொண்டுள்ள மங்கையர் மேல் உள்ள பெரிய மயக்கத்தால் இவ்வுலகில் அலையமாட்டேன். இனியாகிலும் என்னை ஆட்கொண்டருள்க.

தானதன தனனா.

காசுபதி கருதேன்
நாசரொடு நடவேன்
நேசமொடு நினையாய்
ஆசிலயி லரசே. 34

குற்றமில்லாத வேற்படை அரசே! செல்வத்தையோ, நிலத்தையோ கருதமாட்டேன்; அறநெறியை அழிக்கும் தீயவரொடு சேர்ந்து திரியமாட்டேன். நல்வழியிலேயே செல்லும் என்னை அன்புடன் குறிக்கொண்டு அருள்வாயாக.

தந்ததன தனனா.

பந்தமறு படநீ
வந்ததயை மறவேன்
அந்தநிலை யளியாய்
நந்திபுகழ் நலமே. 35

(திருத்தணிகையில்) நந்திதேவர் போற்றிப் புகழ்ந்த சிவவடிவே! எனது பந்தங்களெல்லாம் நீங்குமாறு நீ அன்று என்முன் எழுந்தருளி வந்த கருணைத் திறத்தை மறக்க மாட்டேன். முடிவான பேரின்ப நிலையை எனக்கு அளித்தருள்வாய்.

கடைச்சீர்: தேமா.

மெய்த்துயர மேவி
எய்க்கவினி யேவேல்
மைக்கணெழில் வள்ளி
கைப்பிடித்த கண்ணே. 36

மைதீட்டிய அழகிய கண்களை உடைய வள்ளிநாயகியின் கரம்பற்றிய கருணை வடிவே! இந்த உடலோடு கூடியிருப்பதால் நேரும் வினைப்பயன் நுகர்ச்சி (கர்ம அனுபவம்) முதலான துன்பங்களைப் பொருந்தி நான் இளைத்துப் போகுமாறு இனி என்னை இயக்காதே.

தேமாங்கனி புளிமா.

நாடாண்டிடு நயமும்
காடாண்டிடு கயமும்
ஆடாண்டவ னருள்வேள்
வீடாண்டவர் விழையார். 37

சிற்சபையில் ஆனந்த நடனம் செய்யும் ஆண்டவன் அருளிய முருகவேளின் திருவருளால் வரும் உயர்வான முத்திப்பேற்றைக் கருதும் ஆண்டவன் அடியார்கள் நாட்டை ஆளும் மேன்மையையும் காட்டைக் கையகப்படுத்தி ஆளும் குறைபாட்டையும் விரும்ப மாட்டார்கள்.

தேமாங்கனி கூவிளம்.

வேலேந்துசெவ் வேளருள்
நூலோர்ந்தொரு நூனமில்
சீலார்ந்தவிர் தேசினர்க்
காலாந்தகர் காய்வரோ. 38

வேற்படையை ஏந்தும் செவ்வேள் பரமனுக்குரிய அருள் நூல்களைப் பயின்றுணர்ந்து ஒரு குறைவும் இல்லாத ஒழுக்கநெறிப் பெருமை மிகுந்து விளங்கும் ஞானவொளியை உடையவர்களை யமதூதுவர்கள் சினம் கொண்டு நெருங்குவார்களோ?

தேமாங்கனி கூவிளங்காய்

தானாத்தன தாந்தனனா.

பூமாப்பிழை போம்படியோர்
தூமாப்பிணை தோன்றிடுமேல்
ஏமாப்பில கேண்குகவே
ளாமாப்பிளை யாண்டிடுமே. 39

பூவுலகக் குற்றங்கள் தம்மை அணுகாதவாறு நடந்துகொள்ளும் ஒரு தூய்மை மிகுந்த ஆசை (நோக்கம்) தோன்றுமாயின், மிகுந்த ஆனந்தம் கொண்டு விளங்கும் பெருமைசால் குகவேள் எனும் அழகிய செல்வக்குமாரன் விரைவில் ஆட்கொள்வான்.

37. கயம் = குறைபாடு. நிகண்டு காண்க.
39. இணை = ஆசை. நிகண்டு காண்க.

3. சிந்தடிவிருத்தமெனும்.

## வஞ்சிவிருத்தம்.

மா மா விளம்.

துன்பு கண்டு தொழுபவர்
அன்ப ரல்ல ரயின்முதால்
அன்பு கண்டு னடிதொழும்
அன்ப ரென்று மன்பரே. 40

வேற்படை ஏந்தும் முழுமுதற் பரம்பொருளே! தமக்குத் துன்பங்கள் நேர்வதைக் கண்டு அவற்றை நீக்குவதற்காக உன்னை வணங்கி நிற்போர் உண்மையான அன்பர் அல்லர். உனது இயல்பான கருணைப் பெருக்கைக் கண்டு உனது அடிகளை வணங்கும் அன்பர்களே எப்பொழுதும் மெய்யன்பர்கள்.

எரியிற் புழுவி லாமைபோல்
பரிவுப் பெரியர் பாலிரா
துரிதத் துயர்கள் சூழ்வுறார்
தெரிதற் கரிய சேயவா. 41

உன்னை நினையாதவர்களால் அறிவதற்கு அரிய சேய்ப்பரமனே! நெருப்பில் புழு இருக்க முடியாது. அதுபோன்று உன்பால் இடையறா அன்புகொண்டுள்ள தொண்டர்களிடத்தில் வினைப்பயனால் வரக்கூடிய துன்பங்கள் இருக்க மாட்டா.

சிறப்பு ளார்கள் செருக்கெலாம்
இறப்பி லாவு னிணைப்பதங்
குறித்து நோற்ற குறிப்பலோ
பொறிச்ச மீக புரத்தனே. 42

பொலிவும் செல்வமும் நிறைந்துள்ள திருப்போரூரில் எழுந்தருளி இருப்பவனே! சிறப்புடன் திகழும் செல்வர்களின் கோலாகலமான தோற்றங்கள் செயல்கள் ஆகியவை எல்லாம் அழிவில்லாத உனது இரண்டு திருவடிகளையும் குறித்து முற்பிறவிகளில் அவர்கள் செய்த தவத்தின் அடையாளம் அல்லவோ?

மா கூவிளம் கூவிளம்.

**பி**ணிசெய் வாந்தியும் பேதியும்
அணிசெய் நின்பத வார்வமார்
குணியை யென்செயுங் கோதிலாத்
தணிகை தங்கிய சாமியே. 43

குற்றமற்றுப் பொலியும் திருத்தணிகையில் கோயில் கொண்டுள்ள சுவாமியே! பிணிகளால் நேரும் வாந்தி, பேதி முதலான தொல்லைகள் எல்லாம் நின் திருவடிகளில் அன்பு கொண்டுள்ள நற்குணம் உடைய அடியாரை என்ன செய்யும்!

தான தந்தன தானனா.

**வா**ளு டம்பிடி வாழ்கைவேள்
தாள்ப ணிந்தவ ரேசதா
கோள்க டிந்தவர் கோணைவாழ்
நாள்வ ளர்ந்தவர் ஞாலமேல். 44

வாள், வேல் முதலான ஆயுதங்களை எப்போதும் கரங்களில் ஏந்தியுள்ள செவ்வேள் பரமனின் திருவடிகளை வணங்கியவர்களே, இவ்வுலகில் எப்போதும் கோள்களால் நேரும் துன்பங்களிலிருந்து விடுபட்டவர்கள் ஆவார்கள்; அழிவின்மை எனும் நிலையான தன்மை பெற்று வாழ்நாள் வளரப்பெறும் நிலையில் உள்ளவராவர்.

இந்த 44-வது செய்யுளடி : முதலிரண்டு சீர்களை யொன்றுபடுத்துக் கூவிளங்கனி யெனக்கொள்ளின் ; வஞ்சித்துறையுமாம்.

தான தானன தானனா

[அந்தாதித் தொடை நான்காரைச்சக்கரம்.]

**வா**ல மேயவ மாலவா
வால மாமுனி பாலவா
வால பாவல வேலவா 45
வால வேமளி மேலவா.

மிகுந்த அழகு பொருந்தியுள்ளவனே! திருமால் ஆசைப்படும் நிலையில் ஆல் அடியில் இருக்கும் மகாமுனியாகிய பரமசிவனுடைய புதல்வனே! வருவாயாக! இளநலம் உடையோய்! புலவனே! வேல் உடையானே! தூயவனே! எனக்கு இன்பம் ஈந்தருள்வாயாக; பெரியோனே!

44. கோணை = அழிவின்மை.




இதுபோலவரு சக்கரச்செய்யுள், பின்வரு சுழிகுளம், சருப்பதோபத்திரமெனும் மிறைக்கவிகளை : எதுகையின்றியும்; காதைகரப்பு, கோமூத்திரியென்பவற்றை : [அடிதோறு முறவேண்டிய] மோனையெழுத்தேனு மவ்வினவெழுத்தேனுமின்றியும், எதுகையின்றியுஞ் சிலர் பாடுமா றிந்நூலாசிரியர் பாடாது, அவ்வெதுகை மோனைக்குரிய வெழுத்துக்கள் பொருந்தப்பாடுதலை யிவ்வியற்கண்ணேகாண்க. அன்றி, சுழிகுளத்தையிடைவிட்டு வாசிப்பதுங் குழிப்புகளு மதிக மெனவு முணர்க.

இதன்பொருள். வால் அம் மேயவ = மிகுந்த அழகுமேவியவனே, மால் அவாவு = திருமா லாசைப்படும், ஆலமாமுனி பால = ஆலடியிலிருந்த மகாமுனியாகிய பரமசிவனுடைய புதல்வனே, வா = வருவாயாக, வால = இளநலமுடையானே, பாவல = புலவனே, வேலவா = வேலுடையானே, வால = தூயவனே, ஏமம் அளி = [எனக்கு] இன்ப மீந்தருள்வாயாக, மேலவா = பெரியோனே. என்றவாறு. ஏமம் ஏமென நின்றது.

கருவிளம் தேமா தேமா.
தனதன தானா தானா.

## [ஒற்றிலாச்சுழிகுளம்]

மதிமதி மாமா வாவா
திதிதிதி சேயே யோவா
மதியமு மாசே யேமா
திதிமுரு காமா சேமா. 46

அறிவுக்கு அறிவே! அழகுக்கு அழகே! வருவாயாக; வருவாயாக. என்னை நிலை நிறுத்துக; நிலை நிறுத்துக. இளமைப்பருவம் உடையோனே! கெடாத அறிவும் அழகும் உடைய

உமாதேவியின் மகனே! பெரிய காத்தல் தொழிலை உடைய முருகன் எனும் திருப்பெயரை உடையவனே! பெரிய சேமம் உடையோய்!




இதில், மேலிருந்து கீழிழிந்து கீழிருந்து மேலேறி யுச்சரித்தானும், புறநின்றுவந்துண்முடிய வுச்சரித்தானும் மேற்செய்யுளேயாமா றறிக. ஐந்துவகையாகச் சுழித்துச் சேறலை யிதன்கண்ண றியலாமன்றோ.

இ-ள். மதிமதி = அறிவுக்கறிவே, மாமா = அழகுக்கழகே, வாவா=வருவாயாக வருவாயாக, திதி திதி = [என்னை] நிலைநிறுத்துவாயாக நிலைநிறுத்துவாயாக, சேயே = இளமைப்பருவமுடையானே, ஓயா = கெடாத, மதி அம் உமா = அறிவு மழகுமுடைய வுமா தேவியின், சேயே = மகனே, மா திதி முருகா = பெரிய காப்புத்தொழிலுடைய முருக னென்னுந் திருநாமத்தோனே, மா சேமா = மகாசேமமுடையானே. எ – று.

புளிமாங்கனி கூவிளங்காய் தேமா.

## [மாத்திரைவருத்தனம் (மாத்திரைப் பெருக்கம்)]

ஒருமாத்திரை யேறுகுகை யொப்பார்
ஒருமாத்திரை யேறிடுசெய் யுன்னின்
ஒருமாத்திரை யேறிடொதி யொப்பார்
ஒருமாத்திரை யேறுதப முண்ணார். 47

பகற்குருடாக விளங்கும் ஆந்தையைப் போல் உள்ளோர் குமாரக்கடவுளைச் சிந்தித்தால் பூனையைப் போன்று திகழ்வார்கள்; துன்பத்தை அடையமாட்டார்கள்.

(இரவில் மட்டும் பார்க்கும் ஆந்தையை ஒத்துவிளங்கும் நிலையில் உள்ளவர்கள் உலகப்பற்றுகளிலேயே மனம் செலுத்தும் பந்த நிலையிலேயே (பெத்தநிலை) இருப்பவர்கள் ஆவர். பகலிலும் இரவிலும் பார்க்கக் கூடிய பூனையைப்போன்று விளங்குபவர்கள் சீவன் முத்தர்கள்; இரவாகிய உலக வாழ்க்கையைத் துறக்காமலேயே பகலாகிய அத்துவித அனுபவத்தையும் பெறுபவர்கள்)

இதில், ஒரு மாத்திரை யேறுகுகை = கூகை. இது பகற்குருடு. ஒரு மாத்திரை யேறிடு செய் = சேய். இது குமாரக்கடவுள். ஒரு மாத்திரை யேறிடொதி = ஓதி. இஃதிரவும் பகலுங் கண்டெரி பூனை. ஒரு மாத்திரையேறுதபம் = தாபம். இது துன்பம். இவற்றை யேனைச்சொற்களோ டிணைத்துப் பார்க்கின் ; பெத்தர்நிலை, ஜீவன் முத்தர்நிலை யித்தன்மையவெனப் பொருளாம்.

காய் காய் மா.

## [அக்கரவருத்தனம். (எழுத்துப் பெருக்கம்)]

துட்டர்க்கு முருகிருக்கை துணைவி
தட்டீர்க்கும் படையிவற்றின் றலைமுன்
விட்டொவ்வோ ரெழுத்துமரு விடச்சேர்த்
திட்டாற்கை வகையுவகை யெனவாம். 48

*தீமையைப் பிளக்கக்கூடிய முருகப்பெருமானுக்கு இருப்பிட மாகிய கைலை, துணைவியாகிய வள்ளி, குற்றங்களை நீக்கும் ஆயுத மாகிய உடம்பிடி (வேல்) எனப்படும் இவற்றின் முதல் எழுத்தைத் தவிர்த்து மற்றைய எழுத்துக்களை விலக்கி, அந்த முதல் எழுத்துக் களை ஒவ்வொன்றாக முதலில் சேர்த்துக் கொண்டே வந்தால் கை, வகை, உவகை எனத் தனித்தனியே பொருள்தரும் சொல்லாகும்.*

*(முருகனின் சேனைக் கணங்கள் வெற்றியைத் தந்து மகிழ்ச்சியைப் பெருக்கும் என்பது உட்கருத்து)*

இ - ள். தீமையைப் பிளக்கத்தக்க முருகக்கடவுட் கிருப்பிடமாகிய கைலை, துணைவியாகிய வள்ளி, குற்றங்கடி படையாகிய உடம்பிடி யெனப்படுமிவற்றின் தலையெழுத்தொழிந்த மற்றைய வெழுத்துக்களை விலக்கி யத்தலை யெழுத்துக்களை யொரோவொன்றாக முன்சேர்த்தால், கை, வகை, உவகை யெனத் தனித்தனி பொருடரு சொல்லாம். எ - று. கை = படையுறுப்பு, வகை = வாகையெனும் வெற்றி, உவகை = களிப்பு எனவாம். [உடம்பிடி = வேல்]

## [மாத்திரைச் சுருக்கம்.]

சுருதியொரு மாத்திரைதான் சுருங்கின்
பெருமுருக னாயுதமாம் பெயர்த்தும்
சுருதியொரு மாத்திரைதான் சுருங்கின்
பெருமுருக னாயுதமாம் பெயர்த்தும். 49

48. துட்டம் = தீமை; யோகம் யோகு எனவாயவாறு துட்டம் "துட்டு" எனவாயது.

49. * "சத்திரம்" ஆயுதம் என்பது சஸ்த்ரமாயுத என அமர ஸிம்ஹம் கூறுதலா லறியப்படுகின்றது. இவ்வாயுதம் ஈண்டு வழுத்தப்பட்டு குமார பகவானுக் குரிமைப்படுதலின் "வேல்" எனக் கொள்ளப் பட்டதென்க. "சத்திர மென்ப செங்கைத் தலம் விடாப் படை" என்றார் சூடாமணி நிகண்டினர். +அரணம் = வேல் என்பது "சத்தி யெஃக முடம்பிடி குந்தம் விட்டே றரணம்" எனுஞ் சேந்தன் திவாகரச் சூத்திரத்தானு மறியப்படுமே.

சுருதி (வேதம்) எனும் பொருளைத் தரும் சாத்திரம் என்ற சொல் ஒரு மாத்திரை குறைந்து நின்றால் சத்திரம் என ஆகிப் பெருமைக்குரிய முருகனின் ஆயுதமாகிய வேலைக் குறிக்கும். சுருதி (வேதம்) எனும் பொருளைத் தரும் ஆரணம் என்ற சொல் ஒரு மாத்திரை குறைந்து நின்றால் அரணம் என ஆகி, மீண்டும், பெரிய முருகனின் ஆயுதமாகிய வேலைக் குறிக்கும்.

இதில், முதலாமடியில் வருஞ்சுருதி = சாத்திரம். இஃதொரு மாத்திரை சுருங்கினாற் சத்திரமாம். *சத்திரம் = வேல். இரண்டாமடியில் வருஞ்சுருதி = ஆரணம். இஃதொருமாத்திரை சுருங்கினால் அரணமாம். + அரணம் = வேல்.

உயர்வள்ள னகரநொடி யொருவின்
அயிலைய னடியிலணி யணியாம்
வியலுள்ள விறைவைநொடி விலகின்
நயமுள்ள வொளிமுருக னடமாம். 50

மேன்மை உடைய இருபத்தொரு வள்ளல்களில் ஒருவனாகிய பாரியின் நகரத்தைக் குறிக்கும் 'பாரிபுரம்' எனும் சொல் ஒருமாத்திரை குறைந்து நின்றால் 'பரிபுரம்' என ஆகி, வேற்பெருமான் திருவடியில் அணிந்து கொண்டிருக்கும் சிலம்பு எனும் ஆபரணத்தைக் குறிக்கும். அகன்ற இடத்தை உடைய 'கூடை' எனும் சொல் ஒருமாத்திரை குறைந்து நின்றால் 'குடை' என ஆகி, நன்மைகள் தரவல்ல ஒளிமயமான முருகப்பெருமானின் நடனமாகிய குடைக் கூத்தைக் குறிக்கும்.

உயர்வள்ளல்நகரம் = மேன்மையுடைய [இருபத்தொருவள்ளல்களி லொருவ னாகிய] பாரியெனும் வள்ளலின் ஊர். இதுபாரிபுரம். ஈதொருமாத்திரை நீங்குழிப் பரிபுரமாம். பரிபுரம் = சிலம்பு. இறைவை = கூடை, ஈதொரு மாத்திரை நீங்குழிக் குடையாம். ஈதொருகூத்து. நொடி = மாத்திரை. வியல் = அகலம். இவை பொருந்தப் பொருள் கொள்க. இறைவை, கூடை, புட்டில் என்பன ஒரு பொருட் கிளவிகள்.

திருவருள் விழைவார் யார்க்கு மாங்காங் கனுக்கிரகம் புரிபொருட்டுச் சிலம்பு தோறுந் திருக்கோவில்கொண் டேகபரிபூரணஞான வியாபகப்பொருளா யிராநின்ற பகவானாகிய ஸ்ரீ சுப்பிரமணிய பரமாத்துமாவினது திருவடிமலரின்கண்ணே சிலம்பெனும் பரிபுரமுண்டென்பதை, "அரைவட மலம்பு கிங்கிணி பரிபுர நெருங்கு தண்டைக ளணிமணி சதங்கை கொஞ்சிட மயின்மீதே" எனும் அருணகிரிநாதசுவாமிகளி னமுதவாக்கானு மறிக. (இருகுழை - திருப்புகழ்)

## [அக்கரச்சுதகம் (எழுத்துச்சுருக்கம்)]

அருவேல னணியொருபு வனமும்
பொருவேலன் வலவனுமம் புதமும்
ஒருசாரி யையுமிஙன முரைக்கின்
மருநீப வநம்பவநம் வநநம். 51

அரிய வேற்பெருமான் அணியும் கடம்ப மலர்களைத் தரும் கடம்பவனம் என்பதும், போராற்றல் வல்ல வேற்பெருமானின் தேர்ச்சாரதியாகிய காற்றும் நீரும் சாரியையாக வரும் ஒன்றும் ஆகிய இவற்றை நிரலே ஒன்றன்பின் ஒன்றாக உரைத்தால் மணம் கமழும் நீபவனம், பவனம், வனம், நம் என ஆகும்.

| | | |
|---|---|---|
| கடம்பவனம் | - | நீபவனம் |
| காற்று | - | பவனம் |
| நீர் | - | வநம் |
| சாரியை | - | நம் |

இச்செய்யுளின் இறுதியில் வரும் 'நம்' என்பதை, செய்யுளின் தொடக்கத்தில் வரும் அருவேலன் என்பதோடு இணைத்து 'நம் அரிய வேலன்' எனவும் பொருள் கொள்ளலாம்.

அருவேலனணியொருபுவனம் = கடம்புவனம். இது நீபவநம். பொருவேலன் வலவன் = போர்வேலாயுதக்கடவுளுடைய இரதசாரதி [எனுங்காற்று]. இது பவநம். அம்புதம் = நீர், இது வநம். ஒரு சாரியை = நம். இவற்றுள் நீபவநம் எனுஞ் சொல்லில் நீமுதலொவ்வோரெழுத்து நீங்குழி மற்றைய பவநம், வநம், நம்மெனு மூன்று சொல்லும் வருமா றறிக. நம்மெனு மந்தத்தை, அருவேலனெனு மாதியோடு கூட்டி நம்முடைய அருமை வேலனெனப் பொருள் கோடலுமொன்று. சாரியைக்கு உதாரணம் : "எல்லா நம்மையும்" [ஒருபு = கடம்பு. மரு = வாசனை].

தானானா தானானா தானா.

[சருப்பதோபத்திரம். மாலைமாற்று.]

தாதாமா வேவேமா தாதா
தாதாதா தாதாதா தாதா
மாதாசே யாயாசே தாமா
வேதாயா மீமீயா தாவே. 52

தா தா
தா தா
மா மா
தா வே வே தா
தா தா
தா தா
மா தா தா மா
தா தா
சே சே
வே யா யா வே
தா தா
யா யா
மீ மீ
மீ மீ
யா யா
தா தா
வே யா யா வே
சே சே
தா தா
மா தா தா மா
தா தா
தா தா
தா வே வே தா
மா மா
தா தா
தா தா

ஈகையாளனே (வள்ளலே), சூரபன்மனாகிய மாமரத்தை முடிவுக்குக் கொண்டுவரும் இயமன் ஆனவனே, நான்முகன் ஆனவனே, நிறைவால் நான்முகனின் தந்தை நாராயணனாக ஆனவனே, வள்ளல்களுக்கும் வழங்கும் பெரிய வள்ளலே, பார்வதி அம்மைக்கு மகனாகிய சேய் என்னும் திருப்பெயர் உடையவனே! சேனாகணத்தையும் அடியார் திருக்கூட்டத்தையும் உடையவனே! நல்ல பசுவின் வடிவத்திலும் இருப்பவனே! எனக்குப் பெரிய செல்வத்தைக் கொடுத்தருள். துறவிக் கோலத்தில் இருப்பவனே! மேலான ஆன்மாவே (பரமான்மாவே).

இந்த 52-வது செய்யுளிலுள்ள காய்ச்சீர்களைக்கலந்து மாஞ்சீர்களாக பிரிக்கின் அளவடிக் கலிவிருத்தமுமாம்.

இதனில், மேலிருந்து கீழும் கீழிருந்து மேலும் ஆதிமுத லந்தமும் அந்தமுதலாதியுமாக மாறிமாறி நான்குமுகத்து வாசித்தானு மேற்செய்யுளேயாமா றறிக. மாலை மாற்றில் வருகின்ற பங்கியை முதன் மண்டலத்திற் காண்க.

இ-ள். தாதா = ஈகையாளனே, மா = [சூரபதுமனாகிய] மாமரத்தை, ஏவு = [முடிவுக்கு] ஏவும், ஏமா = இயமனானவனே, தாதா = பிரமாவானவனே, தாதா தாதா = [நிறைவினால்] பிரமனுடைய தந்தையானவனே, தாதா தாதா = ஈகையாளர்க்கீகை யாளனே, மாதா = பார்வதியம்மைக்கு, சேய் = மகனாகிய சேயென்னுந் திருநாமத்தோனே, ஆயா = ஆயமுடையானே, சேதா = நற்பசுவினுமுள்ளானே, மாவே தா = [எனக்குச்] செல்வமே கொடுத்தருள், யமீ = முனிவனே, மீயாதா = மேலான ஆன்மாவே. எ - று. ஏகாரம் - ஈற்றசை. யமீ யாமீயென்றாயது நீட்டும்வழி நீட்டல். [பசு = ஆன்].

## [வினாவுத்தரம்]

சமரமுதர் நாமமெது சாகா
விமலரணி பூணெதுமின் வில்லென்
குமரகுரு  தாசனிறை கோயார்
அமரர்பணி சோதிமுரு கையன். 53

*அசுரர்களோடு போரிடும் தேவர்களுக்குரிய பெயர் எது? அழியாத தூயோன் ஆன சிவபெருமானின் ஆபரணம் எது? பிரகாசமாக மின்னும் ஒளி எது? குமரகுருதாசனின் தெய்வ அரசன் யார்? அமரர் பணியும் ஒளிவடிவான முருகையன் என்பதில் இவற்றுக்குரிய விடைகளைக் காண்க.*

*தேவர்களுக்குரிய பெயர் - அமரர்*
*சிவபெருமானின் ஆபரணம் - பணி (பாம்பு)*
*பிரகாசமாக மின்னும் ஒளி - சோதி*
*குமரகுருதாசனின் தெய்வச் சக்ரவர்த்தி - முருகையன்*
*அமரர்கள் பணிந்து நிற்கும் சோதி முருகையன்.*

இதில், ஈற்றடி யுத்தரம். ஏனையடி வினா.

கருவிளம் கருவிளம் காய்.

எழுத்தரி லொழித்திட வேவுரையென்
கழுத்தினில் வளைத்திடு கலனெவனார்
கொழுத்தவர் திருத்தலை குவிப்பதெவன்
செழிப்புயர் குகற்குள திருத்தணிகை. 54

எழுதும் எழுத்துக்களில் நேரும் குற்றத்தை விலக்குவதற்காக ஏவும் (கட்டளை இடும்) சொல் எது? (திருத்து என்பது); சிவபெருமானின் கழுத்தில் வளைத்துச் சூட்டிக்கொள்ளப்படும் ஆபரணம் எது? (பாம்பு எனும் அணி); அன்பு செழித்திருக்கும் நல்லுள்ளம் கொண்ட தவசிகள் தம் தலைமேல் எதனைக் கூப்புகின்றனர்? (கை) - இவற்றுக்கு ஒரே விடை வளம் மிகுந்துள்ள குகப்பெருமானுக்கு உரிய தலமாக உள்ள **திருத்தணிகை** என்பது.

இதில், ஈற்றுச்சீர் உத்தரம். எழுத்தரில் = எழுத்துக்குற்றம்.

மா கருவிளம் காய்

தந்தத் தனதன தந்தானா.

பந்தக் கடமுறை பண்பீரே
சந்தக் கடமதி தந்தேயாள்
எந்தக் கடவுளு மென்கோள்போழ்
கந்தக் கடவுளை மிஞ்சாதே. 55

கன்ம பந்தத்தால் பொருந்தும் மாயைச் சரீரத்தில் வாழும் குணம் உடையோர்களே! சந்தம் நிறைந்த பாக்களைப் பாடவல்ல அறிவாற்றலைத் தந்து ஆட்கொள்பவனும், என் குற்றங்களை யெல்லாம் போக்குபவனுமான கந்தக் கடவுளை மிஞ்சி எந்தக் கடவுளும் விளங்காது (கந்தனுக்கு மேம்பட்டு விளங்க, எந்தக் கடவு ளாலும் இயலாது). சந்தக்கடம்=அழகிய உடம்பு; சந்தம்=அழகு.

தனனா தனந்தன தானதனா.

[கூடசதுக்கம்]

நுதியா ருடம்பிடி நூபுரவேள்
வதியோ மணைந்திரு மாய்முனரே
நிதியார் கொளுந்தகை நீளமெலாம்
மதியா ரணைந்தவர் மாநுடரே. 56

மனிதர்களே! கூர்மை நிறைந்த வேலும் சிலம்பும் கொண்டுள்ள செவ்வேள் குடிகொண்டிருக்கும் ஓம் எனும் பிரணவத்துக்குரிய கலைகளில் நீங்கள் உடலை விடுத்தற்கு முன்னம் ஒன்றி இருங்கள். நன்மை பெருகும். செல்வம் மிகுந்துள்ளவர்களின் பெருமை, பொருள்களின் மிகுதி, அவர்களின் ஆடம்பரம் முதலானவற்றை செவ்வேளின் நோக்கிற்கு ஆட்பட்டிருப்பவர்கள் ஒரு சிறிதும் மதிக்கமாட்டார்கள்.

இதில், ஈற்றடிச்சொல்லனைத்தும் ஏனைய மூன்றடியுள்ளுஞ் சொல்லாகாம லெழுத்தாகக் கலந்துநிற்குமாறு காண்க.

கூவிளங்காய் புளிமாங்காய் கூவிளம்.

## [காதைகரப்பு]

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| வா | ள | ர | சு | கு | ம | ரா | வொ | ம | ங் | கு | கா |
| வா | ள | ரு | சு | க | நி | லா | வு | ம | ங் | க | ளா |
| வா | ள | சு | ர | வி | ப | லா | க | ம | ன் | வி | பூ |
| வா | ள | ர | வி | த | ழி | மே | னி | ம | ஞ் | ச | கா. 57 |

சமமே தரவா
விமலா விசுவா
கமலா கருவா
குமரா குரவா. இது வஞ்சித்துறை

*வீரவாள் ஏந்தும் அரசே! குமரன் எனும் திருப்பெயர் உடையோய்! பிரணவப் பொருளே! அழகிய 'குகன்' எனும் திருப்பெயர் வாய்ந்தோனே! ஒளியே! அருவே! இன்பமயமாகத் திகழும் மங்கள மூர்த்தியே! வாளேந்தும் அசுரர்கள் கருதும் பலனுக்கு விரோதமானவனே! நான்முகனுக்கு இறைவனே! நிறைவானவனே! வாள்போன்ற பாம்பும், கொன்றையும் அணியும் திருமேனி உடையவனாகிய பரமசிவனுக்கு மகனே! என்னைக் காத்தருள்க.*

*(முதல் அடியில் வரும் ஒம் என்பது ஓம் என்பதன் குறுக்கம்)*

இந்த 57-வது செய்யுளில், ஈற்றுமொழியாகிய காவுக்கு முதலெழுத்துத் தொடங்கி யொவ்வோரெழுத் திடையிட்டு வாசிக்கப் பின்னுள்ள மோனை பிழையா ஒற்றிலாவஞ்சித் துறை யாவதறிக.

முற்செய்யுட்பொருள். வாளரசு = வீரவாளேந்து மரசே, குமரா = குமரனென்னுந் திருநாமத்தோனே, ஓம் = பிரணவப்பொருளே, அம்குகா = அழகிய குகனென்னுந் திருநாமத்தோனே, வாள் = ஒளியே, அரு = அருவே, சுகநிலாவுமங்களா = இன்பமயமாகத் திகழு மங்களமூர்த்தியே, வாளசுரவிபலா = வாளேந்து மசுரர் கருதுபலனுக்கு விரோதமானவனே, கம்மன் = பிரமனுக்கிறைவனே, விபூ = நிறைவானவனே, வாளர விதழிமேனி = வாள்போன்ற அரவமுங் கொன்றையுமணி மேனியனாகிய பரமசிவனுக்கு, மஞ்ச = மகனே, கா = [என்னைக்] காத்தருள்வாயாக. எ - று. ஒம் ஓம்மென்றானது குறுக்கும்வழியே குறுக்கலுற்றது.

---

57. மஞ்சு = இளமை ஆகலின் அதனை யென்றுமுடைய சிவகுமாரன் "மஞ்ச" என விளிக்கப்பட்டனன். மைந்தனென்னும் பெயரிலே சிறுவன், எச்சம், சேய், முளையெனும் பெயர்களைப் பிங்கலந்தை கூறுதலானும் மஞ்சனென்பது தானே பெறப்படுகின்றது.

புளிமா கூவிளங்காய் புளிமா.
தனன தானதன தனன.

## [அந்தாதிமடக்கு. ஒற்றிலாச்செய்யுள்]

முருகு லாநறிய முருகு
முருகு கோடியென முருகு
முருகு மூசுலக முருகு
முருகு றாதுமன முருகு. 58

"திருவிழாவில் உலவும் நல்ல இளமைப் பருவம் உடைய முருகன் எனும் திருப்பெயர் உடையோய்! என்னை ஆண்டு கொள்வாயாக" என்று கூறி, நறுமணமும் அழகும் செறிந்துள்ள உலகத்தில் துன்பத்தால் உருகும் பிறப்பானது மேலும் பொருந்தாத வகையில், மனமே, உருகுவாயாக.

இ - ள். முருகுலாம் = திருவிழாவிலுலாவும், நறிய = நல்ல, முருகு = இளமைப் பருவமுடைய, முருகு = முருகென்னுந் திருப்பெயருடையாய், கோடியென = (என்னைக்) கொள்வாயாக வென்று, முருகு = வாசனையும், முருகு = அழகும், மூசுலகும் = மொய்க்கின்ற வுலகத்தில், உருகும் உருகு = துன்பினுருகுகின்ற பிறப்பானது, உறாது = (இன்னும்) பொருந்தாமல், மனம் உருகு = மனமே யுருகுவாயாக. எ - று. வாதம் வாதென் றாவதுபோல, உருகம் உருகென்றாயது. (உருகம் =பிறப்பு.)

தேமா தேமா தேமாங்காய்.

## [அந்தாதித்தொடைத் தமருகபந்தம்]

வேலா வீயா வீராகோ
கோலா கோதே றாராமா
மாலா வேனை மாமாகா
காலா ளாதே காகாவே. 59



வேலனே! அழியாத வீரனே! தலைவனே! அழகிய திருக்கோலத்துடன் விளங்குபவனே! குற்றம் அணுகாதவகையில் எல்லா இலக்கணங்களும் பொருந்தியுள்ள திருமேனி உடையவனே! உலக ஆசைகளில் மயங்கி இருக்கும் என்னை இரவிலும் பகலிலும் எந்நேரத்திலும் காத்தருள்க! இயமனுக்கு ஆளாகாதவாறு என்னைக் காத்தருள், காத்தருள்!

### [பகர விகற்ப மடக்கு]

பப்புப் புப்பாப் பப்புப்பூப்
பப்பப் புப்ப பாப்பாப்பை
பப்பப் புப்பூப் பாப்பாப்பிப்
பப்புப் பாப்பொப் பொப்பொப்பே. 60

ஆரவாரிக்கும் கடல் அதிகப்படாத வகையில் சூழ்ந்துள்ள பரப்புடைய பூமிக்கும் பரவும் நீரை உடைய மேகத்திற்கும் பெரும் பாம்பாகிய ஆதிசேடனுக்கும் அரசனாகத் திகழ்பவனே! பொலிவுடைய கங்கையில் வந்தவனே! தறியில் செல்லும் பாப்போன்று செய்யப்படும் பாட்டுக்கு அப்பனே! இந்தப் பப்புப்பு எனத் தொடங்கும் பாட்டை ஒப்புக்கொள்; ஒப்புக்கொள்; ஒப்புக்கொள்.

இ-ள். பம்பு உப்பு = ஆரவாரிக்கின்ற கடலானது, உப்பா = அதிகப்படாத, பப்பு பூ = பரப்பாகிய பூமிக்கும், பம்பு அப்பு = பரவு நீரையுடைய, ப = மேகத்திற்கும், பாழி பாப்பு = பெரும்பாம்பாகிய சேடனுக்கும், ஐ = அரசனாயுள்ளானே, பப்பு அப்பு பூ = பொலிவுடைய கங்கையில் வந்தவனே, பா பா = [நெசவு] பாப்போற் செய்யப்படுபாட்டுக்கு, அப்பு = அப்பனே, இப் பப்புப்பு = இந்தப் பப்புப்பு எனத் தொடங்கும், ஆப்பு = பாட்டை, ஒப்பு ஒப்பு ஒப்பு = ஒப்புக்கொள் ஒப்புக்கொள் ஒப்புக்கொள். எ-று, ஏ-ஈற்றசை. பம்பு பப்பு எனவாதல் வலிக்கும்வழி வலித்தல். பாழி - பா எனக் கடைகுறைந்தது. பாப்பா அப்பு என்பது பாப்பாப்பு என மருவிற்று. அப்பென்பது அப்பனென்பதன் குறுக்கம். யாப்பு ஆப்பென மருவிற்று. இது யானையை ஆனையென்பதுபோலும். மேகமெனும் பொருளிற் போந்த ப, "ஹ:" என்னும் வடசொல்லே.

விளம் விளம் மா.
தந்தன தானன தன்னா.

### [ஏகபாதம்]

மங்கல மீமயின் மன்னே
மங்கல மீமயின் மன்னே
மங்கல மீமயின் மன்னே
மங்கல மீமயின் மன்னே. 61

அறிவின் ஒளி மங்குமாறு சஞ்சலம் தருகின்ற, மாயும் படியான வீட்டில் சேர்ந்திருக்க மாட்டோம். அழகிய ஆயுதங்களைப் பிளக்கத்தக்க வேலிற்கும் பெருமைக்கும் மங்களகரமான செயலுக்கும் ஆகாயத்தில் செல்லும் மயிலுக்கும் அரசனே! மங்கலப் பேறுகளை எங்களுக்கு ஈந்தருள்க! திருமயிலம் என்னும் தலத்தில் எழுந்தருளி இருக்கும் இறைவனே!

இ-ள். மங்கு = [அறிவு] ஒளிமங்கும், அலம் ஈ = சஞ்சலந் தரானின்ற, மாயில் = மாயும்படியான வீட்டில், மன்னேம் = சேர்ந்திரேம், அம்கலம் = அழகிய வாயுதங்களை, ஈரும் அயில் =பிளக்கத்தக்க வேலிற்கும், மன் = பெருமைக்கும், மங்கலம் = சுபகாரியத்திற்கும், மீமயில் = ஆகாயத்திற்செல்லுமயிலுக்கும், மன்னே = அரசனே, மங்கலம் = சுபத்தை, ஈ = [எங்களுக்கு] ஈந்தருள்வாயாக, மயில்மன்னே = திருமயிலத்தி லெழுந் தருளியிருக்கு மிறைவனே. எ - று, மாயில் மயிலென விகாரமாயிற்று. ஈருமென்பது ஈமென மரீஇயிற்று. ஏ - அசை.

தானன தானன தானா.

## [கோமூத்திரி]

சூரனை யீரதி சூரா
சாரளி யீவதி தாரா
பாரரி யேறிடு பாலா
சேரளி யேகொடு சீலா. 62




சூரபத்மனைப் பிளந்த அதிசூரனே! சார்ந்துள்ள தேன்வண்டுகள் சூழ்ந்து முரன்று வசிக்கும் மணம்மிக்க மாலையை அணிந்

62. சார் அளி ஈ = சார்ந்துள்ள தேன்வண்டு. வதிதாரா = தங்கிய மாலையை யுடையாய். பார் அரி = பரப்புடையதேர்.

துள்ளவனே! பரந்து விளங்கும் தேரில் ஏறிடும் இளையோனே! சீலம் நிறைந்துள்ளவனே! என்னைச் சேர்வதாகிய கருணையை விரைவில் கொடுத்தருள்.

இது : கோமூத்திரம்போல மேலுங் கீழு மொவ்வோரெழுத் திடையிட்டு வாசிக்கு மிடத்து மேற்செய்யுளாயே வருவது காண்க.

புரச்சகத் ததிகமும் பொருவில்
பரத்திலற் பமுமனம் பதிக்குந்
தரத்தரைத் தணிந்தவ தமரென்
றுரைப்பரென் னுயிர்க்குக னுவப்போர். 63

விளக்கம் பெற்றுள்ள இம்மண்ணுலகின் மேல் அதிகமாகவும், ஒப்பற்ற மேல்நிலைத் தானமாகிய வீட்டுலகில் மிகவும் குறைவாகவும் மனத்தைப் பதித்திருக்கும் தன்மை உடையவர்களை, எனது உயிருக்கும் உயிராக உள்ள குகன் அருளில் நின்று மகிழ்பவர்கள் பொதுநிலையில் 'அதமர்கள்' (கீழ்ப்பட்டோர்) எனக் கூறுவார்கள்.

முதமறு சகத்திடை முழுதும்
பதிமன முடையயரைப் பரமன்
சுதனெனு முருகனைத் தொடர்வோர்
அதமரு ளதமரென் றறைவார். 64

பரமசிவனின் குமாரனான முருகனை அன்பினால் தொடர்ந்து வழிபடுவோர் இன்பமற்றுள்ள இவ்வுலகின் மேல் மனம் முழுவதையும் பதித்திருக்கும் தன்மை உடையவர்களைக் 'கீழ்ப்பட்டோரிலும் கீழ்ப்பட்டிருப்போர்' எனக் கூறுவார்கள்.

சகத்திலும் பரத்திலுஞ் சமமாய்
அகத்தினை நிறுத்துந ரணிசால்
இகத்துமத் திமரென வெழிலோம்
முகத்திறை யடியவர் மொழிவார். 65

அழகிய பிரணவமயமான முகப்பொலிவை உடைய முருகனின் அடியார்கள், இந்நிலவுலகின் மேலும், மேல் உலகப் பேற்றின் மீதும் மன்த்தைச் சமமாகப் பதித்திருக்கும் தன்மை உடையவர்களை, அழகு பொருந்தும் இவ்வுலகத்தில் 'மத்திமர்' (நடுத்தரப்பட்டுள்ளோர்) எனக் கூறுவார்கள்.

கூத்தனன் பினிலதி கமுமா
பத்தணை யுலகிலற் பமுமாஞ்
சித்தரைக் குகனரு டிளைப்போர்
உத்தம ரெனவிதந் துரைப்பார். 66

குகப்பெருமானின் அருளில் திளைக்கும் அடியார்கள் இறைவன் தொடர்பான பக்தியில் அதிகமாகவும், ஆபத்துகள் பொருந்தியுள்ள இவ்வுலகின் மேல் குறைவாகவும் மனத்தைப் பதித்திருக்கும் அறிவுடையாரை 'உத்தமர்' என விதந்து போற்றுவார்கள்.

சூரிருஞ் சகமனந் தொலைத்தேர்
கூரிறை முழுதுமுள் குநரைச்
சாருமுத் தமருளுத் தமரென்
பாருர வயிலனற் பரிவோர். 67

வலிமை மிகுந்த வேல் இறைவனிடம் நல்ல மெய்யன்புடையோர் அச்சம் தரும் இப்பெரிய உலக நெறியில் செல்லும் மனத்தை அடியோடு தவிர்த்து, அழகு மிகுந்துள்ள இறைவனைப் பற்றிய சிந்தனையிலேயே முழுவதுமாக மனத்தைப் பதித்து இருப்பவர்களை 'உத்தமர்களுக்குள்ளே மிகவும் உத்தமர்' எனப் போற்றி உரைப்பார்கள்.

தனதுரை தருக்கநில் லாஞான்
றனுபவ மேகமென் றவலம்
பனுமுயிர் பாழுயி ரதன்சொல்
எனையென செயுமயி லிறையே. 68

தனது உரை தருக்க நெறிமுறைக்கு ஈடுகொடுக்காமல் தோல்வி அடையும் போது 'எமது அனுபவம் ஏகம் என்னும் கோட்பாட்டையே உறுதிப்படுத்துகிறது' என வெற்றுரை கூறும் உயிர், பாழ்பட்டுப் போன உயிராகும். வேல் இறைவனே! அத்தகைய பாழ்த்த உயிர் கூறும் சொல் என்னை என்ன செய்யும்?

கண்ணிணை மூடிடு கான்மா
மண்ணெதிர் மறைவது போலே
உண்ணிலை யுளமறை விலுமென் 69
றெண்ணுவ தியைபயி லிறையே.

வேல் இறைவனே! இரண்டு கண்களையும் மூடிக்கொள்ளும் போது இப்பெரிய மண்ணுலகம், எதிரிலேயே மறைந்துவிடுவது போன்று, உள்ளே நிலைத்திருக்கும் மனம், பரத்தில் நுழைந்து இவ்வுலக நோக்கிலிருந்து விடுபட்டு மறைந்துநிற்கும் போதும் உலகம் மறைந்து நிற்கும் எனக் கருதுவது பொருத்தமானதே.

இருவிழி யிலர்க்கிரு ளொன்றே
தெரிவது போன்மனஞ் சேரா
அருளுளர்க் கெங்கணு மறிவாத்
தெரியும தேசிவ சேய்நீ. 70

இரண்டு கண்களும் பார்வை இழந்துள்ளவர்களுக்கு இருள் மட்டுமே தெரிவது போன்று, மனத்தின் செயற்பாடுகளை இழந்திருக்கும் அருள்நிலையில் உள்ளவர்களுக்கு எங்கெங்கும் ஞான விலாசமாகவே தெரியும். சிவகுமாரனாக விளங்கும் நீதான் அந்த ஞானவிலாசமாக வெளிப்படுகின்றாய்!

இருபொரு ளொருபொரு ளெனவே
பிரிவினை பேசுந ரெவரும்
அருணிலை யத்துவி தமெனத்
தெரியனு பவமிலர் சேயே. 71

செவ்வேள் பரமனே! இருபொருள் (துவைத வாதம்) எனவும் ஒருபொருள் (ஏகான்ம வாதம்) எனவும் பேதநெறிகளைப் பேசுவோர் எவரும் அருள்நிலை ஆகிய அத்துவிதமே உண்மையானது என உணரக்கூடிய அனுபவம் இல்லாதவர்களே ஆவர்.

நித்தனு நித்தனை நீங்காச்
சித்தனு மொத்தது தேற்ற
அத்துவி தப்பய னாமென்
றத்தவு னற்பின ரார்வார். 72

நித்தியனாக விளங்கும் செவ்வேளும், நித்தியனை நீங்காமல் விளங்கும் அறிவுடைப் பொருளான ஆன்மாவும் இரண்டறக் கலந்து ஐக்கியப்பட்டு விளங்கும் நிலையே தெளிவார்ந்த நிலையினதான அத்துவித நெறியின் பயன் ஆகும் என, என் தலைவனே! உன் அடியார்கள் அந்த நெறியிலேயே சேர்ந்திருப்பார்கள்.

செவ்விய சேயுனை யேசேர்
இவ்வனு பவமில ரிறைநூல்
எவ்வள வுணரினு மீங்கே
அவ்வனு பவமுள ராகார். 73

செந்நிறப் பேரொளியுடன் திகழும் சேயவனே! உன்னையே சேர்வதாகிய இந்த அத்துவித அனுபவம் இல்லாதவர்கள் எத்தனை வேதங்களையும் ஆகமங்களையும் பயின்று உணர்ந்தாலும் இந்நில வுலகில் அந்த ஐக்கிய அனுபவம் உள்ளவர்களாக ஆகமாட்டார்கள்.

எந்நெறி வருநரு மிறையாம்
உன்னிறை வனுபவ முளரேல்
அன்னவ ருரியரஃ தில்லார்
அன்னிய ரெற்கயி லரசே. 74

வேல் அரசே! எந்த நெறியைப் பின்பற்றுபவராக இருந்தாலும், முழுமுதற்பொருளாம் உன்னுடன் நிறைவதாகிய ஐக்கிய அனுபவம் உள்ளவர்களாகத் திகழ்வாரே ஆயின், அவர்கள் எனக்கு உரியவர்களே ஆவர்; அத்தகைய அனுபவம் இல்லாதவர்கள் எனக்கு அயலார் ஆவர்.

வினையள வாயுயிர் மேவும்
அனுபவ மும்பல வாமே
உனையுற லவைகளி லுயர்வென்
றனகரெண் ணுவரரு ளயிலோய். 75

வேலவனே! முன்செய்த வினைகளுக்கு ஏற்ப உயிர்கள் பிறப்பை எடுக்கும் அனுபவமும், பயனைத் துய்க்கும் அனுபவமும் பற்பல வகைகளாக இருக்கும். உயிர்கள் அவ்வாறு பொருந்தும் அனுபவங்களில் உன்னை அடைவதற்காக எடுக்கும் பிறப்பும் பொருந்தும் அனுபவமும் உயர்வுடையனவாகும் எனத் தூயோர் கருதுவர்.

மா விளம் மா.

மதலை போல்வரு மாவேல்
முதலை நேடொரு மோகர்
முதலை வாய்ச்சியர் மூவாத்
திதலை மார்ப்புடை தேடார். 76

இளம் குழந்தை போன்று, பெரிய வேல்தாங்கி வரும் முழுமுதற் பொருளாம் முருகனை நாடி அடையும் தூய ஆசையில் உள்ளவர்கள் முதலைப்பூண்டு போன்று சிவந்துள்ள வாயிதழ்களை உடையவராய்த் தேமல்படர்ந்துள்ள இளம்பெண்கள் இருக்கும் பக்கத்தைத் தேடமாட்டார்கள்.

அளியு முந்தொடை யான்வேல்
ஒளிர்கை யெந்தையுள் ளூரன்
களிய ணைந்தகண் ணார்தாம்
விளியி னும்வில காதே. 77

தேன் உண்ணும் வண்டுகள் கிளர்த்தும் மலர்மாலை அணிந்துள்ளவனும் வேற்படை மிளிரும் திருக்கரம் உடைய எந்தையும், இதயநடுவாகிய ஊரை உடையவனும் ஆகிய முருகப்பெருமானின் ஆனந்தநிலையை அணைந்திருக்கும் ஞானியர்கள், தாம் உடலை விடுக்கும் நேரத்திலும் கூட அந்த ஆனந்த நிலை அவர்களிடமிருந்து விலகாது; உடலை விடுத்த பிறகும் நீங்காது.

கிரிக்கா னவர்மகள் கிளைத்தோள்
உரித்தோ டணைகுக னுவப்பால்
வரித்தார் மதனைய மரத்தான்
எரித்தாங் கெனதிட ரெரிப்பான். 78

வள்ளி மலைக்காட்டில் வாழும் வேட்டுவர் மகளாம் வள்ளி நாயகியின் மூங்கிலைப் போன்ற தோள்களை உரிமையோடு தழுவி ஆதரவுகாட்டி நின்ற குகப்பெருமான் என்மீது கொண்டுள்ள மகிழ்ச்சியால், வண்டுகள் சூழும் மலர்மாலை அணிந்த மன்மதனை, அழகிய பாம்புகளை ஆபரணமாகக் கொண்டுள்ள சிவபெருமான் எரித்தது போன்று, எனது துன்பங்களையெல்லாம் எரித்துவிடுவான்.

---

78. இறைவன் தனது திருவுருவைக்காட்டிநின்ற ஞான்று பெரிதும் அஞ்சி வணங்கி நிற்கும் வள்ளிநாயகியை நோக்கி, "அஞ்சேல்" என்னுந் திருவார்த்தையை வெளியிட்டு நாயகியின் மூங்கிலனைய தோள்தழுவி ஆதரவுகாட்டிநின்ற பெருமானென்பார். "கிரிக்கானவர் மகள் கிளைத்தோள் உரித்தோடணை குகன்" என்றார். உரித்தெனும் பிரயோகம் என்னுடைய சத்தியெனும் உரிமைகாட்டி நின்றதைக் காட்டுவதாயிற்றால்.

தனத்தாந் தனதன தனத்தா.

அருட்பாங் குளியென வரிப்பா
டிருப்போங் கறுமுக னெழிற்சூல்
தரித்தோங் கிறைதிரி தலத்தார்
எரித்தாங் கெனதிட ரெரிப்பான். 79

அருளாகிய சிறந்த ஒன்றுக்கு இருப்பிடம் எனத் திகழும் அரிப்பாடு என்னும் தலத்தில் கோயில் கொண்டு சிறந்துள்ள அறுமுகப்பெருமான், அழகிய சூலாயுதம் தாங்கி வீறுடன் திகழும் சிவபெருமான் முப்புரங்களையும் அவற்றில் உள்ளவர்களையும் எரித்தது போன்று என் துன்பங்களையெல்லாம் எரித்து விடுவான்.

தனன தானன தையா.

இதய நாவுள ரெள்ளா
உதய னாபுர முள்ளான்
மதன மேவெனுண் மல்கா
விதனம் யாவையும் வெல்வான். 80

பக்குவம் வாய்ந்த இதயத்தோடு ஒத்து இயங்கும் நாக்கு உடையாரால் இகழப்படாததாய் உயர்வுடன் விளங்கும் உதயனாபுரம் என்னும் தலத்தில் உள்ளவனாகிய முருகப்பெருமான், மன்மதனின் செயல் பொருந்தியுள்ள எனது உள்ளத்துள் பெருகி எழும் துன்பங்கள் அனைத்தையும் போக்கி அருள்வான்.

தந்த தந்தனத் தான.

துங்க வின்பருட் சோதி
கங்கை யங்கரைக் காசி
தங்கு கந்தனற் சார்பின்
இங்கு ழன்றிடெற் கீயும். 81

கங்கை நதியின் அழகிய கரையில் உள்ள காசி எனும் புண்ணியத் தலத்தில் கோயில் கொண்டிருக்கும் கந்தப் பெருமான், இருளின் சார்பு உடையவனாக இங்கே உழன்று கொண்டிருக்கும் எனக்கு, உயர்ந்ததும் இன்பமயமானதும் ஆன அருட்பேரொளியைத் தந்து அருள்வான்.

தேமா புளிமா தேமா.

[இதுமுதலிரண்டு விருத்தமும், ஒற்றிலாஇதழ்குவிபாட்டு.]

நோவ றுபவ நூறு
தூவ ருளொரு தூவி
மேவு குருகு மீது
கோவொ டுவரு கோவே. 82

தோகை பொருந்தியுள்ள ஒப்பற்ற மயில்மேல் ஏறி வஜ்ராயுதம் ஏந்தி வரும் தலைவனே! எனது துன்பங்களையும், துன்பங்களுக்குக் காரணமான பிறப்பையும் அழிக்கவல்லதாகிய தூய்மைநிலையை எனக்கு அருள்க!

தேமாங்காய் தேமா தேமா.

தானான தானா தானா.

பூமேவெ னோவே போமா
றோமாகு வேலோ யோவா
மாமேவு கோபூ மாவா
வாமா சொரூபா வாவா. 83

இந்நிலவுலகில் பிறந்துள்ள எனது துன்பங்களெல்லாம் விலகுமாறு, பிரணவமயமாகத் திகழும் வேலவனே! நீங்காத பெருமையும் அழகும் பொருந்தியுள்ள தலைவனே! பெரிதினும் பெரிதாய்த் திகழும் கம்பீரத்தை உடையவனே! அமிழ்த மயமானவனே! விசுவரூபம் காட்டி அருளியவனே! என்னிடம் வருவாயாக! வருவாயாக!

கருவிளங்காய் புளிமா தேமா.

தனந்தனன தனன தந்தா.

மனங்குறுகின் மகிமை யுண்டே
மனம்பெருகின் மகிமை யின்றே
மனந்துவளின் வதித லின்றே
எனுங்குமர னிசைக ணம்பே. 84

மனமானது உட்புலத்தே அடங்குமானால் சிவயோக சாதனையில் உயரலாம். வெளியில் அலையும் மனம் பக்குவமடையாது. (பயிற்சி இன்மையால்) மனம் தளர்வடைந்து நிலையாக நிற்காது - என இவ்வாறு குமரப்பெருமான் அருளியுள்ள உபதேச மொழிகளை உறுதியாக நம்பி இரு.

இம் முச்சீரடி விருத்தங்கள் : "சிந்தடி நான்காய் வருவன வஞ்சி - யெஞ்சா விருத்த மென்மனார் புலவர்" எனும் யாப்பருங்கலச் சூத்திரவழியே வந்தன. இச்செய்யு ளடிகளி னிறுதிச்சீர்க்கண் மோனையெழுத்து, அல்ல ததனினவெழுத்து வருவது சிறப்பு.

வஞ்சிப்பாவின முற்றிற்று.

**4-வது வஞ்சியியன் முற்றிற்று.**

ஆக இயல் நான்கினும் போந்த திருச்செய்யுள் 531.

# வாயுறைவாழ்த்துமருட்பா.

வெண்பாமுதலு மாசிரிய மீறுமாய் வருவது.

கடல்கவி மண்டிணிந்த காசினியீர் கேண்மின்
உடல்பொருள் கல்வியுத்தி யோக மரும்பூண்
திடமுடை யில்லமகார் சேர்சுற்ற நட்டார்
படைபாய்மா மொய்யென் பனவெல்லா நில்லா
5. எதனா லெனிற்பண் டிழைத்தவினைக் குள்ள
விதியா விளைந்த விதிகொடுதென் னாடர்
அதிதீ விரம்வருகா லன்னவரை நீயிர்
மதியா திருந்துய்ய மாட்டீர் - அதனால்
கடிகெழு புகழ்முனி கடவுளாஞ் சேயவற்
கடிமையாய் நின்மினென் னறையைப்
பிடிமினஃ தழியாப் பெரும்பயன் றருமே. 1

கடலால் சூழப்பட்டுள்ளதும் மண் திணிந்துள்ளதுமான இவ்வுலகில் வாழும் மக்களே! கேளுங்கள். உடல், பொருள், கல்வி, உத்தியோகம், அரிய அணிகலன்கள், உறுதிவாய்ந்த வீடு, மக்கள், சூழ்ந்திருக்கும் சுற்றத்தார், நண்பர்கள், படை, குதிரை, யானை என்பன முதலாக உள்ளவை எல்லாம் நிலைத்திருக்க மாட்டா. எதனால் எனில், முன்பு செய்த வினைகளுக்கு ஏற்ப அமைந்துள்ள நியதியின்படியே தோன்றியுள்ள விதிமுறைப்படி இயமதூதுவர்கள் அதிவிரைவாக உம்மை நாடிவரும் பொழுது, அவர்களை மதிக்காமல் வாளா இருந்து உய்திபெற மாட்டீர்கள். அதனால் மிக உயர்ந்த ஆனந்த அனுபவம் பொருந்தியுள்ள திருப்புகழ் முனிவனாகும் அருணகிரிநாதரின் கடவுளாகும் செவ்வேள் பரமனுக்கு அடிமைப்பட்டு நில்லுங்கள்; எனது உபதேச மொழிகளையும் பாடல்களையும் உறுதியாகப் பற்றிக் கொள்ளுங்கள். இவ்வாறு செய்வது அழியாத பெரும்பெரும் பயன்களைக் கொடுக்கும்.

இது மெய்ப்பொருள் கூறினமையால் வாயுறைவாழ்த்து மருட்பா. நிற்க.

"செயிர்தீர் செய்யு டெரியுங் காலை - யடியி னீட்டத் தழகுபெற் றியலு - மோரடி யானு மொரோவிடத் தியலு - மவைதாம் - பாட்டுரை நூலே மந்திரம் பிசியே - முதுசொல் லங்கதம் வாழ்த்தொடு பிறவு - மாகுந வென்ப வறிந்திசி னோரே" என யாப்பருங்கல

1. பாய்மா = குதிரை. மொய் = யானை.

விருத்தியுரைவரு சூத்திரப்படி, பாட்டுரையும், நூலும், மந்திரமும், சந்தோபிசிதமும், முதுசொல்லும், அங்கதமும், வாழ்த்துமெனு மிவை யோரடியானும் பலவடியானு நடக்குமென வறிக.

அறிஞரும் புராண கவிஞரும் பாடிய பாக்களிலும் பாடுபாக்களிலும் சீர், தளை, அடி, தொடை, வரையறுக்கப்பட்ட பா பாவின மென்ப [யாப்பின் றிறமறிதற்குப் பேரிலக்கியமா யமைக்கப்பட்ட] விக்கண்டத்துப் பாக்கண்மூல மெடுத்துக்காட்டிய பெற்றியிற்றிரிந்து மிக்குங் குறைந்தும் வரக்காணின்; அவற்றை யொருபுடை யொப்புமை நோக்கி யொன்றன்பாற்படுத்து வழங்கப்படுமெனக் கொள்க. என்னை? "ஒப்பும்" என யா - காரிகையொழிபியல் 8-வது பாட்டி லுளதாகலின்.

வெள்ளியலாதி நான் கியல்கொண்ட இவ்விரண்டாங் கண்டத்துத் திருச்செய்யுள் ஐந்நூற்று முப்பத்தொன்றுள் ஆசிரிய வியற்கண் "தத்தாந்தனன" ஆதி சந்தக் குழிப்புப்பெற்ற செய்யுள் - 50, கலியியற்கண் "தனதனனா" ஆதி சந்தக்குழிப்புப்பெற்ற செய்யுள் - 33, வஞ்சியியற்கண் "தானா" ஆதி சந்தக்குழிப்புப்பெற்ற செய்யுள் - 23 ஆகச் சந்தக்குழிப்புச் செய்யுள் : 106-எனவும், செய்யுள்களின் மேல் வரையப்பட்ட வாய்ப்பாடுகளும், குழிப்புகளு மொன்றுக்கொன்று பேதமெனவு மறிக.

ஆக திருச்செய்யுள் - 532

## பல்சந்தப்பரிமளமாகிய இரண்டாங்கண்டம் முற்றிற்று.

# திருவலங்கற்றிரட்டு முற்றிற்று.

குமரகுருபரன் றிருவடிவாழ்க.

திருச்சிற்றம்பலம்.

உ
சிவமயம்
ஸ்ரீகுமார குருப்யோ நம :

# ஸ்ரீமத் - குமரகுருதாச சுவாமிகள் திருத்தல தரிசன காலங்களிற் பாடியருளிய கட்டளைக்கலித்துறைகள்.

## திருவனந்தசயனம்.

சீராரு நல்வி சயவாண்டு கன்னியந் திங்கண்மதி
யேராரு முற்பக்க வேகா தசியி லெழில்வளஞ்சே
ரூரா மனந்த சயனத்தி லென்னிறை யோன்கடப்பந்
தாரானம் மானது பள்ளிகண் டேனற் றருக்குறவே. 1

சீர்மை பொருந்திய நல்ல விசய ஆண்டு புரட்டாசி மாதம் திங்கள் எழுச்சி பெற வளரும் பூர்வபக்கத்து ஏகாதசி நாளில், அழகிய வளம் செறிந்துள்ள ஊராகும் திருவனந்த சயனத்தில் (திருவனந்தபுரத்தில்) என் இறைவனும் கடம்ப மலர்மாலை அணிவோனும் ஆன முருகவேளின் தாய்மாமன் திருமால் பள்ளிகொண்டிருப்பதை மனக்களிப்பு மிகுமாறு தரிசித்தேன்.

## திருக்கன்னியாகுமரி.

அலைமேவு பவ்வ வளநீடு மங்கன்னி யாகுமரி
நிலைமேவு சத்தி தனையென்னை யாளொரு நேயமுள்ள
விலைவேல னென்று விசயதெய் வக்கன்னி யென்னுமதிக்
கலைமேவு பூரணை நான்கண் டிறைஞ்சிய காலமன்றே. 2

அலைகள் பொருந்தியுள்ள கடல்சூழ்ந்து வளம்மிகுந்திருக்கும் அழகிய கன்னியாகுமரியில் உள்ள திருக்கோவிலில் எழுந்தருளி இருக்கும் குமரித்தாயை, என்னை ஆட்கொள்ளும் அன்புடைய, இலைபோன்ற வேற்படை ஏந்தும் இறைவன் எனவே கருதி நான் தரிசித்து வணங்கிய காலம், விசய ஆண்டு புரட்டாசி மாதம், நிலவின் கலைகள் முழுவதுமாக வளரப்பெற்றுத் திகழும் பௌர்ணமி நன்னாள் ஆகும்.

## திருச்சுசீந்திரம்.

பத்தர் குழாஞ்சூழ் சுசீந்திரம் வாழுமை பங்கனைமா
சித்தர் குழாஞ்சூழ் குமர னெனக்கரு டேவெனவென்
புத்தி விடாது நினைந்து கனிந்து புகழவுற்ற
வித்தின நற்றின மன்றோ வெனக்கு ளிருப்பவனே. 3

எனக்குள்ளே எப்பொழுதும் இருப்பவனே! அடியார் கூட்டம் சூழ்ந்துள்ள சுசீந்திரம் எனும் தலத்தில் கோயில் கொண்டுள்ள உமையொரு பாகனாம் சிவபெருமானை, பெரிய சித்தர்களின் கூட்டம் சூழ்ந்துள்ள குமரனும் எனக்கு அருளும் தெய்வமும் ஆன முருகனே எனக் கருதி, என் அறிவுநிலை கெடாமல் நினைந்து மனம் கனிந்து புகழ்ந்து நிற்குமாறு பொருந்தி நின்ற இந்த நாள் நல்ல நாளே அன்றோ!

## திருச்செந்தி.

தண்டடச் சிந்துமுத் தங்கொழிக் கின்ற தகைமையுட
னண்டருக் கின்புள்ள தாயவிர் செந்திநல் லாலயத்துட்
டொண்டரைக் கொள்ள விளங்குமெம் மான்குகன் றூவடியைக்
கண்டவர்க் காநந்தம் பொங்குமென் கண்களுங் கண்டனவே. 4

குளிர்ந்த நீர்ப்பரப்பைக் கொண்டுள்ள கடல் முத்துக்களைக் கொழிக்கும் சிறப்புடன், தேவர்களுக்கும் இன்பம் தருவதாக விளங்கும் திருச்செந்தூரில் உள்ள நல்ல ஆலயத்துள், எப்போதும் அடியாரை ஆட்கொள்வதற்காக விளங்கும் எம்மானாகிய குகப் பெருமானின் தூய திருவடிகளைத் தரிசித்தவர்களுக்கு ஆனந்தம் மிகுந்து விளங்கும்; அத்தகைய திருவடிகளை என் கண்களும் தரிசித்தன.

தேவர் சிகாமணி சித்தர் சிகாமணி தெள்ளறிவுத்
தூவர் சிகாமணி யோகர் சிகாமணி தோமில்கவி
நாவர் சிகாமணி நாதர் சிகாமணி நண்ணுமென் னுண்
மேவு சிகாமணி செந்தியில் வாழ்வடி வேலவனே. 5

திருச்செந்தூரில் கோயில் கொண்டுள்ள வடிவேற்பெருமான் தேவர்களுக்குள்ளே சூடாமணியாக உயர்ந்து நிற்பவன்; சித்தர்களுக்குள்ளே சிகாமணி; தெளிந்த ஞான நிலை அடைந்துள்ள

தூய முனிவர்களுக்குள்ளே சூடாமணிபோல் சிறந்தவன்; யோகியர்க்குள்ளே சிகாமணி; குற்றமற்ற கவி சொல்ல வல்ல நாவள்ம் உடைய பாவலர்க்குள்ளே சிகாமணி; நாதர்களுக்குள்ளே சிகாமணி; அவனைச் சரண்புகுந்துள்ள என் உள்ளத்தே எப்பொழுதும் குடிகொண்டிருக்கும் தெய்வசிகாமணி.

## திருநெல்லைத்தளி.

எல்லையி லாவொரு சோதி சரவணத் தெம்பெருமா
னல்லையி லாரும் வணங்கி னருள்புரி நம்பனமர்
நெல்லையி லார்தளி வீற்ற வருங்கொலு நேர்த்தியினைத்
தொல்லையி லாதடி யேன்கண்ட நன்னலந் தொன்னலமே. 6

எல்லையற்ற பேரொளி வடிவாகச் சரவணப் பொய்கையில் காட்சி அளித்த எம்பெருமானும், நற்குணம் இல்லாதோரும் வணங்கிநின்றால் அன்னார்க்கு எளிதில் அருள்புரியும் நமது நம்பிக்கைக்கு உரியவனும் ஆன செவ்வேள், திருநெல்வேலித் தலத்தில் அரிய கோவிலில் விழுப்பம் கொண்டு வீற்றிருந்து அருளும் அரிய திருக்கொலுவின் நேர்த்தியை எவ்வித இடையூறும் இல்லாமல் அடியேன் கண்டு அடைந்த நன்னலம் அவனது தொன்மையான அருள்நலத்தைப் புலப்படுத்துவதாகும்.

## திருவிச்சாபுரம்.

பாண்டியன் மாணிக்க வேத்திரப் பேரடி பட்டவனு
நீண்ட வயிற்சிவ னாமெம் பிரானு நிலவுதல் கண்
டாண்டையர் நாகரு மையரு மேத்துவிச் சாபுரத்தைக்
காண்டகை பெற்றவென் கண்களை நெஞ்சங் கருதுமன்றே. 7

அரிமர்த்தன பாண்டியனின் மாணிக்கப் பிரம்பால் பெரிய அடிபட்டவனான சிவபெருமானும், நீண்டுள்ள வேற்படை ஏந்தும் சிவனாகும் எம்பிரானான முருகப்பெருமானும் கோயில் கொண்டிருத்தலைக் கண்டு மேல் உலகத்துள்ளோரும், நாகலோகம் முதலான கீழ் உலகங்களில் உள்ளாரும், அறிவாய் உயர்ந்த ஞானியரும் போற்றுகின்ற விச்சாபுரம் எனும் திருத்தலத்தைக் காணும் தகைமை பெற்றுள்ள என் கண்களை எனது நெஞ்சம் நன்றியுடன் நினைக்கும்.

## திருநான்மாடக்கூடல்.

வான்மாடக் கூடல் களினுஞ் சிறந்து வயங்குமெழி
னான்மாடக் கூட னகர்தன்னி லெங்கோ னறுங்கடம்பு
தான்காணு மார்பனை யங்கயற் கண்ணியைச் சங்கரனை
நான்காணு மாறிங்கண் வாய்த்தது முற்செய்த நற்றவமே. 8

வானுலகத்துள்ள மாடங்கள், கூடங்கள் ஆகியவற்றினும் மிகச் சிறந்து விளங்கும் நான்மாடக் கூடல் என்னும் மதுரை நகரில் எமது தலைவனும் மணம்கமழும் கடம்ப மலர் மாலை அணிந்துள்ள திருமார்பை உடையவனும் ஆன செவ்வேளையும், அங்கயற்கண்ணி அம்பிகையையும், சோமசுந்தரப் பெருமானையும் நான் தரிசிக்குமாறு இங்கு வாய்த்தது நான் முற்பிறவியில் செய்த நல்ல தவத்தின் பயனே ஆகும்.

## திருச்சேதுமத்தி.

கார்சேர் கடனனி சூழ்சேது மத்தியிற் காகுத்தனா
ரேர்சேர் விபூதி யணிந்துபூ சித்திட்ட வீச்சுரனைச்
சீர்சேர் சதங்கைத் திருத்தாள னென்றனைத் தேடிவரு
நார்சேர் குகேச னெனவெண்ணி யன்பொடு நாடுவலே. 9

கரியமேகங்கள் குழுமியுள்ள கடல் நன்கு சூழ்ந்திருக்கும் திருச்சேதுமத்தியில், இராமபிரான் எழில்தரும் திருநீற்றை முறைப்படி அணிந்துகொண்டு வழிபட்ட சிவபெருமானை, சீர்மைமிக்க சதங்கை அணிந்துள்ள திருவடிகளை உடையவனும், என்னைத் தேடிவரும் பேரன்பு உடையவனுமான குகேசப்பெருமான் என்றே கருதி அன்போடு நாடி நிற்பேன்.

எல்லாங் குமாரப் பெருமாளென் றோர்ந்திடு மென்னகத்தே
நல்லான் பருதிக் குலராமன் பூசித்த நாதனையு
மல்லாஞ் சுரியற் பருவத வர்த்தனி யம்மையையும்
வல்லான் சிவசண் முகன்றானென் றெண்ணி வணங்குவலே. 10

அனைத்துமே குமரப்பெருமாளின் அருள்தான் என உறுதியாகக் கருதும் எனது உள்ளத்தே, நல்லவனும் சூரியகுலத் தோன்றலுமான இராமபிரான் வழிபட்ட சிவபெருமானையும், கருமை செறிந்த அழகுமிக்க கூந்தலை உடைய பர்வதவர்த்தனி

அம்பிகையையும், எல்லாம் வல்ல சிவசண்முகன்தான் என எண்ணி வணங்கி நிற்பேன்.

## திருவிராமேச்சுரம்.

தராமேற் றிகழ்துறக் கத்தவர் பேற்றினைச் சாற்றிடினு
மராமேற் புனையிறை யோனும் பனிமலை யான்மகளு
மராமேற் புனையயி லீசனு நன்கு வதிபதியா
மிராமேச் சுரமுதித் தோர்தவப் பேறிங் கியம்பரிதே. 11

பூமிக்கு மேம்பட்டதாகத் திகழும் துறக்க உலகில் வாழும் தேவர்களின் பெருமையை எடுத்துக் கூற முடிந்தாலும், பாம்பைத் திருமேனிமேல் அணிந்துள்ள சிவபெருமானும், இமவான் மடந்தையான பார்வதிதேவியும், வெண்கடம்பமாலையைத் தன்மேல் அணிந்துகொள்ளும் வேல் இறைவனும் நல்ல கோயில் கொண்டு விளங்கும் திருத்தலமாகிய இராமேசுவரத்தில் பிறந்தோர்களின் தவப்பயனின் பெருமை கூறுதற்கு அரியதே ஆகும்.

## திருத்தேவை - மேலைக்கோபுரவாயில்.

அண்டரு மோனரு மெண்டிசை நாதரு மம்புவிவாழ்
தொண்டரு நாளு நினைந்து பணிந்து துதிக்கவுள்ள
வண்டறு தேவை யணிமேலைக் கோபுர வாயினிலை
கொண்டகு கேசன் பதாம்புய மென்றனைக் கொள்பொருளே. 12

தேவர்களும் முனிவர்களும் எண்திசைகளுக்கும் தலைவர்களாக உள்ள இந்திரன் முதலானோரும், பூவுலகில் வாழும் தொண்டர்களும் நாள்தோறும் நினைந்து வணங்கித் துதிக்குமாறு குற்றமற்றுத் திகழும் திருத்தேவை எனும் தலத்தே (திரு இராமேசுவரத்தே) அழகிய மேலைக் கோபுர வாயிலிலே கோட்டத்தில் இருப்பிடம் கொண்ட குகேசப் பெருமானின் திருவடித் தாமரைகளே என்னை ஆட்கொள்ளும் தலைமைப் பொருளாகும்.

## பிரப்பன் வலசை.

எத்தனை யோதலஞ் சுற்றிவந் தேன்மன மெட்டுணையு
மத்தன் குமாரன் முருகனை நாட வடங்கவில்லை
பத்தர்கள் வாழ்பிரப் பன்வல சைச்செம் பதிதனிலே
சத்திய மாகக்கை கூடின தாலினித் தாழ்விலையே. 13

எத்தனையோ திருத்தலங்களுக்குச்சென்று வலம் வந்து நின்றேன்; என்மனம் தலைவனாம் குமாரப்பெருமான் எனும் முருகனை தியானிக்கும் நிமித்தமாக எள்ளளவுக்கும் அடங்கிநிற்க வில்லை. அடியார்கள் வாழும் பிரப்பன்வலசை என்னும் செம்மை வாய்ந்த தலத்தில் மன அடக்கம் என்பது சத்தியமாகவே கைகூடினது. ஆதலால் எனக்கு இனி எவ்விதத் தாழ்வும் நேராது.

## திருக்குன்றக்குடி.

சொல்லாரு நான்மறை தந்திர மாதி துதிக்குநெடு
வில்லாரும் வேற்கர வேந்தனெம் மீசனை மேதினியோ
ரெல்லாரு மேத்துகுன் றக்குடி தன்னினு மேயிறைஞ்சி
நல்லாரு றுந்திற னுற்றேன் சிவாநந்த நாட்டத்திலே. 14

மந்திரம் நிறைந்த நான்குவேதங்கள் ஆகமங்கள் முதலானவை போற்றும் நீண்ட, ஒளி நிறைந்த வேற்படை ஏந்திய கரத்தை உடைய அரசனும் எம் ஈசுவரனும் ஆகிய செவ்வேள் பரமனை, உலகத்தவர் அனைவராலும் போற்றப்படும் குன்றக்குடி எனும் தலத்தில் வணங்கிச் சிவானந்தப் பேற்றை அடைய நாட்டம் கொள்வதில் நல்லார் அடைந்துள்ள பெரிய ஆற்றலைப் பொருந்தி நின்றேன்.

## திருச்சிகண்டிமலை.

திருவே சிறந்தநன் மன்மத வாண்டுற்ற திங்கணண்டு
தருவே தனையில்பிற் பாக நவமி தனிற்கடப்ப
மருவேறு தோட்பெரு மானைச் சிகண்டி மலைதனிலே
கருவே புகாதுய் வணநா னிறைஞ்சிக் கனிந்ததுண்டே. 15

திருமலிந்து சிறந்துள்ள நல்ல மன்மத ஆண்டில் பொருந்திய மாதங்களுள் கற்கடக மாதத்தில் (ஆடிமாதத்தில்), அந்த மாத ராசியான கற்கடகம் (நண்டு) தரும் வேதனை இல்லாத அம்மாதத்துப் பிற்பாதியில் நவமி திதியில் கடம்பமலரின் மணம் நிறைந்துள்ள தோள்களை உடைய எம்பெருமான் முருகனைச் சிகண்டிமலை என்னும் தலத்தில், மேலும் பிறவாத வண்ணம் நான் வணங்கி மனம் கனிந்து நின்றது உண்டு.

## திருப்புத்தூர்.

பொன்னா மருஞ்செல்வி நீங்கா திலங்கு பொழில்வளஞ்சா
னன்னா டெனுந்திருப் புத்தூரின் மேவிய நந்திதன்னை
யென்னா தரம்படு செவ்வே ளெனத்தரி சித்திறைஞ்சி
யின்னா வுரங்கடிந் தேன்மனந் தான்குளிர்ந் தேனன்பரே. 16

பொன்மகளாம் திருமகள் நீங்காமல் விளங்கும் பொழில் வளங்கள் நிறைந்துள்ள நல்லநாடு எனப்படும் திருப்புத்தூரில் கோயில் கொண்டுள்ள சிவபெருமானை, என் அன்புக்கு மிகவும் உகந்த செவ்வேள் பரமன் என்றே கருதித் தரிசித்து வணங்கிக் கொடிய துன்பம் தந்த வலியிலிருந்து நீங்கி நின்றேன்; அன்பர்களே! மனம் குளிர்ந்து நின்றேன்.

## திருக்கானப்பேரூர்.

நீரகஞ் சார்நெடு நேமியிற் சீர்மை நிரம்புகின்ற
பேரகஞ் சார்திருக் கானநற் பேரூர்ப் பெரியவனை
யேரகஞ் சார்திருச் சேயவன் யாண்டு மிருப்பவனென்
றோரகங் கொண்டுவந் திப்பவர்க் கேம னுலகிலையே. 17

கடல்சூழ்ந்துள்ள இந்தப் பேருலகில் சீர்மை நிறைந்து பொலியும் பெரிய உள்ளிடப் பரப்புடைய திருக்கானப்பேரூர் (காளையார்கோயில்) எனும் தலத்தில் எழுந்தருளியுள்ள பெரியோனான சிவபெருமானைத் திருவேரகத்தில் எழுந்தருளும் சேயவனும் எங்கும் வியாபித்து இருப்பவனும் ஆன முருகன் என்றே கருதும் ஓர் உள்ளத்தைக் கொண்டு துதிப்பவர்களுக்கு இயமனுக்குரிய உலகு கிடையாது.

## திருவுருமாமலை:

தூமலி யன்புடை யார்நன் னடையைத் தொடரடியேன்
மாமலி நெல்லை நதியிற் றிருவுரு மாமலைமேற்
பாமலி நாவயின் மன்னெனு மெந்தையைப் பார்த்ததினம்
பேமலி மன்மத வாடிபிற் பக்கப் பிரதமையே. 18

தூய்மை மிகுந்துள்ள அன்புடையார்கள் கொள்ளும் நல்ல ஒழுக்க நெறியைக் கடைப்பிடித்து வரும் எளியேன், பெரிய வளம்

கொழிக்கும் நெல்லை நதியில் (தாமிரபரணி ஆற்றில்) நடுவில் உள்ள திருவுருமாமலையின் மேல், பாக்கள் செறிந்துள்ள நாவால் துதித்து, வேல் அரசன் எனும் எந்தையை நான் தரிசித்த நாள், மேகக் கூட்டத்தை மிகுதியாகக் காட்டும் மன்மத ஆண்டில், ஆடிமாதத்துக் கிருஷ்ண பக்ஷத்துப் பிரதமை நாள் ஆகும்.

## திருவெற்பு.

திருவானி லாவிடு குற்றால நாதர்தஞ் செல்வனையென்
வெருவானி தீர்த்தருள் வேலவ னைத்திரு வெற்புமிசைப்
பெருவானி லாது மளமள வென்றுறை பெய்விளம்பி
மருவானி யாரம்ப நான்கண்டு பூரித்த வைகலன்றே. 19

செல்வவளமும், தருக்களின் வளமும் திகழும் திருக்குற்றாலத்துச் சிவபெருமானின் திருக்குமாரனை, வெருட்சி தரும் துன்பங்களை யெல்லாம் தீர்த்து அருளுகின்ற என் வேற்பெருமானை, மலையின் மேல் பெரிய கருமேகக் கூட்டங்கள் இல்லாமலேயே மளமள என மழைபெய்யும் விளம்பி ஆண்டில் பொருந்தும் ஆனித் திங்களின் தொடக்க நாள் நான் தரிசித்துப் பூரித்துநின்ற நன்னாள் ஆகும்.

## திருப்பாலைவனம்.

வேலை யுடுத்த விபுலைவாழ் நர்க்கு விவேகநெறி
நூலை வகுத்தத னுட்பமுங் காட்டியந் நோன்மைவழிக்
காலை யளித்தருண் முக்கண்ண னாளுங் கனிவொடுவாழ்
பாலை வனத்திற் குமரனை நன்கு பணிகுதுமே. 20

கடலை ஆடையாக உடுத்துள்ள இவ்வுலகில் வாழ்கின்ற மனிதர்களுக்கு நுண்ணிய அறிவுநெறியைக் காட்டும் நூல்களை வெளிப்படுத்தி, அவற்றின் நுட்பத்தையும் தக்கோர் வழியே புலப்படுத்தி, அந்த நூல்கள் கூறும் நுட்பவழியிலேயே தனது திருவடிகளை அளித்தருளும் முக்கண்ணனாம் சிவபெருமான் எப்போதும் கனிந்த அருளுடன் வெளிப்பட்டு இருக்கும் திருப்பாலைவனத்தில் குமரப்பெருமானைத் தரிசித்து நன்கு பணிந்து நிற்போமாக.

## வெவ்வேறு சந்தர்ப்பம்.

எழுத்துறை மேனூ னனிபுக ழெம்மா னெனுங்குகநின்
வழுத்ததர் நிற்குமென் முன்சென்னை வாழுநின் மாண்படியைத்
தொழத்தகு மன்பர் தெரிவித்த வாறுன் றொடர்பிலின்னுந்
தழைக்குக நற்சைவ சித்தாந்த வேதத் தமிழ்ச்சபையே. 21

ஆற்றல் மலிந்த எழுத்துக்கள் செறிந்துள்ள மேலான அருள்நூல்கள் நன்கு புகழ்ந்து கூறும் குகப்பெருமானே! நின்னைப் போற்றும் நல்வழியில் நிற்கும் என்முன்னே, சென்னையிலே வாழும் நினது மாண்புசால் திருவடிகளைத் தொழும் தகைமை சான்ற அன்பர் ஒருவர் தெரிவித்தது போல, நினது அருளின் தொடர்பால் நன்மை மிகும் இந்தச் சைவசித்தாந்த வேதத் தமிழ்ச்சபை மேன்மேலும் தழைத்து விளங்குவதாக.

சடைக்கற்றை தாங்குவ்விச் சங்கர னார்தந்த தங்கவயிற்
படைக்கையெந் தாயறி யாமையி னான்செய்த பண்டைவினை
தொடைக்கட்டி யோடரைக் கட்டியு மாநனி தோன்றியென்னை
நடக்கவொட் டாதுசெய் கின்றது சென்னை நகர்தனிலே. 22

சடைக்கற்றையைத் தாங்கி மிளிரும் சிரசை உடைய சிவபெருமான் தந்தருளிய, தங்கமயமான வேற்படை ஏந்தும் கை உடைய எந்தையே! அறியாமையால் நான் செய்துள்ள முந்தைய தீவினைப்பயனே இப்போது, இந்தச் சென்னை நகரில் தொடைக் கட்டியாகவும், இடுப்பில் உள்ள கட்டியாகவும் மிகுந்து தோன்றி என்னை நடக்கவொண்ணாமல் செய்கின்றது.

நெல்வேலிச் சிக்க நரசைய னூரினன் னேர்வடக்கே
கல்வேலை செய்த மடஞ்சென்று காடாயக் காரர்கண்டு
சில்வேலை பூசைக் கிடமீகென் றேனவர் தெவ்வுரைத்தார்
வெல்வேலை யேந்திறை யேயிந்த வாறும் விளைந்ததென்னே. 23

திருநெல்வேலியைச் சார்ந்த சிக்க நரஸையன் என்னும் ஊரில் வடக்குப்புறமாகக் கல்வேலைப்பாடு செய்யப்பட்டிருந்த ஒரு மடத்துக்குச் சென்று, அங்கே காவியாடை உடுத்தியிருந்த சிலரைக் கண்டு முருகனைப் பூசை செய்வதற்காகச் சிறிதுநேரம் இடம் அளித்திடுமாறு வேண்டினேன். அப்போது அவர்கள் இடம்

அளிக்காமல் கொடிய சொற்களைக் கூறினர். வெற்றி வேற்படையை ஏந்தும் இறைவனே! இந்தவாறும் நடந்ததற்கு என்ன காரணம்?

**தே**ன்பட்ட வாய்வண் டறைவெற்பு மேல்வாண தீர்த்தமதி
லூன்பட்ட காயந் தனையே நனைப்பா னுவந்துசென்று
நான்பட்ட பாடுன் றிருவுள்ள மொன்றே நனியறியுங்
கூன்பட்ட சோதிப் பிறைமுடித் தோனிளங் கோமகனே. 24

வளைந்துள்ள, ஒளியார்ந்த இளம்பிறையைச் சடையில் முடித்துள்ள சிவபெருமானின் இளைய கோமகனே! தேன் பொருந்திய வாயை உடைய வண்டுகள் ரீங்காரம் இடும் மலைமேல் உள்ள வாண தீர்த்தத்தில் ஊன் பொருந்திய இந்த உடம்பினை நனைப்பதற்காக மகிழ்வோடு சென்று, நான் பட்ட கஷ்டங்களை நினது திருவுள்ளம் மட்டுமே அறியும்.

**சே**மத்தை வெல்லினுஞ் சாமத்தை வெல்லினுந் தீயவர்செய்
யோமத்தை வெல்லினு மீமத்தை வெல்லினு மோங்குசிங்க
வீமத்தை வெல்லினும் வீரத்தை வெல்லினும் வீறியெழு
காமத்தை வெல்வ தரிதுகண் டீர்குகற் கண்ணுநரே. 25

குகப்பெருமானைத் தியானித்து இருக்கும் அன்பர்களே! வளம்மிக்க வாழ்வு வேண்டும் எனும் ஆசையை வென்றாலும், பொன்னாசையை வென்றாலும், கொடியோர் செய்யும் அபிசார வேள்வியின் பயன்களை வென்றாலும், இறப்பை வென்றாலும், பொங்கிப் பாய்ந்துவரும் சிங்கத்தின் பராக்கிரமத்தை வென்றாலும், பகைவர்களின் வீரத்தை வென்றாலும், மனக்கட்டுப்பாட்டையும் மீறித் தோன்றும் காமத்தை வெல்லுதல் என்பது அரியதே என உணர்வீர்களாக.

**நோ**யின்மை செல்வச் செருக்கின்மை சோம்பின்மை நொய்மையின்மை
பேயின்மை பேதைக் குணமின்மை சாமிசொற் பீடிகழும்
வாயின்மை யாயுட் குறைவின்மை பேருண்டி மாந்தலின்மை
தீயின்மை வேண்டுமன் றோசிவ யோகிற் றிளைப்பவர்க்கே. 26

குற்றமற்ற சிவயோக நெறியில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு நோயின்மை, செல்வச் செருக்கு இன்மை, சோம்பல் இன்மை, மனத்தளர்ச்சி இன்மை, பேய்போன்று விடாப்பிடியாக இருக்கும் தன்மை இன்மை, பேதைக் குணம் இன்மை, குருவின்

உபதேசமொழிகளை இகழ்ந்து பேசும் வாய் இன்மை, ஆயுள்குறைவு இன்மை, பேருணவு கொள்ளும் தன்மை இன்மை, கொடுமை இன்மை ஆகிய இவை அனைத்தும் அவசியமாக வேண்டுமன்றோ!

சவ்வுந் தசையு மெலும்புஞ் செறிபுன் சடத்தொடர்புந்
தெவ்வுந் திரிபுஞ் செயற்கையு நீங்குஞ் சிதம்பரச்சீ
ரொவ்வும் படிமன மும்படு மோம்ரீமை யுங்கிலியு
மவ்வுஞ்சவ் வுஞ்ச ரவண பவாய நமவெனவே. 27

"ஓம் ஹ்ரீம் ஐம் க்லீம் ஔம் ஸௌம் சரவணபவாய நம:" என்னும் இந்த உயரிய மந்திரத்தைத் தக்க குருமூலமாக உபதேசம் பெற்றுக் கொண்டு ஜபித்து வந்தால் கொழுப்பும் தசையும் எலும்பும் செறிந்துள்ள இந்த அற்பமான தூல உடம்பின் தொடர்பும், பகைமையும், அடிக்கடி மாறுபடும் மனோபாவமும், செயற்கையாகச் சேர்ந்துள்ள குறைபாடுகளும் இழிவுகளும் அடியோடு நீங்கும்; ஞான வெளிக்குரிய சீரிய நிலைகளான ஒளி, வியாபகம் முதலான குணங்களைப் பொருந்தி நிற்கும் வகையில் மனமும் பக்குவப்பட்டு நிற்கும்.

தேங்கட லாய பராபர சண்முகன் சேத்திரமாம்
வேங்கடந் தன்னையைந் தாயுதற் காக்கியவ் வேங்கடத்திற்
பூங்கடங் கொள்ளரி யைக்குகன் பூசித்த தாப்பொறித்தோர்
தாங்கடம் விட்டபின் பேதடைந் தாரோ சழக்குடனே. 28

இன்பக் கடலாக விளங்குபவன் பரமும் அபரமும் ஆனவன் - என விளங்கும் அறுமுகப் பரமனின் திருத்தலமாகிய திருவேங்கட மலையை ஐந்தாயுதங்கள் கொண்டுள்ள திருமாலுக்கு உரியதாக்கி, அந்த வேங்கடத்தில் பொலிவு மிக்க திருமேனி கொண்டுள்ள திருமாலைக் குகப்பெருமான் வழிபட்டதாக வீணுரை எழுதி வைத்தோர், தாம் உடலை நீத்தபிறகு, நீங்காத பொய்க்குற்றமாகிய பாவத்துடன் சேர்ந்து எந்த கதியை அடைந்தார்களோ!

சடப்பொரு ளுள்ளு மிருக்கின்ற சாமி சடப்பொருட்குந்
திடப்பொரு ளாமுயி ரின்கண் விளங்கு திறமதிகந்
திடப்பொரு ளுக்குந் திடப்பொரு ளாமது சீகண்டனென்
னடப்பொருண் மூர்த்தியின் மின்ன லதிகநன் னட்பினரே. 29

நன்மை தரும் நட்புத்திறத்தில் உள்ளவர்களே! சடப் பொருள்களின் உள்ளேயும் வியாபக சக்தியால் கடவுள் விளங்குவார், அத்தகைய சடப்பொருள்களைக் காட்டிலும் உறுதிப்பொருளாக இருக்கும் உயிர்களின் உள்ளே அந்தக் கடவுள் வியாபித்து விளங்கும் திறம் அதிகம்; அந்த உறுதிப்பொருளான உயிரைக் காட்டிலும் மேம்பட்ட உறுதியுடன் திகழும் அக்கடவுள் ஸ்ரீகண்ட சிவம் என்னும் நடராஜ மூர்த்தியிடம் விளங்கும் திறம் மேலும் அதிகமானதாகும்.

நிலத்தி லழகுக் கழகுநற் கல்வி நிகழதுபோ
னலத்தி னடத்த லதினு மழகரு ணாட்டமுயர்
தலத்தி லிருத்த லதினு மழகயிற் சாமியினான்
மலத்தி னடலறுத் துய்த்த லதனினு மாவழகே. 30

இந்நிலவுலகில் அழகுக்கு அழகு நல்ல கல்வியாகும்; அதுபோல், நன்னெறியில் நடத்தல் கல்வியைக் காட்டிலும் அழகானது; அருள் வேட்கை மிகுந்து விளங்கும் தலத்தில் வசித்தல், அதைக் காட்டிலும் அழகானது. வேல் இறைவனால் ஆணவ மலத்தின் வன்மைய அழித்து உய்திபெறுதல், தலத்தில் இருத்தலைக் காட்டிலும் அழகானது.

உலகத் தெதிலுங் கனநீளங் கண்ணறை யுள்ளமைபோ
லிலகத் துவிதப் பொருட்கண்ணு மெய்யறி வின்பெனச்சொன்
னலகத் தனுண்மை யொருமூன் றையுங்குகன் ஞானமில்லார்
விலகத் தமேசெய்து சேர்க்கையென் றேதம் விரும்புவரே. 31

உலகத்தில் உள்ள எந்தப் பொருளிலும் கனம், நீளம், அகலம் எனப்படும் மூன்று அளவுகளும் உள்ளது போன்றே, நித்தியமாக விளங்கும் அத்துவித வத்துவாம் இறைவனிடத்தும் உண்மை (சத்) அறிவு (சித்) இன்பம் (ஆனந்தம்) எனக் கூறப்படும் மூன்றும் உள்ளன. செவ்வேள் பரமனிடம் இயல்பாக உள்ள இந்த மூன்றையும், குகனைப் பற்றிய தெளிவான ஞானம் இல்லாதவர்கள், உண்மை நெறியைவிட்டு விலகி நிற்குமாறு விபரீதமான பொருள் கூறி, இம்மூன்றும் தனித்தனியே இருந்து பின்னர்ச் சேரும் சேர்க்கை நிலையைக் கூறிக் குற்றம் இழைப்பதையே விரும்புவார்கள்.

குறுந்தொழி லிற்றென வோர்ந்தறி யாமைக் குறும்பதனைத்
தெறுந்தொழில் செய்குகன் றேசரு ணாடுந் திறமதொன்றே
நறுந்தொழி லல்லாத யாவுமெஞ் ஞான்று நலமொழிந்த
வெறுந்தொழி லென்றறி வீர்மா னவவுரு மேயவரே. 32

மனித வடிவத்தைப் பொருந்தி உள்ளவர்களே! குறுக்கி வைக்கும் கொடுந்தொழில் இது என உணர்ந்து அறியாததாகிய குறும்பினை ஒழிக்கும் அருட்செயலைச் செய்யவல்ல குகப் பெருமானின் ஒளிமயமான அருட்பேறு மட்டுமே நாடி நிற்கும் திறமாகிய ஒன்றுதான் நன்மை தரும் தொழில். அதைத் தவிர்த்து உள்ள மற்றவை. அனைத்தும் எப்பொழுதும் நன்மையினின்று விலகி நிற்கும் வீண்செயல்களே என அறிவீர்களாக.

எவரம் பரத்தை யடைபொருட் டுப்பொழிக் கின்றனரோ
வவரம் புவிக்கு ளடையா ரவத்தைக ளங்ஙனமே
துவரம் பருப்புண் டிடின்வயிற் றிற்புழுத் தோன்றுமிந்த
விவரம் பழக்கத் தறிந்துசொன் னேன்குரு வேட்கையரே. 33

குருவின் திருவருளைப் பெறுவதில் வேட்கை கொண்டிருப்ப வர்களே! எவர், ஞானவெளியாக மின்னும் செவ்வேளை அடையும் பொருட்டு உணவில் உப்புச் சேர்த்து உண்ணும் செயலைத் தவிர்க்கின்றாரோ அவர் அழகிய இந்நில வுலகில் உடல் தொடர்பாக நேரும் பல்வேறுபட்டனவான துன்பங்களையும் அடைய மாட்டார்கள்; அவ்வாறே துவரம் பருப்பைச் சேர்த்து உண்டாலும் வயிற்றில் புழுக்கள் தோன்றும். இந்த விவரத்தை என் அனுபவத்தால் அறிந்து சொல்லி வைத்தேன்.

நூலாத்தர் பாசமெய் யென்பது கொண்டிந்த நோயுலகை
மேலாத்த முண்ணினை வோர்பரி பூரண மெய்யுணர்வு
சாலாத்த ளைக்குட் கிடப்பரே யெங்குஞ் சதாசிவமாம்
வேலாத்த னென் றுள்கு வோர்ஞான வீட்டின்ப மேவுவரே. 34

சித்தாந்த நூல் ஆசிரியர்கள் பாசம் உள்பொருளே எனக் கூறுவதை உளத்தில் கொண்டு, துன்பமயமான இவ்வுலக வாழ்வை மேம்பாடு உடையதாகக் கருதுவோர், பரிபூரணமான பதிஞானம் பொருந்தாத பெத்த நிலையிலேயே, தளைகளுக்கு உட்பட்ட நிலையிலேயே கிடப்பார்கள்; பார்க்கும் இடம் எங்கும்

சதாசிவமாகவே விளங்கும் வேல் இறைவனே நிறைந்துள்ளான் என நினைவோர் வீடுபேற்று இன்பத்தை அடைவார்கள்.

சாம்பொழு தோர்செவி கேட்கினு நன்றே தரும்புகழை
யாம்பொழு தெல்லா மறைந்தவெம் மானல் லருணகிரி
யோம்பொழு தாக்கண் டிருள்கீண் டடைந்த வொருவனையே
போம்பொழு துள்ளத் திருத்துமின் பந்தம் பொடிபடுமே. 35

ஒருவன் இறக்கும் தறுவாயிலேனும் செவியில் ஒருமுறை கேட்டாலும் நன்மையைத் தரவல்லதாகிய திருப்புகழைத் தமக்கு வாய்க்கும் பொழுதெல்லாம் மிகுத்த பலமுடன் பாடிய எம்மான், நல்லருள் புரியும் அருணகிரிப்பெருமான், வாழ்நாளை 'ஓம்' மயமான பொழுதாகவே கண்டு ஆணவ இருளைச் சிதைத்து அடைந்த ஒப்பற்ற முருகப்பெருமானையே, உங்கள் வாழ்நாள்கள் ஒவ்வொன்றாகச் சென்றுக் கொண்டிருக்கும் பொழுதே உள்ளத்தில் இருத்துங்கள். உங்களைப் பிறவிக்கு உட்படுத்தும் தளைகள் எல்லாம் பொடிபட்டுப் போகும்.

## திருத்தல தரிசன காலங்களிற் பாடியருளிய கட்டளைக்கலித்துறைகள் முற்றிற்று.

குமரகுருபரன் றிருவடிவாழ்க.

திருச்சிற்றம்பலம்.

# திருவலங்கற்றிரட்டு – பல்சந்தபரிமளம்

## செய்யுள் முதற் குறிப்பகராதி


| பாட்டு | பக்கம் |
|---|---|
| **அ** | |
| அகமன | 101 |
| அகிலநிறை | 62 |
| அங்கிளிநே | 293 |
| அசைவற்ற | 130 |
| அடிகே | 27 |
| அடியவ | 79 |
| அண்டநேமி | 163 |
| அதுவாம் | 40 |
| அந்தத்தினை | 92 |
| அம்பொனோ | 224 |
| அயன்மால் | 86 |
| அரியமூல | 162 |
| அரிறபு | 120 |
| அருக்கம் | 53 |
| அருட்பாங் | 315 |
| அருணிலை | 140 |
| அருணைநல் | 185 |
| அருண்மு | 244 |
| அருவா | 35 |
| அருவேல | 302 |
| அலைவளர் | 235 |
| அல்காத | 51 |
| அல்லில் | 83 |
| அவமெனு | 80 |
| அவனை | 135 |
| அழகு | 240 |
| அழுக்கதனை | 127 |
| அளியு | 314 |
| அள்ளா | 289 |
| அறியாமை | 146 |
| அறிவான | 233 |
| அறிவில் | 209 |
| அறிவிற்பெரி | 115 |
| அறிவுயிர்கட் | 126 |
| அறிவே | 277 |
| அறுகா | 223 |
| அறைந்த | 70 |
| அனாதிசிவ | 75 |
| அன்பர்கன்பி | 56 |
| அன்பூற் | 28 |
| அன்னைக்கோ | 24 |
| **ஆ** | |
| ஆஅன் | 250 |
| ஆகமொன்று | 279 |
| ஆக்கித் | 34 |
| ஆசறு | 185 |
| ஆசற்ற | 34 |
| ஆசிறம் | 261 |
| ஆடராவணி | 213 |
| ஆண்டன்மை | 128 |
| ஆண்டொரு | 160 |
| ஆதரமார் | 41 |
| ஆதிமுன்பதி | 147 |
| ஆதியில் | 52 |
| ஆயுமிக | 50 |
| ஆரற்பூ | 56 |
| ஆறொன்று | 285 |
| ஆற்றலிவ் | 60 |
| ஆனையேறு | 107 |
| ஆன்மாக்க | 28 |
| **இ** | |
| இகலுலகி | 38 |
| இச்சையொழி | 32 |
| இதயநாவுள | 315 |
| இப்பாரெமக் | 231 |
| இரப்பவ | 80 |
| இருட்டளை | 48 |
| இருட்டை | 47 |
| இருதிறம் | 102 |
| இருபொரு | 312 |
| இருவிழி | 312 |
| இருளறைப் | 113 |
| இருள்பொரு | 37 |
| இலகம்பர | 276 |
| இறந்துபிற | 50 |
| இறைமறை | 273 |
| இறையென | 62 |
| இன்பக்கடலா | 56 |
| இன்றிருந் | 216 |
| இன்று சர | 57 |
| **ஈ** | |
| ஈசனை | 165 |
| ஈடிலா | 93 |
| ஈராயிர | 277 |
| ஈரைந் | 219 |
| **உ** | |
| உச்சவிசை | 156 |
| உடலிருப் | 58 |
| உடலினு | 90 |
| உடலே | 145 |
| உணவின் | 98 |
| உண்டாகி | 100 |
| உயர்வள்ள | 301 |
| உருவமான | 114 |
| உரைமன | 291 |
| உலகவம்பு | 154 |
| உலகா | 61 |
| உலகினி | 108 |
| உலகுளீர் | 194 |
| உள்ளபடி | 38 |
| உனையலா | 93 |
| **ஊ** | |
| ஊரும் பேர | 218 |
| ஊனுண்டி | 95 |
| **எ** | |
| எஃஃக | 49 |
| எஃக | 289 |
| எக்குரு | 109 |
| எங்கணுமில | 288 |
| எச்சீவ | 39 |
| எட்டெ | 210 |
| எண்ணரிய | 267 |
| எண்ணிறந்த | 228 |

| பாட்டு | பக்கம் |
|---|---|
| எண்ணெய் | 97 |
| எதிலே | 74 |
| எத்தலத்து | 161 |
| எந்தக்கரும | 89 |
| எந்நெறி | 313 |
| எமக்கபரா | 47 |
| எம்பெரு | 253 |
| எயிலேறிய | 272 |
| எரியிற் | 296 |
| எழுத்தரி | 304 |
| எள்ளுக் | 208 |
| எனக்கு | 263 |
| என்றுமு | 29 |
| என்னறிவா | 51 |
| என்னா | 45 |
| **ஏ** | |
| ஏக | 208 |
| ஏசறுசென் | 221 |
| ஏமருள் | 64 |
| ஏரார்பெண் | 252 |
| ஏர்க்கு | 255 |
| **ஐ** | |
| ஐம்புல | 91 |
| **ஒ** | |
| ஒருசிவ | 237 |
| ஒருநினை | 291 |
| ஒருபூரணசிவ | 141 |
| ஒருபூரணவறி | 281 |
| ஒருமாத்திரை | 299 |
| ஒருவனுரு | 107 |
| ஒன்றாய் | 222 |
| ஒன்றி | 59 |
| ஒன்றை | 53 |
| ஒன்றொடி | 121 |
| **ஓ** | |
| ஓதியுணர் | 52 |
| ஓந்தாரகப் | 283 |
| ஓயாத | 230 |
| ஓருருவுமோர் | 130 |
| ஓருருவும் | 198 |
| ஓரைந்தை | 273 |
| ஓர்ப்பா | 288 |
| ஓவலில் | 256 |

| பாட்டு | பக்கம் |
|---|---|
| **க** | |
| கங்கைப | 245 |
| கங்கைமைந் | 54 |
| கடல்கடை | 190 |
| கடல்கவிமண் | 318 |
| கடிகொ | 58 |
| கண்ணன் | 230 |
| கண்ணிணை | 311 |
| கத்தனன் | 311 |
| கந்தன்சுகங் | 64 |
| கந்தன் பாத | 61 |
| கமழ்கடம் | 212 |
| கரத்திலமர் | 84 |
| கரத்திற்சில | 36 |
| கரவயிற் | 225 |
| கரியபிரான் | 267 |
| கருவியாவு | 209 |
| கருள்கீழ் | 290 |
| கலந்த | 148 |
| களிப்போ | 48 |
| கன்மநெறி | 269 |
| **கா** | |
| காசுபதி | 294 |
| காதன் | 257 |
| காமமுங் | 31 |
| காரீ | 222 |
| கார்த்திகை | 123 |
| காலமறி | 126 |
| காலமென் | 81 |
| காலையின் | 152 |
| காவாழ் | 259 |
| கானார் | 258 |
| கானி | 258 |
| காறில் | 51 |
| **கி** | |
| கிரிக்கா | 314 |
| **கு** | |
| குககுக | 238 |
| குகனடி | 79 |
| குகனருண் | 82 |
| குடிலைமெய் | 21 |
| குமரதாரக | 116 |
| குமரசம்பு | 139 |

| பாட்டு | பக்கம் |
|---|---|
| குருகு | 217 |
| குளவம் | 261 |
| **கூ** | |
| கூடுந | 219 |
| கூவுஞ் | 44 |
| **கே** | |
| கேழார் | 51 |
| கேழ்த்தா | 45 |
| **கை** | |
| கைவரு | 216 |
| **கொ** | |
| கொடியப | 118 |
| கொலைபுரி | 129 |
| **கோ** | |
| கோமள | 137 |
| கோமி | 239 |
| கோவென்ற | 226 |
| **ச** | |
| சகத்திலுஞ் | 310 |
| சகமுஞ் | 115 |
| சகரமுத | 148 |
| சடமாசுக | 140 |
| சததங் | 49 |
| சதாநினை | 28 |
| சதுரர் | 211 |
| சமரமுதர் | 304 |
| சமானமில் | 157 |
| சரவண | 112 |
| சருமயத்தை | 97 |
| சருவ | 211 |
| சனகரா | 58 |
| **சா** | |
| சாத்து | 97 |
| சாந்தமெ | 95 |
| சானுமண் | 159 |
| **சி** | |
| சித்தசித் | 60 |
| சித்தியின் | 80 |
| சித்தெ | 59 |
| சிவஞ்சத்தி | 51 |
| சிவதவ | 118 |
| சிவமு | 169 |

| பாட்டு | பக்கம் |
|---|---|
| சிவயோக | 105 |
| சிவாக | 72 |
| சிறப்பு | 296 |
| சிறப்புறு | 139 |
| சின்மைசொல் | 43 |
| **சீ** | |
| சீஇர் | 241 |
| சீராருநன் | 23 |
| சீறுருவை | 50 |
| சீர்பூக்கு | 191 |
| சீலங்கொ | 129 |
| சீலந் | 24 |
| சீவசத்தி | 132 |
| சீற்ற | 55 |
| **சு** | |
| சுப்பிர | 80 |
| சுருதியொரு | 300 |
| **சூ** | |
| சூரனை | 309 |
| சூரியன் | 257 |
| சூரிருஞ் | 311 |
| **செ** | |
| செத்தறச் | 230 |
| செம்மை | 83 |
| செம்மைநாய் | 254 |
| செய்துள | 82 |
| செய்யு | 240 |
| செய்தவினை | 38 |
| செய்வினை | 214 |
| செருநர் | 260 |
| செல்வப் | 262 |
| செவ்விய | 313 |
| செனித்த | 287 |
| **சே** | |
| சேடை | 264 |
| சேய | 225 |
| சேயவ | 103 |
| சேயா | 270 |
| சேயை | 123 |
| சேய்நீயு | 52 |
| சேவற் | 63 |
| சேவிருக் | 194 |

| பாட்டு | பக்கம் |
|---|---|
| **சொ** | |
| சொக்க | 221 |
| சொல்லா | 67 |
| சொல்லானும் | 200 |
| சொல்லுய | 236 |
| **ஞா** | |
| ஞானமின் | 41 |
| ஞானவயில் | 36 |
| **த** | |
| தகையயி | 234 |
| தங்குரு | 110 |
| தந்நாரர் | 30 |
| தரும | 224 |
| தருமமும் | 77 |
| தலமுறை | 133 |
| தலைகுனித | 170 |
| தற்புருட | 26 |
| தனதுரை | 311 |
| தனியாய் | 65 |
| தன்மதி | 111 |
| தன்னின் | 113 |
| **தா** | |
| தாதாமா | 303 |
| தாதுவிஞ்சு | 146 |
| தாமேவு | 251 |
| தாவா | 247 |
| **தி** | |
| திங்கட் | 25 |
| திண்மைத் | 50 |
| திருத்தல | 81 |
| திருமருவு | 193 |
| திருமுரு | 223 |
| திருவறு | 193 |
| திருவாரும் | 29 |
| திருவே | 241 |
| தில்லையிற் | 210 |
| திறத்த | 136 |
| **தீ** | |
| தீங்காஞ்செயன | 124 |
| தீதறு | 265 |
| தீதற்ற | 60 |
| தீயார் | 248 |

| பாட்டு | பக்கம் |
|---|---|
| தீயார்தெறு | 287 |
| தீனர் | 225 |
| **து** | |
| துங்கவின் | 315 |
| துட்டீர்க்கு | 300 |
| துதிரசத் | 142 |
| துப்புரவு | 50 |
| துவம்பத | 68 |
| துன்பு | 296 |
| **தூ** | |
| தூஉ விசாக | 48 |
| தூஉ மாமணி | 250 |
| தூக்கநிலை | 33 |
| தூமா | 114 |
| **தெ** | |
| தெரிதற் | 160 |
| தெவ்வற்ற | 186 |
| தெவ்விறந்த | 40 |
| தெளிபத்தி | 215 |
| தெள்ளிய | 246 |
| **தே** | |
| தேடரு | 245 |
| தேவரிறை | 62 |
| தேவாதிதேவ | 106 |
| தேவென் | 103 |
| தேனார் | 60 |
| தேனுறழ் | 263 |
| **தொ** | |
| தொடலை | 117 |
| தொடைமிலை | 195 |
| தொண்டக | 254 |
| தொண்டர் | 56 |
| தொம்பத | 71 |
| தொன்மை | 134 |
| **தோ** | |
| தோதகஞ் | 216 |
| தோமில் | 83 |
| தோலார் | 161 |
| **ந** | |
| நமனணு | 191 |
| நம்பா | 248 |
| நல்லை | 153 |

| பாட்டு | பக்கம் |
|---|---|
| நல்வினை | 31 |
| நறுநரலை | 196 |
| நறுமீனே | 128 |
| நற்றொண்டர் | 33 |
| நனவிற் | 131 |
| நனிசூழ் | 242 |
| நனிநாடு | 190 |
| நன்றா | 52 |
| நன்றிரு | 59 |
| நன்று | 59 |
| **நா** | |
| நாக | 55 |
| நாடாண்டி | 295 |
| நாமா | 138 |
| நாம்பிரம | 42 |
| நாரண | 220 |
| நாரணன் | 291 |
| நாலொடிரு | 88 |
| நாளுந் | 58 |
| நாளுமுள் | 24 |
| நாற்றச் | 46 |
| நானிலையே | 292 |
| **நி** | |
| நிதநனி | 292 |
| நித்தக்குமர | 34 |
| நித்தனு | 312 |
| நிறைவிலனு | 99 |
| நினைத்தார் | 35 |
| நினைவி | 108 |
| **நீ** | |
| நீக்க | 231 |
| நீடை | 227 |
| நீண்டவைச் | 242 |
| நீயெனுந் | 69 |
| நீரொலிபோ | 132 |
| நீற்கண்டன | 259 |
| **நு** | |
| நுதியா | 305 |
| **நூ** | |
| நூல்கடா | 27 |
| நூல்வழி | 237 |
| **நெ** | |
| நெஞ்சி | 136 |
| நெஞ்சு | 231 |
| நெடியபசுந் | 125 |
| **நோ** | |
| நோவறுபவ | 316 |
| நோவடி | 91 |
| **ப** | |
| பகவற்கு | 53 |
| பகவானறு | 244 |
| பஞ்சபு | 94 |
| படரறு | 91 |
| படவ | 164 |
| பட்டாங் | 85 |
| பணமலி | 236 |
| பண்டைக் | 173 |
| பத்தர் குழாமும் | 289 |
| பத்தி | 42 |
| பந்தக் | 305 |
| பந்தப்பா | 229 |
| பந்தம | 90 |
| பந்தமறு | 294 |
| பப்புப் | 308 |
| பலதுன்பு | 286 |
| பற்பல | 102 |
| **பா** | |
| பாராளும் | 47 |
| பார்நல | 79 |
| பார்வி | 57 |
| பாலுந்தி | 197 |
| பாவம் | 25 |
| **பி** | |
| பிணிசெய் | 297 |
| பிணிமுகங் | 233 |
| பிரமக் | 43 |
| பிரமா | 116 |
| பிருதிவி | 155 |
| பிறக்கும் | 46 |
| பிறப்பிறப் | 57 |
| பிறவி | 120 |
| **பீ** | |
| பீடுடை | 121 |
| **பு** | |
| புகழ்பி | 143 |
| புங்கவர் | 289 |
| புரச்சகத் | 310 |
| புலைமாதருள் | 272 |
| புனல்கொண்டு | 178 |
| **பூ** | |
| பூத | 151 |
| பூமகடொழு | 166 |
| பூமணமே | 268 |
| பூமாப்பிழை | 295 |
| பூமியினை | 26 |
| பூமேவெ | 316 |
| பூரண | 134 |
| பூவாய | 229 |
| பூவின் | 35 |
| **பெ** | |
| பெண்ணி | 55 |
| பெத்த் | 112 |
| பெரிதிற் | 26 |
| பெரிதுஞ் | 249 |
| **பொ** | |
| பொய்சொ | 55 |
| பொய்த்திடு | 238 |
| பொய்ந்நூல் | 271 |
| பொய்ய் | 49 |
| பொய்யாமொ | 57 |
| பொல்லார் | 290 |
| பொன்விசும் | 280 |
| **போ** | |
| போதல் | 256 |
| போனதும் | 119 |
| **யா** | |
| யாவரு | 109 |
| யாவு | 101 |
| **ம** | |
| மகமுத | 66 |
| மகத்தெ | 212 |
| மங்கலமீமயின் | 308 |
| மங்கலமுத | 264 |
| மச்சறு | 252 |

| பாட்டு | பக்கம் |
|---|---|
| மடற்போ | 53 |
| மடன்மலர் | 174 |
| மட்டி | 219 |
| மணிகொள் | 228 |
| மணிமலி | 202 |
| மணியனை | 292 |
| மண்டல | 65 |
| மண்டுதிரை | 124 |
| மண்ணாண் | 290 |
| மதலை | 313 |
| மதிமதி | 298 |
| மத்தள | 153 |
| மந்தசபம் | 158 |
| மந்திரங் | 110 |
| மருணைவுற | 274 |
| மருவல | 92 |
| மலமேவிய | 278 |
| மலர்ந்த | 246 |
| மறலியொரு | 191 |
| மறுவறு | 89 |
| மனங்குறு | 316 |
| மனமடங் | 87 |
| **மா** | |
| மாக்காயம் | 33 |
| மாணிக்க | 31 |
| மாதா | 246 |
| மாதமொரு | 227 |
| மாந்தரை | 111 |
| மாமல் | 255 |
| மாமாய | 29 |
| மாயவ | 239 |
| மார்கழி | 122 |
| மாறாநானென் | 278 |
| மாறாவருள் | 249 |
| மான்பயந்த | 280 |
| **மி** | |
| மின்செய்யும் | 293 |
| **மீ** | |
| மீசைந | 145 |

| பாட்டு | பக்கம் |
|---|---|
| **மு** | |
| முடிவறு | 78 |
| முதமறு | 310 |
| முத்திக்குற் | 71 |
| முந்தை | 263 |
| முருகு | 307 |
| முற்ற | 60 |
| முன்பி | 226 |
| முன்மைமனு | 265 |
| **மூ** | |
| மூர்க்க | 84 |
| மூவிதம | 104 |
| மூன்றெழுத்து | 269 |
| **மெ** | |
| மெய்த்துயர | 294 |
| மெய்யுரை | 253 |
| **மே** | |
| மேலென்று | 183 |
| மேவுவா | 239 |
| **மோ** | |
| மோகஞ் | 96 |
| **வ** | |
| வசைகுழுமு | 284 |
| வச்சிரத்தோ | 267 |
| வடமொழி | 144 |
| வம்புமலர் | 266 |
| வரதகு | 151 |
| வரநதி | 81 |
| வலம்பனா | 217 |
| வலிநீடெழின் | 94 |
| வல்லுறழ் | 216 |
| வளர்தில்லை | 189 |
| வளைக்கை | 233 |
| வளைதுகிலை | 45 |
| வள்ளியை | 137 |
| வள்ளுயிர்க் | 76 |
| வனப்புமீ | 187 |
| **வா** | |
| வாகை | 243 |
| வாசக | 149 |

| பாட்டு | பக்கம் |
|---|---|
| வாதாந்த | 192 |
| வார்கர | 150 |
| வால | 297 |
| வாழ்விவை | 215 |
| வாளரசு | 306 |
| வாளன்ன | 39 |
| வாளாரநாதி | 232 |
| வாளு | 297 |
| வானூ | 65 |
| வானை | 226 |
| வானோர் | 287 |
| வான்மதி | 220 |
| **வி** | |
| விடையம் | 87 |
| விதிமீறிய | 272 |
| வித்துளங் | 88 |
| விரிபுவன | 40 |
| விளங்கயன் | 53 |
| விளரியையு | 99 |
| வினைபுரி | 143 |
| வினையள | 313 |
| வினையென்றி | 106 |
| வினைவென் | 32 |
| **வீ** | |
| வீடு | 262 |
| வீட்டெண்ண | 30 |
| வீவு | 218 |
| **வெ** | |
| வெண்பொடி | 46 |
| வெண்பொன் | 241 |
| **வே** | |
| வேதநாதன் | 67 |
| வேதற்கு | 195 |
| வேதாகமப் | 192 |
| வேலவனடி | 78 |
| வேலா | 307 |
| வேலேந்து | 295 |
| **வை** | |
| வையம் | 30 |
| வையவயவு | 266 |

# செய்யுட்பெயரட்டவணை.


| செய்யுட்பெயர் | பக்கம் |
|---|---|
| **வெள்ளியல்.** | |
| நேரிசை வெண்பா | 23 |
| இன்னிசை வெண்பா | 38 |
| பஃறொடை வெண்பா | 42 |
| சவலை வெண்பா | 44 |
| சிந்தியல் வெண்பா | 45 |
| குறள் வெண்பா | 48 |
| வெண்பாவினம் | |
| தாழிசை | 54 |
| துறை | 60 |
| வெளி விருத்தம் | 63 |
| **ஆசிரியவியல்.** | |
| நேரிசையாசிரியப்பா | 67 |
| இணைக்குறளாசிரியப்பா | 70 |
| அடிமறிமண்டிலவாசிரியப்பா | 71 |
| நிலைமண்டிலவாசிரியப்பா | 72 |
| ஆசிரியத் தாழிசை | 78 |
| ஆசிரியத் துறை | 84 |
| ஆசிரிய விருத்தம் | 87 |

| செய்யுட்பெயர் | பக்கம் |
|---|---|
| **கலியியல்.** | |
| நேரிசை யொத்தாழிசைக் கலிப்பா | 173 |
| வெண்கலி | 183 |
| கலிவெண்பா | 186 |
| கொச்சகக்கலி | 189 |
| கட்டளைக் கலிப்பா | 208 |
| கலித்தாழிசை | 214 |
| கலித் துறை | 218 |
| கலி விருத்தம் | 236 |
| **வஞ்சியியல்.** | |
| குறளடி வஞ்சிப்பா | 276 |
| சிந்தடி வஞ்சிப்பா | 281 |
| வஞ்சித் தாழிசை | 285 |
| வஞ்சித்துறை | 287 |
| வஞ்சி விருத்தம் | 296 |
| **மருட்பா.** | |
| வாயுறை வாழ்த்து மருட்பா | 318 |

# விசேடச் செய்யு ளட்டவணை.


| பெயர் | செய்யுளிலக்கம் |
|---|---|
| **வெள்ளியல்.** | |
| பின்முடுகு | 34 |
| முன்முடுகு | 35 |
| மொழிமாற்றுப் பொருள்கோள் | 36 |
| இரதபந்தம் | 37 |
| **ஆசிரியவியல்.** | |
| வருக்க மோனைச்செய்யுள் | 12 |
| சிலேடை | 29,31 |
| சதாக்கரம் | 41,54,62 |
| அட்டோத்தரசதாக்கரம் | 65,66 |
| ஒற்றிலாச் செய்யுள் | 79 |
| சதாக்கரம் | 86 |
| ஷை ஒற்றிலா நூறெழுத்து | 87 |
| ஒற்றிலாச் செய்யுள் | 88,99 |
| சதாக்கரம் | 92,101 |
| அட்டோத்தர சதாக்கரம் | 125 |
| ஐகார மொழிந்த நெடிலு மொற்று மிலாச் செய்யுள் | 126 |
| நாற்கூற்றிருக்கை | 128 |
| சதாக்கரம் | 140 |
| ஒற்றிலாப்பஞ்சபங்கி - இருநூறெழுத்து | 160 |
| **கலியியல்.** | |
| அட்டாட்டாக்கரம் | 11 |
| ஒற்றிலாச் செய்யுள் | 18 |
| இடையிறுதி முற்றுமடக்கு | 37,38 |
| வழியெதுகைச் செய்யுள் | 55 |
| நெட்டெழுத்துச் செய்யுள் | 58 |
| சதுரங்கபந்தம் | 81 |
| அடிமுதற்சீர் மடக்கு | 83 |

| பெயர் | செய்யுளிலக்கம் |
|---|---|
| அடிமுதலிரண்டுசீர் மடக்கு | 84 |
| நிரோட்டகம்(இதழ்குவியாப்பாட்டு) | 85 |
| அசைக்குறிப்பு முதலியன வுணர்த்துஞ் செய்யுள் | 88 |
| குற்றெழுத்துச் செய்யுள் | 91 |
| அடிமோனைத் தொடைச் செய்யுள் | 94 |
| அடியியைபுத் தொடை | 95 |
| அடியெதுகைத் தொடை | 96,97 |
| அடிமுரண்டொடை | 98 |
| அடியளபெடைத் தொடை | 99 |
| அந்தாதித் தொடை | 100 |
| இரட்டைத் தொடை | 101 |
| செந்தொடை | 102 |
| இணைமோனைத் தொடை | 103 |
| பொழிப்புமோனைத் தொடை | 104 |
| ஒரூஉமோனைத் தொடை | 105 |
| கூழைமோனைத் தொடை | 106 |
| மேற்கதுவாய் மோனைத் தொடை | 107 |
| கீழ்க்கதுவாய் மோனை | 108 |
| முற்றுமோனை | 109 |
| இயைபுத் தொடையும், நெட்டெழுத்துக் கவியும் | 110,111 |
| எதுகைத் தொடை | 112 |
| மெல்லின மிலாச் செய்யுள் | 113 |
| முரண்டொடை | 114,115 |
| அளபெடைத் தொடை | 116,117 |
| வருக்கவெதுகைச் செய்யுள் | 118 |
| நெடிலெதுகை | 119 |
| வல்லினவெதுகை | 120 |
| மெல்லினவெதுகை | 121 |
| இடையினவெதுகை | 122 |
| தலையாகெதுகை | 123 |
| மூன்றாமெழுத்தொன்றெதுகை | 124 |

| பெயர் | செய்யுளிலக்கம் |
|---|---|
| ஆசெதுகை | 125,126,127,128 |
| ஆசிடையிட்டு வரும் வல்லின வெதுகை | 129 |
| இரண்டடி யெதுகை | 130 |
| உயிரெதுகை | 131 |
| நெடின்மோனை | 132 |
| வல்லினமோனை | 133 |
| இரண்டடிமோனை | 134 |
| அனுமோனை | 135 |
| ஒற்றிலாவல்லினச் செய்யுள் | 146 |
| மெல்லினச் செய்யுள் | 147 |
| இடையினச் செய்யுள் | 148 |
| விருத்தமுந் துறையும் | 152 |
| பிறிதுபடுபாட்டு, விருத்தமும் அகவலும் | 153 |
| திரிபாகி | 154 |
| நெட்டெழுத்து செய்யுளும் மாலை மாற்றும், திரிபங்கியும், துவித நாகபந்தமும் | 156 |

| பெயர் | செய்யுளிலக்கம் |
|---|---|
| **வஞ்சியியல்** | |
| மொழிதிருப்பு | 11 |
| கொம்பில்லாச் செய்யுள் | 27,28,29 |
| பாடகமடக்கு | 31 |
| அந்தாதித் தொடை நான்காரைச் சக்கரம் | 45 |
| ஒற்றிலாச்சுழிகுளம் | 46 |
| மாத்திரைவருத்தனம் (மாத்திரைப் பெருக்கம்) | 47 |
| அக்கரவருத்தனம் (எழுத்துப்பெருக்கம்) | 48 |
| மாத்திரைச்சுருக்கம் | 49,50 |
| அக்கரச்சுதகம் (எழுத்துச் சுருக்கம்) | 51 |
| சருப்பதோபத்திரம். மாலைமாற்று | 52 |
| வினாவுத்தரம் | 53,54 |
| கூடசதுக்கம் | 56 |
| காதைகரப்பு | 57 |
| அந்தாதிமடக்கு. ஒற்றிலாச்செய்யுள் | 58 |
| அந்தாதி தொடைத்தமருகபந்தம் | 59 |
| பகர விகற்ப மடக்கு | 60 |
| ஏகபாதம் | 61 |
| கோமூத்திரி | 62 |
| ஒற்றிலா இதழ் குவிப்பாட்டு | 82,83 |

உ

# திருவருட் பிரபாவம்

(பாம்பன் : ஸ்ரீமத் குமரகுருதாச சுவாமிகள்)

**திருவருட் பிரபாவம்**

திருவருள் என்பது யாது ? திருவருள் என்பது கடவுள் உயிர்கட்குச் செய்யும் அருள் என்று பொருள்படும். கடவுள் என்பது யாது ? உயிர்களின் உள்ளந்தோறும் இருந்து அவைகளைச் செலுத்துகின்ற பரம்பொருளே கடவுள் எனப்பெறும். இறப்பும் பிறப்பும் இல்லாத சிறப்புள பரம்பொருளின் திருவருளே, இறப்பு, பிறப்பு, நோய், மூப்பு, கவலை என்னும் பலவகைப்பட்ட துன்பங்களில் என்றும் ஆழ்ந்து கிடக்கும் உயிர்களின் துன்பத்தை ஒழிப்பதாகும். திருவருட் பெருமை எத்தகையது ? இயங்குவன இயங்காதனவாகிய உயிர்கள் இத்துணையவென அளவிடுதல் கூடாதாதலின் திருவருட் பெருமையையும் ஓர் அளவிற்கு உட்படுத்தி உரைத்தல் கூடாது. அஃது ஒரு முடிவிற்கு அடங்காததேயாம்.

திருவருள் எங்கும் நிறைந்து விளங்குவது. அஃது எல்லாருக்கும் உண்டாகக் கூடியது. அங்ஙனமிருந்தும் அதனை எல்லா உயிர்களும் பெறாதிருப்பது ஏன் எனின், அவை அதனைப் பெறாமை அவைகளின் பக்குவ நிலையைப் பொறுத்து இருக்கிறது; அப் பக்குவ நிலையையும் உயிர்கள் தத்தம் செய்கைகளாலேயே அடைதல் வேண்டும். அச்செய்கையைப் புண்ணியம் என்றும் பாவம் என்றும் இருவகையாகப் பகுக்கலாம். புண்ணியமே நல்வினை; பாவமே தீவினை. நல்வினை தீவினைகளைத் தெரிந்து செய்யும் சுதந்திரம் உயிர்கள்மாட்டே இருத்தலின் இறைவனுடைய திருவருளை உயிர்கள் பெறவும், அவைகளின் செய்கையே காரணமாக இருக்கிறது. உயிர்களின் இச்சை வழியே இறைவன் ஆக்கல், அளித்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்னும் ஐந்தொழிலையும் புரிகின்றான் என்பதை உணர்ந்தே வாகீசப் பெருமான், “வேண்டுவார் வேண்டுவதே ஈவான் கண்டாய்” என்று மொழிந்தருளினார் எனல் அறியக் கிடக்கிறது. திருவருள் எங்கும் நிறைந்திருந்தும் மக்கள் அதனைப் பெறாமைக்குக் காரணம் அவர்கள் அதை இச்சியாமலிருத்தலேயாம்.

பகலவன் பிரகாசியாத விடமெங்கும் இருள் நிறைந்திருப்பதுபோல் திருவருளால் தீண்டப்படாதவர்கள் அனைவரும் பாசத்தால் தீண்டப்பட்டு இருப்பர். உயிர்களுக்கு இவ்வுலகில் ஆசையை

உண்டாக்கும் ஒருவகை சக்திக்கே பாசம் என்று பெயர். மக்களுடைய கண்கள் பகலிற் காணுமாறாகவும் இரவில் காணக் கூடாதவாறாகவும், கோட்டான் கூகை முதலியவற்றின் கண்கள் இரவிற் காணுமாறாகவும் பகலிற் காணாதவாறாகவும், பூனையின் கண்கள் பகலிலும் இரவிலும் காணுமாறாகவும் அமைக்கப்பெற்று இருக்கின்றன. திருவருள் தீண்டப் பெற்றோர் கூகைத் தன்மை நீங்கிப் பூனைத் தன்மை வரப்பெற்றவரே யாவர்.

இனி, சீவ அபிமானிகளும் கடவுள் அருளைக் கைவரப் பெறார். அத்திருவருளைப் பெறுவதற்குச் சீவ அபிமானம் அறவே ஒழிய வேண்டும். பாண்டவர் பத்தினியாகிய பாஞ்சாலியைச் சபையிலே நிறுத்தித் துரியோதனன் சோதரனாகிய துர்ச்சாதனன் துகில் உரியவும், அவ்வம்மை தன்னுடைய மானத்தைத் தானே காத்துக்கொள்ளும் முயற்சியில் இருந்தவரை, விரும்பிய உதவியைப் பெறாமையும் அவ்வபிமானத்தை அறவேவிலக்கி நின்றதும் அவ்வுதவியைப் பெற்றதுமே தக்க சான்றாகும். ஆதலின், திருவருளைப் பெறுதற்குச் சீவ அபிமானம் விடுபடுதலோடு கடவுளுடைய உதவியும் இருத்தல் வேண்டுமென்பது நன்கு தெரிய வருகின்றது. இன்னும் கடவுள்மீது வைக்கும் பேரன்பினாலேயே திருவருளைப் பெறலாம் என்பதையும், திருவருளின் பிரபாவம் எத்தகைத் தென்பதையும் விளக்கற்குரிய சில உண்மைச் சரிதைகளை எடுத்துரைக்கின்றாம்.

## 1. கார்த்திகைச் சுவாமிகள்

யான் துறவற நடையை மேற்கொள்வதற்கு முன்னர் ஒரு பெரியாரைச் சந்திக்க நேர்ந்தது. அவர் இராமநாதபுரத்திற்கு அணித்தாய திருவுத்தரகோசமங்கை என்னும் தலத்தில் வைகினார். அப்பெரியார் தம்முடைய ஆவியும் உடலும் உடைமை எல்லாமும் முழுமுதற் கடவுளாகிய முருகப் பெருமானுக்கே கொடுத்து அப்பெருமானுடைய மீளா அடிமையாய்க் காலங் கழிக்கின்றார் என்பது கேட்டமையின், யான் அவரைக் காண வேண்டுமென்னும் அவாவோடு இருந்தேன். யாவரும் அவரைக் கார்த்திகைச் சுவாமி என்று அழைத்தார்கள். ஒரு நாள் அவரைக் காணும் பொருட்டுத் திருவுத்தரகோசமங்கையை அடைந்தேன். அப்போது அவர் அங்கு இல்லை; மதுரைக்குச் சென்றார் என்பதை அறிந்தேன். பிறகு அங்குள்ள ஆலயத்திற்குச் சென்று இளம்பூரணனைத் தரிசித்து, கார்த்திகைச் சுவாமி அவர்கள் ஆலயத்திற் செய்த திருப்பணிகளையும் கண்டு திரும்பினேன்.

அப்போது அவ்வூரிலுள்ள பொன்னம்பலம் பிள்ளை என்னும் சிவனடியவர் ஒருவர் என்னை விசாரித்துத் தம் வீட்டிற்கு அழைத்துக் கொண்டு போனார். மாலைக்கால மாயினமையின் அவர் இல்லத்திலேயே அன்றிரவு தங்கினேன். மறுநாள் காலை ஆண்டு நின்றும் புறப்பட்டுத் திருவாரூர் கோயிலில் நடைபெறும் கும்பாபிஷேகத்திற்குச் சென்று, அங்கிருந்தும் நாகப்பட்டினத்தை அடைந்து, அன்பர் சுப்பிரமணியப் பிள்ளை வீட்டில் தங்கினேன். நாகப்பட்டினத்தில் மாலை நேரத்தில் கடற்கரையோரமாய் உலவிச் செல்லும் போது கல்லாடை உடுத்த ஒருவர் வடக்கிருந்து எதிரே வருதலைக் கண்டு, அவர், யான் காணவிரும்பிய கார்த்திகைச் சுவாமியாக இருப்பாரோ என்று எண்ணினேன். அவர் என்னைச் சந்தித்தபோது அவ்விடத்திலேயேநின்று என்னை நோக்கித் தாங்கள் யாவர் என்று கேட்டார். “என்னைப் பாம்பன் குமரகுருதாசன்” என்பர் என்று கூறித் “தாங்கள் யாவர் ?” என்று வினவினேன். அவர் “திருவுத்தரகோசமங்கைக் கார்த்திகைச் சுவாமி என்பர்” என்று கூறினார்.

யான் உடனே அவர் அருகிற் சென்று அவரைக் கட்டித் தழுவினேன். அவரும் என்னைப் பார்க்க விரும்பியே பாம்பன் சென்று திரும்பி வந்ததாகத் தெரிவித்தார். யான் அவரைச் சுப்பிரமணியப் பிள்ளை வீட்டிற்கு அழைத்துச் சென்றேன். அவ்விடத்திலேயே அவரும் யானும் மூன்று நாள் தங்கினோம். அவர், மதுரையில் மடம் ஒன்று கட்டுவதாகவும் அதன் பொருட்டுப் போதுமான பணம் சேகரிக்கவே பல விடங்களுக்கும் செல்லுவதாகவும் தெரிவித்தார். அப்போது அவர் குடும்பத்தைவிட்டுத் துறவற நிலையை அடைந்த காரணம் யாதென்று அறிய விரும்பினவனாய் அவரை வினவியதற்கு அவர் பின் வருமாறு மொழிந்தார் :–

“யான் இறைவனது திருவருட் செல்வத்தை விரும்பிச் சில பெரியோர்களுக்கு அன்னம் படைத்து வந்தேன். ஆனால், அக்காரியத்தில் என் மனைவி என்னோடு ஒற்றுமைப்பட்டிருக்கவில்லை. ஒரு நாள் இரவு 11 மணிக்குப் பெரியார் ஒருவர் வந்து, தாம் மிகப் பசியாய் இருப்பதாகவும் உணவு வேண்டுமென்றும் கேட்டார். அப்போது உண்டு மிகுந்த அன்னத்திலும் நீர்விட்டாயினமையின், யான் புதிய உணவு சமைத்துத் தருகிறேன்; தாமதிக்க வேண்டும் என்றலும், பசித்து வந்த அப்பெரியார் பழைய உணவையே கொண்டு வரும்படி கேட்டார். உடனே யான் உள்ளே சென்று உறங்கிக் கொண்டிருந்த என்னுடைய மனைவியை

எழுப்புதலும் இந்நற் செய்கைக்கு இணங்காத அவள் எழவில்லை. பிறகு நானே தண்ணீர் விட்டிருந்த அன்னத்தையும் மிகுந்திருந்த கறிகளையும் சேர்த்துப் பிசைந்து எடுத்துக் கொண்டு வந்து அப்பெரியாரை உள்ளே வரவேண்டுமென்று அழைத்தேன். அவர் தெரு வாயிற்படிக்கு அப்புறம் இருந்து கொண்டு, அங்ஙனே கொண்டுவந்திடும்படி கையை நீட்டினார். நானும் அன்னத்தைக் கொண்டுபோய்ச் சிறிதுசிறிதாக உருட்டிக் கையில் இட்டேன். கொண்டுபோன அன்னம் அவ்வளவையும் அவர் தின்றானதும் அது மிக உருசியாக இருந்ததென்று கூறிக் கை கழுவிக் கொண்டார்.

பின்னர் யான் அவரோடு யாதொரு சொல்லுஞ் சொல்லத் துணிவதன் முன் அவர் கையமர்த்தி மறைந்தார். அவர் உடல் முழுவதும் துணியால் மூடப்பட்டிருந்தமையின் அவருடைய முகமட்டுமே எனக்குப் புலப்பட்டது. அவர் மறைந்தமை கண்டு நான் விளக்கெடுத்துப் பார்க்க அவருடைய அடிச்சுவடுகளும் என் கண்ணுக்குப் புலப்படவில்லை. பிறகு நான் உண்டவர் யாவரென்பது தெரிய வேண்டுமென்னு மெண்ணத்தோடு படுத்துக் கொண்டேன். ஆனால் எனக்கு நல்ல நித்திரை வரவில்லை. விடியற் காலத்தில் ஒருவர் கனவிற்றோன்றி "ஐயா நான் சொல்லுகிறபடி நீர் செய்ய வேண்டும். உம்முடைய உடைமைகள் எல்லாவற்றையும் நாளையதினம் திருவுத்தரகோசமங்கை முருகனுக்குத் தானமாகக் கொடுத்துவிட்டு நீரும் புறப்பட்டு வரவேண்டும்" என்னலும், அதற்கு அடியேன் "நான் என்னுடைய பொருள்களை யெல்லாம் கொடுத்துவிட்டுப் பிறகு பிச்சை வாங்கேன்" என்றேன். அதற்கவர் உம்மிடத்திற் சோறு தின்றவன் திருவுத்தரகோசமங்கை முருகன்; அவன் இவனே" என்றுகூறி மறைந்தார்.

பிறகு அடியேன் அறுமுகப் பெருமானது திருமுகக் கருணையால் யாம் கடைத்தேறினோம்; நம் ஜன்மம் சாபல்யமாயிற்றென் றெழுந்து உடைமைகளையெல்லாம் முருகப் பெருமானுக்கு எழுதிக் கொடுக்குங் காரியத்தைத் தொடங்கினேன். யான் இச்செய்தியை வெளியிடலும் வக்கீல் வேலையிலிருந்த எனது சகோதரர் அதனைக் கேட்டலும், உடனே வந்து என்னுடைய மனைவிக்கும், குமாரத்திக்கும் ஏதாவது பொருள் வைக்கவேண்டுமென்று கேட்டார். எனது குமாரத்திக்கு மாத்திரம் சிறிது பொருள் வைத்து மிகுதியை முருகப்பெருமானுக்கு எழுதிக் கோயிலதிகாரிகளிடங் கொடுத்துவிட்டு, மேல் யாது செய்வதென்பதறிய இறைவனைச் சிந்தித்திருந்தேன். அன்றிரவு பெருமான், கோயிற் பூசகரிடந் தோன்றி எனக்கு அன்னமிட வேண்டுமென்றும், என்னுடைய

கனவிற்றோன்றிப் பழுதுபட்டுள்ள கோயிற் கட்டிடத்தைப் புதுக்க வேண்டுமென்றுங் கூறி மறைந்தார். அவ்வாறே பலருடைய உதவியினால் கோயிலைப் புதுக்கிக் கும்பாபிடேகத்திற்காக முயற்சி செய்தேன்.

அத்தருணத்தில் இராமநாதபுரம் சமஸ்தானத்தில் பாஸ்கர சேதுபதி பட்டம் பெற்றமையின் யான் அவரிடஞ்சென்று கும்பாபிடேகக் காரியத்தைப் பூர்த்தி செய்தல் வேண்டுமென்று விண்ணப்பித்தேன். அவர், அவ்வாறே 2000 ரூபாய் தரும்படி தம்முடைய அதிகாரிகளுக்கு உத்திரவு கொடுத்தார். திருவுத்தரகோசமங்கையில் ஒரு சாமியார் இருந்தார். யான் சேதுபதியிடஞ் சென்ற செய்தியை அவர் உணர்ந்து உடனே இராமநாதபுரஞ் சென்று இராசாவைக் கண்டு, பரதேசியாய என்னிடம் பணங்கொடுத்தல் தகுதியன்றென்றும், இராசாவே முன்னின்று அதனை நடத்தி வைத்தல் வேண்டுமென்றுங் கூறி எனக்குக் கொடுக்கும்படி உத்தரவு செய்த தொகையைக் கொடாதவாறு தடை செய்து விட்டார். யான் கஜானாவிற்குச் சென்றபோது பணங் கொடுக்கப்படவில்லை. நிறுத்தப்பட்ட காரணத்தைமட்டு மறிந்தேன். பிறகு யானே சேதுபதியவர்களிடஞ் சென்று, அவர் கும்பாபிடேகஞ் செய்ய இசைந்தது பற்றி யெனக்கு முழுதிருப்தியே யென்றும், ஆனால் அதனை விரைவில் பார்க்க விரும்புகின்றேனென்றும் விண்ணப்பித்துக் கொண்டு திரும்பியதும், திருவுத்தரகோசமங்கையையணுகிப் பகல் 12 மணிக்கு ஆலயத்திற்கெதிரில் நின்று எனக்குள்ள நோயை யெடுத்துரைத்துக் கும்பாபிடேகச் சிறப்பை யென்று காண்பேனென்று புலம்பினேன். உடனே, “அக்கும்பாபிடேகத்தை இன்ன நாளில் யானே செய்வேன்” என்று ஒரு சத்தம் பிறந்தது. நிற்க.

அரசாங்க உத்தியோகத்திலிருந்த சாமாவையர் என்பவருடைய குமாரத்திக்குப் பிள்ளைப் பேறில்லாமலிருந்தது. முருகப்பெருமானுடைய விபூதிப் பிரசாதத்தை அடியேன் அவருக்கு அளித்ததன் மேல் குழந்தை பிறந்தது. ஆதலின், அவர் இத்தருணத்தில் 200 ரூபாய் கொடுத்ததோடு கும்பாபிடேக விடயமாக நிகழ்ந்த செய்திகள் யாவும் அறிந்துகொண்டு பலரிடத்திலுஞ் சென்று பணத்திற்காகக் கையொப்பங்கள் பெற்றுக் கொண்டு வந்து, இராசாவை யெதிர்பாராமலே காரியத்தைத் தொடங்கினார். கோயிற் பூசகர்கள் முதலிய யாவரும் சேதுபதியவர்களே செய்தால் தங்களுக்கு நல்ல பரிசுகள் கிடைக்குமென்று எண்ணினார்கள். பின்னர், சாமாவையர் அவர்களே முன்னின்று பூசகர்களை நாள் வைக்கும்படி சொன்னார்கள். இறைவன்

அசரீரிவாயிலாக எனக்கு அறிவித்த நாளையே பூசகர்களும் குறிப்பிட்டார்கள். இது நிற்க.

இத்தருணத்தில் பாஸ்கர சேதுபதி அவர்களும் கும்பாபிடேகஞ் செய்வதற்காகச் சித்தஞ் செய்துகொண்டிருந்தார். ஆனால் அவ்வமயத்தில் சேதுபதி அவர்கள் சென்னைக் கவர்னருடைய கட்டளையின்பேரில் சென்னைப்பட்டினத்திற்குப் போக நேர்ந்தது. சேதுபதி அவர்களே கும்பாபிடேகஞ் செய்யவேண்டுமென்று அவரைத் தூண்டிய சாமியாரும், தம்முடைய மனைவி சூலை நோயால் வருந்துகின்றாரென்பது கேட்டுத் தம் ஊருக்குப் போய்விட்டார். ஆகலின் அவர்களுடைய தடையொன்றுமின்றியே கும்பாபிடேகமும் திருவிழாவும் மிகச் சிறப்பாக நடைபெற்றன.

சின்னாட்களுக்குப் பின்னர்ச் சேதுபதியவர்கள், தரிசனத்திற்காகத் திருவுத்தரகோசமங்கைக்கு வந்தார்கள். அப்போது அவர், என்னையும் மேற் குறிப்பிட்ட சாமியாரையும் அழைத்து, இருவருக்கும் ஒவ்வொரு சால்வையை அளித்து, அதனை யெப்போதும் போட்டுக்கொண்டிருக்க வேண்டுமென்று சொன்னார். அச்சாமியார் சேதுபதியவர்கள் சொன்னவாறே அச்சால்வையை உபயோகித்துக் கொண்டார். அடியேன் மூலத்தானத்துள்ள நமது முருகநாதனுக்குச் சாற்றி விட்டேன். இராசா மறுமுறை வந்தபோது, யான் போர்வையைச் சுவாமிக்குச் சாற்றிவிட்டதை யறிந்து, என்னையும் அழைத்துப் போர்வையை ஏன் உபயோகித்துக்கொள்ள வில்லையென்று கேட்டார். அதற்கு யான், "நல்ல பொருள் யாவும் சுவாமிக்கென்றே இருக்கின்றேன்" என்றேன். சேதுபதியவர்கள் "நாம் சுவாமிக்கு எவ்வளவோ செய்வோம்" என்று சினந்து மொழிந்தார். அவருடைய கோபத்தைக் கண்ட யான் அவரெதிரிலிருந்தும் விலகிப்போய்விட்டேன்.

பிறகு, அவர் இராமநாதபுரஞ்செல்லுமுன்னர், பெருமான் முருகவேளுக்குப் போட்டிருந்த போர்வையை எடுத்துக் கொண்டுவந்து சேதுபதியவர்கள் எதிரில் வைத்துவிட்டுச் சென்றேன். சேதுபதியவர்கள் ஊருக்குப் புறப்படும்போது மறுபடியும் என்னை யழைத்து அப்போர்வையைக் கொடுத்தார். யான் அதனை அங்கீகரிக்க மாட்டேனென்று கூறியதன்மேல், "அதை எப்படியாவது செய்து கொள்ளலாம்" என்று சொல்லிவிட்டுப் போய்விட்டார். யான் ஒவ்வொரு மாதமுங் கிருத்திகை நாளில் நம்பெருமானுக்குத் திருவிழா நடத்தி வருகின்றேன்" என்று கூறி முடித்தார்.

பிறகு, கார்த்திகைச் சுவாமிகள் நாகப்பட்டினத்திலிருந்து மதுரைக்குப் புறப்பட, யானும் அவரைத் தொடர்ந்து சென்றேன். அவர், தாம் மதுரையில் கட்டிக் கொண்டிருந்த கட்டிடத்தைக் காட்டி, அதனை இன்னுஞ் செவ்வையாகக் கட்டவேண்டுமென்றார். யான் அங்கிருந்து பாம்பனுக்குப் புறப்படுங்கால், அவர் என்னை உத்தரகோசமங்கைக்கு வரும்படி அழைத்தார். யான் பின்னர் வருவதாகக் கூறிச் சென்றேன். சில மாதங்கட்குப் பின்னர்யான் உத்தரகோசமங்கைக்கு எழுதிய கடிதம் திரும்பிவந்து விட்டது; விசாரணை செய்ய, அவர் சமாதியாய் விட்டாரென்பதும் அதன் விவரமும் அறிந்தேன். கார்த்திகையன்று திருவிழா நடைபெறும்போது, கார்த்திகைச் சுவாமி முருகப் பெருமானோடு கூடவே வர, பெருமான் கோயிலின் முன்பு வந்ததும் வழக்கம்போல் தீபாராதனை நடந்தது. பெருமானுக் கெதிரில் நின்று கொண்டிருந்த அப்பெரியார் கூப்பிய கரத்தோடு கீழே யிருந்து அடங்கிவிட்டார். அவருடைய ஆன்மா மூலத்தானத்தையே அடைந்ததோ, யாதோ வென்றெண்ணுகின்றேன். அவருடைய சோற்றைத் தின்ற நம் பெருமான் உயிரையுந் தின்றார். இதனால் சுவாமி முருகன் கையிலேயே அம் முத்தி யிருக்கின்றதென்பது உண்மையாகிறது.

கார்த்திகைச் சுவாமிகளுடைய முடிவினைக் கேள்வியுற்ற பாஸ்கர சேதுபதியவர்கள் நடுக்குற்று, கார்த்திகைச் சுவாமியின் உடல் அடக்கம் பண்ணப்பட்ட இடத்தை எய்திப் பலமுறையும் வலம்வந்து வணங்கி யழுதார்கள்; நித்திய பூசைக்காக வேண்டிய கட்டளைகளேற் படுத்தினார்கள்; அவரைத் தரிசியாது உணவெடுப்பதில்லையென்னு நியமம் பூண்டு அவ்வாறே ஒழுகிவந்தார்கள்.

## 2. புலால் உண்ணா நாய்

யான் திருநெல்வேலியில் இரத்தின முதலியார் என்பவர் ஒருவருடைய வீட்டிற்றங்கி யிருக்கும்போது, அங்கு ஒருவர் வந்தார். அவர் நேரே கண்ட திருவருட் செயலொன்றையெமக் கறிவித்தது வருமாறு: திருச்செந்தூருக் கருகில் கைலாசகேத்திர மென்னும் ஊரிலுள்ள ஒரு குடியானவன் ஒரு நாயை வளர்த்தான், அந்நாய், சைவ உணவையே தான் உண்ணும் உணவாகக் கொண்டிருந்தது.

அந்நாய் நாடோறும் அவ்வூருக்கருகிலுள்ள பார்ப்பனர் வீதி யொன்றனை யணுகி அங்குக் கிடைப்பனவற்றையே தின்று

கொண்டிருந்தது. இச் செய்தியைக் கைலாசகேத்திரத்திலுள்ளவர்களும் பிறரும் அறியலானார்கள். கைலாச கேத்திரமென்னும் ஊருக்கும், அருகிலுள்ள பார்ப்பனர் பதிக்கும் இடையில் தாம்பிரபருணியாறு ஓடுகிறது. அவ்வாற்றில் வெள்ளம் ஓடுகின்ற காலத்திலும், அந்நாய் நதியைத் தாண்டிச் செல்லாமலிருப்பதின்று. ஈஸ்வர வருடம்நிகழ்ந்த பஞ்சத்தில் தாம்பிரபருணியிற் பெருவெள்ளமொன்று வந்தது. நீர் பெருகி ஊருக்குள்ளும் வந்தமையின் சனங்களெல்லாரும் கரைமீது நின்று வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தார்கள். அப்போது, நாடோறும் நதியைத் தாண்டிச் சென்ற நாயும் நதியைத் தாண்டுவதற்காகப் பார்த்துகொண்டிருந்தது. பின்னைத் தண்ணீரில் வீழ்ந்தது. நீந்தவும் தொடங்கிது. அது நீந்திச் செல்லுவதை யாவருங் கண்ணுறும்போது, அது நதியின் நடுவண் சென்று அப்புறம் போக முடியாது அமிழ்ந்துவிட்டது. அஃதமிழுங்கால், யாவருங் கண்டதிசயிக்கப் பெரிய ஜோதியொன்று தோன்றிப் படர்ந்தது.

### 3. நல்லறிவு படைத்த நாய்

இராமநாதபுரத்திற் கணித்தாய நாகநாதர் கோயிலில் உற்சவம் நடைபெறுவதுண்டு; அதற்குப் பலவிடங்களினின்றுஞ் சனங்கள் வந்து கூடுவார்கள். அத்திருவிழாவிற்குப் பாம்பனிலிருந்து சென்றவர்களில் சேதுராமன் என்பவன் ஒருவன். அவன் திருவிழாவைக் கண்டு திரும்பும் போது ஒரு நாயைத் தனியே நிற்கக் கண்டான். அவன் அதனை யழைத்தமையின் அதுவும் அவனைப் பின்றொடர்ந்து வந்தது. அது மிக உயரமாயும், கறுப்பாயும், சடை மயிரோடு மிருந்தது. பாம்பனில் சேதுராமன் அந்நாய்க்கு ஆகாரங் கொடுத்து வைத்திருந்தான். அது சைவ உணவைத் தவிர வேறு கொள்ளுவதில்லை. அது அவன் வீட்டுத் திண்ணை யோரத்திலேனும் தெரு மத்தியிலேனும் படுத்துக் கொண்டிருக்கும். சேதுராமன் வந்து அழைத்தால் போகும். அது ஒருவரையும் ஒன்றுஞ் செய்வதில்லை. அது அமாவாசை தோறும் சூரிய உதயத்திற்கு முன் சேதுவிற்குச் சென்று முழுகி வந்தது. அம்முழுக்கை அது எப்போதுந் தவறாமல் செய்து வந்தது. யாராவது ஒருவர் இறந்து போவதாயின், அஃதறிந்து அது சத்தமிடுவது வழக்கம், அது சத்தமிட்டால் ஒருவர் இறந்து போவாரென்பது நிச்சயமாகவே யிருந்தது. நிற்க.

அறிவு மிகுதியுமுள்ள அந்நாயை முன்னர் வளர்த்துக் கொண்டிருந்த ஒருவர் அது இருக்குமிடத்தை விசாரித்துச் கொண்டே

பாம்பனை யடைந்தார். அவர் அந்நாயைக் கண்டதும் அதனை அணைத்துக்கொண்டு அழுதார். அந்நாயும் அவரை நன்கு தெரிந்துகொண்டது. பின்னர், அவர் நாக நாதர்கோயில் உற்சவத்தில் அதனைத் தவறவிட்ட செய்தியைக் கூறி, "அதன் அருமை குணங்களை யெல்லாம் அறிவீர்களா ?" வென்று அங்கிருந்தவர்களைக் கேட்டார். சேதுராமனிடம் விடைபெற்றுக்கொண்டு நாயையும் அழைத்துக் கொண்டு போனார். அந்த நாயும் சேதுராமனைப் பார்த்து, அவனை மும்முறை வலம்வந்து வணங்கிவிட்டுப் போனது.

## 4. நவபாஷாணத் தீர்த்தம்

நான் ஒரு வழக்கில் அகப்பட்டிருந்தேன். ஜமீன்தார் கோடசாமித் தேவர் வாதியாக விருந்தார். நான் உட்பட 12 பேர்கள் மீது அவர் வழக்குத் தொடுத்திருந்தார். அவ்வழக்கு நீதிமன்றத்தில் நடைபெற்றது. கோடசாமித் தேவர் மிக வன்மையுடையராகலின் எங்களைத் தண்டிக்க வேண்டுமென்று நீதிபதிக்கு அறிவுறுத்தியிருந்ததாகவு மறிந்தேன். நீதிபதி விசாரணை செய்து எனக்கு நன்மையாக முடியாதென்று கூறினார். என்னுடைய நியாயவாதி (வக்கீல்) மலாக்கா துரையாவர். அவர், நியாயாதிபதியின் எண்ணம் எனக்கு விரோமாக விருக்கிறதென்று தெரிவித்ததோடு, மேல் நீதி மன்றத்தில் செய்யும் முறைபாட்டில் (அப்பீல்) வெற்றி பெறலாமென்றும், எப்படியும் என்னைக் காவல் தண்டனைக் குட்படுத்தே னென்றும் உறுதி கூறி 300 ரூபா தயாராக வைத்திருக்க வேண்டுமென்றார். யான் கடவுளையே நோக்கி நின்றேன். ஒரு நாள் இரவு இருட்டறையில் படுத்துக் கொண்டு வழக்கைப்பற்றிச் சிந்தித்து முருகப் பெருமானை நோக்கி முறையிட்டுக் கொண்டிருந்தேன். அப்போது ஒருவர் தோன்றி "பயப்பட வேண்டாம். தேவி பட்டினத்திலுள்ள நவபாஷாணத் தீர்த்தத்தில் ஸ்நானஞ்செய். வழக்குத்தள்ளப்படும்." என்றார்.

இவ்விடயம் எனக்குக் கனவினுரைத்தது போல் தோற்றியது. உடனே விழித்துக் கொண்டு, சொல்லப்பட்ட செய்தி உண்மையாயின் அதனை மறுமுறையுஞ் சொல்லவேண்டுமென்றெண்ணினேன். விடியற் காலத்திலும் அவ்வாறே சொல்லப்பட்டதோடு, உடனே நானும் என்னிடத்தில் வேலைக்கிருந்த ஒருவரும் புறப்பட்டு நவபாஷாணத் தீர்த்தத்தை யடைந்தோம்; யான் அத்தீர்த்தத்தில் இறங்கி ஒரு முறை முழுகி யெழுந்ததும் என்னுடைய தலைமயிரிலிருந்து பேன்கள் இறங்குவது போற் காணப்பட்டது, மறுபடியும் அப்பேன்களிற் சில நுனி மயிரைப்பற்றி ஏறின; மறுபடியும் இருமுறை மூழ்கி யெழுந்ததும் என்

தலையிலிருந்த ஒரு பெருஞ் சுமை இறக்கப்பட்டதாகவுங்கண்டு விழித்தேன். அடுத்த தினமே அத்தீர்த்தத்திற்குச் சென்று மூழ்கிவிட்டு, அவ்விடத்திலேயே ஒரு வீட்டில் உணவருந்தித் திரும்பினோம். மறுவாரத்திற் குறிக்கப்பட்டிருந்த ஒரு நாளில் நீதி மன்றத்திற்குச் சென்றதும், நீதிபதி வழக்கை யெடாமல் ஒரு நாள் தள்ளி வைத்தார். மறுநாளும் அவ்வாறே தள்ளி வைத்தார். மூன்றா நாள் சென்றபோது என்னோடு என்னுடைய அன்னை, அம்மான் முதலிய யாவரும் வந்தார்கள். அங்கிருந்தவர்கள் சுமார் 300 பேர் இருக்கும். என்னுடைய நியாயவாதி மாத்திரம் அன்று வரவில்லை. நீதிபதி முடிவு சொல்ல வேண்டியதே மிகுதியாயிருந்தபடியால் நியாயவாதி வந்திருக்கின்றாரா வென்று மாத்திரம் விசாரித்துக் கொண்டு "வழக்கு தள்ளப்பட்ட"தென்று கூறினார். தீர்ப்பு யாவருக்கும் பெருவியப்பை விளைத்தது.

மேற்சொன்ன வரலாறுகளால் கடிவுள் வழிபாடு எத்துணை அவசியமென்பது தெள்ளிதிற்றெள்ளிதே. உடலைப் பற்றிய நோயாகிய பசிநீங்க உணவு எங்ஙனம் வேண்டற் பாலதோ, அங்ஙனமே உயிரைப் பற்றிய நோயாகிய இறப்புப் பிறப்பு என்னுந் துன்பங்கள் நீங்க இறைவன் வழிபாடும் வேண்டற்பாலதாம். நாம் நாடோறும் 2,3 முறை அன்னம் புசிப்பதுபோல் கடவுளை வழிபடுவதும் பலமுறையாக விருத்தல் வேண்டும். இறைவனை எக்காலத்தும் வழிபடுவோன் பரி த்தமானவனும் மிகமேலானவனுமாக விருக்கிறான். இதனாலன்றோ நமது பரதகண்டத்திருந்த பெரியோர் உணவு கொள்ளுமுன் கடவுள் வழிபாட்டை யேற்படுத்தினார்கள். "இரைதேடுவதோடிறையுந்தேடு" என்று நினைவூட்டப் பசிநோயே மிகச்சிறந்த துணையாமென அவர்கள் எண்ணினர். கடவுள் வழிபாடில்லா மனிதர் கைகால்களில்லாதவர்கட் கொப்பாவார்கள். பெரிய ஞானிகளுடைய வரலாறுகள் யாவும் கடவுளை முன்னிட்டே ஞானமிருத்தல் வேண்டுமென்னுங் கொள்கையை மிகவும் வற்புறுத்திக் கூறுகின்றன.

இனி, கடவுள் வழிபாடு, எங்கும் நிறைந்து விளங்கும் இறைவன் உயிர்களின் நலத்தின் பொருட்டுக் கொண்டுள்ள மூர்த்தி வழிபாடாகவே யிருத்தல் நலம். என்னை, எங்கும் நிறைந்து விளங்கும் நிலையில் அவனை வழிபடுவது யோகி ஞானிகளுக்கே பயன்படுமாகலானும், அவனுடைய மூர்த்தி வழிபாடு யோக ஞானிகளுட்பட்ட யாவர்க்குமே பயன்றருமாகலானுமென்க. இம்மூர்த்திகள் பல திறப்பட்டிருப்பினும் ஒருவனையே பற்றியுய்தி பெறல் வேண்டும். அவ்வாறு பயன் பெற்றோர்

திருஞானசம்பந்த சுவாமிகள், திருநாவுக்கரசு சுவாமிகள், சுந்தரமூர்த்தி சுவாமிகள், மணிவாசகப் பெருமான், அருணகிரிநாத முனீந்திரர் முதலிய பெரியோராவர். மேற்சொன்ன கார்த்திகைச் சுவாமிகளுடைய சரிதையும் ஒரு மூர்த்தி வழிபாட்டையே விளக்கும். வடமொழி மறையாய அதர்வவேத சரபோபநிஷத், "சமுசார துக்க நாச முத்திப் பிராப்தியின் பொருட்டு விட்டுணு முதலிய சருவ தேவர்களையும் விட்டு எஞ்ஞான்றுந் தியேயனாகவுள்ள சிவனையே தியானித்தல் வேண்டும்" என்றும் மணிவாசகப் பெருமான் தமிழ்மறை,

"கொள்ளேன் புரந்தரன் மாலயன் வாழ்வு குடிகெடினும்
நள்ளேன் நினதடி யாரொடல் லால் நர கம்புகினும்
எள்ளேன் திருவரு ளாலே யிருக்கப் பெறின்இறைவா
உள்ளேன் பிறதெய்வ முன்னையல் லாதெங்க ளுத்தமனே"

என்றும் அருணகிரிநாதப் பெருமான் றமிழ்வேதம் ".... தசைகொண்டு வேய்ந்த வகம் பிரிந்தால் வேலாற் கிரிதொளைத் தோனிரு தாளன்றி வேறில்லையே" என்று மெடுத்துரைக்கின்றன கொண்டும் அறியலாம். அத்தகைய வழிபாடொன்றே யாவர்க்கும் உடம்பாடாம்.

இனி, வாக்கு வல்லமை உலகத்தாரை வசப்படுத்துவது போல் உள்ளமே கடவுளை வசப்படுத்தும். 5 இந்திரியங்கள் மனத்திலும், மனம் பிராணனிலும், பிராணன் பரமான்மாவிலு மடங்கு மாகலின், இந்திரியங்களடங்கு நிலைக்களம் உள்ளமே யென்பதேற்படுகின்றது. இன்னும் இறைவனை நன்கு வழிபடுவதற்கும் உண்மையான பேரன்பை அவனிடத்திலே செலுத்துவதற்கும் உள்ளமே துணையாக விருப்பதால் நாமதனைப் பொய் வஞ்சகம் முதலிய அழுக்குகள் அடைய வொட்டாது பரிசுத்தமாக வைத்துக் கொண்டு கடவுள் வழிபாடு செய்ய வேண்டும். இவ்வழிபாடு, இக்காலத்தே, நம்முடைய முழுமுதற் கடவுளாகிய முருகப் பெருமானைப் பற்றி யிருப்பின் பெரியோரடைந்த பெரும்பயனை எளிதினு மெளிதாக வடைதல் கூடுமென்பதற் கையமின்று. "கந்தரநுபூதி பெற்றுக் கந்தரநுபூதி சொன்ன எந்தை" அருணகிரிநாத முனீந்திரரே இதற்குப் போதிய சான்றாம். சுபம்.

---

**1984–ல் பிரப்பன் வலசையில் வெளியிடப்பெற்ற சித்திரா பௌர்ணமி நூற்றாண்டு விழா மலரில் வெளிவந்த கட்டுரை.**

பாம்பன் சுவாமிகள் திருக்கோவில் - பிரப்பன்வலசை

1894-ம் ஆண்டு பாம்பன் சுவாமிகள் தவமிருந்த ஞானபூமியில் கோவிலமைக்க முடிவு செய்த போது திருவருள் துணையால் சரியான இடம் காட்டப் பெற்று 1969-1971ல் கட்டிமுடிக்கப்பட்டது. 1971, 1989, 2001, 2013 ஆகிய வருடங்களில் கும்பாபிஷேகம் நடைபெற்றது. இத்திருத்தலம் இராமநாதபுரம் - இராமேஸ்வரம் சாலையில் அமைந்துள்ளது.

ஸ்ரீமத் பாம்பன்சுவாமிகள் சமாதி நிலயம் - திருவான்மியூர்